உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ தத்துவராயசுவாமிகளால்

மொழிபெயர்த்தருளிய

சொரூபாநந்தசித்தியென்னும்

# பிரமகீதை.

ஸ்ரீ பொன்னம்பலசுவாமிகளால்

இதற்கு மூலவியாக்கியாநுசாரஞ் செய்யப்பட்ட

## குறிப்புரை.

இவை

கோ. சித. மடம். ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின்

உத்தரவின்படி

ஸ்ரீ கோ. வீ. பாதசேகர

ஸ்ரீ சுப்பய்யசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு

முள்ளங்குடி நாராயணசுவாமியால்

சென்னை

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

கணபதிதுணை.

## சொரூபாநந்தசித்தியென்னும்

# பிரமகீதை அத்தியாய அட்டவணை.


| தொகை | அத்தியாயப்பெயர். | பக்கம். | பாடற்றொகை |
|---|---|---|---|
| | பாயிரம் ... ... ... ... | கருக | கக |
| க | தேவர்கள் பிரமாவைத் தரிசித்து வேதார்த்தம் வினவல் ... ... ... | கருங | உஅ |
| உ | ஐதரேயவுபநிஷததாத்பரியமுரைத்தல் ... | கருஎ | உஉ |
| ங | ஐதரேயவுபநிஷதார்த்தசேஷமுந் தைத்திரிய வுபநிஷதார்த்ததாத்பரியமுமுரைத்தல் ... | கசுசு | சஅ |
| ச | கேனோபவுபநிஷததாத்பரியமுரைத்தல் ... | கஅங | சுரு |
| ரு | சாந்தோக்கியவுபநிஷததாத்பரியமுரைத்தல் ... | ககூஎ | கச0 |
| சு | சாந்தோக்கியவுபநிஷததாத்பரியமுரைத்தல் ... | உஙங | ங0 |
| எ | முண்டகோபநிஷததாத்பரியமுரைத்தல் ... | உசக | சசு |
| அ | கைவல்லியவுபநிஷததாத்பரியமுரைத்தல் ... | உருசு | ங0 |
| கூ | பிரகதாரணியவுபநிஷதத்தில் மைத்திரேயப்பிராமணார்த்தமுரைத்தல் ... | உசுச | உ0 |
| க0 | ஷ உஷத்தங்கார்க்கியந்தரியாமிப் பிராமணங்களினர்த்தமுரைத்தல் ... | உஎக | உஎ |
| கக | கடவல்லிசுவேதாசுவதரவுபநிஷதங்களினர்த்தமுரைத்தல் ... | உஅரு | சங |
| கஉ | முன்சொல்லியவுபநிஷதங்களினர்த்தத்தைத் தொகுத்துரைத்தல் ... | ங0ச | ஙஎ |
| | | | ருசஎ |


**பிரமகீதை அத்தியாய அட்டவணை**

**முற்றிற்று.**

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# பிரமகீதை.

## பாயிரம்.

இரவியுமதியும்வானும்வாயுவுமனலுமப்பு
முரவியமண்ணுமற்றையுணர்பவன்றானுமாகிப்
பரவிடுங்காரணம்பன்னுன்காயமன்றாயுநின்றே
யுரைமனமிறந்துளோங்குமொளியினைவணங்கல்செய்வாம். (௧)

கண்முதற்புலன்களந்தக்கரணங்கள்விளங்குமெத்தாற்
றண்மதியருக்கனங்கிதாரகைவிளங்குமெத்தால்
விண்முதற்பூதமியாவும்விளங்கிடுமெத்தாலந்த
வுண்மையைச்சிவப்பிரகாசவொளியினையுளத்துள்வைப்பாம். (௨)

முன்னைநற்சுருதியோதிமுடிவுறற்கரியதாக
வின்னமத்தேவர்மூவரெய்துதற்கிடரோமேவத்
தன்னையிப்படியேகாணத்தாளளித்தெனக்கோர்வார்த்தை
சொன்னநற்சொரூபானந்தச்சோதியைத்தொழுதல்செய்வாம். (௩)

வேறு.

நித்தனிர்க்குணனின்மலனீடொளிச்
சுத்தனேகன்சுருதித்தொடர்பிலா
னத்தனென்னையுமாண்டவருளினன்
நித்துவன்றிருத்தாளைவணங்குவாம். (௪)

மயலில்வானவர்கேட்பமயக்கற
வியன்முனுட்சொன்னவாரணத்துட்பொரு
ளியலுமாசொரூபானந்தச்சித்தியென்
பெயரினற்றமிழாலிங்குப்பேசுவாம். (௫)

வேறு.

தானாகாதியாவையுமாந்தன்மைத்தாயவொருபொருளை
யூனமென்றன்வாக்கதனாலுண்மையறியவுணர்த்திடுதன்
மாநாகந்தான்மலர்த்தலையில்வையந்தரிப்பமற்றதுபோற்
பூநாகந்தான்பெயர்ப்பனெனும்புன்சொற்போலும்புகலுங்கால். (௬)

வேறு.

மன்னியகமலத்தோன்றூள்வானவர்வணங்கியெல்லாம்
பன்னருமறையருத்தம்பகரொனவினவுமாறு
முன்னதின்மொழிந்துபின்னர்முளரியந்தவிசின்மேலோ
னின்னியலிருக்கிலெதரேயமதியம்புமாறும். (எ)

வேறு.

வான்றூன்முதலாமனைத்துலகும்வாணேர்முதலாம்வருபிறப்பு
மீன்றூனிருக்கிற்றைத்திரியமியம்பும்பரிசையியம்புவார்
மூன்றூமோத்திலுரைத்ததிமூலப்பிரமந்தனைத்தேடச்
சான்றூர்சொன்னநெறியைவிடாச்சதுர்த்தத்தாலேசாற்றியபின். (அ)

சந்தோகத்திற்சட்டந்தானுரைக்கும்பரிசைச்சதுர்முகத்தோ
னைந்தாமோத்திலுரைத்தறிலேழுமெட்டுமொங்கறைந்தான்
மைந்தார்முண்டங்கைவல்லியமறையின்பொருளைவையமெலாந்
தந்தான்சத்தமத்தாலுமட்டமத்துஞ்சாற்றியபின். (கூ)

வேறு.

அன்பினுலகிலலோகம்படைத்தவனமரர்தங்கட்
கின்பமாரணுபிரகதாரணத்திசைமயித்திரியத்தை.
யொன்பதாலுரைத்துப்பத்தாலுடத்தமுங்கார்க்கிதானும்
பின்பதாயந்தரியாமிப்பிராமணவிடயம்பேசி. (க0)

வேறு.

தாதாவேகாதசந்தன்னிற்றக்கோர்சொல்லுங்கடவல்லி
சுவேதாசுவதரமெடுத்துரைத்துச்சொன்னதெல்லாந்தொகுத்தொன்று
தூய்தாயருளிச்செய்தத்தினீராறூத்தாற்சொல்லின்பப்
போதாலயத்தோன்புகன்றபொருளியானுந்தமிழாற்புகல்கின்றேன். [ய்த் ()

## பாயிரம் முற்றிற்று.

---

### ஆக்த் திருவிருத்தம் - கக.

முதலாவது

# தேவர்கள் பிரமாவைத் தரிசித்து வேதார்த்தம் வினவுமத்தியாயம்.

[முற்கூறியிருக்கின்ற எக்ஞவைபவகண்டத்தின் பூர்வபாகத்தில் உபநிஷத்பிரமாண தாத்பரியவிருத்தியால் அறியத்தக்கதாயுள்ள பிரமான்மைக்கியத்வஞானத்துக்குச் சாட்சாத் கைவல்ய ஏதுத்வமானது பிரதிபாதிக்கப்பட்டது; இந்தத் தாற்பரியம் சர்வவேதசாகோபநிஷத சம்மதமென்று தெரிசிப்பிக்கவேண்டி ஐதரேய, தைத்திரிய முதலிய சகலவுபநிஷதங்களின் பொருள்கண்முழுதும் பிரதிபாதித்திராநின்ற பிரம்கீதையை உபதேசித்தருளவேண்டுமென்னும் முனிவர்கள் வினவைத்தொடங்கிப்பூர்வவிருத்தாந்தபூர்வகங் கூறுகின்றார்.]

சூதனைமுனியைநோக்கித்தொல்லைமாமுனிவர்சொல்வார்
மாதவாவினவிற்றெல்லாம்வகுத்துநீதொகுத்துச்சொன்னை
யாதிநான்முகத்தோன்கீதையறியவாதரித்தோமின்றென்
றோதிமாமுனிகளெல்லாமீளவுமுரைக்கலுற்றார். (க)

வேதநூறெறிக்கோனேலேவிஞ்சையும்விளங்கப்பெற்றா
யாதலாலியாதுமுன்னாலறியலாகாததில்லை
மேதையான்மிக்காயெங்கண்மேலுனக்கன்புண்டாகி
லோதுவாய்போதோன்சொன்னவுபநிடப்பொருளையென்றார். (உ)

இன்னபரிசைமுனிவரெல்லாமியம்பக்கேட்டங்கிமையவர்கண்
முன்னமொருநான்மறையோதிமுடிந்தபொருளோர்ந்துணராம
லின்னமிசையோன்றனைக்கேட்பவண்டத்தவர்கட்கவனருளாற்
சொன்னபரிசைக்கேளுமெனச்சூதன்சொல்லத்தொடங்கினனால். (ங)

வேறு.

பண்டொருகற்பந்தன்னிற்பழமறைப்பொருளையெல்லா
விண்டருங்கூடியாய்ந்தங்கறியலாகாமையாலே
யெண்டருமாதவத்தையெய்தியேயிதனைக்கேட்பப்
புண்டரீகத்தில்வாழும்புனிதனைநோக்கிப்போனார். (ச)

வேறு.

பாவவேராறுக்குந்தீர்த்தமென்றெண்ணப் பட்டனயாவையும்பரப்பித், தேவரோடியக்கரரக்கர்கந்தருவர் சித்தர்சாத்தியர்களுஞ்செறிந்து,

நாவினாலறியுமறுவகைப்பட்ட விரதமுநலமபெறவுடைத்தா, யோவிலா
தொழுந்நருவிகளுடைத்தா யொருபொருளொழிவறவுடைத்தாய். ()

வேறு.

சகலயோகிகளுமேவவினிதானதனிசேர்
குகைகள்கோடிபலகூடியுளகோடிபலவாஞ்
சிகரமேவுநவமாமணிகள்சிந்தியுளதாய்
நிகரிலாமணிகழ்மேருகிரிநீண்முடியின்மேல். (௬)

வேறு.

ஐம்பதிற்றிரட்டியோசனைநீளத் தைம்பதிற்றிரட்டியோசனையகன்று, கம்பநற்கரியைமுதல்வருமிருகக்கணங்களாலாகுலங்கனத்துச், செம்பொருள்கொழிக்குந்தீர்த்திகையுடைத்தாய்த் திரண்டபுள்ளினங்களுமுடைத்தாய்ப், பைம்பொழிற்செழுந்தேனருந்தியவறுகாற்பறவையினொலியினாற்பரப்பி. (௭)

வேறு.

இந்துபானுவென்றிருவருநிலவினோடிளவெயிற்பாரிப்பக்
கெந்துபாய்தருசோலையின்கிழங்குகாய்கொழுங்கனிவழங்கத்தண்
சந்தனாடவிபுகுந்துவண்டலவுதண்டாமரைத்தடந்தோய்ந்து
மந்தமாருதந்திரிதருபிரமமாவனமுளததன்கண்ணே. (௮)

வேறு.

வளமாமதிலொன்பதோடெண்பதுவாசலாகி
யிளநாயிறுபோலவிளங்கியிலங்குமொள்வாள்
வளைநேமிகொடுஞ்சிலைதண்டுமழுக்கள்வல்லோ
ரளவோதவிலாதவர்காப்புடைத்தாகியெங்கும். (௯)

வேறு.

பூரணகும்பமெங்கணுநிறைத்துப்பொன்றிகழ்நித்திலம்புணர்ந்த
தோரணமுயர்த்துத்தூய்மலர்த்துணைந்தசுகந்தமாலைகள்பல தூக்கி
யோரணிதீபமேற்றியெம்மருங்குமேழிசையாழிலெங்கெங்கும்
வாரணிகொங்கைமடந்தையர்பாடுமாடமாளிகைவரம்பிலதாய். (௧௦)

சித்திரமண்டபத்திகோடிகளாற்சீர்பெறவிளங்கிமாணிக்க
வத்திரம்வயிரப்போதிகைபவளவொளிமணித்தூணிணைபொதிந்து
நித்திலத்தாமமெங்கணுந்தூக்கிநித்திலவிதானமேயெங்கும் [தாய்.
வித்தரித்தோங்கியநெடுங்கொடிகள் விண்ணளவெறிந்துமீண்டுள

வெடிபடவிச்சமந்தமத்திமமாய் விளங்குகானவொலியொருசா, ரிடிபடுமுரசமுழக்கொலியொருசா ரியம்புவாச்சியவொலியொருசார், வடிவுடைமகளிர்கூத்தொலியொருசார் மறையவரோத்தொலியொரு சார், முடிவறுமிருதிபுராணவாகமங்கண்மொகுமொகென்றெழுமொலி யொருசார். (கஉ)

மேவியசகலாகமங்களின்பொருளும்விருப்புடனுப்பவரொருசார்
காவியமென்னுங்கனியினைநுகர்ந்துகளித்திடுமுளத்தவரொருசா
ரர்விழையாடாக்கையுறவறிவிருநாலங்கத்துயோகியரொருசா [சார்.
ரோவியம்போலவிருந்துணர்விறந்தவுணர்வுகொண்டுறங்கினரொரு

மத்தநற்களிறும்வயிரநற்றேரும்வாசியும்வரம்பிலதாகி
யத்திரத்தாலுஞ்சத்திரத்தாலுமளவறுவீரர்காப்புடைத்தாய்
மெய்த்தவர்க்கெளிதாயல்லவர்க்கரிதாய்வேண்டியபொருளெலாமீண்டி
யித்தகைத்தானவிடத்திலாயிரக்காலிலங்கியவிரத்தினமண்டபத்தே. ()

கற்பகதருவுமகரதோரணமுங்கவின்பெறவமைத்துளதாகி
யற்புதமானவரிமுகத்துறுகாலாசனத்தம்பஞ்சியணைமேற் [ன்ற
சொற்பதவடிவாந்தோகையோடெல்லாப்பொருளுமாய்விளங்கியதோ
லுற்பவமறுப்பானகவீற்றிருந்தானும்பருங்கோயிலுட்புகுந்தார். (கரு)

வேறு.

ஆரமணிகுண்டலமொடாழிகடகங்கே
யூரமபிடேகமுதலொப்பனைகளுஞ்செய்
தாரமகிழுபனிநீரொடளவுங்கர்ப்
பூரமதுகொண்டுதிருமேனிநனிபூசி. (கசு)

வேறு.

நித்தமானதன்னொளியினாலனைத்தையுநிகழ்த்துநின்மலனோடே
வைத்தசெம்பொனிற்றிகழ்திருமேனியின்மாலிகைபலசாத்தி
யுத்தரீகம்வெண்ணெக்ஞோபந்திகமுதரபந்தனத்தோடு
சுத்தமானவெண்கலிங்கமுஞ்சாத்திநற்சுராசுரர்தொழுதேத்த. (கஎ)

தமத்தையப்புறங்கடந்துநின்றறிவுறுசான்றதாய்மதனெல்லா
மமைத்தொருத்தாலமைத்திடப்படாதுளவமூலனுயிருப்பானை
யிமைத்திடப்படாவிழியினாலிமையவரியாவருங்கண்டிந்தச்
சுமைக்கிளைத்தனமென்பவர்போலவன்றுணையடிதனில்வீழ்ந்தார் (கஅ)

கஞ்சநற்கழல்பணிந்தமலனைக்கண்டுகண்களிகூர்ந்து
மஞ்செனச்சொரிதரமயிர்புளகிதம்வரமகிழ்ச்சியினோடு
நெஞ்சநெக்குகநிமலராயவாவெலாநீங்கிநீண்முடிமேலே
யஞ்சலித்தகையினர்களாயானந்தவாரியிற்படிந்தாடி. (௧௯)

வேறு.

அழுத்தமிக்கதிபத்தியாலவசத்தராயுளவண்டர்தங்
குழுப்புவிக்கண்விழுந்துமீளவெழுந்துதங்கள்குரல்களுந்
தழுத்தழுத்தெமதுற்பவங்கடவிர்க்கையேதகவென்றுதாம்
வழுத்தவுற்றனர்வல்லவாமறைசொன்னவாறுதம்வாய்மையால். (௨௦)

வேறு.

பரமஞானமாம்பாற்கடல்பண்ணியபரமனேயடிபோற்றி
கரதலாமலகத்தினேர்பரவொளிகாட்டிடுங்கழல்போற்றி
யொருபராபரமன்றிநீயொருவனுமாகியவொளிபோற்றி
பிரமநாரணசங்கரபோற்றியெம்பெருமநின்பதம்போற்றி. (௨௧)

உடையநீயறிந்தொருவராலுன்னையிங்கறிவரியாய்போற்றி
தொடையதாமுலகனைத்தையுந்தரித்தொருதுவக்கறுசுடர்போற்றி
முடிவுமாதியுங்கண்டுநீமுதன்முடிவின்றியமுதல்போற்றி
வடிவியாவையுமுடையையாயுனக்கொருவடிவிலாதாய்போற்றி. (௨௨)

அகிலமாயகிலத்தினுக்கதிபனுமகிலமுமொன்றின்றி
நிகழுஞானமாநிமலனேபோற்றிநீநினைத்திடுமிடமெல்லா
முகமதாயொருமுகமுனக்கின்றியேயிருக்குநான்முகபோற்றி
திகழுமுன்னொளியாற்றிகழ்ந்திலங்கியசின்மயவொளிபோற்றி. (௨௩)

வேதமோதியவிமலனேபோற்றிவேதாந்தமெய்ப்பொருள்போற்றி
காதுமாபிறவிக்கடல்கடத்துநின்கழலிணைப்புணைபோற்றி
சாதலானதும்பிறப்புமற்றிருந்துளசம்புவேகழல்போற்றி
யேதுமாயினுய்போற்றியோரளவிலாவின்பமேகழல்போற்றி. (௨௪)

தோத்திரஞ்செயப்படுபவனாகியத்தோத்திரந்தானாகி
யேத்திநிற்பவனாகியேயிருந்துளவிறைவனேகழல்போற்றி
காத்திரந்தனையெடாவகைமெய்பினைக்காணவேநினைவோர்க்கு
நேத்திரங்கொடுத்தருளியங்கவர்துயர்நீக்குநின்மலபோற்றி. (௨௫)

வேறு.

ஈசனுக்கன்பரானார்க்கன்பனாமிறைவபோற்றி
நாசமற்றிருப்பாய்போற்றிநாரணற்கினியாய்போற்றி

*யாசையற்றவர்க்குஞானமருளுவாய்போற்றியல்லாப்*
*பாசமுற்றவரைவெய்யபவத்திடும்பகைவபோற்றி.* (உசு)

*அண்டருக்கதிபரானுமறிந்திடற்கரியாய்போற்றி*
*பண்டுடைப்புவனமெல்லாம்படைத்திடும்பரனேபோற்றி*
*கண்டிடப்படாதேயெல்லாங்கண்டிருக்கின்றாய்போற்றி*
*புண்டரீகத்தில்வாழும்புனிதனேபோற்றிபோற்றி.* (உஎ)

*பத்தியாலிமையோரிங்ஙன்பங்கயத்தவனைப்போற்றிச்*
*சுத்தவேதங்களோதித்துணிந்தமெய்ப்பொருளையெங்கட்*
*கத்தனேயருள்செய்கென்னவவர்களாதாத்தைக்கண்டே*
*புத்தியாற்போதோனுண்மைப்பொருளையேபுகலலுற்றான்.* (உஅ)

*முதலாவது*

## தேவர்கள் பிரமாவைத்தரிசித்து வேதார்த்தம் வினவுமத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௰.

---

*இரண்டாவது*

# ஐதரோயவுபநிஷததாத்பரிய முணாக்கு மத்தியாயம்.

---

*[முற்கூறியவண்ணம் ஸ்துதித்து வினவிய தேவர்கட்குப் பிரமா வானவர் பரமகெம்பீரமாகிய சகலவேதார்த்தங்களையுந் தரிசிப்பிக்க வேண்டிப் பரமாத்வைதநிர்க்குணசொரூபமான வேதார்த்தம் லட்சணா விருத்திக்கன்றி அபிதா [சக்தி] விருத்திக்கு விஷயமாகாதென்பது தோன்ற வேதபாகியமதநிச்சயமும், கண்டனமுஞ்செய்து வேதார்த்தத்துக்குச் சத்தியத்துவஹாநிவாரதவகை சங்காசமாதானபூர்வகம் சாதிக்கின்றார்.]*

மறைகளோதுபொருடன்னையெவ்வழியினாலுமெக்கலையும்வல்லா
மறிஞராலுமறையப்படாதறியவாதரிக்குமிகுமன்பினீர்
செறிதலாலதனைநான்விளங்கவுரைசெய்யவொன்றுபடுசிந்தையா [லு
னெறியதாகவிதுகேண்மினென்றயனுநேர்மையானபொருளோதுவா

## வேறு.

சின்மாத்திரமாயுள்ளவெறுஞ்சிவனேதிகழ்வானியாதுக்கு
முன்மாத்திரமும்வேறில்லைமுற்றுமவனேமொழிவுற்ற
நன்மாத்திரமாயான்மாவென்றுணர்க்குநாமத்தினையுடையான்
றன்மாத்திரமேயாகியவத்தன்மையானசங்கரன்றான். (௨)

---

௧. செய்யுள், கூறப்பட்ட பிரமலட்சணத்தையுடைய வேதார்த்தமானது அபிதாவிருத்தியினால் பிரதிபாதித்தற்கரியது அஃதெதனாலெனில், அது நிர்க்குணமாகையால் சத்தப்பிரவிர்த்தி நிமித்தங்களான ஜாதி, குண, கிரியைகளின்மையினால். இதனாலேயே சுருதியும் அது வாக்குக்கோசரமெனத் தெரிசிப்பிக்கிறது. இவ்விதம் அபிதாவிருத்திக்கவிஷயமாயினும். இலக்ஷணாவிருத்தியினாற் பிரதிபாதிக்கப்படுகிறதென்று பொருள்.

௨. செ-ள், [இருக்குவேதம் முந்தினதாதலால் அதனது ஐதரேயவுபநிஷத்திற் பிரதிபாதியாநின்ற அர்த்தத்தைக்கூற விச்சைகொண்ணி "இது மார்க்கம்" என்றதுமுதலான சகுணபாகத்திற்குச் சித்தைகாக்கிரியாதி ஜநகத்துவாரமாய் நிர்க்குணபாக சேஷத்வமுண்டாதலால் அனன்யசேஷமாய்ச் சுதந்தரமாய்ப் பலத்தை யுடைத்தானதாய்ப் பிரமான்ஸைக்கிய விஞ்ஞானஜனகமாகிய 'இந்த ஆன்மா ஒருவனே சிருட்டிக்கு முன்னிருந்தான்' என்றதுமுதலான நிர்க்குணபாகத்தின் அர்த்தத்தையே சங்கிரகிக்கின்றார்.] சின்மாத்திரம் = சேதனமாத்திரம்—வெறும் சிவனே திகழ்வான் = சுத்தசிவன் ஏகனாகியே அத்துவைதனாய்ச் சதா விளங்காநிற்பன்,—கருமசம்பந்த மின்மையின் 'சுத்தம்', 'ஏகன்', ஏ என்னும் தேற்றம், அத்துவைதன்' என்பனவற்றால் சுவகத, சஜாதீய, விஜாதீய பேதங்கள் நீக்கப்பட்டன. சிருட்டிக்குப் பூர்வ காலம்போல் உத்தரகாலத்தினும் நிர்விகாரனாகையால் அப்பரசிவனுக்கு இப்படிப்பட்ட ரூபமே என்பதை, 'சதா' என்னும் பதம் விசேஷணமாய்நின்று நிகழ்த்தாநின்றது. விவர்த்தோபாதான காரணத்தாற்றன்று காரியரூபமான சர்வ சகத்தினும் உள்ளும் புறம்பும் வியாபித்திருத்தலால் 'ஆன்மா'; அதூஉம் சச்சிதானந்த விலக்கணமுடைய ப

வேறு.

அந்தத்துளதன்சத்தியையடைவுற்றனதாமிச்
சிந்துக்கள்செய்கருமந்திகழ்காலம்பருவஞ்செய்
ஒந்தப்பொருள்களுமாக்குவனெனவேயிறையுன்னுப்
பந்தப்படமுன்போற்பல்வுலகங்கள்படைத்தான். (௩)

பரமன்செயலறியாதுபடைத்தானுலகெல்லா
மரனென்பவரரியென்பவரயனென்பவர்சிலரிந்
திரனென்பவன்முதற்றேவர்கள்செயலென்பவர்சடமா
மருவுங்குணவடிவென்பவரணுவென்பவர்மயலால். (௪)

சிவனே: பராபிமதமான பிரதான பரமாணுவாதிகள் அனான்மாவாகை யால் ஆன்மாவல்ல. சிருட்டிக்குமுன் சர்வஜகத்தும் ஆன்மாமாத்திரமா யிருந்ததென்றது அவ்வியாகிருதாவஸ்தை என்க. இங்ஙனம்காரணரூப மாகச் சத்பாவமுள்ளதால் அசத்தினின்றும் காரியோற்பத்தி கூறும் பட்சம் மறுக்கப்பட்டது என்று பொருள்.

௩. செ-ள், [இவ்வாறு, அசங்கோதாசீனனும், சொப்பிரதிஷ்ட தன்னிலே யுள்ளவ)னும், அத்துவிதீயனும், அசரீரனை ஆன்மாவிற் குச் சிருஷ்டவ்விய பரியாலோசனரூபமான ஈக்ஷணமானது எங்ஙு னங் கூடுமென் றுசங்கித்துச் சொல்லுகிறார்.] அந்தத்துளதன் சத் தியை யடைவுற்று + படைத்தான்—பூர்வகற்பத்திற் பிராணிகள் செய் துள்ள சஞ்சிதகருமங்கள் தனது காரணரூபமாயையோடு பிரளய சமயத்திற் பரசிவசொரூபத்தில் வாசனு சேஷங்களாக லயித்துக் கால வசத்தினுல், தத்தம் பலத்தைக் கொடுப்பதையே முக்கிய லட்சணமாக வுடைய ஓர் அதிசயமடைகின்றன; அதனுனும், காலபரிபாகத்தினு னும் சிருஷ்டாவாகிய பரசிவத்திற்கு உலகத்தைச் சிருஷ்டிப்பலென் னும் இச்சைக்கேதுவாய கன்மஜனித அபூர்வ அவாந்தரபரியாய சம் ஸ்காரம் உதியாநிற்கும். அக்காரணத்தினுல் தனது திரிகுணாத்மிகை யான மாயையின் இராசததாமத சம்பந்தமற்ற விசுத்தசத்துவவுபாதி பலத்தாற் சிருஷ்டிப்பலென்னும் சமயம் சிற்பி, இந்திரஜாலக்காரர் போலும் இச்சாரூபமாகிய ஈட்சண முளதாகப் பூர்வம்போல உலகங் கள் படைத்தான் என்று பொருள். 'படைத்தல்' குணோபசம்ஹார நியாயம்.

௪. செ-ள், [ஈண்டுலகங்களைப் படைத்த வான்மா விராட்டா? அல்லது பரசிவனு என்னுஞ் சமுசயம் நிவிர்த்தியாகாமையினுல் காரண வஸ்துநிர்ணய விஷயத்தில், 'ஆன்மாவினின்றும் ஆகாசமுண்டாயி

வேறு.

வானிலாவோசையென்பார்வந்தொருகணத்திற்ருன்றி
யானியாம்புந்தியென்பாரடையவுங்கெட்டுநின்ற
சூனியமென்பார்பூதத்தொழிலெனச்சொல்லாநிற்பா
ரானவாறொருவராலன்றடையவுமியல்பேயென்பார். (௫)

ற்று' என்னும் தைத்திரிய சுருதியானது மகாபூதசூட்சுமசிருஷ்டி விஷயமாயும், "காரணபுருஷன் இந்த வுலகங்களைச் சிருஷ்டித்தான்" என்னும் ஐதரேய சுருதியானது பூதசிருஷ்டிக்கு வியதிரேக சிருஷ்டி விஷயமாயும் காணப்படுவதனால், 'இறைவன் உலகங்களைத் தோற்று விப்பாம்' என்பதுகொண்டு ஈசுரனையே ஜகத்சிருஷ்டாவாக நிர்ண யிக்கப்படும். அஃதெதனாலெனின்;— உபசம்மாரவாக்கியத்திற் பூத பௌதிகங்களனைத்திற்கும், பிரஞ்ஞையே ஆதாரவு, பிரஜ்ஞானமே பிர மம் என்று பிரமவிஷயசிரவணங் காணப்படுவதனால். இவ்வித நிர்ண யத்திலும் 'கால் கட்டை விரல்களானும், பிரமரந்திரத்தானும் சரீரத் தையடைந்தான்' என்ற சுருதிபலத்தால் அவ்விதப்பிரவேசமுடைய கிரியாசத்தி,ஞானசத்திகளையுடைய பிரமங்களுக்குள் யார்ஆன்மா என வுண்டாகும் சமுசயம்போலவே வாதிகளின் விவாதத்துக்கும் அஃதே காரணமாவதால் அவ்விவாதத்தைக் கூறுகின்ருர்.] சேதனம் ஜகத்துக் குக் காரணமாமேல் சகத்தின்கட் சடத்வங் காணக்கூடாதாகையால் சுகதுக்கமோகான்மகமாய்க் காணப்படுகின்ற ஜகத்திற்குச் சடமாக ஆன்மாவின்கட் பொருந்தியுள்ள சத்வராஜதமோகுணான்மகமாகிய பிர தானமே காரணமென்பவர் சாங்கியர். நியூனபரிமாணங்களையுடைய மிருத்துவின் அவயவங்களால் மகத்பரிமாணங்களையுடைய கடாதிக ளின் ஆரம்பங் காணப்படுதலால் பிருதிவிமுதலியவற்றின் பரமாணுக் களில் பிராணிகளின் அதிர்ஷ்டவசத்தாற் கிரியையுண்டாம்; அதனுல் பரமாணு இரண்டுகூடித்துவியணுகந்தோன்றும்; துவியணுகம்மூன்று கூடித்திரியணுகமாம்: அவ்வாறே சதுரணுகமுதலியன முறையானே தோன்றுதலின் மகாபிருதிவிமுதலிய சகத்தை அணுக்களே யாரம் பியாநின்றன என்பவர் தார்க்கீகர்.

௫. செ-ள், சப்தப்பிரமமே அர்த்தரூபப்பிரபஞ்சமாக விவர்த்தித் தலால், அஃதே காரணமென்பர் வையாகரணிகள். க்ஷணிக விஞ்ஞான மென்பவர்பௌத்தர். அடையவுங்கெட்டுநின்ற சூனியமென்பவர் பௌ த்தரில் ஏகதேசியான அசத்கியாதி வாதியர். நான்குபூதங்களின் சேர்க் கையிஞ லுண்டானதென்பவர் உலகாயதர். தத்தமியல்பே என்பவர் சுபாவவாதியர்.

வேறு.

நீத்தமாலான பெத்தவா தியர் தாந்தங்களிற்றுங்கடர்க்கங்கள்
கத்திடாநிற்கும்பரிசெலாஞ்சுருதிமிருதிகள்கருதியதழிக்குஞ்
சுத்தமாவிருத்தமாகுமென்றேயென்றுணிவுதொல்பிறவியிற்சுழல்வார்
சித்தமானதுபோயிவற்றிலேகாதல்செய்யுமுன்செய்ததீவினையால் (௬)

காதலாற்றத்தங்கடவுளாருளாற்காலபாகத்திஞலறத்தாற்
போதராதலிஞல்வேதவாதத்தைப்பொருந்துவர்புகன்றவவ்வடைவே
வேதவாதத்தைமேவுநல்வினையால்விருப்பிஞலன்றிமேவின்றுருஞ்
சாதலானதுவும்பிறத்தலுமில்லாத்தற்பதந்தன்னையேசார்வார். (௭)

வேறு.

வான்கருதியமறைவழியைவிட்டுமேற்
றுன்கருதுதல்சதுரன்றுதன்கையிற்
றேன்கமழ்திரளையைச்சிந்திச்சந்தியாக்
கூன்கையில்விழுந்துளிகொண்டதன்மையே. (அ)

வேறு.

பொருள்கொண்டமறைநின்றுபுகல்கின்றதுணரா
மருள்கொண்டசமயங்கண்மதிகொண்டுகெதியா
யருள்கொண்டபாவின்பமடைகின்றவவர்போ
லிருள்கொண்டுபொருள்கண்டவவரன்றியிவரார். (௯)

---

௬. சே-ள், 'அவனிச்சித்தான் எ-ம், வெகு பிரஜைகளாக ஆவே மென்று தானே தன்னைச் சகமாகச்செய்தான்' என்றுஞ்சொல்லுகின்ற இவை சுருதிகள்; 'வேதமாகிநிகழ் யானவாதுலகி லென்னின் + நான் மருவி நின்றவாறு நனிபேசுகேன்:' 'ஈண்டு பொருளிவை யனைத்து மிறக்குங்கா + காத்தழிக்கின்றேன் யானேகாண்' இவை பகவற்கீதா ஸ்மிருதிகள். [இப்படிச் சுருதி, ஸ்மிருதிகளுக்கு விரோதமாகையால் சாங்கியாதி சாஸ்திரங்கள் அப்பிரமாணமா யுள்ளளவில் அவைகளில் தீர்த்தகாரர்கட்கு எப்படிப் பிரவிர்த்தி வரலாமென் றுசங்கித்துச் சமா தானங் கூறுகின்றார்.] தொல்பிறவியிற் சுழல் + தீவினையால்.

வேறு.

வேதமோதியதேமெய்ப்பொருண்மற்றைப்பொருளெலாமித்தை யேவேத, மோதமேவுற்ற பொருளிருவகையா மதனிலொன்றென்று முண்மையதாய்ப், போதவானந்தமாகிய சிவனும்பொருளது மற்றதப் பொருளி, லேதமேவாமுற்கற்பிதமாகுமற்றதனியல்லையுமிசைப்பாம்.

சொல்லுறுநின்றகற்பிதப்பொருளிற்சொல்லளவுள்ளதாயுண்மைக், கில்லையாயிருக்குஞ்சிலபொருள் சொலவுமில்லையாஞ்சிலபொருளை வைதா, னெல்லைதீர்வானாதிகளுஞ்சுத்திகையி லிரசதாதிகளுமாமுன்னைத், தொல்லையாம்பொருளுங் கற்பிதத்துண்மைப் பொருளையுஞ் சொல்லுநற்சுருதி. (௧௧)

---

௧௦. செ-ள், வேதமோதிய+மித்தையே— [வேதப்பிரதிபாதகமானவர்த்தமே சத்தியமாமென்றால் கிரியாகாரகாதி பேதங்களாற் பின்னமாகிய ஜகத்தும் ஆன்மாவைப்போல வேதார்த்தமாகையால் சத்தியமாகலாமே எனச் சங்கித்து அதற்கு வியாவகாரிக சத்தியத்வம் பிரதிபாதிக்கும்பொருட்டு வேதார்த்தம் இரண்டுவிதமென்றுகூறுகின்றார்.] வேதமோத+கற்பிதமாகும்—ஞானகாண்டம், கருமகாண்டம் என்று வேதமிருவகை; அவற்றுள், ஞானகாண்டத்தினாற் சத்திய ஞானாதி லட்சணமுடையதாய்ப் பிரதிபாதியாநின்ற பரசிவமானது பரமார்த்தம்: கருமகாண்டத்தில் பிரதிபாதிக்கப்பட்ட சுவர்க்க அபூர்வ தேவதாதி லட்சணமுடைய பிரபஞ்சமானது முற்கூறிய பரமான்மாவின்கண் அத்தியஸ்தமாகிய மாயையினாற் பரிகற்பிதமாம் என்று பொருள்.

௧௧. செ-ள், [இங்ஙனமாயின் கருமகாண்டம் கற்பிதத்துவித விஷயமாம்; ஆனால் வேதார்த்தமனைத்தும் சத்தியமென்னும் நியமஞ் சித்தியாது என்றுசங்கித்து அதற்குச் சமாதானங் கூறுகின்றார்.] சொல்லுறுநின்ற+விரசதாதிகளுமாம்—சர்வமும் மாயாகற்பிதமாகையால் அவஸ்துவாயினும் ஆகாசாதிகள் வியாவகாரிக சத்தியத்வமாகவே கற்பிக்கப்பட்டன, சுத்திரஜதாதிகள் வியாவகாரத்தினும் அசத்தியங்களேயாம் என்று பொருள். [ஜகத்தானது வியாவகாரிகசத்தியத்வமாய் அங்கீகரித்தலால் வேதார்த்தத்துக்குச் சத்தியத்வ ஹானியில்லையென்று சொல்லுகிறார்.] முன்னைத்தொல்லையாம்+சுருதி—பிரமாதாவுள்ளளவில் அவாதிதமாயுள்ள ஜகத்து வியாவகாரிக சத்தியம்: ஒருகாலும் வாதமில்லாத சத்தியஞானாநந்த ஏகரசபிரமத்தின்கண் அது பரமார்த்தமாய்ச் சத்தியமாயில்லை என்க.

வேறு.

கனவிற்கற்பிதப்பொருள்போல்வாதக்கலக்கங்க
ணனவிற்கற்பிதப்பொருளைநவிலாரினியச்சிற்
கனவத்துவிதத்தினையென்கண்ணுற்றவர்கண்ணுற்
சொனவத்தகவுமெய்யேமெய்யிற்றோன்றதே. (கஉ)

போதக்கண்ணிற்பூதம்பொய்யேமெய்யேயாம்
பேதக்கடகுட்டியமாநிகழ்விற்பேதந்தா
ணேதப்படுசுத்திகைவெள்ளியின்மெய்யுணர்காலஞ்
சேதப்படுமக்கனவிற்பெரிதுந்திடமுண்டோ. (கந)

---

கஉ. செ-ள், [ஆனால் மார்க்காந்தரங்களாற் பிரதிபாதியாநின்ற தென்னையெனின்? அதைச் சொல்லுகின்றார்.] வாதக்கலக்கங்கள் = வாதக்கலக்கங்களையுடைய சௌகத, வைசேஷிகர் முதலியோர்—கனவிற்க + நவிலார்—தோஷசகித அவித்யாகற்பிதார்த்தங்களைப்போல மாயாபரிகற்பிதார்த்தங்களைக் கூறார் என்பது பொருள். (மற்றெங்ஙன் கூறுவரெனின்;—அவ்விருவகை வாதியருள் சௌகதர், சொப்பனாவஸ்தையின்கண் தோஷசகித அவித்தியாபரிகற்பிதங்களாகிய அர்த்தங்களைச் சாக்கிரதார்த்தங்களைப்போலப் பிரதிபாதியாநிற்பர். அப்படியே வைசேஷிகர், சாக்கிராவஸ்தையின்கண் வியாவகாரிகசத்தியமாய், மாயாகற்பிதங்களாகிய யாதொரு வேதாந்தியபிமதமான வர்த்தங்களுண்டோ அவற்றிற்குச் சமானமாய்த் திரவிய குண கர்மலக்ஷணங்களான அர்த்தங்களையே கேவலம் பிரதிபாதியாநிற்பர் ஆதலால்) இனியச்சிற்+ கண்ணுற்றவர் (ஆகார்.)—சொனவத்தகவும் கண்ணால் மெய்யே மெய்யிற்றோன்றாது.—அம்மதஸ்தர்களாற் கூறப்பட்ட அந்த நியாயமும் வியவகார திருஷ்டியாற் சத்தியந்தான்: பாரமார்த்திக திருஷ்டியில் சத்தியமாக நிகழாதென்று பொருள்.

கந. செ-ள், [வியாவகாரிக சத்தியமே பாரமார்த்திக சத்தியமல்லவாயின் ஒருவஸ்துவே சத்தியமாகவும், அசத்தியமாகவும் எங்ஙனம் பலிக்கும் என்றுசங்கித்துத் திருஷ்டிபேதத்தினாற் கூடுமென்று சொல்லுகிறார்.] போதக்+திடமுண்டோ - மண், பொன்முதலிய காரணங்களுள்ளபோதே அவைகளிற் கடாதிகாரியங்களின் லயங்காணப்படலின் அக்காரணங்கள் மாத்திரஞ் சத்தியம், அக்காரியங்கள் அசத்தியம் என்பது பிரசித்தமாம்; அப்படிக் காரணபூதபாசிவசைதன்யத்தைநோக்க அதன்காரியமாய், அசைதன்யமான வியதாதி பூதங்கள்

வேறு.

கனவிற்கண்டபொருணனவிற்காணும்பொருளைக்காட்டலா
னினையிற்சமயநெறிவேதநெறிக்குநிமித்தமாநினையின்
வினவிற்சமயநெறிவிட்டுமேலாம்வேதநெறிநின்றோன்
பினையச்சமயத்தவர்க்குறுகிற்பிராயச்சித்தஞ்செயவேண்டும். (௧௪)

வேறு.

தண்ணியசமயிகடங்கள்பந்தியி
லுண்ணுதலவர்களோடுறவுபண்ணுதல்
புண்ணியமறிந்திடப்புகுதல்செய்திடிற்
பண்ணுகசாந்திராயணம்பகர்ந்தவா, (௧௫)

---

அசத்தியமாம்; அவையும் தமது காரியங்களாகிய கடகுட்டியாதிகளை நோக்கச் சத்தியமாம்; அக்கடகுட்டியாதிகளும் தமது காரணமாகிய வியதாதி மகாபூதங்களை நோக்க அசத்தியமாம்: பிரமாதாவிருக்குங் காலத்திலேயே வாதிக்கப்படுவனவான சுத்திரஜதாதிகளை நோக்கப் பிரமாதாவுள்ளளவில் வாதிக்கப்படாமையால் அவை சத்தியங்களாம்; அப்படியே சாக்கிராவஸ்தை தன் காரணத்தை நோக்க அசத்தியமாயினும் பிரமாதாவுள்ளளவில் வாதிக்கப்படாமையால் சொப்பனுவஸ்தையைப் பார்க்கினும் விலட்சணமாய்ச் சத்தியமாம்; அதை யபேட்சித்துச் சொப்பனுவஸ்தையும் பிரமாதாவுள்ளபோதே வாதிக்கப்படுதலால் அசத்தியமாம், இவ்வாறு ஒருவஸ்துவுக்கே வியாவகாரிக திருஷ்டியினுற் சத்தியத்வமும், பாரமார்த்திகதிருஷ்டியினுல் அசத்தியத்வமும் விருத்தமில்லை என்றுபொருள்.

௧௪. சே-ள், [இந்தப்படி பாரமார்த்திகதிருஷ்டியினுல் அசத்தியங்களாயுள்ளவைகளிற் சத்தியபுத்தியையுடைய மார்க்கங்கள் பிராந்தங்களானுல் மித்தியாபூதங்களானவைவைகள் பரம்பரையாகத்தான் எப்படி வேதமார்க்கத்தைப் பெறும்வாயிலாய்ப் பரமார்த்த சத்தியசிற்கன பரமேசுவரரூபப்பேற்றின் காரணமாம் என்றுசங்கித்துத் திருஷ்டாந்தத்தோடு சமாதானங் கூறுகின்றார்.] கனவிற்கண்ட + நினையின் — [அச்சமயத்தாரை மோகத்தினுலடைந்த வைதிகர்கள் கருமத்திற்குத் தக்க பிராயச்சித்தஞ்செய்யவேண்டுமென்று கூறுகின்றார்.] வினவிற்சமய + செயவேண்டும்.

வேறு.

வேதஞ்சொனபடியொழியவேறுஞ்சிலகலைகளினை
யோதுந்திறமருவிமறையோதுஞ்சிவனிருகமலப்
பாதந்தொழுநினைவிலர்கள்பாசண்டிகளெனவறிக
தீதொன்றியவவர்களொடுசேருங் கலர்களுமவர்கள். (கசு)

வேறு.

மையறுவேதமார்க்கமறந்துபாசண்டமார்க்கக்
கையரான்மயக்கப்பட்டுக்கலியுகந்தன்னிலுள்ளோர்
மெய்யுணர்வனந்தானந்தமேனியாஞ்சிவனைப்பூசை
செய்யவாதரியார்செய்வார்தம்மையுஞ்செய்யவொட்டார். (கஎ)

காதும்வாதியர்களாலேகலியுகத்துள்ளோர்கெட்டு
வேதமோதியவாசெய்யார்மிருதிசொல்லுவதுஞ்செய்யார்
பூதியுமணியார்ஞானசாதனபூதமாக
வோதுவதொன்றுஞ்செய்யாரொழிந்ததேயுகந்துசெய்வார். (கஅ)

வேறு.

தருமமதறிவில்பாசண்டர்தங்களை
மருவலால்வேதமார்க்கியப்பொருள்
கருதிடாரதுகாமணியிற்காட்டிடுங்
குருவையும்வழிபடார்குதர்க்கமேவலார். (ககூ)

வேறு.

முன்னைநான்மறைகளோதிமுடிந்திடும்பரமமான
சன்னியாசத்தைச்சாரார்சார்ந்தவர்தமக்குந்தீங்கு
பன்னிடாநிற்பர்வேறுபலபலசொல்லியென்னை
மன்னுவீடெய்தாதானவழிகளேமருவாநிற்பர். (உ0)

---

கசு. வே-ள், [வேதநிந்திதமான புறமதங்களிற் செல்பவர்கள் பாஷண்டிகள் எ-ம், அவர்களது மோட்சப்பிரதிகூலமான நடைகள் இவையிவை எ-ம், கு-கவிகளாற் கூறுகின்றார்.] கலர்=கீழ்மக்கள் அல்லது பாவிகள்.

உ0. வே-ள், பிரமா, விஷ்ணு, ருத்திரர்களைப் வேதபுத்தியால் அந்நியமாய்ப் பாராநிற்பர், வேதத்தை நிந்தியாநிற்பர், பேதத்தைச் சிரத்தையோடுஞ் செய்யாநிற்பர், வேதத்திற் சொல்லிய அங்கசங்கள்யாவைஅவையனைத்தையுஞ்செய்கின்றனர் என்பார். 'வேறுபலபலசொல்லியென்னை, மன்னுவீடெய்தாதான வழிகளேமருவாநிற்பர்' என்றார்.

துட்டருமார்க்கர்நூலிற்றுவக்குணுப்பெரியராகிச்
சிட்டராய்த்திராகிச்சிவனருளுடையராஞர்
கட்டமாம்பிறவிதீரக்காதலால்வேதஞ்சொல்லப்
பட்டதேசெய்யாநிற்பார்பரமமாம்பதத்தையுன்னி. (உக)

வேறு.

துவத்தமேபிதற்றப்படுங்கலையெலாமல்லற்
பவத்தைவேராறுத்திடுவதுபழமறைப்பொருளே
யுவப்பினுலொருகணத்திலப்பொருள்பெறவுரைப்பான்
சிவப்பிரகாசனேயென்றனன்றிசைமுகன்றெளிய. (உஉ)

இரண்டாவது

## ஐதரேயவுபநிஷத்தாத்பரியமுணைக்குமத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௬௧.

---

மூன்றாவது

## ஐதரேயவுபநிஷதார்த்தசேஷமும், தைத்திரியவுபநிஷதார்த்ததாத்பரியமு முணைக்கு மத்தியாயம்.

[பூர்வாத்தியாயத்தில் சகத்கர்த்தவாகிய புருஷனை வாதிகள் தத்தம் மோகத்தால் வெகுவிதங்களாகக் கூறுகிறபடியொன்று அவர்களின் விபரீதமான கொள்கையைச் சாமான்யமாகக் காண்பித்து அவ்வாதங்களனைத்தும் சுருதி, ஸ்மிருதிகளின் விருத்தங்களாம் என மறுத்து உபநிஷதங்களாற்பிரதிபாதிப்பவனுன புருஷனே பிரத்தியக்கான்மா எ-ம், சகத்கர்த்தா எ-ம் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வத்தியாயத்தால் விசேஷமாகச் சில சங்கைசமாதான வாயிலாகக் காண்பிக்க விச்சிசாணிச் சகசிருஷ்டாவான ஆன்மா தனதுமாயையின் காரியங்களான தேகங்களில் கிரியாசத்தி சம்பந்தத்தால் பிராணரூபமாகப் பாதாக்கிரங்களால் பிரவேசித்தான் எ-ம், சிற்சத்தி சம்பந்தத்தால் பிரமரந்திரத்துவாரமாக இருதயத்திற் பிரவேசித்துச் சேதனனுக விளங்குகின்றுன் எ-ம், சுருதியிற் காணப்படுதலின், அவ்விருவரில் முக்கியான்மா யாவன் என்று பரியாலோசனைசெய்து சர்வத்திலும் பிரத்தியக்காகவிருப்பவனே முக்கியான்மா என்று உறுதிப்படுத்தும்பொருட்டு இந்த லோகமானது எந்தப்பிரகாசத்திஞல் காண்டல், கேட்டன்முதலிய சர்வவியவகாரங்களையுஞ் செய்கிறதோ அதுவே முக்கியமான பிரத்தியக்கான்மாவாகும் என்னும் மூலசுருதியின்ருற்பரியத்தைக் கிரமமாகத் தரிசிப்பிக்கிருர்.]

தற்பரன் றனுருவுஞ்சயம்புவா
முற்பவமதுருவையுமுண்மையி
லற்பமுமதிலன்னியமின்மையும்
பொற்பமைந்தநற்பூமகனோதுவான். (க)

வேறு.

சான்றதேயெல்லாப்பொருட்குமெல்லாமாஞ் சங்கரன்சான்றிலா தாயிற், றோன்றிடாதுலகந்தோன்றிடாவாறு தனக்கெனத்தோற்றமின்மையினாற்,றான்றனக்குலகந்தோற்றமில்லாமைசடத்துவத்தாற்சடமாகை, யென்றுதானறியாதொன்றினாலறியப் படும்பொருளாகிய வியல்பால். (உ)

உலகெலாம்விளக்கமுறுமொளியுணர்வி னுற்பவமெனச்சிலர்சொல்வ, ரலகில்பேரொளிதான்பிறக்குமேற்சடமா மாதலாற்பிறக்கைகூடாது, கலவருநாசமுள்ளதுசடங்களாங்கடாதிகடமக்கேயா, மூலவிலாவொளிவிஞ்ஞானமுண்டாகவாக்குகையுள்ளவாறன்றே. (ங)

வேறு.

பாணரூபத்தான்ஞானம்பரிணமத்தைதப்படையாது
ஞானரூபமவிகாரியாதலாலேவிஞ்ஞானந்
தானும்விகாரப்படுமேற்பாறன்னைமுதலாஞ்சடப்பொருள்போ
லானியாகியநிபொருளாமறிவுமறியும்பொருளாமோ. (ச)

---

உ. செ-ள், எல்லாமாஞ்சங்கரன் எல்லாப்பொருட்குஞ்சான்றதே— [சாட்சியில்லை யென்போமெனின்,] சான்றிலாதாயி னுலகந் தோன்றிடாது—[எதனால் விளங்கமாட்டாதெனின்,]—தோன்றிடா + யினால்— [எதனால் ஸ்பூர்த்தியாகாதெனின்,] தான்றனக்குலக + த்தால்—[எதனால் சடமெனின்,] சடமாகை + வியல்பால்.

ஙு. செ-ள், [பட்டர்மதத்தில் கர்த்தாவாகிய ஆன்மாவுக்குப் பாநமானது சட்சுஸுமுதலிய காரணஜந்யஞானம்போல விஞ்ஞாநத்தினால் தத்தம் விஷயங்களில் உதியாநிற்கிறது என்னும் கொள்கையை இங்கே சங்கித்துப் பரிகரிக்கின்றார்.] ஒளி—பாநம்.

ச. செ-ள், [அன்றியும் விஞ்ஞானமானது பாநத்துக்கு ஜநகமாமென்னின்; அது பாநரூபமாகப் பரிணமிக்கிறதென்றாவது, ஆரம்பிக்கிறதென்றாவது சொல்லல்வேண்டும்; பிரதிஞ்ஞையாதி பூர்வகம் அவ்விருவிதபட்சமுங் கூடாதென்று மறுக்கின்றார்.] பாநரூபத்தால்—பாநரூபமாக.

அறிவுபானந்தனக்குத்தாணூரம்பமுமாகக்கூடா
தறிவுதானோறியவுறும்பொருளாயிராதவதனூலு
மறிவைக்குணமாகப்பிறருமங்கீகரித்தவதனூலு
மறிவிங்கசத்தாம்பானத்துக்காரம்பகமுமாகாதே. (௬)

தொல்லையசத்தாம்பானத்தைத்தோற்றுவிப்பதொருஞான்று
மில்லையில்லாப்பொருளுக்குப்பண்டின்றென்னவியம்பவருஞ்
சொல்லுமில்லையாதலினூற்றேற்றப்படுதல்விஞ்ஞானத்
தில்லையெல்லாப்படியானுமென்றுமுள்ளதிவ்வொளிதான். (௯)

வேறு.

ஓதுநெறியாலுணர்வுமுற்பவமுமுறே
பேதைமையதேயதுபிறக்குமெனுமாறிங்
கோதிவருபானமதிலுற்பவமுமற்றே
நீதிபிறவாமலுளதாலவ்வொளிநித்தம். (எ)

௯. தே-ள், தொல்லை+மில்லை—[அதுகூடாது பூர்வம் அசத்தாயுள்ள பதார்த்தத்திற்குச் சத்தாசம்பந்த முளதாதலே உற்பத்தியாதலால் விஞ்ஞானத்தினால் பாநம் ஆரம்பிக்கப்படலாமே யெனின்? அதுவுங் கூடாதென்று பரிகரிக்கின்றார்.] இல்லாப்பொருளுக்கு+எல்லாப்படியானும் விஞ்ஞானத்தில்லை யிவ்வொளிதா னென்றுமுள்ளது—அசத்பதார்த்தத்திற்கு வந்தியாசுதன்போல முன்பின் என்னும் யாதொரு விசேஷங்களுங் கூடாது; கூடுமெனின்? பூர்வபதார்த்தத்வப் பிரசங்கமுளதாம்; ஆகவே தமது சித்தாந்த ஹாநியும், பரசித்தாந்தப்பிராப்தியும் நேரிடும். ஆதலால் அசத்பதார்த்தத்திற்கு முன்பின் என்பன முதலிய எவ்விசேஷங்களும், தர்ம சம்பந்தமும் உளதென்னல் கூடாது. முற்கூறிய ஆரம்பபரிணாமமென்னும் இருவித பட்சங்களன்றி மற்றெப் பிரகாரத்தாலும் பாநவஸ்துவிற்கு ஜந்யத்வம் நிரூபிக்கச் சங்கதியில்லாமையால் விஞ்ஞாநம் பாநத்துக்கு ஜநகமாமென்னும் பட்சம் மறுக்கப்பட்டது என்க.

எ. தே-ள், [அப்படியே ஞாநத்துக்கு ஜந்யத்வமுண்டென்னும்பட்சமுங் கூடாதென்று மறுக்கின்றார்.] ஓதுநெறி+நித்தம்—அற்றே= அந்த அறியாமையே—கடஞானமுண்டாயிற்று, படஞானம் நஷ்டமாயிற்று என்னும் லௌகிக வியவகாரம் உபாதியுபகிதவஸ்துவின் அவிவேகத்தினால் உண்டாயிருக்கின்ற பிராந்திமூலமாம். லௌகிகவியவகாரத்தை யநுசரித்து ஞானம் ஜந்யமாகுமென்றால் அதற்குக் கடாதி

வே று.

நிகிலலோகந்தனைநிகழ்த்துநித்தவொளியேதவ்வொளியே
சகலலோகந்தனக்கென் றுஞ்சான்றாய்நின்றசங்கரன்றன்
றுகளிலிறையிற்கற்பிதமாஞ்சம்பந்தத்தாற்றோற்றமுறுந்
தகவிலஞ்ஞானமுமன் றித்தானாய்த்தோற்றந்தாராதால். (அ)

தெரிவிலாமையிற்சனித்திடுஞ்சித்தமுஞ்செற்றமரீர்வமுமெல்லாந்
தெரிவிலாமையைத்திகழ்த்தியசேதனச்செறிவினூற்றிகழ்கின்ற

திருசிய பதார்த்தங்கள்போல ஜடத்வம் நேரிடுமென்று முற்கூறப்பட்டிருக்கிறது. சட்சுமுதலிய கரணங்கட்கு விஷயசம்யோகமுளதான பின்னர்உருவமுதலியவற்றின் விஷயஞானங்காணப்படுகிறதுகொண்டு அவிவேகிகள் விருத்திநிஷ்டமான விகாரங்களை அவ்விருத்தி உபகித சேதனத்தில் ஆரோபிக்கின்றனர். விவேகிகளோவெனின் ஞானத்துக்கு ஜடத்வமில்லை எ-ம், எக்காலத்தினும் வஸ்துபூதமான ஞானமுள்ளதாய் விளங்காநின்றது எ-ம், அதன்கட் டோற்றுநிற்கும் ஜடத்வமுதலிய தர்மங்கள் பிராந்தி எ-ம் அறிகின்றனர். அவித்தியா கர்ம வாசனை வேகங்களால் வெகுவித விஷயாகாரமாகப் பரிணமிக்கின்ற அந்தக்கரணவிருத்திகளே அவ்வவ்விஷயங்களில் மாறிமாறியுதித்துத் திரோபவிக்கின்றன; இவ்வாறு பாநத்துக்கும் உற்பத்தியில்லாமையால் அஃது நித்தியமாம் என்க.

**அ. செ-ள்,** [பாநம் நித்தியமென நிச்சயித்துப் பாநரூபனாகிய பரமசிவன் சாட்சி சின்மாத்திரனென்று பிரதிக்ஞை செய்தபடி அத்தன்மையான சகலவுலகப் பிரகாசகபாநமே சாட்சி எ-ம், அச்சாட்சி பாநமாகிய சங்கரன் அசங்கனாதலால் அஞ்ஞானமுதலிய ஜகத்துக்கும், தனக்கும் பிரகாசிய பிரகாசகசம்பந்தங்கூடாததனால் எங்ஙனம் அவனால் விளக்கமுறும் அஞ்ஞானமுதலியவை எனவும்வா? கற்பிதசம்பந்த விஷயமாக அவைகள் விளங்குகின்றதெனக் கூறுகின்றார்.] நிகிலலோக+தாராதால் — அத்துவிதீயனாய், அசங்கசித்துரூபனாகிய பரமசிவனுக்குச் சாட்சியவிஷயோபகாரரூபமான சாட்சித்வம் பரமார்த்தமாகவில்லையாயினும் கற்பித சம்பந்தத்தால் அச்சாட்சித்வங்கூடும்; அவ்வித சம்பந்தமானது பாரமார்த்திகமான அசங்கத்வாதி லட்சணங்களை விரோதிக்கமாட்டாதென்பது கருத்து.

**கூ. செ-ள்,** [சாட்சியால் கற்பித சம்பந்தமுடைய அஞ்ஞானம் விளங்குவதுபோல அஞ்ஞான தற்காரியமான அந்தக்கரணமும், அங்

புரிவதாம்பிராணன் றிகழ்வதும்புறக்கரணங்களுடலந்தான்
விரிவதாம் விடயங்களெல்லாஞ்சித்தவிருத்திசேருணர்வாலே. (௯)

வேறு.

அன் றியனுமானமுதறன்னிலறியறிவு
நின் றுசிலசில்பொருணிகழ்த்தியிடுமதனு
லென் றுமிறையெப்பொருள்களியாவுநிகழ்விப்பா
னென் றுமவனுலொழியவென் றுநிகழாதால். (௧0)

வேறு.

ஆதலானுருவங்காண்பதுமொலிதானமுகுறக்கேட்பதுமொருவன்
காதலாற்கந்தங்கொள்வதுமினிதின்னுமெனவிரதங்காண்பதுவு
மோதலாம்பரிசமுணர்வதுமிறையாலுணாத்தசங்கரனெனுமுணர்வை
மேதையான்மிகுத்தோர்வேறுவேருகவிளம்புவாரதுவிளம்பிடுவாம். ()

---

தக்கரணத்தின் பரிணமமான சர்வவிருத்திகளும், பிராணேந்திரியாதிகளும் அவ்வவ்வுபகித சாட்சியால் பிரகாசிக்கின்றதெனக் கூறுகின்ருர்.]

௧0. சே-ள், [இவ்வாறே பரோட்சவிஷயங்களும் அநுமானவுபமானுதி விருத்தியுபகித சாட்சியால் விளங்குறுமெனக் கூறுகின்ருர்.]

௧௧. சே-ள், [ஜீவரூபனுக வநுப்பிரவேசித்திருக்கின்ற பரமசிவன் சாட்சி சின்மாத்திரமென்று சித்தாந்திக்கப்பட்டது. அப்படியே சுருதியிலிருவருக்குள் யார்ஆன்மாவென்ற கேள்விக்கும் சர்வசாட்சியான சித்துரூபனே ஆன்மா பிராணன் அன்றெனை உத்தரமுங் கூறப்பட்டது முந்திய கவிகளால்; இந்தப் பொருளையே எவன் பார்க்கின்ருனே, எவன் கேட்கின்ருனே, எவன் கந்தத்தை ஆக்கிராணிக்கின்ருனே, எவன் வாக்கினுற் பேசுகின்ருனே, எவன் ருசி, அருசிகளை அறிகின்ருனே அவனென்று உத்தரமாகச் சொல்லுகின்ற சுருதியின் பொருளைக் கூறுகின்ருர்.] ஆதலானு + விளம்பிடுவாம்.—பலமென்னும் விஷயாகார பரிணமமுடைய கண்ணின் சம்பந்தத்தாலுண்டுபண்ணப்பட்ட மனோவிருத்தியில் அபிவியக்தியுடைய சர்வப்பிரகாசனையும், சர்வ இருதய மத்தியங்களிலிருப்பவனையுமுள்ள சிவனென்னும் சிற்பிரகாசத்தினுலேயே ரூபங்களை ஜனங்கள் அறிகின்ருர்கள் என்பார், உருவங்காண்பதும் எனக்கூறினுர். இப்படியே மற்றனைத்திற்குங் கொள்க.

சிலவர்தாமிதயமென்பர்கண்மனமேயென்பர்கள்சிலவர்தாஞ்சிலவர்
நலமதாஞானமென்பர்களெல்லாநாடிஞானமென்பர்களா
மிலகுவிஞ்ஞானமென்பர்கண்மிருத்தேயிலங்கியஞானமென்பர்களாஞ்
சொலவருமேதையென்பர்கள்வேறுசொல்லிடும்பரிசையுங்கேண்மோ.

யாதையுங்காணுங் கண்ணெனமொழிவா ரொழின்மிகுதிருதியா
மென்பார், சூதியதென்பார்மிருதியென்றுரைப்பார்சொல்லுஞ்சங்கற்பு

---

கஉ. ரே-ள், (1) உபாசனையினாலும், பஞ்சகோச விசாரத்தினு லும் ஆன்மாவின் அபரோட்சஞான முளதாகுங் காரணத்தால் ஆன் மாவை (அல்லது அத்தியவசாய தருமமுடைய வந்தக்கரணத்தை) 'இரு தயமென்பர்.' (2) பிரபஞ்சமுழுதையும் பிரகாசிப்பிக்குங் காரணத்தால், அல்லது சர்வ முமுட்சுக்களும் மனத்தினால் ஆன்ம நிச்சயஞ் செய்யுங் காரணத்தால் ஆன்மாவை (சங்கற்பாதி விருத்தியை) 'மனமேயென் பர்.' (3) ஆன்மாவிற் கற்பிதமாகிய பிரபஞ்சத்தை ஆன்மா நன்குக் கறிதலின் ஆன்மாவை (சம்ஜ்ஞானம் = யாதொன்றன் சம்பந்தத் தால் காரியகாரணங்கள் சேதநம்போலத் தோன்றுகின்றனவோ அது) 'நலமதா [சம்ஞப்தி] ஞானமென்பர்கள்.' (4) ஆன்மாவின் ஆக்ஞை யில் வாக்காதி சர்வேந்திரியங்களும், அக்கினியாதி சர்வ தேவதைக ளும் இருத்தலின் ஆன்மாவை [ஆஜ்ஞாசக்தியை] 'எல்லா நாடிஞான [ஆஜ்ஞான] மென்பர்கள்' (5) ஜடசேதநரூபப் பிரபஞ்சத்தின் பேத விசாரபூர்வகமாகத் தனது சொரூபத்தையும், பரமான்மாவையும் விசே ஷமாகவறிதலின், ஆன்மாவை [லௌகிகவிஷயமான சூட்சுமஞான த்தை] 'விஞ்ஞானமென்பர்கள்.' (6) சர்வப் பிரபஞ்சத்தையும் பிரகாசிப் பிக்கிற தனது சொரூபத்தை நானாகிறேனென்று சர்வதா இவ்வாறறி தலின், ஆன்மாவை [பிரஜ்ஞையை] 'மிருத்தே யிலங்கியஞா [பிரஜ்ஞாந] மென்பர்கள்.' ஒருதரமறிந்த தனது சொரூபத்தையும், அந்நியமான யாதொருஅநான்மவஸ்துவையும் மறவாமையின், 'மேதையென்பர்கள்.' மேதை, மதி, புத்தி, பிரஜ்ஞை, ஸ்மிருதி; இவற்றில், மேதை=கிரந் தார்த்ததாரண சாமர்த்தியம்; மதி=ஆகாமியவஸ்து கோசரம், புத்தி= வர்த்தமான வஸ்துவிஷயம், பிரஜ்ஞை=காலத்திரய விஷயமுடையது, ஸ்மிருதி=அதீதவஸ்து விஷயமுடையது.

கங. ரே-ள், (1) சட்சுமுதலிய இந்திரியங்களால் சர்வவஸ்துக் களையும் பார்த்தலின், கடபடாதிகளை விஷயமாகவுடைய விருத்தியை, 'யாதையுங் காணுங்கண் [திருஷ்டி] ணென மொழிவார்.' (2) ஆன்மா

மென்றுரைப்பார், நீதியாங்கிருது காமமேயென்பார் நிகழ்வுறுவச மெனவுரைப்பா, ரோதியவிந்த நாமதேயங்க ளுணர்வதாஞ்சிவனுடை யியல்பே. (கங)

---

சர்வ சரீரங்களிலும் பிரவேசித்துத் தேகேந்திரியாதிகளைத் தாரணஞ் செய்தலின், அல்லது காஷ்டம், மிருத்திகைகளினாற் செய்தசேதுவா னது க்ஷேத்திர முதலியவற்றின் மரியாதையைத் தாரணஞ் செய்வது போல ஆநந்தரூபமாகிய ஆன்மாவும் வருணச்சிரமங்களின் மரியா தையையும், அவற்றின் தர்ம மரியாதைகளையும் தாரணஞ்செய்வதால் திருதியா [தேகேந்திரியாதி தாரண சாமர்த்திய] மென்பர்? (3) இவ் வான்மா தேகேந்திரியம், அந்தக்கரணம், அஞ்ஞானமுதலியவற்றைப் பிரகாசிப்பித்தலின், அல்லது அத்தியாத்மம், அதிபூதம், அதிதெய்வம் என்னும் இம்மூவகைத் துக்கங்களை விஷயம் பண்ணுகிற்கும் அந்தக் கரணத்தின் விருத்திகளைப் பிரகாசிப்பித்தலின், அல்லது ஆன்மாவின் பிரகாசத்தினுல் சம்பூர்ணமான ஜகத்தும் தத்தம் காரியசித்தி செய்த லின், 'சூதியதென்பார்.' ஜூதி=உரோகாதி நிமித்தங்களாலுளதாகும் சித்தத்தின்பீடை. (4) மாதாவானவள் தன் புத்திரனை ஸ்மரணஞ் செய்வதுபோல இவ்வாநந்தரூபமான ஆன்மாவும் என்னலல்லாமல் இந்தச் சம்பூர்ணமான ஜகத்தும் எப்படிச் சித்தமாமென்று இவ்வாறு ஸ்மரணஞ்செய்வதால், 'மிருதி [அதீதவஸ்து விஷயம்] என்றுரைப் பார்.' (5) இவ்வான்மா சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் இம்மூவகை யவஸ்தைகளையும் நன்றாகக் கற்பனை செய்வதால் (இது கருமை, வெண்மை என்று பேதமாகக் கற்பனைசெய்வது) 'சங்கற்ப மென்றுரைப்பார்'. (6) இவ்வாநந்தரூபமான ஆன்மாவி னிச்சையினுற் சம்பூர்ணமான ஜகத்தும் உற்பந்நமாவதால், அல்லது ஆநந்த சொரூப மான ஆன்மாவின் விலாசத்தை விஷயம் பண்ணுநிற்கும் யாதொரு மாயாவிருத்திரூபமான ஞானமுண்டோ அந்த ஞானத்தால் சம்பூர்ண மான பிரபஞ்சமும் உற்பந்நமாகிய காரணத்தால், 'கிருது' [இஃதிப்ப டிப்பட்டதென்று வரும் நிச்சயம் என்பர்.] (7) இவ்வாநந்தரூபமான ஆன்மா சுகப்பிராப்தியி னிச்சையையும், துக்கநிவிர்த்தியி னிச்சையை யும் பிரகாசஞ் செய்வதால், 'காமம் [இஷ்டமான பரோட்சவிஷய ஆகாங்க்ஷை] என்பார்.'(8) பிரஜைகளி னுற்பத்திக்குக் காரணமாகிய தனது ஸ்திரீ சங்கமத்தின் அபிலாஷையை இவ்வாநந்தரூபமான வான்மா பிரகாசஞ் செய்வதால், 'வசம் [சமீபத்திலுள்ள சிருக்கு, சந்த னுதிவிஷயாபிலாஷை] எனவுரைப்பார்? இவைகள் சுவியிலுள்ளன,

வே று.

பிரமனிவனேயிந்திரனும்பிரசாபதியுமிவனிவனே
யுரமதுடையவும்பர்கள்பூதங்களுலகங்களுமெல்லா
முறைசெய்திடுமண்டசமுதலாமியோனிபேதங்களுமிவனே
குரகதங்கோமாநுடருங்குஞ்சராதிகளுமிவனே. (கச)

ஏனைமற்றுமியம்பாதவியங்கதிற்கப்படுவவெலா
ஞானகனமாமிறையவனேநலமாஞ்சிவனுமரனுமுத

---

இனிமூலம்; (1) காஷ்ட முதலியவற்றைச் செய்யும் பாத்திர விசேஷமான மரக்கால், யவைமுதலிய அன்னத்தின் பரிமாணத்தை நிச்சயம் பண்ணுவதுபோல ஆன்மாவும் சம்பூர்ணமான பிரபஞ்சத்தின் பரிமாணத்தை நிச்சயஞ் செய்தலால், அல்லது சர்வப் பிராணிகளிடத்துமுள்ள இவ்வான்மா சர்வப் பிராணிகளின் இதாஹிதங்களை நன்றாக நிச்சயஞ் செய்தலின்; மதியென்பர். (2) இந்த வஸ்துவானது எனக்குக் கிடைக்கவேண்டும், இந்த வஸ்துவானது எனக்குக் கிடைக்கவேண்டாம் என்றிவ்வாறு கருதுகின்ற மனத்தைத் தகைவதில் சமர்த்துடைமையின், ஆன்மாவை மநீஷையென்பர்: மனத்தையும் பிரேரணஞ் செய்யுஞ் சாமர்த்தியமும் மநீஷைஆம். (3) ஆநந்தரூபமான இவ்வான்மா தனது சமீபத்தன்மையினுற் பிராணன்களைத் தத்தம் வியாபாரங்களிற் பிரவிர்த்தி செய்வதால், அஸுவென்பர். இம்மூன்றும் கவியிலில்லாவிடினும் தொடர்புபற்றிக் கர்ணபிக்கப்பட்டன.

கச. சே - ள், [இதுகாறும் அந்தக்கரணம், அதன் விருத்தி இவைகளில் உபகிதமாயும், சத்தாதி சகல வஸ்துக்களையும் விளங்கச் செய்கின்றதாயுமுள்ள நித்திய சுவயம்பிரகாச சாட்சி சைதந்யமே ஆன்மாவெனப் பிரதிபாதிக்கப்பட்டது. இனிப் பிரமாமுதல் ஸ்தம்பபரியந்தமான ஸ்தாவர ஜங்கமரூபமாயுள்ள ஜகத்தில் எங்கும் ஜீவரூபனுகவும், உபாதான ரூபனுகவும் இருக்கின்றான் என்ற வபிப்பிராயத்தால் அவனைப்பற்றிய பரிச்சேதப் பிராந்தியை நீக்குதற்காகச் சுருதியிற் சொன்ன சர்வான்ம சொரூபத்தைக் கூறுகின்றார்.]

கரு. சே-ள், [இப்போது கூறிவந்த பிரக்ஞையை முக்கிய விருத்தியால் ஆதாரமாகவே அறியத்தக்கதென்று தெரிவித்தற்பொருட்டுச் சிவருத்திராதி நாமங்களையுடைய பிரமமே பிரஞ்ஞானமென்று ஆதாரப்பிரதானமாகக் கூறுகின்றார்.] பேறு—ஆசிரயம்.

லானகாமங்களையுடையயாவுமறியுமெய்ப்பரம
னீனமில்லாவறிவுருவேயெல்லாப்பொருட்குமிறைபேரும். (கரு)

வேறு.

ஞாயலொன்றறவிவ்வறிவினையறியின்மானுடன்முத்தனுமன்றித் [ன்
துய்யுகன்மத்தான்மைந்தரான்மற்ளேர் பொருளினுலுற்பவந்துடையா
வையகம்பிரமவேதனந்தன்னின்மாத்திரத்தாற்பிரமந்தா
ணையமொன்றறவேயாமெனமுக்காலரீணயிட்டறைந்தனனலரோன்.

ஐதரேயசேஷ முற்றிற்று.

---

## தைத்திரியவுபநிஷதார்த்ததாத்பரிய மாரம்பம்.

### அவதாரிகை.

[ஐதரேய வுபநிஷதத்தின் பரியாலோசனையாற் கன்மத்தி னுதவியின்றிப் பிரமான்மைக்கிய சாட்சாத்காரமே முத்திசாதனம் எனக் கூறி, தைத்திரிய வுபநிஷதத்தின் பரியாலோசனையாலும் பிரமதேவர் இருதய குகேசரூப பரமான்மாவைச் சங்கை, சமாதானத்தோடு பஞ்சகோச விசாரானுசாரம் தேவர்களுக்கு நிரதிசயாநந்த வடிவ வியல்பாகத் தெளியத்தக்கவண்ணம் வற்புறுத்திக் கூறுகின்றார்.]

அந்தவிச்சைக்குவிடயமாஞ்சச்சிதானந்தமாம்பிரமத்தைப்
பந்தமாங்குகையின்மாயையஞ்ஞானமென்பதிற்பரவியோமத்தி
லந்தவங்கத்துப்பிரமரூபத்தையறிந்தவனவனொருகாலே
சிந்தைசெய்காமமியாவையும்பெற்றுத்தீரவேசீவன்முத்தனுமாம். (கஎ)

அஞ்ஞானமாயாசத்திக்குச்சான்றாயகத்துறையசலவான்மாவை
மெய்ஞ்ஞானப்பரத்தில்வேறறக்காணுமவன்பிரமபீசனின்மிக்கான்

---

கசு. சே-ள், [உபக்கிரமித்துச் சொல்லிவந்த அர்த்தத்தைச் சங்கிரகித்து. அதன்பலத்தையும் சபதபூர்வமாகச் சொல்லி உபசம்மரிக்கின்றார்.]

கஅ. சே-ள், [சத்தியமாயும், ஞானமாயும், ஆனந்தமாயுமுள்ளது பிரமம், அதைப் பரமவியோமமென்னும் குகையில் வைக்கப்பட்டிருக்கின்ற பிரத்தியகபிந்நமாக யாவன் அறிகின்றானே அவன் அறிந்த பிரமரூபமாகிய தன்னாற் சகலகாமங்களையும் அடைகின்றான் என்ற

மெய்ஞ்ஞானப்பரத்தில்வேறறுஞ்சத்திமிச்சிரமித்தவான்மாவிற்
பைஞ்ஞாகமாலைபோலவேதோன்றப்படுமெபஞ்சீகரித்துளவான். (கஅ)

வே று.

வாயுவென்றுபெயருடையபரிசம்வானத்துண்டாயத்
தேயுவதிலேதோன்றிற்றவ்வனலிலப்புமுண்டாயத்
தோயமதனிலவனியாய்ச்சூக்கமைந்தும்பஞ்சீகரித்
தூயவிறைவனுக்கிளையாற்றாலபஞ்சபூதமுமாம். (கக)

வே று.

ப்ரமனுக்கிளையினுலேபஞ்சபூதங்களாலே
பிரமாண்டம்படைத்தேதனந்தப்பிரமாண்டமத்தினுள்ளே
திரமுறமுலகுந்தேவசாதியுந்தாந்தாம்பண்ணுங்
கருமரூபத்தால்வானவாதியும்பிறவுங்கண்டேன். (உ0)

---

சுருதி வாக்கியாக்ஷராநுசாரமாக முற்கவியிற் பொருள்கூறி இக்கவியில் பலிதார்த்தமாகப் பிரமத்தை யறிந்தவன் பிரமத்தை யடைகின்றான் என்றபடி பிரத்தியக்கை.மறைக்கும் அஞ்ஞானம், அந்தக்கரணம், மாயை இவைகட்குச் சாட்சியான அத்துவிதப் பிரமத்தை அபரோட்சமாக வறிகின்றவன் உத்தமப் பிரமவித்து எனவும் சுருதியிற் சூத்திரம்போற் கூறிய வாக்கியார்த்தத்தைச் சுருதிதானே சுருக்கமாக வுரைசெய்ததின் பிறகு அவ்விடத்துண்டாகிய சங்கையை நிவிர்த்திசெய்யவேண்டி இவ்வான்மாவினிடத்தினின்றென்றதுமுதல்இப்படிஉபநிடதமென்றதுவரைக்கும் விரிவாகவுரையுஞ் செய்யப்பட்டிருக்கின்றது; அதனைச் சங்கிரகித்துச் சொல்வார் இவ்விடத்திற் பிரமம் சச்சிதாநந்தமென்று முற்கூறியதுகூடாது. என்னெனில்? பரிச்சேதமாயுள்ளவிண்முதலிய பூதபௌதிகப்பிரபஞ்சமிருத்தலால் என்ற சங்கையை நீக்கற்பொருட்டு அந்தப்பிரமத்தினிடத்தினின்றும் சிருஷ்டியைக் கூறுகின்றார்.]

கக. செ-ள், வாயுவென்று+பூதமுமாம்—சமுத்திரத்தில் அலை, நுரை, குமிழிகள்முதலான காரியங்களும், மண்ணில் கடாதிகாரியங்களும் தத்தம் காரணங்களுக்குக் கிஞ்சித்தும் வேறுகாது காரணமாகவே யிருப்பதுபோல ஆன்மாவினின்றுமுண்டான ஆகாசாதிகள் ஆன்மாவுக் கந்நியமாகக் கிஞ்சித்துமிராதபடியால் பரிச்சிந்நம் வரமாட்டாது என்பதாம்.

யாதொன்றெனும்புநாம்புமுதலிந்தவுடம்பதன்னமய
ஞேதுபிராணமயனத்துக்குள்ளாய்வேருயேயொளிரு
மோதுபிராணமயற்கயலாயுள்ளாயொளிருமநோமயனன்
னீதியுறவிஞ்ஞானமயனவனுக்குள்ளாய்நிகழுமால். (உக)

வேறு:

அன்னியமாய்விஞ்ஞானமயனுக்குள்ளாமானந்தமயனன்னமயன்றனுள்ளாய், மன்னியவப்பிராணமயனாலே பூர்ணன்மநோமயனாற்பூரண்மநோமயன்ரு, னன்னவகைவிஞ்ஞானமயனாற்பூர்ணனானந்தமயனாலேயவன்ருன்பூர்ணன், றன்னிகரற்றவனைத்தினுக்குமுள்ளாய்வேருந்தற்பரத்தாற்பூர்ணனதுதானேபூர்ணம். (உஉ)

வேறு.

சச்சிதானந்தமாகியொன்றும்பரப்பிரமம்
புச்சமென்றுரைத்திடப்படுமிரதமப்பொருளே
யிச்சதானந்தமெய்தியயாவனெவ்விடத்துந்
துச்சவாக்கையின்றுயரறுத்தவன்சுகம்பெறுமால். (உங)

---

உக. செ-ள், [பஞ்சகோசங்களில் தாதான்மியமுடைய ஆன்மாவைச் சர்வாந்தரமான பிரமமாக வறிதற்குப் பஞ்சகோசலட்சண மறிந்தாலன்றிக் கூடாதாகையால் சுருதியினுற் கூறப்பட்ட பஞ்சகோசங்களை இவ்விடத்தில் அதிகாரிகளின் சௌகரியப்பொருட்டுக் கூறத்தொடங்குகின்ருர்.]

உஉ. செ-ள், அந்நியமா+மாநந்தமயன்—[பஞ்சகோச விலட்சணஞ் சித்திக்க அவ்வாயிலாகவே பஞ்சகோச விசிஷ்டமும் கற்பிதமாமென்பதை உறுதிப்படுத்துகின்ருர்.] அன்னமய+தானேபூர்ணம்—கடாதி சம்பந்தத்தால் ஆகாசத்துக்குப் பரிச்சிந்நத்வம் எப்படிவாராதோ அதுபோலப் பஞ்சகோசங்களாலும் ஆன்மாவிற்குப் பரிச்சிந்நத்வம் வாராதென்பதாம்.

உங. செ-ள், சச்சிதாநந்த+மென்றுரைத்திடப்படும்—ஆநந்தமயத்தைப் பட்சியாக வர்ணித்திருக்கின்றது; எப்படியெனின்? பிரியம்=சிரசு, மோதம்=வலதுபட்சம், பிரமோதம்=இடதுபட்சம், சாமாந்யவாநந்தம்=உடல், ஆன்மா=[புச்சம்] வால். [ஆன்மாவானது ஆநந்தமாகமாட்டாதெனின்?] இரதமப்பொருளே—[பலிதார்த்தத்தைக் கூறுகின்ருர்.] இச்சதாநந்தம்+பெறுமால்.

வேறு.

இன்பமாம்பரமிலதெனிலேவனுண்டாகுமேதெவன்செய்வான்
றுன்பமேதனக்கியல்பதாய்த்துயர்க்கடலிடைப்படுமுயிர்தன்னைத்
தன்பரம்பெருங்கருணையாலிரதமாய்ச்சார்ந்தவனுளத்தேநின்
றின்பமேவுறவளித்திடலிறைவனுக்கியல்பதெப்படியாலும். (௨௪)

வேறு.

யாதொருபொழுதுகாட்சிமுதலிலதாம்பரத்திற்
பேதமதறவுணர்ந்தானப்பொழுதபயனுகிக்
கோதிலாவமிர்தமெய்துங்கூடுமேற்சிறிதுபேதஞ்
சாதலும்பிறப்புமச்சஞ்சார்தலுஞ்சங்கையில்லை. (௨௫)

வேறு.

தானெலாவிடத்திலுமுளதாகிலுஞ்சாங்கரியஞ்சேர்ந்த
வீனசாதியைக்குறித்ததுவெளிப்படாதிருக்குமேயெப்போது
ஞானமேமுயல்பவர்க்குநற்பரம்பரநற்பரம்பதமேதா
னுனவாறறிந்திடும்படிகேவலமருளினல்வெளியாமால். (௨௬)

அங்கமாறினையும்வேதநாலுடனேயறியினுமனனமில்லவனுக்
கெங்குமெப்பொழுதும்பயத்தினுக்கேதுவாயிடுமிறைவனிந்திரன்கால்

---

௨௪. சே-ள், இன்பமாம்+செய்வான்—ஆன்மவினு ஒருவனும், ஒன்றையுஞ் செய்யமாட்டானென்று பெறப்படுகின்றது. [இனி ஆன்மாவுக்கு ஆநந்தம் சுபாவமென்று எதுவுடன் கூறுகின்றார்.]

௨௫. சே-ள், [அவ்வான்மாவையறியின் அதனுலுண்டாகும் பலனைக் கூறுகின்றார்.] யாதொருபொழுது+மெய்தும்—[அப்படியறியாமையினுல் வரும் அனர்த்தம் யாதெனின்?] கூடுமேற்+சங்கையில்லை.

௨௬. சே-ள், [பரமேசுவரன் சர்வான்மரூபமாயிருக்கின் யாவராலும் அறியலாமேயெனின்? அதற்குக் கூறுகின்றார்.] தானெலா+திருக்குமே—சாங்கரியஞ்சேர்ந்த=அஞான்மாகாரவிருத்தியோடு கலந்திராநின்ற—ஈனசாதியை = இழிவான அவிவேகிகளை—ஆயின், துர்விக்ஞேயமாமோவெனின்? எப்போதும்+வெளியாமால்.

௨௭. சே-ள், [அந்தப்பிரமந்தானே வித்துவானுக்கும் மநநமில்லாவிடில் பயமாகப்பவிக்குமென்ற சுருதியின் பொருளைக்கூறுகின்றார்.]

செங்கதிர்வாரிதீயமன்றத்தஞ்செய்தொழில்களிலொருகாலும்
பங்கியாதொழுகும்பரிசதுபரனைப்பற்றியுண்டாகியபயத்தால். (உஎ)

வேறு.

தந்தமளவிலரியாதிதம்பமீருய்ச்சகத்தெல்லா
மிந்தவிறைவனனந்தலேசத்தாலேயின்புறுமா
லந்தவந்தப்பதத்தாசையற்ருேர்க்கருளாலுள்ளபடி
தொந்தமறுதன்சொரூபமதாமின்பந்தானேதோன்றுமால். (உஅ)

வேறு.

பருதிநெஞ்சினுமொழிந்தவர்நெஞ்சினும்பரனே
கரியதாகிநின்றறிபவன்காயமேமுதலாம்
பொருளைமாய்வுறத்தத்துவவிவேகத்தாற்போக்கிக்
கரியதாகியவீசனைக்கண்டவன்கண்டான். (உகூ)

வேறு.

உருத்திரன் மான்முதலாகத் தம்பமீருயுள பொருட்குஞ்சான்ருகு
மொருவன்றன்னைக், கருத்துறத்தர்க்கத்தாலுமானத்தாலுங்கண்டவன்

---

அங்கமா + மிறைவன் — இராகுவை யமுதங்கொன்றற்போலவாம்.
[அதனையே திடப்படுத்தவேண்டிச் சுருதியில் இவ்வீசுரனிடத்தில் இந்திரன் முதலான தேவதைகள் பயப்பட்டுநடக்கின்ருர்கள் என்ற பொருளைக் கூறுகின்ருர்.] இந்திரன் கால்+பயத்தால்.

உஅ. செ-ள், [சுருதியில் தாரதம்மியமாகக் கூறிய அதிகாரநந் தம் நைசுவரமெனத் தெரிவிக்கவேண்டி அதனைக் கூறுகின்ருர்.] தந்தமளவி + லேயின்புறும்—[நிராசாவானை பிரமநிஷ்டனுக்கு நேரேஅவ் வாநந்தங்கள் கற்பிதமாதலால் தனது லேசமாய்த் தானகவே விளங்குகின்றனவென்ற சுருதியைக் கூறுகின்ருர்.] அந்தவந்த+தானேதோன்றும்.

உகூ. செ-ள், [அலைநுரை குமிழிகள் சமுத்திரத்திற்போலச் சர்வாநந்தங்களு மடங்கிடுதற்கிடமான பிரமம் பரிச்சேதமில்லாததனல் நிரதிசயாநந்தமெனச் சாதிக்கவேண்டி எங்குமுள்ள வொருவனையே விவேகத்தாலறிந்தவனே அறிந்தவனவன் எனக் கூறுகின்ருர்.]

ஙo. செ-ள், [நிரதிசய நிர்விகார சச்சிதாநந்த ஏகரசபிரமாஸ்தித் வங்கூறப்பட்டதனல் அதைத்துண்டோ! இல்லையோஎன்னுமாசங்கையை நிராகரித்து அவித்துவானும் அதனையடைகின்ருனே? இல்லையா என்று

கண்டவன் றர்க்கமான ஞானங், கருத்துறவுள்ளவனுலகினின் றுந்தன்
னைத்தன்னுலேவேறுபடக்கழற்றிக்கற்றே, னுருத்துவருமன் னுதிகோ
மெல்லாமுள்பகிருமிறைவனருளொன்றினுலே. (௩௦)

வே று.

விளம்பும்வாக்குயாதொன் றின்பக்கற்செல்லாதேமீளும்
விளம்பும்வாக்குத்தான் விளம்பவிசேடமொன் றும்பெருமையினுல்
விளம்பல்வாதஞ்சிறிதில்லைவிசேடம்பெறிலேவிசேடமாம்
விளம்பலாவ்தறுஞ்சிவனையுணையால்விளம்பும்பரிசென்னே. (௩௧)

யாதொன் றின்பாலெங்குங்கோசரமாமிந்தமனஞ்செல்லா
தியாதொன் றின்பாற்செவிமுதலிந்தியங்கள்விடயங்களுஞ்செல்லா
வோதுஞ்சச்சிதானந்தவொன்றும்பிரமமதுதன்னைப்
பேதமறத்தன்வடிவாகப்பெற்றுனச்சமற்றுனுல். (௩௨)

வே று.

அன்புறுகுரவனருளினுலிங்ஙன றிந்தவனயர்ந்திருவினையாற்
றன்புறன் றன்பஞ்செய்வதுந்துன்பந்துய்ப்பதுமாகியதோற்ற
மென்பதாம்வேதமுடிவுவாக்கியத்தான்முளைத்தஞானத்தினுன்முற்று
மின்பமாந்தன்னதுருவமாயிலங்குமிறைமிகுதிருவருளதனுல். (௩௩)

கேள்விக்கு உத்தரமாக இந்தவண்ணமறிந்தவன் எவனே அவனெரு
வனே அறிந்தவன் என்றதுமுதல் ஆனந்தமயனை உபசங்கிரமிக்கின்
ருன் என்றது ஈருகச்சொன்ன சுருதியின் பொருளைக் கூறுகின்றுர்.]

௩௧-௩௨. செ-ள், [அத்துவிதீய நிரதிசயாநந்த அபயப்பிரமப்
பிராப்தியானது ஞானமாத்திர சாத்தியமென்று தன்னுற் கூறப்பட்ட
பொருளில் சம்வாதநிமித்தமாக எதினின்றும் வாக்குகள் மனத்தோ
டும் எட்டமாட்டாமல் திரும்பிவிடுகின்றனவோ அதையறிந்தவன் ஓரி
டத்தும் பயமடையான் என்று சுருதியிற் கூறியபொருளை இரண்டு
கவியாற்கூறுகின்றுர்.] விளம்பு+ம்பரிசென்னே— யாதொன்+மற்று
னுல்—விடயங்களும் (விஷயாபிமானி தேவதைகளும்)

— ௩௩. செ-ள், [சுருதியில் பிரமவித்தைச் சுபாசுபகன்மங்கள் தபிக்
கச்செய்யாது, நற்கருமத்தை நான்செய்யவில்லை, பாபகருமத்தைத்தான்
நான் எப்படிச்செய்தவனுவன் இந்தப்பிரகாரமாக அறிந்தவனுக்குப்புண்
ணிய பாபுங்கள் ஆன்மாவாகவிளங்கும் என்கின்ற இப்பொருளைக்கூறு
கின்றுர்.]

வேறு.

செய்வான்செய்விப்பவன்செய்யும்பொருள்செய்கருவிசெய்தொழிவெ
றைவாய்ப்பொருளும்வெறுமான்மாவாகித்தோன் றுமிறையருளா [ன்
லெய்யாமானமறிபொருளுமறிவோனென்னப்படும்பேத
மெய்யாமிறைவன்றிருவருளாலெல்லாந்தானுய்விளங்குமால். (கச)

துய்க்குமவன்றான்றுய்ப்பிப்பான்றுய்க்கும்பொருடான்றுய்த்தருன்
கைக்கொள்பொருள்கொள்பவன்கொள்கைகடவுளருளாற்றனேயா
மைக்கொண்ஞானமொன்றென்றமாறுஞானமையமுறுந்
துய்க்குஞானமுற்றுமிறையருளாற்றனேயாய்த்தோன்றும். (கரு)

வேறு.

கடபடகுட்டியமுதலாமிதின்ஞானங்கள்கடமது குட்டியகுதூலட டமதாகுந், தடமலைபாதாளமுதலுலகமற்றைச்சத்தியமேமுதலானவுலக மெல்லா, மிடவியமாமலரவன்றனண்டமீதிற்கற்பிதமாமெல்லையிலண் டங்களெல்லாங், கடறடமாறுக்ண்மற்றுங்கண்டவெல்லாங்கடவுளருள தனுலேதானுய்க்காணும். (கசு)

வேறு.

மேருமந்தரமுதல்தாமிகுத்தமால்வரைகள்
சாருமெல்லையின்றியவனம்வனத்தினுள்ளவைதான்
ஞருவந்தமில்விதங்கள்புற்புதலெலாந்தானு
யேதமின்றியவிறைதிருவருளினுலிலங்கும். (கஎ)

வேறு.

வான்முதலாம்பூதங்கள்பௌதிகங்கண்மன்னுமொலிபரிசமுருச் சுவைநாற்றங்க,ளூண்மருவுகிருமிகீடம்பதங்கமுலவுபசுவிதமோடுமொ ட்டையானை, கான்மருவுபரிகாயமநுடர்சித்தர்கந்தருவராக்கரியக்கர்க டாமிக்க, வான்மருவுந்தேவகணமெல்லாமற்றுமாப்பரமனருட்டனது வடிவாய்த்தோன்றும். (கஅ)

---

௩௪ செ-ள், [முற்கவியில் அனைத்துஞ்சுகவடிவான பிரத்தியகா ன்பசொரூபமாக விளங்குவதென்றபடியே இந்தக்கவிமுதல் விஸ்தரித் துக்கூறுகின்றார்.] செய்வான்+பொருளும்=கர்த்தா, காரயிதா, கர்மம், காரணம், காரியம், என்னும் ஐந்து விதமான வஸ்துக்களும்—மான மறிவு பொருள்அறிவோன் என்று மூலப்படி நான்கு ஆம்: பிரமாணம், பிரமிதி, பிரமேயம், பிரமாதா என்பது மூலம்.

வேறு.

விளைமிகுவிண்ணோர்விண்ணவர்விண்ணோர்வேந்தனும்விராட்டு
டன்சுராட்டு, மெனையடைந்தவொன்செல்வமியானெடுமாலுருத்திரனீ
சனற்சிவனென், றனைவுர்தம்பதங்களவர்களையடைந்தோரவர்கடாமன்
னியமின்றித், தனைநிகரில்லாவிறையவனருளாற்சகலமுந்தானெனத்
தோன்றும். (௩௯)

தீதெனும்பொருள்கணன்றெனும்பொருள்கள்செய்யலாவனசெய்ப்ப
வேடிதமாமுடலமிந்தியம்பிராணனின்சமனம்புத்தியாங்காரந் [டாத
தீதுறுகாமங்கோபமேமுதலாந்தீயனசாந்திதாந்திகளே
யாதியாநலங்களடையவுந்தானேயாகியேதோன்றுமெய்யருளால். (௪0)

பேதமாஞ்சீவபராங்களுமவர்கள்பேதமும்பேதிக்குமதுவும்
போதமில்சடசத்தியுமதன் * பிதையும்போதசத்தியுமதன்பிதையு [தும்
மோதுமுண்டில்லையெனவெழுமுணையிலுள்ளதாம்பொருள்களுமிலா
யாதுமவ்விறைவனருளினாற்றன்னதேகமாமுருவமாயெறிக்கும். (௪௧)

வேறு.

தன்னதொளியாற்றன்விளங்கப்படுவானான்மாவெனத்தகுவா
னன்னவனையோனீயென்றறியாநின்றவுவ்வுளத்தே
யுன்னவரியவவன்றன்னதுண்மையுணராவொருவர்களும்
பின்னமில்லாமையிலறிவார்தாமும்மறியப்பெற்றிலரால். (௪௨)

அயரானின்றித்தன்னைத்தானான்மாவாகவறிவுற்றோ
ரியல்பாலிந்தப்பொருளினையேயென்றும்பாடியிருக்குமா
லியல்பாராலுமறிவரியவீசனடம்போலியாவர்க்கு
நயமார்ஞானவிஞ்ஞானதன்றன்கீதநலமேமநல்கிடுமால். (௪௩)

* பிதை=பேதம்.

௪௨. : செ-ள், [இவ்விதமான சகலஜகத்தும் வித்துவானுக்குத்தன்
சொரூபமாகவே விளங்குமானால் ஆன்மா சவிசேஷனோ என்ற சங்கை
க்குச் சமாதானங் கூறுகின்றார்.] தன்னதொளி + வொருவர்களும்—
[எதனாலறியார்களென்னின்?] பின்னமி + லரால்—

௪௩. செ-ள், [இங்ஙனமாயின் வித்துவான்மாத்திரம் எப்படியறி
வானெனின்? அதற்குச் சமாதானமும் சுருதியில் இந்தச் சாமவேதத்
தைக் கானஞ்செய்துகொண்டிருப்பவன் என்றதுமுதல், சுவர்ண
ஜ்ஜோதி என்றவரைக்குங்கூறிய வித்துவானுடைய கானத்தைப் பிர
யோஜநமாகவுங் கூறுகின்றார்.]

அன்பிறுலெம்மாதிருருவாகுமிறைவனருள்கீதை
யின்பமேசெய்திடலுலகுக்கியல்பாமெவ்வாறவ்வாறே
முன்புபரமன்றிருவாக்கான்மொழிந்தகீதைப்பொருளான
பின்பிக்குரவனருள்கீதைபோலவின்பம்பிறப்பிக்கும். (சச)

உலகியல்பாங்கீதைக்குமுவந்தருளுமிறையென்று
லிலகியவைதிகக்கீதைக்கென்செயானிறையதனு
னலமிகுத்தபொருள்வேண்டினலமிகுபத்தியினேடும்
புலமிகுநற்கீதைகளேயெப்பொழுதும்பாடுவான் (சரு)

வேறு.

அறையுமறையாலாகமத்தாலறியாறுகின்மற்றுந்தா
னறிவதொருபாடையிறுலேயறைவானெனன்றுமமையாதே
யிறையையடைதற்கேதுவிதுவிதனுற்பரமயோகெய்தும்
பிறிவொன்றறவேயிவன்றன்னையோகத்தாலேபெறலாமால். (சசு)

கீதைசெய்தோனியோகத்தாற்கீழ்ச்செய்வினையின்பெருமையினுற்
பேதமில்லாவிறைகூடப்பெருதேவிடினும்பின்சென்று
மாதலாலேயிறைகீதையல்லாதெல்லாங்கைவிடுவான்
பேதைமையினுற்செய்தானேற்பிராயச்சித்தஞ்செயவேண்டும். (சஎ)

---

சச. சே-ள், [ஞானியினுடைய பிரசங்கம் யாவர்க்கும் இதம் எப்படிச் செய்யுமெனின்? அதற்கு உபமானத்தோடுங் கூறுகின்றார்.]

சரு. சே-ள், [அதனை எவ்வேளையிலும் கானஞ் செய்கின்றான் என்ற மற்றை வாக்கியத்தாலும் வித்வானுக்குக் கானங்கூடுமென்று கூறுகின்றார்.]

சசு. சே-ள், [ஆயின், பிரமாத்மைக்ய ஞானத்தைச் சமஸ்கிருதந் தெரிந்தவர்களாலன்றி மற்றையர்களால் ஸ்பஷ்டமாகத் தெளிந்தறியக்கூடாதோவெனின் கூறுகின்றார்.]

சஎ. சே-ள், [அநுஷ்டிக்குங்காலையில் முற்றுப்பெறுமல் மத்தியில் மிருதமாயின் வியர்த்தமாமே என்னுஞ் சங்கைக்குக்கூறுகின்றார்.

வே று.

அதலாற்பிறவியறுக்கவாதரிப்போனருமறைப்பிரமாணத்தாலுந்
தீதிலாத்தர்க்கநெறியதனாலுஞ்சிவனுடையுணர்வுபெற்றதுவே
கீதமேசெய்வானுபநிடமதனிற்கிளத்தியபொருளிதிப்பொருளைத்
தீதிலாச்சிவநற்பத்தருக்குரைக்கவல்லவர்தமக்குணாசெய்யா. (சஅ).

மூன்றாவது

ஐதரேயவுபநிஷதார்த்தசேஷமும், தைத்திரிய
வுபநிஷதார்த்ததாத்பரியமு முணாக்குமத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கMக.

நான்காவது

# கேனோபநிஷததாத்பரியமுணாக்குமத்தியாயம்.

(அவதாரிகை.)

[பிரமாவானவர் முந்திய அத்தியாயங்களில் ஐதரேய, தைத்திரிய வுபநிஷதங்களின் தாற்பரியத்தைக்கூறி, இவ்வத்தியாயத்தில் பிரமதத்துவம் உபதேசத்தால் அடையத்தக்கதேயன்றித் தருக்கத்தால் அடையத்தக்கதன்று என்று காண்பிக்கவேண்டிச் சுருதியிற் கேள்வி, மறுமொழிகளால் பிரமம் உபதேசிக்கப்படுகின்றது அவ்விதசங்காசமாதானவாயிலாகப் பரமாத்வைதஞானத்தைக் கரதலாமலகமென நிதரிசனஞ் செய்கின்றார்.]

வான்றொடங்கிமலர்ந்தனயாவைக்குஞ்
சான்றதாமறிவைத்தன்னருளினாற்
றோன்றுசோதியைச்சொல்லுவனென்றெலா
மீன்றவனிமையோர்கட்கியம்பினன். (க)

சஅ. சே-ள், [முமுட்சுவானவன் அநுஷ்டிக்கத்தக்க கிரமத்தையும், இவ்விரகசியத்தைச் சாமானியமானவர்களுக்கு உபதேசிக்கக்கூடாதென்பதையுங்கூறி அத்தியாயத்தை உபசம்மரிக்கின்றார்.]

வேறு.

தானேயுள்ளாயெப்போதுமெல்லாப்பொருட்குஞ்சான்றகி
யூனேபவசாகரத்துற்றோர்க்குடன்றாகமாகியவும்பர்
கோனேநியமித்திடமனமுங்குறித்துவிடயங்களிற்செல்கை
தானேசேட்டைசெய்யாதுபிராணனிறைவன்றன்றலே. (உ)

வேறு.

நாவுரைப்பதுவுஞ்செவியுரைப்பதனைநலம்பெறக்கேட்பதுங்யன
மேவுருத்திகழக்கண்பதுமற்றும்வேறுளவிந்தியங்களுமத்
தேவனுற்றத்தம்விடயமேற்செல்லப்படுவதிங்கிவைசெலுத்திடுமத்
தேவைமாயையினலன்றியுண்மையிலத்தேவனுக்கில்லையேதெரியில். ()

வேறு.

இந்தியங்களுக்குச்சத்தையில்லையேயிவற்றின்சத்தை
செந்தழலயம்போலுள்ளதேவனுலுள்ளசத்தை
தொந்தமில்பரன்றன்றன்னிற்சோத்திரந்தன்னைக்கற்பித்
தந்தலத்தன்மையுண்டாவளிக்குமங்கனுவேசித்து. (௩)

வேறு.

தன்னிற்கற்பிதமனத்தயனுவேசித்துச் சத்துவத்தினின்றுமன
த்தன்மைநல்கு, நன்னுற்றகற்பிதமாநாட்டந்தன்னைநாட்டமாந்தன்மை

---

உ. தே-ள், [சுருதியில் 'எதனல்' என்ற பொருள் பொதுவாத லால் அதனைச் சர்வசாட்சியான கூடஸ்தனைக்கூறி அவ்விதப் பிரே ரகத் தன்மையைக் கூறுகின்றார்.]

௩. தே-ள், நாவுரைப்பதுவுஞ் + செல்லப்படுவது — [இவ்விதம் பிரேரிக்குந் தன்மைவரின், ஒன்றோடு சங்கமாய்ச் சொரூபநாசம் வரு மேயெனின்? வாராதென்று கூறுகின்றார்.] மாயை = மாயாசபளகார ணம் — தானிருந்தபடியிருந்து தன்னிற் கற்பிதமான பதார்த்தங்களுக் குச் சத்தையைக் கொடுத்து விளக்குவிக்கின்ற தன்மையினல் தனது சொரூபத்திற்கு ஹானியில்லை யென்பதாம்,

௪. தே-ள், [பிரேரிப்பவன் என்றபோது துவிதாப்தி வருமே யெனிற் கூறுகின்றார்.] இந்தியங்களுக்குச் சத்தையில்லையே— [பின் னைக் காணப்படுகிறதேயெனின்?] இவற்றின் + சத்தை — [ஆனல் அவைகளின் வியவகாரம் எப்படியெனின்?] தொந்தமில்+கனுவேசி த்து.

பெறநல்காநிற்கூ மன்னுற்றபிராணனுக்குப்பிராணனுகைவாக்குக்குவா க்காகைமற்றுமுண்டாய்ப், பன்னுற்றகற்பிதமாங்கருவிகட்கப்பரிசனு வேசித்தளிக்கும்பரமன்றனே. (௫)

வேறு.

வாக்குமனமுங்கண்ணுமற்றுளவிந்தியங்களுமே
நோக்கரியபரஞ்சுடரைநோக்கியிவ்வசெலமாட்டா
தாக்கில்பரம்பரனறியிற்றன்வேறுமறியாதே
போக்குபொழுதினும்வேறும்பரனரியபொருளன்றே. (௬)

வாக்குமனங்கண்செவியான்மன்னிநின்றபிராணனிறு
னீக்கியுளகரணத்தானின்மலன்கோசரிக்கவுறன்
பாற்கானுக்குருவம்பேறற்பகர்பொருளெலாந்திகழ்வ
தாக்கதனைச்சனுதனமாம்பரம்பிரமமெனவறிமின். (௭)

வேறு.

ஆனதர்க்கத்தான்மானத்தாற்குரவனருளினலனுபூதியதனுன்
ஞானமெய்ப்பொருளையறிந்திடுமவரோநலம்பெறுமுத்தரானவர்க
ளூனமற்றந்தத்தற்பரம்விளங்கவுணர்ந்திடப்பட்டதென்றுணரிற்
றன்னைத்தினுக்குஞ்சாட்சியாம்பிரமந்தானறிபொருளுமாயசத்தாம். ()

---

௬. செ-ள், [இந்திரியங்கள் தத்தம் விஷயங்களை நாடியறிவது போல ஆன்மாவையும் நாடியறியலாமேயெனின்?] வாக்கு + மாட்டா —[ஆயின் அஞ்ஞாதமாமோவெனின்?] தாக்கில் + வேறும் —(ஞாதாஞ் ஞாதங்கட்கு விலட்சணமாமென்க) — [எதனுலெனின்?] பரனரிய பொருளன்றே (ஆதலின்.)ஞா [விதி] தம் = கிரியாகாரகபலரூபமாக் கிரகிக்கப்பட்டிருக்கிற காரியப்பிரபஞ்சம், அஞ்ஞா [அவிதி] தம் = சர்வபுத்தியஞ்ஞாதமாயுள்ள காரணம்.

௭. செ-ள், [இந்தப்பொருள் இத்தன்மையதென அறியப்படா தென்ற சுருதியின்பொருளைக் கூறுகின்றார்.] வாக்கு + சரிக்கவுறன் — [பின்னர் அதனை எப்படியறிவதெனின் கூறுகின்றார்.] பாற்க + வறி மின்.

௮. செ-ள், [அதனையடையுந்தன்மையையும், பலத்தையுங் கூறு கின்றார்.] ஆனதர்க்க + முத்தரானவர்கள் —[அங்ஙனமறியாமையினுல் வருவதைக் கூறுகின்றார்.] ஊனமற்ற + யுசத்தாம் —

தனக்குமெய்ப்பிரமம்விடயமாயிராமற்றனை தன்சாட்சியாயிராமற்
றனிற்பிறிதறத்தானாகவப்பரத்தையறிந்தவன்றனையறிந்தவனுந்
தனிற்பிறிந்தறியாதவனறிந்தவனுமறிந்தவன்றனறிந்திலனு [வாம்.
முனற்கரும்பிரமமுணர்ந்தவர்க்குணர்வின்றுணர்வுறார்தமக்குணர்ந்தது

வேறு.

பித்தாஞானங்கடஞானம்பிரமஞானமெனுமிவற்றிற்
கர்த்தாவன்றுபரப்பிரமங்கன்மந்தானுமன்றுவெறுஞ்
சித்தாமிதனைத்தெரியாமற்கர்த்தாவாகச்சிந்தித்தல்
பித்தாமகர்த்தாவாயறியப்பெற்றனறியப்பெற்றனும். (௧௦)

---

௯. செ-ள், [பிரமத்தைத் திருசியமாய் அறியக்கூடாதெனவும், அங்ஙனஞ்சாக்ஷாத்கரிக்கினுஞ்சுட்டியறியக்கூடாதெனவுங்கூறும்சுருதிவாக்கியங்களின் பொருளைக் கூறுகின்றார்.]

௧௦. செள், [எந்தப் புருஷனுக்கு அமதமென்று நிச்சயமோ அவனுக்கு மதமென்றும், மதமென்று நிச்சயமுடையவனுக்கு அமதமென்றுங் கூறுகின்றது; அப்படிப்பட்ட லௌகிகக்கிரகணத்தில் அந்நியோந்நிய விருத்தந்தோன்றுகின்றதாகினும் அந்தியப்பிரமாணமாயுள்ள சுருதியர்த்தத்தில் விப்ரதிபத்தி செய்யக்கூடாதென்று பூர்வோக்தார்த்தத்தை நிகமநஞ்செய்து தெரிசிப்பிக்கிறார்.] பித்தாஞானம் = (பிராதீதிக சத்தியமாய், சுத்திரூப்யசொப்பனாதி விஷயஞானமானது) பிராதிபாசிக ஞானம்—கடஞானம் = (வியர்வகாரிக்சத்தியமாய், கடாதி சர்வவிஷயமாய், இந்திரியவிஷய சம்பிரயோஜகஜனிதமானது) வியாவகாரிகஞானம்—பிரமஞானம் = (சம்பிரதாயதர்சககுருவுபதேசபூர்வமாகச்செய்யப்படும் சிரவணமனனாதி அப்பியாசாவிருத்தி பரிபாகத்தினால் ஜாதமாய், நிரஸ்தசமஸ்தோபாதிக பிரத்தியகபின்ன) பரமார்த்த சத்தியவிஷயமானது சம்யக்ஞானம்—எனுமிவற்றில் = என்னப்படும் இம்மூவகை விருத்திஞானங்களிலும்—கர்த்தா + தானுமன்று = நிருபாதிகமாய், சுவாத்மபூதமாய், சைதந்யமாத்திரசத்தாகமான பரவஸ்து அவிக்கிரியமும், காணசம்பந்தரகிதமுமாயிருப்பதால் கர்த்தாவும், நிர்விதசொரூபமானபடியால் கருமரூபமுமாகமாட்டாது.—தன்னிடத்தத்தியஸ்தசர்வசாட்சியப் பிரபஞ்சத்தையும் விளக்கிவைக்கும் கேவலம் சாட்சிமாத்திரப் பிரகாச ஏதுவினால் அகர்த்திருரூபமான பிரமவஸ்து எச்சாதகனுக்குக் கருத்திருத்வதர்மவிசிட்டமாகத் தோற்றுகிறதோ அவனுக்கு அஃதமதம், அகர்த்திரு ரூபமென்றுள்ளபடி யறிந்தவனுக்கு மதம் என்பது கூடும்: எவனுடையதெரிசனத்தில் அவிஷயப்பிரமசைதந்யம் கருமமென்னும்விஷயு

*தர்க்கமானந்தாஞெழியத்தாஞயுள்ளபேரொளியை
மிக்ககர்த்தாவாகுதலும்விடயமாகுதலுமொழியப்
பொக்கமறவேறறக்கண்டபொழுதுபுணாதீர்பொருளான
தக்கபிரமதத்துவத்தைக்கண்டாஞருத்தாஞக.* (கக)

வே று.

*நோக்குருதமெய்ஞ்ஞானமுங்காட்சியாய்நோக்கவும்பட்டுத்தான்
சாக்கியாயநிந்திடுவெனுங்னேதத்துவவித்தாஞன்
ருக்கிலாப்பரவிச்சையுஞ்சனிக்குமேற்சடமதாங்கடம்போலப்
பார்க்கிலந்தவிச்சையின்புணர்ப்பாலுணர்பொருள்தாம்பரன்ருஞம்.* ()

*விச்சையுள்ளவன்விசேடவாஞம்பரதத்துவமவிசேடம்
விச்சையுள்ளவஞதலாற்றத்துவவித்தலன்விச்சைக்கண்
டுச்சமுற்றுளதாகுதல்விடயமாய்த்தோன்றுதல்செய்யாது
சச்சிதானந்தமப்படியிராதெனிற்றற்பரமாமோதான்.* (கங)

---

*மாக நிச்சயிக்கப்படுகிறதோ அவன் அகர்மசொரூபமாயுள்ளதை உள்ள படியே அறியாததஞல் அவனுக்கு அமதம், எவன் அதனை மனோவாக் காதி அகோசரமென்றறிந்து சுருதிசம்பிரதாயம் விடாமல் அறிகிரு ஞே அவனுக்கு மதம் என்பது கூடும்; இவ்விதம் பூர்வோக்தார்த்தம் சத்தியமாக நிச்சயமானது என்று பொருள்.—[இவ்விதப்பிரதிபாதன த்தால் சித்தாந்தமான தத்துவார்த்தமேதெனின் றருசிப்பிக்கிருர்.] வெறுஞ்சித்தா+ப் பெற்ருஞம்.*

கக. சேன். [*முற்கூறிய சுருதியின் முக்கியதாற்பரியமான வேதனப் பிரகாரத்தைக் கூறுகின்ருர்.*]

கஉ. செ-ள், [*இவ்விதவிவக்ஷயமும் தத்துவஞ்ஞனது திருஷ்டியிலுண்டேயென்ருல் அதுவும் பேர்தார்த்தமேயன்றி வேறில்லை என் றுபதேசிக்கிருர்.*]*நோக்குருத+வித்தாஞன்*(*பிரமமேஎன்றபடி*)—[*பிர மாபரோட்சாநுபவமின்றி ஜீவத்வம் நிவிர்த்தியாகாமையின் பரோட்ச மென்பது வஸ்துவைக்குறித்த நிர்ணய ஞாஞநுபவமாதலால் வஸ்து நிச்சய ஞானமுண்டாகியே அபரோட்சாநுபவமுண்டாகவேண்டும்; ஆதலால் பிரமத்தை நிர்ணயப்படுத்தி அபரோட்சீகரிக்கத்தக்கதாகப் பிரமஞானம் ஜனிக்கிறதெனின்? பிரமவித்தை சாதனசாத்தியத்வ பட் சத்தில் தோஷமுண்டென்றுபதேசிக்கிருர்.*]*தாக்கிலாப்+பரன்ருஞம்.*

கங. சே-ள், [*அவ்வித வித்தியாசம்பந்தத்தால் பிரமவஸ்துவுக் கும் வேத்தியத்வம் அங்கீகரிக்கப்படுமாகில் அதிலுந்தோஷங் கூறுகின் ருர்.*] *விச்சை+வாஞம்*—[*சவிசேஷமாயினும் பரவஸ்துவான பிரம*

வேறு.

ஆதலால்விஞ்ஞையாலறிவுறுதற்காவதன்றுகிலப்பரந்தா
னேதினாலறியப்படுமறிவுறுதற்கேவனாமிமையவர்காள்
காதலாற்பரத்திற்கற்பிதமாயைகழியுமேற்பரம்பரன்கண்ணே
ஏதமாமாயையில்லையுண்டாகிலிருக்குமோவிரவிமுன்பிருடான். (கச)

மாக ஏன் ஆகக்கூடாதெனின்?] (பூர்வ வாக்கியங்களிலும், உபக்கிரமாதிகளிலும் நிர்விசேஷமாகவே பரவஸ்து விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது ஆதலால்) பரதத்துவம் அவிசேடம்—விச்சை+வித்தலன்—வஸ்துவினியல்பு நிர்விசேஷமாயிருக்க அதனைச்சவிசேஷப்படுத்தி வேறாக வறிகிற வித்தையுடையவனாதலால் வேறான ஞானமெல்லாம் அனான்ம விஷயஞானமாதலின் அவன் சம்யக்தரிசியாகமாட்டான் என்று பொருள்.— [சாமான்யமாக வுபதேசிக்கப்பட்ட இந்த அர்த்தத்தை விசேஷமாகக் காண்பிக்கிறார்.] விச்சைக்கண்=விச்சைக்கு — துச்சமுற்+செய்யாது=அற்பமாகிய ஆசிரயமாகுதலும், விஷயமாகத் தோன்றுதலுமாகமாட்டாது.—வித்தைக்கு விஷயமென்னிற் கூறிய தூஷணம் வரும், ஆசிரயமாகலாமேயெனில், ஆசிரயமென்பதும், விஷயமென்பதும் ஒன்றே; எனெனில், ஆசிரயியினுடைய சம்பந்தத்தைக் குறித்தே ஆசிரயமெனல் வேண்டும்; அப்படியானால் சம்பந்தமெல்லாம் விகாரவஸ்துக்களையே பற்றியுள்ளது: விஷயமென்பதும் அங்ஙனமேயாகின்றது; அங்ஙனமாயின் எது விகாரியோ அது ஜடமாம். எது ஜடமோ அது அனான்ம வஸ்துவாகும். ஆதலால் வித்தைக்குப் பிரமம் ஆசிரயமும், விஷயமும் ஆகாதென்பதாம். [வற்புறுத்துகின்றார்.] சச்சிதானந்த+மோதான்—ஆனபடியால் நிரதிசயமகத்தாய்,அபரிச்சின்னமாயுள்ள பிரமவஸ்துவுக்கு யாதொரு சம்பந்தமும் பாரமார்த்திகமாகவில்லையென்று அறியவேண்டும். அப்படியே கிரகித்துழி வித்தைக்கும் பிரமசம்பந்தமின்மை சித்திக்கிறது. தத்சம்பந்தாகிதமான வித்தையினால் பிரமவஸ்து கோசரிக்கச் சக்கியமாகுமா? வேத்தியத்வமென்றுள்ளது வேதனக்கிரியாஜந்யமான பலபாகித்வமென்று பிரதிபாதிக்கப்பட்டிருப்பதனால் நிரஸ்தசமஸ்தோபாதிகமாய், சொப்பிரகாசமாய், அநாதேயாதிசய சொரூபமாய் விளங்காநின்ற பரமாத்ம வஸ்துவுக்கு வித்தையினால் எவ்வுபயோகமுமில்லை என்பதாம்.

கச. கே-ள், ஆதலா+மிமையவர்காள். இவ்விதமாயுள்ள பரமார்த்தத்தில் எவன்றான் பிரமாத்மதரிசியாகப் பவிப்பன். எவ்விதத்தினாலாவது வித்தியாசம்பந்தம் பிரமவஸ்துவுக்கு நிரூபிக்கப்படுமாகில் வித்

ஆதலான்மாயைதர்க்கமானத்தாலானுபாவத்தினாற்றேனே [டா
சோதிஞானச்சிற்கனச்சுடர் முன்னர்த்தோன்றிடாதவிச்சை விச்சைக
மோதுமாத்திரமாமுலகுனைவழக்கத்துள்ளனவுண்மையிலில்லை
யேதமாமுலகவழக்கமுமொளியாயிலங்கலாலபேதமேயென்றும். (௪௫)

தியா வேத்தியத்வப் பிரதிபாதனம் சப்பிரயோஜனமாம். பிரமவித்
தென்றுள்ள பிரதிபாதனமும் அநுவிதார்த்தமாகும். அந்தப்படியா
தொன்றும் அங்கீகரிக்கக் காரணமில்லையாகில் எவ்வதிகாரி பிரமவித்
தென்று நிரூபணயோக்கியமாகப் பவிப்பன். கருமத்வ, கருத்திருத்
வாதி தர்மசம்பந்தம் எவ்விடத்தில் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறதோ
அதை முன்னிட்டுப் பிரமவித்வபிரதிபாதனமும் உபயுக்தமாகும் ஆன
படியால் சமஸ்தோபாதிரகிதமாய், உக்தலட்சணமாயுள்ள பிரமசாட்
சாத்காரம் பெற்று விளங்காநின்ற ஞானி பிரமசொரூபனேயன்றிப்
பிரமவித்தென்று பிரதிபாதிக்கக் காரணமில்லையென் றறியவேண்டும்
என்பதாம்.—[இவ்வாறு வித்தைக்குப் பிரகாச ஜனகத்வமில்லாவிடி
னும் பிரமத்தை ஆவரணஞ்செய்து தோன்றப்படும்அவித்தியாநிவிர்த்தி
ஜனனத்துவாரமாக அச்சம்பந்தங் கூறக்கூடுமேயென்று சங்கித்து உப
தேசிக்கின்றார்.] காதலாற்ப+முன்பிருடான்.

௪௫. செ-ள், [அந்தப் பாரமார்த்திகத்தை உறுதிப்படுத்துகின்
றார்.] ஆத+தோன்றிடாது. சத்தா? அசத்தா? சதசத்தா என்பனவாதி
தர்க்கம், ஈண்டு நாநாவற்பமுமில்லை என்பதாதி சுருதி, தாரணை சமாதி
அநுபவம் — [இப்படி உறுதிப்படுத்தும்போது 'பிரமவித்து பரத்தை
யடைகிறான்' எ-ம், 'பிரமத்தை யறிந்தவன் பிரமமாகவே பவிக்
கிறான்' எ-ம், 'பர என்றுபதேசிக்கப்பட்டிருக்கிற வித்தையினால் அட்
சரப் பரப்பிரமவஸ்து அதிகமிக்கப்படுகிறது எ-ம் உள்ள சுருதி வாக்
கியங்களுக்கு வியாகாதம் பவிக்கிறதென்று சங்கித்துக் கதிசாமான்
யத்தைத் தெரிசிப்பிக்கிறார்.] அவிச்சை + யிலில்லை—[வியாவகாரிக
திருஷ்டியாயேனும் . அவைகள் ஒப்பவேண்டியதிருக்கையில் வஸ்து
வானது துவிதமென்றாமேயெனச் சங்கித்துக் கூறுகின்றார்.] ஏதமா
+யென்றும்—பாரமார்த்தமாகப் பிரமம் அசங்கப்பொருள் ஆதலால்
அவித்தியா சம்பந்தமின்றி மற்றெல்லாவற்றையும் விஷயீகரிக்கும்
புத்திவிருத்திகளனைத்தையும் விளக்குவிக்கும் சாட்சி சிற்பிரகாசமாய்
மிஞ்சுதலால் சொப்பிரகாசமான அத்துவிதமே பிரமமென்றார். ஆக
லின் விருத்திதோறும் அறியப்படின் அறியப்படும் என்ற சுருதிக்குப்
பொருள் கூறினார் என்றறிக.

வேறிலத்துவிதமென்பதுமொளியில்வேறிலாமையிலுளதொளியே
கூறலற்றிடலேயிப்பொருள்கூடிற்கூடுவதளவையினலு
மூறிறர்க்கத்தான்மறைகளாற்குரவனுபதேசத்தாலிறையருளா
லீறின்மாதவத்தாற்காலபாகத்தாலப்பொருள்புருடனுக்கெய்தும். (கசு)

வேறு.

ஓதுமிப்பரம்பெரும்பொருளுணர்ந்தவன்செய்வ
தேதுமில்லைஞானமுமிலையிரண்டிலாமையின்;
ஞீதிவன்னவாச்சிரமமுநிட்டேதமும்விதியுஞ்
சாதுநல்வினைதீவினைசகலமுமிலதே. (கஎ)

வேறு.

இந்தப்பரமாம்பொருளிறைவனருளாலியாவன்பெறுமவன்ரு
னந்தப்பரமனேயென்றென்னறிவிற்றிகழ்வதவன்பெருமை
சிந்தித்திடவொண்ணுதென்ருற்செய்யப்படுமெத்தேவர்களாற்
சந்தப்படுமாலாலரனுற்சாற்றுந்தன்மைசாராதால். (கஅ)

வேறு.

இந்தவாக்கையிலியம்பியபரம்பொருளறியி
னந்தமாநுடன்மெய்யதாயபேதமாகியநிர்த்
தொந்தமாம்பரமடைந்திடுந்தோன்றிடாதாகிற்
பந்தமாம்பவக்கடற்படும்பாகதியடையான். (கக)

வேறு.

துங்களியாக்கையிற்சகலயாக்கையினிலுந்தத்துவமதுதானே
யெங்குமொன்றெனக்காண்பவரியாவரிங்கிறந்திடார்பிறவாராற்

---

கசு. செ-ள், [அத்துவிதமென்பதும் துவிதநிஷேதமான விசேஷ மூடையதாதலால், பிரமம் நிர்விசேஷமாய் எங்ஙனஞ்சித்திக்குமென்று சங்கித்துக் கூறுகின்ருர்.] வேறில+யிப்பொருள்—அதிஷ்டானமான சுத்தியில் துவைதரஜதப்பிரதீதியும், இரஜதமில்லையென்னும் நிஷேதமும்போலத் துவிதநிஷேத அத்துவிதமென்பதும் அதிஷ்டான சாட்சிப்பிரகாசத்திற்கு வேருக வின்மையாலும் அபரோக்ஷசமயம் துவிதமும் தானுகப்பவித்துக்கேவலம் சிற்பிரகாசமே சேஷித்துவிடுவதனுனும் சதாசொப்பிரகாசவஸ்து மௌனமே என்று பொருள். [இவ்வித மௌன நிஷ்டையும் எச்சாதனத்தாற் சித்திக்குமென்னின்] கூடிற்+புருடனுக்கெய்தும்.

கஎ. செ-ள், செய்வது—இகலோக, பரலோக, மோட்ச நிமித்த கிருத்தியங்கள்.

பங்குபட்டறிந்தவனறியாதவன்பந்தமுத்தமதென்றே
யிங்கொருத்தனேநிகழ்பவசேதனனிவைகணவியல்பொக்கும். (௨௦)

தன்னில்வேறிலாமையிற்பரமுத்தியிற்றனதுபுத்தியினாலே
யன்னியங்களாய்த்தோற்றுமாபாசர்க்கும்பரபதமறிகின்றான்
முன்னமெப்படிமூடமாந்தசையிற்றன்மோகத்தாலெலாம்பெத்த
மென்னவுற்றனன்முத்தியுமப்பரிசிருக்குமதியல்பேயாம். (௨௧)

வேறு.

ஒருகாலமுன்செய்வினையளவுமியோகி யுயிருலகாதியைக்காண்பா
னொருகாற்காணு, னொருகாலிற்றோற்றமெல்லாம்பரமாய்க்காணுமுளப
ரிசேயா யொருகாலொன்றுங்காணான், றரிசானசகரூபந்தோன்றும்
போது துக்கசுகங்களுமாபாதித்துத்தோன்றும், பரமாகத்தோன்றும்பொ
ழுதாபாதித்துத்தோன்றாது துக்கசுகம்பரமேதோன்றும். (௨௨)

வேறு.

தத்துவஞானிகாணினுஞ்சகத்தைக்கண்டிலன்றத்துவமேகண்டான்
வத்துவேயாகவல்லவேயாகமற்றொருபொருளிலையானு
லித்தில்வேறொன்றையெங்ஙனங்காண்பானியாதொருபடிசகத்தாகத்
தொத்தாவில்லாத்தோற்றமெப்படியோவப்படிநிகழ்வதுபரந்தான். ()

எப்படியெப்படித்தோற்றமப்படியாயிலங்குவ துண்மையேயோகி
க், கப்படியப்படியுண்மையேயாகவறிவதேயான்மவேதனந்தான், செப்
புநாமத்தாலுண்மையாலெல்லாத்திகழ்வுமாதேவனேயாகி, யிப்படியறி
ந்தஞானிகைக்கொள்வானெத்தையன்றெனவெத்தைவிடுவான். (௨௪)

அன்னியமாகவிடுதல்பற்றுதலுண்டாகுமேற்பூரணனுகப்
பன்னியபெருமைக்கானியாமந்தப்பரமனதியல்பழிதுறுதே
தன்னில்வேறின்மையான்மகத்துவமுந்தன்மமோதன்மதன்மிகளாம்
பின்னவாசகமுமிப்பரம்பொருளிற்பேதமுண்டாகிலேபிறக்கும். (௨௫)

வேறு.

பேதமுமபேதந்தானும்பேதாபேதமுமுண்டல்ல
வோதில்ப்பரத்துக்கென்றுமுள்ளதுபிரமந்தானே
நீதாகநன்றேயாகச்சிவனலாதில்லைஞானி
யேதாகுமென்றுகொள்வானேதாகாதென்றுநீப்பான். (௨௬)

எப்பொருளுமாயையினலெனச்சிலவரியம்புவர்கண்
மெய்ப்பரமன்றனையொழியவேறொருமாயையுமில்லை

யொப்பரியபரனொழியவொருமாயையுண்டாகி
லப்புரமன்றன்பெருமைக்கதுநோயழிவன்றே. (உ௭)

பெருமையினிற்சங்கோசம்பிறவாதுபிறக்குமெனி
லருமறைவாக்கியம்பொய்யாமப்பிரமாணமுமார்கும்
பொருவில்பரானந்தபரிபூரணமெய்ச்சுடராகுந்
தெரிவருமாதேவனல்லாற்றிகழ்வதொருசிறிதுமில்லை. (உ௮)

வேறு.

இதுவேமுடிந்தநிலமெல்லாத்தர்க்கங்களுக்குங்காட்சியே
முதலாம்பிரமாணங்களுக்குமொழியும்வேதாந்தங்களுக்கும்
விதமாம்புராணமனைத்தினுக்குமிருதிகளுக்கும்வேதத்தின்
மதமாம்விச்சையனைத்தினுக்குமன்னுமாபாரதத்துக்கும். (உ௯)

ஐயன்சைவாகமங்கட்குமரியாகமத்துக்குமெனது
பொய்யின்றியவாகமத்துக்கும்புத்தாகமங்கட்குமருகன்
செய்யுமாகமத்துக்குஞ்சித்தரியக்கர்கந்தருவ
ருய்யும்பரிசுமற்றுள்ளோருரைத்தவாகமங்கட்கும். (௩௦)

வேறு.

உவமையிற்பரமாத்துவிதமாமிந்தவொண்பொருளுலகின்மாநுடரி
லெவரிதுபெற்றோரன்றிவிண்ணவரிலேவரோபெற்றவருடையான்
சிவனொருவனுமிப்பரம்பொருள்சுபார்வதித்தமாஞ்சிவனுக்குஞ்சிவைக்கு
மவரருளாலேயரிக்குமிப்பொருளுண்டப்படியெனக்குமுண்டருளால்.

சாற்றிடப்பட்டவிராட்டென்சுராட்டெசம்பிராட்டெனுமிவையிவர்க்கு
மேற்றமதுடையதேவராமுமக்குமியக்கரோடரக்கர்கந்தருவர்
சிற்றமில்சித்தரிவர்முதலானதேவசாதிகளனைவர்க்குந்
தோற்றியமநுடர்விலங்குசாதிகட்குமருளினலிப்பொருடோன்றும். ()

பிரமனதருளுண்டாயிடிற்கிடம்பதந்தமாநுடவரோடசுரர்
சுரரனைவர்க்குஞானமுண்டவனேசுடர்மிகுஞானமிங்களிப்பா
னரியினுமென்னுலவனருளொழியவளித்திடப்படாதொருபொருளுஞ்
சுரர்களேதரவும்வாங்கவுநாங்கள்சுதந்தரரன்றுமெய்சொல்லில். (௩௩)

சுதந்தரன்சிவனேயிவனன்றேபிறவிச்சூழனின்றெடுப்பவனவன்
றன், பதங்களாலன்றி யெங்களாலெடுக்கப்படாதொரு செந்துவுமெங்
கண், மதங்களாலொழியவருளினுற்பிறவிமாற்றவும்வல்லன்மற்றொரு
வன், நிதம்பெறவழங்கும்போது தான்வழக்கஞ் செய்யுமத்தருவியே
போல. (௩௪)

வேறு.

தேவதேவன்சிவன்பெருமைதானுமவன்றன்றிருவுருவு
மேவாறிவார்தானுதலில்லையாகிற்றவறுதலே
யாவரருளாலின்றியவப்பெரியோர்தமக்குமறிவரியன்.
கோவினறிதற்கருமையைத்தான்கூறமிகவுங்குறிக்கொண்மின். (௩௰௫)

கலக்குறுமோகத்தாலிமையவருங்கடுந்திறலசுரரும்பகைத்து
விலக்கரும்பூசன்முன்பொருகாலம்விளைந்துவிண்ணவர்தலைசாயப்
பெலத்தினான்மிக்கவசுரர்கள்வெல்லப்பெருகியவருளினாலிறைவ
ணலத்தகுமிமையோர்வெல்லவுமசுரர்நசிக்கவுந்திருவருணயந்தான். ()

திருவருளதனாலசுரரைத்தேவர்செயித்துமாதேவன்றன்செயலென்
றொருவருமறியாரும்பர்தானவரையோட்டினார்தாமெனவுவந்து
பெருகியவகந்தைசெய்திடத்தேவர்பிழைக்கவும்பிரான்றனையறிதற்
கருமையுந்தியவியக்கரூபங்கொண்டமலனங்கருளினானின்றான். ()

வேறு.

இயக்கரூபனாமிறைவன்றனைக்கண்டிமையவரியாவருங்கூடி
வியக்கவுற்றிதுவேதெனத்தங்களில்விசாரித்துவிளங்காமன்
முயக்கமற்றிடவறிந்தெமக்குரையெனவன்னியைவிடுத்தார்க
ணயக்கவுற்றிதுதன்னியல்பறிந்துநானவிலுவனெனச்சென்றான். ()

வேறு.

அனலனைக்குறித்தியக்கனாமிறைவனொன்று
வினவவங்கிநானென்றவற்குறித்தவன்விளம்ப
வுனதுவீரியமேதென்விறையவனுரைப்ப
வெனதுபூமியிலுளதெலாஞ்சுடுமியல்பென்றான். (௩௰௯)

அத்தனங்கொருதிரணத்தையெடுத்தனலவனை
யித்தைநீதகியெனக்குறுமுறுவல்கொண்டிசைப்ப
வத்தன்வேகமுங்கொண்டதுசுடவெரியவனுஞ்
சத்தனன்றிநாணிப்பயந்தமரரைச்சார்ந்து. (௪௰)

வேறு.

அவனதியல்பையென்னவிங்கறிதற்கரிதென்றனல்சொல்லப்
பவனனறியென்றிமையவர்கள்பகரவவனுமப்பரிசே
சிவனாலபசெயப்பட்டுத்தேவர்தம்பாற்செல்லுதலு
மவனைநானேயறிகுவனென்றகந்தையுற்றானமரேசன். (௪௰௧)

17

வேறு.

புரந்தானறியச்சென்றிடும்பொழுதிற்போக்கறவவ்விடந்தனிலே
கரந்திடமிகவுங்கலங்கியுள்வெதும்பிக்கருதுபுகருணையேவடிவாய்
வரந்தரும்விஞ்சாவல்லியாமுமையைவைதிகநெறியினால்வழுத்தா
வரந்தைதீர்வுறவேபுகழ்ந்தனன்புகழ்ந்தவளவிலங்களவிலாவருளால்.

அங்கவேதத்தின்மயமதாய்ச்சிவனுக்கபினையாயானந்தமாகிச்
சங்கரன்றனக்குந்தானளித்தின்பங்கருணையாலுயிர்க்கெலாந்தாயாய்த்
துங்கமால்வரையினிச்சையாற்றேன்றுந்தோகையீசனதுவல்லபமு
மங்கவன்றிதற்கருமையுந்தோன்றத்தோன்றினளவ்விடந்தனிலே. ()

உமையையர்ச்சித்தங்கும்பர்கோனியக்கரூபமாயிவ்விடத்துண்டா [ப
யெமதுகட்புலத்துற்றிவ்விடந்தனிலேமறைந்ததீதென்னையென்றியம்
மமதிருக்கொழுநன்றருளினாற்றேன்றிமகற்றந்தன்மாலுக்குமயற்கு
மிமையவரெவர்க்குமுனக்குமாதேவனியல்பறியப்படாதென்றும்.

வேறு.

தன்னையறிதற்கருமைதன்னையறிவித்தற்
குன்னிநிகழ்வுற்றதுமொளித்ததுவுமும்பன்
வென்னதறவானவருநீயும்விசயத்தே
மன்னவவனேயசுரர்மாயவருள்செய்தான். (சரு)

வேறு.

அத்தனேசரணமாகவடையுமென்றருளிச்செய்து
பத்தர்கள்பாசந்தீர்க்கும்பரமகாருணிகையாகிச்
சித்துருவாகிச்சான்றாய்த்திகழ்ந்திடுந்தேவியுந்தன்
சுத்தமாஞ்சொரூபந்தன்னிற்கரந்தனடோன்றாவண்ணம். (சகா)

வேறு.

அன்றுமாலொழிந்திங்கிமையவரீசனறிகிறவருவையுமருளுந்
துன்றுபுத்தியுநன்முத்தியுமளிக்குஞ்சுதந்தரந்தன்னையுந்துணிந்து
நன்றியேயுற்றாரருள்பெறிலெளியனுதனிங்கறிவுறுமருடா
னின்றியேயொழியிலொருவராலுந்தன்னியல்பறியப்படாதென்றும்.()

சம்புவினருளாலன்றிமாலனுஞ்சகலதேவதைகளுமந்த
வும்பனையுணரோம்ருள்பெறும்பொருட்டேயோதியயாவையுமுளவாஞ்
செம்பொருடன்னையருளினாலொழியத்தெரிவினாற்றெளிகுவராக
நம்புமாறுடவர்க்கயினுஞ்ற்றமறிவரோநாசியாலொழிய. (சஅ)

ஒழிவிலா விறைவனருளுருவுணரிலொத்திடும் வினையினிற்குரவன்,
விழியினால் விளையப்படுவதாயுளதோர் மிக்கதோரதிசயமதனை, மொழியு
மாறென்னோன் முகுந்தனாலரனோன் முடிந்திடாகண் முகப்படாதே, யழி
விலாச்சிவற்குஞ்சிவைக்குமாற்கெனக்கும்றிவதுஞ்சிலவறிகுறியால். ()

மொழியுமக்குறிதான் மிக்கபேருவகை மொழிதழுத் தழுகையங்கத்தும், விழியிலும்விகாரம் பிறக்கக்கம்பிக்கை மெய்விதிர்த் திருக்கை மெய்விழுகை, சுழல்கைமற்றெழுகைவானிலேயிருத்தல் சுடரொளியாகியேதோன்ற, லொழியுமிவ்வுடலங்கண்டிடாதிருத்தலும்பர்தேகாந்தாத்துறைதல். (ரு௦)

ஓதிடாதுணர்தல்கலைமலைமுதலிலுள்ளபேதந்தெறலுரைத்த
லாதியாங்குறிகளிறைவனாருளுக்கறிகுறியாவனவருடன்
னீதிதானெவர்க்குமொருபடித்தாகிநிகழ்வுறாதந்தநின்மலன்றன்
பாதமேவுறுவார்பக்குவந்தோறும்படுதரமாகியேநிகழும். (ருக)

செப்பியவிந்தவருள்சிவனாலுஞ்சிவையினாலுஞ்செயப்படுவ
தப்பெருந்தன்மையரியினாலென்னாலொருவராலளிக்கலாகாதே
யிப்பவந்தனிலேமுத்தியிச்சிப்பாணியம்புமெத்தேவையும்விட்டுச்
சிற்பரனாகுஞ்சிவனொருவனுமேசரணெனச்சென்றுசேர்வுறுவான். ()

பரகதிசிவன்பால்வைத்திடப்பட்டபத்தியாலுறுமதுவன்றி
யுரகணைத்துயில்வோன்பாலுமென்பாலுமுற்றபத்தியிலுளதாகா
திரமுறுசிவபத்தன்றனகத்துத்திருவருளொளிமிகத்திகழும்
பரிசரிபத்தர்க்கெனதுபத்தர்க்கும்பாமுறநிகழ்வுறப்படாதால். (ருங)

வேறு.

ஆதலாலரியையென்னையாதரவுசெய்திடாதரன்மகேசனைக்
காதலாலடைகைமுத்திசித்திகடுகக்கிடைக்குமருளெய்துமப்
போதிலேயரியனாகிலுந்தனதுபூரணப்புரணமானசிற்
சோதியேமுழுதுமாகிநின்றபடிதோன்றுமாறுவெளிதோன்றுமால். ()

வேறு.

சாக்கியாமெல்லாப்பொருட்குமீசனையெப்பொருள்களுஞ்சாக்கிமாத்தி
நோக்கினானியாவனோக்கதனாலேநோக்கலாமிதுமறையந்த [ரமாய்
நீக்கிலாப்பரமாத்துவிதநிட்டையுமிந்நிலமென்றேமுடிவிதிற்பேது
மாக்கினானறிவாலறிவிலாதொழிவாலவனலாதார்பசுவாவார். (ருரு)

வேறு.

பரமாத்துவிதஞானியேபரதேவதைதானவனேயித்
திரமாமுத்தியானிங்குச்செப்பும்பொருள்செய்வினையானு
முரமாந்தநீசிகௌதமனுலுண்டாஞ்சாபவுமையாலுங்
கரமாமநுடர்நெஞ்சதனிற்காதல்செய்யாதொருகாலும். (௫௬)

வேறு.

பூரணத்தன்னியமில்லாச்சிவன்றன்பாலு மத்துவிதவேதனத்துமடைதற்குள்ள, காரணமாஞ்சிவலிங்கார்ச்சனத்துஞ்சாலக்காய்வதுவுமேயன்றியுருத்திராக்க,தாரணத்துந்திரிபுண்டரதாரணத்துஞ்சர்வாங்கோத்தூளனத்துந்தானேகாய்வர், சீரிணக்குஞ்சிவனென்னுமுமையுந்தங்கள்செவியாலுங்கேளார்செய்வினையாற்றீயோர். (௫௭)

வேறு.

தொல்லைநல்வினையாற்சுருதிநன்மிருதிசொன்னவாறணிந்தவந்தூயோர், மொல்லையிற்பரமாத்துவிதவேதனத்தையுள்ளவாறுணரவேயுணர்வர், நல்லவிப்பரமாத் துவிதஞானியைநாராயணனுருத்திரனு,மெல்லையிலெல்லாத்தேவரும்பூசித்தேத்தவும்படுமிவனென்றும். ()

ஈசஞானியிருந்துளவிடத்தேயிருப்பதுமுத்திதானந்தத்
தேசிகனேவல்செய்பவன்காலெனச்சென்னியிலிருப்பதுமன்னி
மாசிலப்பரமஞானியாமுனிக்குமகேசனுமொப்பலன்மதிக்கி
லாசிலாவரியுமொப்பலனுமொப்பலனேவனொப்பாரே. (௫௯)

ஒப்பறும்பிரமாத்துவிதஞானத்தையுணர்த்துபரமயோகிக்குக்
கைப்பொருளாவிகாயமுங்கொடுப்பான்காதலாலவைகொடுத்திடவே
யிப்பவமறுக்குஞானம்வந்துதித்தற்கேதுவாமதுவிதுவொழிய
வுற்பவந்துடைக்குமுணர்வுபெற்றுய்தற்கிலதிதிலையுறேலொன்றும். ()

சதுர்மறையொழிந்தவாதனைபொல்லாத்தர்க்கவாதனையுலகத்தின்
மதமுறுசமயவாதனைதாரமக்கள்சுற்றத்தின்வாதனையு
மிதமுறுபொருளில்வாதனைதேகேந்தியமனம்புத்திரற்பிராணன்
முதலவாதனையும்வித்தைவாதனையுமுடிவில்போகத்தின்வாதனையும்.

ஏறுடைச்சிவனைத்திருநெடுமாலையிகழும்வாதனையும்வேதத்திற்
கூறிடுஞானசாதனமாகக்கொள்ளுமுத்தூளபுண்டரத்தை
மாறுபடனிகழும்வாதனைபாவவாதனையாவுமாநுடர்க்கு
வேறடும்பரமாத்துவிதஞானத்தைவிலக்கிடும்விரோதிவிண்ணவரே. ()

வே று.

ஆதலால்வீடதனிலாசையுள்ளோ னதின்மிகவுந்தாற்பரியனுகிமு ன்ன, மோதுவாதனேகளெலாமிகந்தெய்போதுமுற்றபரமாத்துவிதஞா னியாவன், வேதவேதாந்தங்களுணைக்கப்பட்டமேலானவத்துவிதஞான மாகு, நாதனும்பிரமத்தைநவிலலாமோநாமௌனத்திருப்பதல்லாஞகத் தீரோ. (கஙு)

வே று.

ஓதியதோடமெல்லாமொழிந்துளராகியுற்ற
வேதவேதாந்தந்தன்னின்மிகநிட்டையுடையநல்லோ
ரியாதுந்தம்மிதயத்துள்ளாயிரண்டலாஞானமத்தைப்
போத்கஞ்செய்யத்தக்கோராவர்கள்புரையற்றோர்க்கே. (கச)

சூரிலுத்தமரேயெல்லாத்துக்கமுந்தொலைப்பதாகிப்
பரிவொடொண்குரவன்பார்த்தபொழுதிலேபரமானந்தப்
பொருவிலாச்சிவரூபத்தையடைவித்துப்புரணமாக்கும்
பெரியவத்துவிதஞானமுங்கட்குப்பேசலானேம். (கரு)

நான்காவது

## கேனேபநிஷததாற்பரியமுணாக்குமத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஎச.

ஐந்தாவது

# சாந்தோக்கியவுபநிஷததாத்பரிய முணாக்கு மத்தியாயம்.

## அவதாரிகை.

[பூர்வம் சாமவேததைமினிசாகையில் அந்தர்க்கதமான கேனேப நிஷதத்திற்குப் பிரமான்மைக்கியத்வங் காண்பிக்கப்பட்டது; அந்தப் படியே சாந்தோக்கிய வுபநிஷதத்திற்கும் பிரமான்மைக்கியத்வத்தைப் பிரமா இரண்டத்தியாயங்களாலுங் கூறுகின்றார். இவ்வத்தியாயத்தில், நிஷ்பிரபஞ்ச அத்துவிதீயமான பிரமத்தைப் பிரத்தியகான்ம சொரூப மாக உபதேசித்தற்குச் சர்வகாரியப்பிரபஞ்சமும் காரணமான பிரம மாத்திரமேயன்றி வேறில்லை எ-ம், ஏகவிஞ்ஞானத்தாற் சர்வவிஞ்ஞா னம் பலிக்கும் எ-ம் பிரதிக்ஞைசெய்து திருஷ்டாந்தபூர்வமாகப் பிரதி

பாதிக்கப்பட்டிருக்கின்ற சுருதியின்றூற்பரியத்தைச் சங்கை, சமாதானத்தோடுகூறிச் சத்திவசத்தால் ஜகத்துக்குபாதானநிமித்தம் அத்துவைதவஸ்துவிற்கு விரோதமின்றிக் கூடும்வகை பூர்வபாகத்தாற் சாதிக்கின்றூர்.]

மறைப்பதாய்மிகவுமுன்னோர்மடிவிலாப்பொருளைக்காட்டுஞ்
சிறப்புடையுபதேசத்தைச்செப்புவனுங்கட்கெல்லா
மிறப்பிலாதரத்தினோடுமிசைந்திதுகேண்மினென்றான்
பிறப்பனமுழுதுஞ்செய்யும்பீடுடைமலரின்மேலோன். (க)

யாதொன்றிருந்தபடிகேட்கக்கேளாமுழுதுங்கேட்டனவாம்
யாதொன்றிருந்தபடிபார்க்கப்பாராவெவையும்பார்த்தனவாம்
யாதொன்றிருந்தபடியறியவறியாவெல்லாமறிந்தனவாம்
யாதொன்றிந்தவுபதேசமறிகவறிவுமிகவுடையீர். (உ)

வேறு.

மண்ணதோர்திரளைக்காணவனைத்தகாரியங்களந்த
மண்ணில்வேறிலாதெக்காலும்வருதலையாதலால்வே
றெண்ணிடுநாமரூபமிசைந்திலையாகுமென்று
மண்ணிதேயுள்ளதென்றும்வான்வர்க்கயன்முன்சொன்னான். (ங)

உலகமோர்மணியிரும்பாமுகிர்சீவியொன்றுகாண
வுலகமெல்லாமுமாயவுருவமுமிரும்புமஃதே
யலகில்காரணத்தினோடுகாரியம்வேறிலாமை
பலபடவறியும்வண்ணம்பகர்ந்தனன்படைக்குநாதன். (ச)

உ. செ-ள், 'யாதொன்று' எ-து, காரணபூதமான சத்ரூபப்பிரமத்தை.

ங. செ-ள், [காரணமொன்றையறிந்தால் எப்படி அன்னியங்களனைத்தும் அறியக்கூடுமென்றூசங்கித்துக் காரணபூதமான பிரமத்திற்குக் காரியஜகத்து அன்னியமின்மையின் அங்ஙனமாமென்று திருஷ்டாந்தங்களாற் கூறுகின்றூர் ]

ச. செ-ள், உலகமோர்மணி = சொர்ணவிகாரமாகிய ஓர்மணியை—இரும்பாமுகிர்சீவி ஒன்று = அயவிகாரமான ஓர் நகதிருந்தனத்தை [நகம்வெட்டும் கருவியை]யும் — காண = அவற்றின் உபாதானகாரணங்களான சொர்ணம், அயமாத்திரமாகவறியவே — உலகமாயவுருவமெல்லாமுமிரும்புமஃதே.—இரும்பின் விகாரங்களை, 'இரும்பு' என்றிங்கேயுபசரித்தார்.—[இத்திருஷ்டாந்தப்படி]அலகில்+நாதன்

காரியமெல்லாமுள்ளகாரணம்வேறுமன்று
காரியமொருகால்வேறாய்வேறன்றியிருப்பதன்று
காரியங்காரணத்தின்வேறென்றுகருதிலந்தக்
காரியம்சத்தோவசத்தோசதசத்தாய்வேறோவென்றான். (௫)

சத்தாயேவேறதென்னிற்காரணமுடையதொன்றே
பொய்த்தாயகாரியத்தின்சத்தையோபுகலுங்காலே
யொத்தாகிநின்றதன்றேயுரைத்தனனுலகமெல்லாம்
வைத்தாயுமறைகளோதுமலர்மிசைமன்னும்வாணோன். (௬)

காரணசத்தைதானேயென்றிடில்வேறுசொன்ன
காரியசத்தையில்லையாயிடுமுன்புசொன்ன
காரணசத்தையொன்றேயானபினந்தச்சத்தைக்
கோதொருபேதமுண்டாம்படியெங்ஙனுமாமினென்றான். (௭)

---

௫. செ-ள், [காரணமான பிரமத்துக்குக் காரியம் அனன்யமானால் ஜகத்திற்கு அவிசேஷத்வம் வருமாதலால், அவசியம் ஜகத்தானது பிரமபின்னமென் றங்கீகரிக்க வேண்டுமென்று சங்கித்துச் சொல்லுகிறார்.] காரியமெ+தன்று = காரியஜகமனைத்தும் உபாதான காரணமாயுள்ள பிரமமே : பின்னமுமன்று, காரியம் பின்னபின்னமாயுள்ளதுமன்று.—[பின்னமன்றென்று பிரதிஞ்ஞைசெய்த வர்த்தத்தைச் சாதித்தற்காக விகற்பிக்கிறார்.] காரணத்திற்குப் பின்னமென்று உங்களாற் கருதப்பட்ட அந்தக்காரியம் சத்தாகப்பின்னமா? அசத்தாகப்பின்னமா? சதசத்தாகப்பின்னமா என்று மூன்றுவிகற்பம்.

௬. செ-ள், [விகற்பித்தவையிற் பிரதமபட்சத்தை அனுவதிக்கிறார்.] சத்தா+தென்னிற்—பொய்த்தாய+காலே = மித்தையானகாரியசத்தையை இங்ஙனங் கூறுங்கால்—காரணமுடையதொன்றே = காரணகதமான சத்தையா? — ஒத்தாகி நின்றதன்றே = காரணசத்தையினும் விலட்சணமா?—உரைத்தனன் = (என்று) விகற்பித்தார்.—உலக+வாணோன்—

௭. செ-ள், [இங்ஙனம் விகற்பித்தவையில் பிரதமபட்சத்திற்காரியம் அசத்துவமேயாகிறதென்று பிரதிபாதிக்கிறார்.] காரண+யென்றிடில் = காரியத்திற்குள்ள சத்தையானது காரணசத்தைதானென்றால் —வேறு+யாயிடும் – [அஃதேதென்னில்] முன்பு+ணாமினென்றான். —எ-று. காரியத்திற்குப் பிருதக்சத்தையின்மையால் காரியம் காரணத்திற்கபின்னமென்றே சித்தித்தது.

சத்தைதானொன்றாநின்றதாயினுங்காரியங்க
ளொத்தபேர்வேறுபாட்டாலுள்ளகாரணத்தில்வேறே
யித்தகைத்தென்றவார்த்தையியம்புபோளவேயானல்
வைத்தகாரியமுண்டென்னும்வார்த்தையுமசத்தேயாகும். (அ)

சத்தையில்லாதபோதுகாரியமில்லையாகு
மித்தன்மைக்காரியத்துக்கிலாமையேயிசைவதென்று
மத்தன்மையசத்தினுக்கேகாரியம்பிறந்ததென்றிங்
கொத்தொவ்வாதுரைத்தவார்த்தையென்றுமின்றாகுமன்றே. (கூ)

காரணசத்தையேயக்காரியசத்தையின்று
வேறொருசத்தையுண்டேயென்றிடில்வேறுசொன்ன
காரியசத்தையுள்ளகாரணசத்தையோடு
கூறியசத்தாய்க்கொண்டோவசத்தாயோநிற்பதென்றான். (க0)

வேறு.

சத்தாய்க்கொண்டேவேறென்னிலொன்றேசத்தையிரண்டாகா
தசத்தாய்க்கொண்டுகாரணத்தோடாகிவேறுநிற்குமெனி

---

அ. செ-ள், [இந்தப்படிச் சத்தேகமாயினும் காரணத்தினுங் காரியம் வேறாக வனுபவிக்கப்படுகிறதென்னுஞ் சங்கையை அனுவதித்துப் பரிகரிக்கின்றார்.] சத்தைதான் = காரியகாரணங்களின் சத்தை—ஒன்றா நின்றதாயினுங் காரியங்கள்—ஒத்தபேர் வேறுபாட்டால் = தாம்பொருந்திய நாமவேறுபாட்டினல்—உள்ளகாரணத்தில் வேறே (யென்பீர்களாகில்)—இத்தகை+யானல்—வைத்த = நீங்களபிப்பிராயம் வைத்த—காரியமு+மசத்தேயாகும்.—எ-று.

கூ. செ-ள், [மேலும் இந்த அசத்துவமே உபபாதிக்கப்படுகிறது.] சத்தையி+ல்லையாகும் — இத்தன்மைக்காரியத்துக்கு என்றுமிலாமை யே யிசைவது = இவ்விதம் சத்தாஹீனமான காரியத்துக்குச் சர்வகாலத்திலும் நரவிஷாணம்போல அசத்வமேயுக்தமாம்.—அத்தன்மையசத்தினுக்கு = அவ்விதமான அசத்தினை (இங்ஙனம் உருபுமயக்கு)—காரியம் பிறந்ததென்று = காரியமென்றும், பின்னமாக ஜனித்ததென்றும்—இங்கொத்து = இவ்விடத்தில் நீங்கள் சம்மதித்து—ஒவ்வா+றாகும் = சுருதி,யுத்தி, அனுபவங்கட்குச் சம்மதமாகாததாகக்கூறிய—கூற்றானது எப்போது முண்மையாகாது.—எ-று.

க0. செ-ள், [இங்ஙனமாயின் காரணசத்தையினும் காரியசத்தை அன்னியமேயென்னும் துவிதீயபட்சத்தை விகற்பிக்கின்றார்.]

கக. செ-ள், [பிரதமவிகற்பத்தை நிராகரிக்கிறார்.] சத்தா+காது.—லட்சணபேதமின்மையின்உபயசத்தைகளும்ஏகமாமேயன்றிப்பின்ன

லசத்தாமிது தானிலாமையினுலசத்தேயாகுங்காரியத்ஸ்த
யிசைத்தேனுள தாய்ச்செயமாட்டாதென்றுமலடிமகன்போல. (௧௧)

வேறு.

காரியமொருகாலுண்டாமொன்றினுலழிவதில்லை
காரியந்தனக்குற்பத்தியிலாமையாலில்லாவொன்றாங்
காரியந்தானென்றேடெண்ணுமென்றுரைத்தல்கூடா
பாருமினென்றவானேர்க்குரைத்தனன்பதுமமேலோன். (௧௨)

இன்னதோர்படியிருக்குமெனப்படாவிலாமையேபோ
லன்னதேயாதலாலேயாவதுமிலதேயாகுஞ்
சொன்னவிவ்விலாமைதானிங்கசத்தெனத்தோற்றினுலும்
பின்னையும்விசேடமொன்றுண்டென்னவேபேசுவீரேல். (௧௩)

---

மாகாது என்றுபொருள்—[துவிதீயபக்ஷத்தை யனுவதித்துத் தூஷிக்கிருர்.] காரணத்தோடு அசத்தாய்க்கொண்டு வேருகிநிற்குமெனி லிது தானில்லாமையினுல் அசத்தாம். இவ்வாறு அந்வயம்—காரியசத்தை சத்தாயின்மையினுல் சசவிஷாணம்போல அசத்தாம் என்று பொருள். [இவ்விதம் காரியம் சத்தென்னும் பக்ஷத்தை நிராகரித்து அசத்தாக வே காரியம் காரணத்தினும் பிந்நமென்னும் பக்ஷத்தை நிராகரிக்கிருர்.] அசத்தேயாகும் (என்று) காரியத்தை+போல—பூர்வம் அசத்திற்குச் சத்தாசம்பந்தம் வருவதே உற்பத்தியாமென்று பராபிமதமாதலால் அவ் விதவுற்பத்தியும் வந்தியாபுத்திரன்போல அசத்தானகாரியத்திற்குச் சம்பவிக்கமாட்டாது; ஆகையால் அசத்திற்குக் காரியத்வமேகூடாதென்று பொருள்.

௧௨. செ-ள், [பிரத்வம்சாபாவத்துக்குக் காரியத்வம் என் கூடாதென்று சங்கித்துச் சொல்லுகிருர்.] காரிய+வொன்ரும்—[உற்பத்தி அசம்பவம் பிரதிபாதிக்கிருர்.] காரிய+மேலோன்—தோற்றமுடைத்தாய் நாசமின்றியிருப்பது பிரத்வம்சாபாவத்திற்கு லட்சணம் எனத் தெரிவிப்பார், 'ஒருகாலுண்டா மொன்றிஞ லழிவதில்லை' என்ருர். கர்த்திருகாரணுதிகாரகசம்பந்தம் பொருந்தின கடாதிகட்கே ஜனிக்கிரியை காணப்படுதலின் பிரத்வம்சாபாவத்தில் சசவிஷாணம்போல நிர்த்தர்மகத்வங்கூறப்பட்டிருக்கையால் அவ்வித தர்மாசிரயத்வம் வருமாயின் பாவரூபத்வப்பிரசங்கம் வரும் ஆகையால் காரகசம்பந்த லட்சணமான தர்மங்களொன்றுஞ் சம்பவியாது; ஆகவே, அதையபேட்சித்து வரும் ஜனிக்கிரியையில்லை; அதனுல் காரியத்துவமுமில்லை என்றுபொருள்.

௧௩. செ-ள், இன்ன+தேயாகும்—[காரியத்திற்கு அசத்துத்வமிருந்தாலும் அத்தியந்தம்அசத்தானவந்தியாபுத்திராதிகளினும்விசேஷமிருப்பதனுல் காரியத்வமுண்டென்றுள்ள சங்கையையும் அனுவதித்து நிராகரிக்கின்ருர்.]

இதற்குநீர்சொன்னவேறேதியைந்திடுசம்பந்தந்தா
னதற்கொருகாரகத்தாலென்னில்வேறமைவதில்லை
யொதுக்கமில்லாததொன்றேவிசேடமாயிருக்குமென்று
மதற்குவேறொன்றுமில்லையாதலாற்கூடாதென்றும். (கச)

காரணத்தோடுகூடல்வேறெனிலது தன்னாலுங்
காரணந்தானேயாகுமிதினின்றுங்கருதிச்சொன்ன
காரியம்பிறக்குமென்றவிதுகொண்டுவேறுசொல்லிற்
பாருளகுற்றமுன்போற்பரிகரிப்பாருமில்லை. (கரு)

---

கச. செ-ள், [விசேஷமானது காரகசம்பந்தமா? ஜனிக்கிரியாசிர யத்வமா? சத்தாசம்பந்தமா? என்னையென விகற்பித்துப் பிரதமபக்ஷத் தை நிராகரிக்கிறார்.] இதற்கு + கூடாதென்றும் — நிர்விசேஷமான அசத்திற்குக் காரகசம்பந்தஞ் சித்திக்குமாகில், வந்தியாபுத்திரனுக்கும் அச்சம்பந்தசம்பாவனையாற் காரியத்வப்பிரசக்திநேரிடும். அவசியமேதே னும் ஒருவிசேஷத்தோடுவிசேஷித்திடில் காரகசம்பந்தங் கூறத்தகும்; அவ்விசேஷமும் இச்சம்பந்தமேதானென்னில், தானே விசிஷ்டம், தானே விசேஷம் என்னும் ஆன்மாசிரயதோஷம் நேரிடும். சம்பந்தத் துக்கன்னியம் விசேஷமென்னில்? அதுவும், ஏதேனுமொன்றுடன் விசேஷிக்கப்படில் உளதாகும்; அவ்விசேஷமும் முற்கூறியசம்பந்தமா? அன்னியமாஎன்னில்? மூன்றும் விசேஷம்வரும்: இரண்டாவது அங்கீ கரியாவிடில் ஆன்மாசிரயதோஷம், மூன்றுவது அங்கீகரியாவிடில்அன் னியோன்னியாசிரயதோஷம்,நான்காவது அங்கீகரியாவிடில் அன்யோ ன்யாசிரயத்தோடு சக்கிரிகாப்திதோஷம்: ஒப்பினால் அனவஸ்தாதோஷ முண்டாம்; ஆதலால். அசத்தாகிய காரியத்திற்குக் காரகசம்பந்தலட் சணமாகிய விசேஷம் நிரூபிக்கத்தகாது என்றுபொருள்.

கரு. செ-ள், [பூர்வகவியில், 'அதற்கொரு காரகத்தாலென்னில் வேறமைவதில்லை' என்றுபக்கிரமித்ததும், இக்கவியில் 'காரணத்தோடு கூடல்வேறெனிலது தன்னாலுங்காரணந்தானேயாகும் என்றுபசம்மரி த்ததும் கவிநாயகரது அபிமதம்.] காரண+னேயாகும் — வேறு= விசேஷம்—காரணவியதிரிக்தமாய்க் காரியஞ்சித்தியாமையால் காரி யம் காரணத்திற் கபின்னமே என்று பொருள். [துவிதீயவிகற்பத்தை நிராகரிக்கிறார்.] இதினின்று+கொண்டு — வேறுசொல்லில்= அசத் தானகாரியத்திற்கு ஜனிக்கிரியாசிரயத்வலக்ஷணமே விசேஷமென்று கூறிடில்—முன்போலுளகுற்றம் - பார்=பாரில்—பரிகரிப்பாருமில்லை.

இரண்டுக்குமொன்றேசத்தையெனுமிதுவேறேயென்னிற்
றிரண்டிடுங்குற்றமெல்லாஞ்செறிதனிச்சயமெப்போதுந்
திரண்டகாரியமசத்தேயாதலாற்சதசத்தென்னி
லிரண்டிற்குமுனைத்தகுற்றமிசைந்திடுமியல்பினாலே. (௧௯)

உண்மையிற்பேதமின்றியிருந்தேயும்பேதமென்னல்
வெண்மையேசெய்தரூபவியாபாரந்தோற்றங்கேடு

---

—ஜனிக்கிரியாசிரயத்வலக்ஷண விசேஷமும் ஒன்றினுல் விசேஷிதமாயுள்ளதற்கே சொல்லத்தக்கது; இல்லாவிடில் நரவிஷாணத்திற்குமப்படிப்பட்ட விசேஷத்வப்பிரசங்கம் வரும். ஆதலால், அந்தவிசேஷமும் ஜனிக்கிரியாசிரயத்வந்தானு? அல்லது அன்னியமா? இதுவேயென்ருல் பூர்வம்போல ஆத்மாசிரயாதி தோஷமுண்டாம் என்றுபொருள்.

௧௯. செ-ள், [முற்கூறிய தோஷம்வருவதால் சத்தாசம்பந்த லக்ஷணமே விசேஷமென்கிற மூன்றும் விகற்பமும் யுக்தமல்லவென்று சொல்லுகிருர்.] இரண்டு + நிச்சயம்—[பிரதிபாதித்துவந்த அசத்திற்குக் காரியத்வம் அசம்பவமென்பதை உபசம்மரிக்கின்ருர்.] ஆதலாலெப்போதுந் திரண்டகாரியம் அசத்தே. சொல்லிவந்த ரீதியாக நரவிஷாணம்போல அசத்திற்கு விசேஷமென்கிற சம்பந்தம் நிரூபிக்கக்கூடாமையால் அசத்திற்குக் காரியத்வம் யுக்தமல்லவென்று பொருள். [காரியம் சதசதாண்மகமென்கிற மூன்றும்விகற்பத்தை நிராகரிக்கிருர்.] சதசத்தென்னி + யல்பினுலே. ஆதலால், காரியம் அபின்னமே, பேதம் அசம்பவமே என முடித்துக்கொள்க.—பாவாபாவங்கட்கு ஏகத்வங் கூடாமையின், காரியம் பின்னுபின்னமென்கிற பேதாபேதபக்ஷமும் பேதபக்ஷத்திற்குச் சொல்லியதோஷப் பிரசங்கத்தால் யுக்தமல்லவென்று பொருள். இங்ஙனம் மூலசுலோகத்திற் கூறியிருப்பினும் பேதபக்ஷத்தைப்பற்றி யுண்டாகிய விகற்பத்திரயங்களும் சித்தியாதத்னுலேயே காரியம் அபின்னமே, பேதம் அசம்பவமே என்னும் பொருள் கொள்ளக்கிடத்தலினுலும், பேதம் சித்தியாததனுலேயே பேதாபேதமென்னும் விகற்பத்திற்கு அவகாசமுக்கியமாயின்மையினுலும் கவிநாயகர்கூருதொழித்தனர்.

௨0. செ-ள், [காரியம் காரணத்திற்கு அனன்னியமாயின் பேதப்பிரதீதிக்குக் கதி என்னே? என்று சங்கித்துக் கூறுகின்ருர்.] உண்மை + மென்னல்—வெண்மையே=அறியாமையே [மேலும் இதையே விவரணம் பண்ணுகின்ருர்.] செய்தரூபவியாபாரம்= காரியத்தை ஜநிப்

பண்வயினிவற்றாற்கொள்ளும்பயனுமருபம்வேறு
முண்மையிலெல்லாம்பொய்யாலுண்டாகுமனைத்துமன்றே. (கஎ)

வேறு.

எல்லாவிகாரங்களும்வாக்காலென்றுமுண்டென்றுரைப்பதுவுஞ்
சொல்லாமளவேயெவ்விடத்துந்தோன்றுமென்றதுண்மையதே
யல்லாவிகாரமறிவொழியவனைத்தும்பொய்யேவிகாரத்துக்
கில்லாதாகுமுண்மைபிறிதில்லாதாகுமாதலினால். (கஅ)

---

பிக்கப்பட்ட நிமித்தகாரணத்தினது தொழில்,—தோற்றம் கேடு பண்வயின் இவற்றாற்கொள்ளும் நாமருபம் = காரியவுற்பத்தி, நாசம், செய்யிடம், இவைகளாற் பெறப்படும்பயன், நாமரூபவிசேஷங்கள்-எல்லாம் வேறுமனைத்து முண்மையிற் பொய்யாலுண்டாகும்.—எ-று.

கஅ. சே-ள், [இந்தப்பிரகாரம் காரியம், காரணமாத்திரம் என்று சாதித்த இவ்வர்த்தத்தில் சுருதியைக் கூறுகின்றார்.] (ஆதலால்,) எல்லா விகாரங்களும் வாக்காலுண்டென் றுரைப்பதுவுமென்றுஞ் சொல்லாமளவே=முற்கூறிய பேதப்பிரதிபாசமானது பிராந்தியாதலாற் சர்வவுபாதிகளான விகாரங்களும் வாக்கினாலேயே கேவலம் உண்டெனப்படுகின்றன: உண்மையாகவுண்டென்றில்லை ஆதலால் கடசராவமென்பன முதலியவை நாமதேயமாத்திரமே.—'என்றும்' என்ற பதத்தினால் பிரத்வம்சாவத்தையிற்போல ஸ்திதிகாலத்திலும் காரியங்கள் காரணமாத்திரமாகவே சேஷித்துள்ளன என்றறிக. [இந்தப்பிரகாரம் விகாரமானது நாமதேயமாத்திரமென்னவே அசத்வமென்றாயிற்று; ஆகவே, காரணபூதமான சத்பிரமத்தோடு அனன்யத்வம் எங்ஙனம்? சத்தசத்திற்குப் பரஸ்பர விரோதத்தினால் என்று சங்கித்துக் கூறுகின்றார்.] எவ்விடத்துந் தோன்றுமென்ற (தால்) = எவ்விடத்திலும் பிராதீதிகம் என்னும் ரூபத்தினால்—(உய்த்துணரில்) உண்மையதேயல்லா விகாரமனைத்தும் பொய்யே—அறிவொழியவில்லாதாகும் விகாரத்துக் குண்மை=சேதனரூபப்பிரமத்தைவிட வேறில்லாத காரியத்திற்குச் சத்தியத்வம்—பிறிதில்லாதாகுமாதலினால்=வேறோராகாரமில்லாதுகாரணாகாரமே தனக்கு ஆகாரமாயுள்ள அவ்வேதுவினால்—எ-று. காரியங்கட்கு இரண்டு ரூபமுள்ளன; அவை வாய்குவிந்து பண்டியுண்டாயுள ஆகாரவிசேஷான்மகமான பிராதீதிகரூபம் ஒன்றும், காரியானுகதமாயுள்ள மிருதான்மகமான காரணரூபம் ஒன்றும் ஆம்; அவ்விரண்டில் பிராதீதிகரூபத்தினால் காரியவர்க்கங்கள் அசத்தியம், காரணமிருத்ரூபத்தினால் சத்தியம் என்றறிக. என்றதோடு ஆல் உருபு வருவிக்கப்பட்டது.

வேறு.

காரணமதனலன்றிக்காரியமுளவாய்த்தோன்ரு
காரணமொழியவேறுகாரியமின்மையாலே
காரியமனைத்தினுக்குங்காரணமதுவேயுண்மை
யோர்தரவிரண்டும்வேறென்றியம்பிடலியல்பின்ருமால். (கக)

வேறு.

ஆமன்றெனநினைவீரலதன்பின்வழியறிவீர்
நாமுன்சொனமுதல்காரணமறியமுழுதறிவாஞ்
சேமம்படமிகவுந்தெளிவுறவீரிதுவேறே
தாமந்தருமலர்மேலுறைதலைவன்னுரைதருமால். (உ௦)
கூறும்பொருள்விரிவென்றிவையறியாமையின்முழுதும்
வேறும்மலவேருெடனுய்நின்றதுமலதான்

---

கக. செ-ள், [இந்தப்பிரகாரம் காரியசம்பந்தியானகாரணரூபான் மகம் காரணத்திற் கன்னியமென்னில்? அத்வைதகாரண விரோதமா மென்று சங்கித்துக் கூறுகின்றுர்.] காரியங்காரணமொழிய வேறின் மையால் காரணமதனலன்றிக் காரியமுளவாய்த் தோன்ரு. இவ்வாறு ஏதம் அன்வயம். காரியசம்பந்தியான காரணபின்னரூபம் யாது அது காரணமே: பேதமின்றென்று பொருள்.—[இங்ஙனங்கூறிய வர்த்தத் தில் மிருத்திகைமாத்திரஞ் சத்தியம் என்றதுமுதலிய காரணமாத்திர சத்தியத்வம் பிரதிபாதியாநின்ற சுருதியைக் கூறுகின்றுர்.] காரிய+ யுண்மை—[சுருதிகதமாகவே காரணபலத்தைச் சொல்லுகிறுர்.] ஏர்தா +பின்ரும்.

உ௦. செ-ள், [பிரதிபாதித்த வர்த்தத்தை நிச்சயமாகச் சொல்லு கிறுர்.] ஆமன்றெ+ னுரைதரும்—இந்தலோகத்தில் மிருதாதிகாரணங் கள் அறியப்படுமேல் அவைக்கனன்யமாகையால் அவைகளின் காரிய மான கடசராவாதிகளும் காரணகாரமாகவே அறியப்படுகின்றன வாதலால் சர்வஜகத்காரண சத்ரூபப்பிரமஞானத்தால் அதன்காரிய மனைத்தும் காரணமாகவே அறியப்பட்டனவேயாமென்று இது கூறப் பட்டதென்றே பொருள்.

உக. செ-ள், [காரியங்கள் காரணஞானத்தால் அறியப்படினும் காரணஜாதிய மறியப்படச் சக்கியமாகாததால் எங்ஙனம் ஏகவிஞ் ஞானத்தாற் சர்வவிஞ்ஞானமாம் என்று சங்கித்துச் சொல்லுகிறுர்.] பொருள் விரிவென்று கூறுமிவை=காரணவஸ்து அநேகமென்று

றேறும்படியுளகாரணமொன்றேயுளதெனலால்
வேறென்றிடுபேதம்மிலதாமெங்கணும்விளையாம். (௨௧)

அயலொன்றிடுபொருளும்மதன்பிரிவும்மறிவரிதா
மியல்பின்கணதறியும்பொழுதினைதான்மிகவேறா
மயலொன்றினையறியிலறிவறியாமைதன்னியல்பான்
முயலும்பலபேதம்மெனமுடியும்வினைமுழுதும். (௨௨)

பேதந்நெறியோரில்லிலதாகும்மதனாலே
பேதம்மொடபேதம்மறுபேசல்பிழையேயா
மேதம்மிலதாயெங்கணுமொன்றாயொழிவில்லா
தியாதொன்றதுமுதல்காரணமெனுமாமலர்மிசையோன். (௨௩)

மண்ணும்வளைவானும்வனைபலவையும்பிறிதாயே
யெண்ணும்மளவறிவின்செயலிவனைப்பெறவிசையுங்

---

சொல்லாநின்றவை—முழுதுமறியாமையின்—தேறும்படியுள காரண மொன்றே யுளதெனலால் தான்வேறும் மலவேறாடேனுய்நின்றது மல—[கடத்திலும்படம் பின்னமென்று பேதமானது பிரத்தியக்ஷமாய் அனுபவிக்கப்படுகிறதேயென்று சங்கித்துச்சொல்லுகிறார்.] வேறென்றிடுபேத மெங்கணுமிலதாம் விளையாம்—தருமியாதி நிரூபிக்கக்கூடாமையால் பேதம் மித்தை; அங்ஙன முண்டெனிற்றோஷம் என்று பொருள்.

௨௨. சே-ள், பின்னங்களாகக் கடபடங்கள் அனுபவிக்கப்படப் பேதம் எங்ஙன மில்லாததாகும் என்கிற சங்கைக்குச் சமாதானங் கூறுகின்றார்.] அயலொன்றி+முழுதும் — தருமிப்பிரதியோகிஞானநின நிரூபணந்தான் பேதாவபாசம். பேதமா யறியப்பட்டவைகட்கே தருமிப்பிரதியோகித்வமென்று அன்யோன்யாசிரயநிரூபணமாகையால் ஓரிடத்தும் பேதத்திற்கு ஆன்மபாவங் கூடாமையால் மித்தியாபூதமாகவே பேதம் பிரதீதியாகிறதென்று பொருள்.

௨௩. சே-ள், பேதந்நெறி+மிசையோன்—வேத்தியமாகப் பேதமின்மையால் அவ்விஷயம் பிரகாசிப்பினும் பாரமார்த்திகமாயில்லை. ஆதலால், காரணத்மபேதம் சித்தியாமையாலும், நித்தியம் சுவகதாதிபேதமின்மையாலும் காரணம் ஏகமேவாத்விதீயமென்று சித்தம்என்று பொருள்.

௨௪. சே-ள், [உலகத்தில் கடாதிகாரியங்களில் உபாதானம், நிமித்தம் என்னுமிரண்டும் வேறாகக் காணப்படுகிறது: அப்படி அத்

கண்ணெனன்றிடவருகாரணமொன்றேயமலமதா
லெண்ணும்மறிவுருவையிசையாநிற்பதெவ்விடமும். (உச)

வனைகின்றவனொருகாரணம்வாசேதனம்வேறு
நினையும்படியிலதாதலினிலையாயுளதறிவி
லனகாரணமறிவாயினும்வனைவானிகரன்று
நினைமண்ணெநிகரானவைதனையேகொடுசெயுமால். (உரு)

வேறு.

தோன்றலாலசித்துமாகித்தமத்தொடுகலந்துநின்றே
யான்றவமுனிகள்பண்ணுமனனத்தாலளப்பொணாதாய்ச்
சான்றதாயெங்குநின்றசங்கானுடைத்தாயொன்று
மீன்றிடுமெரியவெல்லாமித்தன்மைத்தெனவொன்றுண்டு. (உசா)

---

விதீயமான சத்வஸ்துவானது நிமித்தமாகில் நிருபாதானமாய்க் காரியம் உற்பத்தியாகமாட்டாது: அஃதுபாதானமாயின் அநிமித்தத்வப் பிரசங்கம் வருமென்று சங்கித்து அதற்கு உபயரூபமும் உண்டென்று கூறுகின்றார்.] மண்ணும்+விடமும் 'பலவாகப் பவிப்பேனென்று பார்த்தான்' என்ற சுருதியினுற் பல்வாகப் பவித்தலின் உபாதானத் தன்மையும், பார்த்தமையின் நிமித்தத்தன்மையும் அத்துவிதவஸ்துவுக் குக் காணப்படுதலால் நிமித்தமும், உபாதானமும் அதுதானே என்றறிக.

உரு. செ-ள், மண்முதலானவை அசேதனமாதலால், தமக்கு அன்னியசேதன குலாலாதி யபேட்சித்தன: ஜகத்தின் உபாதானம் சுவயமே சேதனமாதலால் அன்யசேதனம் அபேக்ஷித்திலது; அப்படியே சேதனமாயினும் குலாலன்போலத் தனக்கன்யவசித்ரூப உபாதானபேக்ஷையின்று என்றறிக.

உசா. செ-ள், [அவிக்கிரியமாய், அசங்கமாய், சித்ரூபமாகிய பிரமவஸ்துவிற்கு இவ்வித காரணத்வம் எப்படிக்கூடும்! மாயையாலென்னில்? அதனல் துவைதப்பிரசித்தி வருமென்று சங்கித்துச் சொல்லுகிறார்.] தோன்றலால்=பிரதீதிமாத்திரத்தால்—

காரணமேவிமாயைபடைத்தளித்தழிப்பதாகுங்
காரணஞ்சத்தாஞ்சித்தாயிருத்தலாலென்றுகொண்டே
பூரணமாகியுள்ளபொருளினைச்சுரர்கள்கேட்ப
வாரணமுரைத்தவாதியருளினனறியும்வண்ணம். (உஎ)

உண்மைசித்தினுக்கேயுள்ளதசித்தெனும்பழுதைப்பாம்பிங்
கெண்மையினிலாதவண்ணமிசையுமுங்கட்குமேற்கக்
கண்ணெனமுழுதுநின்றகாரணமொன்றேசத்தா
யெண்ணிடிலென்றுமுண்டாயிருப்பதென்றியம்பலுற்றான் (உஅ)

அறியாதாரசத்தாய்முன்புகாரணமுளதாய்த்தென்பர்
நெறியாலிவ்வசத்துண்டாக்குங்காரணமாகாதென்றும்
பிறிதாயகாரியங்களிதினின்றும்பிறக்குமென்னில்
வறிதாயமலடிமைந்தன்காரணமக்கட்கெல்லாம். (உகூ)

---

உஎ. செ-ள், காரண+தாகும். இவ்விதம் மாயாதாதான்மியும் சத்ரூபபிரமத்தில் அத்தியாசிக்கப்பட்டிருப்பதால் அதன் சத்துவரஜ தமோகுணவுபாதிபேதத்தால் அவிக்கிரியமான அத்துவிதீயப் பிரமத்திற்குச் சிருஷ்டியாதி கூறப்பட்டது. மாயையானது அனிர்வசனீயமாதலால் சத்தசத்தாய் அன்னியமாயின்மையின் அந்தப் பிரமத்திற்குத் துவைதசித்தியுமில்லை யென்றறிக.—[இந்தப்பிரகாரம் அத்துவிதீயத்வம் சாதித்துச் சத்ரூபத்வஞ் சாதிக்கிறார்.] காரணஞ்சத்தாஞ் சித்தாயிருத்தலால்—

உஅ. செ-ள், [இவ்விஷயத்தில் வியாப்தியைச் சொல்லுகிறார்] உண்மை சித்தினுக்கேயுள்ளது—ஜடப்பிரபஞ்சப் பிரதீதிக்குச் சாட்சியாய் எப்போது மிருத்தலால், அதின் அதிஷ்டானமான சித்ரூபப் பிரமத்திற்குச் சார்வகாலமும் சத்தியத்வம் யுக்தமேயென்று பொருள். [சித்ரூபத்திற்கும் அசத்தியத்வம் ஏன் கூடாதென்று சங்கித்துச் சொல்லுகிறார்.] இங்கசித்+ஏற்க—[பிரதிபாதித்த இந்தவர்த்தத்தில் சத்தாகவே இந்த ஜகத்து முன்னேயிருந்தது, ஏகமேவாத்விதீயம் என்னும் சுருதியைக் கூறுகின்றார்.] கண்ணென+லுற்றான் —இன்னும் மூலசுலோகத்தில், இந்தச் சர்வஜகத்தும் பூர்வம் அசத்தாகவேயிருந்தது என்றுளது. சொல்லியரீதியாக ஜகத்காரணம் அத்விதீயமானசத்தே ஆதலால் பரிதிருசியமானமாகிய நாமரூபான்மகமான சர்வகாரியஜகத்தும் சிருஷ்டிக்குமுன் சத்ரூபகாரணான்மகமாகவே யிருந்தது: நாமரூபமாக இருக்கவில்லையென்று பொருள்.

உகூ. செ-ள், [இந்தப்பிரகாரம் சத்காரணவாதத்தை ஸ்துதித்து அதையுறுதிப்படுத்துநிமித்தம் சூனியவாதியபிமதமான அசத்காரண

அசத்துத்தன்சத்தியாலேயாவுக்குமுதலாமென்னி
லசத்துக்குச்சத்திகூடாதர்மத்தாதலாலே
யசத்தலாவித்திலென்றுமங்குரந்தோன்றுமாறு
லசத்தசத்தாகுஞ்சத்தேயாவையுமாவதென்றும். (௩0)

அசத்தின்கணுள்ளதாஞ்சத்திசத்தாயோவசத்தாய்க்கொண்டோ
வசத்துடன்சத்தாய்க்கொண்டோவாய்நின்றவாறதென்னை
யசத்தினையுள்தாஞ்சத்தியாசரித்திடுவதென்னி
லசத்தாயமலடிமைந்தனியாவையுமாக்குமன்றே. (௩௧)

அசத்தின்றன்சத்திதானுமசத்தாலேநிற்பதென்னி
லிசைத்திடுங்காரியங்களியாவையுமியற்றுதென்று
மசத்தேதேட்டமலடிமைந்தனுக்குவதிலாமையேபோ
லசத்தோடேசத்தேயென்னிலாயிடுமிரண்டின்குற்றம். (௩௨)

---

பக்ஷத்தைக்கூறி அதனை அஃதொன்றேயல்லவா என்றதுமுதல், எங்ஙனம்சத்தினின்று அசத்துண்டாகும் என்றதுவரைக்குமுள்ளவாக்கியத்தாற் கண்டிக்குஞ் சுருதியின் அபிப்பிராயத்தையுங் கூறுகின்றார்.] அறியாதார் = சுருதியபிப்பிராயமறியாத சூனியவாதிகள் — விநஷ்டமான பீஜத்தினின்றும் அங்குராகாரியோற்பத்தி காணப்படுதலிற் காரணங் கெடாமற் காரியமுண்டாகாது, அபாவமே பாவவிகாரகாரணமாதலால் ஜகத்காரணமும் அசத்ரூபமேதானென்பார்கள் அசத்வாதிகள். மிர்தமான தேவதத்தனுக்குப் புத்திரவுபர்தானசத்தியில்லாததுபோல நஷித்தகாரணத்திற்குக் காரியஜனன சக்தியின்மையாலும், அங்குராதி காரியசமயத்திலும் பீஜமுதலிய காரணங்களின் இருப்புமுதலாம் விசேஷங்களாகிய காரணாவயவங்களுக்கு இடைவிடாத இருப்புக்காண்பதனாலும், அசத்துக்குக் காரணத்தன்மை பொருந்தாததுபற்றி அவ்வசத்காரணவாதிகள் பிராந்தர்களே என்பதாம்.

௩0. செ-ள், [ஜகன்மூலகாரணமானது அசத்தாயினும் தன் சத்திவசத்தாற் காரணத்வங் கூடலாமென்னும் சங்கையைத் தூஷிக்க வேண்டி அனுவதிக்கிறார்.] அசத் + முதலாம்—[அதைத் தூஷிக்கிறார்.] என்னிலசத் + தென்றும்.

௩௧. செ-ள், [அதனை மூன்றுவிதமாக விகற்பித்துக் கண்டனஞ் செய்கின்றார்.]

அசத்துத்தன்சத்தியாலுங்காரணமாகாதானா
லசத்துமுன்புளதென்றோதற்கருத்தமுமில்லையேயா
மசத்தலாதாகுமொன்றேயனைத்திற்குமுதலதாகு
மசத்துளதாகுமென்றலழிந்திடும்வார்த்தையன்றே. (௩௩)

பூதத்தாலுளதாயுள்ளபுவனங்களுயிர்கண்முன்போன்
றோதத்தானரியசத்தாலுதித்ததென்றுணரும்வண்ணம்
வேதத்தான்முழுதுஞ்சொன்னவடிவினைவிளங்குமாறா
லோதத்தான்றொடங்கலுற்றானுயர்தருசுரர்கட்கெல்லாம். (௩௪)

வேறு.

எல்லாமுண்டாவதற்கு முன்னேதோன்றி யித்தனைக்குங் காரணமாஞ்சத்தையாகு, மில்லாதமுதன்முடிவையுடைத்தாயொன்றாயிருக்குமிதுவெனலாகுமியல்பிற்றாகி, நில்லாதவுலகனைத்துமுன்புசெய்தநெறியதனையுடைத்தாகிநிமலமாகிச், சொல்லாலுமளப்பரிதாமிதன்றனுண்மைசுருதிமுடிவதனாலுந்தொடரொணாதால். (௩௫)

வேறு.

காலமுங்கன்மந்தானும்பரிபாகமானவாறே
ஞாலமுண்டாகநல்லகுணத்தினைக்கலந்துநிற்கும்

---

௩௩. செ-ள், அசத்து+மில்லையேயாம்—[பிரதிபாதித்து வந்ததை நிச்சயம் பண்ணுகிறார்.] அனைத்திற்கும் அசத்தலாதாகுமொன்றே முதலதாகும்=சிருஷ்டிக்குமுன் இந்தச்சகமனைத்திற்கும் சத்தே காரணமாயிருந்தது.—அசத்துள+வார்த்தையன்றே.—

௩௪. செ-ள், [பூர்வ கற்பம்போல் உலகமெல்லாஞ் சத்தாகிய காரணத்தால் உதித்தன என்று கூறுகின்றார்.]

௩௫. செ-ள், [அசத்துக்காரணமாகாததனாற் சத்தே காரணமாகும், சிருஷ்டிக்குமுன் ஜகமனைத்தும் காரணசன்மாத்திரமாயிருந்ததென்ற சுருதியின்பொருளைக் கூறுகின்றார்.] முதல்=உற்பத்தி,—முடிவு=விநாசம்,—நெறி=சமஸ்காரம்—'நில்லாதவுலகனைத்துமுன்பு செய்த நெறியதனையுடைத்தாகி' எ-து, அதீத கற்பத்திலொடுங்கிய பிரபஞ்சத்தாலுண்டாகிய வாசனையோடும், அவ்வனுபவஜனித சமஸ்காரத்தோடுங்கூடியது என்றுபொருள்.

௩௬. செ-ள், [அத்விதீயமாய், சத்ரூபமாய், ஏகவிதமான பிரமத்தினின்றும் அநேகவிதமான பிரபஞ்சோற்பத்தி எங்ஙனம்? உளதா

பாலதொன் றில்லாவிந்தச்சத்திமான்படைத்தற்காக
வேலவேயெல்லாமாவோமென் றுகொண்டிசைந்துபார்த்தான். (௩௬)

பார்த்தபின்முன்னுகாயம்வாயுவைப்படைத்துப்பின்பு
தீத்தனையப்பைச்செய்தேயனமெனச்சொல்லப்பட்ட
பூத்தனையுளதாய்ச்செய்தகாரணமாகாவீசன்
வாய்த்தநுண்பூதமைந்தால்வகுத்தவாறியம்பக்கேண்மின். (௩௭)

தன்மாத்திரைகளைந்தினையுமோரொன்றிரண்டாய்ப்பகுத்தொன்றை
நன்னுலாக்கித்தன்பாதியொழிந்தநாலினுடன்கூட்டி
யின்னேயல்லாதவைநான்கிலியல்பிற்கூட்டவாறுதி
பின்னே தூலபூதமெனப்பிறக்குமெனவேபெயர்த்துரைத்தான். (௩௮)

வேறு.

அறியாமைவடிவாயுள்ளபுவனங்களமைத்துப்பின்பு
பிறியாதகன்மந்தன்னின்வசத்தினுலுயிர்கட்கெல்லாஞ்
செறிவாயகாலபாகமானபினீசன்றுனே
பிறிவாகுநான்குயோனிபிறந்திடும்வகையேசெய்யும். (௩௯)

ஈசனுமிறைவனுத்தவறிவினுலெங்குமாகிப்
பேசிடுநாமரூபமுன்புபோலுண்டாய்ப்பேணு
மாசிலாச்சகத்துத்தானேயுளதுபோலசைந்திட்டாலு
மீசனையொழியவேறுநிற்பதொன்றில்லையென்றும். (௪0)

மென்று சங்கித்துச்சொல்லுகிறூர்.] நல்லகுணத்தினை = சத்துவவிருத்தியை — ஏலவே = முன்னே — 'எல்லாமாவோம்' என்றதால், உபாதானந்தரவபேக்ஷை இன்றெனக்கொள்க.

௩௭. செ-ள், [சந்தோகசாகையில் தேயுமுதலியவற்றிற்கே உற்பத்தி கூறப்பட்டது, ஆகாயத்திற்கும், வாயுவிற்கும் உற்பத்தி கூறவில்லையாயினும் தைத்திரியத்தில் அவைகளுக்கும் உற்பத்தி கூறப்பட்டிருக்கின்றமையின், குணோபசம்ஹார (பூர்வஞ்சொல்லியிருக்கிறதைக் குறைந்தவிடத்திலெடுத்துக் கூட்டிச்சொல்லும்) நியாயத்தால் இவ்விடத்து அதனையுஞ்சேர்த்துச் சிருஷ்டியை நிரூபிக்கின்றூர்.]

௩௯. செ-ள், [பஞ்சீகரணத்தின் பின்பு செய்யுஞ் சிருஷ்டியைக் கூறுகின்றூர்.]

௪0, செ-ள், ஈசனு + லசைந்திட்டாலும் = சச்சித்ரூபமான அந்தக்காரணவஸ்துவானது ஜலதரங்கபுற்புதாதிகளிற் சூரியப்பிரதிபிம்பம்போலப் பிரமேந்திர ஸ்தம்பபரியந்த சர்வோபாதிகளிலும் சேதனரூபமாகப்பிரவேசித்துச் சொல்லாநின்ற நாமரூபங்களைப் பூர்வகற்பம்போல உண்டாகச்செய்தது. இந்தச்சகலமான ஜகத்தும் வியவகாரபூமியிற் சத்தியம்போல விளங்கினுலும் — ஈச + தொன்றில்லையென்றும் —

அனலினிற்சிவந்தமேனியானதவ்வொளியேயாகு
மனல்வயின்வெண்மையப்பாங்கருமைபூமியின்றன்கூறு
மெனவிவைமூன்றுமன்றியீண்டனலென்பதில்லை
யனலெனும்விகாரம்வார்த்தையாவதேயன்றியில்லை. (௬௧)

ஆதித்தனிரத்தவன்னமானதவ்வொளியதாகு
மாதித்தனிடத்துவெண்மையப்பினதாகுநின்று
பேதித்தகறுப்புப்பூமியுடையதிம்மூன்றுமன்றி
யாதித்தனென்றுவேறிங்கில்லையென்றறிமினென்றும். (௬உ)

அறிவொடுவிவேகமில்லாதாதலாலவர்களாலே
பிறிதாவிரவியென்றுபேசிடப்பட்டதென்று
மறிகனல்பிருதுவிநீரானவிம்மூன்றுமன்றிப்
பிறிதுசந்திரனைமின்னைப்பேசிடல்பிழையேயன்றே. (௬௩)

---

௬௧. சே-ள், [மண்முதலிய திருஷ்டாந்தங்களால் பூர்வம் காரியப் பிரபஞ்சங்காரணானன்யமென்று கூறியதை மீண்டும் திடஞ்செய்தற் காகத் திரிவிருத்கிருதத்தால் பூதகாரியப்பிரபஞ்சத்திற்கு அதிரிவிருத் கிருத காரணபூததேயு, அப்பு, அன்னமாத்திரத்வம் அக்கினி, ஆதித் யாதி உதாகரணங்களால் சுருதியில் தெரிசிப்பிக்கப்படுகிறது. இப்பஞ்சீ கிருத காரிய சர்வஜகத்தும் பரமார்த்தம்போலத்தோற்றினும் காரண சூட்சுமபூதவியதிரேகமாகவில்லை; அஃதெப்படியென்றாற் சொல்லு கிறார்.] அனலி+யாகும். திரிவிருத்கிருத பூதகாரியங்களான அக்கினி யில் லோகித சுக்கிலகிருஷ்ணம் என்னும் மூன்றுவர்ணங்கள் காணப் படுகின்றன; அவற்றில், லோகிதவர்ணமானது அதிரிவிருத்கிருதமாய்; சூட்சுமமாயுள்ள தேஜஸின் உருவமாகும்.—அனல்+கூறும் — ஏனைய வற்றிற்கும் இங்ஙனமே அருத்தங்கொள்க. [இந்த வர்ணங்களுக்கு அன்னியநியத்வமே சுபாவமாயினும் அக்கினியென்னும் தருமி என் சித்திக்கமாட்டானென்னிற் சொல்லுகிறார்.] எனவி+லென்பதில்லை —[தாகபாகாதி சமர்த்தமாக வனுபவிக்கப்படுகிற அக்கினிபதார்த்தமா னது ரூபத்திரயபின்னமாக வில்லையென்று எங்ஙனம்? நிஷேதிக்கக் கூடுமென்னிற் சொல்லுகிறார்.]

௬உ. ௬௩. சே-ள், [ஆதித்தன், சந்திரன், மின்னல்கள் அம் மூன்று வர்ணங்களைக்காட்டிலும் வேறுகாரணதத்தைச்சூட்சுமபூதத்தைத் தவிர இல்லை என்று கூறுகின்றார்.] காரியமனைத்தும் காரணத்திற்கு வேறென்றல் பிராந்தி என்றறிக.

வே று.

பூதம்புவனஞ்சுவர்வேறுகுடம்போலும்பொருளாயுளவாதலெலலாம்
பேதம்பிரமமொழியவிலையாற்பேர்வின்றிடநின்றதுதானதுவே
யோதுஞ்சனனம்பலவாதனையாலுடலம்முதலாகியவெளியினிலே
பேதம்படநானெனவேயறியும்பெயராமயலாயிடுமெங்கணுமே. (சச)

ஊனிந்திரியாதிகளானவெலாமோருங்கணிறெனலாகியிடா
வானம்முதலாகியபூதமதால்வரவின்படியேவளர்வும்முள்தா
லானம்மணிறலமையுஞ்சுவர்தாமாகும்மணுநீர்கொடளித்திடல்போ
லூனுங்காணங்களுமுண்பவையாலுளதாய்வளரும்மெனவேயுணர்மின்.

ஊனுதிகளாயதிரட்சியிலேயொழியாவணநானெனதென்றுகொடே
நானேநுகர்வேனவையென்றுணருநானுவறிவானவைவிட்டிவையிற்
றனேமுதல்கண்டிவையித்தனையிற்சலியாவறிவாகியதன்மையிலே
நானேயதுவென்றிடுநல்லறிவோர்நாடார்பிறிதென்பதுநாடொறுமே. ()

---

சச. சே-ள், பூதம்+தானதுவே—[பிரமமானது பரமார்த்தமாயில் தத்வமஸி என்று பிரமாத்மகமாக ஜீவனும்உபதேசிக்கப்படுகிறான்; அந்த ஏகவிஷயமான அகம்பிரத்தியயமானது பூதகாரியமான அசத்தியதேகாதிகளில் நான் மனுஷியனென்று எப்படி? உண்டாகலாம் என்று சங்கித்துச் சொல்லுகிறார்.] ஓதுஞ்+மெங்கணுமே.

சரு. சே-ள், ['புஜித்த அன்னமானது' என்றுதொடங்கி, 'தயிரினின்றும் சோமயாஜியே' என்று முடிந்த சுருதியினுல் மனம், வாக்கு, பிராணன், மாம்சம், இரத்தம், மச்சை இவைமுதலாகிய சரீரமானது ஜடமான பூதத்திரயங்களின் காரியமாதலாற் சடமாகும்; அதுசைதன்யகோசரமாகிய அகம்பிரத்தியயத்துக்கு விஷயமாகாதெனக் கூறப்பட்டிருக்கின்றது; அதனைச் சங்கிரகமாகக் கூறுகின்றார்.]

சசு. சே-ள், [பிரதிபாதித்த சுருதியின் பலிதார்த்தத்தைக் கூறுகின்றார்.] ஊனுதி+நாடொறுமே — யாதொருகாரணத்தால் தேகேந்திரியாதிகள் தேயு, அப்பு, அன்னங்களாகிய பூதகாரியமாதல்பற்றி வாக்குமாத்திரங்களாயும், அனுத்மப்பொருள்களாயும் இருக்கின்றன ஆதலால் அவற்றில் நான் என்னும் புத்தியை நீக்கிக் கூடஸ்தனுகிய சிதான்மாவில் அகம்புத்தியைச் செய்யத்தக்கது என்று பொருள்.

வேறு.

கடையப்படுதயிரிற்றிரணெய்போன்மனமுதலா
மிடையிற்செயுமியல்வேறிலையுளபூதமதிடையே
யடையத்திரளுருவிற்செலுமதிவிட்டறிவுருவா
மடையப்பிறிதிலமெய்ப்பொருளதுதானெனுமறிவீர். (௬௭)

வேறு.

அன்னத்தாளிறைவிலானுக்கறிவதோன்றுமையானு
முன்னகாரியமேபுத்தியாதனிச்சயமதாரு
லன்னத்தாலுண்டாமந்தப்புந்தியைத்தவிர்ந்துநாளு
முன்னுவானெங்குங்காணுமறிவுநானென்றெப்போதும். (௬அ)

வேறு.

தேகேந்திரியாதிகளாகுந்திரட்சியினைநானெனதென்றே
போகாநின்றபுத்தியினைவிட்டுத்தானுயிருந்துளதா

---

௬௭. செ-ள், தேஜோபன்ன விலக்ஷணங்களாகக் காணப்படுகிற தேகேந்திரியாதிகட்கு அவற்றின் காரியத்வம் எங்ஙனங்கூடும் எனச் சங்கித்துத் ததிவிலக்ஷணமான கிருதத்துக்குத் ததிகாரியத்வம்போற் கூடுமென்று திருஷ்டாந்தத்தோடுதெரிசிப்பித்த சுருதியின்பொருளைக் கூறுகின்றார்.] பூதமதிடையே=தேஜோபன்னங்களினின்றும்—மன முதலாம்=ஜாடராக்கினி ஜனிதமாயுள்ள பாகவிசேஷத்தால் தேகேந் திரியப்பிராண மனோரூப பரிணாமவிசேஷங்களாம்.—இடையிற்செயு மியல்வேறில்லை — [ததிகிருத திருஷ்டாந்தத்தால் தேகாதிகளுக்குப் பௌதிகத்வஞ் சித்தமானதால் முற்கூறிய தேகாதிகட்கு விலக்ஷணத்ம நிஷ்டை நிரபவாதகத்வசித்தமென்று கூறுகின்றார்.] அடையத் + தா னெனுமறிவீர்.—

௬அ. செள், [வாக்குப்பிராணன்களாகிய காரியங்கட்குப் பௌதி கத்வம் பலிக்கட்டும்: மனம் நித்தியமென்று வைசேஷிகர்கள் கூறுவத னல் அஃதெங்ஙனம்? பௌதிகமாகும் என்று சங்கித்த புத்திரனுக்குச் "சோடசகலை" என்றதுமுதல், "மனமன்னமயம்" என்றது ஈறாகிய சுருதிவாக்கியங்களின்படி சோடசதினபரியந்தம் அனசனத்தால்மனஞ் சுருங்கி அதனால் அப்பியாசித்த வேதங்கள் விளங்காமல் பின்பு அசன த்தால் அதன்விருத்தியுண்டாய் அவை விளங்கியதால் மனம் அன்ன மயம் என்றுபதேசித்த பிதாவின் தாற்பரியத்தைச் சங்கிரகித்து உபதே சிக்கிறார்,] புத்தி=மனம்—

யாகாதெல்லாமாகியிடுமெறிவாஞ்சித்திலியாதொருகா
லேகாவொன்றுயடங்கியிடுமெவன்றனியல்லையியம்பிடுவாம். (௬௯)

வே று.

இப்போதுசுகதுக்கங்களாதியாய்ச்சொல்லப்பட்டிங்
கெய்ப்பாயவிகாரமெல்லாமறியாதுதன்னைத்தானே
மெய்ப்பாடாயறியாநின்றோன்விளங்கவவ்விடத்தேகாணுந்
தப்பாதுதானாய்நின்றசுகத்தினைத்தடையொன்றின்றி. (௭0)

ஆதலாலறிவுள்ளோர்களழிந்திடுமுடலேயாதி
சேர்தருபுத்திதன்னைச்செலவிட்டுத்தெளியும்வண்ணந்
தீதிலாதெவையுங்காணுந்திகழ்தருசித்தின்கண்ணே
யேதிலாமதியைநாளெனன்றிடுமின்களிசைத்தெப்போதும். (௭௧)

அவதாரிகை.

[இவ்வாறு அத்துவிதீயப்பிரமம் ஒன்றேயுள்ளதென்று பிரதிஞ்ஞைசெய்து தேஜோபன்னமென்னும் பூதங்களும் அவைகளினின்றும் உற்பன்னமாகிய பௌதிகமான போக்கியவஸ்துவும், போகாயதனமான சரீரங்களும், போகோபகரணங்களாகிய இந்திரியங்களும் காரியங்களாதல்பற்றி வாக்குமாத்திரங்களாகிப் பிரதியோகிபேதமல்லாததனால் அத்துவைதப்பிரதிஜ்ஞாபங்கமில்லை என்று அத்தியாயத்தின் பூர்வபாகம் உரைசெய்யப்பட்டது; அங்ஙனமாயினும் புஜிக்கின்ற ஆன்மாக்கள் நித்தியர்களாதலால் அந்தப் பிரதியோகிபேதத்தால் அத்துவைதப் பிரதிஜ்ஞாபங்கம் வருமென்ற சங்கையை நிராகரிப்பதற்கு உத்தரபாகமானது "உத்தாலகோஹாருணி" என்றதுமுதலான சுருதிகளாற் போக்கியவஸ்துப்போற் புசிக்கின்ற ஆன்மா கற்பிதனன்று பரமார்த்தனேதான் ஆயினும் அந்தப் பிரதியோகி பேதத்தால் அத்துவைதப் பிரதிஜ்ஞாபங்கம்நேரிடாது: அவன் பிரமசொரூபமானதுபற்றிப் பேதமில்லாததனால் என்று கூறப்பட்டது; அஃதெங்ஙனமெனின் "இவ்வணுசூட்சுமன், இவன்மயமே இவ்வனைத்தும், அஃது சத்தியம், அவனே ஆன்மா, அது நீயாகின்றாய் சுவேதகேது" என்பனவாம்; அவற்றின் பொருளைத் தெளியக்கூறி வற்புறுத்துகின்றார்.]

காண்பவன்றனேயாருங்காண்பவையென்றயாவுங்
காண்பவன்றன்னில்வேறென்றின்மையிற்றனையேகாணும்
பூண்பதொன்றின்றிநின்றபூரணமதுநீயென்ற
மாண்டவர்த்தைக்குமுள்ளபொருளிதுமற்றென்றில்லை. (௭௨)

வேறு.

நீயென்கின்றவார்த்தைக்குப்பொருளாயென்றுநிற்பதுவே
நானென்கின்றவாசகத்தின்பொருளாய்நின்றுநாடுவது
நானென்கின்றவாசகத்தின்பொருளாய்நாடிநிற்பதுவே
நீயென்கின்றவாசகத்தினிற்கும்பொருளுநிலைபெறவே. (௫௩)

வேறு.

சொல்லியவிரண்டினுஞ்சுட்டிடப்பட்டுமேலா
மெல்லையில்பொருள்களானதியாவுக்குமுன்னேதோன்றி
நல்லதோரறிவாயுள்ளதியாதொன்றதென்னும்வார்த்தைக்
கெல்லையாம்பொருளுந்தானேயெனுமிடம்பார்க்கவேண்டா. (௫௪)

---

௫௩. செ-ள், [துவம்சப்தம் பராக்கர்த்தவாசகமாயும், அகம்சப்தம் பிரத்யக்கர்த்தவாசகமாயும் பரஸ்பரம் ஹ்ருசுவ, தீர்க்கசப்தங்கள் போல விருத்தார்த்தங்கள். "அகம்பிரமாஸ்மி" என்று பிரத்தியக்கான்மாவிற்குப் பிரமத்வம் மற்றொரு சுருதியிற் கூறியிருக்க ஈண்டு "தத்துவமசி" என்று பராக்வஸ்துவிற்குப் பிரமத்வம் எங்ஙனம்? கூறக்கூடும் என்று சங்கித்துச் சொல்லுகிறார்.] தேவதத்த னொருவனே புத்திரனாற் பிதா எ-ம், பிதாவினாற் புத்திரன் எ-ம் சொல்லப்படுகிறான். தகப்பன், புத்திரன் என்றசப்தங்களாற் சொல்லப்படும் தேவதத்தனது சொரூபம் பேதமாகாது புத்திராதி வியவகாரபேதமானது வக்திருபேதநிபந்தனமேயன்றி வக்தவ்யபேதநிபந்தனமில்லாததுபோல ஜீவனுக்குப் பிரமதாதான்மியந்தானாகவனுபவிக்கும் அவஸ்தையில் அகம்பிரமாஸ்மி எனப்பட்டது. அந்த ஜீவபரவைக்கியமே அன்னியன்பொருட்டுப் போதிப்பதாகித் தத்துவமஸி என்னப்பட்டது. ஆகையால் வாக்கியத்துவயங்கட்குச் சமானார்த்தத்தால் விரோதமில்லை என்று பொருள்.

௫௪ செ-ள், [இந்தப்பிரகாரம் தத்துவமஸி, அகம்பிரமாஸ்மி என்பவை பரஸ்பரம் விரோதமுடைத்தாகாதேனும் த்வம், அகம்சப்தங்களினால் அஞ்ஞனாய், சம்சாரியாயுள்ள ஜீவன்பிரதிபாதிக்கப்படுகிறான்: பிரமபதத்தால் அசம்சாரியாய், சர்வஞ்ஞனாயுள்ள ஈசுவரன் பிரதிபாதிக்கப்படுகிறான் அந்தஜீவனுக்கு ஈசுவரனோடு எங்ஙன்? தாதான்மியங்கூடும் என்னுஞ் சங்கைக்குச் சொல்லுகிறார்.] எல்லையாம்பொருள்=முடிவான லக்ஷியார்த்தம்—விசேஷார்த்தம்; = சத்தியஞானானந்தான்மகமென்று பிரதிபாதிக்கப்பட்ட அகண்டமாயும், அத்துவிதீயமாயும், ஏகமாயும், ஆதியந்தமில்லாததாயும் உள்ளதே பரமார்த்த சொரூபமா

வேறு.

உடம்பாதிகளில்வேறாகிநீனோனென்னுமுறையாலே
திடம்பாடாகச்சொலுமிந்தச்சித்தாயுள்ளபொருளினையே

கும்: முக்குணங்களுடைய அனாதிபிரகிருதிதத்வம் தத்துவஞானத்தால் நீங்குவதனால் அந்தமுள்ளதாய், மித்தையாய், கற்பிதமாதலால் வஸ்துத்வமில்லாததாகும்; அஃதிரண்டு பிரிவுடையதாகும்; அவற்றுள், இராஜ தமகுணங்களில்லாத சுத்தசத்துவமாத்திரவோர்பாகம் மாயை எ—ம், அவ்விருகுணங்களால் அபிமானிக்கப்பட்ட மலினசத்துவமற்றோர் பாகம் அவித்தை எ-ம் கூறப்படும்; அவற்றுள், மாயாசத்துவாம்சத்திற் பிரதிபிம்பித்த பரமான்மா அம்மாயையைத் தன்வசஞ்செய்த சர்வஞ்ஞ, சர்வேசன் எ - ம், அவித்தியாமலினசத்துவாம்சத்திற் பிரதிபிம்பித்த அவ்வீசனே அவ்வவித்தையால் வசீகரிக்கப்பட்டு அசுவதந்திரன், போக்தா, சம்சாரியான ஜீவன் எ-ம் சொல்லப்படுவான். அந்தப்பரமான்மாவே தமப்பிர்தானப் பிரகிருதி உபாதிகளாய்ப் பூதபௌதிகப்பிரபஞ்சவிலக்கணமுடைய போக்கியரூபமாக விருக்கின்றான். தமப்பிரதானப் பிரகிருதி உபாதிகளானதுபற்றி ஜகத்திற்கு உபாதானமாகவும், விசுத்தசத்துவப்பிரகிருதி யுபாதியால் நிமித்தகாரணமாகவும் அபின்னநிமித்தோபாதானமாதலால், சுருதியிற் சன்மாத்திரமாகவே இச்சகம் சிருஷ்டிக்கு முன்னிருந்ததென்றதில் 'அது பார்த்தது' என்ற வாக்கியத்தால், நிமித்தத்தன்மையும், 'பலவாகப்பவிப்போம்' என்றதால், காரியரூபமாக விவர்த்திப்பதுபற்றி உபாதானத்தன்மையும் பிரசித்தம்; அஃதிங்குப் பிரகிருதமாதலால், 'அது நீயாகின்றாய்' என்றவாக்கியத்தில் பிரகிருதத்தை ஆலோசியாநின்ற அஃதென்னுஞ் சத்தத்தால் ஈசுவரன் கூறப்படுகின்றனன். அவித்தியோபாதியுடைய சகல ஜீவர்களும் முன்னிலையான சுவேதகேதுவைநிமித்தீகரித்து உத்தாலகனென்னும் பிதாவினால் நீயென்னும் சத்தத்தாற் கூறப்படுகின்றார்கள்: அது நீ என்ற சத்தங்களின் வாச்சியப்பொருள்களாகிய மாயா, அவித்தியோபாதிகளுடைய சைதன்யங்களுக்கு மிகவும் ஒன்றுக்கொன்று விலக்ஷணமுண்டாதல் பற்றித் தாதான்மியவிரோதமாதலால் அது நீயென்ற சத்தங்களால் மாயை, அவித்தை, அவைகளின் விபாகங்களைநீக்கி இரண்டிடத்தும் இடைவிடாமல் ஏகமாயிருக்கின்ற சைதன்யத்தைமாத்திரம் இலக்ஷிப்பிக்கப்படுகின்றது; ஆதலால் பரஸ்பரவிரோதங்களாயுள்ள வாச்சியார்த்தங்களைப்பற்றி விசாரம் வேண்டாம் என்பது.

ருரு. செ-ள், [சிதம்சத்தில் தாதான்மியவிரோதமில்லாவிடினும் த்வம், அகம்சப்தவாச்சியத்திற்குத் தத்பதவாச்சியார்த்தத்தோடு தாதான்

யடங்காததுவென்றிடும்வார்த்தையிதினின்றுண்டாய்த்தெனச்சுருதி
தொடர்ந்தேதத்தொமசியென்றேசொல்லுகின்றதெனவுரைத்தான். ()

வேறு.

தற்பதப்பொருளாயுள்ளவறிவோடேகூடுதற்கு
நிற்பதொன்றிலையாய்ச்சொல்லப்பட்டகாயாதிவிட்டு
மெய்ப்படத்துரியத்தோடேயுடனுகிவேறிலாத
சிற்பொருடனையேதத்தொமசியெனச்செப்புமன்றே. (ருசு)

வேறு.

அதுவென்றுரைசெய்பொருளாமதிலு நீயென்றுரைசெய்பொருளாமிதிலு, மதிபண்ணிடவேறதுவாகியிடு மறிவாதிகள்காரணமன்றியிலே, யெதுமொன்றுமிலாதவையாவையுமா மிவையென்றிடுகேவல சித்தினையே, யதுநீயெனும்வாய்மொழியாமதனு லறியும்படிசொன்னதிவ்வாரணமே. (ருஎ)

வேறு.

தத்துவமென்றவார்த்தையிரண்டுக்கும்பொருளதாகிச்
சித்துமெய்யாகிநின்றதிகழ்பரமொன்றாந்தன்மை
தற்பரந்தன்னிலேசித்திக்குமென்பதேயிங்
கப்படிவாக்கியத்தினருத்தமேயாகுமன்றே. (ருஅ)

---

மிய விரோதமுளதென்னில்? அது சத்தியமாயினும் இந்த ஸ்தலத்தில் அவ்விதவாச்சியார்த்தங்கட்கு ஏகத்வஞ்சொல்லப்படவில்லை என்று சொல்லுகிறார்.] உடம்பா+வுரைத்தான்—சம்சாரித்வத்திற்குச் சர்வஞ்ஞான் மகத்வம் சுருதிகூறவில்லை என்றுபொருள்.

ருசு. செ-ள், [துவம் சப்தத்தாற் சம்சாரித்வமுதலியவை கூறுத தற்குக் காரணங்கூறுகின்றார்.] தற்பத+மசியெனச்செப்பும்—சமான மாகக் கூறப்பட்ட பதாந்தரங்கட்குச் சமானுதிகரணத்தில் விரோதமே கூருததற்குக்காரணம் என்றுபொருள்.

ருஎ. செ-ள், [த்வம், அகம்சப்தார்த்தத்திற் கூறப்பட்ட பொருளைத் தத் என்னும் சப்தார்த்தத்திலும் இயையக் கூறுகின்றார்.]

ருஅ. செ-ள், [இங்ஙனம் தத்துவம் பதார்த்தங்களினது விருத்தாம்சங்களைப் பரிகரிக்குங்கால் வாக்கியார்த்தம் சம்பவிப்பதைத்தெரிசிப்பிக்கிறார்.] சொல்லப்பட்ட ரீதியால் தத்துவம் சப்தங்களால் சகல வுபாதிகளுமற்ற சின்மாத்திரமான யாதொரு லக்ஷணமுண்டோ அதுவே பரமாத்மா: விஞ்ஞானமானந்தம் பிரமம் என்னும் சுருதியால் அந்தப்பரமாத்மாவிற்குந் திரிவித பரிச்சேதராகித்தியத்தால் யாதொரு சுபாவீக ஏகத்துவமாகிற அபேதமானதுண்டோ அது இதில் தத்வமஸி மகாவாக்கியத்தால் பிரதிபாதிக்கப்படுகிறதேயன்றி ஜீவப்பிரமங்கட்குள்ளே ஒன்றொடு மற்றொன்றிற்குப் பூர்வசித்தமாயிருக்கிற ஏகத்வம் போதிக்கப்படவில்லை என்றுபொருள்.

இப்படியன்றிவேறாயிருந்துளபொருடானியாதொன்
றப்பொருள்வாக்கியத்தினருத்தமன்றாகுமொன்றா
மெய்ப்படுபொருளின்ஞானமுளதாகாவாக்கியத்தாற்
செப்பிடும்வார்த்தைதன்னினறிவின்மைசிதைத்தல்செய்யும். ()

வேறு.

அறியாமையினையழிவித்துக்கொண்டேயிந்தவாக்கியந்தான்
பிறியாதொன்றாமறிவினையுண்டாக்காதென்றுபேசுங்காற்
செறிவாயுண்மையுருவாகுஞ்சித்தினொளியைத்தவிர்த்துண்டா
மறியாமையதொன்றெனவில்லையாகுமுண்மையறியுங்கால். (சுO)

---

ருகூ. சே-ன், [பரமான்மாவினும் பின்னனாயும், சம்சாரியாயுமிருக்கிற ஜீவனுக்கு ரசசம்பந்தவசத்தாற் செம்பிற்குச் சுவர்ணத்தன்மை வருவதுபோல ஈசுவரானுக்கிரகவசத்தால் தாதான்மியஞ் சம்பவிக்கிறதனால் அப்படிப்பட்ட அந்தப் பரதத்வம் என் வாக்கியத்திற்கு இல்லை என்று சங்கித்துக் கூறுகின்றார்.] இப்படி+மன்றாகும். சுபாவமான ஏகத்வலட்சணத்தினால் வேறுபிரகாரத்தால் ஜீவப்பிரமங்களுக்குச் சம்சர்க்கரூபமாயாவது, விசிஷ்டைக்கியரூபமாயாவது வாக்கியார்த்தம் சம்பவியாது: உள்ளபடி பின்னங்களாயிருக்கிற அந்த ஜீவப்பிரமங்களுடைய அன்யோன்யாபாவத்திற்கு ஆதியந்தமில்லாதிருத்தலால் அந்த அர்த்தம் யுக்தமாகாதென்று பொருள். [சொப்பிரகாசபிரமத்தினுடையசொரூபபூதமான ஏகத்வமும் அவ்விதமென்று வாக்கியத்தாற் போதிக்கப்படுமாகில் அதற்குச் சொப்பிரகாசத்வபங்கம் வருமென்று சங்கித்துச் சொல்லுகிறார்.] ஒன்றா+முளதாகா — [வாக்கியமானது ஏகத்வவிஷயமான ஞானத்தை யுண்டுபண்ணுதென்றால் அப்போததற்கு நிஷ்பிரயோஜனத்வமுண்டாமென்று சங்கித்துச் சொல்லுகிறார்.] வாக்கியத்தாற் + செய்யும் — வாக்கியமானதுதன்னாலுண்டான வித்தையினாலேயே சொல்லப்பட்ட பிரமான்மைக்கிய விஷயமான மனோவிருத்தியால் அந்த அஞ்ஞானத்தைப் பாதிக்கின்றது; ஆதலால் வாக்கியத்திற்கு நிஷ்பிரயோஜனத்வம் இல்லையென்று பொருள்.

சுO. சே-ன். [ஏகத்வஞானத்தில் வாக்கியவியாபாரமில்லையென்றால் பிரமாணத்திற்கு விஷயமாகாததால் அதற்கு நரவிஷாணம் போல அசத்தியத்வமாகும் என்று சங்கித்துச் சொல்லுகிறார்.]

நோக்குமிடத்துவாக்கியத்தானுண்ணிதாயபரத்தொளியை
நீக்கிநிற்குமறியாமையென்பதில்லையாதலினு
லாக்கமில்லாவறிவின்மையழிப்பதென்றுங்கூடாது
தாக்கதின்றியொன்றுதறன்றேற்கூடுந்தன்மையதே. (சுக)

பிரமாணங்களாயவைதான்பேதமில்லாதொருபொருளைத்
திரமாயிதுவென்றிடமாட்டாசெல்லாதாமங்காதலினு
லுமைமாத்திரமாயாவையினுமுளவஞ்ஞானமதுதானும்
பரமாமொளியேயாகியிடும்பார்க்கிலுண்மைப்பரிசிதுவே. (சுஉ)

வேறு.

அறியாமையென்றுவேருமதுதானுமறிவினுண்மை
பிறியாதுநுண்மைகாணுமளவினிலுளதுசத்தே
யறியாமைசத்தசத்தேயாகியவிரண்டின்மேலா
மறிவானதோன்றருனுமறிவினதொளியேயாமால். (சுஙூ)

தோன்றுகூட்டரவினுலேதோன்றிடும்பொருள்கட்கெல்லா
மூன்றிடுமுண்மையுண்டேலதுவுள்ளபரமேயாகுந்
தோன்றுவதுளதுபாராதொழிதல்வேறுண்மையென்னிற்
ருேன்றியவுருவுமுண்டாய்த்தோன்றலாற்பரமேயன்றே. (சுச)

உருவமாயொளிர்வதுள்ளபிரமமேவேருென்றில்லை
யுருவமாயுண்மையின்மையாதலில்வேறினுக்கு
முருவமுண்டென்றுசொல்லப்பார்த்திடில்வேருென்ருய
வுருவத்தாற்ருேன்றுரூபமுண்மையிற்பரமேயாகும். (சுரு)

அன்னியத்தினுக்குச்சொன்னவுருவுவேறுருவினுலா
மென்னிலப்பரந்தானன்ருமெனுமுருவந்தான்ருனே
யுன்னியபாத்திரேணுடுபின்னமோவபின்னமாயோ
சொன்னவவ்விரண்டுங்கூடியுள்ளதோசொல்லுமென்ருன். (சுசு)

பின்னமென்றுரைக்கிலந்தவுருவுவேருகையாலே
சொன்னவவ்வுருவேயாகுந்தற்பதஞ்சொல்லுங்காலை
பின்னமன்றென்னிற்ருனேயாயிடும்பின்னுபின்ன
மென்னின்முன்சொன்னகுற்றமிரண்டும்வந்திசையுமென்க. (சுஎ)

பாராதபடியினுலேபாத்தினில்வேறதாக
நேராயொன்ருகித்தோன்றுநெறிசொலவார்த்தையேயா
மோரரியோர்பயனுமில்லஞ்ஞானமுமெக்காலத்தும்
போராதுவிளங்குகின்றபிரமமேபிறிதொன்றில்லை. (சுஅ)

எல்லாமஞ்ஞானத்தாலேதோன்றிடுமென்றருனு
மில்லாதோவென்னில்வேறுவறிவின்மையிலாமையாலே
யில்லாதஞ்ஞானஞ்ஞானகாரியமிரண்டுமூன
மில்லாதபிரமந்தானேயெனுமிதென்னறிவேயென்றான். (சுகூ)

இப்படியெல்லாமாகியிருந்ததேபரமேயென்ன
மெய்ப்படியேயாயுள்ளசுருதிதான்விளங்கச்சொன்ன
வப்பொருடற்பாவத்தாலாவதேதயென்றுகொண்டு
செப்பிடுஞ்சுரர்கட்கெல்லாந்திகழொளிமலரின்மேலோன். (எ0)

கேட்பவனுடையசித்தம்பரிபாகமிலாதேகொண்டு
மீட்சியாய்வசமதின்றிவேதமோரிடத்திலோர்காற்
காட்சியதுள்ளகாலபரத்தினையொழிந்துவேறு
மாட்சியிலொன்றுண்டாகவருத்துரைசெய்ததன்றே. (எக)

வேறு.

இத்தாலித்தைச்சாதிப்பதென்றதீர்த்தமாடென்ற
லொத்தொவ்வாதுவேறுபடத்தோன்றுமுலகமென்றுரைத்தல்
வைத்தேதபாவபுண்ணியமும்வன்னாச்சிரமங்களுமிவற்றோ
டொத்தேநின்றோர்சரிதைகளுமுரைக்கும்வேறுமுள்ளனவும். (எஉ)

வேறு.

சுகமொடுதுக்கம்பூதம்பௌதிகமிதுவேயென்றல்
சகமுடைத்தாயசத்தம்வேறினின்றகைமைதானு
மகமறிவென்றுநின்றவறிவினில்வேறியாவுந்
தகவுளவுண்மையென்றேசாற்றிடுந்தன்மைதானும். (எந)

வேறு.

எல்லாம்பொய்யேயென்பதுவுமாயைக்குண்மையியம்புவது
மில்லாமாயையிதனுலேயியலும்பந்தம்வீடுகளு
மெல்லாமாகுங்குரு * மதமுமிவனையடைவோன்றன்மதமுஞ்]
சொல்லாரளப்பில்லாவிச்சையிருக்கும்படிசொல்லுகைதானும். (எச)

ஓதுகின்றநூல்பலவுமுரைக்குந்தர்க்கமுள்ளனவும்
பேதித்துளதாமிகவுமெனப்பேணிச்சுருங்கச்சொல்லுகையு
மேதமின்றியித்தனையும்பரத்தில்வேறென்றியம்புவது
நீதியாகுமுளவெவையுநின்றேநிகழ்த்துமாமறைதான். (எரு)

* மதம் = அபிப்பிராயம்.

பரமாயுள்ளமறைதானேபாகமாஞேரறிவுக்குத்
தரமாயடையும்பரிசாகச்சாற்றியவர்கட்கிதமாகத்
திரமாயுள்ளமழுங்கேயுஞ்சிறிதேயெல்லா * விரதம்போ
லுரமாய்த்தாமிப்படியென்றேயுபதேசித்ததுண்மையினல். (எசு)

சாதனமாகுஞ்சதுட்டையங்கள்சமைந்தவத்தன்மையோர்க்கு
நீதியாகவருமறைதானின்றேயிவர்களறியும்வணம்
பூதமாயும்புவனங்கள்பிறவுமாகியிருந்ததுவு
மேதமில்லாதொன்ருயபரமேயென்றேயியம்பினதால். (எஎ)

வேறு.

சகமொடுசீவனீசன்சார்ந்துளவிகாரமின்றிச்
சுகமுடைச்சத்தாய்ச்சித்தாய்த்துகளின்றிநுண்ணிதாகி
யகமெனுமுனைகட்குள்ளாயறிவரிதாகியொன்ருந்
தகவுடைப்பரமந்தன்னிஞெருமையைமறைகள்சாற்றும். (எஅ)

வேறு.

ஈசன்சகமோடுளசீவனதாமியாவும்பாரூபமதென்றுகொடே
நேசம்மதனுள்ளதாகியதன்னிறையும்மறிவானதியாததுதான்
மாசொன்றதிலாதபரம்பொருளும்மயலொன்றறியாதவபேதமது
மேதம்மொழிவேதனமாவதுவுமென்றம்மலரோனுமியம்பினல். ()

இத்தன்மையொழிந்துள்தாமறிவேயாதொன்றறியாமையையெய்திய
மெய்த்தன்மையதாயறிபோததினும்வேருயறிகின்றவிடந்தனிலு [தே
மத்தன்மையில்வேறுபடாததிலோரையமிலையாச்சறநின்றதுதான்
சித்தொன்றியுறிந்திடுமெவ்வறிவேசேர்தற்கரிதாயிடுமெங்கணுமே. (அ0)

வேறு.

எப்படிப்பொருள்களெல்லாமிதுவிதுவென்றேயென்றுஞ்
செப்பிடவுண்மையாகத்திகழ்தருவேறுபாட்டா
லப்படிச்சிவனேயந்தப்பொருள்களினுண்மையாகி
மெய்ப்படவிளங்குகின்றன்வேறெருபொருளன்றுமால். (அக)

யாதொருபடியிற்போதம்பொருடோறும்விளங்குமன்னேர்
தீதிலாச்சிவன்றன்சத்தியாயதேபிறிதொன்றன்று
லேதமில்சத்தியின்னேயிசைந்திடவறிதலேயாம்
போதமுமிறந்துதோன்றும்பொருளொன்ருயறியும்வண்ணம். (அஉ)

---

* இரதம் = மதுரம் அல்லது ஆனந்தம்.

யாதொருபடியினுலேயாவையுந்தோன் றுமத்தை
யோதியபரமேயாகவுண்மையாயறிந்தானியாவ
னேதமிலீசன் றன்னேயியல்பினுலெளிதாம்வண்ணம்
பூதனுமவனேமிக்கபூசனேசெய்யாநின்ருன். (அங)

எப்படிப்பூதநாணுவுருவமாயிலங்குந்தன்னு
ளப்படியறிவேயாகவனுபவித்திடுதலேயாஞ்
செப்பிடலரிதாயுள்ளதிகழொளியாகுந்தன்னே
மெய்ப்படவேறென் றின் றிவிளேந்திடும்பூசைதானே. (அச)

போதமதாகித்தோன் றும்பொருளெலாஞ்சிவனேயாக
வேதமிலறிவாற்காண்பானெவனவனுண்மைகண்டான்
றீதிலாச்சிவனன்றென் றுசிறிதொன்றைச்சிந்தைசெய்வோன்
பேதமாமருளின்மேயபித்தனென் றறியலாவான். (அரு)

சிவனிதுவன்றேயென் றுசிறிதொன்றைச்சிந்தைசெய்யு
மவனறிவுடையோர்தம்பாலதமனென் றறியப்பட்டா
னுவமையொன் றில்லாவீசன் றனேயிகழ்ந்தொழுகுவானும்
வமதிலென் றுமேவும்பசுவெனப்படுகின்ருனும். (அசு)

வேறு.

எல்லாமுஞ்சிவரூபமாகித்தோன் றுமியாவனுக்குத்தன்னுடைத்தாயவனேமிக்க, சொல்லானுமளப்பரியானவன் றனிச்சைசுருதியினுற்றுணிந்துரைத்தசரிதைதானும், பல்லோருமவனேயருச்சனேசெய்தேத்தப்பாரூபந்தனக்கேகநற்பூசையாகு, நில்லாதவவிச்சையினேநீங்கியுள்ளநிர்க்குணனுமிவனுகுநினேயுங்காலே. (அஎ)

வேறு.

எப்பொருள்களுந்தாணுகியிலங்கிடுமறிவாமீச
னப்படிவிளங்குகின் றதறிதலேயவன் றனக்கு
மெய்ப்படுபூசைவேருேர்செயலினுலன் றுமெய்யே
யிப்படிஞானந்தன்னுலிறைஞ்சிடப்படுவானீசன். (அஅ)

வேறு.

சுகரூபமாயவதில்வேறிலாதுவிளேயாடுதெய்வமதுதான்
சுசுரூபமாயதனேயேபகுத்துவிளேயாடியுண்டலதனே
யகமாயையின் றியறிகின் றபோதமுளதாகிநிற்குமதுவே
தகநாளுமோதுமறிவாவதென் றுசதுராநனன்சொறருமால். (அக)

வேறு.

ஆனதாகாத்தெய்வமதேயடையும்விடயமிந்தியமாய்த்
தானுமாகித்தனைத்தன்றூற்றானே நுகருந்தன்மையது
ஆனமாகுஞாதாதியொழிந்தேயுள்ளவறிவதனற்
றானேயாகக்கண்டிடுதல்சத்தாயுள்ளபூசையதே. (௬௦)

வேறு.

பிறப்பிறப்பாயதுக்கம்பிறித்திடலுளதாயென்று
மிறப்பிலாவீசன்செய்யுமருளினலிசைவதாகி
மறப்புடைப்பாவகத்தின்வரும்பொருளன்றாய்மேலா
யிறப்பதாம்பேதமோர்காலியைந்திடாப்பொருளிதன்றே. (௬௧)

ஆதித்தனொளியையந்தனறிந்துகண்டிடாமைபோல
நீதிக்கணறியுநாட்டமவிச்சையான்மறைந்துளோர்க்கு
மேதக்கட்கிசையாதெங்குமியாவையுமாகிநின்ற
சோதிக்கண்ணொளியுமாங்கேதோன்றிடாதாகுமன்றே. (௬௨)

ஈசன்றனருளினலுமிசைந்தவாதாத்தினலு
மாசுதீர்நிலையினலுமருள்பவன்பார்வையாலும்
பேசிடும்பாவகன்மபுண்ணியமிரண்டுமொத்தாற்
பாசமாம்படலம்போக்கும்பரம்பொருடிகழுமன்றே. (௬௩)

சுத்தமாயென்றுமுள்ளசுருதிதானருளினலே
யித்தன்மைத்தாகுஞானமென்றுகொண்டிசையும்வண்ணம்

---

௬௪. செ-ள், சுத்தமா+வாறுணைத்தது;கருத்து;—பிரமான்ம ஏகத்வலட்சணமுடைய வாக்கியப்பொருள் அடிக்கடி உபந்நியாசஞ் செய்யப்படினும் இவ்வாக்கியப்பொருளையே திரும்பவும் அன்னைபோல் இதத்தைச் செய்கின்றதாகிய குற்றமில்லாத சாந்தோக்கியச் சுருதியானது சம்சாரலட்சணமான மகத்தான ஆயாசத்தையடைந்து துன்புறுகின்ற மநுஷர்களுக்கு அநேகவிதங்களால்வருஞ் சங்கைகளை நிராகரித்து அடிக்கடி யுபதேசிக்கின்றது; அஃதெங்ஙனமெனில்? சுழுத்தி, உத்கிராந்திமுதலிய அவஸ்தைகளில் எந்தரூபத்தை ஜீவனடைகின்றானே அச்சொரூபமான பிரமம் நீ ஆகின்றாய் என்று பிதாவினலுபதேசிக்கப்பட்டசுவேதகேதுசங்கிக்கின்றான்—சுழுத்தியிற்சத்தையடைந்தவர்களான பிரஜைகள் அந்தப் பிரமான்மத்தன்மையை ஏனறியவில்லையென? வண்டுகளால் மதுவாகச் சேர்க்கப்பட்ட நாநாவிருட்சபுஷ்பரசசமுதாயம்போல் பிரித்திடக்கூடாமையால் சுழுத்திமுதலிய

பத்தாயுள்ளார்க்கேயப்பலபடியாகப்பல்கா
னுய்த்துநோய்கழியும்வண்ணமுள்ளவாறுரைத்ததன்றே. (கூ௯)

---

வற்றில் அடையப்பட்டிருந்திடினும் பிரமமறியப்படவில்லை என்று அச்சங்கையை நிராகரித்து முற்கூறிய பொருளையே திரும்பவும் உபதேசித்திட — சுழுத்திமுதலியவற்றிற் கரணங்க ளின்மையினுல் அறியப்படவில்லை : எழுந்தபின் பிரமத்தினின்றும் நான் எழுந் திருந்தேனென்று ஏன் அறிகின்ருரில்லை என்ருசங்கிக்க? மேகங் களாற் சமுத்திரத்தினின்றும் உண்டுபெய்யவருவனவாயும், திரும்பவும் சமுத்திரத்தையடைவனவாயுமுள்ள நதிகள் சுவையின் வேறுபாட்டால் சமுத்திரத்தினின்றும் வந்தன எ-ம், சமுத்திரத்தின் ஜலம் எ-ம் அறி யப்படாதனபோற் பிரமத்தினின்று மெழுந்திருந்த சம்சாரிகளுக்குப் பிரமவிலக்ஷணத்தன்மையிருப்பதனுல் நாம் பிரமரூபமாக இருந்தெழுந் திருந்தோமென்றுஞானம்வரவில்லைஎன்றதனைப்பரிகரித்துமுற்கூறிய வாக்கியமே உபதேசிக்கப்பட்டது.—சுழுத்தியிற் கரணங்களில்லாதிரு க்குமளவிற் சமுத்திரத்தினலைமுதலியனபோற் சீவனழிவானென்று சங்கிக்க? மரமானது பரசுமுதலியவைகளாற்சேதிக்கப்படினும் இரதம் பெருகுவதுபற்றி ஜீவனேடுங்கூடியதெனக்கொள்வதுபோற் சுழுத்தி யடைந்ததேகத்திலு மிரத்தங்காண்பதனுற் சீவனழியவில்லையென்ற தைப்பரிகரித்து முற்கூறியபொருளே ஸ்தாபிக்கப்பட,— நுட்பமாய பிரமத்தினின்றுந் தூலசகத்தினுற்பத்தி எப்படிக்கூடுமென? சூக்கும மான ஆலம்வித்தினின்றும் அம்மரத்தினுற்பத்திபோற் கூடுமென்று அதனை நிராகரித்துபதேசிக்க,—ஜகத்தின் மூலகாரணமான பிரமம் எத னுற் காணப்படவில்லையென? நீரிலிருக்குமுப்பின் கனம் பார்வை, பரிச மிவைகளா லறியப்படாவிடினும் ரசனையாலுப்பினிருக்கை நிச் சயப்படுவதுபோற் கண்முதலியவற்றிற்குத் திரிசியப்படாவிடினுங் காரியலிங்கத்தினு லிருக்கின்றதென்றுகூற,— பிரமசாக்ஷாத்காரத்தில் எதுஉபாயமென்று சங்கித்துக் காந்தாரதேசத்தினின்றுங் காட்டிற்றிரு டர்களாற் கண்ணைக்கட்டிவிடப்பட்ட புருஷனுக்கு நேத்திரபந்தத்தை நீக்கிக் காந்தாரதேசத்தையடையச்செய்யு முபதேசம்போல ஆசாரியர் செய்யப்பட்டவுபதேசத்தாற் பிரமசாக்ஷாத்காரம், அவித்தியாநிவிர்த்தி இரண்டு முண்டாகுமென்று கூறப்பட்டது.—அந்த வித்துவான் எவ் விதமாய்ப் பிரமத்தையடைகின்ருனென்னில்? மனமுதலியன லயித் திடுங்கால் ஞானதீபத்தாற் பிரகாசிக்கப்பட்ட பிரமத்தையே அடை கின்ருனன்றி அர்ச்சிராதிமார்க்கங்களையபேக்ஷிக்கவில்லை, அந்தவித்து வான் வேறொரு தேகத்தையுங் கிரகிக்கின்ருனில்லை. இறப்பவனும்,

சிவனேயுள்ளான்பிறிதில்லையென்றுதிரமாயறிவதுவே
பவமேயொழிக்கும்பரமார்த்தம்பகருநெறிதானதுவாகு
மவமேயிதனையொழிந்துளதாமவைதானிதனையடைதற்குத்
தவமேமுதலாஞ்சரிதைகளைச்சாற்றுகின்றதன்மையவே. (௬௫)

வேறு.

ஆதாரமுடையீர்கேண்மினருமறைபொருளீதென்றே
யோதலாலுவமையில்லாப்பொருளிதிலையமுண்டேற்
றீதறமழுவைக்காய்ச்சிச்செங்கையினிடுவேனென்று
ஞாதனுயுலகமெல்லாம்படைக்குநான்முகனுயுள்ளோன். (௬௬)

பத்தராயுள்ளீர்கேண்மின்பகர்ந்தவேதத்தினர்த்த
மித்தகைத்தாகும்வேறொன்றில்லையாமிதனிலுங்கள்
சித்தநம்புதலுண்டாகச்செப்பினேமானைமூன்றே
டத்தனூர்பாதந்தொட்டேயென்றனனலரின்மேலோன். (௬௭)

அன்பராயுள்ளீர்கேண்மினறிவித்தபொருண்மெய்யன்றே
லென்சிரமிற்றுவீழ்வதென்றனனிதுவுமன்றி
யின்பமேயளிக்குமீசனிவ்விடந்தன்னின்வந்து
தன்பெருங்கருணையாலுந்தளர்வறப்பண்ணுகின்றான். (௬௮)

---

மோக்ஷமடைபவனும் பிரமத்தையடைபவர்களென்னில் வித்துவானும் அவித்துவானைப்போலேன் ஜனிக்கமாட்டானென்று சங்கிக்க? திருடினவன், திருடாதவன் இருவர்களும் மழுவேந்திச் சத்தியஞ்செய்யுங்கால் இருவர்கையினும் மழுவின் சம்பந்தஞ் சமானமாயிருந்திடினும் திருடாதவன் தகிக்கப்படான், திருடினவன் தகிக்கப்படுகின்றான் இவ்வாறு வித்துவானுக்கும், அவித்துவானுக்கும் அந்தியகாலஞ் சமானமாக விருந்திடினுஞ் சத்தியப்பிரமத்தில் அபிப்பிராயமுடையவன் திரும்பவும் தேகத்தையடையமாட்டான், பொய்யான தேகமுதலியவற்றிலகம்புத்தியுடையவன் திரும்பவுஞ் சரீரத்தையடைகின்றான் என இந்தப்பிரகாரம் ஒன்பது பரியாயங்களால் அச்சங்கையை நிராகரித்து "அது நீயாகின்றாய்" என்றவாக்கியத்தால் முற்கூறிய பிரமான்மைக்கியமானது சுருதியினால் நிலைசெய்யப்பட்டதெனவாம்.

இவ்வணமுனாத்துப்பின்னையாவர்க்குமன்பாயுள்ளோன்
செய்வணமொழிந்தேயீசன்றிருவடிசிந்தைசெய்து
மெய்வணமிழந்துதாழ்ந்துபணிந்துமெய்ப்பத்தியாலே
யவ்வணமாகித்தன்னையழிந்தனனயனுமையன். (கககூ)

அப்பொழுதளவிலாதவருளுருவாயவீசன்
செப்பிடூழுவோத்துந்திருவுருவுடையசோதி
யொப்பிலாமதியுஞ்சூடியுமையொருகூறனாகி
யிப்படிவானோர்காணும்படியுளவியல்பின்வந்தான். (க00)

நீடொளிமணிகள்சேர்த்திநிமலமாயோங்கியெங்கும்
பீடுடைத்தாமநாற்றிப்பிறங்கரிமிசையதாகி
யாடகமதனினாலேயமராலமைக்கப்பட்ட
பீடம்வந்திட்டதாங்கேயிருந்தனன்பெயராதீசன். (க0க)

அளவிலாவொளியதாயவரனெழுந்தருளலுன்னித்
துளபமாலுலகமியாவுமளிப்பவனுவகையோடுங்
களமதார்கறைசேர்நாதன்கழலடிநினைந்தப்போதே
யுளநெகிழ்ந்துருகியொல்லைவந்தனனுணர்வின்மிக்கோன். (க0உ)

நீத்தராயுள்ளவானோர்நிறைமலர்மாரிமேன்மே
லுய்த்தனர்மிக்கவன்பாலுனைத்தனர்துதிகளெல்லாம்
பத்தர்வேதங்கள்சொன்னபடியிலேபணிந்துவாழ்த்தி
யித்தன்மைத்தாயவேறுஞ்செய்தனரிறைவர்காண. (க0ங)

கடுகியுமுயர்ந்துதாழ்ந்துங்காளங்கள்பலமுன்னூதப்
படகமோடிடக்கைசல்லிமத்தளம்பலவாசிப்பத்
துடிகுழல்வீணைதாளம்வலம்புரிதொடர்ந்தேயார்ப்பக்
குடமுழாமுரசுபேரிக்குசலராயினர்கொண்டார்த்தார். (க0ச)

வானவர்பாடவாடமங்கையர்மறையினீரு
லானவாகவிகளானாசிதோத்திரங்கள்சொல்ல
வீனமிலீசன்பாதபங்கயநினைந்துநோக்கு
மோனமாயிருந்தார்வேறுமுனிகளோர்செயலதின்றி. (க0ரு)

துன்பிலம்முனிகளெல்லாமதிசயமாகிநின்றார்
பின்புளோர்தலையிலாடும்பெருமையையுடையரானு
மொன்புனைந்துருகிநெக்கங்கியாவருந்தாமேதம்மில்
வன்பெருங்கைகளாலுங்குத்தினர்வானோரெல்லாம். (க0சா)

தலையினான்முட்டிமேலுந்தாள்களாலுதைத்துக்கைகள்
பலவினாலடித்துத்தண்டிற்கயிறதுபூட்டிவாரோர்
சிலவர்தாஞ்சிலவர்தம்மைச்சிவிகையாற்பொறுத்தார்வேறு
குலவியோர்குதிரைதன்னிற்கொடுசென்றுசில்ர்மேல்வைத்தார். (கoஎ)

வேறு.

ஓடினார்சிலவரொக்கநின்றவர்களொருவரோடொருவர தழுவினார்
கூடியொண்புடவைமேலெறிந்துசிலர்கொண்டுகொண்டுவிளையாடினா
ரோடிவந்துபிரியத்திறனொடொருவரொருவருச்சியைமுகந்தன
ராடினார்கள்சிலரன்பினாலறிவதொன்றிலாதபடியாகவே. (கoஅ)

வேறு.

உமையோடுகூடியுளனுயவீசனெழியாததேவர்செயல்கண்
டமையாதவன்புமிகவாகியங்கையருளோடமைக்கவயன்மா
லிமையோர்களோடுமுனியாயினோர்களிடர்தீரும்வண்ணமருளா
லமையாதவங்கணதுவைத்தல்கண்டதருள்பெற்றுநின்றதனைவோர். ()

வேறு.

சத்தியமாகிவேதமொன்றுமேயளவையாகு
மித்தன்மைப்பொருளையெல்லாவுலகருமறியும்வண்ண
நித்தராமன்பரோத்துநிறைந்தமெய்க்கருணையீசன்
மெய்த்தகுபொருளீதென்றேறவிளம்பிடல்செய்யலுற்றான். (ககo)

வேறு.

உலகமியாவுமுயிர்பலவுநானேசிறிதும்வேறில்லை
யலகிலறிவாலாய்ந்திடினுமாயாவிடத்துமருத்தமிதே
திலகமாயமறைதுணிந்துதிகழ்த்தும்பொருளுமிதுவென்ற
ணிலகுந்தன்மையனுபவமுமிதிலோரையமுளதன்றால். (ககக)

வேறு.

அப்பாலாகியெவர்கட்குமதுவேயெனநிற்கின்றேனு
னிப்பாலாகிக்காண்பொருள்களெல்லாமாகியுள்ளேனான்
மெய்ப்பாலுயிர்களியாவையுமாய்விளங்கிமிகவுநின்றேனு
னெப்பேயிலையாமுபாதிபலவாகியெங்குமுள்ளேனான். (ககஉ)

---

ககஉ. சே-ள், [அவனேதான் கீழிலும், மேலிலும் என்று சனற்குமாரநாரதசம்வாதத்திற் பூமாவித்தையிற் கூறப்பட்ட அதன் பொருளைப் பிரசங்கிகமாய் இவ்விடத்திற் கூறுகின்றார்.]

பூதமாகிப்பொருள்பலவாய்ப்புணர்ந்துநின்றுங்காப்பவனான்
பேதமாகிப்பேதித்தும்பேதமில்லாப்பெற்றியனான்
சோதியாகுமிரவிமதியாகித்தோன்றுகின்றேனான்
வேதமாகியுள்ளேனான்விளங்குபுராணமாவேனான். (கக௩)

கூறுமோசைபலவவைநானவற்றிற்குலவும்பொருளவைநா
னாறுசமயமாயவற்றினருத்தமாகிநிற்பேனான்
வேறென்றறியும்பொருள்களுமாய்வேறாய்விளங்குகின்றேனா
னாறுஞ்சிந்தையழிந்தொன்றாமறிவாலறியுமறிவுநான். (கக௪)

தோன்றுகின்றவொளியவைநான்றொடர்ந்தேசெறியுமிருளதுநா
னன்றங்கமைந்தோருளமேவியறிவாய்நின்றேயறிபவனா
னான்றும்பொருள்கண்மேலோடுமுணர்வாவதுநானுணர்பவனான்
சான்றங்காகியெப்பொருட்குஞ்சவியாதென்றுநிற்பேனான். (கக௫)

பாடுமிசையாயவ்விசையின்பயனையறிந்துநிற்பவனான்
கூடுங்கந்தம்பலவாயுங்கொள்வானையுமுள்ளேனான்
காடுங்கல்லுமலைபலவுங்கடமும்படமுமாவேனா
னீடும்பொருளாயெவ்விடத்துநிறைந்தவொளியாய்நிகழ்பவனான். ()

அளவையோடங்கறிவானுமறியும்பொருளுமாவேனா
னுளவஞ்ஞானஞானமெனவுரைக்குமுண்மைப்பொருளவைநான்
விளையுங்கன்மசுகதுக்கமேவுங்காலமாவேனா
னுளமதாரவுணர்கின்றசுவையாறாகியுள்ளேனான். (ககஎ)

தேவரெல்லாமாவேனான்றிகழுநராயுள்ளேனான்
யாவரோனுங்கருவாகியிடுதற்கிசைந்தேயிருப்பவனான்
பாவபேதபுண்ணியங்கள்பலன்கள்சுவர்க்கமாவேனான்
மேவியடையும்புத்திரான்வீழுநிரயமாவேனான். (ககஅ)

காரணம்பன்னான்காவேனான்காரணியாயகாரணனான்
சரணந்தருதேசிகனாகித்தன்னுளடங்குந்தன்மையனான்
புரணந்திகழ்பேரொளியோவாப்போதமாயபூரணனான்
காரணங்கடந்தவெனெயென்றுங்காண்பார்காணப்படுவேனான். (கககூ)

நாதமாகிமந்திரங்களனைவாகியுள்ளேனான்
பேதமாகிநினைந்திருந்துபேணுந்தியானமாவேனா
னோதலாகுமவத்தைபலவொன்றாயறிவாயுள்ளேனா
னேதமில்லாவெப்பொருட்குமுள்ளேயிலங்கியிடுபவனான். (கஉ0)

யாதொன்றருத்தமுண்டில்லையென்னுமுறைகளிரண்டினுக்கும்
யாதொன்றருத்தந்தோன்றுமென்றுந்தோன்றாதென்றுஞ்சொல்லுதற்
கீதொன்றின்றியிவையனைத்துந்திகழுமென்றனுருவென்றே [குரி
யோதுமையமோரிடத்துமுளதன்றுண்மையுணைக்குங்கால். (கஉக)

வேறு.

யாதினைநித்தமுள்ளபுத்தமேசுத்தமென்றிங்
கோதிடுமறைதானென்றனுண்மையேதிகழும்வண்ணங்
கீதினையொழிந்ததிந்தப்பூரணமதுவேயாமென்
றோதிடுமெய்யேயிங்கோரையமுமுள்ளதன்றே. (கஉஉ)

வேறு.

சுகமெனவறியப்பட்டுநிற்கின்றபொருளுமாகித்
தகைமையிலிதமென்றுன்னத்தக்கவிப்பொருளுமாகிச்
சுகமுடைச்சற்சித்தாமென்னுருவமேதோன்றுமென்று
மிகவுணைசெய்யலுற்றான்வேறுருவிலாதவண்ணம். (கஉ௩)

வேறு.

நானேமுழுதுமெனையொழியநாடிற்சிறிதும்வேறில்லை
யானபொருளையருமறைதானறையும்படியானதனாலும்
யானுமிசைத்தபடியாலுமிதுவேதிடமாயுளபொருடா
னுனமின்றிநான்முகனுமுணைத்ததுங்கட்குண்மையிதே. (கஉ௪)

வேறு.

இப்பொருளையப்பட்டோரிறப்பர்கள்கணத்தின்மெய்யே
மெய்ப்படுபொருளையென்றும்விடுதனிச்சயமதாகு
மிப்பொருளயமின்றியறிந்தவன்பவபாசத்தை
மெய்ப்படவொழிந்துமேலாமொளியினையடையுமன்றே. (கஉ௫)

பாசமோசகனுமீசன்பகர்ந்தருள்செய்துதன்னை
நேசமோடயன்மாறம்மைநீடுறத்தழுவிக்கொண்டு
வாசிலாவமரர்தம்மையருட்கணாலமைத்துநோக்கிச்
சோதியானந்தவெள்ளச்சுகரூபராமினென்றான். (கஉ௬)

சாந்தமெய்க்கருணைமேனிச்சம்புவையமரரெல்லா
மாய்ந்தபோன்பிணுலேயடியிணைமலர்கடம்மே
லேய்ந்தமாமலருநீருமிலையொடுபலமுங்கைக்கொண்
டார்ந்தனையிறைஞ்சியேத்தியருச்சனைசெய்துநின்றார். (கஉ௭)

வே று.

உலகமியாவுமளந்தருளுமுலப்பில்கீர்த்திநாரணனு
மிலகுந்தனதுகாரணமாமீசன்பாதபங்கயத்தைத்
தலையின்மிசையேவைத்தருளித்தரியாவன்பாற்றுனழிந்தான்
மலரின்மிசையோனவ்வடிகண்மறந்தேதன்னைவைத்திருந்தான். ()

வே று.

தேவர்க்குந்தேவனுயபெருமான்றன்கழல்செறிந்த
யாவர்க்கும்பாசநீக்கியெடுத்திடலியல்பாயுள்ளோன்
மூவர்க்குந்தெரியாவுண்மைப்பொருளானதற்பாவத்தை
யாவர்க்குந்தெரியும்வண்ணமின்பக்கூத்தாடலுற்றான். (கஉகூ)

வே று.

மேலாயருள்சேராகரமாய்வேறென்றிடுதற்கரியவனுங்
கோலாலளவில்பேரன்யாற்கூத்தன்றனையேபார்த்தருளிக்
காலாலாடறனக்கிசையக்கையாற்றாளக்கதிசெய்ய
மாலாமுதலாம்வானோர்கள்வலவாமகிழ்வாலாடினரால். (கங0)

பேரானந்தக்கடலாயபெருமான்பிணங்குந்தேவர்பிரான்
பாராவெல்லாவமரரையும்பரிந்துள்ளுவகைகூர்ந்தெவர்க்குந்
தீராவின்பமளித்தருளித்தெரிவையொருபாலுடனாகி
யாராலறியாவறிவுருவோனங்கேயறிவிற்கரந்தனனால். (கஙக)

அரியுமயனையணைத்துக்கொண்டமரர்முனிவர்தமையெல்லாந்
தெரியவன்பான்மிகநோக்கிச்சித்தங்களிகூர்ந்துண்மகிழா
வுரியவுலகந்தணியினுமாமுலப்பில்பெருஞ்சீர்வைகுண்டத்
தரிவைமலர்மேலவளோடுமொரவினணையோனமர்ந்தனனால். (கஙஉ)

வே று.

அயனுமீண்டதிசயத்தாலவசமாயழிந்துபின்னும்
பயனுறுமமரர்தம்மைப்பார்த்துமுன்பரிவினாலே
வயமெலாமுளதாய்ச்செய்யுமலர்மிசைமறையினோனுந்
தனதுவாய்திறந்துவார்த்தையுரைத்தனன்றழைக்கும்வண்ணம். (கஙங)

மாறுடாரோனொன்றுமேமாதிமெம்விச்சையெல்லா
மூனமாய்ப்பாசபெத்தமாக்கிமுண்மையாகத்
தானதாமறிவாம்விச்சையொன்றுமேபாசமான
வீனமாமிருளைநீக்குமின்பநற்சோதியொன்றும். (கஙச)

தானாகுமறிவொன்றில்லாதவனுக்குத்துன்பவாழி
தானேயுண்டாவதென்றுந்தான்றனிற்றழைத்துளோர்கட
கானதெவ்வுருவுமாகியல்லவாமறிவாஞ்சோதி
தானாகும்வீடேயாதல்சங்கையொன்றில்லையன்றே. (கஙௗ)

வேறு.

யாவனொருவன்றனையிழந்தேயளவில்வேறுபடக்கண்டும்
யாவனொருசொல்வேறுபடக்கேட்டுமறிந்தும்வருகின்றான்
யாவனொருவன்றனக்கென்றுஞ்சிறுமையதுவேபிறப்பிறப்புப்
போவதில்லாக்காரணமுமதுவேயென்றுபுகன்றனனால். (கங௬)

அருளினாலியாவன்றங்கணிவையில்வேறொன்றுகாணா
தருளினால்வேறுகேளாதறிந்திடாதிருக்கிலஃதே
யருளதாம்பெருமைதானுமழிந்திடாச்சுகமுமெல்லா
மிருளிலாவீடுதானுமென்றனனிமையோர்க்கெல்லாம். (கங௭)

வேறு.

யாவனொருவர்தமக்கென்றுஞ்சிறுமையுண்டேற்சுகமிலையா
மோவவில்லாதளவுடாதொன்றாமறிவாய்நின்றோர்கட்
காவதில்லைப்பிறப்பிறப்புமழிந்துபோக்குவரவுமிலை
மேவுபந்தம்வீடுமிலையென்றேவிரிஞ்சன்விளம்பினனால். (கங௮)

வேறு.

தன்னிலேயாக்கப்பட்டகனவினிலுலகமெல்லாந்
தன்னுணர்வதாகத்தனிலவையடங்குமாபோற்
றன்னிலேதோன்றுமெல்லாப்பொருள்களுந்தானேயானாற்
றன்னிலேதன்னிற்றானேயாமதேதனில்வேறின்றே. (கங௯)

எல்லாப்பொருட்குமேற்சுகமாமிதனையுங்கட்கேயும்வண
நல்லாருளங்கொணடாசநாதன்பாதத்தருளாலே
யெல்லாமென்றன்கருணையினாலுணர்த்தேனிதன்றன்மேற்கேட்ப
தில்லாவண்ணமினியானுமியம்பவேண்டுவதுமிலதே. (கச0)

## ஐந்தாவது

## சாந்தோக்கியவுபநிஷததாத்பரியமுணக்குமத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௩கச.

---

கச0. தே-ள், [சிவபெருமான் திருவருளால் எல்லாங்கூறப்பட்ட தென்று முடித்துக் கூறுகின்றார்.]

## ஆறாவது

## சாந்தோக்கியவுபநிஷத்தாத்பரிய முறைக்கு

## மத்தியாயம்.

### அவதாரிகை.

[இந்தப்பிரகாரம் தேசகாலாதியனவச்சின்னமாய், அத்விதீயமாயுள்ள சச்சிற்சுகரூபமே பிரமசொரூபமாக வுபதேசிக்கப்பட்டது; அது மந்தபுத்தியுடையோர்களான அதிகாரிகளால் விளைவாகச் சாட்சாத்தாய் அறியக்கூடாமையின் இருதயபுண்டரீகமத்தியில் சத்தியகாமாதிகுண விசிஷ்டமயமாக அந்தப்பரவஸ்து வினுபாசனத்தைப் பிரமசரியாதி சாதனபரனுயிருக்கிற முமுட்சுபுருஷனுக்குச் சுருதியினு லுபதேசிக்கப்படுகிற அந்தத் தகரவித்தையை இதிற் சங்கிரகிக்கின்றார்.]

பங்கயாசனத்திலிருந்திடும்பரமன்பழமறைபகர்ந்தவப்பரிசே
சங்கையாகாமற்சங்கரன்றிருவாய்மலர்ந்தனன்பரிசினைத்தானே
யங்குவானவர்கட்களிக்குமாறளித்துமளவிலாவருளினலந்த [பான்.
வெங்குமாய்நின்றபொருளைமீண்டுணருமிடத்தையுந்தெளிவுறவிசைப்

வேறு.

புகலநின்றிடுபிரமபுரமெனும்பதியதனிற்
றகரபுண்டரிகமெனுமகமிலங்கியதகர
ககனமுண்டதுமறைகள்கருதநின்றுளபிரம
மிகவிரும்புவர்பிறவிவிடவிளைந்துளவிமலர். (உ)

தெரிவிடஞ்சிறிதலதுசிறியதன்றறிவுருவு
பெரிதெனும்படிநினைகபுறமுமெங்குமுளதென
வுரியதொன்றுணர்வதுணர்வொழிவதென்பதுவுமுணர்
கரியழிந்துளதொர்பொருள்கழியநின்றதுவுமிலை. (௩)

---

உ. செ-ள், பிரமபுரம் எ-து, பிரமோபலப்திஸ்தானமாகிய வித்தியாதிகாரியினது சரீரம். தகரம் எ-து, அற்பபரிமாணம்.

௩. செ-ள், [உபாதிமூலமான சங்கோசமானது சித்ரூபாத்மாவிற்குச்சேத்தியங்களாயுள்ள தேகங்களினலன்று, சுபாவீகமாகவே சங்கோசமானது காணப்படுகிறதேயென்றாற் சொல்லுகிறார்.] தெரி + வுருவு —அஞ்ஞானுவரண நிவிர்த்தித்துவாரமாகச் சுவப்பிரகாச சித்ரூபாத்மாபிவியஞ்சகமான அந்தக்கரணமானது பரிச்சின்னமின்றி ஆன்மசொரூபமானது பரிச்சேதமுள்ளதன்று: அந்தக்கரணுதிகளின் பரிச்சேதவசத்தால் சிதான்மாவிற்காணப்படும் பரிச்சேதப் பிரதிபாசம் இர

அறிவின்முன்பலதுசடவகிலமுண்டெனநிகழ்வு
பெறுவதன்றறிவினிலைபெறநிகழ்ந்ததுபிறிது
செறிவுறும்பொருளினனிசிறிதெனும்படிநிகழ்த
லிறைவனெங்கணும்விரவியெலையறும்படிநிகழும். (௪)

அளவிலம்பரமெவளவறிசிதம்பரமவள
வுளதுவிண்புவியனிலமொளிபதங்கனுமெதி
துளிதரும்புயன்மின்முதல்சொலவரும்பொருள்களினி
விளைபவென்றிவையிதயவெளியடங்கிடுமடைய. (௫)

இலதெனும்பொருளுமிவனிடையிலங்குதலிலிறை
சொலவரும்பொருண்முழுதுநிலவினன்சுழலும்வினை
நலனுமன்றியதுநரைமரணமும்பசியையுமுத
லுலகுறுந்துயர்முழுதுமுடையனன்றொருபொழுதும். (௬)

---

த்தஸ்படிகம்போலாம், சுபாவீகமன்றென்று பொருள். [மற்றெங்ஙனுளதெனின்?] புறமுமெங்குமுளதெனவுரியதொன்று பெரிதெனும் படிநினைக = அந்தக்கரணாதிகட்குப் புறம்பும், மற்றெங்குமுண்டென்றுள்ளவொருபொருள(ா)தலால்) தேசகாலாதியனவச்சின்னமென்றே சிந்திக்கத்தக்கது.—[அங்ஙனமாயின் இவ்வந்தக்கரணாதிகளைப்போலச் சகலத்தையுந்தோற்றுவிக்கவேண்டாவோவெனிற் கூறுகின்றார்.] உணர்வதுணர் + கழியநின்றதுவுமிலை = ஞானவிஷயாகாரமாகவும், அஞ்ஞானவிஷயாகாரமாகவுமுள்ள சகலஜகத்தையும் அறியாநின்ற சாட்சி சேதனத்தைவிட்டு, உண்டென்பதாக ஒருவஸ்துவாவது மிகவும் அன்னியப்பிரகாசத்தையபேட்சித்து நிற்கின்றதாகவுமில்லை.—

௪. செ-ள், [ஜகத்துச்சுவயமே ஏன் பிரகாசிக்கமாட்டாதென்னிற் சொல்லுகிறார்.] அறிவின்முன்பலது—சடவகில + தன்று = ஜடரூபமான பிரபஞ்சந்தானே சித்திக்கவும், பிரகாசிக்கவுமாட்டாது—அறிவினிலைபெற நிகழ்ந்தது=சிற்பிரகாசசம்பந்தத்தாலே சித்தித்து விளங்காநின்றது—சடம் எ-து, எதுகர்ப்பவிசேஷணம். [இங்ஙன் பரசிவத்திற்குப் பிரதிபாதித்த வியாபகத்தன்மையை நிச்சயிக்கின்றார்.] பிறிது= (ஆதலால்) தோற்றுகின்ற ஜகத்தனைத்தும்—செறிவுறும் பொருளில் =வியாபகமான பரசிவசன்னிதியில்—நிகழ்தல் நனிசிறிதெனும்படி—இறைவ + நிகழும் — திருசியமான அஞ்ஞானத்தையும், அதன்காரிய லட்சணமான சகலஜகத்தையும் வியாபித்திருத்தலால் சுபாவமாகப் பரசிவன் வியாபியே: பரிச்சேதமானது அவ்வந்தக்கரணாதி உபாதிவசத்தால் என்று சித்தித்தது.

௫-௬. செ-ள், [இவ்வாறு கூறிய பரமசிவத்தின் வியாபகத்தன்மையை ஆகாசதிருஷ்டாந்தத்தாற் கூறுகின்றார்.] அளவில + வுளது—பிரசித்த பூதாகாசசாமியத்தாற் பிரமத்திற்குச் சர்வகதத்வம் பிரதிபாதி

வேறு.

பண்ணியதொழிறருபயன்களியாவையு
மண்ணிடைநுகர்ந்திடமாளுமாறுபோற்
புண்ணியவினைதரும்போகமியாவையும்
விண்ணிடையிருந்தனுபவித்துமீளுமால். (எ)

மெய்யினையுணர்ந்தவர் வினைகளியாவையுஞ்
செய்யினுஞ்செய்திலராவர்தேவர்க
டூய்யநல்வினைகளேதொகுத்துமற்றையார்
வெய்யகர்மத்தராய்விளம்பவேண்டுமே. (அ)

---

த்ததேயன்றி அதன் பரிமாணமுடையது என்றன்று. [இவ்விதமாகவே சர்வவியாபித்துவத்தைக் கூறுகின்றார்.] விண்புலி + மடைய— எ-று. இதுகுளகம். இலதெனும் + நிலவினன்—[இங்ஙன் ஈசுவரன் சர்வவியாபியாகட்டும் ஜீவனுக்கு அவ்விதத்தன்மை எங்ஙன்? கூடுமெனச் சங்கித்துக் கூறுகின்றார்.] இந்தப் பாசிவன்றான் பிரத்தியக்சேதன ஜீவான்மாவாக விளங்குகின்றான், லட்சணபேத மின்மையால், இவன் விலட்சணனுகான் என்னும் இவ்வர்த்தத்தைக் கவிநாயகர் 'இறைசொலவரும்பொருண் முழுது நிலவினன்' என்பதனுளடக்கி வேறே கூறுதொழிந்தனர். [தர்மாதர்மாதியாசிரயபூதனாய், அன்னியனாய்க் காணப்படுகிறானேயென்னிற் சொல்லுகிறார்.] சுழலும் + பொழுதும்— புண்ணியபாவமுதலானவை அந்தக்கரணதர்மமாதலாற் சாட்சிரூபமான சிதான்மாவைப் பரிசியாதென்றுபொருள்.

எ. செ-ள், [இங்ஙனம் ஸகுணநிர்க்குணப்பிரமத்தின் ஞானமே அக்ஷயபலவேதுவாகுமன்றி அக்கினிஹோத்திரமுதலிய கருமங்கள் ஆகாதென்ற சுருதியின் வாக்கியார்த்தத்தைச் சங்கிரகித்துக் கூறுகின்றார்.] கிருதகத்வத்திற்கு அனித்தியத்வ வியாப்திநியமமாதலால் என்பது கருத்து.

அ. செ-ள், [ஈண்டவ்வாத்மாவை அறிந்தவன் என்னும் வாக்கியார்த்தத்தைச் சொல்லுகிறார்.]மெய்யினை + தேவர்கள்—[எதனாலெனின்?] கருத்திருத்வ, போத்திருத்வாதி தருமம் அந்தக்கரணத்திற்கென்று சொல்லப்பட்டதனால் என்க. தூய்ய + வேண்டுமே—யாதொரு காமவிசேஷங்கள் பிதிர்லோக காமனைப் பவிப்பானாகில் என்னும் சுருதியால் பிரகாசப்படுத்தப்பட்டிருக்கின்றன; அவைகளில் ஞானிக்குச் சுவேச்சாசஞ்சார முண்டாகும். எதனாலெனில்? இருதயமத்தியிலிருக்கிறதாய்ச் சத்தியகாமாதி குணங்களாலே உபாசிக்கப்படுகிற தகரப்பிரமம் நிரதிசயானந்தரூபமாக விருக்கின்றமையால் சர்வகாமங்களும் அதனுடைய ஏகதேசமாகவிருக்கையினால் என்று மூலசுலோகத்தில் ஆன்மவித்தைக்குப் பலஞ்சொல்லி யிருக்கின்றமைகாண்க.

வேறு.

பொற்பொருள்புதைத்தபுவியிற்புலனிலார்போய்
நிற்பினுமிடிப்பர்நனிநித்தமுலகத்தோர்
தற்பொருள்சுழுத்திதனிலுற்றுமதுதானே
யற்பமறிகிற்றிலரயர்ச்சிவலியையோ. (௯)

விதம்படுமுளங்தொறும்விசேடவறிவாயுற்
றிதம்படுதலாலிதயமென்பரிறைதன்னைத்
திதம்படவிவன்றிறமறிந்தவர்கள்சேரும்
பதம்பிரமமல்லதுபகர்ந்திடுதலுண்டோ. (௧0)

சுழுத்தியதனிற்றுயர்துவக்குமுடறன்னின்
றெழும்பியுளதன்வடிவினாலிறையையெய்துற்
றழுத்தமுறயாவனதுவாகுமவனெங்கும்
முழுத்தியுளதற்பரமமாகிமுடிவுற்றான். (௧௧)

---

௯. செ-ள், [சத்தோடும் அக்காலத்தில் அடைந்தவனாகின்றான் என்றசுருதியால் சுழுத்தியில் அந்தப்பிரமமடையப்படுகின்றதனால் வித்துவான்போல் தூங்கினவனும் சகலகாமங்களை யடைந்தவனாக ஏன் ஆகான் எனச்சங்கித்துத் திருஷ்டாந்தத்தோடுங் கூறுகின்றார்.]

௧0. செ-ள், [இருதயசப்தநாமத்தினாலும் சர்வகதமானபிரமம் இருதயமத்தியி லிருக்கின்றதாக உபதேசித்த சுருதியின்பொருளைக் கூறுகின்றார்.]

௧௧. செ-ள், [அனந்தரம் அதன் பிராப்திப்பிரகாரத்தையு முபதேசிக்கின்றார்.], ஸ்தூல சூட்சுமசரீராதி யபிமானத்தைப் பரித்தியாகஞ்செய்து சுழுத்தியவஸ்தையிற் சாக்கிரசொப்பனங்களிலுள்ள விஷயபோகங்களாலுண்டான கலக்கங்களில்லாததனாற் பிரசன்னனாகிய சின்மாத்திர சொரூபசாட்சி யெவனோ அவன் தகரப்பிரமவித்தையால்அஞ்ஞானவிலக்கணமுடைய காரணசரீரத்தையும் நீங்கி விகாரசம்பந்தமில்லாத கேவல சைதன்னியப்பிரகாசமான பரசிவசொரூபத்தைத் தானாக வறிந்து அவித்தையினாலுண்டான பரிச்சேதத்தைவிடுத்துத் தன் சொரூபமாகவே பிரகாசிக்கின்றான்; இவ்வாறடைதலும் கண்டசாமீகரநியாயம்போல் ஞானமாத்திரசாத்தியமேயன்றிக் கிராமாந்தரப்பிராப்திபோற் கிரியாசாத்தியமன்று என்னும் மூலவியாக்கியானார்த்தத்திற்கியையக் கவியின்பொருள் கொள்க. இங்ஙன் பதம் அன்வயித்துப் பொருள்கொள்ளும் விபரம்;—யாவன்—உடல் இன்று = தூலசூக்கும

வே று.

இதுபரம்பரமமிர்தமபயமென்பதுவுமிது
விதமுறும்பலவுலகும்விரவலின்றியபிரம
பதமிதன்கணிலிரவுபகலடைந்திலமரண
முதயமொன்றிலவிருமைவினைகளொன்றதுவுமில. (கஉ)

ராதியபிமான பரித்தியாகஞ்செய்து—சுழுத்தியதனில்—துவக்குந்துயர் இன்று = சாக்கிரசொப்பனங்களிலுள்ள விஷயபோகங்களாலுண்டான கலக்கங்களின்றி (யதனுல்)—எழும்பியுள=பிரசன்னனய்ச் சின்மாத்திரசொரூபசாட்சியாயுள்ள—தன்வடிவினுல் = சுவாத்மாவாக—இறையை = (தகரப்பிரமவித்தையால் அஞ்ஞானவிலக்கணமுடைய காரணசரீரத்தையும் நீங்கி) விகாரசம்பந்தமில்லாத கேவலசைதன்னியப்பிரகாசமான பரசிவசொரூபத்தை—எய்துற்று = அறிந்து—அழுத்தமுறவதுவாகும்= திடமாகவப்பரசிவசொரூபமேயாவனே—அவன்—எங்குமுழுத்தியுளதற்பரமமாகி முடிவுற்றான்=அவித்தையாலுண்டான பரிச்சேதத்தைவிட்டுத்தன்சொரூபமாகவே பிரகாசிக்கின்றான்.—எ-று. தன்இன்று எனப் பதம்பிரித்துத் தன் என்பது அசையாக மீந்தஇன்று என்பதை, உடல், துயர் என்றவிரண்டிடத்தும் சேர்த்துக்கொள்க.

**கஉ.** **சே-ள்,** ['இவனே ஆன்மாவென்று கூறப்படுகின்றான்' எ-ம், 'அபயம், அமிர்தம்' எ-ம் சொல்லிய சுருதிகளின்பொருளைச் சங்கிரகிக்கிறார்.] எவன் இவ்வாறு உபாதிகளின்றிப் பிரகாசிக்கின்றான் அவனே கூடஸ்தாத்மா அன்னியமன்று. இவனுக்கு வேறாகத் தேகாதிவிசிஷ்டனுயுள்ளவன் சோபாதிகனுதலால் அனுன்மா என்பார், 'இது பரம்பரம்' என்றார். அபரிச்சின்னமாதலால், அமிர்தம், பயத்திற்கேதுவான இரண்டாம்பொருளின்மையின், அபயம் என்பதுவுமிது — [இனி யாதொரு இவ்வான்மா சேதுவென்றது தொடங்கி, அனுதாபமில்லாதவன் என்று முடிந்தசுருதியைச் சங்கிரகிக்கிறார்.] காலதத்துவமும் சொரூபத்தில் அத்தியஸ்தமாதலின் பிரமமானது மற்றையுற்பத்தியான பிராணிகள்போல இராப்பகல்களை லக்ஷணமாகவுடைய காலபரிச்சேதமுடையதன்று ஆதலால் 'இதன்கணிலிரவுபகல்டைந்தில' என்றார். ஜனனமரணசனாமுதலியவைகளும் தேகதர்மமாதலால் அதற்குவேறாகிய சேதுவான ஆன்மாவையடையாமையின், 'மரணமுதயமொன்றில' என்றார். புண்ணியபாபங்கள் அவரது சுபாவபுரிஞானத்தால் நிவிர்த்தித்தலால், 'இருமைவினைகளொன்றதுவுமில' என்றார்.

ஆதலிற்சிலவினையினாலடர்ப்பவனுமல
னோதலுற்றிடுபிரமலோகமிப்பரமிவனோர்
சேதுவக்கரையடைஞர்சேர்பவக்கடல்விடுவர்
சாதுயர்ப்படினுமவர்தாமிடர்ப்படுவதிலர். (௧௩)

வேறு.

செப்பியபொருள்களியாவையுஞ்சென்றுசேர்வுறுவகைநின்றசேது
வப்படிப்பட்டாலந்தனுமனந்தனருந்துயருற்றுமுற்றிலனு
மிப்படியிதயாகாசமென்றியம்புமீசனிவ்வுடம்பின்வேறாகிக்
கப்புறுநனவுகனவுறக்கத்தைக்கண்டவைகடந்துநிற்கின்றான். (௧௪)

தற்பரந்தன்னிற்கற்பனைபாலேசாக்கிரகனவுறக்கங்க, ளற்புதமாக
விளங்குமல்லதுதானாகவவ்வவத்தைகள்விளங்கா, கற்பனையாகிக்காட்சி
யாங்கடம்போலுடம்பினைத்தானெனக்கருதிற், புற்புதவுடம்பாய்ச்செ
ற்றவாவங்கள்பொருந்துமையுறேலினிப்பொருளில். (௧௫)

உடம்புடனிருந்தேயுடம்பிலாவுண்மையுணர்ந்தவனுளத்தொருகாலும்
விடம்படுகாமவெகுளிமேவாதுவிளம்பிடும்பொருளெலாம்விளக்கு
மிடம்படுமிதயாகாசமற்றிதுவேயிறப்பொடுபிறப்பிலதென்றுந்
திடம்படுபிரமமாவதுமான்மாவாவதுந்தேகிகட்கெல்லாம். (௧௬)

---

௧௩. செ-ள், அபரோட்சமாகக் காணப்படுதலினாற் பிரமத்தை, 'லோகம்' என்றார்.

௧௪. செ-ள், செப்பிய + முற்றிலனும் — சாகரத்திற்குக்கரை போலச் சம்சாரசாகர மணுகாமல்நிற்கும் எல்லையாய் வருணாச்சிரம முதலியபேதத்தாற் கிரியாகாரக பலரூபமாகிய வெவ்வேறு நிபந்தனை யையுடைய பிரபஞ்சத்தை ஒன்றோடொன்று சாங்கரியப்பட்டு அழியா மற்றரித்தலால், 'செப்பியபொருள்க ளியாவையுஞ்சென்று சேர்வுறு வகைநின்றசேது' என்றார். [இந்தப்பிரகாரந்தஹரவித்தியாவிஷயமான பிரமத்தை உபதேசித்துச் சாக்கிரதாதியவஸ்தாவிநிர்முக்தமான பிரமத் தைப் பிரதிபாதியானின்ற பிரஜாபதியென்னுங்காசிபரா லுபதேசிக்கப் பட்டிருக்கிற அக்ஷிபுருஷவித்தையை உபதேசிக்கின்றார்.] இப்படி + நிற்கின்றான்.]

௧௫. செ-ள், [அனன்மவஸ்துவிற்குச் சாட்சியத்தன்மையைக் கூறுகின்றார்.] தற்பரந்தன்னி + விளங்கா — [சரீரத்தோடு கூடியவனுக் கேயன்றி இல்லையென்ற சுருதியர்த்தத்தைச் சங்கிரகிக்கிறார்.]

௧௬. செ-ள், [இதுவுமது] உடம்பு + மேவாது — [தகராகாச கற் பனை சப்தத்திற்குப் பிரமமே பரதத்துவமென்பதைத் திடப்படுத்தும் பொருட்டு மற்றொரு சுருதியிலுள்ள ஆகாயமே நாமரூபங்களை நிர்வகிக், கிறதென்னும் வாக்கியத்தைச் சங்கிரகிக்கிறார்.]

அப்பரம்பொருளேவேறொருபரமுமாகியதற்பமுமில்லை [யே
யெப்பொருளாயும் விளங்கியும் விளங்காதிருக்கின்றன்ற னுமிங்கிறை
யொப்பரும்பரமனுருத்திரன் சிவனென் றுரைக்கநின் றவனுடைத்தான
விப்பெருந்தன்மையிருந்தவாறென்னேயேவரால றியலாமிதனை. (கஎ)

வேறு.

இந்தமகாபூதங்கள்பகுந்தேயெல்லையிலாநாமங்களையும்பெற்
றந்தவிகாரங்களுநிகழ்போதுமவ்வவையாயேநிகழ்வதுபோன்மற்
றந்தமிலாவொன்றாகியிருந்தேயளவறுபேதப்பலபொருளாயிட்
டெந்தவுபாதிக்குங்கரியாய்நின்றெங்கும்வியாபிக்கும்பரமீசன். (கஅ)

பின்னகடாகாயாதிகளாலாகாயமபேதம்பேதமுறுதே
யன்னவனேகாகாரனேகாகாரவகம்புக்கா லுமனைத்தா
மன்னியபேதாகாரமபேதாகாரமுமாய்மாதேவனிரானே
லின்னதெனுமத்தானெனுமாறனியாவையுமீசானன்பிறிதன்றே.

வேறு.

உளவாகியுமிலவாகியுமுருவாலெவையிலகு
மொளியானவனவனேயவையவையாயொளிர்வுறுவா
னளவாவகைசிவனேயடையவுமானவனெனவே
தெளிவாகியமதியாததுசிவையாவதுதெளிவீர். (உ0)

சிவனேயகமெனவேதிகழ்வுறுவானிதமெனநின்
றவனேயுடலதுமாய்நிகழ்பவன்வேறிலையாறற்
பவமேததுவிடலேதொருபடியாயுளபரனே
யிவனேகமுமெனவோர்பொழுதிறவாரவர்பிறவார். (உக)

பனையாமதியுடையாரனுபவமாய்நிகழ்வதுநா
னுனையாடியபடியேயுளவொளியாய்நிகழ்சிவனோர்
வனையாவருளதனால்வருமிதுமாதவமுதலா
நினையாயிரவழியாலிதுநிகழாதிதுநிகழா. (உஉ)

வேறு.

ஜீவகரனெழில்வேறெசிலவொளிதிகழ்வாமோ
வவமுறுவிருள்போகாதவனெதிர்நிலையாமோ
சிவதினகரனேலேசெறிபவவிருணேரா
வவனொளிதனின்மானுனமரர்களறிவோமோ. (உ௩)

---

கக௯. செ-ள், [இதுவுமது] பின்னகடா + புக்காலும்—[மகாதேவ
னென்னும் நாமதேய பெலத்தாலும் இவ்வான்மாவுக்குச் சர்வான்ம
பாவத்தைக் கூறுகின்றார்.]

புரணநல்லறிவாகப்புகலுறுபரமீசன்
சரணினைதலுமாராதனையுறுதலுமல்லான்
மரணமதறவேறோர்வழிசொலவிலையாளு
லரணமதுறநங்கட்கடையவுமவனன்றே. (உச)

வேறு.

ஆகமங்கள்பலவுமுணாயாடுகின்றதிவனையனு
போகமொன்றிலறியுமறிவாகிநின்றபுனிதனிவ
னேகனந்தவனுபவமதேயிவன்றன்வடிவதனை
யோகமொன்றவருள்பவனுமோதுகின்றபரமசிவன். (உரு)

நானுமந்தவரியமரர்ஞாலமொன்றுநரர்விவித
யோனியிந்தமுழுதுமதனூடெழுந்தசிறுதிவலை
தானெழிந்துசிறிதில்சிவசாகரந்தனிகரியை
யூனமொன்றுமெனமொழிவரோர்வொழிந்தவுணர்விலிகள். (உசு)

வேறு.

எறிகதிர்க்குநிகராகின்மின்மினியிறைக்குநேரரியுமெட்டிதா
னறுவிளைக்கொளகில்சந்தொடாக்குமெனினுமப்பரமனோடுநே
ரறிவினுக்கறிவிலாமைநேரகிலநாயகற்கொருவர்நேரொனிற்
செறியவுற்றவறியாமையின்செயலிருந்தவாறெனதுசெப்புவேன்.

ஓதலுற்றபரனலனைத்துமுளதாவதப்பரமனென்றிரு
லாதலுற்றிலனுதிமுற்றுமவனுலெறிப்பதநிரோகமா
வேதனத்தவரனைத்துமத்துவிதமாய்விழிப்பர்விவிதத்திலே
போதமற்றவர்விழிப்பர்மற்றவர்கள்போதமற்றவர்கள்புல்லியோர்.

வேறு.

இதுசகந்தானெனமுனிகழ்தலுண்டேலிவிதமெவர்களுங்காணுமறிவே
யதுபரந்தானெனமுனனுபவந்தானடையிலதுபவந்தீருமறிவா
முதியசந்தோகவுபநிடதநின்றேறுதுபொருண்முழுதுமிங்கீசன்மொழியா
லதிசயந்தானமரானவருங்கூடவழகுறவறைந்தேனருளினல். (உகூ)

வேறு.

திண்ணிதாக விதயத்தை மீளும்வகைசெய்து சிந்தனையெலாமறப்,
பண்ணிஞலறிவிலாமையென்றுவருபாவகத்தையுமொழித்திடக், கண்
ணதாய்நிகழுமக்கணன்றியெதிர்காணுஞதுபிறிதென்னவே, நுண்
ணிதானபொருள்சொல்லினுதுமெய்நோக்கினலடைய வாக்கினன்.

ஆறுவது
சாந்தோக்கியவுபநிஷததாத்பரியமுணாக்குமத்தியாயமுற்றிற்று.
ஆ_ திருவிருத்தம் - ரூசச.

---

உகூ. செ-ள், [பிரதிபாதித்த அர்த்தத்தை உபசம்மரிக்கின்றார்]

ஏழாவது

# முண்டகோபநிஷததாத்பரியமுரைக்கு

# ம த் தி ய ா ய ம்.

**அவதாரிகை.**

[இந்தப்பிரகாரம் வேதத்திரய வுபநிஷதங்கட்கும் பிரமான்ம வைக்கியத்துவத்தைத் தெரிசிப்பித்து அதர்வண முண்டகோபநிஷதத்திற்கும் அப்பரத்துவமுண்டென்பதைத் தெரிசிப்பிக்கவேண்டி அவ்வுபநிஷதத்தைச் சங்கிரகிக்கின்றார்.]

நீண்டகேள்வியினுற்கல்வியானெஞ்சா னிச்சயித்தறியவொண்ணுதீ, தூண்டிடாஞானச்சுடர்தனைச்சொரூபா னந்தனைத்துரிசறவுளத்தே, மீண்டுகொண்பதுவேவிச்சையென்றுரைப்ப தாகவேதொடங்கினன்மெய்போ, லீண்டுலோகங்களிறக்கவுற்பவிக்க விமைப்பதுவிழிப்பதாமிறையோன். (க)

எப்பொருள்களுக்குந்தோற்றமுநிலையுமிறுதியுந்தன்கணேயாகி, யொப்பிடவொன்றுமின்றியேயென்று முள்ளதாயுரையுணர்விறந்த, வப்பொருணேரயறிந்தபோதெல்லாப் பொருள்களுமறிந்ததாமந்த, மெய்ப்பொருடானேயெப்பொருள்களுமாய் விளங்கலால்வேறிலாமையினல். (உ)

---

உ. **சே-ன்,** க்ஷரமான ஜடபதார்த்தங்கட்கு அக்ஷரமான ஈசுவரன் அதிஷ்டானமாயுளனென்பார், 'எப்பொருள்களுக்குந்தோற்றமுநிலையுமிறுதியுந்தன்கணேயாகி' எ-ம், உபமானரூபமானவஸ்துவந்தரமின்மையால், 'ஒப்பிடவொன்றுமின்றியே' எ - ம், நிர்விசேஷமாதலால், 'உரையுணர்விறந்த' எ-ம் கூறினர்.[சுருதியில் அஃதறியப்படில் அனைத்து மறியப்பட்டதாகிறதென்றது முதலியவற்றால் பிரசினப்பிரதிவசனரூபமாக எவ்வதிஷ்டானமான அக்ஷரப்பிரமஞானத்தால் ஆரோபித சகலஜகங்களின் ஞானமுபதேசிக்கப்பட்டதோ அதைச் சங்கிரகிக்கிறார்.] அப்பொருணேரோ யறிந்தபோதெல்லாப் பொருள்களுமறிந்ததாம்—[பிரதிஞ்ஞைசெய்த அர்த்தத்தில் ஏதுவைச் சொல்லுகிறார்.] அந்தமெய்+வேறிலாமையினல்.—

இங்குநாமறியவேண்டுவதிரண்டுவிச்சையவ்விரண்டினுமொன்று
பங்கமாமபரையெனப்படுவதொன்றதிற்பழமறைநாலு
மங்கமாறுண்மையமையிதிகாசமாதிகளபரையாமற்ற [ல்.
தெங்குமாய்நின்றதொன்றையாதொன்றாலெய்தலாமதுவிறையருளா
காணவோருருவுமின்றியேதனக்கோர்கண்செவிமூக்குவாயின்றிப்
பாணிபாதங்களின்றிநுண்ணியதாய்ப்பற்றியபொருளெலாங்கடந்து
தாணுவாயெல்லாந்தோற்றுதற்கிடமாந்தத்துவந்தன்னைத்தன்னாலே
யாணியாயறியுமறிவதுவிச்சையாவதுபிறிதெலாமவிச்சை. (௪)

வேறு.

சிலந்தியுமிழ்ந்துவிழுங்குவதெப்படிதேகத்தே
மலந்தருகேசவுரோமமதெப்படிமண்ணிற்கே

---

௩. சே-ள், [ஆரம்பித்த வுபநிஷதத்தின் விதேயப்பொருளைச் சங்கிரகமாகக்கூறி இவ்வர்த்தத்தில் இரண்டுவித்தையறியத்தக்கதெனப் பிரமவித்துக்கள் சொல்லுகின்றார்கள் என்றதர்தியாம் உபநிஷதப் பொருளைக்கூறுகின்றார்.] இங்குநாமறிய + ப்படுவதொன்று—அதிற்பழ மறைநாலு + களபரையாம். இருக்குவேதமுதலிய சுருதியினாற் கூறப்பட்ட யாதொரு அபரவித்தையுண்டோ அஃதனன்மவிஷயமாதலால் அத்விதீயதத்துவத்தைப் பிரதிபாதியாது; அங்ஙனமே அவ்வபரவித்தையாலுண்டாகிய புத்திகளும், அக்கினிஹோத்திரமுதலியகருமவிஷயங்களாதலால் அனன்மவிஷயங்களாமாதலின் அபரவித்தைகளேயாம் என்று பொருள்.—[எதனால் அவ்வக்ஷரப்பொருள் அடையப்படும் என்றசுருதிவாக்கியத்தைச்சங்கிரகிக்கின்றார்.] மற்றதெங்குமா + விறையருளால்—யாதொரு தத்துவமஸியாதி உபநிஷதவாக்கியங்களாற் சனியாநின்ற வித்தையினால் அவ்வக்ஷரப்பிரமம் சமுசயமின்றியடையப்படுகிறது; அஃதான்மவிஷயமான அஞ்ஞானநிவிர்த்தித்துவாரமாய் மோட்சசாதனமாதலால், பரவித்தை என்றுபொருள்.

௪. சே-ள், [யாதொரு அந்த அதிருசியமென்பதாதிய சுருதியானது சொரூபத்தோடு மிதிற் சங்கிரகிக்கப்படுகிறது.] இடம் = அதிஷ்டானம்.

௫. சே-ள், ["எல்லாந் தோற்றுதற் கிடமாம்" என்று முற்கூறியதை மூன்று திருஷ்டாந்தங்களாற் கூறுகின்றார்.] சிலந்தி = ஊர்ணநாபி என்னும் லூதாகீடம்—அஃதெப்படிக் காரணாந்தர மபேட்சியாமற் றன்சரீரத்தினின்றுந் தந்துக்களை வெளிப்படுத்தித் தன்னிடத்திற்றானே அடக்குகின்றதோ, எப்படித் 'தானியமுதலிய ஔஷதிகள் தன்

பலந்தருமோடதியெப்படியப்படியீசன்பா
லலர்ந்ததடங்கவெறுங்கனவொக்குமதாயுங்கால். (௭)

பன்னுதவத்திரளுற்றபரத்திடையேமுன்ன
மன்னமெழுந்ததினின்றுபிராணன்மனங்கன்மந்
தன்னிலுறும்பலலோகமும்வந்ததுதாவில்லா
வின்னமுமென்றுணர்முத்தியும்வந்ததிதன்கண்ணே. (௮)

---

காரணம்போலப் பிருதிவியிலுண்டாகின்றனவோ, எப்படி ஜீவித்திருக்கிற புருஷனிடத்தினின்றும் அசேதனங்களான கேசரோமாதிகளுற்பவிக்கின்றனவோ, அப்படியே காரணாந்தர வபேட்சையின்றிய பிரமத்தினின்றும் சலட்சணவிலட்சணங்களான சேதனுசேதனஜகமனைத்தும் உதியாநின்றன.—அவிக்கிரியமாகிய பிரமத்தினின்றும் உண்மையாக உண்டாயிற்றென்பது கூடாமையால் அது மாயாமயம்; ஆதலால் காணப்படுகிற ஜகமனைத்தும் சொப்பனப்பிரபஞ்சசமானம் என்று பொருள்.

௮. சே-ள், [பிரமத்தினின்றும் ஜகத்து உற்பத்தியாகுங் கிரமத்தைத் தெரிசிப்பிக்கிறார்.] தவத்திரள் = பரிபக்குவமுடைய பிராணிகளின் கருமவசத்தாலுண்டாகிய சிருஷ்டிக்கத்தக்க பரியாலோசனரூபஞானம் — பரம் = ஜகத்காரணமான மாயாசபளப்பிரமம் — 'தவத்திரளுற்ற' என்றதால், பூர்வம் அத்தியந்தம் நிர்விகற்பமான பிரமம் அந்த ஞானவசத்தால் ஈஷத்துவிகற்பத்தோடு கூடிற்றென்று பொருள்.—அன்னம் = (அவ்வித ஞானத்தோடுகூடிய பிரமத்தினின்றும் சம்சாரிகளாற் புசிக்கப்படுதலின்) அன்னமென்னும் போக்கியப்பிரபஞ்சத்தின்காரணமான அவ்வியாகிருதத்துவம்,—அதினின்று(ம்)—பிராணன் = (பிருதிவி, வாயு, ஜலசம்பந்தத்தால் உச்சூனவஸ்தையையுடைய பீஜத்தினின்றும் அங்குரம்போல அபஞ்சீகிருதபூதம், அதன் காரியமான லிங்கசரீரசமஷ்டியுபாதியுடைய) சர்வஞ்ஞனை பிராணனென்னும் பெயரையுடைய இரணியகருப்பர்; (இரணியகர்ப்பரது உற்பத்தி கூறப்பட்டதுகொண்டு அபஞ்சீகிருத பூதங்கட்கும், அதன் சத்துவரஜோம்ச பரிணாமபூதமாயுள்ள லிங்கசரீரத்திற்கும் உற்பத்தி சித்தித்தன.) மனம் = அந்தப் பிராணனினின்றும் பஞ்சீகரண விஷயமான மனது,—தன் + பல லோகமும் = அதினின்றும் (சத்தியசப்தாபிதேயங்களான பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்கள், பூதோற்பத்தியனந்தரம்) அண்டோற்பத்திக் கிரமமாகப் பூமியாதிலோகங்களும்,—கன்மம் = (அவற்றில் வசிக்காநின்ற பிராணிகளில் மனுஷியாதிகளுக்கு) வருணாச்சிரம விகிதங்களான கருமங்களும்,— இத + முத்தியும் = இவற்றினின்றும் கற்பகோடிகாலம் [தத்வஞானபரியந்தம்] அழியாத முத்தியென்னும் பலமும் கிரமமாகவுண்டாயின என்று பொருள். முத்தி = சுவர்க்காதிபதவி.

யாதுமுணர்ந்தெவையுஞ்செயவல்லவனியாரியாவன்
போதமயந்தவமாவுடையன் னுளபோலேயன்
ஞாதிகளங்கணிகழ்ந்ததடங்கவிந்நாளுவா
மாதிவரும்பிரமங்கனவொக்குமதாயுங்கால். (எ)

வேறு:

அக்கரமாகிமெய்ம்மையாயுள்ளவப்பொருளறிந்தபோதல்லா
லெக்கருமங்களாலும்வீடில்லையாகமாதிகளியற்றுங்காற்
றுக்கரமாகியனித்தமாய்ப்பேறுஞ்சுருக்கமாயிருக்கமற்றிவற்றைத்
திக்கறியாதேமுயல்பவர்முத்திசெறிந்திடார்மரணமேசெறிவார். (அ)
கருமதற்பரராய்நாங்களேயெல்லாங்கற்றவரொன்றிருக்கின்ற
பெருமிதமுடையார்மூடரேபிறவாநெறியையும்பெறுகிலார்பிறவிக்
குருடர்கைப்பற்றிப்போகியகுருடர்குழியிலேகூடவீழ்வதுபோன்
மருவியவினையுந்தாங்களுங்கூடமாய்வதேயன்றிமற்றில்லை. (கூ)

வேறு.

தோலையுநல்வினைப்பயன்றொலைந்தபோதிலே
தலையதுகீழுறவிழுகைதப்புமோ

---

எ. செ-ள், [சொல்லிய அர்த்தத்தை உபசம்மாரஞ்செய்கிறார்.] யாதுமுணர்+வுடையன்—அங்கண் = அவனிடத்தில்—ஆதிவரும்பிரமம் = ஆதியிலுண்டாகப்பட்ட முற்கூறிய காரியரூபமான இரணியகர்ப்பனும்,—அன்னாதிகள் = விரீஹியவாதிலட்சணமான அன்னமும், தேவதத்தாதிநாமதேயமும், நீலபீதாதிரூபங்களும்—இந்நாளுவாமடங்கவுளபோலே நிகழ்ந்தது ஆயுங்கால் கனவொக்கும் என முன்பின் பதங்களெடுத்து அன்வயித்துப் பொருள்கொள்க. "போதமயந் தவமாவுடையன்" எ-ம், "உளபோலே" எ-ம் பாடபேதம். மூலத்துக்குமொத்தது.

அ. செ - ள், [இந்தப்பிரகாரம் பரவித்தியாவிஷயலக்ஷணமான பிரமத்தைச் சொரூபதடஸ்தலக்ஷணங்களால் உபதேசித்து, 'அக்கரமாகி மெய்ம்மையாயுள்ள வப்பொருளறிந்தபோதல்லால்' என்னும் வாக்கியத்தால் அதனதுஞானமே மோட்சசாதனம் என்றுபதேசித்து, சுருதிமந்திரங்களில், அபரவித்தியாவிஷயமான கருமங்களைச் சொல்லுதல் வைராக்கியத்தை உண்டுபண்ணும் பொருட்டாதலால், அது சித்தித்திருத்தலின் அக்கருமபாகங்களுக்கு வலிமையில்லாத ஓடங்கள் என்றதுமுதலான சுருதியிலுற் கூறப்பட்ட மோட்சசாதனபாவத்தன்மையையுங் கூறுகின்றார்.]

நிலையுறுமுத்திநேர்படுதனென்சிலே
யலைவறுஞானமுண்டாகிலல்லவோ. (௧௦)

சுருதியுமிருதியுஞ்சொன்னவாறுநின்
றிருமையுமனித்தமென்றேதும்விட்டுநற்
குருவினைவழிபடிற்கோதிலாவவ
னருளிடுமெழிவறநின்றவப்பொருள். (௧௧)

வேறு.

எங்குநிறைந்தபரத்தினிலோகமெழுந்தழியும்படிதா
னங்கியெழும்பொறிபோலுமகம்புறமாய்துமர்யையெனுங்
கங்குல்கடந்துயிருக்குயிராயொருகாலழிவற்றகமா
யங்கபிராணன்மனங்களறுஞ்சிவனுகியவக்கரமே. (௧௨)

---

௧௧. செ-ள், [இந்தப்பிரகாரம் சுருதி கூறிய அபரவித்தியாவிஷயமான கருமநிந்தையைத் தெரிவித்து, கருமத்தாற் சாதிக்கப்பட்டவுலகங்களைப் பரீக்ஷித்து என்ற சுருதி கூறிய வைராக்கியத்தைக் கூறுகின்றார்.] சுருதி+விட்டு—வைராக்கியத்தைப்பிராப்பிக்கவேண்டுமென்பார், 'ஏதும்விட்டு' என்றுங் கூறினார். [இந்தப்பிரகாரம் நித்தியாநித்தியவிவேகஞானத்தால் விரக்தனானவனுக்குச் சுருதியாதிகளாற் சொல்லப்பட்ட லக்ஷணமுடைய குருவழிபாடே கர்த்தவ்வியமென்று சொல்லுகின்றார்.]

௧௨. செ-ள், [இங்ஙனம் சாதனசதுஷ்டய சம்பன்னனுக்குப் பிரமஞான முபதேசிக்கவேண்டுமென்பது கூடும். "இப்பொருள் சத்தியம்" என்ற சுருதியினாற் பிரமத்துக்கே சத்தியத்வமென்பது அயுக்தம், ஜீவர்களும் வேறாகக் காணப்படுதலால் என்று சங்கித்து அவர்களும் பிரமத்துக்கு வேறில்லை என்று திருஷ்டாந்தத்தாற் கூறுகின்றார்.] எங்குநிறை+போலும் — சுவாலையுடைய அக்கினியினின்றும் பொறியுண்டாயினும் அதற்கன்னியமின்று; இங்ஙன் சித்துரூபர்களாகிய ஜீவரும் தேகேந்திரியாதி லக்ஷணவுபாதி ஜனனவசத்தால் சித்துரூபமாகிய பிரமத்தினின்றும் உற்பன்னர்களாகிச் சிவமென்னும் அக்ஷரத்தில் அவ்வுபாதி லயத்தால் பரிச்சேதமில்லாத மகாகாசத்திற் கடாகாசாதிகள்போல லீயமாவதால் அச்சிவத்திற்கு வேறில்லாதவர்கள் என்று பொருள். [ஜீவனைப்போல அந்த அக்ஷரமும் பிராணாதி சம்பந்தம் ஏன் உடைத்தாகாதெனச் சங்கித்துச் சர்வோபாதி விநிர்முக்தமான அந்தவஸ்துசொரூபத்தைச் சொல்லுகிறார்.] அகம்+வக்கரமே—

வேறு.

அங்கிதலைவாய்விவிதமானமறைபாணு
திங்கள்விழியெண்டிசைகளுஞ்செவிகள்வாயு
தங்குமுயிர்தன்னிதயமேசகலமுங்கா
லிங்கவனிசங்கரனிருக்கும்வடிவீதால். (௧௩)

அர்க்கன்மதியங்கிமழையாதிமறைநாலு
மிக்கமிகுயாகவிவிதங்களியமானர்
தக்கணைசுராசுரர்மனித்தர்பசுசாதி
யெக்கிருமிகீடமுமெழுஞ்சிவனிடத்தே. (௧௪)

மெய்ம்மைவிரதந்தவம்விருப்பமுதலாகுஞ்
செம்மைதருநல்வினைகள்செய்தனுபவிக்கு
மிம்மைமறுமைப்பயனைத்துமிறைவன்பாற்
பொய்ம்மையறவேநிகழினுங்கனவுபோலாம். (௧௫)

வரச்கடவுதெப்பொருளுமுன்புவருமாபோ
லுரைத்தபரனேயடையவாகியொளிர்கின்றா
னரிக்குமுனிகட்குமரனுக்குமறிவீதே
யிருக்குமதினையமொருகாலுமிதிவெய்தா. (௧௬)

வேறு.

மருவிவருமாயவிடயமயலாவிம்மநுடர்மரணதியிடரறு, வெருவு
பவவேலைவிழுவாழியாதவிமலசிவஞானவிழிபெறு, மொருபிரமஞான
மொழியவொருகாலிவ்வுதிகளையேயறவொணுமதோ, தெருள்செய்சிவ
ஞானம்வருவதிறைதாள்கள்செறியவருசேவைவலியினால். (௧௭)

௧௩. சே - ள், [இரணியகர்ப்பருடைய பிரமாண்டாந்தர்வர்த்தி யாய் அதன் அபிமானியாகின்ற விராட்புருஷருக்கும் பரசிவத்தினின் றும் உற்பத்தியும், அதற்கன்னியமில்லாமையும் பிரதிபாதிக்கிறார்.] அங்கி=தெய்வலோகம்—சகலமும்=சகலஜகத்தும்—பதங்கள்பூமிகை யாக உற்பன்னனுயினன் எ - து, சேஷம்.—இதுவடிவு = இங்ஙனங் கூறியவடிவுடைய விராட்டும்—சங்கரனிருக்கும்=உபாதி நீங்கிடில் பர சிவனுகவே யிருப்பர்—ஆக எ-து'வருவிப்பு.

௧௪. சே-ள், [முற்கூறிய சிருஷ்டியை விவரணஞ்செய்கின்றார்.]

௧௫. சே-ள், [இவ்வாறு சங்கிரக விஸ்தாரங்களாற் சிருஷ்டிப் பிரதிபாதனத்தால் அக்ஷரசொரூபத்தைப் பிரதிபாதித்து "புருஷனே இந்த விசுவம்" என்னும் சுருதியினுல் சிருஷ்டியானஜகம் அப்பரம சிவத்திற்கு அனன்யமெனஉபதேசித்த அர்த்தத்தைக் கூறுகின்றார்.]

வேறு.

அக்கரந்தனையிக்குரம்பையிலறியுமாகிலவிச்சையா
மிக்கிரந்திநசிக்குமீசனையெய்தலாமமுதென்பதும்
புக்கிருந்தபிராணனுமனமாவதும்பரபோதமே
மிக்கிருந்தவுளத்தினோர்விரகாலிதுள்புகமேவுவார். (கஅ)

தாரம்விற்கணைதானிலக்குளதத்துவந்தவறுதவா
றூர்குறித்தெயவல்லரப்பொருளிற்குளிப்பவரம்புபோற்
பேரிலக்கெயும்வில்லியப்படிபேசுநற்கணையெங்கணுங்
கூர்முகத்ததிலக்கிலம்புகுளிக்கையையுறல்கூடுமோ. (கக)

வேறு.

அரணியோடுத்தராரணியுயிருமமலவோங்காரமுமாக்கிக், காணிய
தியானமாமதனத்தாற்காணுமொளியினைக்காண்பர், புராணநல்லொ
ளியிற்பூதபௌதிகங்கள்பொருந்துயிர்புலன்கண்மற்றெல்லா, மாணுறக்
கோவையாகியேகிடக்குமதனையேயறிகுவனறிஞன். (உ0)

கக. சே-ன், [தியானப்பிரகாரத்தைக் கூறுகின்றார்.] தாரம்
வில் = ஓங்காரம் (எப்படி லௌகிகமானவில்லு லட்சியத்திற் சரத்திற்
குப் பிரவேசகாரணமாமோ அப்படி ஆன்மசரத்திற்கு லட்சியப்பிரமத்
தில் பிரவேசகாரணமாதலால்) தனுசு—உளதத்துவம் இலக்கு = பிர
மம் (சர்வவிருத்திகளின் சாட்சியாகிய சோபாதிகவான்மா உபாதி
பரித்தியாகத்தால் சரம்போல லட்சியப்பிரமத்தில் சுவான்மாவாகவே
அடைதலால்) லக்ஷியம்,—தான்கணை = ஆன்மா சரம்—அம்புபோல்
தவறுதவாறூர் குறித்தெயவல்லரப்பொருளிற் குளிப்பவர் என அன்
வயம்; இந்தத் தனுவாதி சாதனங்களால் விஷய திருஷ்ணுதிப் பிரமாத
மின்றிய ஏகாக்கிரசித்தத்தாற் புருஷனுனவன் வேதனஞ் செய்யத்
தக்கது; செய்யவே, எப்படிச் சரமானது லட்சியத்தில் ஏகீபவிக்கிற
தோ அப்படித் தேகாதிகளின் சாட்சி, சாட்சியமான வபிமானபரித்
தியாகத்தா லிலட்சியரூபமான பிரமத்தோடு ஐக்கியத்தையடைந்து
சத்ரூபனுகப் பவிக்கிறுன் என்றுபொருள். [லௌகிக லக்ஷியாதிக
ளினும் வைலட்சணங் கூறுகின்றார்.] பேரிலக்கெயும் + கூடுமோ—
லௌகிக லக்ஷியமானது பரிச்சின்னம், பாணமும் ஏகமுகம், எய்பவ
னும் ஓரிடத்திருப்பவன்; ஆதலால், அதற்கு லக்ஷியப்பிராப்தி ராகித்தி
யங்கூடும். இவ்விடத்தில் அதற்குவிலட்சணமாதலால் லக்ஷியப்பிராப்த
மாகும்.

உ0. சே-ன். [பிரணவத்தால் ஆன்மாவைப் பிரமரூபமாக வறி
யும் ஞானமானது மற்றோர் சுருதியிலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிற

பரம்பொருளினையேபாடுவான்வேறுபகருவானலன்பருகமிர்த
வரம்பதுவாகுமண்ணின்மற்றிந்தமகிமையேயுள்ளதிப்பிரம
புரந்தனிலிதயாகாசமேநிகழ்ந்தெப்பொருள்களுமறிந்தெலாம்வல்ல
வரன்றனைவெறுமானந்தவடிவாயறிந்தவர்மறுபிறப்பறுவார். (உக)

இதயமாமிந்தவிமலகோசத்தேயிரசமாய்விளங்குநற்பிரமந்
துதயமேவிடுமெச்சோதியேயெல்லாச்சோதிக்குஞ்சோதியாவதுவு
மிதயமேநிகழுமிதனைமெய்கண்டவிடத்தின்மற்றிதயநோயெல்லாஞ்
சிதையுமையுறவுந்தீருமெவ்வினையுஞ்செய்யினுஞ்செய்திலனுமால். ()

வேறு.

இலங்கிரவியிந்துவனருரகைமினெல்லா
நலம்பெறவிளங்குவதுஞானவொளிகொண்டே
புலம்படுமெனைத்தையும்விளக்குபரபோதந்
துலங்குவதுதன்னுடையசோதியதனாலே. (உஉ)

---

தென்று தெரிசிப்பிக்கிறார்.] அரணி+காண்பர்—எவ்வாறு கீழரணி மேலரணிகளால் மதனிக்கில் தாருவின் மிகுசூக்குமமான அக்கினியைப் பார்க்கிறார்களோ இவ்வாறு பிரணவத்தால் சாக்கிரதாதியவஸ்தைகளாற் குறிக்கப்பட்டுச் சின்மாத்திரமாய்ச் சொல்லப்பட்டதைப் பிரமசொரூபமாக அனுசந்தானிக்கின்றவன் அவ்வப்பியாசத்தால் அந்தச் சொரூபத்தைச் சாக்ஷாத்கரிக்கின்றான் என்றுபொருள். [கூறியவக்ஷரம் அதிசூக்குமமாதலால், துர்லக்ஷியமென்று கருதி மீண்டும் உபதேசிக்கின்றார்.] புரண+ண.றிஞன்.

உக. செ-ள், பரம்பொருளினையே பாடுவான் வேறு பகருவானலன்—[இதற்குக்காரணங் கூறுகின்றார்.] பருகமிர்தவரம்பதுவாகும்—வரம்பு=சேது—இவ்வான்மா சம்சாரசாகரத்தினின்றும் உத்தாரணம் பண்ணுவதாலும், அமிர்தத்வப்பிராப்தியான சேதுவாதலாலும் அதன் ஏகவிஷயமானவாக்கே உச்சரிப்பான் என்றுபொருள். [இவ்விதங் கூறிய ஆன்மா எவ்விடத்தடையத்தக்கவனென்றாற் சொல்லுகிறார்.] மண்ணின் உள்ளது=லோகத்திற்காணப்படுகிறது.—மகிமை=விபூதி —இஃது "தெப்பொருள்களு மறிந்தெலாம்வல்ல" என்று மேற்கூறப்படுவதேயாம்.

உஉ. செ-ள், [பிரமான்மஞானத்தினது பலத்தைச் சொல்லுகிறார்.]

உங. செ-ள், [எப்படிச் சோதிக்கெல்லாம் சோதியாகுமென்று சங்கித்து அதைப்பிரதிபாதிக்கிறார்.]

ஓரொளிவிளங்குகில தூதையுலவாத
சீரொளியில்வேறுசிலதேவர்திகழ்வாரோ
பார்வெளியுமெப்பொருள்களுந்திசைகள்பத்தும்
பேரொளிபெறத்திகழ்பரப்பிரமமேயாம். (உச)

வேறு.

இந்தவுடம்புறைசீவபரங்களெனப்படுமன்னமிரண்
டந்தவிரண்டிலொன்றுவினைப்பயனங்குநுகர்ந்திடுமாங்
கெதாந்தமறும்பரமொன்றுமுறுதுசொலப்படுபேதமில்வான்
வந்தகடத்திலகப்படுபேதமெனப்படுமாயையினால். (உரு)

வேறு.

தற்பானுருவஞ்சித்தேதற்பானிடையேயக்
கற்பிதசீவன்றானுமதானக்காலந்தச்
சிற்பொருளொன்றேவேறெனின்மற்றதுசித்தாமோ
வற்பமும்வேறாகாதுசித்தாகாரத்தாலே. (உசு)

பன்னுசடாகாரப்புணர்வாலேபரசீவர்
பின்னமொனிற்போதத்தொருபேதம்பிறவாதே
மன்னுசடத்தேபேதமதத்தான்மானத்தாற்
சொன்னவபேதப்பொருள்கலர்கண்ணிற்றோன்றாதே. (உஎ)

---

உச. செ-ள், இங்ஙனம் "சூரியாதிகள் விளங்கமாட்டாது" என்ற சுருதியின் றாற்பரியத்தைச் சங்கிரகித்துச் சொல்லுகிறார்.] ஓரொளி + திகழ்வாரோ—[இந்தப்பிரகாரம் பிரகாசசித்ரூபமான பிரமமானது சர்வஜகத்காரணமாதலால், அதற்கு யாதொரு சர்வான்மியத்வங் கூறப்பட்டதோ அதை யுபசம்மரிக்கின்றார்.] பார் + பிரமமேயாம்.

உரு. செ-ள், [ஈசுவரசித்து சர்வவிஷயமாயும், ஜீவசித்து பரிமித விஷயமாயும் காணப்படுவதால்அவர்கட்கு எங்ஙன் ஏகத்வங்கூடுமெனச் சங்கித்துச் சொல்லுகிறார்.] தற்பர + பொருளொன்றே. [அப்பேதஞ் சித்ரூபத்தாலா? அல்லது ஜடரூபத்தாலா எனவிகற்பித்துப் பிரதம விகற்பத்தை நிராகரிக்கின்றார்.] வேறெனின் + காரத்தாலே.

உஎ. செ-ள், [இரண்டாவது விகற்பத்தில் ஜடத்திற்கே பேத மன்றிச் சித்திற்கில்லை என்றுகூறுகின்றார்.] பன்னு + றோன்றாதே— மதம் = [யுக்தி.] சுருதியனுசாரதர்க்கம் — மானம் = பிரமாணம்—கலர் = பாபிஷ்டஜனங்கள்—கண் = புத்தி.

வேறு.

மறையாலுமிருதிசொலும்வழியாலும்வருவதவி
ரிறையார்தமருளில்வருவதுவேகமெனுமுணர்வு
பிறிவானதறுமுணர்வுபெறுமாகிலொருபொழுது
மிறவாதசிவமடையுமிடர்மோகமெவையுமிலன். (உஅ)

நிதமாவியுடலுறையவிறைமாயைசெயலதுயர்
விதநாடவரியகடல்விழும்வேறுபடவுணர
விதுநாளும்வருமிறைவனுருவாகுமிலதெவையு
மதுநானெனனுபவமதடைவோனொரலைவுமிலன். (உகூ)

வேறு.

சின்மயமாகுந்தன்மகிமாவைத்தீரவறிந்தானியாதொருபோதத்
தன்மயனாகுந்தன்னையகர்த்தாவாய்முழுதுக்குந்தானிடமாகிப்
பொன்மயனாகும்பூரணனவப்போதெதிர்காணும்புண்ணியகோடிப்
பன்மையினாலுந்தர்க்கொடுமானப்பார்வையினாலும்பரனருளாலும். ()

உகூ. செ-ள், ["இரண்டுபெட்சிகள்" என்றுசொல்லிய மந்திரதூற் பரிய வியாக்கியானத்தாற் பேதபட்சத்தை நிராகரித்துக் கீழ்ச்சொல் லியபொருளைச் சாட்சாத் பிரதிபாதிக்கின்ற மந்திரார்த்தத்தை விவரித் துக் கூறுகின்றார்.] இறையுடல் = சிவஸ்தானமாகிய சரீரத்தில் — நித மாவியுறைய = நிலைபெற்ற சீவன்தான் சிவனுகவேயிருக்கவும் — மாயை செயல = மனோமாயையின்வசத்தால், (மலிவுபாதியான மலினசத்துவப் பிரதான அவித்தையின்வசத்தால் என்றுமாம்) — விதநாடவரிய துயர்க் கடல் விழும் = அநேகப்பிரகாரமான துக்கசாகரத்தில்வீழ்ந்து சோகப் படுவன்; — இலதெவையும் = (உற்றுணரில்) இல்லாததாயழியும் இச்சகத் தினைத்தும் — இதுநாளும் — வேறுபடவுணரவரும் = தனக்கன்னியமா யறிந்து உபாசித்துவந்த — இறைவனுருவாகும் = பரசிவசொரூபமேயாம்; — அது நான் என் அனுபவமது அடைவோன் = அப்பரசிவசொரூபமே நான் என்னும் நிச்சயரூபமான சுவானுபூதியையுடையவன் — ஓரலைவு மிலன் = ஓர்துக்கமுமிலனவன். — எ-று.

௱௦. செ-ள், — [ஆகாமிய ஜனனவாரம்பகங்களான புண்ணிய பாபங்களாற் பிரதிபந்திக்கப்பட்ட பாவித்தையினால் எங்ஙன் ஜீவனுக்கு முத்திகூடுமென்ற சங்கைக்குச் சொல்லுகிறார்.] யாதொருபோது சின் மயமாகுந் தன்மகிமாவைத்தீர வறிந்தானப்போது அத்தன்மையனாகுந் தன்னை யகர்த்தாவாய் முழுதுக்குந்தானிடமாகிப் பொன்மயனாகும் பூர ணன எதிர்காணும் என்பதன்வயம். பொன்மயன் = பொன்போன்

வேறு.

பாவபுண்ணியங்களிரண்டையுமுதறிப்பற்றுவீடொன்றொடுமின்றி
யாவையுந்தானுய்வேறிலாதவனொப்பெய்துமற்றிப்பொருளறிந்தான்
சீவனும்பரனுஞ்சின்மயமாகுமாதலாலொப்பெனச்செப்பன்
மேவியொன்றாகிவிடுதலேயன்றிவேறுவேறாகுமோவீடு. (௩௧)

உடம்புடன்புணர்ப்பாற்சீவனுக்கிறையோ டொப்புளதென்னி லொப்பில்லை, கடந்திகழ்வானின்வானம்வேறாகக் கருதியொப்புரைப்ப ரோவொப்பா, யிடுந்திறங்கன்மத்தாலெனிற்கன்மமிறக்குமேவிச்சையா லென்னிற், றிடம்படமுன்பேயுள்ளதேஞானந் திகழ்த்துவதில்லது திகழ்த்தா. (௩௨)

---

வுருவினையுடையவனாய்—பூரணன் = பூரணனாக—எதிர்காணும் = பிரத்தியட்சமாகப்பார்ப்பன்.—[ஏதுகூறல்] புண்ணிய+பானருளாலும்= அனேககோடிகற்பங்களில் ஆர்ச்சித்த புண்ணியபுஞ்சத்தாலும், தர்க்கத்தினாலும், பிரமாணவாராய்ச்சியாலும், பரமேசுவரப்பிரசாதத்தாலும்.—

௩௧. செ-ள்,—இப்பொருளறிந்தான்=முற்கூறியலட்சணமுள்ள பரசிவத்தைச் சுவான்மாவாகவறிந்த வித்துவான் — பாவபுண்ணியங்கள்=ஆகாமிய ஜனனத்தைக்கொடுக்கும் சஞ்சிதகர்மங்கள்—ஒன்றொடும்= (அவைக்கேதுவாகிய தேகேந்திரியாதிகளில்) ஒன்றுடனும்—பற்றுவீடின்றியாவையுந்தானாய் வேறி [பின்னமில்] லாதவன் (ஆய்)—ஒப்பெய்தும் = பரமாத்மைதலட்சணமான சிவசாமியத்தையடைவன். —[சமபாவத்தை மறுக்கவேண்டிச் சின்மாத்திர ரூபர்களாயுள்ள சீவேசுரர்களுக்குச் சாமியமா? அல்லது, சோபாதிகர்கட்கா என்றுசங்கித்துச் சொல்லுகிறார்.] சீவனும்பரனுஞ் சின்மயமாகு மாதலாலொப்பெனச் செப்பல் (எங்ஙன்)—மேவியொன்றாகி விடுதலேயன்றி—வேறுவேறு வீடாகுமோ = பேதம் பேதமாயிருக்குகை மோட்சமாமா? ஆகா.— சின்மாத்திரம் பேதவர்ச்சிதமென்பார், 'மேவியொன்றா+வீடு' என்றார். சாமியம் என்பது, பேதாபேக்ஷையாகையால் சித்ரூபத்தில் பேதங்கூடாதென்றறிக.

௩௨. செ-ள், [துவிதீயவிகற்பத்தை நிராகரிக்கிறார்.] உடம்புடன் புணர்ப்பால் = உபாதிசம்பந்தரூபத்தால்—சீவனுக்கிறையோடொப்புளதென்னில்—ஒப்பில்லை = (இவர்கட்குக் கிஞ்சிஞ்ஞத்வ, சர்வஞ்ஞத்வாதி தர்மங்களால், அத்தியந்தம்வைலக்ஷணியமிருத்தலால்) சாமியங்கூடாது. —[உபாதி சம்பந்தத்தாற் சாமியங் கூடாதென்பதைத் திருஷ்டாந்தத்தாற் கூறுகின்றார்.] கட+ப்புரைப்பரோ—[இவ்வாறு சொரூபபரியாலோசனையாற் சாமியமின்றென்றுகூறிக் காரணபரியாலோசனையாலும் சாமியங்கூடாதென்று சொல்லுகிறார்.] ஒப்பாயிடுந்+திகழ்த்தா.

எப்படியாலும்பண்டுமிப்போதுமெப்பொழுதுஞ்சிவசீவர்க்
கொப்புளதாகுமுருவமொன்றுனவுண்மையால்வேறுமுறதொன்றே
யப்படியுள்ளசிவன்பிறர்போலவவிச்சையானிகழுமவ்வவிச்சை
மெய்ப்பரவிச்சையானசித்தொன்றாய்விடுதலொப்படைதல் வேறன்றே.

வேறு.

சீவன்றன்னுருவானசிவத்தைத்தெளியிற்றான்
மேவும்பலதொழிறன்னிடையாலேவிளையாடும்
யாவுந்தன்னுருவாகிநிகழ்ந்தாலிவன்முத்த
ஞவன்பண்டவனுகாமையின்முத்தனுமாகான். (௩௪)

வேதம்பகர்வழியேவந்தவர்கடமெய்க்குள்ளே
யோதும்பரவொளியேகண்டுணருவவொன்றுமப்

---

௩௩. செ-ள்,—[முற்கூறியசாமியமும் வித்தியாசாத்தியமென்றால் பூர்வசித்தத்வம் பலிக்குமென்று யாதொரு அர்த்தமானது சொல்லப்பட்டதோ அஃதிஷ்டந்தானென்று அங்கீகரித்துச் சொல்லுகிறார்:] எப்படியாலும்+தொன்றே — சின்மாத்திர சொரூபமான சாட்சியானது, சாட்சியப் பிரபஞ்சமெல்லாம் விளக்குதற் கேதுவாயிருத்தலின் சர்வதாசத்பாவமாதலானும், பரமப்பிரேமைக் கிருப்பிடமாகலிற் சுகரூபமாதலானும், அங்ஙனமே "சத்தியஞானனந்தம்பிரமம்" என்று சுருதியாற் கூறப்பட்டதனுனும் இவ்விருவர்களுக்கும் சமானலட்சணமிருத்தலில் ஏகத்தன்மை எப்பொழுதும் சித்தமாயிருக்கின்றதென்று பொருள். 'அப்படியுள்ள சிவன் பிறர்போல வவிச்சையா னிகழும்' எ-து, அவித்தையானது சுபாவமாக மித்தியாபூதமாகையால் பரசிவசொரூபத்திற்குப் பரமார்த்தமாக ரூபபேதத்தை யுண்டுபண்ணுமையாலாம்; அவ்வவிச்சை மெய்ப்பரவிச்சையால் நசித்து — ஒன்றாய்விடுதல்=சுவசித்தமான ஏகத்துவமாக அவசேஷித்தலே—ஒப்படைதல்=முற்கூறப்பட்ட சாமியமாதல்—வேறன்று=அன்னியமன்று.—எ-று.

௩௪. செ-ள், [கூறியவர்த்தத்தை நிகமனஞ்செய்தலோடு "பிராணனல்லவா இவன்" என்ற சுருதிவாக்கியார்த்த தாற்பரியத்தையும் சங்கிரகித்துக்கூறுகின்றார்.] சீவன்—தன்னுருவானசிவத்தை=தனது ஆன்மரூபமான நிஷ்பிரபஞ்சபரசிவரூபத்தை—தெளியில்—தான்மேவும் பலதொழில்= தான்செய்யப்பட்ட தியானபூஜாதி நானுக்கிரியைகளை—தன்னிடையாலே விளையாடும்=சுவான்மவிஷயமாகவே கிரீடிப்பன்—யாவுந்தன்+முத்தனுமாகான்.—எ-று.

௩௫. செ-ள், [இனிப்பரவித்தியோத்பத்திக்குச் சககாரி சாதனத்தைத் தெரிசிப்பிக்கிறார்.] வேதம் பகர்வழியே வந்தவர்கள்='ஆன் ஸ்ரீ-

போதந்தனையடைவார்ங்கொருகதிபோய்மீள்
ரோதுந்திகழ்தருவரென்ங்கொழிவுசெய்தேகுந்தான். (௩௫)

வேறு.

வாக்கினுலுணக்குமாறிலாப்பொருளைமற்றுள்புலன்களொன்றாலே
நோக்குமாறென்றுங்கருமமொன்றாலுநுவல்தவத்தாலுநண்ணுதே
தாக்கிலர்வந்தக்கரணமதுடையார்தத்துவஞானநல்விழியாற்
போக்கிலாதெங்குமர்கியபொருளைப்புரையறக்காண்பரெப்பொழுதும்.

அருளினைத்திருமேனியிற்றரித்தருளுமகிலநாயகனையெப்பொழு
தும், தெருளுறத்தியானம்பண்ணுமேகாந்த சித்தரார்ற்றெளிவுறும்பொ
ருளிப், பொருளிதனிடத்தேயைவகைப்பட்ட பொருள்களும்பொருளி
னுட்பத்தா, லொருவருமறியாரரியதென்றிகழாதொருப்படவேண்டுமீ
தொன்றும். (௩௭)

வேறு.

எத்தைப்பெறமுயல்கின்றாரதுபெறுகின்றாரதலிலெப்போது
நித்தீத்துவமெனுமொன்றைப்பெறநினைகின்றனருளினினோர்பாடா
மத்தத்துவமுனிதன்னைப்பொருள்தனலுந்தனதுடலாலுங்கூடப்
பத்திப்படுமனஞலர்ச்சனைநனிபண்ணப்படுவதுபவவீடாம். (௩அ)

---

கேட்கத்தக்கவர், பார்க்கத்தக்கவர்; தியானிக்கத்தக்கவர், என்று வேதத்
திற்பிரதிபாதியாநின்ற மார்க்கமாக வந்தவர்கள்—தமெய்+கண்டுணரு
வார் [பூரணன்மவஸ்துநிஷ்டனுக்குக் கமனுதிகளில்லையென்று திருஷ்
டாந்தத்துடன் கூறுகின்றார்.] ஒன்றமப்போ+தேகுந்தான்.—எ-று.

௩௬. செ-ள், [ஆன்மா பரிபூரணபரசிவசொரூபத்தை அடை
தற்கு அசாதாரணகாரணத்தைத்தெரிசிப்பிக்கிறார்.] வாக்கினுலு+நண்
ணுதே—[சட்சுவாதிகளாற் கிரகிக்கக்கூடாதாயின் மற்றெப்படி அஃ
தடையப்படுமென்னிற் சொல்லுகிறார்.] தாக்கிலாவந்தக்கரணமதுடை
யார்=சுத்தாந்தக்கரணத்தினையுடைய புருஷர்—

௩எ. செ-ள், [விசுத்தசத்துவகுணத்தை யுடையவனுக்குச் சகு
ணத்தியானமும், நிஷ்களஞானேற்பத்திக்குக் காரணமென்று கூறு
கின்றார்.] அருளினை+இப்பொருள்— ["இவ்வணு ஆன்மா" என்ற
சுருதிவாக்கியத்தைச் சங்கிரகிக்கின்றார்.] இதனிடத்தே+மீதொன்
றும்—ஐவகைப்பட்ட பொருள்களும்=பிராணன்து விருத்திபேதங்க
ளான பிராணுபாஞதி ஐந்தும் (உள்ளன.)—நுட்பம்=சூட்சுமம்.—

௩அ. செ-ள், [இவ்வாறு சர்வான்மாவான பரசிவத்தைத் தானாக
வடைந்தவித்துவானுக்குச் சர்வாப்திலக்ஷணமான பலத்தைக் கூறுகின்
றார்.] நேர்பாடு=நினையாமல் வருகின்றது—

வேறு.

எண்ணிலாக்கல்வியாலுமிலங்கியகேள்வியாலுந்
திண்ணிதாமதியினாலுந்தெளியவாராதுதீர
நண்ணியஞானிதானேநயந்தருள்செய்யின்ஞானக்
கண்ணினற்காணலாகுங்கரத்திலாமலகம்போல. (௩௯)

அயர்ச்சிமிக்கிருப்பானாலுமரும்பிணியாளனாலு
முயற்சியிற்றமோகுணத்தான்மூடிடப்பட்டானாலுஞ்
செயப்படாதுண்மைஞானந்தெள்ளுமாமதியாற்கால
வயத்தினாற்சத்துவத்தின்வலியினாலன்றிவாரா. (௪0)

இப்பரம்பரனைச்சேர்ந்தாரேகமாம்பொருளதாகித்
தப்பறுஞான்மெய்திச்சார்ந்தராய்த்தாபமாறி
யெப்படியாலுமெல்லாப்பொருள்களுமெய்தியிங்கே
யப்பொருடமக்குள்ளாகவவைதனக்குள்ளுமாவர். (௪௧)

---

௩௯. செ-ள், [ஆன்மதத்துவமானது கூறியவுபாயத்திற்கு அன்னியவுபாயங்களால் அறிதற்கசக்கியமென்று தெரிசிப்பிக்கிறார்.]

௪0. செ-ள், [ஞானசகாயங்களானபெலாதிகள் சம்பாதிக்கவேண்டுமென்றுபதேசிக்கின்றார்.] அயர்ச்சி + ஞானம் = விஷயசங்கநிமித்தமான எத்தத்துவ அனவதானமுண்டோ அவ்விதப்பிரமாத மிகுந்துள்ளவனாலும், லிங்கமென்னும் யாதொரு பாரமார்த்திக சந்நியாசமுண்டோ அவ்விதசந்நியாசதர்மரகிததவமுடையோனாலும், ஆன்மதத்துவானுசந்தானஜனிதபுத்தியுச்சாக கிருதவீரியமின்றித் தமோகுணத்தினால் மூடப்பட்டவனாலும் தத்துவஞானம் அப்பியசித்தடையப்படாது — தெள்ளுமாமதி + லன்றிவாரா — இதனால் அப்பிரமாதமும், சந்நியாசசகிததபசும், முற்கூறியபெலமும் அந்தஞானோபாயங்களாகின்றனவென்றுதெரிசிப்பிக்கப்பட்டது; இச்செய்யுளில், "அரும்பிணியாளன்" எ-ம், "காலவயம்" எ-ம் கவிநாயகராற்கூறிய இருபதங்கட்கும் பாரமார்த்திகசந்நியாச தர்மரகிததபசு எ-ம், சந்நியாச சகிததபசு எ-ம் வடநூல் வியாக்கியானத்திற் பொருள் கூறியிருப்பதால், இச்செய்யுள் முதனூற்கு முரணாமோவெனின்? அவ்வித சந்நியாசமின்மைக்கும், உண்மைக்கும் அரும்பிணியும், அஃதின்மையுமான பருவமேதுவாதலின், முரணாகாவென்க.

௪௧. செ-ள், [வித்துவான்கள் பிரமகைவல்லியத்தைப் பிராப்பிக்குந்தன்மை எங்ஙனென்னின்? அதைத்தரிசிப்பிக்கிறார்.] இப்பரம்பரனை = பிரகிருதமாயுள்ள அக்ஷரப்பரப்பிரமத்தை—

வேறு.

அந்தமாமறையாளுடியபொருளையழகுறவறுதியிட்டல்லற்
பந்தமாமயற்பற்றறுத்தமாதவரிப்பரமயோகத்திலேயெல்லாம்
வந்துமாய்விடமாயனைத்தினும்பரமாய்மதிக்கொணுமாயையினுடைய
வந்தகாலத்தேயந்தமற்றிந்தவமிர்திஞலரியவீடடைவர். (௬உ)

வீடிலாவினைகள்கலைகண்மூவைந்தாம்விடயவிந்தியவதிபதிக
ளோடுசேதனஞஞ்சீவன்மற்றனைத்துநாதஞாலயநண்ணிப்
பாடுபேருருவமொன்றுமற்றந்தப்பரமனேயாய்விடும்பார்மே
லோடுமாறெல்லாமுததிபுக்கொன்றுயுருவுபேரொழியுமாபோல. (௬௩)

வேறு.

மிக்கநற்பிரமஞானமுற்றபொழுதேவெறும்பிரமமாய்மனத்
துக்கமற்றிடுவர்தொல்லைவல்வினைதுவக்குமாறுமிலர்துஞ்சிடார்
பொக்கமற்றொருவனிச்சகத்திலநுபோகமாயறியுமாயின்மே
லத்குலத்தினிலொருத்தரப்பிரமவித்தாவதிலாணையே. (௬௪)

---

௬உ. செ-ள், [பாரமார்த்திகசந்நியாசசகிதமாயுள்ள ஆன்மஞான நிஷ்டையே மோட்சசாதனமென்று மேலும் உபதேசிக்கிருர்.] இ-ம், இந்தப் பிரமத்திலிருந்தே ஞானத்திஞலேஉபாதிலயமாகும்போது கடகடாதிநாசம் வரும்போது அவற்றிலுள்ள சூரியப்பிரதிபிம்பமானவை கள் சூரியனிடத்தில் எப்படியோ அப்படிப்போலே ஆகிருர்கள் என்பதாம்..

௬௩. செள், [அந்தமுத்தனுடைய பிராணுதிகலைகள் எப்படியாமென்று சங்கித்து அதைப் பிரதிபாதிக்கிருர்.] வீடிலா+விடும்—பிரசிஞேபநிஷதத்திற்கூறிய "பிராணன்,சிரத்தை, ஆகாயம்,வாயு,அக்கினி, ஜலம், பிருதிவி, இந்திரியம், திவி, மனம், அன்னம், வீரியம், தவம், மந்திரம், கருமலோகங்கள், உலகங்களின் நாமம்" என்னும் இத்தப்பதினறுகலைகளும் சம்சாரிகட்குத் தேகாந்தரங்களைக் கொடுக்கின்றனவாயினும் வித்துவான்களுக்கு முத்திகாலத்தில் வேறில்லாதனவாகித் தமக்குக்காரணமாயுள்ளவற்றை அடைகின்றனவென்க.—[அந்த விஷயத்தில் மேலுந் திருஷ்டாந்தத்தைத் தரிசிப்பிக்கிருர்.] பார்+போல—

௬௪. செ-ள், [ஜீவப்பிரமபேதத்திற்கு அவித்தியாமாத்திர நிபந்தம் (ஏது) ஆனதால் அவித்தியாநிவிர்த்திசாதனத்தை யபேக்ஷியாமல் வேதனமாத்திரத்தாற்கண்டசாமீகரம்போற் பிரமப்பிராப்தி சித்திக்கின்றதெனத்தரிசிப்பிக்கிருர்.] மனத்துக்கம் = கைவல்லியநிமித்தமான மானசந்தாபம்—வினை = சம்சாரபந்தஹேதுவாயுள்ள தர்மாதர்மம்—துஞ்சிடார் —[அவனுடைய குலத்தில் அப்பிரமவித்துண்டாகானென்று கூறுகின்றுர்.] பொக்க+ாணையே—

சோகமோகபடலத்தினைக்கடிதொழிப்பதாகிவெறுமுண்மையா
யேகபோகசுகரூபமெய்ப்பொருளெறிப்பதாகியுளசோபனந்
தூகமோடும்வகையிங்கொர்நாவிலிதுசொல்லலுற்றதிதுதொல்லையே
பாகமாகியவிரோதமானபரிசுத்தநெஞ்சிடைபரிப்பதே. (௬0)

வேறு.

அச்சமாகியவெம்பிறவியைவேரோடறுப்பதாயறிவதற்கரிதாய்
மெய்ச்சொரூபானந்தன்றிருமேனிவிளக்குவதாய்மிகுத்துள்ள [ய்போ
விச்சையின்றன்மைவிண்ணவர்க்கெல்லாம்விளங்கவேவிளம்பினன்மெ
லிச்சகமெல்லாம்படைத்துமெய்யன்புரிதயபங்கயத்தில்வீற்றிருப்பான்.

ஏழாவது,

## முண்டகோபநிஷத்தாத்பரியமுனாக்குமத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௬0.

---

எட்டாவது

## கைவல்லியவுபநிஷத்தாத்பரியமுறைக்கு மத்தியாயம்.

### அவதாரிகை.

[மேலும் கைவல்லியவுபநிஷத்திற்கும் பூர்வங்கூறிய பிரமான் மைக்கிய பரத்வமுண்டென்று தெரிசிப்பிக்கிறதற்காக அந்தவுபநிஷதார்த்தத்தைச் சங்கிரகிக்கின்றார்.]

நனிவேதநாலுமுகமாகமேவிநளினாலயத்திலுறைவா
னனுபேர்கமாகவருளாலறிந்தவவரோபரத்தையறிவார்
தனிமேவுவார்கள்பெறுஞானமாகுமிதுசாதனங்களுடைய
முனிமேவுஞானதெனுமாறுவேதமொழியோதுமாறுமொழிவான். ()

---

௬௫. சே-ள், [பிரதிபாதித்தவுபநிஷதார்த்தத்தை நிகமனஞ் செய்கின்றார்.] நிகமனம்=உறுதிப்படுத்தித் தீர்மானித்தல்—

வேறு.

ஈசனென்றியம்புமொன்றையிப்பிறப்பறுப்பார்தம்மான்
மாசறவறியவேண்டும்வருந்தியுமறிந்துநன்றாய்ப்
பாசமானதுகெடுத்துப்பரப்பிரமத்தைநல்குந்
தேசுடையிந்தவிச்சைசேர்வறத்துறந்தோர்செய்வார். (௨)

முத்தியின்விருப்பத்தாலுமுதலவனற்பாதத்திற்
பத்தியினாலுமற்றப்பரனையேபாவிக்கின்ற
நித்தமாந்தியானத்தாலுநிரந்தரயோகத்தாலுஞ்
சித்தியாமிதுசித்திக்கும்வினையினாற்சித்தியாதால். (௩)

வேறு.

திரமாமருத்தத்தினான்மைந்தராலுந்தீராதவற்றின்றியாகத்தினா
லே, யுரமானவேதாந்தமாவாக்கியத்தாலுற்பன்னமாம்விச்சையாநிச்சய
த்தாற், பரமானவஞ்ஞானவந்தத்திலேயப்படிஞானவுபதேசமொன்றா
லுமேயிப், புரமாமுடம்புக்குளேயுந்தமுத்திப்பொருள்கண்டுவீடெய்து
வாரிப்புவிக்கே. (௪)

---

௨. செ-ள், [வித்தியாவிஷயத்தைப்பிரதிஞ்ஞை செய்கின்றார்.] ஈச + வேண்டும் — [இவ்விதம் வித்தியாவிஷயத்தைப் பிரதிஞ்ஞை செய்து, அவ்வித்தையின் பிரயோஜநத்தையும், அதற்கதிகாரியையும் தரிசிப்பிக்கின்றார்.] வருந்தி + செய்வார் —

௩. செ-ள், [அவ்விதப்பாவித்தையுதிப்பதற்கு அனுகூலசாதனங்களையுபதேசிக்கின்றார்.] முத்தி + சித்தியாதால். முத்தி = அனர்த்தநிவிர்த்தி, பிரமப்பிராப்திரூபமோட்சம் — பத்தி = பரசிவனது திருவடியில் நமது குருமூர்த்தியென்றுள்ளபத்தி — தியானம் = சசாதீயப்பிரத்தியயப்பிரவாகரூபதியானம் — யோகம் = மேற்கூறப்படும் யோகம் — சித்தியாமிது = வித்தையாகிய இப்பொருள் —

௪. செ-ள், [இவ்வனைத்தும் பரவித்தியோத்பத்திக்குச்சாதனம்; இவ்வித சாதனசம்பன்னனுக்கு ஏஷணாத்திரயத்தியாகமே மோட்சசாதனமன்றி அன்னியமன்றென்று தெரிசிப்பிக்கிறார்.] திரமா + ராலும் — தீராது = பிரமவித்தையானது லபிக்கமாட்டாது. — [மற்றெதனாலிலபிக்குமெனில்,] அவற்றின் தியாகத்தினாலே(யே லபிக்கத்தக்கது.) [பரவித்தியோத்பத்திக்கு அசாதாரணகாரணம், அதனால் அதிகாரிக்குறும்பலன் இவற்றைக் கூறுகின்றார்.] உரமான + புவிக்கே — இவ்வாறு விஷயம், பிரயோஜனம், சாதனம், அதிகாரி என்னும் இவைகளுடன் பரவித்தையின் சொரூப முபதேசிக்கப்பட்டது;

வேறு.

தக்கஞானத்தைத்தான்பெறற்பொருட்டுத்தனியிடந்தனையடைந்திதய
துக்கமேவாமற்சுகாசனத்திருந்துதோடலைகழுத்துடம்பிவைநே
ரொக்குமாறிருத்திப்பூதிகொண்டிந்தவுடம்பையுத்தூளனம்பண்ணி
மிக்கவாய்வருமிந்தியங்களையெல்லாம்விடயமேலெழாவகைவிலக்கி. ()

பத்தியாற்றூரவன்பதம்பணிந்திதயபங்கயந்தனைநினைந்ததிலே
நித்தமாயொருவராணினைப்பரிதாய்நிமலமாயெங்கணுநிறைந்து
சுத்தமாய்ச்சாந்தமாயனைத்துலகுந்தோற்றுதற்கியோனியாய்ச்சுபாவ
சித்தமாயமுதாயருவமாயொன்றாய்ச்சிற்சதானந்தமாய்ச்சிவமாய். (௬)

உரியால்வேதத்தோமெனும்பொருளாயுள்ளதாயுள்ளவெப்பொருட்கு
கரியதாய்நின்றவொன்றினைக்காளகண்டமுங்கண்ணொருமூன்றும் [ங்
பிரிவிலாமங்கைபாகமுமாகப்பேணுநற்பாவனைபெறுவா
னரியதாயருளினால்வரும்விச்சைய்தனினாலதனையேயடையும். (௭)

வேறு.

தெரிவரியசிற்கனமாய்த்திகழ்சிவனேதிசைமுகனு
மரியுடனவ்வரனுமவனவனமரர்க்கதிபதியுந்
துரிசறவேயக்கரமாய்ப்பரமாகுஞ்சுராட்டுமவ
னெரியுமழல்காலனவனிந்துவொடுபிராணனவன். (௮)

ஒழிந்ததொருபொருளில்லையுள்ளதெலாமவனேமுன்
கழிந்தபொருண்மேலும்வரக்கடவபொருடானுமவன்
மொழிந்ததனிபுலவிச்சையவிச்சையெனுமுற்றுமவ
னிழிந்தபிறப்பறவேறோர்வழியில்லையிவனொழிய. (௯)

வேறு.

இன்னதெனுமற்றன்னிடைக்காணத்தன்னையெப்பொருளினுங்காணு
முந்நிலையடைந்தாலவன்பிரமத்தையடையும்வேறொன்றினாலடையான்
றன்னையுமோங்காரத்தையுமரணியாக்கியத்தத்துவஞான
வன்னியைத்தியானமதனம்விட்டெழுப்புமதியினார்வன்பவஞ்சேரார்.()

---

௫. செ-ள், [இனி அதன் சாதனபூதமான யோகத்தைத் தரிசிப்பிக்கிறார்.]

௮. செ-ள், [ஞேயமொன்று உபதேசிக்கப்பட்ட பரசிவனே சர்வான்மனென்று மேலும் உபதேசிக்கின்றார்.]

௧௦. செ-ள், [அந்த ஞானமே முத்திசாதனமென் றுபதேசிக்கின்றார்.] இன்னதெனு+லடையான் — [இவ்வித ஞானோற்பத்தி பிரதிபந்த பாகுள்யத்தாற் சம்பவியாதென்று சங்கித்து அதன் நிவிர்த்தியுபாயங் கூறுகின்றார்.] தன்னையும்+சேரார்—

தாக்கரும்பரமன்றன்சுதந்தரத்தாற்றன்னுடைமாயைதன்னாலே
யாக்கினனிந்தவுடம்படைந்தறியான்போலநின்றனைத்தையுமதிலே
சீக்கிரத்தென்னுமிடம்வகுத்தன்னபானமுந்தையலார்முதலாம்
போக்கியங்களையும்புசித்திடுங்கனவும்பண்ணியத்தன்மையேபுசிக்கும்.

உறங்குமவ்வியத்தமன்னியதமத்தினுட்புகுந்தொன்றொழியாம
லிறந்தவவ்விடத்தேதன்னுருவானவின்பமேபுசிக்குமீண்டெழுந்து [ஞ்
கறந்துபோனவையடையினுமடையுங்கனவைவந்தடையினுமடையு
சிறந்தமுப்புரமுமிவன்விளையாடித்திரிதரச்செய்ததேதிகழ்த்தில். (கஉ)

சொல்லிடும்பொருள்களியாவையுங்கடந்துசுதந்தரனாய்த்துவக்கின்றி
யெல்லைதீரின்பமேவடிவாகியிருந்துளவிறைவனுக்கென்று
மல்லலுண்டாகாதிவையனுபவிக்கவன்னியமாகவோர்சீவ
னில்லையேபேதமின்மையாற்சடந்தானெங்ஙனேபுசிக்குமாறியம்பீர். ()

ஆதலாலறிவானந்தமாயுள்ளவமலனேயவைபுசிக்கின்றா
னீதெல்லாம்விளையாட்டேவிளையாடுமிடங்களேயிப்புரமூன்று
மாதலாற்காமைசொல்லவும்படுமோவதிசுதந்தரனையன்னியமா
மோதலாமோவிப்புரங்களுமவன்றனுருவமேயொழிவிலாமையினால்.

---

கச. செ-ள், [சாக்கிர சொப்பனாதி யவஸ்தைகளில் சுகதுக்கங்களை யனுபவியாநின்ற சம்சாரியான ஜீவன் சர்வஞ்ஞ சர்வசுதந்தரப் பரமேசுவரனோடு எப்படி ஏகத்வமாவனென்று சங்கித்து உத்தரமருளிச்செய்கின்றார்.]

கரு. செ-ள், [பரசிவந்தான் ஜீவரூபனாக ஸ்திதனாயிருக்கிறானென்றால் அவ்விதபோகமும் ஈசுவரனுக்கே பலிக்கிறதென்று நேரிடுகிறது; ஈசுவரனுக்குப் போகமில்லையென்று பூர்வந் தரிசிப்பிக்கப்பட்டிருக்கிறதுகொண்டு அன்னியோன்யம் விரோதம்போலவே காணப்படுகிறதென்று சங்கித்து உபதேசிக்கின்றார்.] சொல் + லுண்டாகாது— [சித்ரூபபரசிவனுக்கு ஸ்தானத்திரய போகமானது, துக்கவேதுவாகாதென்பது சத்தியமாகட்டும்: சீவன் போகபரதந்திரனாகக் காணப்படுவதால் அவனுக்கு அது வாஸ்தவமாகவுளதென்று என் சொல்லலாகாதெனச் சங்கித்து உத்தரமருளிச்செய்கின்றார்.] இவையனுபவி + மாறியம்பீர்—

கசு. செ-ள், [இந்தச் சாக்கிர, சொப்பன, சுழுத்தியவஸ்தைகளில் ஜீவபாவத்தையடைந்துள்ள பரசிவனுக்கு வாஸ்தவமாகப் போகங்கூடாமையால் அவ்வவஸ்தா நிர்மாணங்களும், அவற்றின் போகங்களும்

மாலுறு நனவுகனவுறக்கங்கள்வடிவமாநிகழ்ந்துளவிறைக்கு
ஞாலமேவிசுவன்றைசதன்பிராஞ்ஞனுமமாநவிலுவரடைவே
தூலமேவிசுவனுண்பனசுருக்கந்தைசதன்றுய்ப்பனசுகந்தன்
பாலதாதலினுற்றன்னுடையின்பம்பருகிடாநிற்குமேபிராஞ்ஞன் (கடு)

வேறு.

புரங்கண்மூன்றிலும்போக்கியமியாவையுந்
திருந்துதுய்ப்பவனியாவன்மற்றியாவையும்
பரம்பிரமமெனும்படிபார்ப்பவ
னரந்தையெய்திடானுயிரஞ்செய்யினும். (கசு)

லீலாமாத்திரமென்று தெரிசிப்பிக்கிறார்.] இப்புரமூன்றும் விளையாடு மிடங்களே=இந்தத் தாமத்திரயங்களும் அவன் விநோதிக்கும் உத்தியானவனங்களே—ஆதல் ஆகாமை சொல்லவும்படுமோ=ஓர் பயனுள வாதலும், உளவாகாமையும் அவனுக்குக் கூறப்படுமோ? படா—(அவை யாதினுலென்னின்? அன்னோன் ஆப்தகாமனுதலால் அன்னிய பயனின்மையின் என்க.) [அவரது கிரீடார்த்தமாயேனும் ஸ்தானத்திரயமிருக்குமாகில் துவைதப்பிரசக்தி வருமென்றும் சங்கித்துபதேசிக்கின்றார்.] அதிசுதந்தர+விலாமையினுல்.

கடு. செ-ள், [அவர்க்கு அவஸ்தாபிமானத்தால்வரும் நாமங்களைக் கிரமமாக நிரூபிக்கின்றார்.] மாலு+வரடைவே-[அவர்களின் சொரூப விசேஷத்தைச் சொல்லுகிறார்.] விசுவன் உண்பன தூலம்=சாக்கிராவஸ்தையின் சாட்சியாய் விளங்காநின்ற விசுவான்மா புசிப்பவை ஸ்தூலம். ("ஸ்தூலம்" எ-து, பஞ்சீகிருத சப்தஸ்பரிசாதிவிஷயப்பிரபஞ்சம்; இது சர்வபோத்திருக்கட்கும் சாதாரணமாக ஈசுவரமாயா நிர்மிதமான போகப்பிரபஞ்சம்.)—தைசதன்றுய்ப்பன சுருக்கம்=சொப்பனுவஸ்தாசாட்சியாகிய தைசதன்புசிப்பவை சூட்சுமம்; (இது சுவாவித்தியாகற்பிதமான அசாதாரணவிஷயம்.)—பிராஞ்ஞன் சுகந்தன்பாலதாதலினுற் றன்னுடையின்பமே பருகிடாநிற்கும் = சுழுத்தியவஸ்தா சாட்சியாகிய பிராஜ்ஞன் (அவ்வவஸ்தையில், சுழுத்தியில் விஷயேந்திரியவர்க்கங்களோடு அந்தக்கரணமானது தன்காரணபூதமான அஞ்ஞானத்தில் விலயமாதலின் விட்சேபாபாவத்தால்) ஆனந்தம் தன்ரூபமாதலால் தன்னுனந்தத்தையே அனுபவியாநிற்பன்.—எ-று. அவஸ்தாசம்பந்தத்தால் இவனுக்குப் போகமுண்டாயதேயன்றிச் சொரூபத்தாற் பரமானந்தரூபனும், கேவலம் சின்மாத்திரமான சாட்சியாயும் விளங்குகின்றுனென்க.

கசு. செ-ள், [இவ்வாறறிந்தவனுக்குப்புண்ணியபாபசம்பந்தமில்லையென்பதைத் தெரிசிப்பிக்கிறார்.] மற்று=போகம்—

விழுமிதாமயமேதங்கள்செய்யினும்
பழிமிகும்பஞ்சபாதகம்பண்ணினு
மொழிவுறுமலொன்றேயென்றுணருவா
னழுவினனந்தநன்மையுந்தின்மையும். (கஎ)

வேறு.

சீவனன்றுபுரமூன்றிற்சித்தாமவனேவிளையாடு
மேவுமெல்லாமெய்போலவவனால்விளைதலான்மெய்யத்
தேவனேசான்றாதலினற்சித்துமவனேயத்துவிதன்
யாவுந்தானாதலிலெதினுந்தனையேவிரும்பலாலின்பன். (கஅ)

இந்தப்புரங்களொருமூன்றுமிவன்றனிடையேயிறப்பதுநிர்த்
தொந்தப்புருடனொருகாலுநசியானாதலாற்சொல்லு
மந்தப்பிரமமேயவன்றானறியாமையினலப்பரனைப்
பந்தப்படுமோர்சீவனெனப்பார்ப்பார்பவத்தேபதைக்கின்றார். (ககூ)

வேறு.

நானாகிவிடும்பிராணன்மனங்களிந்திரியமியாவையும்
வானமுதைநெருப்புநீர்புவிமற்றுமந்தமகத்திலே
யானதாகிலுநுண்மையாமதினுண்மையாமதுவாகுமெய்ஞ்
ஞானநாடியதத்துவங்களெனும்பதங்கணவின்றதே. (உ0)

கஎ. சே-ள், [இந்தத்தாற்பரியார்த்தத்தை மேலும் உபதேசிக்கின்றார்.]

கஅ. சே-ள், [இங்ஙனம் ஏகத்வஞானத்திற்குப் பலங்கூறி அந்த ஏகத்வஞானத்தை விவரித்துச் சொல்லுகின்றார்.] புரமூன்றிற்சித்தாமவனே விளையாடும்: சீவனன்று; (இது சத்தியமே இதிற் சமுசயமில்லை.)—[பிரதிஞ்ஞை செய்த அர்த்தத்தைச் சாதிக்கிறார்.] மேவுமே+லின்பன்—

உ0. சே-ள், [இந்தப்பிரகாரம் சீவனுக்குச் சச்சிதானந்தாத்வயம் பிரதிபாதிக்கப்பட்டது. பிரமத்துக்குத் தடஸ்தலட்சணம் பிரதிபாதிக்கிறார்.] "நுண்மையாமதினுண்மையாம்" எ-து, சூட்சுமம் அபஞ்சீகிருதாகாசாதிகள், அதினும் சூட்சுமம் அவ்வியாகிருதம், அதினும் சூட்சுமம் ஜகத்காரணப்பிரமம் ஆம்.

நீயெனும்பொருளேயதென் றுநிகழ்த்திடும்பொருளாவதுந்
தூயசிற்பரமேபதங்களிரண்டினுந்துணிவாதலான்
மாயையென் றுமவித்தையென் றுமுபாதிபேதவழக்கினு
லாயகற்பிதபேதமல்லதபேதமேபொருளாவதே. (உக)

ஆர்த்ரத்தொடவிச்சைநாமமறுத்தநல்லதிகாரியைப்
போதமுற்றுமெனப்புகன்றதுபொய்யிலாமறையையமன்
றேதமற்றதுநானெனுந்திடனுவனேயஃதெய்தினு
னோதுமுத்தியவன்றனுள்ளநுபோகமிங்ஙனுதிப்பதாம். (உஉ)

வேறு.

புகழ்முப்பதத்திற்போகம்போக்கியம்புசிப்பானேநா
னிகழுமித்தனைக்குஞ்சான்றாய்நின்றதற்சொருபனேநா
னிகழுவதென்பாலென்பானிற்பதுமிறப்பதென்பாற்
சகலமுமாதலாலேதற்பரம்பொருளாகின்றேன். (உ௩)

அணுவினுக்கணுவுநானேயப்படிமகத்துநானே
துணியிலெப்பொருளுநானேசோதியுட்சோதிநானே
பணிவுறத்தகுவேனுனேபழையனும்புருடனுனே
யிணைதனக்கில்லாவீசனுகியவின்பநானே. (உச)

உக. செ-ள், [மேலும் இவ்வேகத்வத்தை ஐந்தாவது அத்தியாயத்தில் "நீ யென்கின்ற வார்த்தைக்கு" என்று கூறியிருப்பதையே இங்ஙனம் சித்தாந்தமாக எடுத்துக்கூறுகின்றார்.] விசுத்தசத்துவப்பிரதானமாய்த் தன்னை யடைந்தவனை மோகஞ்செய்யாதமாயை ஈசுவரோபாதியாகும்: மலினசத்துவப்பிரதானமாய்த் தன்னையடைந்தவனை மோகிப்பிக்கும் அவித்தை ஜீவோபாதியாகும்; இவ்வாறு இருவருக்கும் உபாதிவசத்தாலன்றிப் பேதம் உண்மையாகவில்லையென்றுணர்க.

உஉ. செ-ள், அஃதெய்தினுன் = தடஸ்தலட்சணமாகப் பிரதிபாதித்த அப்பிரமசொரூபத்தை யடைந்தவனுவன்.—சாக்கிரமுதலிய அவஸ்தாரூபமாய், பிராணன்மனமுதலியபிரபஞ்சமாய் யாதொரு பிரமம் பரோட்சமாய் விளங்குகின்றதோ அதுவே நானென்றசத்தங்களுக்கு லட்சியமாய், அபரோட்சமாய் விளங்குகின்ற பிரத்தியக்சைதந்யம் என்பார், 'அதுநான்' என்றார்.

உ௩. செ-ள், [இந்தப்பிரகாரம் பிரமான்மைக்கியத்வத்தை யறிந்த ஜீவன்முத்தனுடைய அனுசந்தானப்பிரகாரத்தைக் கூறுகின்றார்.]

வேறு.

கண்ணுஞ்செவியுமின்றியுமேகாணக்கேட்கக்கடவேனுன்
பண்ணுந்தொழிலெல்லாம்வல்லேன்பாணிபாதமில்லெனினு
மெண்ணுங்கடந்தவிடமிங்கேயிருந்துஞ்செல்வனுமொருவர்க்
கொண்ணும்படியன்றெனையுணரவெல்லாமுணருகின்றேனுன். (உரு)

ஓதுவேதம்பலவாலுமோதியுணரப்படுவேனுன்
வேதவேதாந்தப்பொருள்களெல்லாம்விளங்கவறிவேனுன்
றீதுநன்றும்வினைமரணஞ்செனனங்தேகேந்தியம்புத்தி
பூதமைந்துமின்றியகமிதமாய்நானேபுசிக்கின்றேன். (உசு)

வேறு.

சிறப்புடையதேசுவடிவிற்றிகழ்தலாலு
னெறித்தவஷ்வாலுமெறியாவடிவினுலு
நிறத்தசுடரானவடிவாகநிகழ்கின்றே
னிறத்தலிலனுனபரமீசனவனியானே. (உஎ).

வேறு.

எனையொழியவொன்றுமிலையெலாமெனதுருவென்றுநிகழ்வதோ
ரனுபவம்வந்துவிளையுமேலழிவுளதன்றியமலமா
மினிதுறநெஞ்சிலுறைவதாயிலதுளதன்றியெதுவுமா
யினியமிறந்தபிரமமாமறிவுருவொன்றையடையுமே. (உஅ)

வேறு.

கைவல்லியவுபநிடதங்கருணையினுலேயெதுகருதிக்கூறிற்
றுய்வில்லையனியமொன்றுலெனவரிபிரமாதிகளுகவாநின்று
ரெவ்வல்லியிலுளவதிகாரிகளுமதறியும்படியினிதிற்சொன்னே
னவ்வெல்லையில்பொருளதிபத்தியொடறிவுறவீரமரர்களனைவீரும். ()

வேறு.

பண்டைநான்மறைகள்சொல்லியபரிசேபரகுருவாயிருந்துள்ள
வண்டர்நாயகனையாதரித்தவன்றனருளினுலநுபவமாகக் [ன்
கண்டுளோரிருக்குந்தன்மையையெல்லாங்காதலால்வானவர்க்குரைத்தா
புண்டரீகத்தேயிருந்துதான்சகலபூதமும்படைத்திடும்புனிதன். (ங0)

எட்டாவது

கைவல்லியவுபநிஷத்தாத்பரியமுனைக்குமத்தியாய
முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சஉ0.

---

உஅ. செ-ன், [இவ்விதாநுசந்தானத்திற்குப் பலத்தைச் சொல்லு கிருர்.] சர்வத்திற்கும் உபாதானகாரணமாயிருத்தலின், 'எனையொழிய வொன்றுமிலை யெலாமெனதுருவ்' என்றுர்.

உகூ. செ-ன், [உக்தார்த்தத்தை நிகமனஞ்செய்கின்றுர்.]

ஒன்பதாவது

# பிருகதாரணியவுபநிஷத்தில்
# மைத்திரேயப்பிராமணார்த்தமுரைக்கு
# மத்தியாயம்,

## அவதாரிகை.

[இனிப்பிருகதாரணியத்திற்கும் பிரமான்மைக்கிய பாத்துவத்தை அத்தியாயத்துவயங்களினாலும் பிரதிபாதிக்கிறார்; அவற்றுள், மைத்திரேயப்பிராமணத்தில் அமிர்தத்வசாதனமான அத்துவிதான்ம தரிசனமும், அதன் சாதனமான சிரவணாதிகளும் பிரதிபாதிக்கப்பட்டிருப்பதனால் சம்பூர்ணோபதேசமாதலால் அவ்வர்த்தத்தை முன்னர்ச் சங்கிரகித்துத் தெரிசிப்பிக்கிறார்.]

துன்பமாமுடம்பினின்றுமங்கதனாற்றுவக்குருவகைநின்றசிவனுக்
கின்பமேவடிவமாதலாற்சொரூபானந்தனென்றெழின்மறையெல்லா
முன்புகூறிற்றவ்வின்பமாம்பரிசைமொழிந்திடக்கேண்மினென்றழகா
யன்பினாலலரோனமரரியாவர்களுமறியவாதரத்தொடுமுரைப்பான். (க)

ஈசனுக்குருவானந்தமேயாகுமேதெனிலியாதினுந்தன்மே
லாசைவைத்திடலாலாசைவைத்திடுமானந்தமேமிகவுமானந்தம்
பாசம்வைத்திடுதறன்பொருட்டன்றிப்பதிபொருட்டல்லவேமனைவி
நேசமெப்படியுந்தன்னொடாதலிற்றானிரதிசயானந்தனோ. (உ)

---

உ. செ-ள், [சுருதியில் பதிமுதலான எல்லாவற்றினும் ஆன்மாவே மிகுந்த பிரியமுடையவனென்று சொல்லப்பட்டது; அதன் பொருளைக் கூறுகின்றார்.] ஈச + யாகும்—ஈசன் = பிரத்தியக்கான்மரூபாஈசுவரன்—[முற்கூறியதில் ஏதுவைக் கூறுகின்றார்.] ஏதெனில் + மிகவுமானந்தம்—[ஏதுவுக் கப்பிரயோஜனத்வத்தை நிராகரிக்கிறார்.] மனைவி பாசம்வைத்திடுதறன்பொருட்டன்றிப்பதிபொருட்டல்லவே—நேசமெப்படியு + நேரோ—பிரேமைக்கிருப்பிடமானமைந்தன், பொருள் முதலிய விஷயங்களாலுண்டான ஆனந்தம் அன்னியசேஷமாதலின் சாக்ஷாத்தாகவானந்தமாகாது; யாதொன்று நிரதிசயப்பிரேமைக் கிருப்பிடமான ஆனந்தமோ அதுவே-பிரதானமாதலின், சேஷியான ஆன்மாவே சாக்ஷாத்தாக வானந்தமென்பது கருத்து.

வேதியராசர்விண்ணவர்மிகவும்விரும்பியவுலகுகள்சகல [டுக்
பூதமும்போகபோக்கியமாகும்பொருள்களும் பொருள்களின்பொருட்
காதல்செய்கின்றனல்லனெப்படியுங்காதல்செய்வதுதனைக்காமித்
தாதலால்விருப்பந்தன்னுடாதலிற்றனிரதிசயானந்தமாகும். (௩)
யார்க்குமின்பம்போல்விரும்பிடப்படலாலின்பமேயிறைவடிவின்பந்
தூக்கியேயின்பம்பெறநினைப்பவராற்றுயர்மிகுந்தொழிலெலாம்விட்டு
பார்க்கவுங்கேட்கநினைக்கவுந்தியானம்பண்ணவும்படுவனிப்பரம [ப்
னூக்கியங்கவனையறியவேயெல்லாமறிந்ததாமொழியவின்மையினல்.

---

ச. செ-ள், [இவ்வண்ணம் அனைத்தும் ஆன்மாவைக்குறித்துப் பிரியமாதலால் ஆன்மாவே பரமப்பிரேமாஸ்பதம்; அக்காரணத்தால் நிரதிசயானந்தரூபராதலால் பரிச்சின்ன சுகசாதனங்களான கர்மங்களைப் பரித்தியாகஞ்செய்து அபரிச்சின்ன சுகாபிலாஷிகளான முமுட்சுக்களாலே நிருக்குரூப ஆன்மா சாட்சாத்கரிக்கத்தக்கவர்; அவ்வித ஆன்மதரிசனத்திற்கும் மனனநிதித்தியாசனங்களோடுகூடிச் செய்யப்பட்ட வேதாந்த மகாவாக்கியார்த்த சிரவணமே சாதனமென்று கூறுகின்றார்.] சிரவணம்=சப்தசத்தியினது தாற்பரிய நியாயத்தை அனுசந்திப்பது.—மனனம்=சுருதிபோதிதமாயுள்ள அர்த்தத்தை அசம்பாவனைகளின்றி யுக்தி நியாயத்தால் அவதானஞ்செய்வது.—நிதித்தியாசனம்=சிரவண மனனங்களால் விஜ்ஞாதமாயுள்ள அர்த்தத்தில் சாட்சாத்காரம் ஜனிப்பதற்காக அன்னியவிஷயவிருத்திகளை விட்டுத் ததாகாரவிருத்தியை நிரந்தரம் பரிசயஞ்செய்வது.—மிகுந்த அன்புசெய்யத்தக்கவனை ஆன்மா, கேட்டல் முதலியவற்றால் சாட்சாத்கரிக்கப்பட்டவளவில் அவனிடத்தில் ஆரோபமான வெல்லாச்சகமும் அவ்வான்மசேஷமாகப் பிரியமாகுமென்று முன்பே சொல்லப்பட்டதனுல் அனைத்தும் அதற்கு வேறில்லாததாக வறியப்பட்டதாகும்; அவ்வாறே சுருதியும் ஆன்மதெரிசனத்துக்குச் சர்வாப்திலட்சணமான பிரயோஜனத்தைக் கூறிற்றென்பதுதோன்ற, 'னூக்கியங்கவனை யறியவேயெல்லாமறிந்ததாமொழிய வின்மையினல்' என்றார்.

ரு. செ-ள், [இதுகொண்டுதானே வெருவிதசாம்சாரிகதுக்கசாந்தி கூடுமாவென்று சங்கித்து உபதேசிக்கின்றார்.] பரமாத்வைதவித்தாகிய புருஷனுக்குத் தனக்கு வேறான துக்கவேதுக்களினபாவத்தால் பவபரம்பரார்ச்சித துக்காசிகள் நசித்துப்போம் என்பார், 'இன்பமதாகு மத்துவிதத்தைபறிந்தவருக்கே முடிவில்லா வெத்துயருங் கெ

வேறு.

மத்தமுறும்பிறவிப்பகைமாளு
முத்தியுமுன்னிலையாமுடிவில்லா
வெத்துயருங்கெடுமின்பமதாகு
மத்துவிதத்தையறிந்தவருக்கே. (௫)

பின்னமுறப்பிரமத்தையறிந்தான்
றன்னையம்மெய்ப்பொருடள்ளுமதன்றி
மன்னுமுடம்புவசத்தொருவாதிங்
கின்னவுலோகமெனுமலிழிக்கும். (௬)

வேறு.

அல்லாதில்லாப்பரந்தன்னிலயலாவறியும்படியயர்ந்து
பொல்லாதாகத்தறிவுபெறும்பசுவர்னவனைப்புத்தேளி
ரெல்லாமெல்லாவேதமும்பூதங்களியாவுமிறத்தள்ளி
நில்லாநிற்கும்பேதத்தேதகிற்பான்சிக்கைதப்பாதே. (௭)

டும்' எ-ம், துக்காசிகணசிப்பினும் சுவர்க்காதிசுகவேதுவான புண்ணியமிருப்பதால் அதனிமித்தமாக வித்துவானுக்கும் ஏன் சம்சாரம் வாராதென்னுஞ் சங்கையைப்பற்றி அத்துவிதீயப்பிரமாண்மைக்கிடீ சாக்ஷாத்காரோத்தரகாலம் கருத்திருத்வ போத்திருத்வாதிகளையுடைய அந்தக்கரணம் நசித்துப்போவதால் சகலபுண்ணியபாபங்கட்காசிரயமின்மையினுன் அவைகளால் உண்டாவதான சுகதுக்கபோக லட்சணமான சம்சாரமும் வித்துவானுக்கு நசித்துப்போம் என்பார், 'மத்தமுறும்பிறவிப்பகைமாளும்' எ-ம், சுகதுக்கம்போலச் சுவர்க்காதிசுகங்களும் நிவிர்த்தித்துப்போமாகில் மோக்ஷத்திற்குப் புருஷார்த்தத்வம் எப்படிக் கூடுமென்றவருஞ் சங்கையைப்பற்றிச் சொரூபபூதமான நித்தியநிரதிசயாத்துவிதீய ஆனந்தமானது சுவயமே பிரகாசிப்பதால் உக்ததோஷமின்றென்பார், 'முத்தியுமுன்னிலையாம்' எனவுங் கூறினர்.

௬ செ-ள், [இந்தப்பிரகாரம் மோக்ஷசாதனமானஅத்துவிதீய பரமானந்தான்மதெரிசனம் மூலசுருதியிற்றெரிசிப்பிக்கப்பட்டிருப்பது போலப் பேததரிசனநிந்தையுங் காணப்படுகிறது; அதைச்சங்கிரகித்து உபதேசிக்கின்றார்.] பிரமத்தைப்பின்னமுறவறிந்தான்றன்னை = பிரமக்ஷத்திராதி ஜாதியாதி உபலட்சிதமான ஜகத்தைப் பிரத்தியக் வஸ்துவான தனக்குப் பேதமாகவறிந்த புருஷனை—அம்மெய்ப்பொருள் தள்ளும் = அந்தப்பிரத்யக்வஸ்து பரித்தியாகஞ்செய்யும்.—'பிரமம்' எ-து, பிராமணஜாதி. அந்தப்பிரமம் பேதஞானிக்கு அகப்படாததனுல் சுகதுக்கங்களுக்கேதுவாகும் என்றறிக.

௭. செ-ள், 'யாவுமிறத்தள்ளி நில்லாநிற்கும்' எ-கு, சகலமும் இரட்சிக்கமாட்டாதென்று தாற்பரியம்.

## மைத்திரேயப்பிராமணார்த்தமுணாக்குமத்தியாயம்.

*மறையோாரசர்முதலானவன்ஞச்சிரமமற்றுள்ள*
*பிறிவாய்நிகழுகின்றவெல்லாம்பிரமமொன்றுமேபிறிதா*
*லறியாநிற்குமறிவென்றுமல்லற்பிறப்பையடைவிக்கு*
*மிறைதானனநிலையெய்துமிரண்டுகொண்டிருந்தக்கால்.* (அ)

வே று.

*அத்துவிதந்தானுமவிகற்பத்தையடைந்தபோதே*
*புத்தியிலிளைப்பும்போகும்போகுமிப்பிறப்புநோா*
*வெத்திகழ்வாலும்பேதமின்மையாலிறையேயெண்ணுந்*
*தத்துவவித்தேயென்றன்றலையினால்வணங்கத்தக்கான்.* (கூ)

---

அ. செ-ள், [*தோற்றுகின்ற பிரமக்ஷத்திராதிகளை எப்படியறியத் தக்கதென்று சங்கித்து அந்தச்சர்வத்தையும் ஆன்மசொரூபமாகவே அறியவேண்டுமென்று சுருதியிற் கூறிய அர்த்தத்தைக் கூறுகின்றார்.*] *மறையோ + ஞச்சிரமம் — மற்றுள்ள + பிரமமொன்றுமே—தேவ காந்தர்வாதிகள், பூதபுவனங்கள், அஸ்திநாஸ்தி என்னும் சத்தங்கள், ஈசுவரோபாதியான் விசுத்தசத்துவப்பிரதானமாயை, ஜீவோபாதியான மலினசத்துவப்பிரதான அவித்தை, வியதாதிபூதோபாதான தமப்பிர தானப் பிரகிருதி இத்தியாதிபேதங்களாய் விளங்காநின்ற சகலமும் பிரமத்தி லத்தியஸ்தமானதாற் சுத்திரூப்பியம்போல அதிஷ்டானத்திற் கன்யமாய் நிரூபிக்கக்கூடாமையின், அதிஷ்டானரூபமான பிரமமே யல்லாமல் அன்யமாக வொன்றுமில்லை என்றுபொருள்.—பிறிதாலறி + யடைவிக்கும் = பிரமக்ஷத்திரியாதி ஜகத்தைப் பிரத்யகபின்ன பிரம மான தனக்கு அன்யமாய்றியாநின்ற பேதபுத்தியானது எப்போதும் துக்கரூபமான சம்சாரத்தைக் கொடுக்குமேதுவாம்.*

கூ. செ-ள், [*அத்துவிதப் பிரமான்மவித்தையே நிச்சேஷ துக்க நாசத்துக்கும், நிரதிசயானந்தப்பிராப்தி லக்ஷணமான முத்திக்கும் சாதன மாகுமென்று உபதேசிக்கின்றார்.*] *அத்துவிதந் தானுமவிகற்பத்தை =சத்தியஞான அனந்தானந்த ஏகரசமாய், சமஸ்தோபாதியற்றதாய், சர்வவிவகாரங்களுக்கும் பரமாயிருக்கிற பிரமத்தை—அடைந்தபோதே = அடைந்தவந்தக்ஷணமே —புத்தியிலிளைப்பும்போகும் = (சிரவணாதி யனுசந்தானஜனிதமான வித்தையினால்அதையாவரித்தஅவித்தியாநிவிர் த்தி சித்தியில் விஷயாந்தரமின்மையினால் சமஸ்தவிக்ஷேபாவபாச நாச ரகிதமான) புத்திவிருத்திக்குப் பிரத்தியக்ரூபமானபிரமத்தில் பரமோ பரமலட்சணமாயுள்ள விசிராந்தியுளதாம்; (அதுவே தன் சொரூபப்*

வேதமாகமபுராணமிருதிகள்வேறுமார்க்க
ோதுமாகமங்கடர்க்கமொன்றொடொன்றெவ்வாதாகு
மீதெலாமொக்கப்பண்ணலாவதன்றிதயதுக்க
மாதலாலனைத்தும்விட்டிங்கனைத்துமாஞ்சிவத்தைப்பார்ப்பான். (கo)

வேறு.

கிருமிகீடங்கண்மதியுடைத்ததனிற்கிளர்ந்திடும்பசுமதியவற்றி
னரர்மதியுடையரவரினுஞ்சிலவர்ஞானமிக்கிருப்பரன்னவரி
லரியகந்தருவர்மதியினலவரிற்பெரியரோபிதிர்க்கள்வெவ்வேறு
மொருவருக்கொருவர்தாரதம்மியத்தாலுணர்வினலுயர்ந்தவருளராம்.()

பிரதிஷ்டாரூப மோட்சாவஸ்தை என்க.) போகுமிப்பிறப்பும்—[அவ்விதஞானியினது பிரபாவத்தை உபதேசிக்கின்றார்.] நேரா எத்திகழ்வாலும்+தக்கான்—எவ்விதப் பிரதீதியினலும் அன்னியமில்லாமையால் நேராகப்பிரமமேயீதனைத்து மென்றறியாநின்ற ஜகத்குருவாகிய தத்வஞானி யாவன் அவனே எனது சிரசினல் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கத்தக்கவன் என்றுபொருள்.

கo. செ-ள், [இவ்வித அத்விதீயப் பிரமான்மவிஞ்ஞானத்தை ஏன் சர்வத்திர[யாண்டும்]சுலபமாக அறியவில்லை எனச்சங்கித்து அதற்குக் காரணங் கூறுகின்றார்.] வேதமாகம+துக்கம்—[ஏகத்வ விஞ்ஞானம் துவைதிகளுக்குத் துர்லபமென்று பிரதிபாதித்ததை உபசம்மரிக்கின்றார்.] ஆதலால்+பார்ப்பான்—வெகுவித சுருதிமிருதி புராணதி பரிசீலனம் மனேவிக்ஷேப வேதுவென்றறிந்து அவைகளனைத்தையும் பரித்தியாகஞ்செய்து வேதாந்த மகாவாக்கிய ஜனித ஆன்மஞானத்தையுடையவனய் எந்த எந்த வஸ்துக்கள் எந்த எந்த ரூபமாகப்பிரதீதியாகிறதோ அவைகளனைத்தையும் அவைகட்கதிஷ்டானமான அத்விதீயப் பாசிவமென்றே தரிசிக்கவேண்டும். பரஸ்பரம் விரோதமாவன;—'சீவித்திருக்கும்வரைக்கும்அக்கினிஹோத்திரஞ்செய்யவேண்டும்.' 'கருமத்தாற் பிரயோஜனமில்லை' 'தனத்தியாக மொன்றலேயே பிரயோஜனம்' 'இரண்டுபறவைகள் கூடிச் சகாயங்களாயுள்ளன' -'ஒருதேவனே சகலபூதங்களிலும் கூடமாயுளன்' என்று சுருதிஸ்மிருதியாதிகளில் பிரதிபாதிப்பவைகளேயாம்.

கக. செ-ள், [ஏகத்வவிஞ்ஞானமானது நிரதிசயவஸ்து விஷயமாதலால் அதில் சர்வஞானமும் அந்தர்ப்பவிக்கும் ஆகிலும் அவ்வித ஏகத்வாவகதிப் பிராப்திக்குப் பூர்வகாலத்திற் பிராணிகளினது அவஸ்திதிக்குத் தாரதம்மியமுண்டென்று கூறுகின்றார்.]

## பிருகதாரணியவுபநிஷத்தில் மைத்திரேயப்பிராமணார்த்தமுரைக்குமத்தியாயம்.

உள்ளபேரொல்லாரினுமுணர்வுடையீரும்பர்காணீங்களுங்களினன்
றெள்ளியேயனவென்மதியினலென்னிற்செனார்த்தனன்சேதனனும்
வெள்ளமேதுயிலுமாலினுமரன்றன்மேதையாம்விளம்பியவெவர்க்கு
முள்ளமேமருவியுணர்வளிக்கின்றசிவனேயாரினுமுணர்வுடையான். ()

ஆதலாலறியுமறிவெலாங்கைவிட்டறிவினுக்கறிவதாய்நின்ற
பேதமில்பிரமமொன்றுமேயறிவான்பேறுபேரின்பமாம்பிறத்தல்
சாதலற்றிருக்குமதனையோர்வருத்தமின்றியேசாரலாயிருக்க
வாதரித்தறியாரற்பமேவிரும்பியனந்ததுக்கத்திலேயமைவார். (௧௩)

வேதநூன்மிருதிபுராணமத்துவிதமெய்ம்மையேவிளம்பமெய்த்தர்க்கஞ்
சாதியாநிற்கத்தத்துவஞானத்தவருமிப்பொருளையேசார
வாதியாஞ்சிவனாராயணனிங்கறைந்ததுமபேதமாயிருக்க
வாதியாமொருவர்க்கிதையனாதரித்தன்மாயையினுடையவல்லபமே. ()

வேறு.

கனகமதபேதம்வேறுகடகமகுடாதிபோல
வணியவடிவாலனேகமறிவுநிலையாலபேத
மெனவுமுரையாடுவொருமிதயமிலர்ஞானகீன
ரொனையநிகழ்வாலுமீசனெனநினைகுவானவ்வீசன். (௧௫)

---

௧௩. செ-ள், ஆதலால் = கிருமிகீடாதி ஈசுவராந்தம் உத்தரோத்தரப்பிரஞ்ஞைகள் சாதிசயங்களாதலால் சர்வஞ்ஞத்வம் சம்பவியாது: அனவச்சின்ன ஞானரூபப்பரசிவனே சாக்ஷாத்சர்வஞ்ஞனாதலால் — அறியுமறிவு எலாங்கைவிட்டு = முற்கூறிய சுருதிமிருதிலக்ஷணமான அனாத்மவிஷயவித்தைகளைவிட்டு — அறிவினுக்கறிவதாய் பேதமில் நின்ற பிரமமொன்றுமே யறிவான் = சகல வறிவுகட்குஞ் சாட்சியாய்ப் பேதமில்லாமல் சகலமுந்தானாயுள்ள பிரமமொன்றுமே அநுசந்திக்கக் கடவன்:—பேறு பேரின்பமாம் = பலம் நிரதிசயானந்த முத்தியாம்.— பிறத்தல் சாதலற்றிருக்குமதனை — ஓர் வருத்தமின்றியே சாரலாயிருக்க = (மனோவியாபாரமாத்திரத்தாற் சாதிக்கப்படுதலின்) அதிகமான ஓர் வருத்தமின்றி அற்பவாயாசத்தா லடைய்த்தக்கதாயிருக்க—ஆதரித்தறியார் = (அவித்தியாவாசனைகளால் மூடப்பட்ட திருஷ்டியையுடைய சம்சாரிகள்) வாஞ்சித்தறிகிறார்களில்லை — அற்பம் = மனுடானந்த முதல் பிரமாவின் ஆனந்தபரியந்தமானலேசம்—

௧௫. ௧௬. செ-ள், பேதாபேதவாதிகள் அபிமதமும் அக்கண்டனமும் இரண்டு செய்யுட்களாற் கூறிச் சர்வப்பிரகாரத்தாலும் அத்வைதமே வாஸ்தவமென்று உபசம்மரிக்கின்றார்.]

பலவடிவும்வேறுபாடுபகரும்வெறுமூடரான
புலையரொடுகீடமோடுபுழுவிஞெடுவாசியேது
சொலவிலுலகாகும்வேறுதுணிவிலுணர்வேயெலாமெ
னிலகுமதிபேறதாகுமிறைவனடிபேணலாலே. (கரு)

வேறு.

தேசிகனளித்தவழியினுலையந்தீர்ந்துசிற்சடத்திகழ்வெல்லா
மீசனுய்ப்பார்ப்பானிப்படிப்பார்க்குமிதனையுமிறையெனப்பார்ப்பா
னேசமோடிங்ஙன்பார்ப்பவன்பார்வைதன்னையுநிகழ்ந்திடாதுள்ள
தேசிகந்திகழுஞ்சின்மயமாகிச்சின்மயமென்கையுஞ்சிறிதே. (கஎ)

ஒழிவிலாப்பரமயோகியரனுபவமுள்ளவாறுரைத்திடவெனக்கோர்
வழிபெறேனெமொன்மகேசன்மாமுனிவர்வானவருரைத்திடமாட்டார்
விழிமிகுஞ்சிவனுல்விஞ்சையாஞ்சிவையால்விளம்பவும்படாததுவிளம்பு
மொழியெலாம்வந்துமோனபாவத்தேமுடியுமந்நிலமதேமுடிவு. (கஅ)

வேறு.

இப்படிக்கருணையாலியம்பினேனெலா
மப்பழமறையெலாமறியவோதுவ
தொப்பறநானுமக்குரைத்தவீதெலாஞ்
செப்பருமறையின்சேடமாகுமே. (ககூ)

வேறு.

உரையாடுவதித்தகைமைத்தெனவோர்குறியுண்டாம்
பொருள்பாலன்றேபூரணமாயோர்வேறில்லாச்
சொரூபானந்தன்றிருமேனியெனச்சொலவின்றே
விரையார்கமலத்தவன்மெய்பாராவியவுற்றான். (உ௦)

ஒன்பதாவது,

## பிருகதாரணியவுபநிஷதத்தில் மைத்திரேயப் பிராமணார்த்தமுரைக்குமத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்–ச௪௦.

---

கஎ. சே-ள், தேசிகனளித்த+பார்ப்பான்—நேசமோடிங்ஙன்+சின்மயமாகி=(கதகரஜோந்நியாயம்போல) அன்பேசீடிவ்விதம் பார்ப்பவனும், பார்வையு நிகழ்ந்திடாமலிலீனமாகவே ஒளியாய் விளங்காநின்றசின்மயமாயவசேஷித்து—சின்ம+சிறிதே=(பாரமார்த்தமாய்வு சேஷப்பிரதியோகிய ஒன்றனதபாவத்தால்) சின்மயமாய்ச் சேஷித்தோமென்பதும் விடக்கடவன்.—

ககூ. சே-ள், [அந்தியப்பிரதிபாதிதமாயுள்ள அர்த்தத்தைத் தெரிசிப்பித்து உபசம்மரிக்கின்றார்.]

பத்தாவது

# பிருகதாரணியவுபநிஷத்தினுஷைத்தங் கார்க்கியந்தரியாமிப்பிராமணங்களினர்த்த முறைக்குமத்தியாயம்.

## அவதாரிகை.

[இவ்வித அத்துவிதீயாத்மவிஞ்ஞானம் மோக்ஷசாதனமெனக் கூறப்பட்டது; அவ்வாத்மா எப்படிப்பட்ட சொரூபர் எனச்சங்கித்து அதனை விசேஷமாகப் பிரதிபாதித்தற்காக உஷஸ்தப்பிராமணத்தைச் சங்கிரகித்து உபதேசிக்கின்றார்.]

நாதனார்சொரூபானந்தனுண்மலர்ப்பாதம்
போதமேயெனும்பரிசுபுத்தேளவர்க்கெல்லா
நேதிநேதிசெய்திப்பரிசெனநிகழ்த்திடுவான்
வேதநாலுகான்முகத்தினல்விளக்கியவிதாதா. (க)

வேறு.

எப்பொருள்களுக்குஞ்சான்முயார்க்குமுள்ளாகியென்று
மெய்ப்படுந்தன்றேசாலேவிமலமாய்விளங்காநின்ற
தெப்பொருளெல்லாமாகியெங்கணுநிறைந்துநின்ற
வப்பரம்பிரமமேநோயழுகுறவறியலாகும். (உ)

---

உ- செ-ள், [அதில் யாக்கியவற்கியனைக்குறித்து உஷஸ்தர் எந்த வஸ்து சாக்ஷாதபரோட்சமாயுள்ள பிர்மம்? யாதோராான்மா சர்வாந்தரமாயுளன்? அதனை என்பொருட்டு அனுக்கிரகிக்கவேண்டுமென்ற பிரசினத்திற்கு இவன் ஆன்மா என்றபினயத்தால் சுவானுபூதியாலடையத்தக்க ஆன்மவிஷயமான உத்தர முபதேசிக்கப்பட்டிருக்கிறது; அவ்விதப் பிரசனோத்தரங்களாற் சித்தமாயுள்ள அர்த்தத்தைச் சங்கிரகித்து உபதேசிக்கின்றார்.]

வேறு.

இந்தப்பிராணுபானுதியாராலுண்டாயிலங்குவதிங்
கெந்தப்புருடன்முன்பாகவெல்லாமியங்கவற்ருகுந்
தொந்தப்படவெத்தொழிலுஞ்செய்தேவன்ருெழிலற்றிருக்கின்ரு
னந்தப்பரனேயாவர்க்குமுள்ளாமான்மாவாகின்றான். (ஙு)

உடம்போதானன்றுடம்பீதென்றுணரப்படுதலாலுடம்பிற்
றிடஞ்சேர்பிராணுதியுமன்றுசெடமாய்க்காணுஞ்செய்தியினுற்
கடம்போலியாவனிவையனைத்துங்காண்பானவனேகர்த்தாவாய்
நடஞ்சேருடம்பினுண்ணின்றுநடத்துகின்றநானுவான். (சு)

---

ஙு. செ-ள், [இவனே ஆன்மா என்றபினயத்தோடு நிருபாதிக வான்மசொரூப முபதேசிக்கப்பட்டது; அவ்வித உபதேசார்த்தத்தை யறியாதவராகிய உஷஸ்தருக்குப் போதிக்கும்பொருட்டு யாவனொருவர் பிராணனுலே பிராணுதி வியாபாரத்தைச்செய்கிருர் என்ருரம்பித்து மூலசுருதியில் யாதொரு தடஸ்தலக்ஷணஞ் சொல்லப்பட்டதோ அதைச்சங்கிரகிக்கின்ருர்.]இ-ள்.இந்தப்பிராணு+யிலங்குவது=பேதப் பிரதிபாசமான இந்தப்பிராணுபானுதி காரியகாரணசங்காதங்கள் தாரு எந்திரம்போலச்சுபாவிகமாய் அசேதனங்களாயிருப்பினும் அவைகளின் அதிஷ்டானமாயுள்ள யாதொன்றின்வசத்தாற் சத்தாஸ்புரணங்களாய்ச் சம்பவியாநின்றனவோ — இங்கெந்தப்பு+வற்ருகும்=அந்தப்பிராணு பானன்முதலிய வனைத்தும் எந்தப் புருஷனது சன்னிதிமாத்திரத்தால் அயக்காந்தம்போலச் சேஷ்டிக்கவல்லனவாமோ—தொந்தப்பட+ற்றி ருக்கின்ருன்=அக்காரியகாரண சங்காதங்களான பிராணுபானுதிசே ஷ்டையிருந்தாலும் எவன் நிருபாதிக அசங்கசின்மாத்திரனுய், அச் சங்காத கிருதபுண்ணிய பாபகர்மங்களாற் சங்கஹீனனுகவிருக்கின்ரு னே—அந்தப்பரனே+வாகின்ருன்.—எ-று.

சு. செ-ள், உடம்போதானன்று = ("அகம்பிரமாஸ்மி" என்ப தாதிகளில் பிரத்யக்கர்த்தமாய்ச் சொல்லப்பட்ட அகமென்னும் அஸ் மத்பதத்திற்குச் சர்வாந்தராய், சர்வப்பிரத்யக்பூதராய்ச்சொல்லப்பட்ட ஆன்மாவே முக்கியார்த்தம்:) சட்கோசமான தூலசரீர முக்கியார்த்த மன்று;—உடம்பீதென்றுணரப்படுதலால் = தூலசரீரமானது (கடம் போல அசேதனமாய்த்) திருசியமாதலால் (அதைத் திருஷ்டாவாக எவன் அறிகிருனே அவனே சர்வாந்தரனுகிய ஆன்மா.)—[இந்தப்பிர காரம் ஆன்மாவுக்குத் தூலசரீரத்தைக்காட்டிலும் ஆந்தரத்வத்தைப் பிரதிபாதிக்கிருர்.] உடம் + பிராணுதியும் = சரீரத்திற்றிடமாயுள்ள பிராணுபானுதி பஞ்சவாயுக்களும், ஞானகர்மேந்திரியங்களும், மனமும்

வேறு.

வினவுற்றகேள்விக்குக் கேட்பானுகி மேவியகாட்சியில்விழித்துக் காண்பானுகி, மனனத்தின் மந்தாவாய் ஞானந்தன்னின் மதித்திடுஞா தாவாகிமன்னுகின்முன், சொனவத்தற்பரனுருமவனில்வேருந்தோற்ற மெலாமெய்யாகுந்தோற்றமன்று,நினையிற்றற்பரனேயிங்கெல்லாமென் றுநினைவதுவேநினைவானநினைவுநேரோ. (ரு)

---

புத்தியுமாகிய சப்ததசான்மகமான லிங்கசரீரமும்—கடம்போ+லன்று = கடம்போல் பூதகாரியமாய், திருசியமாய்த் தோன்றுநின்ற நியாயத்தால் ஆன்மாவல்ல.—யாவன்—இவையனைத்துங்காண்பான் = இக் காரியகாரண சங்காதங்களனைத்திற்குந் திருஷ்டாவோ—அவனே+னுண்ணின்று = அவனேகர்த்தாவாய் வியவகாரசம்பந்தியான சகலசரீரங்கட்கும் ஆந்தரமாய் நின்று—நடத்துகின்ற நானுவான் = சகலவியவகாரங்களையும் நடத்தாநின்ற ஆன்மாவாவன் (என்று தடஸ்தமாய் நிருபாதிகப்பிரமசொருபந் தெரிசிப்பிக்கப்பட்டது.)—எ-று.

ரு. செ-ள், ["திருஷ்டிக்குந்திருஷ்டாவைக்கண்டிலம்" என்பது முதலிய சுருதியிற் சாக்ஷாத்தாக எந்தச்சொரூபம் கொம்புப்பிடியாய்ச் சுவப்பிரகாச சிதான்மலக்ஷணமெனை லக்ஷிதமாமோ அதைச் சங்கிரகிக்கின்முா்.] வினவுற்ற+மன்னுகின்முன்—ரூபசப்தாதிவிஷய சம்யுக்த சக்ஷுராதித் துவாரத்திஞல் ரூபாதியுபாக [கிரகண]த்திறுற் சனியாநின்ற சொரூப சிற்சாயாசம்பந்தமான புத்திவிருத்தியே திருஷ்டி "சுருதிமதிவிஞ்ஞாதி" முதலான பதங்களிறுற் கூறப்பட்டிருக்கிறது; அவ்வித திருஷ்டிமுதலானவைகளும் அனுன்மபூதமாயுள்ள ரூபாதிகளைத்தான் பிரகாசிப்பிக்கின்றன: சுவான்ம சைதன்யப்பிரகாசத்தால் வியாப்தமாய், ரூபாதிரகிதமாயுள்ள பிரத்யக்சொரூபத்தைப் பிரகாசிப்பிக்கமாட்டாது. அந்தப்பிரத்தியக்கான்மாவோவென்றுல் லௌகிகதிருஷ்டிக்குந் திருஷ்டாவாயிருக்கிமுா். சைதன்யசொரூபையாய், சுவபாவபூதையாகிய திருஷ்டியினுல் வியாப்தையாயிருக்கிற அந்தலௌகிக திருஷ்டியிஞல் எப்படி அவா் வியாபிக்கப்படுவா். இந்த நியாயமானது "சுருதிக்கு" சுரோதா எ-ம், "மதிக்கு" மந்தா எ-ம் மற்றுங் கூறியிருக்கிற பரியாயங்களிலும் யோஜிக்கவேண்டும். இந்தப்பிரகாரம் யாவனொருத்தா் புத்திவிருத்திப்பிரகாசகராய், சொப்பிரகாச சித்துரூபராயிருந்துவிளங்குகிருமோ அவரோ உக்தலக்ஷண இவ்விதசா்வாந்தராகிய பரமான்மா என்று பொருள். [இந்தப்பிரகாரம் சா்வாந்தராகிய ஆன்

[இவ்விதம் பிரத்தியகான்மாவிற்கு அத்தியாத்மமாயுள்ள சர்வாந் தரத்வ முபதேசித்து அதிபூதமாகிய சர்வாந்தரத்வமும் உபதேசிக்க வேண்டிக் கார்க்கிப்பிராமணத்தையுஞ் சங்கிரகித் துபதேசிக்கின்றார்.]

பாரிலேயெல்லாப்பொருள்களுங்கோவைப்பட்டதெப்படியிலப்படியே
நீரிலேபாருநெருப்பிலேலநீருநிலவுகாலதனிலேநெருப்பு
மூருகாலந்தரிக்கலோகத்துமுண்டையும்பாவுமேபோலச்
சாருமாமொன்றோடொன்றுவேறறவேதன்னிலேபின்னியிச்சகத்தில்.

அந்தரிக்கங்கள்கந்தருவத்தேயாதித்தவுலகங்களிடையே
கந்தருவங்கள்சந்திரவுலகிற்கதிரவனுலகுகளெல்லாஞ்
சந்திரவுலகுந்தாரகையுலகிற்றாரகைவானவருலகி
லிந்திரவுலகில்வானவருலகமியாவையுங்கோவையாயிருக்கும். (எ)

---

மாவைச் சொருபதடஸ்த லக்ஷணங்களால் உபதேசித்து அதற்கு விய திரிக்தமாயுள்ள சகலதிருசிய ஜாதத்துக்கும் மித்தியாத்வமுஞ் சொல் லப்படுகிறது; அவ்விதசுருதி தாற்பரியத்தையும் பிரகாசஞ்செய்கிறார்.] சொனவித்தறபாளுகு+நினைவுநேரோ — சர்வாந்தரமாயிருக்கிற ஆன்ம வஸ்துவுக்கு அன்னியமாய்க் காரியகாரணுநிரூபமாக யாதொரு பூத பௌதிக ஜகத்துந் தோற்றுகிறதோ அது சகலமும் கற்பிதமானதால் அதன் அதிஷ்டானவஸ்துவின் எதார்த்த ஞானத்தினல் சுக்திரூப்பி யாதிகள்போலப் பாதிக்கப்படுகிறதுகள் ஆனபடியால் அந்தச் சகல திருசியப் பிரபஞ்சத்திற்கும் வியவகாரதசையிற் சத்தியத்வமேயன்றிப் பாரமார்த்தமாக நிரூபிக்கில் சத்தியத்வமில்லை. சர்வாந்தரப் பிரத்தியக் வஸ்துவில் அத்தியஸ்தமாயிருத்தலால் அதன்கண்ணே லீயமானமாய், அதிஷ்டானமாத்திரமாய் அவசேஷிக்கிறது என்று பொருள்.

சு. செ-ள், பாரிலே+பின்னியிச்சகத்தில்—'ஊருகாலந்தரிக்க லோகத்தும்' எ - து, அந்தரிக்ஷலோகங்கள் வாயுசஞ்சாரஸ்தானமாத லால், அதில் ஓதப்புரோதபாவமாய் அவஸ்திதியடைந்துள்ளதை.

எ. செ-ள், சூட்சும தாரதம்மியக் கிரமமாக உத்தரோத்தரங்க ளான லோகங்கள், சாதிசயபோகாசிரயாகாரமாகச் சங்காதங்களா யுள்ள பஞ்சபூதங்கள் அவஸ்தாவிசேஷத்தால் அந்த அந்த லோகமாகக் கூறப்பட்டுள்ளன; அக்காரணத்தால், 'அந்தரிக்கங்கள் கந்தருவத்தே' என்றிந்தப்பிரகாரம் ஒவ்வொருலோகத்திலும் பகுவசனம் பிரயோகிக் கப்பட்டது.

கார்க்கியந்தரியாமிப்பிராமணங்களினர்த்தமுரைாக்குமத்தியாயம்.

வேறு.

அரசாகியவமராதிபனுலகானவையடையப்
பிரசாபதியுலகங்களினிடையேபிரமனதா
முரைசாருலகமதானவையுயர்மாலவனுலகிற்
றிருமாலுலகஞ்சேர்வுறுமிடமுஞ்செப்புதுமே. (அ)

வேறு.

உருத்திரவுலகின்மாலுலகுருத்திர
னிருக்குமவ்வுலகெலாமீசலோகமே
திருத்தகுமீசலோகங்கடிண்ணமாய்க்
கருத்தருஞ்சதாசிவவுலகின்கண்ணதே. (௯)

---

அ. செ-ள், அர+வையடைய= இந்திரலோகங்கண் முழுதும்— பிர+னிடையே= பிரஜாபதிலோகங்களிலே ஸ்திதியடைந்துள்ளன, (அந்தப் பிரஜாபதிலோகங்களும் பிரமலோகத்தில் ஸ்திதியடைந்துள் ளன.) உரை+தானவை= புகழ்பொருந்திய பிரமாவின் லோகங்களும் —'பிரசாபதியுலகம்' எ-து, பிரஜாபதிஸ்தூலப்பிரபஞ்சாபிமானியா கிய விராட்டு; அவரது சரீராரம்பகங்களாய், வைராஜபதோப போக ஸ்தானங்களாயுள்ள பஞ்சபூதங்கள் பிரஜாபதியுலகங்கள் என்று பொ ருள். 'பிரமனதாம்' எ-து,இரணியகர்ப்பரூபாகிய பிரமாவினுற் பஞ்சீ கிருதங்களாய், பிரமாண்டாரம்பங்களாயுள்ள அந்த வியதாதிபூதங்கள் பிரமலோக சப்தங்களாற் சொல்லப்படுகின்றன. அந்தக் காரணபூதங் களில் அத்தியஸ்தங்களாகவே அவாஸ்தவங்களாயுள்ளன. சர்வலோகங் களும் தத்தம்பிரதீதிக் கதிஷ்டானபூதமாய்த் திருக்குரூபமாய் சர்வாந் தரப்பிரத்தியக்கான்மாவிடத்தில் மாயாவசத்தினுல் ஓதப்புரோதங்களா யுள்ளன. சர்வாதிஷ்டானப்பிரத்தியக்கான்மாவோவென்றால், தமக்கன் னியமானவொன்றிலும் ஓதப்புரோதமாயிருப்பவரன்று; பின்னேயோ, தம்மகிமையிலிருப்பவர். பராதீனப்பிரகாசங்களாய்ச்சத்விலக்ஷணங்களு க்குந்தானே சத்தாஸ்புரணசித்தியின்பொருட்டு அப்படிப்பட்ட வஸ்து வில் ஓதப்புரோதபாவங்கூடும். இவ்வான்மாவோ சுவயம்பிரகாசமான ராயும், சுவப்பிரபாவத்தையுமுடையவராயுமிருக்கிறவர்எந்தக்காரணத்தி னுல் வேறோராதாரத்தில் ஓதப்புரோதபாவமாயிருப்பார் என்று பொ ருள்.

தற்பரந்தன்னிலேசதாசிவன்றனை
துற்பவவுலகெலாமுறுதியர்மதிற்
கற்பிதமாய்நிகழ்ந்திடுமெய்காணுறி
லற்புதமாம்பரனல்லதில்லையே. (௧0)

[இந்தப்பிரகாரம் சகலஜகத்கற்பனுஸ்பதத்வத்தால் ஆன்மாவிற்குச் சர்வாந்தரத்வ முபபாதித்து அவர் அந்தரியாமியென்பதையும் பிரதிபாதித்தற்காக அந்தரியாமிப்பிராமணத்தைச் சங்கிரகிக்கின்றார்.]

வேறு.

உடையதொன்றுடையானெனும்வேறவையின்றிலோகத்
திடையிருந்துமிருந்திலனுமெவையும்முடம்பாய்த்
திடமிதென்றறியாவகைநின்றொருசெய்கையின்றி
யடையவுஞ்செயுமாரவனந்தரியாமியாவன். (௧௧)

---

௧0. சே-ன், தற்பர+முறுதியாம்—[இந்தப்பிரகாரம் பிருதிவியாதி பிரமலோகாந்தங்கட்குச் சர்வாந்தரப் பிரத்தியக்கான்மாவில் அத்தியஸ்தமாதலால் அப்பிரதீதித்வம் பிரதிபாதித்துப் பரமார்த்தமாய் அதிஷ்டான வியதிரிக்தத்வம் இன்றென்றுகூறுகின்றார்.] அதிற்கற்பி+தில்லையே—இவ்விதஞானமே சம்யக்ஞானம் என்க.

௧௧. சே-ன், சச்சித்ரூபராய், சர்வாந்தாராய் யாரோர் ஆன்மாபூர்வம் நிரூபிக்கப்பட்டனரோ அவரே சர்வப்பிராணிகளினது இருதயங்களிலும் அவஸ்திதராய்ச் சகலத்தையுந் தன்றன் விஷயங்களில் நியமனஞ்செய்வதால் அந்தரியாமி. சர்வசத்தாஸ்பூர்த்திப்பிரதரான அவரைவிட அன்னியவஸ்துவே இல்லை. இந்த அர்த்தம் மூலசுலோகத்திலிருக்கிறது. [சுருதியில் அதிதெய்வம், அதிபூதம், அத்தியாத்மம் என்னும் ஜகத்துக்குபாதானராய், ஆந்தரராய் சமஸ்தோபாதியும் விடுபட்டவராகிய பிரத்தியக்காத்மா அந்தந்நியமனவியாபாரயோகத்தால் அந்தரியாமி எனப்படுகிறார் என்று கூறுகின்றார்.] உடை+யாவன்—காரணபூதமான ஆன்மா பிருதிவியாதிகளில் எவ்விடத்திலுமிருப்பவராகமாட்டார் எ-ம், அவைகட்கு வெளியிலிருந்துகொண்டு அவைகளை நியமனஞ்செய்கிறதிற் சக்தராகார் எ-ம் வருகின்ற சங்காபிப்பிராயத்தையறிந்து. உபாதானகாரணத்வத்தாற் பிருதிவியாதிசகலத்திலும் கடாதிகளில் மிருத்துவியாபித்திருப்பதுபோலவியாபித்து வர்த்தமானராய், ஆந்தரராயுளர் என்பார், 'லோகத்திடையிருந்தும்' எ-ம், அசரீரனை அந்தரியாமிக்குச் சரீரம்போலச் சகலமும் ஆச்சாதிதமாதலால்,

## கார்க்கியந்தரியாமிப்பிராமணங்களினர்த்தமூனாக்குமத்தியாயம்.

வே று.

காண்டல்கேட்டல்கருதல்செய்யப்படுவானலன்ருன்
காண்டல்கேட்டல்கருதல்செயப்படுவாஒருத்தன்
றாண்டுசோதியிலைனல்சோமனருக்கனெல்லா
மாண்டபோதும்விளங்குமனக்கரியாகிநின்று. (கஉ)

---

'எவையுமுடம்பாய்' எ-ம், பிருதிவியாதிகளின் தேவதைகள் நமக்கு நியந்தா இவர் என்றொருகாலத்துமறியாமையின், 'திடமிதென்றறியா வகைநின்று' எ-ம், பரமார்த்தமாய் நிஷ்கிரியராகியவான்மா உபாதி வசத்தால் சகலத்தையும் பிரேரகஞ்செய்கின்றதால்,'ஒருசெய்கையின்றி யடையவுஞ்செயும்' எ-ம், சோபாதிகத்வத்தால் இவ்வான்மாவும் நம்மைப்போல ஜீவனேயாவனென்று வருஞ்சங்கையைப் போக்குவான் உபாதியில் ஆத்மீய [தன்னுடையது] த்வாபிமானமின்றிய சாக்ஷாதி வரோபராமிருதனென்பார், 'உடையதொன்று+மிருந்திலனாய்' என்றுங் கூறினார்.

கஉ. செ-ள், [இந்த அந்தரியாமியைத் தம்மிடத்திலிருக்கின்ற வீராக நாம்முதலானவர்கள்போலப் பிருதிவியாதிதேவதைகளும் என் அறியமாட்டார்கள் என்று சங்கித்துக் கூறுகின்றார்.] தான் = அவ்வந்தரியாமி — காண்ட+ஒருத்தன் =ரூபராகித்தியனுதலால் ஒருவருடைய சட்சுவுக்குங்காணப்படுபவனல்லன், சட்சுவில் சன்னிகித[சமீப]னுயிருப்பதால் அவனொருவனே காண்பவன், சப்தராகித்யனுதலால் கேட்கப்படுபவனல்லன், சர்வசுரோத்திரங்களிலுஞ் சன்னிகிதத்வத்தால் விடாதசிரவண சக்திகளுகவிருப்பதால் கேட்பவன், சவிஷயனுகாததால் சங்கற்பவிகற்பான்மக மனதினுல் விஷயீகரிக்கப்படாதவன், விடாதமனனசக்திகளுய்ச் சகலருடைய மனதிலும் சன்னிகிதனுயிருப்பதால் மந்தா, நிச்சயான்மகபுத்தி என்னும் விஞ்ஞானத்தில் சன்னிகிதனுயிருப்பதால் விஞ்ஞாதா, அந்த விஞ்ஞானத்தால் அவிஷயீகிருதன்; "இதனுற் காணப்படாதவன் காண்கிறான், கேட்கப்படாதவன் கேட்கிறான்" என்னும் சுருதியின் பொருள் சங்கிரகிக்கப்பட்டது.—இந்தப்பிரகாரம் அந்தரியாமியே காண்பான், கேட்பவன் முதலிய சொரூபமாய்ப் பிரதிபாதிக்கப்பட்டிருத்தலால் ஏவப்படுவனவாகிய திருஷ்டிமுதலியவைகட்கு நியந்தாவேறென்னும் பேதப்பிராந்தியை நீக்கப்பட்டது. ஆகையினுலேதானே இவனைக்காட்டிலும் அன்யனல்லன் திருஷ்டா, அன்யனல்லன் சுரோதா என்று சுருதியிற் கேட்கப்

வேறு.

சித்தமத்தமித்திடத்தபாவமுந்தெரிந்திடுஞ்
சுத்தநற்சுழுத்தியிற்றுய்க்குமாணயகண்டிடு
மத்தமித்தலும்பிறத்தலும்மிலாணபாவபா
வத்தைவிட்டகண்டமாயறிந்தபோதடங்கவாம். (கரு)

படுகிறது. [சாக்கிரசொப்பனுதியவஸ்தைகளில் சுகதுக்கபோக்தாவாய், சம்சாரியாகிய ஜீவன் அந்தரியாமிக்கன்யன் என்றுசங்கித்து அவர்களினது அனன்யத்வத்தைப் பிரதிபாதிக்கவேண்டி ஷஷ்டாத்தியாயத்திலுள்ள ஜோதிப்பிராமணத்தைச் சங்கிரகிக்கின்றார்.] ஜோதிப்பிராமணத்தில் சாக்கிரசொப்பனுதியவஸ்தைகளில் அவ்வவ்வவஸ்தைகளிலுள்ள பதார்த்தங்களோடு வியவகாரத்தாலும் முற்கூறியவிதமாயுள்ள ஆன்மாவுக்கு அதனுற் செய்யப்படும் புண்யபாபங்கண்முதலிய சகல தருமங்களுடைய அனுகமன [தொடர்ச்சி] மில்லாத அசங்கத்வமும், சுவயஞ்சோதித்வமும், நிரதிசயானந்தசுபாவமும், அத்விதீயமும் பிரதிபாதிக்கப்பட்டன. [அதில் அவஸ்தாத்திரயசாட்சியாயிருக்கிற ஆன்மாவுக்குச் சுவயஞ்சோதித்வம் பிரதிபாதிக்கும்பொருட்டு ஆதித்தியன் அஸ்தமித்திடில் சந்திரன், சந்திரன் அஸ்தமித்திடில் அக்கினி, அக்கினி அஸ்தமித்திடில் வாக்கு, வாக்கு அஸ்தமித்திடில் எது ஜோதிசு இந்தப்புருஷன்றுனென்று ஆத்மாத்தானே இதற்குச்சோதிசாகப்பவிக்கிறார் என்றியாதொன்று சொல்லப்படுகிறதோ அதைச் சங்கிரகிக்கின்றார்.] தூண்டுசோதி+யாகிநின்று—சூரியன்முதலிய பாகியவொளிகளில்லாதகாலத்தும் ஆத்மசொரூபசைதன்யப்பிரகாசம்அந்தக்கரண சாக்ஷியாய்த் தனது பிரகாசத்தினுலேயே எப்போதும் விளங்குகின்றதேயன்றிப் பாகியமானவொளியை அபேக்ஷிக்கின்றதில்லை என்று பொருள்; இதனுல் சாக்கிராவஸ்தை வர்ணிக்கப்பட்டது

கரு. செ-ள், சித்த+தெரிந்திடும்=சொப்பனுவஸ்தையில் சட்சுராதி இந்திரியங்களினது ஒழிவினுல் சித்தத்துக்குப் பாகியவிஷயவியாபாரங்கள் உபரமமாகவும் கேவலம் சொப்பன பதார்த்தாகாரபரிணுமியான யாதோரவஸ்தானம் பவிக்கின்றதோ அச்சமயத்தில் அந்த ஆன்மாவே பிரகாசாந்தர நிரபேக்ஷமாய்ச் சொரூப சிற்பிரகாசத்தினுல் சொப்பனுவஸ்தையை அறிகிறார்.—சுத்தநற்+கண்டிடும்=காரணபூதமாயுள்ள அபாவரூபமான அஞ்ஞானத்தில்இந்திரியாந்தரம்போலச்சித்தமும் விலயத்தையடைகிறதோ அப்போது சுழுத்தியவஸ்தை; அந்தச் சமயத்தில் கேவலம் அஞ்ஞானமயமான அந்தவவஸ்தையைச் சொரூப

பின்னமான தன்றியேபிரமமாயறிந்தவன்
றன்னுபேதமேவினுஞ்சொரூபமேநிகழ்ந்ததா
ருன்னின் ஞானநாசமில்லேஞேயநாசமாகுநன்
றன்னின் ஞானஞேயமாகவேறுறாததன்மையால். (௧௪)

---

சிற்பிரகாசத்தினலேயே இவ்வான்மா அறிகின்ருர்.—அத்த+மில ன் = இம்மூவிதவவஸ்தைகளில் சுவயம்பிரகாசமான சிதான்மா ஆவிர்ப் பாவதிரோபாவதர்மரகிதமாயுளர். — ஆகையினுல்தான் ஞாதாஞ்ஞாத பேதத்தால் விவிதமாயுள்ள சர்வஜகத்தையும் கேவலராய், சர்வோபாதி யும்விடுபட்டவராய், சின்மாத்திரரூபராயிருக்கிற இந்த ஆன்மா அறிகி ருர். இங்ஙனம் மூலசுலோகார்த்தம்; இதைக் கவிநாயகர், 'அபாவபாவ த்தை விட்டகண்டமாயறிந்தபோதடங்கவாம்' என்றனர். பாவாபாவம் = ஞாதாஞ்ஞாதம்.—

௧௪. சுலோ, ["துவைதத்தைக் காண்கிருனில்லை, காணினும் அதைக் காண்கிருனில்லை" என்பதாதிய சுருதியை வியாக்கியானஞ் செய்கிருர்.] பின்னமா+நிகழ்ந்ததாம் = இவ்வண்ணஞ் சொல்லிய ரீதி யாய் அவஸ்தாத்திரயசாக்ஷியாயும், அவற்றினின்றும் பிரிக்கப்பட்டவ ராயும், சுவயம்ஜோதிசொரூபராயும் இருக்கிற இந்த ஆன்மாவைச் சுவாத்மாவாக எவனறிகிருஞே அந்தயோகியானவன் சர்வாவஸ்தைகளி லும் துவைதத்தைப்பார்த்தபோதிலும் பார்க்கவில்லை. வித்துவானுக் குத் தனக்கு வியதிரிக்தமாயிருக்கிற அவித்தியா தத்காரியமானது ஞானத்தினல் நிவிர்த்தியானதால், துவைதத்தைச் சட்சுஆதியிந்திரிய ஜனித விசேஷ விஞ்ஞானத்தால் அவன் பார்க்கினும் சொரூபஞான மாகவே விளங்குகிருன்—[எதனுலென்னின்? சொல்லுகிருர்.]ஞன்+ மில்லை = ஆன்மாவினுடைய சிற்பிரகாசரூபமாய் யாதொரு திருஷ்டி யுண்டோ அதற்கு நாசமில்லை.—அக்கினியினுடைய உஷ்ணம் அக் கினியுள்ளளவில் நாசமாகாததுபோல அவிநாசியாயுள்ள ஆன்மாவி ன்து திருஷ்டியும் திரவியமுள்ளளவில் நசியாது ஆதலால் தனக்கு நாசசங்கையானது செய்யத்தக்கதில்லை என்று பொருள். இதனுல், "திருஷ்டாவினுடைய திருஷ்டிக்கு லோபமானதில்லையல்லவா? அவி நாசியாயிருத்தலால்" என்னும் சுருதியானது வியாக்கியானஞ் செய் யப்பட்டது. [ஆத்மதிருஷ்டி சர்வதாவிருக்குமாகில் அதனலே எக் காலத்திலும் திருசியஜகத்பிரதிபாசம் ஏன் காணவில்லை என்று சங் கித்துச் சொல்லுகிருர்.] ஞேயநாச+தன்மையால் = திருக்குரூப ஆத்ம விஷயமாயுள்ள திருசியமான துவைதஜகத்து அதிஷ்டானதத்துவ

வேறு.

இதுபரமமானகதியிதுபரமமாமுலகு
மதிசுகமுமாவதிதுவழிவிறனமாவதிது
வுதறுதனதேஹாகமுடலெனவுனுதுபர
மதனையறிவானதிகனகமதிவையானுடலில். (கரு)

ஞானத்தால் அடையத்தக்கவுபாதியில் விலீனமாகிறது; அவ்வேதுவால் துவைதஜகத் பிரதிபாசமின்மை, விஷயாபாவத்தால் வந்ததேயன்றிச் சிதாத்மதிருஷ்டிபரிலோபத்தால் வந்ததன்று. பிரத்தியகான்மசொரூபப்பிரகாசத்தாற் பிரகாசியமானமாயுள்ள நாமரூபாத்மகதுவைதப் பிரபஞ்சமானது சுழுத்தி, சமாதியவஸ்தைகளில் இல்லை. கேவலம் திருஷ்டாவாகிய சிதாத்மாவே இருக்கிறார். இதனால், "துவைதமில்லை" என்கிற மூலசுருதி வியாக்கியானிக்கப்பட்டது.—

கரு-செ-ள், [இங்ஙனம் அத்விதீயாத்மநிஷ்டனுக்கு நிரதிசயானந்தம் சுருதியிற் சொல்லப்படுகிறது; அவ்வர்த்தத்தைச் சங்கிரகித்து உபதேசிக்கின்றார்.] இதுபர+மாவதிது—எதனிடத்தில் அன்யத்தைப் பார்க்கவில்லையோ அப்படிப்பட்ட இந்தப்பிரமநிஷ்டையே வித்துவானுக்குப்பரமமாயுள்ள கதி: (பிரமாதிஸ்தம்பாந்தமான அன்னியகதிகள் அவித்தியாபரிகற்பிதங்களாதலால் பரமமானகதிகளன்று) அப்படியே அந்தத்தத்வவித்துக்கு இதுவே பரமமாகியலோகம்: (கருமபலாசிரயலோகங்கள் பரமமன்று; யாதினாலென்னில்? சொல்லியபரமாத்மநிஷ்டை கர்மஜன்யமல்லாமல் சுபாவீகமாய், நிரதிசயமாகக் காணப்படுதலால், துவே பரமலோகம்.) நிரதிசயப்பிரமான்மபாவமான இவ்வவத்தை நித்தியமாதலால் இதுவே பரமசுகமாம்: (ஏனைய விஷயசுகங்கள் அநித்தியமாதலாலும், தனது சொரூபானந்த லேசமாதலால் உபேட்சிக்கத்தக்கனவாதலாலும் பரமசுகங்களன்று.) எந்த நிஷ்டாவாப்தியில் சாதகன் கேவலசிற்சதானந்தாத்வயமாத்திரனைப் பரிசேஷித்திருந்து அவஸ்திதனைச் சுவாத்மான்னியத்தைப் பார்க்கிறானில்லையோ அவ்விதப்பரமாத்வைத நிஷ்டாவாப்தியே பரமமான சம்பத்து: (இதரசம்பத்து, கிருதங்களானபடியால் அநித்தியங்கள் என்றுபொருள்.)—[இந்தப்பிரகாரம் பிரமபூதனானபுருஷன் மீண்டு காரியகாரண சங்காதத்தை ஆத்மாவாகவபிமானியான் என்னும் இவ்வர்த்தத்திற் சுருதியிற் சொல்லப்பட்டிருக்கிற திருஷ்டாந்தத்தைச் சங்கிரகிக்கின்றார்.] வுதறுத+னுடலில்—இனி மூலம் [தேகாத்மபாவமானது பேதாதீனமாதலால் அதனுடைய நிரூபணமுங் கூடாதென்னும் அபிப்பிராயத்தால், "இதிற்

தற்பரமமாகியுளதத்துவமதேயொழிய
வற்பமயல்காணுமவரத்துருவமேயடைவர்
கற்பிதவஞ்ஞானமதிலுற்பவமதாமூலக
நற்பிரமமாயறிவர்நற்சிவமதாநயனர். (௧௬)

வேறு.

நிலையினிலையாகியளவிடவொணுதநிமலனுருநாளுநினைகுவான்
சலனமுறநாவுமலைவலையறுதசமயகலையோதறவிருவா
னுலகிலுதியாதுவுயர்வுகுறைவானதொருவினையிஞலுமருவுறு
தலகிலுலகேகவல்செயவுரியனைவதிபதியுமாமமலனே. (௧௭)

---

கிஞ்சித்தும் நானுவான சகத்தில்லை" என்னும் அதன் நிஷேதசுருதியைக் கூறுகின்றார்.] மூலம்—சர்வாதாரமாயும், சுவசித்தமாயும், சிவசம்ஜ்ஞையுடையதாயும், மிகவும் நிர்மலமாயும், பிரத்தியக்பூதமாயும்; பராநந்தமாயுமுள்ளதில் கிஞ்சித்தும் நானுவானஜகத்தில்லை; பிரமமானது துவைதஜகத்பிரதிபாசத்திற்கு அதிஷ்டானமாதலால் அதுவே துவைதஜகத்பிரதிபாசநிஷேதத்திற்கும் அவதியாதலால், 'சர்வாதாரம்' என்றார். துவைதப்பிரபஞ்சம்போல் அதற்கும் அத்தியஸ்தத்வமுண்டென்னுஞ் சங்கையைமறுக்கும்பொருட்டு அதிஷ்டானுந்தரத்தில் அத்தியஸ்தமாயில்லாமையின் அன்னியாதீனசத்தாகமாகாததால், 'சுவசித்தம்' என்றார். மாயையில்லாததால், 'நிர்மலம்' என்றார்; இவ்விதசொரூபராய்ச் சிவசஜ்ஞையுடையராய், பிரத்தியக்ரூபராயிருக்கிற இந்த ஆத்மாவினிடத்தில் பிருதக்காக ஒருவஸ்துவும் பரமார்த்தமாயில்லை என்று பொருள்.—இவ்வளவும் கவிநாயகர் கூறுதொழிந்தது.

௧௬. செ-ள், [விபக்ஷத்தில் சுருதியிஞற் சொல்லப்படுகிற பாதகத்தைச்சொல்லுகிறார்.] தற்பர+மேயடைவர் = எவன் பிரத்தியகாத்மசொரூபமாயுள்ள இந்தப்பிரமத்தில் நான் வேறு, ஜகத், ஈசுவரனுதிகள் வேறு என்று பேதத்தைப் பார்க்கிறானே அவன் அவித்தையிஞல் வசீகரிக்கப்பட்டு ஜனனமரணத்தை யடைகிறான்.—[ஆதலால் சொல்லியவிதமாய் அத்விதீயாத்மதெரிசனமே சிரேட்டமென்று நிகமனஞ்செய்கிறார்.] கற்பித+நயனர்—

௧௭. செ-ள், [திருக்குரூபரான ஆத்மா தெரிசிக்கத்தக்கவராகில் கடாதிகள்போலத் திருசியத்வம் நேரிடுமென்னிற் சொல்லுகிறார்.] நிலையி+நினைகுவான் — கூடஸ்தநித்தியராதலால் துருவம் என்பார்,

பூதபதிபூதபாலனுலகூடுபோகமுடியர்ததானதோர்
சேதுவெனுமீசனனவனைமேவறேடிவழிபாடுமேவியே
வேதமொழியாலும்வேள்விபலவாலுமேவுதவதானபூசையே
யாதிவழியாலுமாதரவினுலுமாயுமுனிஞானியாகுவான். (கஅ)

'நிலைபினிலையாகி' என்ருர். அன்னியமல்லவா? அன்னியத்தாலறி யப்படுகிறது, அத்வி தியாத்மாவானவர் எப்படி அன்னியனு லறியத் தருந்தவர் ஆதலால் தனது விஷயமான சாக்ஷாத்காரமுண்டாமளவில் சொரூபப்பிரகாசத்தினுற்ருனே பிரகாசித்தலால் அப்பிரமேயமென் பார், 'அளவிடவொணுத' என்ருர். தர்மாதர்மாதிமலமின்மையின், 'நிம லன்' என்ருர்; இவ்வான்மாவையே புத்திமானுனபுருஷன் உபதேசத் தாலும், சாஸ்திரத்திலும் அறிந்து மறுபடியும் அதன்விஷயமான சாட்சாத்காரசொரூபமான பிரஜ்ஞையைச் செய்வான் என்பார், 'நிமல னுருநாளு நினைகுவான்' என்ருர். [இந்தப்பிரகாரம் ஆத்மவித்தான வன் அனுன்மவிஷயங்களான வெகு சப்தங்களைத் தியாகஞ்செய்ய வேண்டும். எனக்கூறுகின்ருர்.] சலனமுற+றவிருவான். அனுன்ம விஷயமாயுள்ள வெகுவித சப்தங்களை அத்தியயனஞ் செய்வதையும் அனுசிந்தனஞ்செய்வதையும்விட்டுவிடுவன்;—ஏனென்னில், விசேஷித் தும் அதனுல் சிரமமாத்திரமே பலமன்றிப் பிரயோஜனமின்மையின். என்க.— [கூறப்பட்டதும், கூறப்படுவதுமாயுள்ள சமஸ்தோபநிஷ தார்த்தத்தைப் பிரதிபாதிப்பதாகிய "அந்த இவன் மஹான், அஜன், ஆன்மா" என்று தொடங்கிய கண்டத்திற்சொல்லிய வர்த்தத்தைத் தெரிசிப்பிக்கிருர்.] உலகு = கருமவசீகிருத ஜனங்களால் — அருகு யாது = அடையத்தக்கனவான சாஸ்திரவிகித நிஷித்தகரும ஜனிதாதி சயம்யாது — அவ்வுயர்வு குறைவானது = அவ்வேற்றத்தாழ்வுகளை — ஒரு வினையினுலு மருவுறுது.— அலகிலுலகு = பிரமேந்திராதி ஜனங்கள் — ஏவல்செய + மமலனே — எ-று.

கஅ. செ-ள், பூதபதி+சேதுவெனும் — பூதபதி = பிரமாதி ஸ்தம் பாந்த சகலபூதங்கட்கும் அதிபதி — பூதங்களைப் பாலனஞ்செய்வதால் பூதபாலன் — பிரமாதிலோகங்கட்கு அந்தந்த மரியாதை யழியக்கூடா தென்று வருணுச்சிரமமுதலான ஒழுக்கங்களை எப்படிலௌகிகமான சேது பேதியாததற்கேதுவாகுமோ அப்படியே தரிப்பிக்கிறவராதலா லும், இந்தப்பரிசிவனுனைத்தருளிய சுருதி, ஸ்மிருதி சொல்லிய மார்க் கத்தை அனுஷ்டிக்கின்றவனை அதனுலுண்டான ஞானத்தினுல் சம் சார சமுத்திரத்தினின்றும் தாண்டச்செய்தலாலும் சேது — [இங்ஙனம் வேத்தியசொரூபத்தைப்பிரதிபாதித்து அதன் வித்தியாலாபத்திற்காகச்

வேறு.

குறியதுவாதலாற்குறிக்கவும்படா
னிறுவதுமிலனுடம்பென்றுமின்மையாற்
செறிவதுபற்றிலன்றீண்டலின்மையா
லறியிலவ்வறிஞனென்றேடுமொர்ப்புருன். (கக)

சுருதியிற் கூறப்பட்ட சாதனத்தைத் தெரிசிப்பிக்கிறார்.] ஈசஞனவனே +யாகுவான்—வேதமொழி= இரகசிய வேதஜபரூப நித்திய சுவாத்தியானுவசனம் — வேள்வி = நித்தியநைமித்திகரூபமான அக்கினிஹோத்திராதிகள்—தவம்= அனசனரூபதபசு — தானம்= சுருதி, ஸ்மிருதி புராணவிகிதமான துலாபுருஷதானுதிகள்;—இவற்றால், அந்தக்கரணசுத்தியும், விவிதிஷோதயமும், அதன்வழியாய்ச் சாந்தியாதிகுணங்களும் பெற்றுச் சிரவணுதியப்பியாசத்தால் ஜனிதமான பிரமவித்தையினுல் பூர்வோக்த லக்ஷணுத்மதத்வத்தைக் கரதலாமலகம்போலவே சாதகன் சாக்ஷாற்கரிக்கிறான்; அந்தச்சாதகன் ஆத்ம எதார்த்தமனனசீலனுக விருக்கிறபடியால் முனியென்று சொல்லப்படுகிறான். அனுன்மஞானியாகிய பிரகிருதபுருஷன் பூர்வோக்தக்கிரமமனுசரித்துப் புருஷார்த்தத்தையுடையவனுகமாட்டான். அனுத்மவித்தான பிரகிருதபுருஷனது மனனம் சகலமும் அனுத்மவிஷயமாத்திரமாக விருப்பதனுலும், அனுத்மவிஷய வியாபாரபரனுகவிருப்பதுகொண்டும் அவன் கருமியேயாவன். ஆத்மதத்வவித்தாயுள்ள முனியானவன் கிருதகிருத்தியனுதலால், முனிசிரேஷ்டனுகின்றான். சுருதிகளிலும் ஆன்மஞானத்தால், முனித்வப்பிரசித்தி தரிசிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

கக செ-ள், ["சர்வவசி" எ-ம், "ஈசானர்" எ-ம் உபதேசித்திருப்பதுகொண்டு அவ்விதமுள்ள விதிமுகவாக்கியத்தினுல் பிரதிபாதிதமாயுள்ள ஆத்மதத்துவத்திற்குச் சோபாதிகத்வசங்கையை நிவிர்த்திப்பித்தற்கு வியதிரேகமுகத்தினுல் அவாங்மானசகோசரமான அந்தப் பிரத்தியக்கான்மவஸ்துவை 'நேதிநேதி' என்பதாதியால் சுருதிபிரதிபாதிக்கின்றது; அந்த அர்த்தத்தைச் சங்கிரகித்துபதேசிக்கின்றார்.] குறிய+மின்மையால்—கூறிய லக்ஷணரான பிரத்தியகாத்மா சர்வதாயாதொரு இந்திரியங்களினுலும் கிரகிக்கத்தக்கவரன்று; இவ்விந்திரியங்கள் ரூபாதிகளையுடைய வஸ்துக்களைக் கிரகிப்பனவாதலால், ஆத்மாவானவர் அத்தியஸ்தப் பிரபஞ்சத்திற்கு வசீகாணரூபராகவுமாகார்: நிரவயவராதலால், கெடுதியில்லாதவர். ஆதலால், திருசிய நிஷேதத்

சத்தியத்தான்மிகுஞ்சாந்திதாந்தியா
லெத்தொழிலும்மிசைவற்றிருத்தலாற்
பத்தியாலிறைவனைப்பண்ணும்பூசையாற்
சுத்தவேதாந்தமெய்த்துணிவுதோன்றுமால். (உ0)

வேளுடல்பொடிபடவிழித்தவிண்ணவற்
காளெனுமன்பினுலன்னியுநீற்றையுத்
தூளனம்பண்ணலாற்றெழுதுபோற்றலான்
மாளுதல்பிறத்தலாம்வழியைமாற்றலாம். (உக)

மெய்யுறுமன்பினன்மேவுசாதன
மையமின்ஞானமுண்டாக்குமாக்கினுல்
வையகமியாவையுமன்னுபோதமாக்
கையுறுகூவிளங்கனியிற்காணலாம். (உஉ)

வேறு.

மேவுபாவம்வெல்லாதுமெய்ஞ்ஞானியைவென்றிடுமிவனெல்லாப்
பாவமானதுமாதலால்வேதனம்பண்ணவல்லவனை
தேவதேவனுந்தேசிகன்றனக்குமுன்செய்பொருளுடலாவி
யீவதேகடனிறைவனெம்பிரானெனவேத்திமெய்யிதயத்தால். (உங)

திற்கு அவதிபூதராய் எக்காலத்தும் பாசையற்றவர்.—[விருத்திக்ஷயத் தோடுங்கூடிய திருசியத்தினுடைய சம்பந்தவசத்தால் அதற்கு அதிஷ்டானமான ஆன்மாவிற்குவிகாரம் ஏன்வராதென்னிற் சொல்லுகிறார்.] செறிவது+மார்ப்புறுன் — நிர்லேபசொரூபராகிய ஆன்மாவானவர் ஓரிடத்திலுஞ் சம்பந்திக்கமாட்டார்: தன்னுடையதாக ஓரிடத்திலும் அபிமானமில்லாததால். ஆசக்திக்கேதுவாய், மித்தியாபூதமாயிருக்கிற திருசியம்பரமார்த்தமாய்ச் சம்பந்திப்பிக்காததால். மரீசிகாஜலங்களால் மருப்பூமியானது நனைக்கப்படமாட்டாதல்லவா.

உ0. செ-ள், [அவ்வித வித்தியோத்பத்தியில் பகிரங்கசாதனமானவேதானுவசனுதிகள் உபதேசிக்கப்பட்டன. இனி சுருதியினுற் பிரதிபாதிக்கப்பட்ட அந்தரங்கசாதனங்களைக் கூறுகின்றார்.]

உக. செ-ள், [அப்படியே ஜாபாலோபநிஷத்திற் பிரதிபாதிக்கப்பட்ட விபூதிதாரணுதிகளும் சிவப்பிரீதிகரங்களாகலின், பரவித்தியோத்பத்திக்கு அந்தரங்க சாதனங்கள் எனக்கூறுகின்றார்.

உங. செ-ள், [உள்ளங்கையிலிருக்கிற வில்வபலம்போலச் சகல திருசிப்ஜாதத்தையும் பரசிவசொரூபமாக வபரோக்ஷமாய் எவன் அறிகிறானே அந்த இவனுக்கு என்னுண்டாமெனச்சங்கித்துப் பிரதிபாதிக்

பாயவன்புலத்தொழாவகைதீர்ந்ததன்வாய்மையான்மயிர்க்காலாற்
பாயவின்னமுதிருசெவித்துளைவழிபாய்ச்சினன்பதுமத்தா
டாயுந்தந்தையுஞ்சுற்றமுமற்றுநற்றனமுமென்றடைவான்றன்
காயமுள்ளளவும்புகழ்ந்தேத்துவான்கற்றதோர்கலையாலே. (உச)

வேறு.

நேசிகன்றன்றிருமேனிசிந்தைசெய்யச்சிவனைச்சிந்தித்தானுஞ்செம்பொற்றுளிற், பூசனைசெய்திடவெங்குமாகிநின்றபூரணனையினிதாகப் பூசித்தானு, நாசமிலாச்சிவநாமநவின்றானுண்டநாயகன்றன்றிருநாமநவின்றானுகி, லீசனையேயிகழ்ந்தானுங்கண்ணிற்காணவெழுந்தருளுந் திருக்கோலமகிழ்ந்தானுகில்.

ஆதலினுல்வேதவேதாந்தத்துண்மையறிவானுய்முழுதுமறிந்தடங்கினன்றன், பாதமடைவான்முத்திவேண்டினல்லற்பரப்பையெலாங் கைவிடுவான்பரிவோடுங்கட், கோதுவதிற்கிடைப்பதிலையருளாலெல்லாமோதினேனிப்பொருண்மெய்யுணர்ந்தோன்செய்யு. நீதிபிழைநினைந்திடவுமில்லையெங்குநிறைந்தபரம்பொருளாகிநிகழாநின்றான். (உரு)

வேறு.

ஒருவராலொருவிரகிலுணர்வொணுததுபரம
குருவினலறியவருமதனைநேர்தருதாவ
னருளையாதொருவழியிலடையலாமதுமுயல்கை
கருமமாமெனநிகரில்கருமநான்முகனருளும். (உஎ)

## பத்தாவது பிரகதாரணியவுபநிஷதத்தினுஷத்தங்கார்க்கியாந்தர்யாமிப்பிராமணங்களினருத்தமுளாக்கு மத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - சகஎ.

---

கின்றார்.] மேவு + பாவமானதும்—பாபக்கிரகணம், புண்ணியபாவங்களுக்குஉபலக்ஷணம். செய்யத்தக்கதும்,செய்யத்தகாததுமான புண்ணியபாபங்கள் இந்தப்பிரமவித்தை தபிப்பியாது. பிரமவித்தே ஆத்மஞானக்கினியால் சர்வத்தையும் தகிப்பான்; இதற்குப்பிரமாணம் பகவத்கீதை, "எறியாவெரிவருகா + பொடியாமிதொர்பொருளே" [தன்னோடு கூடச் சர்வசொத்தும் பிரமோபதேசம் பண்ணுகிற குருவுக்குக் கொடுக்கத்தக்கதென்று சுருதியிற்சொல்லப்பட்டிருக்கிறது; அதனர்த்தத்தைக் கூறுகின்றார்.] ஆதலால் + மெய்யிதயத்தால்.—

உச. செ-ள், [அத்தன்மையனை குருவைத் தாய்தந்தையாகக் கருதி ஒருக்காலும் துரோகஞ்செய்யக்கூடாதென்னும் இந்த அர்த்தத்தைப் பிரதிபாதிக்கின்றதான யாஸ்காரால் உதாகரிக்கப்படும் மந்திரத்தைக் கூறுகின்றார்.]

## பதினேராவது
## கடவல்லி சுவேதாசுவதரவுபநிஷதங்களி ளர்த்தமுரைக்கு மத்தியாயம்.

### அவதாரிகை.

[இந்தப்பிரகாரம் பிருகதாரணியோபநிஷத்திற்குப் பிரமான்மை க்கிய பரத்துவ முண்டென்பதைக்கூறிக் கதிசாமான்யந் தெரிசிப்பித் தற்காகக் கடவல்லி யுபநிஷதத்திற்கும் அப்பரத்துவமுண்டென்பதைத் தெரிசிப்பிக்கவேண்டி இவ்வத்தியாயம் ஆரம்பிக்கின்றார்.]

பன்னுநன் குருவெனும்பரம்பரன் றிறஞ்
சொன்னதன்மையையெலாந்தோன் றநானுமக்
கின்னமுங்கூறுவனென வியம்பினு
னன்னவாகனத்தினனமரர்க்கன்பினுல். (க)

### வேறு.

குகையிலிருப்பதாய்மிகவுங்கூடமாகியெவ் விடத்துந்
திகழ்வதாகியொருவர்க்குந்தெரியாதாகுஞ்சிவனுருவ
மிகவுநன்றாய்மேலாமவ்வுருவமெய்ம்மைவிளங்குமவன்
சுகதுக்கங்கடீர்ந்துவெறுஞ்சுகசொரூபனுகின்றான். (உ)

தருமாதிகட்கும்பூதங்கடமக்கும்வேறுயாதொன்
றருமாமறைகளுறைகின்றதரியபிரமசரியாதி
சரியாநின்றாரியாதுபெறவதுதற்பரமக்கரமதனைத்
திரமாயறியுமவன்சிந்தைசெய்ததெல்லாஞ்சித்திக்கும். (௩)

---

உ. செ-ள், [நாசிகேதுவிற்கு இயமன் கொடுத்த மூன்று வரங்களுள், இதில் ஆத்மவித்தியாவிஷயபாகமாத்திரத்தைச் சங்கிரகித்துப் பிரமா உபதேசிக்கின்றார்.] மூன்றுவரங்களாவன: தீர்க்ககாலகுருசிசுரூஷை, கருமலக்ஷணம், ஆத்மவித்தியாலக்ஷணம் ஆம். குகையி+சிவனுருவம்=பிரமசொரூபம் புத்தியின்கண்ணிருப்பதாய்—இருதயாகாசத்தை யநுப்பிரவேசித்துப் பிராகிருதவிஷயஞானங்களால் மிகவுமறைவாய் எவ்விடத்துந்திகழ்வதாகிஅதிசூட்சுமமாதலால் யாவர்க்குந்தோன்றுததாம்; இவ்விதமாய் ஆத்மதத்துவமறியத்தக்கது என்று பொருள். மிகவு+ரூபனுகின்றான்.

௩. செ-ள், [தர்மத்தினும் அன்னியமென்னும் மந்திரார்த்தத்தைச் சங்கிரகிக்கிறார்.] தருமாதி = சாஸ்திரீய தர்மாநுஷ்டானம், பாபம், அவற்றின் பலரூபலோகங்கள்—பூதங்கள்=பூதபாவியாதிகா

அந்தப்பரமேயெப்பொருட்குமாலம்பனமாவதுவதனைச்
சிந்தைக்கேறத்தெளிவுற்றான்செனியான்மரியாளுருதிசையில்
வந்துற்றிலனோர்வடிவுமிலனதனல்வரவுபோக்காகு
மிந்தத்தொழில்களொன்றுமிலனெங்குந்தானுயிருக்கின்றான். (௪)

வேறு.

போன்றவுடலைத்துணிசெய்போதுமிறைபொன்றான்
கொன்றிடுதலுங்கொலையுறுந்தொழிலுமில்லா
னின்றுபெருண்மைச்சிறுமையிற்பெருகிநுட்பா
யென்றுமிதயக்குகையிலேயிலகுகின்றான். (௫)

அண்ணியனுமாகுமதிதூரியனுமாகும்
வண்ணமிலதானமகிமாவருளினாலே

---

லந்திரியங்கள் (அவைகளாற் பரிச்சேதிக்கப்படும் வஸ்துக்கள் ஆகிய இவைகட்கு)—ஏதுவாய்=நித்தியம் பரமாயிருப்பதாய்—விலக்ஷணமாயிருப்பதாயென்பதாம். 'ஏது' என்றதை, ஈண்டு பரமென்றுகொள்க. அதுதற்பரம்+சித்திக்கும்=அதுவேசிவம்; அந்தப்பிரணவாத்மகமான அக்ஷரமே இரணியகர்ப்பரூபமான பரப்பிரமமா யுபாசிக்கத்தக்கதாயும், சமஸ்த உபாதிகளும் விடுபட்ட சச்சிதானந்த ஏகரசமாயறியத்தக்கதாகவும் விளங்காநின்றது; ஆகையால் தன் அதிகாரத்துக்குத்தக அதனைத்திடமாயுபாசித்து அல்லது, அறிந்துவருபவன் அடையஇச்சியாநின்றது சகுணமோ அல்லது நிர்க்குணமோ அது முழுதுமடையப்படும்.—

௪. செ-ள், [பிரணவார்த்தலட்சியவஸ்து பிரத்யக்கபின்ன பரமசிவந்தான் என்று மேலும் உபதேசிக்கிறார்.]

௫. செ-ள், பொன்றவு+பொன்றான்—[உலகத்தில் ஓரான்மா மற்றோரான்மாவினைக் கொன்றவனாகக் காணப்படுதலிற்கொன்றவனையும், கொல்லப்படுபவனையும் உள்ளவிரண்டான்மாக்கள் சகலபிராணிகளுக்கும் சம்மதமாகுமென்று சங்கித்துக்கூறுகின்றார்.] கொன்றிடு+மில்லான்—[மேலும்ஆன்மலக்ஷணத்தைத் தெரிசிப்பிக்கின்றார்.] நின்று பெரு+குகின்றான். இதயக்குகையிலே யிலகுகின்றான் = பிரமாதிஸ்தம்பபரியந்தப்பிராணிகளின் இருதயமென்னுங் குகையில் ஆத்மசொரூபமாக விளங்குகின்றான்.—

௬. செ-ள், அண்ணிய+தெளிவாரார்—மகிமா=அனவச்சின்ன பிரமரூபலக்ஷணம்.—அந்தமகாதேவனை இவனே நானென்று சாக்ஷா

கண்ணினிகழ்வாமலதுகாணவெளிதோதான்
றிண்ணமுறநானறிவன்வேறுதெளிவாரார். (௬)

நின்றமுடரோறுமுடலின்றிநிகழ்வானாய்ப்
பொன்றுமதனோடுமொருபொன்றுதலுமுறா
தென்றுநிலையாயுலகமெங்குமொருதானா
மொன்றையறிவானிடர்களொன்றிலுமுழலானால். (௭)

வேறு.

இகழுபுன்னெறியைவிட்டொருப்படுமிக் கிந்தியமனங்கண்மீண்டிருக்
தகவினையுடையானருள்பெறுமந்தவருளினாற்றத்துவஞ்சாரு [குந்
மிக்பரமிரண்டும்புசிப்பவனவனிங்கெவ்விடத்தேயுளனிங்ஙன்
றிகழுறமிருத்ததேவருமறியார்மனிதரோவினித்தெளிவுறுவார். (அ)

ஏயபேருலகில்வினைப்பயனுகர்ந்தங்கிதயமேமருவுவாரிருவர்
சாயையாதபமாகின்றனர்சீவசங்கரனொன்றிடத்தகுவா
ரோயுமாறறவேயுண்பவன்சீவனூட்டுவான்சிவனிவர்தமக்கிங்
காயபேதந்தானுபாதியால்வந்ததல்லதபேதமேயாகும். (௯)

---

தறிதற்கு என்னைப்பார்க்கிலும் யாவன் யோக்கியனாகின்றானென்பார், ‘திண்ணமுற நானறிவன் வேறுதெளிவாரார்’ என்று கூறினார். இது நாசிகேதுவுக்கு இயமன் சொல்லியது.

௭. செ-ள், [மேலும் ஆத்ம எதார்த்தத்தையும், அதனது ஞான பலத்தையும் தரிசிப்பிக்கிறார்.] பொன்றுமதனோடுநின்றும் = அநித்தியங்களான தேவ, பிதுர், மனுடாதி சரீரங்களினின்றும் — அறிவான் = மனனத்தினாலே நிச்சயித்ததீரன்.—

அ. செ-ள், [ஆத்மாவகதிசாதனங்களைத் தரிசிப்பிக்கிறார்.] இகழு + ஞ்சாரும் — புன்னெறி = பாபநெறி — [அவ்வித பரமார்த்ததத்துவவித்துக்களும் துர்லபரெனத் தெரிசிப்பிக்கிறார்.]

௯. செ-ள், [சொல்லியவர்த்தத்தை இரதரூபகற்பனையால் பிராப்தப்பிராப்தவ்வியபாவத்தால் விரிப்பான் உபாதியால்வந்த சீவேசுரருடையலோகசித்தமானபேதத்தைச்சொல்லவேண்டிய “சத்தியம் புசியாநின்றனர்” என்னும் மந்திரார்த்தத்தையும், அதனதபிப்பிராயத்தையும் நுவல்கின்றார்.] ஏயபே + ொன்றிடத்தகுவார் — இதயம் = சத்துவபரிணாமரூபமாகிய புத்தியில் — அதில் ஜீவனே கருமபலபோக்தா, பரமாத்மாவன்று. ‘மற்றொருவன் புஜியான்’ என்னுஞ் சுருதியால் என்க. ஈண்டு ‘வினைப்பய னுகர்ந்தங்கிதயமே மருவுவாரிருவர்’ எ-து, சத்திரி

வே று.

தேசினிகழ்தேருடல்செலுத்தும்திபாகன்
பாசமனமாமதுபிணித்துவருபாய்மா
வீசுபுலனும்விடயவீதிமிசைதானு
மீசனிவையாதும்விளையாடியிடுகின்றான். (௰)

யோகமனமொன்றியறிவாமுணர்விலானுக்
காகமுறுமைம்புலவயங்கள்வயமாகாப்
பாகனையறிந்தபரிபோலமனனத்தே
யாகுமதியாளனையறிந்துவயமாமால். (௧௧)

வருத்தமிலதாமனனமற்றமதிகேடன்
பரத்தையடையான்மிகுபவத்தையடைகின்றா
னொருக்குமனனுணர்வுகூடினவன்வீடா
யிருக்குமிடமேவியதினின்றுமிளையானல். (௧௨)

---

நியாயத்தால் என்க. [அவர்கட்கு வாஸ்தவமாகப் பேதமில்லையெனல்.] ஓயுமாறறவே + பேதமேயாகும்—மாயை, அவித்தையினால் அபரிச்சின்னமாகிய பிரமத்தில் சட்டிஜலத்தில் சந்திரவிம்பம்போலப்பிரதீதியாகின்றதல்லாமல் வாஸ்தவமாகப் பேதமில்லை எனவறிக.

௰. செ-ள், [அவித்தியோபாதியினாலுண்டான சீவனுக்கு அவ்வவித்தையினால் சம்சாரம் வருவதும், வித்தையினால் மோட்சம் வருவதும் ஆகிய இவ்விரண்டும் இரதரூபகற்பனையினாற் பிரதிபாதிக்கின்றார்.] தேசி+மிசை—தான் ஈசனும்=(கருமபல போக்தாவாய்ச் சம்சாரியாயுள்ள) ஆத்மா ரதசுவாமியாம்—இவையா+யிடுகின்றான்= தேகேந்திரியாதிகளோடு கூடிய ஆத்மா புசிப்பவன், சின்மாத்திரரூபனான ஆத்மா புசிப்பவனன்று என்க.

௧௧. செ-ள், [முன்சொல்லிய ரதரூபகற்பனையை முன்னிட்டு அவிவேகிக்கு இந்திரியங்கள் வசமாகாததன்மையும், விவேகிக்கு வசமாந்தன்மையும் கூறுகின்றார்.] யோக+வயமாமால் = சமாகிதசித்தத்தோடுங்கூடிக் காரியாகாரிய விசாரரூபமாகிய விவேகஞானமில்லாதவனுக்கு வயமாகா. முற்கூறியதற்கு விபரீதமாய்ச் சமாகித மனத்தோடு கூடும் விவேகஞானமுடையோனை யறிந்து வயமாம் என்க. "மனனத்தேயாகும்" மனனத்தோடு கூடும் என்றுமாம்; இது மூலசுலோக வியாக்கியானப்படி.

௧௨. செ-ள், [இவ்விருவர்களும் கிரமமாகச் சம்சார மோட்சங்கட்கு அதிகாரிகள் என்று கூறுகின்றார்.

### வேறு.

பொருந்துஞானமாமதியினான்மனத்தைப்பூட்டியைம்புலப்பாய்மா
பரந்தெழாவகைதன்வசமாக்கினான்பரம்பதமடைகின்றான்
றிருந்துமாலுடைப்பதமதுவதுபரஞ்சிவனெனுந்திருநாமத்
திருந்தவாறுதானிருந்தவாறன்றிவேறிணையிலாவிறையாவான். (கங)

அருள்தாலுருவொன்றியேநின்றுளவகிலநாயகனென்னும்
பொருளதேபரமாம்பதமியாவரும்புகலிடமதுவாகுங்
கருணைமேவியசிவனெழிந்துருத்திரன்கண்ணனான்முகனென்பா
ரிருளதாகுமேபரம்பதமெனும்படியெஙஙனேயிமையோரே. (கச)

இந்தியங்களிற்பொருளெனும்பரமனமிவற்றினும்பரமத்திற்
புந்திநற்பரமதிலுமான்பரமெல்லாம்பொன்றியதெரியாமை
யந்தமானினும்பரமவ்வியத்தமாமதிற்பரம்புருடன்று
னிந்தமெய்ப்பரம்புருடனிற்பரம்பிறிதில்லைமேலிவனேயாம். (கரு)

---

கங. செ-ள், [அந்தப்பதத்தை மேலும் விசேஷிப்பிக்கின்றார்.] ஞானமாமதியினால் = ஆத்மானாத்ம விவேக ஞானரூப புத்தியாகிய சாரதியினால் — பரம்பதமடைகின்றான் = (ஆத்மசொரூப எதார்த்த ஞானத்தால் சம்சாரமார்க்கத்தின் பாரமாகிய) நிரதிசயமான பிரமபதத்தை யடையாநின்றனன் — மாலுடைப்பதம் = வியாபகமாகிய பிரமத்தின் பதம் —

கரு. செ-ள், [இந்திரியாதிகட்கு உத்தரோத்தரம் சூட்சுமத்வம், வியாபகத்வம், பிரத்தியகத்வாதி தாரதம்மியம் கிரமமாகச்சொல்லிப் பரசிவத்திற்குச் சூட்சுமத்வாதி நிரூபிக்கிறார்.] இந்திய + ருடன்றான் — பூதகாரியங்களான இந்திரியங்கள் தூலங்களாம்; அவைகள் சப்தாதி விஷயங்களால் தாம் பிரகாசிக்கும்பொருட்டு ஆரம்பிக்கப்படுகின்றன; அதனால் அவைகளின் காரியங்களாம்; இக்காரியங்களான இந்திரியங்களைப்பார்க்கிலும் பொருள்கள் பரமாயும், சூட்சுமங்களாயுமுள்ளன; அப்பொருள்களினும் மனமென் சப்தவாச்சியமான அம்மனத்தினது ஆரம்பபூத சூட்சுமம் பரமாம்; அம்மனத்தைப்பார்க்கிலும் சூட்சுமதரமாய், மகத்தரமாய், பிரத்தியகாத்மபூதமான புத்தியானது பரம். அத்தியவசாயமாதிகளின் ஆரம்பகபூத சூட்சுமம் புத்தி சப்தவாச்சியமாம்; அதனினும் மகானாகிய ஆத்மா பரமாம். சமஷ்டிரூப இரணியகர்ப்ப சம்பந்தமான அந்தப்புத்தியை மகானாத்மா எனப்படும்; அந்த மகானாகிய ஆத்மா சர்வபுத்திகளுக்குங் காரணத்வத்தால் சூட்சுமதரனாயும்,

புருடனென்றுரைசெயப்படுவதுபரிபூரணமாகின்ற
சொருபநின்றவாநிற்கவிங்கருளொடுதோன்றவல்லவன்றானே
யூரனுமன்றுமாலயனுமன்றெவர்க்குமுள்ளாகியேயாவர்க்குந்
தெரிவருஞ்சிவனவனையிங்கொருங்கியசிந்தையார்தெளிவாரே. (கக)

---

வியாபகனும், பிரத்யக்பூதனுமுள்ளன்; அந்த மகத்தைப்பார்க்கிலும் சூட்சும்மாய், பிரத்தியகாத்மபூதமாய், சர்வமாய், மகத்தரமாயுள்ள அவ்வியத்தமானது பரம்; அது அவ்வியாகிருத நாமரூபாத்மகம், சர்வஜகத்திற்கும் பீஜம் மாயை, அவித்தை, பிரகிருதி என்னும் பரியாய சத்தங்களாற் சொல்லப்படும்; அந்த அவ்வியத்தத்தைப்பார்க்கிலும் சூட்சும்னாய், சர்வகாரணபூதனுகிய பிரத்தியகான்மா பரமாம்; அவனே புருஷன்; சர்வகாரியப் பிரபஞ்சத்தையும் தன்சொரூபத்தால் பூரித்திருப்பதால் புருஷனும்: அல்லாமலும் சர்வபுரங்களென்னுஞ் சரீரங்களிலும் பூரணனாய் வதிதலால் புருஷன் என்றுமாம். [இவனினும். அன்னியன் சூட்சுமனுயுளன் என்னுஞ்சங்கையை நிராகரிக்கிருர்.] இந்த மெய்+யாம்=இந்தச்சிறகனப் பிரத்யக்கான்மாவைப்பார்க்கிலும் பரமாக வேறொருவஸ்துவானதில்லை. (இந்தப்பிரகாரம் சூட்சுமமகத்வ பிரத்யகாத்மத்வாதி சர்வ தர்மங்களுக்கும்) இவனே பரியவசானபூமியென்னும் பரமகாஷ்டையும்,அடையாநின்றவர்களான சம்சாரிகட்குப் பரமமான கதியுமாம்.—எ-று. அன்னிய கதிகளனைத்தும் புனராவிர்த்திக்குக் காரணமாகையால் கீழான கதிகள்; பிரமப்பிராப்திரூபமான கதியும் பிராப்தபிராப்தி ரூபமாகையால் ஞானமாத்திரத்தால் பிராப்திக்கத்தக்கது: இதனுல் கிரியாசாத்தியங்களான அன்னியகதிகள்போல அனித்தியமாமென்று சங்கிக்கலாகாதென்க. இந்தப்புருஷனே புனராவிர்த்தியின்றிய பரமமானகதி எ-கு; உ-ம். பகவற்கீதை, "துன்னிய வாசை கோபங்கடந்தவர் காணத்தோன்று மென்னுரு+பேசும்."

கக. சே-ள், [சுருதியிற்கூறிய 'புருஷ' பதத்திற்கு உரைசெய்கின்றூர்.] பரிபூரணமாகின்ற சொரூபம் புருடனென் றுரைசெயப்படுவது—தானே=அவனே—நின்றவா நிற்க= இருந்தவண்ணமிருக்க—இங்கு அருளொடு தோன்றவல்லவன்=இங்கு லீலையினுற் றன்னுடைய சிவசக்திரூபத்வத்தைக் காட்டுதற்காகச் சாம்பமூர்த்தியைத் தரித்தருளுஞ் சமர்த்தனுகின்றனன்.—ஒருங்கிய சிந்தையார் = குருசாஸ்திர சமஸ்காரத்தாலுண்டான ஏகாக்கிரசித்தத்தையுடைய புருஷர்கள்—தெளிவார்.—சாம்பமூர்த்தி—அர்த்தநாரீஸ்வரரூபம்.

வேறு.

வாக்கதுமன்த்திடைவைக்குமம்மனம்
போக்கிடும்புந்தியுட்புந்திமானிலே
யாக்கிடுமந்தமானிவையனைத்திலுந்
தாக்கறுஞ்சாந்தமாந்தன்னிற்சாந்தமாம். (கஎ)

ஒலிமுதலுறைப்பனவொன்றுமின்றியே
யெலையிலதாகியெப்பொருட்குமேலதாய்ச்
சலமதின்றியவதுதன்னைத்தம்முளே
நிலைபெறவறிந்தவர்மரணநீங்குவார். (கஅ)

வேறு.

பரப்பிறனிந்தியங்களைப்பார்க்குறப்பரம்பரனுள்ளாகி
யிருத்தலாலறிவொண்கிலன்புறம்புளவிதாமேகாண்கின்றான்
றிருப்பிஞானநாட்டத்திலைப்பொருடெரியவேபெறுந்தீர
னொருத்தனேயவிநாசியாம்பரவொளியாயவனெளிர்கின்றான். (கக)

---

கஎ. செ-ள், [அதனது தெரிசனோபாயத்தைக் கூறுகின்றார்.] வாக்கது=சமஸ்த வாகியேந்திரியங்கள்—புந்தி=நிச்சயஞானரூபம்—மான்=சமஷ்டிபூத சூட்சுமதர இரணியகர்ப்போபாதி—அந்தமான்=மகாத்மாவென்னும் பெயரிய இரணியகர்ப்பத்தை—இவையனைத்திலுந் தாக்கறும் சாந்தமாந்தன்னிற்சாந்தமாம்=சகல நாமரூபங்களுமிறந்த நிர்விகாரசாட்சி சின்மாத்திரரூபமுக்கியாத்மாவில் ஒடுங்குவதாகச்செய்யத்தக்கது.—எ-று. இவ்வாறு இந்திரியமுதல், காரணபரியந்தம் விலாபித்துப் பரிபூரண சிதாகாசானுசந்தானபரனாய் விவேகி பவிக்கத்தக்கதென்றுபொருள். சுழுத்தியடையும்விதஞ் செய்யக்கூடாதென்பதனால் அவ்வியத்தத்தை இங்ஙனங் கூறப்படவில்லை என்பது கருத்து.

கஅ. செ-ள், [பிருதிவியாதி பூதங்கட்கே உத்தரோத்தரம் ஒவ்வொரு குணங்கள் நியூனமாயிருப்பதால் சூட்சும தாரதம்மியங் காணப்படுவது; அங்ஙனமானால் அந்தச் சத்தாதி சர்வகுணங்களுமின்றிய பிரத்தியக்காத்மாவுக்கு நிரதிசய சூட்சுமத்வமுண்டென்பதிற் சொல்லவேண்டுவதென்னே? என்னும் அபிப்பிராயங்கொண்டு அவைகள் யாதொன்றுமில்லாத ஆத்மசொரூபத்தைத் தெரிசிப்பிக்கிறார்.] மரணம் நீங்குவார்=அவித்தியா காம கர்மலக்ஷண சம்சாரத்தினின்றும் விடுபடுவார்.

கக. செ-ள், [சொல்லிய வண்ணமாயுள ஆத்மா எல்லாராலும் ஏன் காணப்படவில்லை எனச் சங்கித்து அதற்குக் காரணஞ் சொல்லுகின்றார்.]

பேதமாகிவேருகியபொருள்கண்மேற்பேதைமையதனுலே
காதன்மேவினர்காலபாசத்திலேகட்டுணக்கடவாரோ
யாதலாலழிவின்றியபொருளிலேயறிஞராதரித்தல்லா
லேதுமாதரித்திடாதவரப்பொருளெய்தியேயிருக்கின்றார். (உ0)

வேறு.

சத்தப்பரிசவுருவிரதங்கந்தாதிசமைந்தனமுதலா
மெத்தைக்கொண்டிங்கறிகின்றனதனையொழியவேதுளதா
மத்தற்பரத்தைக்கண்டிந்தவவத்தைமூன்றுங்காணுமை
சித்தித்திருக்குமவனலமுந்தீங்குமின்றித்திகழ்கின்றான். (உக)

மூன்றுகின்றவவத்தையெனமொழியும்புரங்கண்மூன்றுணருஞ்
சான்ருயறியிலறிகின்றதன்னில்வேருகாதவைதா
னூன்றுவுணர்வேயுருவானவொளியேயுளதாய்வித்தாகித்
தோன்றுநின்றுந்தேர்ன்றுதுநிகழ்வானென்றுஞ்சுதந்தரத்தால். (உஉ)

வேறு.

பரமிகமாய்நிகழ்ந்ததுபரம்பொரு
ளொருபொருள்பிறிதிலேயுளதுபோற்பல
கருதுமேலவன்கணிற்காண்பதெங்கணு
மரணமேமரணமேமறித்துஞ்சார்வதே. (உங)

---

உக. செ-ள், [அவ்வான்மாவை. அடையும் உபாயத்தைக் கூறுகின்றார்.] சத்தப்பரி+துளதாம்—யாது ரூபாதிசகலப் பிரத்தியயங்கட்குஞ் சாட்சியோ அதுவே ஆன்மா: தேகேந்திரியாதி சங்காதங்கள் ரூபாதிகளையுடையன வாதலால் கடாதிகள்போல அநித்தியங்கள் ஆதலின், ஆன்மாவன்று என்க. [சாட்சியாகிய ஆன்ம சொரூபத்தை விசேஷித்துக் கூறுகின்றார்.]

உஉ. செ-ள், மூன்று+நிகழ்வான் — தனது மாயாவசத்தினுல் ஒருக்கால் புரத்திரயரூபமாக விளங்கியும் தத்வதிருஷ்டியினுலோ அப்படி அப்புரத்திரயரூபங்களாக விளங்காமல் சகலோபாதிகளும் விடுபட்டுச் சுவயமாகவே பிரகாசியாநிற்பன் [அஃதியாதினுலெனில்.] என்றுஞ் சுதந்தரத்தால்.—

உங. செள், ["யாதொன்று இகத்தில் அதுவே பரத்திலும், யாதொன்று பரத்தில் அதுவே இகத்திலும்" என்ற சுருதியின்றாற்பரியத்தைக் கூறுகின்றார்.] இகபரமாய்+பிறிதிலே.—இந்தக் காரியகா

வன்னிதானொருவனுயிருக்கமற்றவ
னுன்னியவுருவமாய்த்தோன்றுமாறுபோ
லின்னதெனுமலுட்புகுந்துமேகனு
யன்னியனுகியொன்றேடுமோர்ப்புறுன். (உ௬)

(ரை) சங்காதத்திலும், ஜகத்காரணனுய், சர்வஞ்ஞனுகிய சூரியாத்மகமான பிரமத்தினிடத்திலும் யாது சச்சிதானந்த ஏகரசமாயிருந்து விளங்காநின்றதோ அந்தப் பரமாகிய தத்வமிரண்டும் ஏகவஸ்து; அவைகட்குப் பேதமின்று. கிஞ்சிக்ஞ, சர்வக்ஞத்வாதி பேதப்பிரதிபாசமானது மாயை, அவித்தை என்னும் உபாதிகளால் வந்ததாம் என்க. இப்படியே வாசிட்டத்திலும், "ஈர்க்கத்தக்க தேரிரவியினிடத்திலும், பாரினீக்கத் தக்கிலாப் புழுவினுஞ் சித்தொன்றே நிற்கும்" என்றுர். [விபக்ஷத்தில் பாதகஞ்சொல்லுகிருர்.] உளது+சார்வதே.—

உ௬. செ௭், [பரமாகிய பிரமத்தைக்காட்டிலும் ஜக்த்தும் பேதமாக வனுபவிக்கப்படுகிறதே என்று சங்கித்து உபமானத்துடன் அந்தத் தாதான்மியத்தைப் பிரதிபாதிக்கிருர்.] வன்கி+போல்=அக்கினி ஏகனுயிருந்துமவன் பேதமாகக் கருதுவதாகிய காஷ்டாதிரூபங்களை யடைந்து தகிப்பவனுகி அவ்வவ்வுருவங்களாய் விளங்கும் தன்மைபோல — இன்னதெனுமலுட்புகுந்து+மேகனுய்(உளன்) = சச்சிதானந்த பரசிவனும் இதுதான் பிரவேசித்தற்குரியது, இதுதான் பிரவேசித்தற்குரிய தன்றென்றெழியாது சகலபூதங்கட்கும் அந்தார்ன்மாவாய்த் தேவ மனுஷ்யாதி சரீரங்களிற் பிரவேசித்து அவ்வவ்வுருவங்கள் போலத் தோற்றினும் அவைகட்கு விலட்சணனாய் ஏகரூபனுயுளன்; இதை வாயுதிருஷ்டாந்தத்தாலும் உய்த்துணர்க.—[இவ்வாறு பிரகாசியாநின்ற ஆன்மாவிற்கு அச்சம்பந்தத்தால் சம்சாரதுக்கானுபவமும் உண்டாமென்றுசங்கித்து அதற்குச் சொல்லுகிருர்.] ஏகனுயன்னியனுகியொன்றேடுமோர்ப்புறுன் = சூரியனுனவன் எல்லாருடைய நேத்திரத்திற்கும் ஒளியாய் உபகாரஞ்செய்து அந்நேத்திரரூபங்களாய்ப் பிரகாசித்தும் அசுபமுந்தலியவைகளின் தெரிசனத்தாலுண்டாகும் அத்தியாத்மிகஞ், வாகியங்களுமான பாவதோஷங்களோடு எப்படிச் சம்பந்தப்படவில்லையோ அப்படியே சிவனும் ஏகனுய், சர்வபூதாந்தாான்மாவாயிருப்பினும் அப்பூத-ஜாதங்களைப்பார்க்கினும் வேறுகி அவைகளின் சம்சாரதுக்கங்களில் எவற்றேடுஞ் சம்பந்தப்படான்—எ-று. அவித்தையினுல் ஆன்மாவிற்குச் சம்சாரதுக்கம் பிரதீதியாவதேயல்லது பரமார்த்தவ்பாதியிலில்லை; இப்படிப்பட்ட சம்சாரதுக்கத்தால் எப்படிப் பரமார்த்தபூதனுன ஆத்மா பரிசிக்கப்படுவன் என்று பொருள்.

வேறு.

எல்லாம்வசிகரிப்பானுமெதுக்குமுள்ளாமொருவடிவைப்
பல்லாயிரங்கோடிகளாகப்பண்ணுநிற்கும்பரம்பரனை
யல்லாதொன்றுமில்லையெனவனுபவத்தாலகத்துணர
வல்லார்தமக்குப்பேரின்பம்வடிவாய்மொழியுமாமறைதான். (௨௫)

யாவனறியப்படாமையினலிவ்வேறுண்டாமிவ்வெறத்
தேவனுலேநிலைபெற்றுச்சேதனங்களாய்த்திகழு
மோவலறவேயப்பரனையுள்ளத்துணர்ந்தோருள்ளத்தே
தாவில்சாந்திகுடிகொள்ளுமல்லாதவரைச்சாராதால். (௨௬)

வேறு.

இதுவதெனவெண்ணுதவெல்லையில்பேரின்பத்தை
யதுவிதுவென்பர்களறிவோவறியாமையோவறிவே
யெதுவுமிறையானிகழ்வதிறைநிகழ்விலிவையொன்றன்
மதிபருதியனலொளியுமறுவில்புரனுலொளியாம். (௨௭)

வேறு.

ஆரசதொன்றும்பர்வேராகிநீள்சாகைகீழ்
நிறைசெய்தெங்கணுநிறைந்தென்றுநின்றுள்ளதாற்

௨௬. சே-ன், ["நித்தியன் நித்தியங்களுக்கு, சேதனன் சேதனங்களுக்கு" என்ற சுருதியின்பொருளைக் கூறுகின்றார்.] இவ்வேறு + திகழும் = இச்சகத்து எந்தச் சத்தாசம்பந்தத்தால் நித்தியமாயிருக்கிறதுகளோ, எந்தச் சைதன்ய யோகத்தால் பிரமாதி சேதனங்களும் சேதனங்களாக விளங்குகின்றனவோ — சாந்தி = சர்வவிஷயங்களினின்றும் உபரதிரூபமான கைவல்ய விசிராந்தி — அல்லாதவர் = அவ்வாறறியாத பிராகிருதபுருஷர் —

௨௭. சே-ன், [குறிக்கக்கூடாத ஆன்மசுகம் சாதகனுக்குச் சாமானியமாய் விளங்குகின்றதா? விஸ்பஷ்டமாய் விளங்குகின்றதா? விளங்குகின்றதில்லையா என்ற சங்கைக்குச் சாமானிய விசேஷங்களாய் விளங்குகின்றதும் ஆன்மாவே என்று உத்தரங்கூறுவார், "அவ்விடத்திற் சூரியன் விளங்குகின்றானில்லை" என்ற சுருதியின்பொருளைக் கூறுகின்றார்.] இதுவதெ + னுலொளியாம் — அதனால் ஆத்மபானம் அனன்யாதீனம் எ-ம், பௌதிகாதி தேஜசுக்கள் ஆத்மாதீனங்கள் எ-ம் அறியத்தக்கது.

௨௮. சே-ன், [தோன்றுகின்ற காரியப்பிரபஞ்சங்கட்கு மூலமாய் ஒருகாரணமில்லாமலிருக்கை கூடாமையினால் அதற்கு இருக்கும்

கனையிலண் டங்களெல்லாமதன்கண்ணதா
மொருபரம் பொருள்கடந்திடவொணுதொருவரால். (உ௮)

பு வேறு.

எச்சகத்துஞ்சலிப்பிக்குமீசானனும்
வச்சிரத்தைப்பெறுமனிதன்வீடுறுமிவற்
கச்சமுற்றங்கிகாலர்க்கனிந்திரன்யம
னிச்சயிப்பானதந்தொழில்செயாநிற்பரால். (உ௯)

---

தன்மையைச் சொல்லுகிறார்.] அரசதொன்று=அவ்வியத்தாதி தாவ ராந்தமாயுள்ள ஓர் அச்சுவத்த விருக்ஷமானது—உம்பர் வேராகி = சம் சாரமண்டலத்திற்கு மேலாயுள்ள விஷ்ணுவின் பரமபதமென்று முற் கூறிய சகலோபாதிகளும் விடுபட்ட பிரமமே மூலகாரணமாகி—கீழ் நீள்சாகை நிரைசெய்து=சுவர்க்க,நரக,திரியக்கு,பிரேதாதி அபரங்களை நீண்டகிளைகளாகிப்பரப்பி — எங்கணுநிறைந்து—என்று நின்றுளது = சனதன (என்றும் ஸ்திர) மாயிருப்பது — ("வருநாள்களிலொரு நாள்பெறும் வகையின்மையினலேபெருநாடறியசுவத்தமதெனலாயது பெயரோ" என்றுபகவற்கீதையில் அச்சுவத்தமென்னும்பதத்திற்குக்கவி நாயகரால் வியாக்கியானிக்கப்பட்ட அர்த்தமே ஈண்டரசு என்பதற்கு மாம்; இந்தச்சம்சார விருக்ஷத்திற்கு மூலகாரணமாகிய பிரமம் சம்சார தோஷங்களைப் பரிசியாமையினல் பரிசுத்தமாய், அமிர்த [அவிநாசி சுபாவ]மாயுள்ளது) —கனையிலண்டங்களெல்லாமதன் கண்ணதாம் = அளவற்றகாரியரூபமாகியஅண்டங்களெல்லாம்(வாசாரம் பணமாத்திர மாகையால் கந்தருவநகராதிகள்போல மித்தியாரூபங்களாம்; இங்ஙனம் மித்தியாரூபங்களான லோகங்களனைத்தும்) பரமார்த்த சத்தியமாகிய பிரமத்தின்கண் (மாயாவிலாசத்தால் அதையாசரித்துப் பரமார்த்தம் போலப்) பிரதீதியாகின்றனவாம். (ஆதலால், சகலஜகத்தினது உற் பத்தி, ஸ்திதி, லயங்களுக்கு அந்தப் பிரமமே காரணமாம்)—ஒருவரா லொருபரம்பொருள் கடந்திடவொணுது=எவராலும் சமானதிகமற்ற இந்தப்பிரமமானது கடத்தற்கரியது—எ-று. அந்தப்பரமகாரணப்பிரம வஸ்துவில் மாயாவிலாசத்தால் சகலலோகங்களும் ஆசிரயித்துப்பிரதீதி யானலும் அந்தப்பரமவிவர்த்தாதிஷ்டான பரமாத்மவஸ்துவை ஸ்பரி சிக்கவுமில்லை என்றறியவேண்டும்.

உ௯. செ-ள், [யாதொன்றன் விஞ்ஞானத்தால் அமிர்தப்பிராப்தி யாம்என்றுசுருதியில்வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ அந்தச்சுருதியின்றாற் பரியத்தைக் கூறுகின்றார்.] எச்ச+வீடுறும்—தனது ஆக்ஞாயத்தால்

வே று.

உண்ணுடியாகத்தினுணராதவன்ருனுடம்பா(ு -ம்புக்குளேகா
ணலாகுங், கண்ணுடிபோலப்பிராணுதிகத்தைக்கடம்போற்கழித்துக்
கழித்தற்றபின்னேக், கண்ணுனபரனன்றிவேறின்மையாலக்கண்ணுன
வனுபூதியாகின்றகண்ணு, லெண்ணுரும்வேறின்மைகண்டார்கனே
ரேயிறவாதுபிறவாதெலாமாயிருப்பார். (௯௦)

வே று.

ஒருவருங்கண்ணுற்காணவொண்ணுமதன்றுள்ளத்தாற்
கருதவுந்துணிந்தங்கொன்றக்கடவதுமலாததைத்தான்

---

தத்தம் வியவகாரங்களில் ஐக்த்தைப் பிரோரிப்பித்தலால், 'எச்சகத்துஞ் சலிப்பிக்கும்' என்ருர். யாவர்க்கும் மிகவும் பயத்துக்கேதுவாயிருப்பதால், 'வச்சிரம்' என்ருர். [பய ஏதுத்வத்தை விவரணம் பண்ணுகிருர்.] இவற்க+ற்பரால்—அக்கினியாதி லோகபாலர்களும் அவரது பயத்தால் தத்தம் வியாபாரங்களிற் பிரவிர்த்தியாநின்றனராளுல் அன்னியர்கட்கு அவர் பய ஏதுவாமென்றுசொல்லவேண்டுமெதன்னே என்பது கருத்து.

௯௦. சே-ள், ["இவண் அசத்தனுயின்" என்னுஞ் சுருதியைச் சொல்லுகிருர்.] உண்ணுடி+பாம் = வித்தியாதிகார யோக்கியமான இந்தச் சரீரத்திலேயே இருதயத்தில் விளங்காநின்ற பிரத்தியக்கான்மாவை நாடி அனவச்சின்ன பாசிவசொரூபமாக எவன் அறியும்படியான் சக்தனலன்றே அவன் சகலலோகங்களிலும் புண்ணியபாப வசத்தால் சரீரதாரணத்தின்பொருட்டுக் கற்பிக்கப்படுபவனும்.— ["எப்படிக் கண்ணுடியில்" என்னுஞ் சுருதியைச் சங்கிரகிக்கிருர்.] கண்ணுடிபோல உடம்புக்குளே காணலாகும்—மற்றெவ்விடத்திலும் சிரவண மனனுதிசாதனுனுஷ்டானங்கூடாமையால் ஆன்மாவைப்பிரமரூபமாக வறியும் ஞானமானது சுலபமன்றென்பது கருத்து. [இந்திரியங்கட்குப்பிருதக்பர்வமென்று யாதொன்று சொல்லப்பட்டதோ அதன் அபிப்பிராயத்தைச் சொல்லுகிருர்.] பிராணுதிக+மாயிருப்பார்—

௯௧. சே-ள், [நிருபாதிகனுன ஆன்மா எப்படி அறியச்சக்கியனுவன் எனச் சங்கித்து அதற்குச் சமாதானஞ் சொல்லுகிருர்.] உள்ளத்தாற் கருதவுந்துணிந்தங்கொன்றக்கடவதுமலாது ஒருவருங் கண்ணுற்காணவொண்ணுமதன்று.—கண் உபலட்சணம். உள்ளம் = மனனரூப

சுருதியாலனுபவத்தாற்றுணிந்தவர்சுகசொரூப
மருவியேமாண்டுமீண்டுவரும்வழிமறப்பரன்றே. (௩௧)

கடவல்லியுபநிஷதார்த்தமுற்றிற்று.

## சுவேதாசுவதர உபநிஷதமாரம்பம்.

அவதாரிகை.

[இவ்வாறு சச்சிதானந்த ஏகரசபிரமாத்மைக்கிய பரதத்துவத்தைக் கடவல்லிசாகோபநிஷத்தால் தெரிசிப்பித்துப் பின்னர்ச் சுவேதாசுவதரசாகோபநிஷத்திற்கும் அப்பரத்துவமுளதென்பதை அத்தியாய சேஷத்தால் தரிசிப்பிக்கத்தொடங்கி அவ்வுபநிஷத்தில் யாதொன்று சகத்காரணமோ அது பிரமமென்றறியும்பொருட்டுக் காலம், சுபாவம், நியதி, யதிரிச்சை, என்பவையாதிகளால் காலாதிகட்கு ஜகத்காரணத்வமுண்டென்பதைப் பூர்வபக்ஷமாக்கித் தியானயோகத்தை யுடையோர்கள் தன்குணங்களினால் கூடமாகிய பரமேஸ்வரசத்தியைக் கண்டார்கள் என்னும் சுருதியினால் மாயாசத்தி சகிதனாய்ச் சொப்பிரகாசசிதான்மாவான பிரமத்திற்கு ஜகத்காரணத்வம் வர்ணிக்கப்பட்டது; அப்படிப்பட்ட சத்தியோகத்தை அதற்குப் பிரதிபாதிக்கிறார்.]

வித்தகவேதப்பொருளதாய்ஞானவிழியினால்விளங்கிடும்பொருட்கோர்
புத்தியினாலுமுள்ளவாறறியப்போயிடாதாயிருந்துள்ள
சத்தியுண்டந்தச்சத்தியோடென்றுந்தான்பிறிவின்றியத்துவித
சத்தியஞானவனந்தவானந்தத்துவமாகியேயிருக்கும். (௩௨)

---

மனம்—குருசாஸ்திர சம்ஸ்கிருத விவேகபுத்தியினால் தியானித்து உள்ளவண்ணம் சாட்சாத்கரித்தடையத்தக்கதென்று பொருள். ["யாவர் இவனை அறிகின்றார்கள்" என்னும் சுருதியினர்த்தத்தைச் சொல்லிச் சேஷமான சுருதிவாக்கியார்த்தத்தைத் தாற்பரியமாகச் சங்கிரகிக்கின்றார்.] அதைச் சுருதி+மறப்பரன்றே—

௩௨ செ-ள், வித்தக+தத்துவமாகியேயிருக்கும் — யாதொரு ஞானம் பூர்வஞ் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த ஞானத்தினால் அறியத்தக்கதாய்ச் சகலவேதாந்தங்களிலும் பிரசித்தமாயுள்ள பிரமத்திற்கு இவ்விதமுளதென்று சிந்திக்கக்கூடாததாய்ச் சர்வதுர்க்கடகாரியாய் ஓர் சத்தியுளது; அஃதின்றிய அசக்தனுக்கு அஃதக்கினியைச் சிருஷ்டித்தது என்பதாதியவைகளால் கேட்கப்படுங் காரணத்தன்மை கூடாது என்று பொருள்.

மெய்யதாமுருவும்விமலமாமிறைக்குவிளங்கியதிவ்யமாமுருவம்
வையமாமுருவமற்றுமோருருவமறைமுதலாகவேவிளம்பல்
செய்யுநூலெல்லாம்வேறுமோருருவஞ்சிவனுடைவடிவிலேயிவற்றிற்
றுய்யதாமுருவஞ்சொல்லிலவ்விறைக்குத்துலங்கியஞானமேசொரூபம்
பெரியதாயெவர்க்குமுள்ளதாயுயிராய்நிறைந்துளபிரமசக்கரத்தே
திரிதராநிற்குஞ்சீவனிப்பரிசேதிரிதருமிவனையுந்திரிக்கும்
பரமனுமுள்ளவவனையுமனனம்பண்ணியிப்படியிலேபார்ப்பா
னொருவனேசெனனமரணமற்றென்றுமுள்ளதாய்நிகழ்ந்திடவுரியான்.

---

ருகூ. செ-ள், [அந்த மூலசுருதியில் போக்தா, போக்கியம், போகப்பிரதர் என்று மூவிதங் காணப்படுகிறது; அவ்விதபேதம் அத்துவிதீய ஆன்மவஸ்துவில் எப்படிச் சம்பவிக்கும் என்று சங்கித்து முற்கூறிய சத்தியோகத்தால் வியவகாரபூமியிற் கூடுமென்று தெரிசிப்பிக்கிறார்.] இ-ள். மெய்யதாமுருவம் விமலமாமிறைக்கு=முன்சொன்ன சத்தியஞான அனந்தானந்தமாகிய லட்சணத்தையுடைய நின்மலமான பரசிவத்திற்கு — விளங்கிய திவ்யமாமுருவம்=விளங்காநின்ற பிரகாசான்மாவாகியசீவரூபமொன்று—வையமாமுருவம்=விசுவமாகிய போக்கியரூபமொன்று—மற்றுமோருருவம் = போகப்பிரதனான ஈசுவரரூபமொன்று;—இவற்றில் = சோபாதிகரூபமான இம்மூன்றைப் பார்க்கிலும்(விலட்சணமாக)—மறைமுதலாக நூலெல்லாம்விளம்பல்செய்யும் அவ்விறைக்குத் துய்யதாமுருவஞ் சொல்லில்—துலங்கிய ஞானமே சொரூபம் = கேவலம் சொப்பிரகாச சிதேகரசமாம்:—வேறுமோருருவஞ் சிவனுடைவடிவிலே—எ-று. யாது சத்தியாதிலக்ஷணத்தையுடைய அத்துவிதீயப்பிரமம் அது சத்துவராஜஸ்தமோகுணான்மிகையான மாயையினுற் கடாதியுபாதிகளால் ஆகாசம்போலப் பேதமாகக் காணப்படுகிறது; அஃதெப்படியெனில், மலினசத்துவப்பிரதானமான மாயாவச்சின்னப்பிரமம் யாது அது ஜீவனென்னும் நாமமுடைய போக்தாவாகவும், தமப்பிரதானமாயாவச்சின்னமோ போக்கியஜகத்தாகவும், விசுத்தசத்துவப்பிரதானமாயோபாதிகமோ ஈசுவரனென்னும்நாமமுடைய போகப்பிரதாதாவாகவும் நின்றது என்க.

ருசு. செ-ள், [“எல்லார்க்கும் ஜீவனமான பிரமத்தில்” என்ற மந்திரத்தால் ஜீவனுக்கு அவித்தையினுல் சம்சாரசக்கரத்தில் சுற்றுதலும், வித்தையினுல் பிரமதாதான்மியமும் ஆமென்றதைக் கூறுகின்றார்.]

வேறு.

அறிவனுமறியாதானுமாய்நிகழ்பரசீவர்க்கு
மறையினல்வடிவாற்றர்க்கவழியினலனுபவத்தாற்
பிறிவிலர்மாயைபோகவேதுவாம்பிரமந்தானிங்
கறைதருமெல்லாந்தானுயகர்த்திருவாகிநிற்கும். (௩௫)

வேறு.

நாசமுற்றுவிடுமாயைசீவனசியானிரண்டினிலுநாதனு
மீசனிற்குமிறையைத்தியானபரனுகவந்தவியல்யாலுமே
யோசகத்தினிலையாலுமேகமெனுமுண்மையாலுமுயிர்முடிவினிற்
றேறெச்னத்திகழுமிங்ஙனேபிறிதுசெய்தமாயைசிதைவாகுமால். (௩௬)

---

௩௫. செ-ள், [ஸ்ரீவேசுவராதாதான்மியத்தை நன்ருய்ப் பிரதிபாதிக்கின்ற அன்னிய மந்திரத்தை எடுத்துக் கூறுகின்ருர்.] அறிவனும்+பிறிவில் ஆம்—அபரிச்சின்ன ஏகசுபாவனை பரசிவன் தற்பதார்த்தம், கர்த்தாபோக்தாவாய் அஞ்ஞானவிருதனை ஜீவன் துவம்பதார்த்தம்; இவ்விருவருக்கும் வியவகாரப்பிரதீதியினுற் பின்னமாம். பரமார்த்தத்தில் "தத்துவமஸி, அகம்பிரமாஸ்மி" என்பனவாதிய சுருதியினுலும், அபேதலக்ஷணத்தினுலும், சுருதிக்கனுகுணமான யுக்திநெறியினுலும், அறிஞரனுபவத்தாலும் அவர்கள் அபின்னமாம். அவர்களது பேதமானது உபாதியினுலுண்டானதே யல்லது வாஸ்தவமாயில்லை என்க. பிறிவு இல் ஆம் என இங்ஙனம் பதச்சேதம் பண்ணினது மூலத்திற் கியையவாம். [அவர்களின் பேதகாரணமான வுபாதியைத் தெரிசிப்பிக்கிருர்.] மாயைபோக ஏதுவாம்+நிற்கும்—ஜீவனிடத்தில் போத்திருத்துவாதி·ஜனனத்துவாரமாக மலினசத்துவப்பிரதான மாயையானது போகவேதுவாம்: அந்தமாயாவசீகிருதனை பிரத்தியக்கான்மா கர்த்தா போத்தாவாயுளன்: பரமாத்மாவோவெனின்? சுவாதீனமாயையை யுடையவனுதலால் தன்கற்பிதங்களாயிருக்கிற நானுவிதஜகத்ரூபனுகத் தோற்றினும் கருத்திருத்வாதி சகல சம்சாரதர்மரகிதனும்; ஆதலால் அவ்வுபாதிபரித்தியாகத்தால் அவர்கட்கயிக்கியஞ் சித்திக்கும் என்பது கருத்து.

௩௬. செ-ள், ["க்ஷரம் பிரதானம், அக்ஷரம் அரன்" என்னும் மந்திரத்தைச் சொல்லுகிருர்.] நாசமுற்றுவிடுமாயை=மாயாதத்வமானது (வித்தையினுல் நிவர்த்தித்தலால்) க்ஷரசீலமாகிய நசுவரமாம்.—சீவன் நசியான்=ஜீவனுனவன் அனசுவரனும். (ஜீவபாவத்தை யடைந்துள்ள பிரமமானது அக்ஷரமென்று பொருள்;)—இரண்டினிலும் நாதனுமீசனிற்கும்=அவ்விரண்டின்கண்ணும் கருத்தனுகிய பரசிவன் அவ்வவ்

வே று.

௯சனையறிந்தவந்தவிடத்திலேயெண்ணுமெல்லாப்
பாசமுநசித்தருனும்பணியறப்பவத்தின் றீர்வுங்
காசுறுமகிலமாயக்கங்குலின்கழிவுந்தானே
யாசறுமகண்டரூபியாதுகையுமனைத்துமெய்தும். (௩எ)

---

வுருவமாகிப்பேதமாயுளன். (பின்னமாகத் தோற்றுகின்ற மாயாகாரிய பேதம் அப்பரசிவத்தின்கண் அத்தியாசிக்கப்பட்டு அதற்கு வேறின்மை யின் என்க.)—[ஆத்மஞானத்தினுல் அப்பொழுதே முத்தி காணுமை யால் அந்த ஞானத்திற்கு அம்முத்திக்குச் சாதனமாந்தன்மை பிரத்தி யட்சவிருத்தமென்னும் பிராந்தியை நீக்குதற்பொருட்டு "அவனுடைய தியானத்தால்". என்னும் சுருதியை உதாகரிக்கிறுர்.] இறையைத் தியானபரனுக வந்த வியல்யால் = (சகலபேதமுமிறந்து சிதானந்த ஏகரசமான) பிரமத்தை "இவையனைத்தும் பிரமமல்லவா" என்று தியானித்து வந்த ஞானத்தினுல் (பேதப்பிரபஞ்சமாத்திரம் நிவிர்த்தி யாம்:)—யோசகத்தினிலையால் = பிரமமே நானென்னும் சிரவண ஜனித பிரத்யக்பிரமைக்கிய விஷயமான பரோக்ஷ ஞானத்தினுல், அன்றி யுக்தியோடு செய்யும் மனனத்தால் (நான் பிரமமல்லனென் னும் மாயை நிவிர்த்தியாம்: பிரமாதாவாசிரித மாயாரூப அசத்தாவரண நிவிர்த்தி என்றறிக.)—[பின்னும்] ஏகமெனு முண்மையால்=நானே அகண்டைகரசப் பரசிவசொரூபனென்னும் ஞாஞனுசந்தானரூபமான நிதித்தியாசனத்தினுல் (அந்தப் பிரத்யக்பிரமைக்கிய விஷயமான அபரோக்ஷ ஞானமுளதாம்; அதனுல் மாயாவிலாச நிவிர்த்தியாம்; அபாஞவரணத்தோடு விக்ஷேபம் நிவிர்த்தி என்றறிக; அது நிவிர்த்தித் தும் அதனுலுண்டாகிய வாசனையானது பிராரப்தகருமபல க்ஷயபரி யந்தந் தொடராநிற்கும்; அதனுல் வித்துவானுக்கும் அதுபரியந்தம் தேகயாத்திரைமுதலிய வியவகாரங்கள் விரோதமாகாதென்க.)— [பின்னும்] முடிவினில் = பிராரப்த கருமபல போகாவசானத்தில்— உயிர் தேசெனத்திகழும்=ஆத்மா சிதேகரச சுவப்பிரகாசமாத்திரமா கப் பிரகாசியாநிற்கும்;—இங்ஙன் = இந்த விதேககைவல்ய அவசரத் தில்—பிறிது செய்த மாயை சிதைவாகும்=பேதமாக்கிய சகல மாயை யும் தனது வாசனையோடுகூட நாசமாம்.—எ-று. எண்ணும்மை மூன் றும் மூலவியாக்கியானப்படி விடவேண்டி வந்தன.

௩எ. செ-ள், [சொல்லிய ஞானுதிகட்குப் பலத்தைப் பிரதிபாதி யாநின்ற சுருதியைச் சங்கிரகிக்கின்றுர்.] ஈசனை யறிந்த விந்தவிட த்தி+மெய்தும்—பாசம்=மலம், மாயை, கருமம் முதலியவை.—

மேவியதன்பாலுள்ளமெய்ப்பொருளொன்றுமன்றி
யாவுமிங்கறியவேண்டாவருந்துமிப்பொருளுமாகிச்
சீவனுமுண்பானுகிச்சிவனெனவூட்டுவானுய்
மூவிதமாகிநிற்குமூலமாம்பிரமந்தானே. (௩அ)

வேறு.

தீமரங்தொறுமடைந்தழிவுறுதுதெரிவா
காமைநின்றரணியால்வடிவுதானுமதுபோ
லாமுடம்பிலழிவின்றிமறைநின்றவமல
னேமெனும்பொருளுணர்ந்திடவுடம்பில்வெளியாம். (௩௯)

உலத்தலின்றியொழிவற்றபொருளுண்மையதுவாஞ்
சலித்தலின்றியதவத்தினவர்தங்கணெதிரோ
திலத்திலெண்ணெயரணிக்கனறதிக்கணிகழ்நெய்
நிலத்தினீரொனநிகழ்ந்துவெளியாகிநிலையாம். (௪0)

---

௩அ. (ம)ச்-ள், [மாயாசத்திவசத்தால் போக்திரு, போக்கியாதி ரூபமாயுண்டான பின்னரூபங்களைத் தியாகஞ்செய்து வாஸ்தவமாய் அபின்னமான கைவல்யரூபத்தைச் சொல்லுகிறார்.]

௩௯. செ-ள், இவ்விதப் பிரமஞானோபாயத்தைப் போதிக்கும் பொருட்டு "எப்படி அக்கினியினுடைய மூர்த்தி" என்ற சுருதியைக் கூறுகின்றார்.] தீமரங்தொறு + வெளியாம் — அக்கினியின் மூர்த்தி மதனத்தால் வெளிப்படுதலின், 'அழிவுறுது' என்றார். சட்சு இந்திரியம், துவக்கிந்திரியங்கட்குப் புலப்படாமையின், 'தெரிவாகாமை' என்றார். அரணி = தீக்கடைக்கோல்—வடிவு = லேர்கிதோஷ்ணப்பிரகாசங்கள்—அமலன் = பரம், அபரம் என்னும் உபயாத்மகமான பரசிவன் —உடம்பில் = தேகத்தினிருதயாம்புஜமத்தியில்—பொருள் = அக்ஷர தத்துவம்.—

௪0. செ-ள், [ஆத்மவஸ்து சத்தியாதி சாதனங்களினுல் அடையத்தக்கதென்று அநேக திருஷ்டாந்தங்களினுல் உபதேசிக்கிறார்.] உலத்தலின்றி + நிலையாம்—திலம், தீக்கடைக்கோல், ததி, நிலம் இவைகளில் எண்ணெய், அக்கினி, நெய், நீர், முறையே வியாப்பியமாயிருப்பது, அவிவேகத்தாற் புலப்படாவேனும், பீஷண—மதன, லோடன, கனன வுபாயங்களால் விவேகத்தாற் புலப்படுவனபோல் நாசமின்றி நீக்கமற்றுச் சச்சிதானந்த ஏகரசமாகிய ஆத்மவஸ்துவானது சத்தியவசனிபோய் இளைத்தோய்தலில்லாத கிருச்சிர சாந்திராயணுதி வருணச்சிரம விகிதமான சுதர்மத்தையுடைய சாதகரின் இருதயத்தின் கண் சிரவண மனனுதி வுபாயங்களால் பிரத்தியட்சமாய்ப் பிரகாசித்து மறைவில்லாததாகி நிலையாகும்.—எ-று.

வே று.

ஆ(த)ஞானநற்றவமறையீறறையருத்தமுமதுவல்லா
லியாகதானபுண்ணியங்களாலியோகம்வந்தெய்தும்வந்தெய்துற்ற
யோகஞானமுள்புகுத்துமெய்யுணர்வுதானுள்ளவாறுளவாறே
யேகமானவீடளித்திடுங்கருமத்தாலின்பவீடெய்தாதே. (௪௧)

மிக்கசித்தராய்வன்னவாச்சிரமங்கள்விட்டுமேலாய்நின்ற
பக்குவர்க்கிதுபகரலாமல்லதுபகர்ந்திடப்படாதென்றுந்
தக்கநற்குரவன்றனைச்சிவனெனத்தானினைந்திடுவாருள்
புக்கலாகுமிங்குரைத்தமெய்ப்பரம்பொருள்புரணமாய்வெளியாக.

௪௧. வே-ள், [இவ்வாறு அத்விதீயப் பிரமத்திற்குத் தனது சத்தி வசத்தால் போக்திரு, போக்கியம், போகப்பிரதன் என்னும் இம் வகை ரூபமான ஸ்திதியும் அந்தப் பரிச்சின்னம் அபரிச்சின்னனந்த ஏகரசமான அத்துவிதீயரூபம் எ-ம், அவ்வித ஞானத்தால் மோட்ச முண்டாம் எ-ம், சகல சாஸ்திரார்த்தங்களையும் சங்கிரகித்துப் பிரதி பாதியாநின்ற சூத்திரபூதமான சுவேதாசுவதரத்தின் பிரதமாத்தியா யத்தைச் சொல்லி மற்றைய ஐந்தத்தியாயங்களும், கூறியவற்றையே விரித்தலினால் அவற்றைச் சங்கிரகித்துச் சொல்லுகிறார்.] மறையீற றை யருத்தமும் நற்றவஞானமாகும் = வேதத்தினந்தமான சுவேதாசுவ தரவுபநிஷத்துப் பிரதிபாதியாநின்ற பிரதமாத்தியாய வர்த்தமும் முன்சொன்ன கிருச்சிர சாந்திராயணாதி வருணாச்சிரம விகித சுதர்ம ரூபமான தவசினால் பிரமான்மைக்கிய ஞானமானதுளதாகும் என் பதுபரியந்தமான இவ்வினைத்துமாம்.—அதுவல்லாமல்—யாகதானபுண் ணியங்களால் = அக்கினிஹோத்திராதி நித்தியநைமித்திகங்கட்கு, யோக ஏதுத்வ சிரவணத்தால் ஈசுவரார்ப்பண புத்தியினால் அநுஷ்டி யாநிற்கும் நித்தியநைமித்திக கருமங்களினால்—யோகம் வந்தெய்தும் ='தோடலை கழுத்துடம்பிவை நேரொக்குமாறிருத்தி' என்று சுருதி யிற்கூறிய யோகமானது வந்தடையாநிற்கும் — வந்தெய்துற்ற யோ கம் — ஞானமுள் புகுத்தும் = சித்தைகாக்கிர முடையோனுக்குச் சிரவணமனனாதி யநுஷ்டானத்தால் அப்பியாசமாய்ப் பிரமான்மைக் கிய ஞானத்தை உள்ளே புகுதப்பண்ணும்.—மெய்யுணர்வு—தானுள்ள வாறுளவாறே ஏகமான வீடளித்திடும் கருமத்தா லின்பவீடெய்தாதே. எ-று. இவை எனைய ஐந்தத்தியாயங்களின் குறிப்பரியார்த்தங்களாம்.

௪௨. சே-ள், [பிரமவித்தியா சம்பிரதாய சோபானத்தின்பொரு ட்டு மூலசுருதியில் யாதொரு அதிகாரி விசேஷலக்ஷணஞ் சொல்லப்

அரியமாமறைவாக்கினாலுங்களுக்கறியவுமறைந்தேனான்
றெரியுமாகின்மற்றவன்றெரியாமையைக்கடந்துபோய்ச்சிந்தைக்குப்
பிரியமாகியபரப்பிரமத்தையேபெற்றுமேற்பிறவாமைக்
குரியனாருமென்றுரைத்தனனுணர்வினாலுலகெலாம்படைத்திட்டான்

பதினோராவது கடவல்லி சுவேதாசுவதர வுபநிஷதங்களி
னருத்தமுரைக்கு மத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௪0.

பன்னிரண்டாவது

## முன் சொல்லிய வுபநிஷதங்களினர்த்தத்தைத் தொகுத்துரைக்கு மத்தியாயம்.

அவதாரிகை.

[இந்தப்படி ஐதரேயமுதலிய சர்வசாகைகளிலுமுள்ள வுபநிஷதங்களையுங்கூறிப் பிரதிபத்தி சௌகரியத்தின்பொருட்டு அச்சர்வவுபநிஷதங்களிலுமுள்ள அர்த்தங்களைச் சங்கிரகமாகக்கூறப் பிரதிஞ்ஞை செய்கின்றார்.] பிரதிபத்தி = கருத்தவ்வியத்வஞானம்— சௌகரியம்=அநாயாசசாத்தியத்வம்.

வகுத்துநானுமக்குரைத்தநான்மறைகளின்பொருளைத்
தொகுத்துநான்சொலக்கேண்மினென்றின்னவாசொன்னா
னுகத்தைநான்கையுமொன்றதாயிரமொருபகலான்
முகத்தினாற்பொருணான்குநான்மறையினான்மொழிவான். (௧)

பட்டதோ அதையுந் தெரிசிப்பிக்கிறார்.] மிக்கசித்த + படாதென்றும் —கூறிய குணயுக்த கிருதோபாஸ்திகர்களல்லாமல்வேறேய அஜிதேந்திரியப் பிராகிருத புருஷர்களுக்கு ஓர்போதும் இதனை உபதேசிக்கக் கூடாது என்று பொருள்.—[வித்தியோற்பத்திக்கு அந்தரங்கசாதனத்தைக் கூறுகின்றார்.]-தக்க+வெளியாக—

௬௩. சேன், [பிரதிபாதித்துவந்த உபநிஷதார்த்தத்தை நிகமனஞ்செய்கிறார்.] அரிய+படைத்திட்டான் — நிரதிசயானந்த ரூபமாகலின், 'பிரியமாகிய' என்றார். பெற்று = கண்டசாமீகரநியாயம்போல வடைந்து (சொச்சரூபமாகலின், என்க.)—

வேறு.

பாடுகின்றவெக்கலையின்பயனுந்தெரிந்துபகர்கின்றே
னோடுகின்றசிந்தையொழித்தொருப்பட்டெவருங்கேண்மினுனை
யாடுகின்றநானென்னுமுரைக்குமறிவுக்குமறிவாய்
நாடுகின்றவுணர்வொன்றுண்டதுவேயான்மாநமக்கெல்லாம். (௨)

மாசதில்லாப்பரனாகியிருக்கத்தனதுமாயையினு
லீசனென்பதறியாமலிறந்தான்பிறந்தான்போலிருக்கும்
பாசம்விடுமோநினைவுறுவான்பாரம்பரியத்தாற்பண்ணு
மாசின்மறையாலாசையெலாமறலாற்சாந்தியார்தியினால். (௩)

௨. செ-ள், [சர்வோபநிஷதங்கட்கும் சம்மதமான அர்த்தமானது பிரத்தியக்பிரமதாதாத்மியமேயென்று சொல்லுகிறார்.] காரியகாரண சங்காதவிசிஷ்ட சைதன்யம் ஆன்மசத்தத்திற்கு வாச்சியம்; அஃதாத்மாவாகப் பிரதீதியாயினும் தேகேந்திரியங்களா லுண்டுபண்ணப்பட்டதால் கடாதிகள்போல ஆனான்மா ஆதலால், சர்வாந்தரசாட்சியான சின்மாத்திரரூபனே அகஞ்சப்தத்திற்கு லட்சியனான ஆன்மாவாம்: தேகாதிகள் ஆன்மாவன்று என்று பொருள்.

௩. செ-ள், (அவ்வான்மா) மாசதில்லாப்பரனாகியிருக்க—தனது மாயையினால்=அசம்சாரியாய்,அசங்கமாகிய பிரமரூபத்வாவரண அஞ்ஞானத்தினால்—ஈச+போலிருக்கும்—சர்வப்பிராணிகளிடத்தும் அவ்வவ்வுபாதிவசத்தால் சீவபாவத்தினாற் பரிச்சின்னன்போலுளன் என்று பொருள். 'இந்த ஜீவான்மாவாக அனுப்பிரவேசித்து நாமரூபங்களைக் கற்பியாநின்றனன்' என்னுஞ்சுருதியினால் என்க. 'போல' என்றதால், அந்த அகஞ்சத்தார்த்த அத்விதீயப்பரசிவசொரூபமாகிய பிரமத்திற்கு வாஸ்தவமாகச் சம்சாரமானது கூடாதென்பது பெற்றாம். அஃதெதனாலென்னில்? 'நாசமில்லை, உற்பத்தியில்லை, பந்தமில்லை, சாதகனில்லை, முமுட்சுவில்லை, முத்தனில்லை' என்னுஞ் சுருதியினால் என்க. சம்சாரித்வ, அசம்சாரித்வாதி சர்வமும் வியவகாரத்தில் தனது அஞ்ஞான கற்பிதமாதலால் அவற்குக்கூடாது என்று பொருள். [இந்தப்பிரகாரம் சம்சாரித்வமானது சொச்சொரூபாஞ்ஞானத்தினாற் பண்ணப்பட்டதால் தனது சொரூபப் பிராப்தி விஷயத்தில் ஞானத்தினும் அன்னியமாய் யாதொன்றையும் அபேட்சிக்கத்தக்கதில்லை; அந்தஞானமும் இந்தக்கிரமமாய்ச் சித்தியாநிற்கும் என்று சொல்லுகிறார்.] பாசம்விடுமா நினைவுறுவான் பண்ணும்—பாரம்பரியத்தால்=குருபாரம்பராக்கிரமத்தினால்

வேறு.

பத்தியாற்குரவன் பாதம்பணிந்துவேதாந்தம்பன்னுஞ்
சுத்தமாவாக்கியத்தாற்றுணிந்தவப்பொருளைத் தூய
புத்தியாற்றுணிந்துகொண்டப்பொருளநுபோகமாகச்
சித்தியாநிற்குமைக்கியஞ்சிவபதந்தனையேசேரும். (௪)

வேறு.

ஊனிலொருபற்றுமுளனன்றியுடனிற்கு
நானெனவிளம்புதனைநற்சிவமதாகத்
தானறியுமாகிலொருவன்றனுருவாகு
ஞானபரிபூரணநலந்தனையடைந்தான். (௫)

—மறையால்—வேதப்பிரதிபாதித நித்தியநைமித்தியகாதி நிஷ்காமகருமானுஷ்டானத்தால்—ஆசையெலாமறலால் = இகாமுத்திரார்த்தபலபோக விராகத்தால்—சாந்தியாதியினால்=சமதமாதிகளினால்—ஆதிசத்தத்தால், நித்தியாநித்தியவஸ்துவிவேகம், முமுட்சுத்வம் இவைகொள்ளக்கிடந்தன; இதற்குச் சாதனசதுஷ்டயசம்பன்ன னாகின்றான் என்று பொருள்.

௪. ரு. செ-ள், பின் 'ஆசாரியவான் புருஷனறிக, சமித்பாணியனாகிச் சுரோத்திரியனைபிரமநிஷ்டனை' என்னுஞ் சுருதியினாலும், விழியாமெனவறிவாலறி வுறுவார் விழிவசமே, வழிபாடு செய்தவர் சேவடிமலர்சூடிட' என்னும் ஸ்மிருதியினாலும் ஆசாரியனையுடையனுக்கே ஞானப்பிராப்தியாம் என்னுஞ்சிரவணத்தினால் ஆசாரியரோ ஈசுரன் என்று ஆசாரியரிடத்தில் ஈசுவரபுத்திபண்ணி ஆசாரியருக்குச் சர்வதாபிரியத்தைச் செய்யற்பாலதாம் என்று பொருள். பின் சிரவணமனனாதிகளால் உற்பன்னமான ஞானத்தினால் சுகதுக்காதி சகலதுவந்துவங்களையும் விட்டதாய், நீ நானென்னும் சத்தங்களினால் இலக்ஷிதமாய், அபரிச்சின்னமாயுள்ள சாக்ஷியாகிய சின்மாத்திர ரூபத்தைப் பரசிவசொரூபமாக நன்றாய்ச் சாக்ஷாத்கரித்து அந்த ஞானசமகாலத்திற்றானே தான் பரிபூரணத்தன்மையை யடைகின்றான். சுருதியும் ஞானசமகாலத்திலேயே சர்வாத்மியப்பிராப்தியை வித்துவானுக்குத் தரிசிப்பிக்கிறது; அவ்விதனை யறிந்து வாமதேவரிஷி நான் மனுவானேன், சூரியனானேன் என்று அவ்வவ்வுருவங்களை யடைந்தார் என்னும் இதுவே என்க.

வேறு.

சேதிவாயெங்குந்திகழ்ந்துள்ளசிவனுனென்னுந்திகழ்வுற்று
னெறியானிகழுநிகழ்வெல்லாநிமையமாயேநிகழ்ச்சிதரு
மறிவாயறியாமையுமாகியறிவிப்பவனுயறிவானுய்ப்
பிறிவாயுளதாயிலதாகிப்பிரமமொன்றுமேபிறழும். (௬)

வேறு.

அடையவும்பிரமமேயெனவறிந்துளோ
னடைவதங்கதனையேயாகுமன்றியே
யிடையிலோர்மாயையுண்டென்னவெண்ணுமேற்
கடையதேயாமவன்கற்றகல்வியே. (௭)

வேறு.

மாயையென்றொன்றுண்டாகமதிப்பதுமனனமல்ல
வாயினுமகண்டஞானவங்கமாமிந்தஞானங்
காயம்வேறுகுமென்கைகாரணமாகவித்தைத்
தூயநான்மறைகளோதுந்துவந்துவந்தீர்க்கைசுட்டி. (௮)

யாதொருபடியிற்றென்றுமியல்பினுற்சகத்துக்குண்மை
யோதியதுபநிடந்தானுேமாவிடத்துண்மையாகப்
பேதமாமுலகுதோன்றிற்பிறப்பதற்கேதுவாகு
மீதெலாமில்லையென்னலின்பத்துக்கேதுவாகும். (௯)

---

௬. செ-ள், [தத்துவஞானிக்குச் சுவயதிருஷ்டியினுல் பாவா பாவாதிபேதத்தை யாசரித்துள்ள ஜகத்தனைத்தும் காரணரூபமான பிரமமாகவே பிரகாசிக்குமென்று பிரதிபாதிக்கிருர்.] அறிவிப்பவனுய்=குருவாய்—அறிவானுய்=சிஷ்யனுய்—

௭. செ-ள், கடையதேயாமவன் கற்றகல்வியே — எதனுலென்னில்? ஒன்றை மற்றென்றாகக் கிரகித்தலால் என்க.

௮. செ-ள், ['ஆன்மாவினின்று மாகாசமுண்டாயிற்று' என்றது முதலான சிருஷ்டிகளைக்கூறுகின்ற சுருதியானது பேதஜகத்தைப்பிர திபாதிப்பது யாதுநிமித்தமென்று சங்கித்துச்சொல்லுகிருர்.] ஜகத்தி னது அத்தியாரோப அபவாதங்களினுலல்லது நிஷ்பிரபஞ்சமாய், அத் துவிதீயமாயுள்ள பிரமத்தையடையக்கூடாது ஆதலால் , அதனையடை யும் உபகாரமாகத் துவிதஜகத்து வர்ணனம் என்று பொருள்.

௯. செ-ள், [ஜகத்துமித்தியாபூதமானுல் சீவிக்குமளவும் அக்கினி ஹோத்திரம் செய்யத்தக்கது: அந்த இவனை வேதானுவசனத்தால் பிரா மணுதிகள் அறிதற்கிச்சியாநின்றனர் என்னும் இவைமுதலிய சாத்

வேறு.

ஆகையாலகிலத்தையேமாயையென்றாகமெய்யாய்வந்த [ம்
மோகமாற்றுதற் பொருட்டோரோவிடத்திலேமொழிந்ததுமுதுவேத
பாகமாகியசித்தனைக்குறித்துமெய்ப்பாம்பொருளாகின்ற
வேகமேநிகழ்கின்றதெல்லாமெனவியம்பியதிதயத்தால். (௧௦)

மெய்யைநாடின்மெய்ப்பரமலாலவிச்சையும்விச்சையும்வேறேயோ
வையமானதுமற்றொருபொருள்களுமில்லையிம்மனனஞ்செய்
துய்யயோகிமுனைப்படியெப்படித்தோன்றுகின்றதுதோற்றஞ்
செய்யுமியாவையுஞ்சிவன்வடிவாகவேதிகழ்ந்திடுந்திடமாக. (௧௧)

வேறு.

யாதொருபடியிற்றோற்றமென்றியம்பியதுமுன்னை
வாதனையதனைப்பற்றியல்லதுமற்றொன்றில்லை
போதமேயுள்ளதென்றும்பூரணனாகையாலே
யோதமில்வேலைபோலுமொழிவறநிறைந்தயோகி. (௧௨)

---

தியசாதனபாவங்களைச் சுருதி என் பிரதிபாதியாநின்றது என்று சங்கித்துச் சொல்லுகிறார்.] வியாவகாரிய சத்தியமாய் ஜகத்தை யங்கீகரித்து அந்தச்சுருதி, சாத்தியசாதன பாவங்களைப் பிரதிபாதித்ததே யல்லது பாரமார்த்திகசத்தியமாய் அங்கீகரித்து அவைகளைப் பிரதிபாதிக்கவில்லை; பாரமார்த்திக சத்தியமாக யாதொரு ஜகத்தினது ஞானமுண்டோ அது மித்தியாஞானமாகையால் சம்சாரவேதுவாம்: ஜகத்துமித்தையென்னும் யாதொரு ஞானமுண்டோ அது சம்சார நிவர்த்தகமாம் என்று பொருள்.

**௧௦. செ-ள்,** பிரகிருதியை மாயையாகவும், மகேசனை மாயாவியாகவும் அறியத்தக்கது எ-ம், இந்தத்துவிதம் மாயாமாத்திரம் எ-ம், சர்வம் பிரமம் எ-ம், இந்தச் சகத்தனைத்தும் பிரமமல்லவா எ-ம், இந்தச்சகத்தனைத்தும் இவ்வான்ம சொரூபம் எ-ம் இப்படி உபதேசித்த சுருதியானது தோன்றாநின்ற ஜகத்தனைத்தும் அகண்டைகரசபிரமமேயென்று போதித்தது என்று பொருள்.

**௧௨. செ-ள்,** [சர்வஜகத்விஷயாவபாசம் யாது அது சிவமேயென்று இவ்விதரூபமான யாதொரு புத்தியுண்டோ அதூஉம் பூர்வவாசனையினால் சர்வஜகத்பிரதீதி உண்மையினால் இங்ஙனம் பூர்வவாசனையை ஆசரித்துண்டான புத்தியும் சம்பவியாதென்று சொல்லுகிறார்.] விக்ஷேபவேதுவான துவிதமிறந்ததனால் நிஸ்தரங்க சமுத்திரம் போன்று நிர்விகற்பனாய் சிதேகரசசுபாவனாய், நிச்சலனாயிருப்பன் என்றுபொருள்.

அப்படியிருந்தயோகியநுபவத்தன்மைதானு
மெப்படியென்றுகாணுனீசன்மானுனுங்காணேன்
செப்பிடவறியாவேதாகமங்களுஞ்சிவனுர்மேனி
யெப்படியென்னின்மற்றப்படியிலேயிருந்ததென்னும். (௧௩)

வேறு.

அம்பிகாபதியறியுமிவ்வனுபவமவனருளாகுமக்
கொம்பனைளறிந்திடுந்திருவருளையேகோலமாய்க்கொண்டந்த
வெம்பிரானருளாலறிநாம்பிறரியாவருமறிவோமத்
தம்பிரானறிந்தமையெவராலெனச்சங்கையுந்தருமோதான். (௧௪)

ஞானமாகியவிழியினுற்குருபரனயந்துநோக்கிடவுண்டா
மானுபூதியாதொன்றதுவேசிவனுவதப்படியுள்ள
ஞேமனிதான்வினையொத்தவப்பொழுதிலேவெளிப்படும்வெளிகாண
லானதேசிகன்றன்னையப்பரம்பொருளென்னவாதரஞ்செய்வான்.

நேசநெஞ்சினுற்றனக்கதுநினைவலவாயினுநெறியென்றே
தேசிகன்றிருவுள்ளமேசெய்குவான்செனித்திடுங்குலத்துக்கு
மாசதாயினுமாச்சிரமத்திலேவழுவினுமுலகெல்லா
மேசிவீடினுமறம்புகழ்தனம்பிறவிழப்பினுமிடரேனும். (௧௫)

தேசிகன்றிருவுள்ளமுண்டாகவச்சிவன்றிகழ்ந்திடுகின்ற
னீசனிங்கருள்செய்யவந்திருக்கிறவிடமிவன்றிருமேனி
மாசதொன்றிவனளவிலேசெயிலெரிவாய்நரகினிற்பூத
நாசமெவ்வளவவ்வளவுஞ்செலநண்ணுநன்னெறிநண்ணுன். (௧௭)

வேறு.

அருவெனுமமலன்றனருளிலனெனினுஞ்சார்
குருபரனருளுண்டேயெனிலொருகுறையுண்டோ
திருவடிதரவந்தார்திருவுளமிலதொன்று
லொருவருமிலர்கண்டீருறுதுயர்களைகின்றர். (௧அ)

௪௩. செ-ள், சுவப்பிரகாசப் பிரமரூபமாயிருக்கும் வித்துவானுக்கு ஞானவேதுக்களான அந்தக்கரணாதிகள் அவித்தியாகாரியங்களாதலால் வித்தையினுல் அவை நிவிர்த்தித்தலால் தானும் அவ்வவத்தையைக் கருமகருத்திருபாவமாயறியான் என்பார், 'அப்படியிருந்தயோகியனுபவத்தன்மைதானு, மெப்படியென்றுகாணுன்' என்றார்.

உறவதுதனில்வேருயுளதலவதுநேரோ
பெறவருள்பெரியோனேபெருகியகுருவாவா
னெறியுடலுளனாவானிலைபெறவழிபாடே
செறிபவனருளாலேசிவகதியடைவானல். (௧௯)

வேறு.

இந்தவிடும்பையுடம்புறுமேது
தந்தையெனப்புகழ்கின்றிலர்தக்கோ
ரந்தமிலாதவகண்டமுறம்முட்
டந்தவர்தந்தையெனச்சமைவுற்ருர். (௨௦)

வேறு.

உண்டுபோற்ருேன்றுமுலகெல்லாமுண்மையன்றெனவுணர்த்தி யெப்பொருளுங், கண்டசான்றதனைக்காட்சிபதறவேகண்டிடக்கரியெனக்காட்டும், பண்டைவேதாந்தவாக்கியஞ்சொன்னபடியிலேபரமனே டொன்ருய், விண்டிடாவண்ணமுணர்த்துவான்றன்னைவியன்குருவெ ன்றிடும்வேதம். (௨௧)

காட்சியையெல்லாங்கண்ணதாய்க்கரைத்துக்கண்ணெழிந்தொரு பொருளில்லா, மாட்சியையளிக்கவல்லவன்குருவாமாரிபோன்மாறு வேண்டாதே, மீட்சியில்பதத்தைக்கருணையாலளிக்கும்வித்தகக்குரவ னேயவருந், தாழ்ச்சிசெய்தேத்தற்குரியதத்துவமாஞ்சங்கரனென்றி டத்தகுவான். (௨௨)

வருபிறப்பறவேவேண்டினுன்மறையீறென்னுமம்புயத்தினைமலர்த்தற் கிரவியாய்நெஞ்சிற்கிசைந்தநற்குருவையாதொருவழியினுலிறைஞ்சி யருள்சுரந்திடுதற்காவதேசெய்வானருமறைமுடிவெலாமறையும் பொருளைநேராகவுமக்கெனக்கீசன்புகன்றவப்படியிலேபுகன்றேன். ()

வேறு.

எல்லாமறிவானுயில்லாதில்லாஞகியெல்லாந்தான்
வல்லாஞகித்தீங்கொன்றுமருவாஞகிவடிவருளே
யல்லாதிலனுமிறையுண்மையன்றிச்சொல்லானப்பொருளிற்
சொல்லாதில்லையுங்கட்குச்சொன்னேனெல்லாஞ்சுருக்காக. (௨௪)

வேறு.

போதவடிவாயகண்டபூரணஞஞ்சிவனுக்கு
யாதுமுளங்கைக்கனியாமிவனருளின்படியொழிய
வேதமுடியிற்பொருடாம்வேண்டியவாவிளம்பியிடும்
பாதகர்போயெறவொணுப்பாழ்ங்கிணற்றில்வீழ்வர்களால். (௨௫)

வேறு

ஆதிவேதாந்தப்பொருளையத்துவிதமாம்படிக்ககிலநாயகனுஞ் [லிக்
சோதிபாதப்போதிரண்டையுந்தொட்டுச்சூழுகேனென்றயன்சொல்
காதலாற்பிறவிக்கவுடதமுக்கட்கடவுளைக்கருத்தில்வைத்தவன்றன்
பாதமேபணிந்துபரவியிப்பரிசேபத்தியாற்பரவசனானான். (௨௬)

தேவருந்தேவதேவர்க்குந்தேவாந்திரியம்பகன்றனைத்தெண்டனாகப்
பூவிலேவிழுந்துபோற்றியேயுருகிக்கிடந்தவப்பொழுதிலேபுத்தேண்
மூவருமறியாமுதல்வனுமிறைவன்மூர்த்தியாய்முழுந்தியவருளாற்
காவியங்கண்ணிபங்கனாய்வந்துதோன்றினான்கண்ணினாற்காண. (௨௭)

மாலுமவ்விடத்தேதிருவொடுங்கூடமகிழ்தருமனத்தொடும்வந்தா
னாலுதிக்கிலும்பூமாரியாய்ப்பொழியநாமசங்கீர்த்தனநாத [ஞ்
மேலெடுத்தெங்கும்விளங்குமப்பொழுதில் விளங்கியபிரமன்மாலவனு
சாலுமெய்ப்பத்தியோடுமர்ச்சித்தார்சங்கரனம்புயத்தாளில். (௨௮)

வேறு.

தேரியில்வடிவேதுமொருபொழுதிலாதசிவனுமருண்மேனிதிகழவே
யரியதனைநாடியறியுமதனாலவ்வதிசயமோடாடியருளினா
னுரியவனுபூதியுடையவிழியாலவ்வுமையுமயனாதியுணரவே
யருள்செய்தனனீசனரியதிருமேனியமரரெதிர்காணவருளினால். ()

அந்தமறையீறுதந்தபரஞானவங்கணதனாலுமன்றியே
யிந்தவிழியாலுமந்தவிமையோர்களெங்கள்பெருமானையெய்தினர்
சந்தமறைபாடிநின்றனர்களாதிசம்புதிருநாமமாமெழுத்
தைந்துமுறையாடியன்பினொடுபூசையங்குநனிமேவியண்டர்தாம். ()

வேறு.

அமையாவன்பாய்நின்றோரைப்பார்த்தையம்போய்
நமையேயெய்தப்பெற்றீரோவென்றனனாத
னுமையென்னருளால்வந்ததிதேயென்றுரைசெய்தா
ளிமையோரெல்லாமென்புருகிக்கொண்டின்புற்றார். (௩௧)

வேறு.

சொல்லைவேதமுன்சொல்லுதற்கரியவித்தோன்ற
னல்லனாயினனுமக்கெனநாரணனவின்றா
னெல்லைதீர்கருணாகரனாகியவிறைவன்
சொல்லுவானருள்கீதையின்பலமெலாந்தொகுத்து. (௩௨)

வேறு.

பரமமாமிந்தக்கீதைபடிப்பவன்பாரின்மீதே
திருவினான்முகுந்தனுக்குந்தேசினாலிரவியொக்கு
மருவுமாமெனையேவந்துமாசிலாவிஞ்சையாகு
முருவமாமுமையுமென்றுமவனுளத்துறையாநிற்கும். (௩௩)

வேறு.

பிரமஞனீங்கள்பெற்றவிக்கீதைபேசியகீதைகட்கெல்லாம்
பரமமாய்வேதாகாரமாதலினுற்படிக்கலாமறையவர்தமக்கே
சுருதியாதலினுற்சூத்திராதிகளாற்சொல்லலாகாதெனவருளிப்
புரணமாயெல்லாக்காரணமுங்கடந்தபோதவின்பத்தினுட்புக்கான். (௩௪)

மாலுமாதுடனேவானவர்க்கருளிமகிழ்ந்துவைகுண்டமேயடைந்தான்
மேலைவானவரைநீத்தயன்பரமன்மேனியேநோக்கிமீண்டிருந்தான்
ஞாலமால்விட்டுஞானதற்பரராய்நான்முகன்றன்முனேதெண்டம்
போலவேபணிந்துவானவர்தந்தம்பொன்னகர்நோக்கியேபோந்தார். ()

வேறு.

உத்தமமானகீதையுரைத்தனனுவகையோடும்
பத்தியாற்கேட்பார்க்கென்றும்பகர்ந்திடப்படுமீதென்று
சுத்தவேதியர்க்குச்சொல்விச்சூதனுஞானக்கண்ணன்
முத்தியாமுருவேநோக்கிமோனமேயடைந்திருந்தான். (௩௬)

இனியனுயெல்லாந்தன்பாலிறைவனின்னருளாற்பெற்ற
முனிவனைமுனிவரொல்லாமுடியுறவணங்கியேத்தி
நனிமிகநாளென்கின்றபதப்பொருளுடிவேரு
ரனியமில்பிரமமாகவறிந்ததிசயித்திருந்தார். (௩௭)

பன்னிரண்டாவது முன்சொல்லிய வுபநிஷதங்களினர்த்தத்
தைத் தொகுத்துரைக்குமத்தியாயம் முற்றிற்று.

---

ஆ_ திருவிருத்தம் - ௫௪௭.

---

பிரமகீதை மூலமும் குறிப்புரையும் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

# ஈசுரகீதை பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அ | | அன்றரியா | ௧௩ | இருதுடைமே | ௪௪ |
| அகற்பமல்ல | ௪௩ | அன்றியின்மை | ௩௫ | இருளுடனே | ௭ |
| அகிலபூதங்க | ௨௫ | அன்னியமறவ | ௪௬ | இலங்கியம | ௧ |
| அகிலவுலகுமி | ௨௩ | அன்னியமின்றி | ௨௮ | இவணமே | ௫௧ |
| அடங்குமு | ௪௯ | ஆ | | இவ்வளவுதா | ௧௯ |
| அடுத்தநிற | ௯ | ஆகமுறுமாரு | ௨௧ | இறைவனுக் | ௩௩ |
| அந்தமாலி | ௪ | ஆகமெடுத்த | ௨௮ | இன்பமொா | ௮ |
| அந்தவெல் | ௩ | ஆகவிவையிரு | ௩௧ | ஈ | |
| அப்பரந்தன் | ௩௬ | ஆகாதழியா | ௨௦ | ஈங்காதியி | ௨௬ |
| அப்பரமான் | ௪௬ | ஆங்கவர்க | ௧௩ | ஈங்கெனது | ௧௬ |
| அயர்வறு | ௪௧ | ஆங்கவன் | ௬ | ஈசனதாய | ௫௨ |
| அயில்கின்ற | ௭ | ஆசிரமமேலி | ௪௬ | ஈதெலாம் | ௫௦ |
| அரந்தைமுழு | ௪௧ | ஆதலாலழி | ௧௦ | ஈனஞ்செய் | ௩௬ |
| அரிதாயறி | ௧௪ | ஆதலாலெ | ௧௧ | உ | |
| அரியமறை | ௫௧ | ஆதலான்மு | ௯ | உடுக்குமா | ௩௬ |
| அரியுருவு | ௪ | ஆதலிலரு | ௫௧ | உதியாமலெ | ௩௯ |
| அருத்திசெய் | ௨௭ | ஆதிதேவனீ | ௨௩ | உயிரிஞோடு | ௭ |
| அருந்தவத் | ௨ | ஆதியுநடுவும | ௩௮ | உருவோவிங் | ௨௧ |
| அவமறுபுரு | ௪௬ | ஆதிவிகார | ௧௫ | உருப்பனேக | ௨௪ |
| அவனேபாச | ௩௨ | ஆரணமந்த | ௩௩ | உலகங்கண் | ௩௬ |
| அவ்வண்ணமு | ௧௧ | ஆலம்பனமா | ௧௮ | உலகினிலெ | ௭ |
| அழியாதெ | ௯ | ஆறுபலகூடி | ௧௧ | உளவாறுளா | ௪௧ |
| அளவிறந்-னள | ௨௫ | இ | | உற்பவசரா | ௨௮ |
| ஷை-வன்பா | ௫ | இடர்ப்படுபி | ௪௦ | உற்பவநோ | ௨௦ |
| அறியாமை | ௩௧ | இத்தபோத | ௨ | உன்னருமி | ௪௫ |
| அறிவால்வ | ௧௮ | இத்தன்மை | ௮ | உன்னுளையா | ௨௨ |
| அறிவினில்பி | ௩௭ | இந்தஞான | ௬ | உன்னைநீயு | ௫ |
| அறிவினையு | ௮ | இந்தநார | ௫௧ | ஊ | |
| அறிவிஞே | ௭ | இந்தியங்களி | ௧௫ | ஊறதாம் | ௩௧ |
| அறிவெனவு | ௬ | இந்தியமீட்சி | ௪௩ | எ | |
| அறையுமவ் | ௧௨ | இந்திரஞானி | ௨௯ | எங்குந்தா | ௧௩ |
| அறைவதன் | ௬ | இப்பிரமசுக் | ௨௨ | எங்குமுளஞெ. | ௩௬ |
| அனியமான | ௨௯ | இரண்டாவ | ௧௪ | எண்ணமதிற | ௧௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| எண்ணியவி | ௪௭ |
| எண்ணுமதி | ௩0 |
| எத்தொழில் | ௪௮ |
| எந்தநாளு | உ௬ |
| எந்தப்பதமு | ௪௯ |
| எந்தப்பிரா | ௩௧ |
| எந்தயோகி | உ௪ |
| எந்தயோனி | ௩௩ |
| எந்தைநீபர | உஉ |
| எந்தையள | உ௪ |
| எந்தையாகி | ௫உ |
| எப்படியார் | ௪௭ |
| எப்பொழு | ௮ |
| எல்லாருமா | ௧உ |
| எல்லாமாயு | ௧உ |
| எல்லாவுலக | ௧௮ |
| எல்லாவேத | ௩௯ |
| எனந்தமற் | ௩௫ |
| என்பதத் | ௪௯ |
| என்னுலுங் | ௧௩ |
| என்னையுற | ௩௪ |
| என்னையே | ௪௯ |
| என்னெழி | ௩௪ |
| **ஏ** | |
| ஏகமாய்நின் | ௧௬ |
| ஏகனுகிநிற்கி | ௧௬ |
| ஏசதுருமலிட | ௪௩ |
| ஏசிலிந்தவி | ௪௭ |
| ஏதமுறநா | ௫௧ |
| ஏதுகாரண | ௩ |
| ஏமமாகவெ | ௫௩ |
| ஏவலார்களி | ௩0 |
| ஏவன்மாயை | ௧௯ |
| **ஒ** | |
| ஒத்தமுக்கு | ௩௧ |
| ஒப்பதுமிக்க | ௩௬ |
| ஒப்பரும்பர | ௩௭ |
| ஒருகாலிரு | ௪0 |
| ஒருதாயை | ௧௪ |
| ஒருமறையன | உ௩ |
| ஒழியாதுறற் | ௫௩ |
| ஒன்னலர்த் | ௩0 |
| **ஓ** | |
| ஓங்கியமுனி | ௧௧ |
| ஓதம்பற்றி | ௫௩ |
| ஓதியாவையு | ௧௮ |
| ஓதுமாலம்ப | ௪௪ |
| ஓதுமியோகி | ௧௭ |
| ஓதுமொவியூ | உ௩ |
| ஓவாமை | ௫ |
| **க** | |
| கடையுகமதி | உ௬ |
| கணமாத்தி | உ0 |
| கண்டுமாயை | உ௧ |
| கண்ணின்றி | ௧உ |
| கந்தனைகன | ௪ |
| கந்தநன்மல | ௪உ |
| கரணமியா | உ௩ |
| கரணமெல் | உஉ |
| கரியதாய்நி | உ௬ |
| கருத்திலா | ௫0 |
| கருமஞ்செ | ௮ |
| கலையாளரி | ௧௭ |
| கற்பங்களின் | ௩0 |
| **கா** | |
| காதலான் | உ௫ |
| காமரமெ | ௫0 |
| காமனீறுசெ | உ௪ |
| கார்முகில் | உ |
| காலமாகிய | ௧௮ |
| **கு** | |
| குரம்பையினு | உ௧ |
| **கூ** | |
| கூடினகொ | ௪உ |
| கூடுகின்றுரு | உ௪ |
| **கே** | |
| கேசவனு | ௫ |
| **கோ** | |
| கோலமறி | ௧௫ |
| **ச** | |
| சகத்தினுயி | ௧௫ |
| சகத்துளோ | ௧௬ |
| சகலசத்தி | ௪௫ |
| சங்கரனுரு | உ௯ |
| சங்கையறத் | ௩௩ |
| சத்தியொன் | ௩௫ |
| சந்ததம்வே | ௧௬ |
| சனற்குமார | ௫உ |
| **சா** | |
| சாமவொ | ௪௯ |
| **சி** | |
| சித்தர்களிற் | ௩0 |
| சிரங்களாயி | உ0 |
| சிரந்தனமா | உ௯ |
| சிவன்றிருவு | ௧ |
| சின்மயான | ௩௫ |
| **சு** | |
| சுட்டபொ | ௪ |
| சுத்தமாயெ | ௪0 |
| சுத்தனுயொ | ௧௩ |
| **சூ** | |
| சூதமாமுனி | உ |
| **செ** | |
| செப்பிட | உ௫ |
| செயசெய | ௪ |
| சென்மாதிய | ௩உ |
| **சொ** | |
| சொன்னகா | ௧௪ |
| சொன்னத | ௪௬ |
| சொன்னவா | உ |
| **சோ** | |
| சோதியான | ௩௫ |
| **ஞா** | |
| ஞாலமெலா | உ0 |
| ஞானமதிலெ | ௩0 |

| பாட்டு. | பக்கம். |
| --- | --- |
| த | |
| தக்ககருமங் | ௨௭ |
| தக்கபிரசா | ௩௦ |
| தடித்தவூரு | ௪௪ |
| தபனவெளி | ௩௯ |
| தருக்கிலாத | ௪௧ |
| தருமபாவமி | ௩௧ |
| தலைமைசே | ௩ |
| தனதானதிரு | ௨௦ |
| தனியிலிருந் | ௪௫ |
| தன்பாரப | ௫௨ |
| தா | |
| தாரணையா | ௪௪ |
| தாராகாய | ௩௯ |
| தானலா | ௮ |
| தாணினையுமா | ௪௦ |
| தி | |
| திங்கணுயி | ௩ |
| தீ | |
| தீதின்முத்தி | ௫௩ |
| து | |
| துக்கரங்குறி | ௩௭ |
| துதித்தமா | ௪ |
| துதியினிந்தை | ௪௮ |
| துயருறுதசங் | ௪௮ |
| துறவினாறிவி | ௨௧ |
| துற்றுவரு | ௪௯ |
| தெ | |
| தெய்வங்களு | ௨௬ |
| தொ | |
| தொல்லையுள் | ௨௯ |
| தொழுதரும | ௨௨ |
| தோ | |
| தோயமுமண் | ௪௨ |
| ந | |
| நலங்கொள் | ௪௬ |
| நல்லறிவு | ௯ |
| நன்றாய்ஞா | ௧௪ |
| நா | |
| நாதனுயரி | ௨ |
| நாரணன | ௩ |
| நானேமா | ௧௨ |
| நான்மறை | ௫௧ |
| நி | |
| நிகழ்ந்திடுங் | ௨௮ |
| நிகிலவுலகு | ௧௫ |
| நித்தநியமத் | ௧௮ |
| நித்தமனந்த | ௩௯ |
| நித்திரையு | ௧௯ |
| நின்மலமாகி | ௩௮ |
| நின்மலமாய | ௩௪ |
| நீ | |
| நீங்காதகா | ௫௦ |
| நீரினுற்செழு | ௪௪ |
| நு | |
| நுண்ணியதத் | ௩௩ |
| ப | |
| பகருபரமீ | ௩௨ |
| பங்கமில்சீ | ௩௮ |
| பங்கமில்ப | ௫௦ |
| பங்கயந்தலை | ௪௫ |
| படர்தவம் | ௪௨ |
| படவரவர | ௨௭ |
| படிகந்தனி | ௯ |
| படைத்தவனை | ௧௭ |
| படைத்திநீய | ௨௩ |
| படைப்பதுங் | ௧௫ |
| படைப்பவனு | ௧௯ |
| பத்தியினுவி | ௧௭ |
| பத்தியையெ | ௪௮ |
| பந்தமதி | ௭ |
| பரமனத | ௩ |
| பரமாணுவி | ௨௨ |
| பரமாமெல் | ௧௫ |
| பரியுமகிஞ் | ௪௭ |
| பலவுரைசெ | ௨௯ |
| பவமார் | ௪௨ |
| பவனேநின் | ௨௪ |
| பழுதிலவொ | ௧௭ |
| பழுதிலீசன்மு | ௨௧ |
| பன்னியயோ | ௪௮ |
| பா | |
| பாகமென்ப | ௩௪ |
| பாங்காயவி | ௩௩ |
| பார்த்துள | ௧௨ |
| பி | |
| பிரமாண்டங் | ௨ |
| பிறப்பினு | ௧௧ |
| பிறிதறமென | ௪௭ |
| பின்னியபகு | ௩௨ |
| பு | |
| புண்டரிகவுரி | ௨௦ |
| புராதனரோ | ௪௩ |
| புன்மயகோ | ௩௬ |
| பூ | |
| பூதங்களு | ௧௦ |
| பூதங்களே | ௧௦ |
| பூதமைந்தி | ௨௮ |
| பூதமைந் | ௧ |
| பே | |
| பேறுறுபிர | ௩௮ |
| பொ | |
| பொய்யில்ப | ௪௭ |
| பொருவில்கி | ௨௮ |
| பொல்லாதபே | ௨௭ |
| பொல்லாதவ | ௫௦ |
| பொன்றுகி | ௩௩ |
| போ | |
| போதனுகிய | ௨௨ |
| ம | |
| மகமுத | ௧௪ |
| மதியினு | ௨௭ |
| மத்தியமா | ௩௫ |
| மந்தமாறி | ௪௩ |
| மந்தமுத் | ௪௩ |
| மயலிலா | ௪௦ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| மருவற்கெ | ௫௨ |
| மறைபயி | ௬ |
| மறையவரா | ௧௭ |
| மறைவினிலா | ௪௧ |
| மறைவுறு | ௬ |
| மனத்தால் | ௪௧ |
| மனம்புத்தி | ௩௧ |
| **மா** | |
| மாசுடைம | ௩௭ |
| மாதாவிலி | ௨௧ |
| மாமறையி | ௫௩ |
| **மி** | |
| மிகப்பயஞ் | ௨௬ |
| மிக்கபரஞ்சு | ௪௫ |
| **மு** | |
| முகமொடுக்கி | ௩௭ |
| முத்தியைய | ௭ |
| முனிவரோ | ௫௧ |
| முன்மதியணிந் | ௧ |
| முன்னநான் | ௧௪ |
| **மூ** | |
| மூவர்தேடி | ௫௪ |
| மூன்றுவது | ௧௮ |
| **மெ** | |
| மெய்த்தகவீ | ௩௮ |
| **மே** | |
| மேலதானத | ௨௫ |
| மேவியாதினு | ௨௫ |
| **மோ** | |
| மோகமாமு | ௩௪ |
| **யா** | |
| யா+ருபொருட் | ௬ |
| ஷை+ய்க்குணமி | ௯ |
| ஷை+பொழுதி | ௧௦ |
| ஷை+யோகம | ௧௦ |
| யாதொர்ப | ௯ |
| ஷை+ன்றில | ௫ |
| ஷை+றினையோ | ௧௧ |
| ஷை+ன்றைய | ௧௨ |
| ஷை+ன்றொரு | ௩௪ |
| யாவருமறி | ௪௫ |
| யாவனியா | ௧௦ |
| யாவனொருவ | ௧௦ |
| யானுமியல் | ௧௯ |
| யானேசெய் | ௮ |
| **யோ** | |
| யோகஞ்செய | ௧௧ |
| ஷை+செய்து | ௧௧ |
| யோகவெ | ௪௦ |
| யோகிகளி | ௫௨ |
| யோகியாகி | ௨௩ |
| யோகினிலுள | ௩௮ |
| **வ** | |
| வஞ்சமாயை | ௧௭ |
| வருணனெனு | ௨௬ |
| வருத்தமா | ௪௫ |
| வருந்தியும | ௩௨ |
| **வா** | |
| வாசிகமுபா | ௪௨ |
| வாடலின்முக | ௪௮ |
| வானேமு | ௫ |
| **வி** | |
| விவத்திதம் | ௪௪ |
| விரிந்திதிங் | ௧௬ |
| **வெ** | |
| வெல்கபூத | ௪ |
| **வே** | |
| வேவெமரிநர | ௨௭ |
| வேறுகநாணி | ௫௩ |


ஈசுரகீதை பாட்டுமுதற்குறிப்பகராதி

முற்றிற்று.

கணபதிதுணை.

# பகவற்கீதை பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அ | |
| அங்கியொளி | ௯௮ |
| அங்குமால் | ௧0௯ |
| அசைவிஞெ | ௧௩0 |
| அஞ்சுதலி | ௧௩௨ |
| ௸-புலனை | ௭௫ |
| ௸-புலன்வ | ௯௭ |
| அஞ்சுபொ | ௮௫ |
| அடங்கிடல | ௧௩௬ |
| அடங்குகின் | ௭௯ |
| அடுத்தலேம்பு | ௭0 |
| அடையஞா | ௯௬ |
| அணித்தகை | ௧௪௯ |
| அதனுல்வ | ௮0 |
| அத்திஞான | ௧௧௬ |
| அந்தக்கரண | ௯௬ |
| அந்தவுரு | ௧௪௬ |
| அப்பொருளை | ௧௪௯ |
| அரசவ்வர | ௬0 |
| அரிதெனுமறி | ௬௮ |
| அரியயனெ | ௫௫ |
| அரியவெண | ௧0௩ |
| அருந்துண | ௧௨௫ |
| அருவமாய | ௧௨0 |
| அலைபிலேக | ௭௨ |
| அல்லாவி | ௧௪௬ |
| அவ்வகைய | ௧0௯ |
| அழியாதமெ | ௬௫ |
| அழிவொன் | ௧00 |
| அளித்தவவ் | ௯௪ |
| அறியாதபரு | ௧௧௩ |
| அறியாமையி | ௮௧ |
| அறிவதாகி | ௭௯ |
| அறிவிஞல | ௮௪ |
| அறிவிஞலெ | ௧0௧ |
| அறிவினிற்றன் | ௬௯ |
| அறிவினையறிகி | ௬௮ |
| அறிவுமறி | ௧௪௨ |
| அறையும் | ௯௯ |
| அனையவி | ௯0 |
| அன்பவினை | ௮௩ |
| அன்றியும்முனை | ௬௭ |
| அன்றியே | ௫௮ |
| அன்னவகை | ௬௪ |
| அன்னவர்கள் | ௬௪ |
| ஆ | |
| ஆசினைய | ௧௩௭ |
| ஆதலாலறி | ௬௩ |
| ஆதலாற்புல் | ௭0 |
| ஆதலானீயும் | ௭௩ |
| ஆதலிலனை | ௧௩௫ |
| ஆதிதேவ | ௧௧௨ |
| ஆதியந்தமி | ௧௨0 |
| ஆதியிலுலகினை | ௭௨ |
| ஆமைதன்னுறு | ௬௯ |
| ஆயபிரமத் | ௯௬ |
| ஆயாதவர்க் | ௬௨ |
| ஆயிலுலகங் | ௧0௧ |
| ஆவதானவம | ௬௭ |
| ஆவதென் | ௭௮ |
| ஆர்த்தனவ | ௫௯ |
| ஆறுசெல் | ௭0 |
| ஆற்றிய | ௧௫0 |
| ஆற்றுமிவ் | ௭௬ |
| ஆனபொரு | ௬0 |
| ஆனவிப் | ௧௨0 |
| ஆன்றவறி | ௯௩ |
| ௸—ங்கரு | ௧௪௩ |
| இ | |
| இகமேநி | ௮௪ |
| இகழ்பவ | ௧௧௭ |
| இடரானது | ௮௯ |
| இதனுல்வினைக | ௭௩ |
| இந்தவண் | ௧௨௪ |
| இந்தவிய | ௧௪௫ |
| இந்தவின் | ௧௩0 |
| இந்தவுடல | ௯௭ |
| இந்தவுரு | ௧௧0 |
| இந்தியங் | ௧௨௯ |
| இப்படியன் | ௧௩௭ |
| ௸+யுயிரை | ௧௨௧ |
| ௸+யுரை | ௮0 |
| ௸+ரிசிஞெ | ௯௮ |
| ௸+னல்வ | ௧௨௬ |
| இப்பரிசுப | ௮௮ |
| ௸+சுரை | ௧௧௪ |
| ௸+சென் | ௧0௪ |
| இப்பொரு | ௧௩௩ |
| இரவிதா | ௧௨௨ |
| இருப்பிட | ௧௪௨ |
| இருமையு | ௧௨௧ |
| இரும்புவ | ௧0௭ |
| இருவகைத் | ௧௩௨ |
| இருவகைய | ௯௧ |
| ௸+யுயி | ௧௧௭ |
| இருவேறு | ௧௪௮ |
| இல்லாமையி | ௬௫ |
| இவையிர | ௧௩0 |
| இவ்வகைமொ | ௧௧௧ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஷை+கையகு | ௯௩ | உந்தியப் | ௭௯ | எவ்வகைப்ப | ௭௫ |
| ஷை+தாகில | ௬௪ | உய்யவன் | ௯௨ | எள்ளலா | ௧௨௦ |
| ஷை+யவனே | ௬௯ | உய்யும்படி | ௭௮ | எறியாவெ | ௮௦ |
| ஷை+வாய | ௮௪ | உய்வகை | ௮௬ | எறிவரும் | ௯௫ |
| ஷை+யாசு | ௧௩௪ | உருப்பான்மை | ௬௬ | எனைத்துவி | ௧௦௪ |
| ஷை+யென் | ௭௮ | உரைசெயற் | ௧௧௬ | என்செயற | ௭௪ |
| ஷை+யேவ | ௧௪௨ | உரைசெய் | ௧௨௪ | என்பாற்பொரு | ௭௪ |
| இவ்வகைவி | ௮௯ | உலகமுந்தா | ௧௧௭ | என்பேரி | ௧௧௨ |
| இவ்வண்ணமறி | ௬௨ | உழுதொ | ௧௪௫ | என்றபொரு | ௧௫௦ |
| இவ்வாறிதனி | ௧௨௮ | உளவாமுயிரு | ௭௩ | ஷை—ருளிச் | ௧௦௯ |
| இவ்வுயிரி | ௧௨௧ | உன்னியவா | ௧௨௨ | ஷை—வனு | ௧௧௪ |
| இழியாதிர் | ௮௯ | உன்னுநான் | ௫௬ | ஷை—வன்வ | ௧௪௧ |
| இறந்தவெ | ௧௦௫ | ஊ | | என்றுகூறவி | ௮௯ |
| இறந்தாரோ | ௧௧௧ | ஊனேயே | ௧௦௨ | என்றுமு | ௧௧௨ |
| இறந்துபோ | ௧௩௩ | ஊர்வனறி | ௧௦௧ | என்னசெ | ௧௪௧ |
| இறவாவ் | ௮௬ | ஊழாலேவ | ௯௩ | என்னது | ௧௪௮ |
| இற்றிவைய | ௧௧௯ | ஊழால்வ | ௧௨௮ | என்னுடைய | ௧௧௩ |
| இனம்வலி | ௧௩௩ | ஊறுபடவொ | ௬௫ | என்னுருவி | ௧௦௦ |
| இன்றுவாளும | ௯௭ | ஊனப்படு | ௧௪௩ | என்னைப்ப | ௧௪௭ |
| இன்னதன் | ௧௨௩ | எ | | என்னையே | ௧௪௭ |
| இன்னவர்க | ௮௦ | எஞ்சலிலா | ௧௪௯ | ஏ | |
| இன்னவர்த | ௯௪ | எஞ்சுதலையி | ௯௬ | ஏகமேக | ௧௪௦ |
| இன்னுதன | ௧௪௧ | எண்டிகழு | ௮௭ | ஏதமான | ௯௯ |
| ஈ | | எண்ணியவு | ௧௩௨ | ஏயநானெ | ௧௧௬ |
| ஈண்டுபொரு | ௧௦௦ | எண்ணிலிய | ௧௦௮ | ஏயவிரு | ௧௪௮ |
| ஈர்வன்று | ௯௯ | எண்ணுமின் | ௭௮ | ஏயும்பரி | ௧௧௨ |
| ஈனமற்ற | ௧௪௪ | எப்பொருட | ௧௦௨ | ஏய்வகை | ௧௦௯ |
| உ | | எப்பொருளினு | ௧௧௯ | ஏறுமல்லு | ௧௧௩ |
| உஞ்சேபோ | ௯௩ | எப்பொருளுமி | ௯௮ | ஏன்றுமு | ௧௨௪ |
| உடம்புட்னி | ௧௨௫ | எய்துமெங் | ௫௮ | ஐ | |
| ஷை—னேயு | ௮௪ | எரிகிகர்வெ | ௭௦ | ஐவகைப் | ௫௬ |
| உடம்பெண | ௧௧௮ | எல்லாத் | ௯௧ | ஒ | |
| உடனுயபு | ௮௩ | எல்லாப்பொரு | ௧௦௫ | ஒக்கும் | ௮௭ |
| உணர்வவி | ௧௨௨ | ஷை—மறிவா | ௯௭ | ஒத்துநல் | ௧௨௫ |
| உண்டாயவுல | ௧௧௩ | ஷை—ட்கும்பா | ௧௪௮ | ஒத்தெங் | ௧௨௨ |
| உண்டுமீள | ௧௩௬ | ஷை—பழைய | ௬௬ | ஒப்பரிதாய | ௧௩௯ |
| உண்ணல்விளை | ௧௧௩ | எல்லார்க் | ௧௦௧ | ஒருபதம | ௫௫ |
| உண்பனயாக | ௧௩௭ | எல்லாவுயி | ௮௯ | ஒருபெரு | ௧௧௯ |
| ஷை—வையு | ௧௨௩ | எவமறமுன் | ௭௭ | ஒருவருமொ | ௭௨ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| ஒருவனசிக் | கஙச |
| ஒருவனென் | சாஎ |
| ஒவ்வாதீ | சாங |
| ஒழியாதெ | கஉசா |
| ஒளியினு | ககக |
| ஒன்றலா | ருகூ |
| ஒன்றியம | கசஎ |
| ஒன்றினு | ககஎ |
| **ஓ** | |
| ஓங்கியவுல | கசஉ |
| ஓடுகின்றபு | எஅ |
| ஓதலாகா | சா௦ |
| ஓதருஞா | கூச |
| ஓதீருநதிக | கக௪ |
| ஓதலினியற் | கூஅ |
| ஓதியவுடம் | கஉக |
| ஓதிற்பெ | க௦ரு |
| ஓதுராக | கஉச |
| ஓமென்கி | கஙகூ |
| ஓமென்று | கஙகூ |
| ஓரின்மே | கஉஉ |
| **க** | |
| கங்கையா | ருஅ |
| கண்களும்வ | க௦கூ |
| கண்டவரி | ககச |
| கண்ணனுநா | க௦எ |
| கண்ணிய | கஉசா |
| கண்ணிற்க | எங |
| கண்ணினு | கூஉ |
| கண்ணேயெ | கஉஅ |
| கண்ணையோ | கஙக |
| கதுவியபொ | சாஅ |
| கருதரும்வு | எஎ |
| கருநாண் | கஉஅ |
| கருமநன் | அஉ |
| கல்லாருந் | க௦எ |
| கவைதரு | அங |
| கறைசெ | கசரு |
| கனவுத்திக | கஉஅ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| கனையெரி | கசசா |
| **கா** | |
| காடுமலை | கசசா |
| காணுங்கே | அங |
| காணும்பு | கஉ௦ |
| காதலாலிந் | கஙகூ |
| காதலாற்ற | எரு |
| காதலிலி | கககூ |
| காதலினுகி | கஙச |
| காமமென் | கச௦ |
| காரணமிறந் | ககசா |
| காலத்தாலு | க௦க |
| காவல்செ | அரு |
| **கு** | |
| குடங்கொ | கஉகூ |
| குலங்கெட | சாக |
| குலைபெறு | கசங |
| குளமுதலியவ | சாஅ |
| றியுநீல | கஉச |
| குறையுமாப் | சாகூ |
| கு | |
| **கூ** | |
| கூறினநூ | கஙச |
| **கெ** | |
| கெடுகின்ற | கஉஉ |
| **கை** | |
| கைம்மா | அஎ |
| கையும்ப | ககஉ |
| **கொ** | |
| கொண்டுசெ | கஙஅ |
| கொண்டுப | கூ௦ |
| கொல்லினு | சாக |
| கொற்றவ | சா௦ |
| **ச** | |
| சத்துவகு | கஙஎ |
| சத்துவமா | கஉரு |
| சத்துவம்ர | கஉச |
| சந்திரனு | க௦ரு |
| சந்நியாச | கச௦ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| **சா** | |
| சாதிபுரி | அரு |
| சாத்துவிகர் | கஙசா |
| சாயைபோ | ககஉ |
| சாயையன் | கஉஎ |
| சாவதிலையா | சாச |
| சாவாதுபி | எஎ |
| **சி** | |
| சித்தர்களி | க௦சா |
| சிந்தையி | கூச |
| சிறந்தவர | கூ௦ |
| **சீ** | |
| சீதமழ்ன்முத | சாரு |
| **சு** | |
| சுருளார் | க௦அ |
| **செ** | |
| செயத்தகுவ | ககஎ |
| செ—னவெ | கஙஎ |
| செயலாலு | எஅ |
| செயல்வகை | எங |
| செயன்மே | எஅ |
| செய்தவி | அசா |
| செய்தியின்றி | சாஎ |
| செய்யமா | கஉங |
| செய்யாமு | கூஅ |
| செல்வம் | கூங |
| செறிந்ததிவ் | சாசா |
| செறியுமி | கஉக |
| **சே** | |
| சேயமாம | ருரு |
| **சொ** | |
| சொல்லரு | அக |
| சொல்லார் | எஎ |
| சொன்னக | கசசா |
| சொன்னவீ | கசசா |
| **ஞா** | |
| ஞானகா | கச௦ |
| ஞானமாமி | எஎ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| ஞான்றும் | ௧௧௧ |
| ஞானமா | ௧௦௨ |
| **த** | |
| தக்கசத் | ௧௨௫ |
| தக்கதுத | ௧௨௫ |
| தஞ்சமிவ் | ௧௧௦ |
| தடுத்ததொழி | ௭௫ |
| தடுமாற்றம | ௬௧ |
| தருபயனதுவி | ௬௯ |
| தருமம்பா | ௧௪௪ |
| தருமனட | ௫௯ |
| தலைநின்றபொ | ௬௯ |
| தலைமைய | ௧௩௮ |
| தலைமையு | ௧௪௫ |
| தலையாமிந்த | ௮௭ |
| தலையுங்கழு | ௮௭ |
| தவர்கொள் | ௬௩ |
| **தா** | |
| தாங்கியநீ | ௧௦௧ |
| தாவிலருந் | ௬௦ |
| தானந்தமி | ௯௫ |
| தானலதி | ௮௬ |
| **தி** | |
| திதனையவரு | ௬௭ |
| தியாகமுன் | ௧௪௧ |
| திரியுமிரு | ௯௩ |
| திருவறநீ | ௧௪௯ |
| தின்பநக் | ௧௩௦ |
| **தீ** | |
| தீக்குலாம் | ௧௩௭ |
| தீங்கியற்று | ௧௪௦ |
| தீதகலாதெ | ௧௪௭ |
| தீதறுசிறுவ | ௬௦ |
| தீதற்பாலா | ௮௧ |
| தீத்தவழு | ௧௩௮ |
| தீமனந்தனி | ௭௫ |
| தீமைசெய் | ௧௩௨ |
| தீராவகை | ௧௪௫ |
| தீர்த்தயா | ௧௩௮ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| **து** | |
| துயிலுமுண | ௮௭ |
| துறவுநன் | ௮௨ |
| துற்றவின்பமு | ௬௭ |
| துன்பமாய் | ௧௪௪ |
| துன்னிய | ௧௨௯ |
| **தெ** | |
| தெய்வவா | ௧௩௨ |
| தெரியாவ | ௧௦௮ |
| தெளிபவருண | ௬௮ |
| தெளிவின் | ௧௩௮ |
| **தே** | |
| தேடியபொ | ௭௯ |
| தேடும்பழை | ௯௫ |
| தேவதேவ | ௧௧௨ |
| தேவரும்வ | ௧௦௯ |
| தேவரைய | ௧௦௨ |
| தேவர்களு | ௧௦௪ |
| தேவர்களைம | ௭௩ |
| தேறுநெஞ் | ௮௮ |
| **தொ** | |
| தொடக்கற | ௧௩௩ |
| தொடருற | ௧௪௫ |
| தொன்மை | ௮௦ |
| **ந** | |
| நண்ணிய | ௪௨௧ |
| நல்லகரும | ௯௭ |
| நல்லகா | ௭௭ |
| நல்லமாந் | ௧௩௦ |
| நல்லவாற | ௧௨௩ |
| நவைதருகுண | ௬௮ |
| நற்றவநிக | ௭௭ |
| நன்றுய்ஞா | ௧௪௩ |
| நன்றேறஞா | ௮௪ |
| நன்றேவி | ௭௨ |
| **நி** | |
| நித்தமாய | ௧௪௧ |
| நிரந்தரமி | ௧௦௪ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| நிலத்தினை | ௧௧௦ |
| நில்லாவுடற் | ௬௬ |
| நிறைவிலா | ௧௩௩ |
| **நீ** | |
| நீடுமனநி | ௯௦ |
| நீதிவேதம் | ௧௧௨ |
| நீரினணிறை | ௭௦ |
| **நூ** | |
| நூற்படு | ௧௩௭ |
| நூற்றுவர் | ௧௧௦ |
| **நெ** | |
| நெய்மார் | ௬௩ |
| நெருப்பை | ௭௫ |
| நெறியில் | ௯௮ |
| நெறியால் | ௧௨௮ |
| **ப** | |
| படைகளி | ௧௦௯ |
| பண்டுகண் | ௧௧௪ |
| பண்டுசெய் | ௭௪ |
| பண்ணிக் | ௧௪௪ |
| பருகாநி | ௧௦௫ |
| பலவினிய | ௧௦௭ |
| பற்றுமாங் | ௧௪௩ |
| பற்றுமாசி | ௧௨௪ |
| **பா** | |
| பாடும்ப | ௮௬ |
| பாதியோர் | ௫௫ |
| பாவமாக | ௧௪௪ |
| **பி** | |
| பிணித்தபி | ௧௪௯ |
| பிரமமா | ௭௯ |
| பின்னையோ | ௭௧ |
| **பீ** | |
| பீறியபோர் | ௬௬ |
| **பு** | |
| புண்ணியபூ | ௫௭ |
| புண்ணியவு | ௬௮ |
| புத்திரொ | ௧௦௪ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| புலனைவை | ௭௨ |
| புன்மைய | ௮௬ |
| பூ | |
| பூக்கமழ் | ௧௨௯ |
| பூதமைந் | ௧௨௦ |
| பூத்தரு | ௮௨ |
| பெ | |
| பெண்களிற் | ௧௦௬ |
| பெரியவர்பயி | ௭௪ |
| பெருமுனி | ௧௦௬ |
| பெருமை | ௮௩ |
| பெற்றமேத | ௭௯ |
| பெற்றநன் | ௧௧௯ |
| பே | |
| பேதமுடை | ௧௦௪ |
| பேதைமையை | ௧௩௮ |
| பேதைமைய | ௬௯ |
| பை | |
| பையரவி | ௧௪௯ |
| பொ | |
| பொய்ம்மை | ௯௦ |
| பொராவரு | ௧௦௬ |
| பொருத்த | ௧௪௪ |
| பொறிகளு | ௧௪௭ |
| பொன்றுவது | ௬௪ |
| போ | |
| போகமாய் | ௮௮ |
| போதலரி | ௧௦௨ |
| போர்முக | ௫௮ |
| போவனநி | ௧௨௨ |
| போனவை | ௯௫ |
| ம | |
| மண்ணுளும்பெ | ௬௩ |
| மண்ணிணுயவி | ௬௫ |
| மண்ணுநீரு | ௯௨ |
| மண்ணுறவ | ௧௦௯ |
| மந்திரமாய | ௧௨௮ |
| மருத்துவர் | ௧௦௮ |
| மருவற்தரி | ௯௭ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| மருவுகின்ற | ௧௩௦ |
| மருவுற்ற | ௯௫ |
| மலைகளி | ௧௦௫ |
| மறந்திரு | ௧௩௨ |
| மறைபயி | ௧௩௨ |
| மற்றவருந் | ௯௪ |
| ஷ + ர்தந் | ௭௩ |
| ஷ + தம்மை | ௧௩௪ |
| ஷ + நெஞ் | ௧௦௪ |
| மற்றிப் | ௧௨௮ |
| மற்றிவ்வு | ௧௧௯ |
| மற்றுணக் | ௧௪௮ |
| மனஞ்செ | ௧௪௪ |
| மனமொரு | ௧௪௪ |
| மன்னநீ | ௧௧௬ |
| மன்னருள் | ௫௬ |
| மன்னவவெ | ௧௪௮ |
| மன்னவுட | ௧௧௮ |
| மன்னியக | ௧௩௪ |
| மா | |
| மாதவனு | ௧௪௯ |
| மாயணிவைநி | ௭௫ |
| மாயுமவரா | ௬௪ |
| மாயுமாயை | ௯௨ |
| மானமவ | ௧௨௬ |
| மானமும் | ௧௧௯ |
| மாற்றலர்க | ௬௩ |
| மி | |
| மிகமேனி | ௮௦ |
| மிக்கசொற் | ௧௦௬ |
| மின்னேய | ௬௧ |
| ஷ + வுட | ௧௨௯ |
| மின்னைய-திரு | ௬௪ |
| ஷ + யேய | ௧௦௩ |
| ஷ + யேய் | ௧௦௨ |
| மு | |
| முந்துவா | ௧௨௯ |
| முன்செய் | ௧௩௮ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| முன்றிக | ௧௨௦ |
| முன்னே | ௧௦௦ |
| மூ | |
| மூதவா | ௧௨௩ |
| மூன்றுகு | ௯௩ |
| மெ | |
| மெய்யறி | ௮௪ |
| மெய்யுறவு | ௧௧௬ |
| மெய்வகைத | ௭௪ |
| ஷ + யவல | ௧௦௫ |
| மெய்வரு | ௧௪௧ |
| மே | |
| மேலாயுள் | ௭௬ |
| மேல்வகுத் | ௫௮ |
| மேவின | ௮௬ |
| மை | |
| மைக்குண | ௯௩ |
| மையலிது | ௯௦ |
| மொ | |
| மொழிசெ | ௧௩௦ |
| யா | |
| யாக்கை | ௧௪௧ |
| யாதவா | ௧௧௩ |
| யாதின்மா | ௧௪௧ |
| யாதொருபொ | ௭௦ |
| யாதொன்றி | ௮௮ |
| யாதொண்ணை | ௯௭ |
| யாருமறிய | ௧௦௦ |
| யாவொவ் | ௮௩ |
| யாவர்களா | ௧௩௬ |
| யாவர்கள்சில | ௧௧௬ |
| யாவர்போ | ௫௯ |
| யாவனொருத் | ௯௪ |
| யாவனொருவனெ | ௮௯ |
| யாவனொருவன் | ௧௪௨ |
| யானும்வகை | ௬௫ |
| யானெதெ | ௭௧ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| **யோ** | | வானடை | ௧௧௰ | வீமனையும் | ௫௮ |
| யோகமன | ௮௬ | **வி** | | வீவொனக் | ௬௬ |
| யோகமுடி | ௯௰ | விடம்படும் | ௧௧௮ | **வெ** | |
| யோகமேவ | ௯௰ | விடலரும்வ | ௬௮ | வெய்யநெ | ௮௯ |
| **வ** | | விட்டுமுற் | ௭௯ | வெல்லப்ப | ௧௪௬ |
| வசையிற | ௧௱௮ | விண்ணியன் | ௫௬ | **வே** | |
| வஞ்சர்செ | ௫௮ | வியக்கமேன் | ௯௫ | வேண்டல் | ௭௰ |
| வஞ்சர்வே | ௮௮ | வியந்துத | ௧௱௪ | வேதநா | ௧௱௰ |
| வணங்கவி | ௧௧௰ | விரியவுண | ௯௪ | வேதநூ | ௧௫௰ |
| வணிகரும | ௧௰௨ | விரியவுரை | ௯௬ | வேதநெறி | ௧௧௪ |
| வருணனு | ௧௰௬ | விரும்பல | ௧௱௱ | வேதமாகி | ௯௨ |
| வலந்தரு | ௧௧௰ | விரைசெய் | ௧௪௭ | வேதமேமு | ௧௱௬ |
| **வா** | | விலங்கலனை | ௧௰௰ | வேதமொழி | ௧௰௧ |
| வாக்கினு | ௧௪௨ | விழியாமெ | ௮௰ | வேர்மே | ௧௨௭ |
| வாங்கியை | ௮௮ | விளம்பும | ௫௯ | வேறப்பா | ௧௪௭ |
| வாயாத | ௧௱௯ | வினைப்பய | ௧௪௱ | **வை** | |
| வாயேயன் | ௬௰ | வினைமுய | ௮௱ | வையமனை | ௫௯ |
| வாய்மை | ௧௨௬ | **வீ** | | வையமுழு | ௧௪௮ |
| வாராநின்ற | ௬௧ | | | | |
| வாழுஞ் | ௧௨௪ | வீதலிற் | ௧௪௱ | வையாரயினு | ௬௫ |


பகவற்கீதை பாட்டுமுதற்குறிப்பகராதி

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# பிரமகீதை பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அ | | அப்போதுசு | ௨௧௫ | அனலனே | ௧௯௩ |
| அகமெனவ | ௨௩௦ | அமையாவ | ௩௧௧ | அனலினி | ௨௧௨ |
| அகிலமாய | ௧௫௬ | அம்பிகாப | ௩௦௯ | அன்பரா | ௨௨௬ |
| அக்கரந்தனே | ௨௪௭ | அயர்ச்சிமிக் | ௨௫௪ | அன்பில | ௨௨௭ |
| அக்கரமாகி | ௨௬௪ | அயலெலான் | ௨௦௬ | அன்பினுல | ௧௫௨ |
| அங்கமாறி | ௧௭௭ | அயருணின் | ௧௮௧ | அன்பினுலெ | ௧௮௨ |
| அங்கவேத | ௧௯௪ | அபனுமீண் | ௨௩௧ | அன்புறகு | ௧௭௯ |
| அங்கிதலை | ௨௪௬ | அரசதொ | ௨௯௫ | அன்றியனு | ௧௭௦ |
| அசத்தின்க | ௨௦௯ | அரசாகிய | ௨௭௫ | அன்றுமா | ௧௯௪ |
| ஷை—றன்-தா | ௨௦௯ | அரணியோ | ௨௪௭ | அன்னத்தா | ௨௧௪ |
| ஷை—துத்தன் | ௨௦௯ | அரியமா | ௩௦௪ | அன்னியத் | ௨௨௦ |
| ஷை—யாலு | ௨௧௦ | அரியுமய | ௨௩௧ | ஷை—மாகவி | ௧௯௧ |
| அச்சமாகி | ௨௫௬ | அருவெனு | ௩௦௯ | ஷை—ய்விஞ் | ௧௭௬ |
| அஞ்ஞான | ௧௭௪ | அருளதா | ௨௯௦ | ஆ | |
| அடையநீ | ௧௫௬ | அருளினே | ௨௩௨ | ஆகமங்கள் | ௨௪௦ |
| ஷை—வம்பி | ௩௦௭ | அருளினைத் | ௨௫௩ | ஆகுஞான | ௩௦௩ |
| அணுவினுக் | ௨௬௨ | அர்க்கன்ம | ௨௪௬ | ஆகையால | ௩௦௮ |
| அண்டருக் | ௧௫௭ | அல்லாதில் | ௨௬௬ | ஆதாரத்தொ | ௨௬௨ |
| அண்ணிய | ௨௮௭ | அவத்தமே | ௧௬௬ | ஆதாரமுடை | ௨௨௬ |
| அதுவென் | ௨௧௮ | அவனதிய | ௧௯௩ | ஆதலாலரி | ௧௯௫ |
| அத்தனங்கொ | ௧௯௩ | அழுத்தமிக் | ௧௫௬ | ஷை—றியும | ௨௬௯ |
| அத்தனேசர | ௧௯௪ | அளவிலம் | ௨௩௪ | ஷை—வானந்த | ௨௫௯ |
| அத்துவிதந் | ௨௬௭ | அளவிலா | ௨௨௭ | ஷை—வள்ளோ | ௨௧௫ |
| அந்தத்து | ௧௫௯ | அளவையோ | ௨௨௯ | ஷை—லுருவங் | ௧௭௦ |
| அந்தப்பர | ௨௮௭ | அறியாதா | ௨௦௮ | ஷை—ல்விஞ் | ௧௮௮ |
| அந்தமறை | ௩௧௧ | அறியாமையி | ௨௧௯ | ஷை—வீட | ௧௯௭ |
| அந்தமாம | ௨௫௫ | ஷை—யென் | ௨௨௦ | ஷை—ற்பிற | ௧௮௩ |
| அந்தரிக்கங் | ௨௭௪ | ஷை—வடிவா | ௨௧௧ | ஷை—ன்மா | ௧௮௯ |
| அந்தவிச்சை | ௧௭௪ | அறிவனும | ௩௦௦ | ஆதலிற்சி | ௨௩௮ |
| அப்படியி | ௩௦௯ | அறிவின்மு | ௨௩௪ | ஷை—ஞல்வே | ௨௮௫ |
| அப்பாம் | ௨௩௯ | அறிவுபா | ௧௬௮ | ஆதித்தனி | ௨௧௨ |
| அப்பாலா | ௨௨௮ | அறிவொடுவி | ௨௧௨ | ஆதித்தனெ | ௨௨௪ |
| அப்பொழுத | ௨௨௭ | அறையும | ௧௮௨ | ஆதிவேதா | ௩௧௧ |

# பிரமகீதை பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ஆமன்றெனை | ௨0௫ | இன்பமாம் | ௧௭௭ | உளவாகி | ௨௩௯ |
| ஆரணத்தன் | ௧௯௬ | இன்னதெ | ௨௫௮ | உள்ளபே | ௨௬௧ |
| ஆரமணிகு | ௧௫௫ | இன்னதோர் | ௨0௧ | உறங்குமு | ௨௫௯ |
| ஆனதர்க்கத் | ௧௮௫ | இன்னபரி | ௧௫௩ | உறுவதுத | ௩௧0 |
| ஆனதாகா | ௨௨௪ | ஈ | | ஊ | |
| இ | | ஈசனுஞா | ௧௯௬ | ஊனுதிக | ௨௧௩ |
| இகழ்புன் | ௨௮௮ | ஈசனுமிறைவ | ௨௧௧ | ஊனிந்தி | ௨௧௩ |
| இங்குநா | ௨௪௨ | ஈசனுக்கன் | ௧௫௬ | ஊனிலொ | ௩0௬ |
| இதயமாமி | ௨௪௮ | ஈசனுக்குரு | ௨௬௪ | எ | |
| இதற்குநீர் | ௨0௨ | ஈசனென் | ௨௫௭ | எங்குநிறை | ௨௪௫ |
| இதுசகங் | ௨௪0 | ஈசனைய | ௩0௧ | எச்சகத் | ௨௯௬ |
| இதுபரமமா | ௨௮0 | ஈசன்சக | ௨௨௨ | எண்ணிலா | ௨௫௪ |
| இதுபரம்ப | ௨௩௭ | ஈசன்ற | ௨௨௪ | எத்தைப் | ௨௫௩ |
| இதுவெதனை | ௨௯௫ | ஈனமாகி | ௨௬௧ | எப்படிப்பூத | ௨௨௩ |
| இதுவேமு | ௧௯௨ | உ | | ஷை—ப்பொ | ௨௨௨ |
| இத்தன்மை | ௨௨௨ | உடம்பா | ௨௧௭ | ஷை—யானு | ௨௫௨ |
| இத்தாலித் | ௨௨௧ | ஷை—புடனி | ௨௩௮ | ஷை—யெப் | ௧௯௧ |
| இந்தப்பர | ௧௯0 | ஷை—ன்பு | ௨௫௧ | எப்பொருளு | ௧௯௧ |
| ஷை—பிரா | ௨௭௨ | ஷை—போதா | ௨௭௨ | ஷை—ள்களுக் | ௨௪௧ |
| இந்தப்புரங் | ௨௬௧ | உடைய | ௨௭௬ | ஷை—ந்தானு | ௨௨௩ |
| இந்தமகா | ௨௩௯ | உண்டுபோ | ௩௧0 | ஷை—களு-சா | ௨௭௧ |
| இந்தவாக் | ௧௯0 | உண்ணுஷ | ௨௯௭ | எல்லாமஞ் | ௨௨௧ |
| இந்தவிடும் | ௩௧0 | உண்மைசி | ௨0௮ | ஷை—றிவா | ௩௧0 |
| இந்தவுடம் | ௨௪௯ | உண்மையிற் | ௨0௩ | ஷை—முஞ் | ௨௨௩ |
| இந்தியங்களி | ௨௯0 | உத்தமமா | ௩௧௨ | எல்லாமுண் | ௨௧0 |
| இந்தியங்களு | ௧௮௪ | உமைண்ய | ௧௯௪ | ஷை—ம்பொ | ௨௨௧ |
| இந்துபா | ௧௫௪ | உமையோ | ௨௨௮ | ஷை—ப்பொ | ௨௩௨ |
| இப்படிக்கரு | ௨௭0 | உரியநா | ௨௫௮ | எல்லாம்வ | ௨௯௫ |
| ஷை—யன்றி | ௨௧௯ | உருத்திரவு | ௨௭௫ | எல்லாவி | ௨0௪ |
| ஷை—யெல் | ௨௨௧ | உருத்திரன் | ௧௭௮ | எறிகதிர் | ௨௪0 |
| இப்பரம்ப | ௨௫௪ | உருவமா | ௨௨0 | எனையொழிய | ௨௬௩ |
| இப்பொருளே | ௨௩0 | உரையாடு | ௨௭0 | | |
| இயக்கரூப | ௧௯௩ | உலகமியா | ௨௩௧ | ஏ | |
| இரண்டுக்கு | ௨0௩ | ஷை—முயிர் | ௨௨௮ | ஏயபேரு | ௨௮௮ |
| இரவியும | ௧௫௧ | உலகமோ | ௧௯௮ | ஏறுடைச்சி | ௧௯௬ |
| இலங்கிர | ௨௪௮ | உலகியல் | ௧௮௨ | ஏனைமற்று | ௧௭௩ |
| இலதெனு | ௨௩௪ | உலகெலா | ௧௬௭ | ஐ | |
| இவ்வணமு | ௨௨௭ | உலத்தவி | ௩0௨ | ஐம்பதிற் | ௧௫௬ |
| இனியநு | ௩௧௨ | உவமையிற் | ௧௯௨ | ஐயன்சை | ௧௯௨ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| ஒப்பறும் | ௧௧௬ |
| ஒருகாலமுன் | ௧௧௧ |
| ஒருவராலொ | ௨௮௫ |
| ஒருவருங் | ௨௯௭ |
| ஒலிமுத | ௨௯௨ |
| ஒழிந்ததொ | ௨௫௮ |
| ஒழிவிலாப் | ௨௭0 |
| ஷை—விறை | ௧௯௫ |
| **ஓ** | |
| ஓடினார்சில | ௨௨௮ |
| ஓதலுற்றப | ௨௪0 |
| ஓதிடாதுண | ௧௯௫ |
| ஓதியதோட | ௧௯௭ |
| ஓதுகின்ற | ௨௨௧ |
| ஓதுநெறி | ௧௬௮ |
| ஓதுமிப்பா | ௧௯0 |
| ஓதுவேத | ௨௬௩ |
| ஒளிராளி | ௨௪௯ |
| **க** | |
| கஞ்சநற் | ௧௫௬ |
| கடபடகுட் | ௧௮0 |
| கடுகியுமுய | ௨௨௭ |
| கடையப்ப | ௨௧௪ |
| கண்ணுஞ் | ௨௬௩ |
| கண்முதற் | ௧௫௧ |
| காணம்பன் | ௨௨௯ |
| கருமதற் | ௨௪௪ |
| கலக்குறு | ௧௯௩ |
| கற்பகத | ௧௫௫ |
| கனகமத | ௨௬௯ |
| கனவிற்கண் | ௧௬௪ |
| கனவிற்கற் | ௧௬௩ |
| **கா** | |
| காட்சியை | ௩௧0 |
| காணவோ | ௨௪௨ |
| காண்டல் | ௨௭௭ |
| காண்பவ | ௨௧௫ |
| காதலாற் | ௧௬௧ |
| காதும்ரா | ௧௬௫ |
| காரணசத் | ௧௧௬ |
| ஷை—யேயக் | ௨00 |
| காரணத்தோ | ௨0௨ |
| காரணமத | ௨0௫ |
| காரணமேவி | ௨0௮ |
| காரியமெ | ௧௧௧ |
| காரியமொரு | ௨0௪ |
| காலமுங் | ௨௧0 |
| **கி** | |
| கிருமிகீட | ௨௬௮ |
| **கீ** | |
| கீதைசெய் | ௧௮௨ |
| **கு** | |
| குறியதுவா | ௨௮௩ |
| குகையிலி | ௨௮௬ |
| **கூ** | |
| கூறுமோ | ௨௨௯ |
| கூறும்பொ | ௨0௫ |
| **கே** | |
| கேட்பவனு | ௨௨௧ |
| **கை** | |
| கைவல்லிய | ௨௬௩ |
| **ச** | |
| சகமொடு | ௨௨௨ |
| சகரூபமா | ௨௨௩ |
| சகலயோர | ௧௫௪ |
| சச்சிதான | ௧௭௬ |
| சதுர்மறை | ௧௧௬ |
| சத்தப்பரி | ௨௯௩ |
| சத்தாயே | ௧௧௧ |
| சத்தாய்க் | ௨00 |
| சத்தியத்தா | ௨௮௪ |
| சத்தியமாகி | ௨௨௮ |
| சத்தைதா | ௨00 |
| சத்தையில் | ௨00 |
| சந்தோகத் | ௧௫௨ |
| சம்புவின | ௧௧௪ |
| **சா** | |
| சாக்கியா | ௧௧௫ |
| சாதனமா | ௨௨௨ |
| சாந்தமெய் | ௨௩0 |
| சாற்றிடப் | ௧௧௨ |
| சான்றதே | ௧௬௭ |
| **சி** | |
| சித்தமத் | ௨௭௮ |
| சித்திரம | ௧௫௪ |
| சிலந்தியு | ௨௪௨ |
| சிலவர்தா | ௧௭௧ |
| சிவணிதுவ | ௨௨௩ |
| சிவனேயக | ௨௩௯ |
| சிவனேயு | ௨௨௬ |
| சிறப்புடை | ௨௬௩ |
| சின்மய | ௨௫0 |
| சின்மாத் | ௧௫௮ |
| **சீ** | |
| சீவனன்று | ௨௬௧ |
| ஷை—றன்னு | ௨௫௨ |
| **சு** | |
| சுகமொடுது | ௨௨௧ |
| சுதந்தரன் | ௧௧௨ |
| சுத்தமா | ௨௨௪ |
| சுரரிலுத் | ௧௧௭ |
| சுருதியுமி | ௨௪௫ |
| சுழுத்திய | ௨௩௬ |
| **சூ** | |
| சூதனை | ௧௫௩ |
| **செ** | |
| செப்பிய | ௨௩௮ |
| ஷை—விந்த | ௧௧௫ |
| செய்வான் | ௧௮0 |
| செறிவா | ௩0௭ |
| சொல்லிடு | ௨௫௯ |
| ஷை—யவிர | ௨௧௬ |
| சொல்லுறு | ௧௬௨ |
| **சோ** | |
| சோகமோ | ௨௫௬ |

| பாட்டு. | பக்கம் | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ஞா | | திரமாம | ௨௫௭ | நாதமாகி | ௨௨௯ |
| ஞானமா | ௩௦௯ | திருவருள | ௧௯௩ | நாதனுர்செ | ௨௭௧ |
| த | | திவகரனெ | ௨௩௯ | நானுமந்த | ௨௪௦ |
| தக்கஞா | ௨௫௮ | தீ | | நானேமு | ௨௩௦ |
| தங்களியா | ௧௯௦ | தீதெனும் | ௧௮௧ | நாவுரைப் | ௧௮௪ |
| தண்ணிய | ௧௬௪ | தீமரந்தொ | ௩௦௨ | நி | |
| தத்தமா | ௧௬௧ | து | | நிகிலலோகந் | ௧௬௯ |
| தத்துவஞா | ௧௯௧ | துட்டரு | ௧௬௬ | நித்தமான | ௧௫௫ |
| தத்துவமென் | ௨௧௮ | துய்க்குமவ | ௧௮௦ | நித்தராய் | ௨௨௭ |
| தந்தமளவி | ௧௭௮ | துன்பமா | ௨௬௪ | நித்தனிர் | ௧௫௧ |
| தமத்தைய | ௧௫௫ | தெ | | நிலையினி | ௨௮௧ |
| தருமமத | ௧௬௫ | தெரியில்வ | ௩௧௧ | நின்றுமுட் | ௨௮[illegible] |
| தருமாதிகட் | ௨௮௬ | தெரிவரி | ௨௫௮ | நீ | |
| தர்க்கமான | ௧௮௭ | தெரிவிட | ௨௩௩ | நீடொளி | ௨௨௭ |
| தலையிஞு | ௨௨௮ | தெரிவிலாமை | ௧௬௯ | நீண்டகே | ௨௪௧ |
| தற்பதப் | ௨௧௮ | தே | | நீயெனும் | ௨௬௨ |
| ஷை — ரந்தன் | ௨௭௬ | தேகேந்தி | ௨௧௪ | நீயென்கி | ௨௧௬ |
| ஷை — ற்கற்ப | ௨௩௮ | தேசிகனை | ௨௭௦ | நே | |
| தற்பரமமா | ௨௮௧ | தேசினிக | ௨௮௯ | நேசமெஞ் | ௩௦௯ |
| தற்பரனு | ௨௪௯ | ஷை — ன்றன் | ௨௮௫ | நோ | |
| தற்பரன்ற | ௧௬௭ | ஷை — திரு | ௩௦௯ | நோக்குமி | ௨௨௦ |
| தனக்குமெ | ௧௮௬ | தேவதேவ | ௧௯௩ | நோக்குரு | ௧௮௭ |
| தன்மாத்தி | ௨௧௧ | தேவருந் | ௩௧௧ | ப | |
| தன்னதொ | ௧௮௧ | தேவமொல் | ௨௨௯ | பங்கயாச | ௨௩௩ |
| தன்னிலே | ௨௩௨ | தேவர்க்கு | ௨௩௧ | பண்டைநான் | ௨௬௩ |
| தன்னில்வே | ௧௯௧ | தொ | | பண்டொ | ௧௫௩ |
| தன்னிற்கற் | ௧௮௪ | தொலையுநல் | ௨௪௪ | பண்ணிய | ௨௩௫ |
| தன்னையறி | ௧௯௪ | தொல்லைய | ௧௬௮ | பத்தராயுள் | ௨௨[illegible] |
| தா | | தொல்லைந | ௧௯௬ | பத்தியாலி | ௧௫௭ |
| தாக்கரும் | ௨௫௯ | ஷை — வேத | ௩௧௧ | ஷை - ற்கு - பத | ௨௫௮ |
| தாதாவே | ௧௫௨ | தோ | | ஷை - பாத | ௩௦௬ |
| தாரம்விற் | ௨௪௭ | தோத்திர | ௧௫௬ | பரகதிசிவ | ௧௯௫ |
| தானெலாவி | ௧௭௭ | தோன்றலால் | ௨௦௭ | பரப்பிஞ | ௨௯௨ |
| தானுகாதி | ௧௫௧ | தோன்றுகி | ௨௨௯ | பரம்ஞான | ௧௫௯ |
| தானுருமறி | ௨௩௨ | தோன்றுகூ | ௨௨௦ | பரமனத | ௧௯௨ |
| தானேயுள் | ௧௮௪ | ந | | பரமஞக்கி | ௧௭௫ |
| தி | | நனிவேத | ௨௫௬ | பரமன்செ | ௧௫௯ |
| திண்ணிதா | ௨௪௦ | நா | | பரமமாமி | ௩௧௧ |
| திதமாவி | ௨௫௦ | நாசமுற் | ௩௦௦ | பரமாத்து | ௧௯௬ |

# பிரமகீதைப் பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பராமாயுள் | ௨௨௨ |
| பரமிகமா | ௨௯௩ |
| பரம்பொ | ௨௪௮ |
| பருதிநெஞ் | ௧௭௮ |
| பனையாம | ௨௩௯ |
| பலவடிவு | ௨௭௦ |
| பன்னுச | ௨௪௯ |
| பன்னுதவ் | ௨௪௩ |
| பன்னுநன் | ௨௮௬ |
| **பா** | |
| பாசமோச | ௨௩௦ |
| பாடுகின் | ௩௦௫ |
| பாடுமிசையா | ௨௨௯ |
| பாராதபடி | ௨௨௦ |
| பாரிலேயெ | ௨௭௪ |
| பார்த்தபின் | ௨௧௧ |
| பாவுபுண் | ௨௫௧ |
| பாவவேர | ௧௫௩ |
| பானரூப | ௧௬௭ |
| **பி** | |
| பித்தாஞான | ௧௮௬ |
| பிரமஞானீ | ௩௧௨ |
| பிரமனிவ | ௧௭௩ |
| பிரமாணங் | ௨௨௦ |
| பிறப்பிறப் | ௨௨௪ |
| பின்னகடா | ௨௩௯ |
| ஷை — மான | ௨௭௯ |
| பின்னமுற | ௨௬௬ |
| பின்னமெ | ௨௨௦ |
| **பு** | |
| புகலநின் | ௨௩௩ |
| புகலுமுப் | ௨௬௨ |
| புரங்கண் | ௨௬௦ |
| புரணநல் | ௨௪௦ |
| புரந்தரன | ௧௯௪ |
| புருடனென் | ௨௯௧ |
| **பூ** | |
| பூதத்தானு | ௨௧௦ |
| பூதபதிபூ | ௨௮௨ |
| பூதமாகிப் | ௨௨௯ |
| பூதம்புவ | ௨௧௩ |
| பூரணகும் | ௧௫௪ |
| **பெ** | |
| பெரியதா | ௨௯௯ |
| பெருமையி | ௧௯௨ |
| **பே** | |
| பேதந்நெறி | ௨௦௬ |
| பேதமாகி | ௨௯௩ |
| பேதமாஞ் | ௧௮௧ |
| பேதமுமபே | ௧௯௧ |
| பேரானந் | ௨௩௧ |
| **பொ** | |
| பொருந்து | ௨௯௦ |
| பொருள் | ௧௬௧ |
| பொற்பொ | ௨௩௬ |
| பொன்றவு | ௨௮௭ |
| **போ** | |
| போதக்க | ௧௬௩ |
| போதமதா | ௨௨௩ |
| போதவடி | ௩௧௦ |
| **ம** | |
| மண்ணதோர் | ௧௯௮ |
| மண்ணும்வ | ௨௦௬ |
| மத்தநற் | ௧௫௫ |
| மத்தமுறு | ௨௬௬ |
| மயலில்வா | ௧௫௧ |
| மருவிவரு | ௨௪௬ |
| மறைக | ௧௫௮ |
| மறைப்ப | ௧௯௮ |
| மறையா | ௨௫௦ |
| மறையோ | ௨௬௭ |
| மன்னியக | ௧௫௨ |
| **மா** | |
| மாசதில்லா | ௩௦௫ |
| மாநுடா | ௨௩௧ |
| மாயவன் | ௨௮௫ |
| மாயையெ | ௩௦௭ |
| மாலுமவ் | ௩௧௧ |
| மாலுமா | ௩௧௨ |
| மாலுறு | ௨௬௦ |
| **மி** | |
| மிக்கசித் | ௩௦௩ |
| மிக்கநற் | ௨௫௫ |
| **மு** | |
| முத்தியி | ௨௫௭ |
| முன்னைநற் | ௧௫௪ |
| முன்னைநா | ௧௬௫ |
| **மூ** | |
| மூன்றுகி | ௨௯௩ |
| **மெ** | |
| மெய்ம்மை | ௨௪௬ |
| மெய்யதா | ௨௯௯ |
| மெய்யினை | ௨௩௫ |
| மெய்யுறு | ௨௮௪ |
| மெய்யை | ௩௦௮ |
| **மே** | |
| மேருமந்தீ | ௧௮௦ |
| மேலாய | ௨௩௧ |
| மேவியசக | ௧௫௫ |
| மேவியத | ௩௦௨ |
| மேவுபா | ௨௮௪ |
| **மை** | |
| மையலொ | ௧௭௪ |
| மையறு | ௧௬௫ |
| **மொ** | |
| மொழியும | ௧௯௫ |
| **யா** | |
| யாதினைநி | ௨௩௦ |
| யாதுமுண | ௨௪௪ |
| யாதையுங் | ௧௭௧ |
| யாதொருபடி | ௨௨௨ |
| ஷை — ரேற் | ௩௦௮ |
| ஷை — ரேன் | ௩௦௭ |
| ஷை — ஞலே | ௨௨௩ |
| ஷை — பொழு | ௧௭௭ |
| ஷை — ன்றரு | ௨௩௦ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ஷை—றிருந் | ௧௯௮ | **வா** | | வினவுற்ற | ௨௭௩ |
| ஷை—ன்பா | ௧௭௯ | வாக்கதும | ௨௬௨ | வினைமிகு | ௧௮௧ |
| ஷை—றெலும் | ௧௭௬ | வாக்கிஞ | ௨௫௩ | | |
| யார்க்குமி | ௨௬௫ | வாக்குமனங் | ௧௮௫ | **வீ** | |
| யாவரொர | ௨௩௨ | ஷை—மனமு | ௧௮௫ | வீடிலாவி | ௨௫௫ |
| யாவனறி | ௨௯௫ | வாயுவென்று | ௧௭௫ | **வெ** | |
| யாவஞெ | ௨௩௨ | வானவர்பா | ௨௨௭ | வெடிபட | ௧௫௫ |
| **யோ** | | வானிலா | ௧௬௦ | **வே** | |
| | | வான்கரு | ௧௬௧ | வேதஞ்சொன | ௧௬௫ |
| யோகம | ௨௮௯ | வான்முத | ௧௮௦ | வேதநூறெரிங் | ௧௫௩ |
| **வ** | | வான்ருன் | ௧௫௨ | வேதநூன் | ௨௬௯ |
| வருத்து | ௩௦௪ | வான்றெருட | ௧௮௩ | வேதமாக | ௨௬௮ |
| வாக்கட | ௨௪௬ | **வி** | | வேதமோதி | ௧௫௬ |
| வருத்தமி | ௨௮௯ | விச்சையுள்ள | ௧௮௭ | ஷை—தேமெ | [illegible] |
| வருபிறப்ப | ௩௧௦ | விதம்படு | ௨௩௬ | ஷை—பகர்வ | ௨௫௨ |
| வளமாம | ௧௫௪ | வித்தக | ௨௯௮ | வேதியரா | ௨௬௫ |
| வனேகின் | ௨௦௭ | விழுமிதா | ௨௬௧ | வேளுடல் | ௨௮௪ |
| வன்னிதா | ௨௯௪ | விளம்புவா | ௧௭௯ | வேறிலத்து. | ௧௯௦ |


## பிரமகீதை பாட்டுமுதற்குறிப்பகராதி

## முற்றிற்று.

# பரிசோதனப் பத்திரம்.

## தமிழ் மான்மியம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௮ | — | ௬ | கிச்ஜ | கிஜ |
| ௧௪ | | ௨௫ | குமாா | குமார |
| | | | **ஈசுரகீதை.** | |
| ௫ | ௨௧ | ௪ | யெயுது | யெய்து |
| ௮ | ௨௦ | ௪ | யறியா | மறியா |
| ௧௨ | ௪௯ | ௧ | மயரர் | யமரர் |
| ௧௪ | ௭ | ௪ | லோ | லோர் |
| ௧௫ | ௧௩ | ௨ | மிகுத்து | மிகுத்துமி |
| ௨௦ | ௯ | ௩ | மமா | மமர் |
| ஷை | ௧௦ | ௧ | த்தாம் | ந்தாம் |
| ௨௨ | ௧௮ | ௨ | பொறு | பொரு |
| ௨௬ | ௫ | ௩ | வளைத் | வனைத் |
| ஷை | ௧௦ | ௩ | யிாமக | யிர்மகி |
| ௩௨ | ௩ | ௩ | மண்டம | மண்டம் |
| ௩௯ | ௧௩ | ௩ | காசன | காசன் |
| ௪௬ | ௪௧ | ௩ | ரமமாம | ரமமாம் |
| ஷை | ஷை | ஷை | யுளள | யுள்ள |
| | | | **பகவற்கீதை.** | |
| ௫௭ | | ௭ | களை | கள்பொருட்டு |
| ௬௨ | — | ௫ | எண்றெ | என்றெ |
| ௭௧ | | ௨௧ | ெ ளண | கௌண |
| ௮௯ | ௨௭ | ௪ | யென்று | யன்று |
| ௯௩ | ௫ | ௪ | போனம் | போன்ம் |
| ௯௬ | ௪ | ௧ | ளிநின் | ளினின் |
| | | | **பிரமகீதை.** | |
| ௧௮௦ | ,, | ௨௮ | ன்பசொ | ன்மசொ |
| ௧௯௦ | ௧௭ | ௨ | மையின் | மையினு |
| ௧௯௩ | ௩௫ | ௪ | மிகவங் | மிகவுங் |
| ௨௭௯ | ,, | ௫ | மில ன் | மிலான் |
| ௨௮௦ | ,, | ௨௨ | ல், துவே | ல், இதுவே |
| ௨௮௫ | ௨௫ | ௫ | மகிழ் | மிகழ் |
| ௨௮௭ | ,, | ௧௪ | பாமெ | பரமெ |
| ௨௯௬ | ,, | ௩௪ | ஆக்ஞாயய | ஆக்ஞாபய |
| ௩௦௫ | ,, | ௧௪ | ஆஞென் | அஞென் |

கணபதி துணை.

சைவபுராணங்களுள் ஒன்றாகிய

## வராகபுராணத்திலுள்ள

# பகவற்கீதா மான்மியம்.

ஶௌநக உவாச.

கீதாயாஶ்சைவ மாஹாத்ம்யம் யதாவத்ஸூத மே வத |
புராணமுநிநா ப்ரோக்தம் வ்யாஸேந ஶ்ருதிநோதிதம் ||

(இதன் பொருள்.) சௌநகரென்னும் ஒருமுனிவர் சூதமஹாரிஷியைப்பார்த்து உமக்குப் பெரிதான தபோபல முதலியவற்றையுடைய ஆதியான ஸ்ரீவியாசராற் சொல்லப்பட்டதாயிருக்கிற ஸ்ரீ பகவற்கீதையினது மான்மியத்தைக் கேட்டபடியே எனக்குச் சொல்ல வேண்டுமென்று வினவினார். எ-று. (௧)

ஸூத உவாச.

ப்ருஷ்டம் வை பவதா யத்தந் மஹத்குஹ்யம் புராதநம் |
ந கேந ஶக்யதே வக்தும் கீதாமாஹாத்ம்யமுத்தமம் ||

(இ-ள்.) சூதமுனி சொல்லுகிறார். வாரீர் ரிஷியே! நீர் யாதொரு கீதையின் மான்மியத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டீரோ அது அதிகமான பெருமையுள்ளதாயும், இரகசியமாயும், புராதநமாயும், உத்தமமாயுமுள்ளது; கீதையின் மான்மியத்தை வர்ணிக்க எவன் வல்லவனோ அவன் ஒருவனுமாகான். எ-று. (௨)

க்ருஷ்ணோ ஜாநாதி வை ஸம்யக் க்வசித்கௌந்தேய ஏவ ச |
வ்யாஸோ வா வ்யாஸபுத்ரோ வா யாஜ்ஞவல்க்யோऽத மைதிலः ||

(இ-ள்.) அந்த மான்மியத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவானே நன்றாயறிந்தவராவார்; ஒருகால் அருச்சுநனும் அறிவான்; வியாசபகவானும், சுகரும், யாக்கியவல்கியரும், ஜநகமஹாராஜனும் அறிவார்கள். எ-று.

அந்யே ச்ரவணதச் ச்ருத்வா லோகேப்ய: கீர்த்தயந்தி ச |
தஸ்மாச் சிக்ஷிதமஸ்மாபிர் வ்யாஸஸ்யாஸ்யாந் மயா ச்ருதம் ||

(இ-ள்.) மற்றும்பேர்களோ காதால் கேள்விப்பட்டு வர்ணித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். ஆதலால் ஸ்ரீ வியாசருடைய முகாரவிந்தத்தால் நான் கேட்டிருக்கிறதைக் கொஞ்சஞ் சொல்லுகிறேன்; நீர் கேளும். எ-று. (ச)

ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபாலநந்தந: |
பார்த்தோ வத்ஸ: ஸுதீர் போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத் ||

(இ-ள்.) சகல உபநிஷத்தங்களும் பசுக்களாம், ஸ்ரீ கிருஷ்ணபகவானனவர் கறக்கிறவராம், அருச்சுநன் கன்றாம், பிரமஜிஞ்ஞாஸையுள்ளபுத்திமானே அநுபவிக்கிறவனும், பாலானது பெருமையுள்ள தேவாமுதத்திற்கு ஒப்பாகிய கீதையாம். எ-று. (ரு)

ஸாரத்யமர்ஜுநஸ்யாஜௌ குர்வந் கீதாம்ருதம் ததௌ |
லோகத்ரயோபகாராய தஸ்மை க்ருஷ்ணாத்மநே நம: ||

(இ-ள்.) யுத்தத்தில் அருச்சுநனுக்குத் தேர்ப்பாகனாயிருந்துகொண்டு யாவர் சகல லோகங்களுக்கும் உபகாரமாக அமுதத்திற் கொப்பாகிய கீதையை உபதேசித்தாரோ, அந்தக் கிருஷ்ணனென்னுந் திருநாமமுடைய உமக்கு நமஸ்காரம். எ-று. (சா)

ஸம்ஸாரஸாகரம் கோரம் தர்த்துமிச்சதி யோ நர: |
கீதாநாவம் ஸமாஸாத்ய பாரம் யாதி ஸுகேந ஸ: ||

(இ-ள்.) யாவனொருவன் கோரமான ஜநநமரணரூபமாகிய சம்சார சமுத்திரத்தைக் கடத்தற்கு இச்சிப்பானோ அவன் கீதையாகிய தோணியின்மேலேறி அநாயாசமாக அதன்கரையையடையாநிற்பன். எ-று. (எ)

கீதாஜ்ஞாநம் ச்ருதம் நைவ ஸதைவாப்யாஸயோகத: |
மோக்ஷமிச்சதி மூடாத்மா யாதி பாலகஹாஸ்யதாம் ||

(இ-ள்.) யாவனொருவன் எப்பொழுதும் கீதாசம்பந்தியான ஞானத்தை அப்பியாசயோகத்தால் கேளாமல் மோக்ஷமடைய விரும்புகிறானோ அந்தமூடன் பாலனைப்போல நகைத்தலுக் கேதுவாவான். எ-று. (அ)

யே ஶ்ருண்வந்தி படந்த்யேவ கீதாஶாஸ்த்ரமஹர்நிஶம் |
ந தே வை மாநுஷா ஜ்ஞேயா தேவரூபா ந ஸம்ஶய꞉ ||

(இ-ள்.) யாவனொருவர் கீதாசாஸ்திரத்தை இராப்பகலாகச் சிரவணபடனஞ் செய்கின்றார்களோ அவர்கள் மநுஷியரல்லர். தேவர்களே; இதிற் சந்தேகமே இல்லை. எ-று. (௯)

கீதாஜ்ஞாநேந ஸம்போதம் க்ருஷ்ண꞉ ப்ராஹார்ஜுநாய வை |
அஷ்டாதஶபதஸ்தாநம் கீதாத்யாயே ப்ரதிஷ்டிதம் ||

(இ-ள்.) ஸ்ரீ பகவான் அருச்சுநனைக் கீதையின் ஞாநத்தால் சொரூபஞாந முள்ளவனாகச் செய்து கீதையினது ஒவ்வொரு அத்தியாயத்தில் பதினெண்பதமான யாதொரு விஷ்ணுவுண்டோ அவரது ஸ்தாநமான பரமபதத்தைத் தாபித்தனர். எ-று. (௧௦)

மோக்ஷஸ்தாநம் பரம் ப்ராஹு꞉ ஸகுணம் வாத நிர்குணம் |
ஸோபாநாஷ்டாதஶைரேவம் பரம் ப்ரஹ்மாதிகச்சதி ||

(இ-ள்.) வாராய் அருச்சுநா! மோக்ஷ ஸ்தானமானது சகுணமும், நிர்க்குணமுமாகும்; நான் சொல்லியபடி இந்தப் பதினெட்டுக் கிரமங்களால் பரப்பிரமத்தை அடைகிறானென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருளிச்செய்தனர். எ-று. (௧௧)

மலநிர்மோசநம் பும்ஸாம் ஜலஸ்நாநம் திநே திநே |
ஸக்ருத்கீதாம்பஸி ஸ்நாநம் ஸம்ஸாரமலநாஶநம் ||

(இ - ள்.) புருஷர்களுக்குத் திநந்தோறும் ஜலஸ்நானமானது தேகத்தின் அழுக்கைப்போக்கக் காரணமாயிருக்கிறது. அதுபோல ஒருகால் கீதாசாஸ்திரமாகிற ஜலஸ்நாநமானது ஜநநமரணரூபமான சம்சாரமலத்தை நாசம் செய்கிறதாயிருக்கிறது. எ-று. (௧௨)

கீதாஶாஸ்த்ரஸ்ய ஜாநாதி படநம் நைவ பாடநம் |
பரஸ்மாந்ந ஶ்ருதம் ஜ்ஞாநம் ஶ்ரத்தா ந பாவநா ததா ||
ஸ ஏவ மாநுஷே லோகே மோககர்மகரோ பவேத் |
யஸ்மாத் கீதாம் ந ஜாநாதி நாதம꞉ தத்பரோ ஜந꞉ ||

(இ-ள்.) கீதா சாஸ்திரத்தைப் படித்தலும், படிப்பித்தலும் அறியாதவனும், பிறரிடத்தினின்றும் அதின் ஞாநத்தைக் கேளாதவனும்,

அதில் விசுவாசமில்லாதவனுமான புருஷாதமனே, இந்த மநுஷ்ய லோகத்தில் பிறந்த ஊர்ப்பன்றியாம். எவன் கீதையை அறியவில்லையோ அவனைப்பார்க்கிலும் வேறான அதமனே இல்லை. எ-று. (கங-கச)

திக் தஸ்ய மாநுஷம் தேஹம் விஜ்ஞாநம் குலசீலதாம்।
கீதார்த்தம் நவிஜாநாதி நாதமஸ்தத்பரோ ஜந:॥

(இ-ள்.) எவன் கீதையின் அர்த்தத்தை அறியவில்லையோ அவனுடைய மாநுடதேகத்தை நிந்திக்கவேண்டும். அவனுடைய ஞாநத்தையும், நற்குலத்தன்மையையும் நிந்திக்கவேண்டும். அவனைப்பார்க்கிலும் வேறான அதமனே இல்லை. எ-று. (கரு)

திக் சரீரம் சுபம் சீலம் விபவம் தத்க்ருஹாச்ரமம்।
கீதாசாஸ்த்ரம் நஜாநாதி நாதமஸ்தத்பரோ ஜந:॥

(இ-ள்.) கீதாசாஸ்திரம் அறியாதவனுடைய நல்ல அழகையும், நடத்தையையும், வீடு, ஆச்சிரமம், மஹத்துவம் ஆகிய இவைகளையும் நிந்திக்கவேண்டும். எ-று. (கசு)

திக் ப்ராரப்தம் ப்ரதிஷ்டாம் ச பூஜாம் மாநம் மஹத்தமம்।
கீதாசாஸ்த்ரே ரதிர்நாஸ்தி ஸர்வம் தந்நிஷ்பலம் ஜகு:॥

(இ-ள்.) எவனுக்குக் கீதையில் பிரீதியில்லையோ அவனுடைய புத்திசாமர்த்தியமும், யஜசும், பூஜையும், மஹாத்மாவாயிருத்தலும், மானமும் ஆகிய சகலமும் பிரயோஜனமற்றவையென்று சொல்லுவர் பெரியோர்கள். எ-று. (கஎ)

திக் தஸ்ய ஜ்ஞாநமாசாரம் வ்ரதம் சேஷ்டாம் தபோ யச:।
கீதார்த்தபடநம் நாஸ்தி நாதமஸ்தத்பரோ ஜந:॥

(இ-ள்.) கீதையினுடைய அர்த்தத்தைப் படியாதவனுடைய ஞாநம், ஆசாரம், விரதம், சேஷ்டை, தபசு, யஜசு இவை பிரயோஜனமல்லாதவை; அந்தப் புருஷனுக்கு வேறான அதமனே இல்லை. எ-று.()

கீதாகீதம் நயஜ்ஜ்ஞாநம் தத்வித்த்யாஸுரஸம்ஜ்ஞகம்।
தந்மோகம் தர்மரஹிதம் வேதவேதாந்தகர்ஹிதம்॥

(இ-ள்.) கீதையினால் சொல்லப்படாத யாதொரு ஆருகதமுதலான மோஹசாஸ்திர ஞாநமுண்டோ அதை ஆசுரமென்று பெயரு

டையதாக அறியும் தருமமில்லாததாயும், வேதவேதாந்தங்களால் நிந்திக்கப்பட்டதாயுமுள்ள காவியமுதலானவைகளால் உண்டாகும் ஞானம் கொஞ்சங்கூடப் பயன்படாது. எ-று. (௧௯)

ஸர்வஶாஸ்த்ரமயீ கீதா ஸர்வஜ்ஞானப்ரயோஜிகா।
ஸர்வஶாஸ்த்ரஸாரபூதா தஸ்மாத் கீதா விஶிஷ்யதே॥

(இ-ள்.) கீதையானது தருமரூபமானதாலும், உலகத்திலிருக்கிற ஞானமனைத்தையும் பிரயோஜனத்தோடு கூடும்படி செய்கிறதாலும், சகல சாஸ்திர உருவமானதாலும், மிகவும் ஸ்துதி செய்யப்படுகின்றது. எ-று. (௨௦)

யோऽதீதே ஸததம் கீதாம் திவாராத்ரௌ யதார்த்ததஃ।
ஸ்வபந் கச்சந் வதம்ஸ்திஷ்டந் ஶாஶ்வதம் மோக்ஷமாப்நுயாத்॥

(இ-ள்.) இராப்பகலாக எப்பொழுதும் அர்த்தத்துடன் படித்துக் கொண்டவனும், நடக்கிறவனும், பேசுகிறவனும், நிற்கிறவனுமாயிருந்துகொண்டு கீதையையே அத்தியயநம் செய்கிற புண்ணியசாலி அழிவில்லாத மோக்ஷத்தை யடைவன். எ-று. (௨௧)

ஸாலக்ராமஶிலாக்ரே வா தேவாகாரே ஶிவாலயே।
தீர்த்தே நத்யாம் படேத் கீதாம் வைகுண்டம் யாதி நிஶ்சிதம்॥

(இ - ள்.) சாளக்கிராமத்தின் முன்னேயிருந்தும் தேவாலயம், சிவாலயம், புண்ணியதீர்த்தம், நதி இப்படிப்பட்ட தானங்களிலிருந்தும் கீதையைப் பாராயணம் செய்பவன் வைகுண்டலோகத்தை அடைகிறான் இது நிச்சயம். எ-று. (௨௨)

தேவகீநந்தநஃ க்ருஷ்ணோ கீதாபாடேந துஷ்யதி।
யதா ந வேதைர்தாநேந யஜ்ஞதீர்த்தவ்ரதாதிபிஃ॥

(இ - ள்.) ஸ்ரீ தேவகியென்கிற பாக்கியவதியின் புத்திரரான கிருஷ்ணபகவான் கீதாபாடத்தினால் எப்படிச் சந்தோஷமடைகிறாரோ அப்படி நான்குவேதம், கோதாநமுதலிய தாநம், யாகம், கங்கையாதிதீர்த்தஸ்நாநம், கிருச்சிரமுதலான விரதம் இவைமுதலானவைகளாற் சந்தோஷப்படமாட்டார். எ-று. (௨௩)

கீதாऽதீதா ச யேநாபி பக்திபாவேந சேதஸா।
தேந வேதாஶ்ச ஶாஸ்த்ராணி புராணாநி ச ஸர்வஶஃ॥

(இ-ள்.) எவனாலே பக்தியுள்ள மனதுடன் கீதை பாராயணம் செய்யப்பட்டதோ அவனால் வேதம், சாஸ்திரம் புராணம் இவைகள் அத்தியயநம் செய்யப்பட்டதற்குச் சமானங்களாம். எ-று. (உ௫)

யோகிஸ்தாநே ஸித்தபீடே ஶிலாக்ரே ஸத்ஸபாஸு ச |
யஜ்ஞே ச விஷ்ணுபக்தாக்ரே படந் ஸித்திம் பராம் லபேத் ||

(இ - ள்.) யோகிகளின் வாசஸ்தானத்திலும், விந்தியேஸ்வரிமுதலான சித்தபீடங்களிலும், யோக்கியர்களின் முன்பாகவும், பெரியோர்களுடைய சபைகளிலும், யாகத்திலும், விஷ்ணுபக்தன் முன்பாகவும் கீதையைப் படிக்கிறவன் பரகதியடையாநிற்பன். எ-று. (உ௬)

கீதாபாடம் ச ஶ்ரவணம் ய: கரோதி திநே திநே |
க்ரதவோ வாஜிமேதாத்யா: க்ருதாஸ்தேந ஸதக்ஷிணா: ||

(இ-ள்.) எவன் தினந்தோறும் கீதையினுடைய பாடம், சிரவணம் இவைகளைச் செய்கிறானோ அவனால் அசுவமேதமுதலான யாகங்கள் தக்ஷிணைசகிதமாகச் செய்யப்பட்டனவாம். எ-று. (உ௭)

ய: ஶ்ருணோதி ச கீதார்த்தம் கீர்த்தயேச்ச ஸ்வயம் பரம் |
ஶ்ராவயேச்ச பரார்த்தம் வை ஸ ப்ரயாதி பரம் பதம் ||

(இ-ள்.) எவன் கீதையினுடைய அர்த்தத்தைக் கேட்கிறானோ, அல்லது சொல்லுகிறானோ, பிறர்க்குக்கேட்கும்படி செய்விக்கிறானோ அவன் அடையவேண்டியவை எல்லாவற்றிலும் சிறந்ததான பரமபதவியை அடையாநிற்பன். எ-று. (உஅ)

கீதாயா: புஸ்தகம் ஶுத்தம் யோர்பயேத் ஸாதரம் |
விதிநா பக்திபாவேந தஸ்ய புண்யபலம் ஶ்ருணு ||

(இ-ள்.) எவன் கீதாபுஸ்தகத்தை ஆதரவோடும், பக்தியோடும், விதியோடும் நித்தியம் பூஜைசெய்கிறானோ அவனுடைய புண்ணிய பலத்தைச் சொல்லுகிறேன் கேளும். எ-று. (உ௯)

ஸகலாம் ஸாப்ராம் தேந தத்தா யஜ்ஞே மஹீ க்ருதா |
வ்ரதாநி ஸர்வதீர்த்தாநி தாநாநி விவிதாநி ச ||

(இ-ள்.) அவனால் வேள்வியில் தாநயபூரணமான சகலபூமியும், விரதங்களும், தீர்த்தங்களும், இன்னும் அநேகமான தானமுஞ் செய்யப்பட்டனவாம். எ-று. (உக)

பூதப்ரேதபிஶாசாத்யா தஸ்மின் நைவ விஶந்தி வை।
அபிசாரோத்பவம் து:கம் பரேணாபி க்ருதம் ச யத்॥

(இ-ள்.) அவனிடத்தில் பூதம், பிரேதம், பிசாசு முதலானவைகளும் சத்துருவால் செய்யப்பட்ட ஏவல்முதலான துஷ்டமந்திரப் பிரயோகத்தாலேற்பட்ட துக்கமும் பிரவேசிக்கமாட்டாவாம். எ-று. ()

நோபஸர்பந்தி தத்ரைவ யத்ர கீதார்சனம் க்ருஹே।
தாபத்ரயோத்பவா பீடா நைவ வ்யாதிபயம் ததா॥

(இ-ள்.) எந்தக்கிரகத்தில் கீதையின் பூஜை நடக்கிறதோ அந்த வீட்டில் அத்தியான்மீகமுதலான முத்தாபங்களா லுண்டான பீடையும், ரோகபயமும் பிரவேசியாவாம். எ-று. (௰௧)

நஶாபம் நைவ பாபஞ்ச துர்கதிம் நரகம் ந ச।
தேஹே ஹ்யரய: ஷடேதே வை நபாதந்தே கதாசன॥

(இ-ள்.) அவனை சாபம், பாவம், கெட்டநரகம், காமாதி அரிஷட்வர்க்கம் அல்லது, ஞானேந்திரியம்-ரு, மனம்-க ஆக ஆறுபகைகளும் கெடுதிசெய்யா. எ-று. (௰௨)

பகவத்பரமேஶாநே பக்திரவ்யபிசாரிணீ।
ஜாயதே ஸததம் தத்ர யத்ர கீதாபிநந்தநம்॥

(இ-ள்.) கீதையைச் சிலாகிக்குமிடத்தில், ஸ்ரீ பகவானாகிய பரமேசுவரனிடத்தில் வியபிசாரமில்லாத பக்தியுண்டாகும்.எ-று. (௰௩)

ப்ராரப்தம் புஜ்யமாநோபி கீதாப்யாஸரத: ஸதா।
ஸ முக்த: ஸ ஸுகீ லோகே கர்மணா நோபலிப்யதே॥

(இ-ள்.) கீதையினது அப்பியாசத்திலேயே எப்பொழுதும் பிரியமுள்ளவன் பிராரத்தத்தை அநுபவித்தாலும் அவன் முக்தனும், சுகியுமாம்: உலகத்தில் கன்மத்தால் பந்திக்கப்படான். எ-று. (௰௪)

மஹாபாபாதிபாபாநி கீதாத்யாயீ கரோதி சேத்।
ந கிஞ்சித் ஸ்ப்ருஶ்யதே தஸ்ய நளிநீதளமம்பஸா॥

(இ - ள்.) கீதாபாராயணம் செய்பவன் பிரமஹத்திமுதலான கொடியபாவங்களைச் செய்வனாயினும் அந்தப் பாவங்களினால் தாமரையிலையைச் சலமானது பற்றாததுபோலக் கொஞ்சமாகிலும் பரிசிக்கப்படான். எ-று. (௰௫)

𑌸𑍍𑌨𑌾𑌤𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾𑌽𑌸𑍍𑌨𑌾𑌤𑌃 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾𑌽𑌶𑍁𑌚𑌿𑌃 ।
𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌸𑌂𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌶𑍁𑌚𑌿𑌃 ॥

(இ-ள்.) ஸ்நாநம் செய்தவனானாலும், செய்யாதவனானாலும், சுத்தனாயிருந்தாலும், அசுத்தனாயிருந்தாலும் விபூதியோக அத்தியாயத்தையும், விசுவரூபதரிசன அத்தியாயத்தையும் நினைக்கிறவன் எப்பொழுதுஞ் சுத்தனாவன். எ-று. (௧௬)

𑌅𑌨𑌾𑌚𑌾𑌰𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌅𑌵𑌾𑌚𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑍃𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍 ।
𑌅𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌭𑌕𑍍𑌷𑌜𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌅𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌜𑌂 𑌤𑌥𑌾 ॥
𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌤𑌕𑍃𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑍍𑌜𑌨𑌿𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍 ।
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑌾𑌶𑌮𑌾𑌯𑌾𑌤𑌿 𑌗𑍀𑌤𑌾𑌪𑌾𑌠𑍇𑌨 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 ॥

(இ-ள்.) ஆசாரமின்மையினாலும், சொல்லத்தகாதவைகளைச் சொன்னதனாலும், புசிக்க யோக்கியமாகாதவைகளைப் புசித்ததனாலும், தொடத்தகாததைத் தொட்டதனாலும், அறிந்தும் அறியாமலும் செய்யப்பட்டவைகளாலும், நேத்திரமுதலான இந்திரியங்களாலும் உண்டாகிய சகல தோஷமும் கீதையைப்படித்த கணப்பொழுதிலேயே அதிசீக்கிரத்தில் நாசமடையாநிற்கும். எ-று. (௧௭-௧௮)

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌾𑌹𑍀 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌗𑍀𑌤𑌾𑌪𑌾𑌠𑌂 𑌪𑍍𑌰𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑍋 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑍇𑌤 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥

(இ-ள்.) கீதையைப் பாடம் கேட்கிறவன் எந்தவிடத்தில் போஜனஞ்செய்தாலும், எந்தவிடத்தில் பிரதிக்கிரகம் வாங்கினாலும் அந்தந்தத்தோஷங்களால் வியாபிக்கப்படமாட்டான். எ-று. (௧௯)

𑌰𑌤𑍍𑌨𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌂 𑌮𑌹𑍀𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌤𑌃 ।
𑌗𑍀𑌤𑌾𑌪𑌾𑌠𑍇𑌨 𑌚𑍈𑌕𑍇𑌨 𑌶𑍁𑌦𑍍𑌧𑌃 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌵𑌤𑍍𑌸𑌦𑌾 ॥

(இ-ள்.) அதிகமான சாஸ்திரவிதிப்படி இரத்தினங்களால் பூரணமான சமஸ்தபூமியையும் தானம் வாங்கினாலும் ஒருதரம் கீதாபாடத்தால் ஸ்படிகம்போல எப்போதும் சுத்தனாயிருப்பன். எ-று. (௨௦)

𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌗𑍀𑌤𑌾𑌯𑌾𑌂 𑌰𑌮𑌤𑍇 𑌸𑌦𑌾 ।
𑌸𑌾𑌗𑍍𑌨𑌿𑌕𑌃 𑌸𑌦𑌾𑌜𑌾𑌪𑍀 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌾𑌨𑍍 𑌸 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 ॥

(இ-ள்.) எவனுடைய மனது கீதையிலேயே எப்போதும் ஆனந்தமுடையதாயிருக்கிறதோ அவன் அக்கினிஹோத்திரமுள்ளவன், எப்

போதும் செபமுள்ளவன், நல்லகிரியையுடையவன், அவனே பண்டிதனும். எ-று. (௬௧)

தர்ஶநீயஸ்ஸ தநவாந் ஸயோகீ ஜ்ஞாநவாநபி।
ஸஏவ யாஜ்ஞிகோ த்யாநீ ஸர்வவேதார்த்ததர்ஶக:॥

(இ-ள்.) அவனே லோகங்களால் தரிசிக்கத்தகுந்தவன், அவனே தநவான், அவனே யோகி, அவனே ஞாநி, அவனே யாகஞ்செய்தவன், அவனே தியானமுடையவன், அவனே சகல வேதார்த்தமு மறிந்தவன். எ-று. (௬௨)

கீதாயா: புஸ்தகம் யத்ர நித்யம் பாடே ப்ரவர்த்ததே।
தத்ர ஸர்வாணி தீர்த்தாநி ப்ரயாகாதீநி தத்ர வை॥

(இ-ள்.) எவ்விடத்தில் கீதாபுஸ்தகம் நித்தியம் பாடத்தில் பிரவர்த்திக்கிறதோ அவ்விடத்தில் பூமியிலிருக்கிற பிரயாகைமுதலான சகலமான தீர்த்தங்களும் இருக்கின்றன. எ-று. (௬௩)

நிவஸந்தி ஸதா கேஹே தேஹதேஶே ஸதைவ ஹி।
ஸர்வே தேவாஶ்ச ருஷயோ யோகிந: பந்நகாஶ்ச யே॥
கோபாலோ பாலக்ருஷ்ணோऽபி நாரதத்ருவபார்ஷதை:।
ஸஹாயோ ஜாயதே ஶீக்ரம் யத்ர கீதா ப்ரவர்த்ததே॥

(இ-ள்.) எந்தவிடத்தில் கீதாபாடம் நடக்கிறதோ அந்தவீட்டிலும், அவனுடைய தேகத்திலும் சகலதேவதைகளும், இரிஷிகளும், யோகிகளும், சர்ப்பராஜாக்களும் எப்பொழுதும் வாசஞ்செய்கிறார்கள்; ஸ்ரீகிருஷ்ணபகவானே! நாரதர், துருவர், மற்றும் தமது கூட்டத்தாருடனே அந்தக் கீதாபாடஞ்செய்கிற புருஷனுக்குச் சீக்கிரஞ் சகாயமாகிறார். எ-று. (௬௪-௬௫)

யத்ர கீதாவிசாரஶ்ச படநம் பாடநம் ததா।
தத்ராஹம் நிஶ்சிதம் ப்ருத்வி நிவஸாமி ஸதைவ ஹி॥

(இ-ள்.) ஸ்ரீகிருஷ்ணபகவான் அருச்சுநனைப்பார்த்து வாராய் பார்த்தா! எவ்விடத்தில் கீதையினுடைய விசாரமும், படித்தலும், படிப்பித்தலும் நடக்கிறதோ அந்தவிடத்தில் எப்போதும் நான் வாசஞ்செய்கிறேன்; இது நிச்சயமென்று சொன்னார். எ-று. (௬௬)

கீதா மே ஹ்ருதயம் பார்த்த கீதா மே ஸாரமுத்தமம் |
கீதா மே ஜ்ஞானமத்யுக்ரம் கீதா மே ஜ்ஞானமவ்யயம் ||

(இ-ள்.) வாராய் அருச்சுனா! கீதையே எனக்கு இருதயம், எனக்கு உத்தமமான பலமும் கீதையே, சிலாக்கியமான வென்னுடைய ஞானமுங்கீதையே, அழிவற்ற வெனது ஞானமுங்கீதையே. எ-று. ()

கீதா மே சோத்தமம் ஸ்தானம் கீதா மே பரமம் பதம் |
கீதாஜ்ஞானம் ஸமாச்ரித்ய த்ரிலோகீம் பாலயாம்யஹம் ||

(இ-ள்.) கீதையே எனக்கு உத்தமமான இடம், அதுவே உத்தமமான வீடு, நான் கீதையின் ஞானத்தையடைந்து இம்மூன்று லோகங்களையும் பரிபாலனஞ்செய்கிறேன். எ-று. (௪௮)

கீதா மே பரமா வித்யா ப்ரஹ்மரூபா ந ஸம்சய: |
அர்த்தமாத்ராக்ஷரா நித்யா ஸ்வநிர்வாச்யபதாத்மிகா ||

(இ-ள்.) கீதையே எனது உத்தமமான வித்தை, கீதையே பிரமரூபம்: இதில் சந்தேகமில்லை; பிரமரூபியான வாக்கும் கீதையே: நாசமில்லாததும், நித்தியமானதும், வாக்குக்கெட்டாத பதமுடையதும் கீதையே. எ-று. (௪௯)

கீதாநாமானி வக்ஷ்யாமி குஹ்யானி ச்ருணு பாண்டவ |
கீர்த்தனாத் ஸர்வபாபானி விலயம் யாந்தி தத்க்ஷணாத் ||

(இ-ள்.) வாராய் பாண்டவனே! கீதையினுடைய இரகசியமான நாமங்களைச் சொல்லுகிறேன் கேள்; அவைகளைச் சொன்னால் சகலபாவங்களும் உடனே நசித்துப்போம். எ-று. (௫௦)

கங்கா கீதா ச காயத்ரீ ஸீதா ஸத்யா ஸரஸ்வதீ |
ப்ரஹ்மவித்யா ப்ரஹ்மவல்லீ த்ரிஸந்த்யா முக்தகேஹினீ |
அர்த்தமாத்ரா சிதானந்தா பவக்னீ பவநாசினீ |
வேதத்ரயீ பராநந்தா தத்வார்த்தஜ்ஞானமஞ்ஜரீ ||
இத்யேதானி ஜபேந்நித்யம் நரோ நிச்சலமானஸ: |
ஜ்ஞானஸித்திம் லபேச்சீக்ரம் ததாந்தே பரமம் பதம் ||

[கீதைநாமம்—கஅ.]

(இ-ள்.) "கீதா-க, கங்கா-உ, காயத்திரீ-ந, ஸீதா-ச, சத்தியா-ரு, சரஸ்வதீ-சு, பிரமவித்தியா-எ, பிரமவல்லீ-அ, திரிசந்தியா-கூ, முக்த கேஹிநீ-கய, அர்த்தமாத்திரா-கக, சிதாநந்தா-கஉ, பவக்நீ-கந, பவநாசிநீ-கச, வேதத்திரயீ-கரு, பரா-கசு, அநந்தா-கஎ, தத்வார்த்த க்ஞாநமஞ்சரீ-கஅ" என்னும் இவைகளை அசைவற்ற மனமுள்ள மநுஷியன் செபஞ்செய்தால் சீக்கிரம் ஞாநசித்தியை யடைவன், முடிவில் மோட்சமுமடையாநிற்பன். எ-று. (ருக-ருஉ-ருந)

𑌪𑌾𑌠𑍇𑌽𑌸𑌮𑌰𑍍𑌥𑌃 𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑍇 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌪𑌾𑌠𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍।
𑌤𑌦𑌾 𑌗𑍋𑌦𑌾𑌨𑌜𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃॥

(இ-ள்.) முழுவதும் படிக்கமுடியாதவன் பாதியாவது படிக்க வேண்டும்; அப்பொழுது ஒரு கோதாநஞ்செய்த புண்ணியத்தை அடைகிறான்; இதில் சமுசயமில்லை. எ-று. (ருச)

𑌷𑌡𑌂𑌶𑌂 𑌜𑌪𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌗𑌙𑍍𑌗𑌾𑌸𑍍𑌨𑌾𑌨𑌫𑌲𑌂 𑌲𑌭𑍇𑌤𑍍।
𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌪𑌠𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌸𑍋𑌮𑌯𑌾𑌗𑌫𑌲𑌂 𑌲𑌭𑍇𑌤𑍍॥

(இ-ள்.) மூன்றிலொருபங்கு படித்தால் சோமயாகஞ்செய்த பலத்தையடைவன். ஆறில் ஒருபங்கு படித்தால் கங்காஸ்நாநபலத்தையடைவன். எ-று. (ருரு)

𑌤𑌥𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌦𑍍𑌵𑌯𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌠𑌮𑌾𑌨𑍋 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌮𑍍।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌲𑍋𑌕𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌲𑍍𑌪𑌮𑍇𑌕𑌂 𑌵𑌸𑍇𑌦𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍॥

(இ-ள்.) நித்தியமும் இரண்டத்தியாயம் நியமமாகப் பாராயணஞ் செய்கிறவன் இந்திரலோகத்தையடைந்து ஒருகற்பகாலம் வசிப்பன்; இதுநிச்சயம். எ-று. (ருசு)

𑌏𑌕𑌮𑌧𑍍𑌯𑌾𑌯𑌕𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌠𑌤𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌃।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌲𑍋𑌕𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌗𑌣𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌵𑌸𑍇𑌚𑍍𑌚𑌿𑌰𑌮𑍍॥

(இ-ள்.) பக்தியுடனே ஓரத்தியாயம் நித்தியம் படித்தவன் உருத்திரலோகத்தை அடைந்து சிவகணமாகி நெடுநாள் வசிப்பன். எ-று. ()

𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌧𑌂 𑌚 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌃 𑌪𑌠𑌤𑍇 𑌜𑌨𑌃॥
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌰𑌵𑌿𑌲𑍋𑌕𑌂 𑌸 𑌮𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌸𑌮𑌾𑌃 𑌶𑌤𑌮𑍍॥

(இ-ள்.) ஓரத்தியாயத்தின் பாதியையாவது நாலில் ஓர்பாகத்தை யாவது நித்தியம் படிக்கிறவன் சூரியலோகத்தில் நூறுமநுவந்தர கற்பம் வசிப்பன். எ-று. (ருஅ)

ஸ்ரீகீதாயா ஶ்லோகதஶகம் ஸப்தபஞ்சசதுஷ்டயம்|
த்ரிக்விஏகமேகார்த்தம்வா ஶ்லோகாநாம் யப்படேந்நர:|
சந்த்ரலோகமவாப்நோதி வர்ஷாணாமயுதம் த்ருவம்||

(இ - ள்.) கீதையினது பத்துசுலோகத்தையாவது, அல்லது, எ-ரு-ச-ந-உ-க-ற-இவைகளையாவது படிப்பவன் பத்துக்கோடி வருஷம் சந்திரலோகத்திலே வாசஞ்செய்வான். எ-று. (ருக)

ஸ்ரீகீதார்த்தமேககாலேவா ஶ்லோகமத்யாயமேவ வா|
ஸ்மரம்ஸ்த்யக்த்வா ஜநோதேஹம் ப்ரயாதி பரமம்பதம்||

(இ-ள்.) ஒருகாலத்திலாவது கீதையின் அர்த்தத்துடன் ஒரு சுலோகத்தையாவது, ஓரத்தியாயத்தையாவது நினைத்துக்கொண்டே தேகத்தைவிட்டவன் பரமபதமாகிய மோக்ஷமடைவன். எ-று. (சுo)

ஸ்ரீகீதார்த்தமபிவாபி யோ ப்ரூயாத்தகாலத:|
மஹாபாதகயுக்தோபி முக்திபாகீபவேஜ்ஜந:||

(இ-ள்.) மரணகாலத்தில் கீதையினது அர்த்தத்தையாவது, பாராயணசத்தத்தையாவது கேட்கிற மகாபாவியும் மோக்ஷமடைவன். எ-று. (சுக)

ஸ்ரீகீதாபுஸ்தகஸம்யுக்த: ப்ராணாம்ஸ்த்யக்த்வா ப்ரயாதிய:|
ஸவைகுண்டமவாப்நோதி விஷ்ணுநாஸஹமோததே||

(இ-ள்.) கீதாபுஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டிருந்தபடியே மரணமடையும் புருஷன் வைகுண்டத்தையடைந்து விஷ்ணுவோடு கூடவிருந்து சந்தோஷமடையாநிற்பன். எ-று. (சுஉ)

ஸ்ரீகீதாத்யாயஸம்யுக்தோ ம்ருதோமாநுஷதாம் வ்ரஜேத்|
ஸ்ரீகீதாப்யாஸமாஸாத்ய ததோமுக்திமுத்தமாம்||

(இ-ள்) கீதையினுடைய ஓரத்தியாயத்துடன் மரணமடைந்தவன் மறுபடி மநுஷியனாகப்பிறந்து கீதையின் அப்பியாசத்தால் மறுபடி மீளுதலில்லாத முத்தியை அடையாநிற்பவன். எ-று. (சுந)

கீதோச்சாரணஸம்யுக்தோ ம்ரியமாணோ கதிம் லபேத்||

(இ-ள்.) கீதையினுடைய உச்சாரணத்துடன் தேகவியோகமடைந்தவன் நல்லகதியையே அடையாநிற்பன். எ-று. (௧௪)

யத்யத்கர்ம ச ஸர்வத்ர ஸ்ரீகீதாபாடம் ப்ரகீர்த்தயேத்|
தத்தத்கர்ம ச நிர்தோஷம் க்ருத்வா பூர்ணமவாப்நுயாத்||

(இ-ள்.) உலகத்தில் எந்த எந்தக் கர்மங்களை எவன் எவன் செய்தாலும் அப்போது கீதாபாராயணம் நடந்தால் அந்த அந்தக் கன்மங்களுடைய பூரணபலத்தைக் குற்றமின்றிச் செய்தவன்போல் அடையாநிற்பன். எ-று. (௧௫)

பித்ருநுத்திஸ்ய யஸ்ஸ்ராத்தே ஸ்ரீகீதாபாடம் கரோதி வை|
ஸந்துஷ்டா: பிதரஸ்தஸ்ய நிரயாத்யாந்தி ஸத்கதிம்||

(இ-ள்.) சிராத்தத்தில் பிதிர்க்களை உத்தேசித்துக் கீதைபாராயணம் பண்ணுகிறவனுடைய பிதிர்க்கள் நரகத்திலிருந்தாலும் விடுபட்டு நற்கதி அடைவார்கள். எ-று. (௧௬)

ஸ்ரீகீதாபாடேந ஸந்துஷ்டா: பிதர: ஸ்ராத்ததர்ப்பிதா:|
பித்ருலோகம் ப்ரயாந்த்யேவ புத்ராஸீர்வாததத்பரா:||

(இ-ள்.) சிராத்தத்தில் கீதைபடித்ததால் திருப்தியடைந்த பிதிர்க்கள் புத்திரனை வாழ்த்திக்கொண்டு பிதிர்லோகத்தை அடைகிறார்கள். எ-று. (௧௭)

ஸ்ரீலிகித்வா தாரயேத்கண்டே பாஹுதண்டே ச மஸ்தகே|
நஸ்யந்த்யுபத்ரவா: ஸர்வே விக்நரூபாஸ்ச தாருணா:||

(இ-ள்.) கீதையை எழுதிக் கண்டத்திலும், கையிலும், சிரசிலும் தரிக்கிற புருஷனுடைய கெடுதிரூபமான கோர உபத்திரவங்களும் நசிக்கும். எ-று. (௧௮)

ஸ்ரீகீதாபுஸ்தகதாநம் தேநுபுச்சஸமந்விதம்|
க்ருத்வா ச தத்விஜே ஸம்யக் க்ருதார்த்தோ ஜாயதே ஜந:||

(இ-ள்.) பசுவின் வாலுடன் கீதாபுத்தகத்தையும் பிடித்துக்கொண்டு நல்ல பிராமணனிடத்தில் கோதானம் செய்கிறவன் கிருதார்த்தனாகிறான். எ-று. (௧௯)

ஶுத்³த⁴சேதா நரோ யஸ்து கீ³தாம் ஸ்வர்ணஸமந்விதாம் |
த³த்³யாத்³விப்ராய விது³ஷே ஜாயதே ந புநர்ப⁴வே ||

(இ-ள்.) *சுத்தமான மனத்துடனிருக்கின்ற மனுஷியன் தங்கத்துடன் கீதாபுத்தகத்தை வித்துவானாயிருக்கிற பிராமணனுக்குக் கொடுத்தால் அவன் மறுபடி பிறவான். எ-று.* (எ௦)

ஶதபுஸ்தகதா³நம் ச கீ³தாயா: ப்ரகரோதி ய: |
ஸ யாதி ப்³ரஹ்மஸத³நம் புநராவ்ருத்திவர்ஜிதம் ||

(இ-ள்.) *கீதையினுடைய நூறுபுத்தகத்தைத் தானஞ்செய்தவன் மறுபடி மீளுதலில்லாத பிரமலோகத்தை அடையாநிற்பன். எ-று.* (எக)

கீ³தாதா³நப்ரபா⁴வேந ஸப்தகல்பமிதா: ஸமா: |
விஷ்ணுலோகமவாப்நோதி விஷ்ணுநா ஸஹ மோத³தே ||

(இ-ள்.) *கீதையின் தானப்பிரபாவத்தால் ஏழுகற்ப பரியந்தம் விஷ்ணுலோகத்தையடைந்து விஷ்ணுவோடுகூடச் சுகித்திருப்பான். எ-று.* (எஉ)

ஸம்யக் ஶ்ருத்வா ச கீ³தார்த²ம் புஸ்தகம் ய: ப்ரதா³பயேத் |
தஸ்மை ப்ரீத: ஶ்ரீப⁴க³வாந் த³தா³தி மாநஸேப்ஸிதம் ||

(இ-ள்.) *கீதையினுடைய அர்த்தத்தை நன்றாய்க்கேட்டுப் புத்தகத்தை எவன் தானஞ்செய்கிறானோ, அவனுக்குப் பிரியதனான, நான் அவன் மனத்தால் நினைத்ததைக் கொடுக்கிறேனென்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொன்னார். எ-று.* (எ௩)

தே³ஹம் மாநுஷமாஶ்ரித்ய சாதுர்வர்ண்யே து பா⁴ரத |
ந ஶ்ருணோதி பட²த்யேவ கீ³தாம்ருதரூபிணீம் ||

ஹஸ்தாத் த்யக்த்வாம்ருதம் ப்ராப்தம் கஷ்டாத் க்ஷ்வேலம் ஸமஶ்நுதே |
பீத்வா கீ³தாம்ருதம் லோகே லப்³த்⁴வா மோக்ஷம் ஸுகீ² ப⁴வேத் ||

(இ-ள்.) *மானுஷியதேகத்தையடைந்த பிராமணாதி நான்கு வருணத்திலும் பிறந்தவன் அமிர்தரூபியான கீதையைச் சிரவணம் படனஞ் செய்யாவிட்டால் கையிலிருக்கிற அமிர்தத்தைவிட்டுப் பிரயாசத்தால் விஷத்தைப் புசிக்கிறவனுக்குச் சமானமாவன்; உலகத்தில் கீதை*

யாகிற அமிர்தத்தைப் பானஞ்செய்தவன் மோக்ஷமடைந்து சுகியாவன். எ-று. (எச-எரு)

நரா ஸம்ஸாரது:கார்த்தா கீதாஜ்ஞாநஞ்ச யே ஶ்ருதம்|
ஸம்ப்ராப்தா அம்ருதம் தே ச கதா விஷ்ணுபதம் ஹரே:||

(இ-ள்.) ஜநநமரணரூபமான கோரசம்சார துக்கத்தால் பீடிக்கப் பட்டுக் கீதாஞானத்தைக் கேட்டவர்கள் அமிர்தமாகி விஷ்ணுலோகத்தை அடைவார்கள். எ-று. (எசு)

கீதாமாஶ்ரித்ய பஹவோ பூபுஜோ ஜநகாதய:|
நிர்தூதகல்மஷா லோகே கீதா யாதா: பரம்பதம்||

(இ-ள்.) ஜநகன்முதலிய வெகுராஜாக்கள் கீதையை அவலம்பித்துக்கொண்டு உலகத்தில் போக்கடிக்கப்பட்ட பாவமுள்ளவர்களாகப் பரமபதத்தை அடைந்தார்கள். எ-று. (எஎ)

கீதாஸு ந விஶேஷோஸ்தி ஜநேஷூச்சாவசேஷு ச|
ஜ்ஞாநேஷ்வேவ ஸமக்ரேஷு ஸமா ப்ரஹ்மஸ்வரூபிணீ||

(இ-ள்.) கீதாவிஷயத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவனென்று விசேஷமில்லை; ஞானமானது எங்கும் பூரணமா யிருக்கிறதால் பிரமரூபியான கீதையும் எங்குஞ் சமமாயிருக்கும். எ-று. (எஅ)

யோஸூயதி கீதாம் நிந்தாம் குர்வீத வா புந:|
ப்ராப்நோதி நரகம் கோரம் யாவதாஹூதஸம்ப்லவம்||

(இ-ள்.) கீதையில் அசூயை யுள்ளவன், நிந்தை செய்கிறவன், இவர்கள் பிரளயகாலம்வரையில் கோரமான நரகத்திருப்பார்கள். எ-று.

அஹங்காரேண மூடாத்மா கீதார்த்தம் நைவ மந்யதே|
கும்பீபாகேஷு பச்யேத யாவத்கல்பக்ஷயோ பவேத்||

(இ-ள்.) அகங்காரத்தால் கீதார்த்தத்தை வெகுமதியாத மூடன் கும்பிபாகமென்கிற நரகத்தில் கற்பகாலம்வரையில் போட்டப்பட்டுப் பாகம் பண்ணப்படுவன். எ-று. (அ0)

கீதார்த்தம் வாச்யமாநம் யோ ந ஶ்ருணோதி ஸமீபத:|
ஸ ஶூகரபவாம் யோநிம் அநேகாம் அவாப்நுயாத்||

(இ-ள்.) *சமீபத்தில் சொல்லப்படுகிற கீதையின் அர்த்தத்தை ஆதரவுடன் கேளாதவன் நாய், பன்றிமுதலிய அநேக யோநிகளில் பிறப்பன். எ-று.* (அக)

ஸாயம் க்ருத்வா ஸ்ரீகீதாயா: ஸாத்தஸம்யஸ்ஸோநயேத்|
நதஸ்யஸ்ரவணம் கிஞ்சித் ஸம்நஸ்வஸ்யாஸ்வேத்||

(இ-ள்.) *கீதையாகிய புத்தகத்தைத் திருடிப் படித்தவனுக்குப் பலமுமில்லை; பாராயணமும் வியர்த்தமாகும். எ-று.* (அஉ)

யஸ்ஸ்ருத்வாநைவ ஸ்ரீகீதாம் மோததே பரமார்த்தத:|
நைவாஸ்ய ஸ்ரமம் லோகே ஸ ஸாரார்த்தவஸ்யஸ:||

(இ-ள்.) *கீதையின் அர்த்தத்தைக் கேளாமல் வெறும் பாராயணஞ்செய்து சந்தோஷிக்கிறவன் பலமடையான், சிரமமும் வியர்த்தமாம். எ-று.* (அ—)

ஸ்ரீகீதாம் ஸ்ருத்வா ஹிரண்யம் வஸ்த்ரம் பாரவஸ்த்ரம் நம்|
நிவேதயேத் ஸதேஸ்வஸ்த்யை ப்ரீதயே பரமாத்மந:||

(இ-ள்.) *கீதையைக் கேட்டுப் பட்டுவஸ்திரத்தால் அலங்கரித்துத் தங்கத்தையும் வைத்துப் பரமான்மப் பிரீதியாக நிவேதநம் செய்ய வேண்டும். எ-று.* (அச)

வாசகம் பூஜயேத்பக்த்யா த்ரவ்யவஸ்த்ராத்யுபஸ்கரை:|
அநேகைர் பஹுதா ப்ரீத்யா துஷ்யதாம் பகவாநிதி||

(இ-ள்.) *கீதையின் அர்த்தஞ்சொன்ன ஆசாரியனைப் பகவானைப் போல் நினைத்து அந்தப் பகவான் திருப்தி யடைவனென்று பக்தியுடன் திரவியம், வஸ்திரமுதலிய உபசாரவஸ்துக்களாலும், நாநாவிதமான அந்நங்களாலுந் திருப்திசெய்து பூஜை செய்யவேண்டியது. எ-று.* (அரு)

ஸௌராஷ்ட்ரேவிதத ஸ்ரீகீதாயா: க்ருஷ்ணேந ப்ரோக்தம் ஸநாதநம்|
ஸ்ரீதாமேவம் தேயஸ்ய யஸ்யாத்ம ஸம்போஷ்யயாஸ:||

(இ-ள்.) ஸ்ரீ கிருஷ்ணபகவானால் சொல்லப்பட்ட புராதநமான இந்தக் கீதாமான்மியத்தைக் கீதைக்குமுடிவில் படிக்கிறவன், கீழ்ச் சொல்லிய பலத்தை அடையாநிற்பன். (அசு)

கீதாயா: படநம் க்ருத்வா மாஹாத்ம்யம் நைவ ய: படேத்|
வ்ருதா பாடஃலம் தஸ்ய ஸ்ரம ஏவ ஹி கேவலம்||

(இ-ள்.) கீதையைப் படித்தும் மான்மியத்தைப் படியாதவன் பலனடையான் சிரமமாத்திரந்தான். எ-று. (அஎ)

ஏதந்மாஹாத்ம்யஸம்யுக்தம் கீதாப்யாஸம் கரோதிய:|
ஸ ததா ஃலமாப்நோதி துர்லபாம் கதிமாப்நுயாத்||

(இ-ள்.) இந்த் மான்மியத்துடன் கீதையைப் பாராயணஞ் செய்கிறவர் அல்லது, விசுவாசத்துடன் கேட்கிறவர் இவர்கள் ஒருவராலும் அடையக்கூடாத நல்லகதியைத் தானே அடைவார்கள்.—எ-று. (அஅ)

ஸ்ருத்வா கீதாமர்த்தம் மாஹாத்ம்யம் ய: ஸ்ருணோதி வை|
தஸ்ய புண்யஃலம் லோகே ஸர்வஸௌக்யப்ரதம் பவேத்||

(இ-ள்.) கீதையைப் படித்து அர்த்தமுங் குருமுகமாகக் கேட்டு உடனே மான்மியத்தைக்கேட்கிறவன் உலகத்திலே மனதினுலிச்சித்த புண்ணியபலங்களை யடையாநிற்பன். எ-று. (அகூ)

இதி ஸ்ரீவராஹபுராணே

ஸூதஸௌநகஸம்வாதே

ஸ்ரீக்ருஷ்ணப்ரோக்தம்

ஸ்ரீ பகவத்கீதாமாஹாத்ம்யம்

ஸம்பூர்ணம்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் ஸ்ரீ வராஹபுராணத்தில் சூதருக்கும், சௌநகருக்கும் நடந்த சம்வாதரூபமான ஸ்ரீ கிருஷ்ணபகவானால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ பகவற்கீதையின் மான்மியம் முற்றுப்பெற்றது. எ-று. (கூ௦)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

(இ-ள்.) ஸ்ரீ கிருஷ்ணபகவானல் அருளிச்செய்யப்பட்ட கீதா மகிமையையுடைய பதினெண்புராணங்களுள் ஒன்ருகிய வராஹபுராணத்தினது சுலோகாகாரமாகிய முத்தாரத்தில் சிதம்பரம் ஸ்ரீ சிற்சபேசரது திருவருளை முன்னிட்டுக்கொண்டு (நேரியதாச்) செய்யப்பட்ட இந்தத் தமிழ்நூலாயான (கோவையான)து உலகத்தில் வசிக்கும் புத்தியுடையபுருஷர்களுக்கு(ப்பூண்டற்குரிய சோபை)வடத்துக்கொப்பனவாகும்.—எ-று. (கக)

சுபமஸ்து.

ஈசுரகீதை, பிரமகீதை இவ்விரண்டினுக்கும் மான்மியம் இவையேயாம். அவைகளின் விபரம் ஈசுரகீதையில் "எந்தையாகிய பராசரன் சனகனு லிலங்கிடப் பெற்றனென், தந்தை பா லருந்தவஞ் செய்வான் மீகியுந் தானறிந் திடப்பெற்று, னந்தகோபனன் மனையினின் மதலையாய்நடித்த நாரணன் குந்தி, மைந்தனாகிய பார்த்தனுக் கருளினால் வழங்கினன் மான்றோர்மேல்" என்றருளிச்செய்திருப்பதால், பகவற்கீதையின் மான்மியம், ஈசுரகீதைக்குமாம். இதன்றி ஈசுரகீதையிலும் அதன் மான்மியம் கூறியிருக்கின்றது. அஃது,

"மூவர்தே டிறைசனற் குமாரன் முதன்
 முனிவர் கட்குமொழி கீதையிங்
கியாவ ரோதின ரிதன்பொருட்
 டுணிவரியாவர் கேட்பவரி யாவர்தம்
பாவம் வேரொடு பறிந்து நல்ல
 பரமப்பதம் பெறுவ ராகலான்
மேவு மன்பினொடு மோதமீளுத லில்வீடு
 வேண்டினன் விரும்புவான்"

என்றருளிச்செய்திருப்பதாம், என்க.

இவ்வீசுரகீதையைப் பிரமகீதையிலும் எடுத்து வர்ணிக்கப்பட் டிருக்கின்றது. அது, "அன்பினு லெம்மாதி குருவாகு மிறைவனருள் கீதை, யின்பமே செய்திட லுலகுக் கியல்பா மெவ்வாறவ்வாறே, முன்பு பரமன் றிருவாக்கான் மொழிந்த கீதைப்பொருளான, பின்பிக்குரவனருள் கீதைபோரா வின்பம் பிறப்பிக்கும்" என்றருளியதாம்.

பிரமகீதைக்கு மான்மியம் அக்கீதையின் கண்ணே பிரமாவினால் "உலகியல்பாங் கீதைக்கு முவந்தருளு மிறையென்று, விலகிய வைதிகக் கீதைக்கென் செயானிறை யதனு, னலமிகுத்த பொருள்வேண்டி னலமிகு பத்தியினோடும், பலமிகு நற் கீதைகளே யெப்பொழுதும் பாடுவான்" என்றருளி யிரு

ப்பதுமன்றிப் பரசிவத்தின் றிருவாக்காலும் "பரமமா மிந் தக்கீதை படிப்பவன் பாரின்மீதே, திருவினுன் முகுந்தனுக் குந் தேசினு லிரவியொக்கு, மருவுமா மெனேயேவந்து மாசிலா விஞ்சையாகு, முருவமா மூமையுமென்று மவனுளத் துறை யாநிற்கும்" என்றருளிச் செய்திருக்கின்றது.

இந்தக் கீதைகண் மூன்றும் அத்வைதப் பிரதி பாதகங் களா யிருத்தலால் அத்வைதத்தில் அனுதாமுடைய சிலர் இக்கீதைகளை அருமையினுற் றாடிக்கின்றனர். அவர்கள் பிர் மாவின் முகத்தினுற் பிரம்கீதையின் கண்ணே தூடிக்கப்பட் டிருக்கின்றனர். என்னை "வேதநூன் மிருதி புராண மத்துவித மெய்மையே விளம்பமெய்த் தர்க்கஞ், சாதியாநிற்கத் தத்து வஞானத் தவருமிப் பொருளேயே சாா, வாதியாஞ்சிவ னுரா யணனு னிங்கிறைந்ததும பேதமாயிருக்க, வாதியா மொரு வர்க் கிதையனுதரித்தன் மாயையினுடைய வல்லபமே" என் றிப்படி தூடிக்கப்பட்டிருக்கின்றன வென்க.

அம்மான்மிய விசேஷம் யாவர்க்கும் புலப்படில் ஸ்ரீ பக வானிடத்திலும் அப்பிரதிபாதகரூபமான கீதையாகிய கிரந் தத்திணிடத்திலும் அதிக சிரத்தாபத்தி உண்டாய் எளிதில் மோட்சமடைதற்கு ஏதுவாமென்னும் அபிபிராயத்தாற் சேர்த்து அச்சிடப்பட்டது.

பகவற்கீதாமான்மியம்

முற்றுப்பெற்றது.

---

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

உ

கணபதிதுணை.

சைவபுராணங்களுள் ஒன்றாகிய

பத்மபுராணத்தில்

இலட்சுமிக்கு

மகாவிஷ்ணு சொன்னதைப்

பரமேசுவரன் பார்வதிக்கருளிய

# பகவற்கீதா மான்மியம்.

## க - வது அத்தியாய மான்மியம்.

**சுதன்மா** வென்றொரு பிராமணன். அவன் சுதர்மம் விட்டுச் சுராபானமுதற் சகல துர்க்கிரியையான அதர்மமே பண்ணித் தேக நீங்கினன். உடன் யமலோகம்போய் அநேக நரகங்களனுபவித்து எருதாய்ப் பிறந்து முடவனிடத்தில் விலைப்பட்டு அவன் நிர்த்தனம்பண்ணப் பழக்கி வைத்துப் பதினைந்துவருடங் காலக்ஷேபம்பண்ணி வந்தனன். ஒருநாள் வித்தை பண்ணுங்காலையில் எருது தவறிவிழுந்து சீவன் போகாமல் அவதிப்பட, வேடிக்கை பார்த்தபேர்களிரங்கித் தாங்கள் பண்ணிய புண்ணியங்களிற் கொஞ்சங் கொடுத்தார்கள்; அப்போது தாசியாகிய ஒருத்தி தன்னுடைய புண்ணியத்தில் மிகவுங் கொடுத்தாள். அப்போது தேகம் நீங்கி எருது மேலுலகம்போகத் தாசிகொடுத்த புண்ணியத்தினாலே யமன் "இங்கே நீ நரகம் அனுபவிக்கவேண்டாம்" என்று சொற்றனன். பின்பு பூலோகத்திலே பிராமணகுலத்தில் பூருவஞானத்துடனே பிறந்து நைட்டிகமாகவிருந்து, முன் மிக்க புண்ணியந்தந்த தாசியைச் சென்றடைந்து "உன் புண்ணியத்தினாலே எருதாயிருந்த நான் பிராமணனானேன்; அது என்ன புண்ணியம்" என்று கேட்க, அவள் தான் சுயமே சொல்லாது அதன் விபரத்தைத் தான் வளர்த்த கிளியினையக் கேட்க அது "நான் புராணம் படித்த வித்தியா கர்வத்தினாலே பெரியோர்களைத் தூஷித்துக் கிளியாய்ப் பிறந்து பிராமணன் வீட்

டிலே வளர்ந்தேன், அங்கே கீதாமுதலத்தியாயம் படிப்பார்கள், அதை நான் கேட்டுவர எனக்குப் பாடமாயிற்று, அச்சுபாவத்தோடு பிராமணன் வீட்டிலிருக்குஞ் சமயத்தில் ஒருவேடன் என்னைத் திருடி உன்னிடத்தில் விற்ருன், நீ என்னை வாங்கிவைத்திருந்தமையால் அந்தப்பாடம் நான் சொன்னேன், அப்புண்ணியம் உன்னிடத்திலுள்ளது ஆகையால் இப்பொழுதுஞ் சொல்லுகிறேன்" என்று பாராயணஞ்செய்ய, அதைக் கேட்டுப் பிராமணனும், தாசியும், கிளியும் மோட்சத்தை அடைந்தார்கள்.

**முதலாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

---

## உ-வது அத்தியாய மான்மியம்.

**கோ**தாவரிதீரத்திலே **தேவசன்மா** என்றெருரு பிராமணன், நைட்டிகன், கருமநிஷ்டனுயிருந்தனன். அவன் ஒருநாள் ஞானசந்நியாசிக்குப் பிட்சை பண்ணிவைத்து "ஞானனுக்கிரகம் பண்ணவேண்டும்" என்று கேட்க, அவர் "தெற்கே நதிபாறையிலே மித்திரவந்தனென்று ஒரு இடையனிருக்கின்றுன். அங்கே போ" என்று சொல்ல, அப்படியே பிராமணன் போய் இடையனைக் கேட்க, அவன் "முன்னெருரு பிராமணன் நைட்டிகனுயிருக்கின்றவன், அவன் ஸ்திரீ, சண்டாளனைச் சேர்ந்து ரோகியாய்த் தேகம் நீங்கி அநேக நரகங்களனுபவித்துப் பசாசாய்ப் பிறந்து பசி உபாதியினலே, மகா ரோகியாய்க் கிடந்த ஒரு வேடனைப் பிடுங்கித் தின்ன, அந்த உபாதியினலே அவன் சாக, அவள் பசாசத்துவம் போய் ஆடாயினள்: அந்த ஆட்டை நான் மேய்த்துக்கொண்டிருந்தேன், அந்த வேடன் புலியாய்ப் பிறந்து இந்த ஆட்டை முன் வைரத்தினலே துரத்த, ஆடு ஓட நானுங் கூடப்போனேன்: ஒரு இடத்திலே ஆடு போய்நின்று புலியைப்பார்த்து "என்னைப் புசிப்பாயாக" என்றுசொல்ல, "புலி எனக்கு மனம் வரவில்லை" என்று சொல்ல, பின் இரண்டுமாய்ச் சந்தேகப்பட்டு என்னைக்கேட்க, பின் அவை இரண்டும், யானும் ஆகிய மூன்றுபேருமாய்அவ்விடத்திலிருந்துயோசிக்குமளவில்எங்களுக்கெதிர்ப்பட்டஒருகுரங்கைக்கேட்க,அதற்கு, "இதுபிரமப்பிரதிஷ்டை லிங்கம், ஒருபிராமணன் இதற்குப் பூசைபண்ணிக்கொண்டுவந்தான், அவன் வீட்டுக்கு அதிதியாய் ஒரு பிராமணன் வந்தான், அந்த அதிதியைப் பூசை பண்ணி 'மோட்சம் வேண்டும்' என்று கேட்க, அவன் கற்பாறையிற் கீதையின் இரண்டாம் அத்தியாயத்தை வரைந்து இதைப் பாராயணம் பண்ணினல் மோட்சம் வரும் என்று சொல்லிப்போனுன்: அப்படியே

அவன் பாராயணம்பண்ணிச் சஞ்சரித்த இடமெல்லாம் இப்படி வைரமில்லை, அந்தப்பிராமணன் சின்மாத்திர சொரூபமானான்" என்று குரங்கு சொல்ல, அதன்பின் இடையனான நான் படித்தேன்: அதனாலே பிரமாநுபூதியுள்ளவனானேன், நீயும்போய்ப் பாராயணம் பண்ணுவாயாக" என்று சொல்ல, அப்படியே பிராமணன்வந்து பாராயணம்பண்ணி மோட்சமடைந்தான்.

**இரண்டாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

## ௩-வது அத்தியாய மான்மியம்.

சேனஸ்தானத்திலே கௌசிக குலத்திலே சேட்டனென்கிற பிராமணன் சுதர்மங்களைவிட்டு வியாபாரங்கள்பண்ணித் தாசிபானைச் சூது, மதுபானம், வேட்டை இவைகளாலே தாரித்திரம்வந்து சோமயாசி யாகம்பண்ண வைத்திருந்த திரவியத்தை அபகரித்துப் பருவதராச்சியம்போய்க் கஸ்தூரி, சவரி வியாபாரம் பண்ணி வரும்போது, வழியிலே காட்டுக்குளத்தின்கரையில் மரத்தின்கீழே படுத்திருக்க, இராத்திரியில் வேடன்வந்து வெட்டிப்போட்டுத் திரவியங்களை யெடுத்துப் போய்விட்டான். அந்தப் பிராமணன் பசாசாய் அந்தமரத்திலேயிருந்து துக்கப்பட, புத்திரன், பின்னேயே பிதாவைத் தேடிவரக் கூடிவந்தவர்கள் "இறந்துபோயினார்"என்று சொல்லத் துக்கப்பட்டுப் பிதாவுக்கு நல்லகதி பண்ணவேண்டுமென்று காசிக்குப் புறப்பட்டுப் போகிறபோது அந்தக் குளத்தில்வந்து சந்தியண்ணி மரத்தின்கீழே கீதா மூன்று மத்தியாயம் பாராயணம்பண்ண, அவனுக்குப் பசாசத்துவம் போய்ச் சத்திக்கத் திவ்வியதேகமாய் விமானம்வந்து ஏறிப்போகிறபோது "என்னைப்போலப் பாவியாயுள்ள என் குலத்தார் நரகத்திலே கிடக்கிறார்கள், வழக்கப்படி நீபாராயணஞ்செய்து சுவாதத்தம்பண்ணி எல்லாரையுங் கரையேற்றுவாயாக" என்று சொல்ல, நல்லதென்று விஷ்ணுவாலயத்தில் வந்திருந்து கீதா மூன்றுமத்தியாயத்தை அப்புத்திரன் பாராயணஞ்செய்து தத்தம்பண்ண, நரகத்திலிருக்கிறபேர்கள் சொர்க்கலோகம் போக யமன் விஷ்ணு அருகேவந்து தரிசித்தான்.

**மூன்றாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

## ௪-வது அத்தியாய மான்மியம்.

கங்காதீரத்திலே காசியில் விசுவேசுரர் சந்நிதியிலே வரதனென்கின்ற பிராமணன் கீதா நாலாமத்தியாயம் பாராயணம் பண்ணிக்

கொண்டிருந்தான். அவன் ஒருநாள் சமீபத்திலிருக்கிற பிரபல தரிசனார்த்தமாய்ப் போகிறபோது மத்தியான வெய்யிற் சிரமத்தினாலே வழியிற் பதறிவிருட்ச நிழலிலே ஒரு மரத்தில் தலையைவைத்து ஒருமரத்திலே உதைந்து படுத்துக்கொண்டு நாலாம் அத்தியாயம் பாராயணம் பண்ணி இளைப்பாறிப்போனான். ஐந்தாறு தினத்திலே அம்மரம் இரண்டும் உலர்ந்துபோய் இரண்டு பிராமண ஸ்திரீகளாய்ச் சோடாய்ப் பிறந்து வழிபாடாய் வளர்ந்து எழுவயதாகிறபோது தூரத்திலேயிருந்து முன் நாலாமத்தியாயம் பாராயணம் பண்ணினவர் யதீசுவராய் வந்தார். அவருக்கு உபசாரத்துடனே பிட்சை பண்ணிவைத்து "நாங்கள் இலந்தை மரங்கள்: உம்முடைய பிரசாதத்தினாலே இப்படியானோம்" என்றார்கள். அவர் "அங்ஙனமாதற்கு யாது காரணம்?" என்று கேட்க, பூர்வோத்தரந் தெரிந்த அவர்கள் "நாங்கள் பூர்வம் கோதாவரிதீரத்தில் ஒருபிராமணன் வெய்யில், மழை, பனி, காற்றுக்களிற் றவசுபண்ணி ஆத்மஞானபரனாகிப் பிரமாதீனம்வந்து விசாரணை பண்ணிக்கொண்டிருக்கும்போது இந்திரன், தபசுக்கு விக்கினம்பண்ணத் தேவஸ்திரீகளாகிய எங்களையனுப்ப, நாங்கள்சென்று அநேக நிர்த்தன முதலான சாகசம்பண்ண அதை அவனறிந்து "இலந்தைமரமாய்ப் போங்கள்" என்று சபிக்க, நாங்கள் தோத்திரம்பண்ணி "விமோசனம் எப்போது" என்று கேட்க, "உங்கள் சாயலிலே பிராமணன் கீதா நான்காம் அத்தியாயம் பாராயணம் பண்ணுவான்: அதைக் கேட்டுப் பிராமணஸ்திரீகளாய்ப் பிறந்து ஞானம்வந்து விஷ்ணுபத மடைவீர்கள்"என்று சொன்னான் என்று சொல்லி, அதன்பின்னர் "யதீசுரரே! நீர் அநுக்கிரகம் பண்ணவேண்டும்" என்று கேட்க, அவர், கீதா நான்காமத்தியாய முபதேசம்பண்ண, உடனே விஷ்ணுகணங்கள் விமானங் கொண்டுவர விமானத்தில் ஏறிப்போய் மோட்ச மடைந்தார்கள்.

நான்காவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.

## ரு-வது அத்தியாய மான்மியம்.

மத்துவதேசத்திலே ஒரு பிராமணன் நித்திய கருமம் விட்டுச் சங்கீத நிர்த்தன வாத்தியங்கள் அப்பியாசம் பண்ண, அவனை இராஜா அறிந்து அழைப்பித்து வருஷச் செலவு கொடுத்து வைத்திருக்க, அவன் விடனாகித் தாசிபரனாய்த் திரிந்தான். அவன் ஸ்திரீ இராஜன்மேலே மோகித்துப் புருடனைக் கொன்றுவிட்டு இராஜனைச் சேர்ந்து கிரந்தி ரோகமனுபவித்து இறந்தாள். இரண்டுபேரும் வெகு நரகங்களனுபவித்து

துப் பிராமணன் பருந்தானுன், அவள் கிளியானுள். முன் வைரத்தி னுலே கிளியைப் பருந்து அடிக்க அவ்வடியினுற் பொறிகலங்கி அரு கிருந்த ஒரு மண்டையோட்டிலே சலமிருக்க அதிலே விழுந்துசாகப் பருந்தை வேட்டைக்காரன் வலைபோட அதுவும் அதிலே விழுந்துசாக இரண்டுபேரையும் யமலோகத்துக்குக் கொண்டுபோக யமன் "உங்களு க்கு எந்த லோகம் வேண்டுமோ அங்கே போங்கள்" என்று சொல்ல, "நாங்கள் வெகு பாவிகளாயிற்றே, என்ன புண்ணியத்தினுலே இப்படி வந்தது" என்று கேட்க, அதற்கு யமன் "ஒரு பிராமணன் சாஸ்திர சித் தாந்தமாய்க் கருமம் பண்ணிக் கீதா ஐந்தாமத்தியாயம் பாராயணம் பண்ணினுன், அதனுலே ஞானம் வந்து மோட்சமடைந்தான்: அவன் தலையோட்டிலே உங்கள் சரீரம் விழுந்தது: அந்தக் கீதா பாராயண மகத்துவத்தினுலே உங்களுக்கிப்படிப்பட்ட பெருமை வந்தது" என்று சொல்ல, அந்தச் சமயத்தில் பிரமலோகம், விஷ்ணுலோகம், சிவலோ கம் இம்மூன்றிலுமிருந்து விமானம் வரக் கிரமமாகப் போய் மோட்ச மடைந்தார்கள்.

ஐந்தாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.

---

## ௬ - வது அத்தியாய மான்மியம்.

**கோ**தாவரி தீரத்திலே, அப்பியிஷ்டிணிபுரத்திலே **சானசாரதி** என்னப்பட்ட இராஜா அநேக யாகாதிக் கிரியைகளோடே இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தனன். தேவர்கள் இவன்மேற் பிரீதியினுலே உபகாரம் பண்ணவேண்டுமென்று அநேக அம்ச ரூபர்க ளாய் ஆகாசவீதியிற் போகிறபோது இராஜா, மேலுப்பரிகையில் நிலாக் காலத்திலிருந்தனனுகப் பின் வருகிற அம்சம், முன் செல்லும் அம் சங்களைப் பார்த்து "முன்னே போகாதீர்கள், இராஜன் பிரகாசதிற் போகக்கூடாது"என்று சொல்ல, முன் சென்ற ஓர் அன்னம், ரைக்கிய ருடைய பிரதாபங்களைச் சொல்லி "ரைக்கியன் கெட்டுப்போகிறுனே போ" என்று போய்விட்டது. அதை இராஜன் கேட்டு "அவர் எப்படி யிருப்பவர்? அவரை அடையவேண்டும்" என்று முக்கிய மந்திரியை அழைத்து இந்தச் சமாசாரமெல்லாஞ் சொல்லி, "அவரைப் பார்த் தழை த்துக்கொண்டு வா" என்ன, அப்படியே அவன் இரதத்திலேறிக் காசி முதல் அநேக சிவஸ்தலம், விஷ்ணுஸ்தலம், நதிதீர்த்தங்கள், மலைகள், குகைகள் எல்லாந் தேடிக் காஸ்மீரதேசத்தில் மணிபுரமென்கிற பட் டணத்தில் மாணிக்கவீசுரன் சமீபத்தில் ஒரு சகடையின் சாயலிலே

குஷ்டவியாதியினாலே சகடையிலே தேகத்தைத் தேய்த்துக்கொண் டிருக்கிறவனைக்கண்டுநமஸ்காரம்பண்ணி "சுவாமீ! என்னவேண்டும்?" என்று கேட்க, "நிஜானந்தவனுபவியாயிருக்கின்ற எனக்கு நீ என்ன கொடுக்கிறது" என்று சொல்ல, "சுவாமி! அடியேனாலே ஏதாவது உப காரம் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று சொல்ல, அதற்கு அவர் "சொரிந்துகொண்டிருக்கிறதற்கு ஆள்விடு" என்று சொன்னார். அவ் வார்த்தையை மந்திரி கேட்டுக்கொண்டுஇராஜாவினிடத்தில்வந்து"அவ ரிங்கே வரமாட்டார், நீர் போகவேண்டும்" என்று சமாசாரஞ் சொல்ல, இராஜா அநேகந் தனம், வஸ்திரம், ஆபரணம், பசுக்கள், சகடைகள் கொண்டுபோய்வைத்துத் தெண்டம் பண்ணிநிற்க, "சூத்திரா! இவைக ளெல்லாம் எனக்கு எதற்காக, இராஜாவா நீ, பெரியவாள் இருதயகம லம் தெரியாதவனே, சீ சீ ஈதெல்லாம் நீ யெடுத்துக்கொண்டு போ" என்று திரஸ்காரம் பண்ண, அப்போது அரசன் பயந்து நடுங்கி நமஸ் காரம்பண்ணி, "சுவாமி! இரட்சிக்கவேண்டும்"என்றுசொல்ல, அதைக் கேட்ட அவர் "நான் கீதா ஆறுவது அத்தியாய பாராயண மகத்துவத்தி னாலே நிஜானந்தானுபவியானேன், உனக்கு உபதேசம் பண்ணு கிறேன்" என்று அதனுடைய அருத்தமான ஆத்மஞான இரகசியமெல் லாம் உபதேசம்பண்ண அதனாலே இராஜனும் விதேகமுத்தியடைந் தான்.

**ஆறவது அத்தியாய மான்மிய முற்றிற்று.**

---

## எ-வது அத்தியாய மான்மியம்.

பாடலபுரமென்றொரு பட்டணமுண்டு. அதில் சங்குகர்ணனென் கிற பிராமணன் வியாபாரங்கள்பண்ணி வெகுதிரவியஞ் சம்பாதித்துப் பிள்ளைகளறியாமல் புதைத்துவைத்திருந்தான். அவன் நாலாம் விவா கம்பண்ணப் பந்துக்கள் புத்திரர்களெல்லாருமாய்ப் புறப்பட்டுப்போகிற போது வழியிலே ஒருமரத்தின் கீழே இரவிற்றங்கிப் படுத்திருந்தார் கள். அங்கே பிராமணன்மாத்திரம் பாம்புகடித் திறந்தான். அப்பிரா மணனைவேம்பினிலையைப்போட்டு மூடிவிட்டுப்போய்விட்டார்கள். அப் பிராமணன் பாம்பாய்ப் பிறந்து திரவியம் புதைத்தவிடத்திலே காத் திருந்தான், அப்படியிருக்கையில் ஒருதினத்தில் சொப்பனத்தில் நடுவி லுண்டாகிய தனது புத்திரனிடத்தில் வந்து "இன்னவிடத்திலே திர வியமிருக்கிறது, நான் பாம்பாய்ப்பிறந்தே காத்திருக்கின்றேன், திதி தினத்திற் கீதா ஏழாமத்தியாயம் பாராயணம் பண்ணின பிராமண னுக்கு அன்னங்கொடுத்தால் இந்தச் சென்மம் நிவிர்த்தியாய் மோட்ச

மடைவேன் ஆதலால் நீங்கள் திரவியங்களை எடுத்துச் சந்தோஷமாய் வேண்டியபடி தருமம் பண்ணுங்கள்" என்று சொன்னான். அநந்தரம் சொப்பனத்தினின்றும்விழித்த அந்த நடுமகன் "நாமொரு சொப்பனங் கண்டேன்"என்று தன்பந்துக்களுடனே சொல்லிப்பின் அப்புத்திரன் அந்தப்படி அன்னங்கொடுக்கப் பிதா மோட்சத்தை யடைந்தான். அதன்பின் திரவியங்களையும் எடுத்துத் தருமங்கள் பண்ணிவிட்டார் கள்; "கேள் பார்வதி" என்று பரமேசுரன் சொல்லுகிறார்.

ஏழாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.

## அ-வது அத்தியாய மான்மியம்.

"தட்சணத்திலே, ஆமர்த்தனபட்டணத்தில் பாவசன்மனென்கிற பிராமணன் தாசிபானம், மாமிசம், சுராபானம், வேட்டை முதலான துர்நடையுடைய பாபிஷ்டனாகவிருந்தான். அவன் ஒருநாள் பனைமரத்து மதுவை நிறையப்பானம்பண்ணி அசீரணமாய்ப் பிராணன் நீங்க யாதனாசரீரியாய் யமபுரம்புக்கு அநேக நரகங்களனுபவித்துப் பனைமரமாய்ப்பிறந்து பெரியநிழலாயிருக்க அதிலே ஸ்திரீ புருஷாளாயிரண்டு பிரமராட்சதாள் வந்திருந்தார்கள்" எனப் பார்வதியானவள் பரமேசுரனைப் பார்த்து "அந்தப் பிரமராட்சதாள் யார்?" என்று கேட்க, அதற்கு ஈசுரன் கிரமிவலனென்கிறபிராமணன் குமதியென்கிறஸ்திரீயோடே கூடினவனும், வேதவேதாந்தமனும், சகல சாத்திரவேத்தாவாயும் நித்தியகன்மாநுட்டானபரனும்யுமிருந்தான். அவன் காலபுருஷதானம், அசம்,கெசமுதலான துர்த்தானம் வாங்கினதினாலே பிரமராட்சதனாய் வெகுதூரஞ் சுற்றி இந்தத் தாலவிருட்சத்தி னிழலிலே வெகுநாளிருக்கையில் ஒருநாள் அந்தஸ்திரீ,புருஷனைப்பார்த்து "நாம் வெகுவாய்த் துர்த்தானங்களை வாங்கி வெகுகாலம் துக்கமனுபவிக்கிறோமே, இதற்கு எப்போது விமோசனம்" என்றாள். புருஷன்"ஆத்மஞானம்வந்து அஞ்ஞானம் நிவிர்த்தியானாற்போம், மற்றப்படி போகாது" என்றான். அதற்கு அவள் "ஆத்மஞானமாவதென்ன? அஞ்ஞான நிவிர்த்தியாவதென்ன?" என்று கேட்க, அவள் கேட்டவசனம் கீதா எட்டாம் அத்தியாய முதற்சுலோகத்தின் அர்த்தமாயிற்று. அந்த வாக்கியங் கேட்டவுடனே தாலவிருட்சத்துக்குப் பழைய பிராமணத்துவம் வந்தது. இவர்க ளிரண்டுபேரும்: பிராமணனும், ஸ்திரீயும் ஆனார்கள். உடனே வைகுண்ட விமானம் வந்து இருவரும் வைகுண்டம் போனார்கள். அநேக உபசாரத்தோடே பனைமரமாயிருந்த பாவசன்மன் காசியிலே

வந்து விந்துமாதவனைப் பூசைபண்ணி இந்த அரைச்சுலோகமுஞ்சொல்லி விடாமற் றியானபரனுய்த் தபசிலிருந்தமையின் பாற்கடலில் விஷ்ணுவுக்கு நித்திரையில்லாமலிருக்க, இலட்சுமியானவள் "என் நித்திரை யில்லை" என்று கேட்க, அதற்கு விஷ்ணுவானவர் பாவசன்மன் சமாசாரமெல்லாம் இலட்சுமிக்குச் சொல்லிப் பாவசன்மாவிடத்தில் இலட்சுமிசமேதராய்ப்பிரத்தியட்சமாகிச்ஜனனமரணமில்லாத் மோட்சத்தைக் கொடுத்தார் "கேள் பார்வதி" என்று சொல்லுகிறுர்.

எட்டாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.

---

## கூ-வது அத்தியாய மான்மியம்.

நர்மதாதீரத்திலே மாயிஷமந்திரபுரத்தில் மாதவனென்கிற பிராமணன் வேதவேதாந்தமனும், சகல சாஸ்திரசம்பன்னனும் நல்ல நைட்டிகனுமிருந்தான். அவன் வெகு திரவியங்கள் சம்பாதித்து இதற்குச் செலவுவேண்டுமென்று யாகம்பண்ண யத்தனித்துச் சகல சாமக்கிரியைகளுஞ் சம்பாதித்து நல்ல ஆட்டுக்கடா ஒன்று வாங்கி யாகசாலையும் ஏற்படுத்திச் சகலகன்மங்களும் பண்ணி ஆட்டுக்குச் செய்யவேண்டியதுஞ் செய்து வெட்டப்போகிற சமயத்தில் அந்த ஆடு பிராமணனைப்பார்த்து "நீ யாகம்பண்ணி அற்ப பலமான சொர்க்கத்தையுத்தேசித்து ஜீவஹிம்சைமுதலானவைசெய்யப்போகிறுய்ஜனனமரணமில்லாத மோட்சமடைகிறதற்கு யத்தனமில்லையேயென்று எனக்குத் தோன்றுகிறது" என்று சொல்ல, பிராமணன் பயந்து நடுங்கி ஆட்டுக்குப் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணி அஞ்சலியஸ்தனுய் "நீயார்? உனக்கிப்படிப்பட்ட ஞானம் எப்படி வந்தது?" என்றுகேட்க, அதற்கு ஆடானது "முன் நான் பிராமணன்; வேதசாத்திரசம்பன்னன்; சகலகன்மமும் பண்ணினேன்; எனக்கு ஒரு பிள்ளை; அதற்கு வியாதி வந்தது; என்னுடையஸ்திரீ: "குழந்தைக்குவியாதிசொஸ்தமானுல்உனக்கு ஆடுவெட்டி வைக்கிறேன்" என்று பத்திரகாளிக்குப் பிரார்த்தனை பண்ணினுள்; வியாதி சொஸ்தமாயிற்று; அந்தப்படி ஒரு ஆட்டுக்குட்டி வாங்கிவெட்ட அதனுடைய தாய் "என் பிள்ளையை உன் பிள்ளைநிமித்தம் வெட்டினுய்; எனக்கு வயிறெரிகிறதே; நீ ஆடாய்ப் பிறக்கக்கடவாய்"என்றுகோபித்துச்சபித்தது. அதனுலே ஆடாய்ப்பிறந்தேன். பிராமணனுய்க் கன்மங்கள் தப்பாமலிருந்தபடியால் பூர்வஞானத்தோடிருக்கிறேன். இதனடுவே வெகு சன்மமெடுத்தேன்; ஏதென்றுல் "குரங்கானேன், நாயானேன், குதிரையானேன், இன்னும் அநேகமானேன்,

அந்தத்தில் ஆடாய்ப்பிறந்தேன்" என்று சொல்லப் பிராமணன் கேட்டு "ஜென்மாசம்ஆகிறவுபாயம் நீ விசாரணைபண்ணியிருப்பாய்; அதையுஞ் சொல்லக்கடவாய்" என்று கேட்டான். அதற்கு ஆடு "நானொரு அதிசயங் கண்டேன்; அது இப்போது கேட்டதற்குச் சரியாயிருக்கும்; அதைச் சொல்லுகிறேன்; சாவதானமாகக் கேள்"என்று சூசிப்பித்தது. குருக்ஷேத்திரத்திலே சூரியசந்திரவருணனென்கிற இராசா சூரியகிரகணம் வர அக்காலத்தில் காலபுருஷத்தானம் பண்ணவேண்டுமென்று புரோகிதனைக் கேட்டு வேண்டியவெல்லாஞ் சம்பாதித்துக் காலபுருஷனும் புதிதாகப்பண்ணி அநேகத்திரவியம் கொடுத்துப் பிராமணனை யோக்கியவானை யழைப்பித்து வைத்துவிட்டு ஸ்நானத்துக்குப்போனான். அப்போது புரோகிதன் அவனோடேகூடப்போகக் காலபுருஷன் தானம் வாங்க வந்திருக்கிற பிராமணனைப் பார்த்து "உத்தம க்ஷேத்திரத்தில், உத்தம புண்ணியகாலத்தில் பொல்லாத துர்த்தானம் வாங்க வந்தாயே, வாங்கிப் பிழைப்பாயா?" என்று கேட்க, அப்பிராமணன் "என்பெலன் நீயறிவாயா, உன்னைக் கேட்டுத்தானோ நான் தானம் வாங்குகிறது போ" என்றான். இராசாவும், புரோகிதனும் வந்தவுடன் தன் நியமனம் பண்ணிய தானத்தைக் கொடுக்க வாங்கினான். வாங்கினவுடனே காலபுருஷன் வயிற்றிலிருந்து கத்தியும் கையுமாய் ஒரு நீசபுருடனும், ஒரு நீசஸ்திரீயும் கோரரூபமாய் வந்தார்கள். இரண்டு பேரையுங்கண்டவுடனே பிராமணன் ஏகமனது பண்ணிக் கீதா ஒன்பதாமத்தியாயம் பாராயணம்பண்ண இந்தஇரண்டு நீசர்களுந்தரிக்கமாட்டாது கண்ணுக்குத் தெரியாமலோடிப்போனார்கள். உடனே இராசா பயந்து நடுங்கிப் பிராமணனை நமஸ்காரம்பண்ணி "இப்போது இங்கே வந்ததென்ன?" என்று கேட்க, அதற்குப் பிராமணன் "காலபுருஷதானம் வாங்கின பாவம் நீசபுருடன்: முன்ஜென்மத்தில் வித்தியாகெர்வத்தினாலே பெரியவர்களை நிந்தை பண்ணின பாவம் நீசஸ்திரீ, கீதா ஒன்பதாமத்தியாயம் பாராயணம் பண்ணின மான்மிய விசேஷத்தினால் அவகாசமின்றி ஓடிப்போனார்கள்" என்று சொல்ல, அவரைப் பார்த்து இராசாவானவர் "எனக்கு முபதேசம் பண்ணும்"என்று கேட்க,உடனே அவரும் உபதேசம் பண்ணினார்: இராசனும்"மோட்சமடைந்தான்" என்று சொல்லப் பிராமணனும், ஆடும் அந்தப்படியே ஒன்பதாம் அத்தியாயம் பாராயணம்பண்ணி ஞானோதயமாக மோட்சமடைந்தார்கள்.

**ஒன்பதாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

## ௧௦-வது அத்தியாய மான்மியம்.

காசியிலே தீரதீ என்கிற பிராமணன் வேதவேதோத்தமனும், சகல சாத்திர சம்பன்னனும், தருமசீலனும், ஆத்மஞானபானுமிருந்தான். அவன் சர்வாத்மகத்துவ பாவனையினாலே அந்தர்முகதிருட்டியாய்ப் பாகியதிருட்டி விடெபட்டுச் சீவன்முத்தித்தசையடைந்தான். அவனுக்கு விசுவேசுரர் சார்வதாக் கைலாகை கொடுத்துக்கொண்டு சாக்கிரதையாகக் காத்திருக்க, ஒருநாள் விசுவலிங்கத்திலே கால் வைத்துக்கொண்டு வாசலிலேதலையைவைத்துப் படுத்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்கும்போது பிருங்கிமகாரிஷியானவர் பரமேசுரனைப்பார்த்து "நீரிவனுக்குச் சிஷ்ருஷை பண்ணிக் காத்திருக்கவேண்டுவதென்ன?" என்று கேட்க, "நம்முடைய கைலாயத் தாழ்வரையில் அநேக சிங்காரங்களுடனே ஒரு புன்னை வனமிருக்கிறது. அதிலே நாமொருநாள் கேளிவிலாசமாயிருக்கையில் ஒரு அம்சங் கறுப்பாய் வந்து வெகு தோத்திரங்கள் பண்ண "நீயார்? சரீரங் கறுப்பானேன்?" என்று கேட்டனம். அதற்கு அம்சம் "பிரமலோகத்தில் ஒரு தாமரைத் தடாகமிருக்கிறது. அங்கு வந்து அத்தாமரைக்கிழங்கை நான் பட்சித்துப்போகிறபோது பறக்கிறதற்குப் பெலமில்லாமற் காசியிலே விழுந்தேன், சரீரமுங் கறுப்பாய்ப்போயிற்று. இது எதனாலென்று யோசனை பண்ணுகையில் அப்போது ஒரு சத்தமானது "அந்தச் சேதியை நான் சொல்லுகிறேன்"என்றது. அச்சமயத்தில் உயரப்பார்த்தேன். அறுபதினாயிரம் பெயர் விஷ்ணுசாயுச்சிய மடைந்திருக்கிறவர்கள் ஆகாசத்திலிருந்தார்கள்."இஃதென்ன,இப்போதுசொன்னதார்?"என்று யோசித்து அந்தக் காசியிலிருந்த ஜந்துபூவாகிய அந்தப் பத்மினியைப் பிரதட்சண நமஸ்காரம் பண்ணி ஈதெல்லாங் கேட்டேன். அந்தப்பத்மினியானவள் என்னுடைய வாசனையைக் கிரகித்தபேர்கள் அறுபதினாயிரம் பேர்கள் விஷ்ணுசாயுச்சிய மடைந்தார்கள். அவர்கள் யாரென்றால், ஏழுசென்மத்துக்கு முன்னே ஒரு ரிஷிபுத்திரர்களான அறுபதினாயிரம் பேர்கள் நித்தியகர்மாநுட்டானத்தோடு தவசு பண்ணிக்கொண்டிருந்தார்கள்.அங்கே ஒருதேவஸ்திரீ வந்தாள். அவளை எனக்குப்பெண்சாதி, எனக்குப்பெண்சாதிஎன்று பரஸ்பரமடித்துக்கொண்டு அத்தனைபெயரும் இறந்தார்கள்.ஒருசென்மம் செந்நாயாய்ப்பிறந்து என்வாசனையைக் கிரகித்து விஷ்ணுசாரூப மடைந்தார்கள். நீ வந்தனை பண்ணமற்போனபடியினாலே உனக்குப் பெலன்போய்ச் சரீரமுங் கறுத்தது. நான் யாரென்றால் மூன்றுஞ் சென்மம் பிராமணஸ்திரீ, கமலழகி

யென்று பெயர்; மகாபதிவிரதை; நானொரு நாகணவாய்ப்புள்ளை வளர்த்தேன்; என்புருஷன் கோபித்து "நீ நாகணவாய்ப்புள்ளை வளர்த்தபடியால் நாகணவாய்ப் புள்ளாகப் பிறக்கக்கடவாய்" என்று சபித்தார். அந்தப்படி நாகணவாய்ப் புள்ளாகப் பிறக்க அதை ஒரு ரிஷிகுமாரத்தி வளர்த்தாள். அங்கே கீதா தசமாத்தியாயமாகிய விபூதியத்தியாயம் பாராயணம் பண்ணுவார்கள்; அதைக் கேட்டுக்கொண்டிருந்தேன்; அந்த விசேடத்தினாலே மறுசென்மம் தேவலோகத்தில் பாபாவதி யென்னும் தேவஸ்திரீயானேன். இலட்சுமிதேவிக்குச் சகியாய் விமானத்திலேறி எங்கே போகவேண்டுமோ அங்கே சஞ்சரித்துப் பூலோகத்திலே ஒரு சரசில் வஸ்திரமில்லாமல் சலக்கிரீடை பண்ணிக்கொண்டிருக்கையில் அங்கே துருவாசமகாமுனி வந்தார். அப்பொழுது பயந்து சிரசு, கை கால் ஆக ஐந்தும் ஐந்து தாமரைப் பூவாகவானேன்.அப்படியே பூவாய்த்தானே நூறு வருஷ மிருக்கும்படி சபித்தார். பூவாயிருந்தும் கீதா பாராயண மகத்துவத்தினால் பூர்வஞானத்தோடு பேசத்தக்கதாயிற்று.

இது நிற்க, உனக்கு இது விமோசனமாகிறதற்கு உபாயமாம்ஆகையால் நான் கீதாதசமாத்தியாயம் பாராயணம் பண்ணுகிறேன்; நீ அதைக்கேட்டுப் பின்செய்யவேண்டிய காரியமியாதெனில், எனக்குச் சாபவிமோசன காலமாயிற்று ஆகையால் நீ இந்த ஐந்து பூவையுங்கொண்டுபோய்ப் பரமேசுரனுக்குச் சாத்தினையானால் கறுப்பு நீங்கிப் பலமும் வருமென்று சொல்லித் தசமாத்தியாயஞ் சொன்னாள்: அவளுக்குச் சாபநிவிர்த்தியாயிற்று, "அந்தப் புஷ்பஞ் சாத்தவந்தேன்"என்று சொல்லிச் சாத்திற்று. உடனே அந்த அம்சத்துக்குக் கறுப்புநீங்கிஅதன்பின் அந்த அம்சதேகமும் நீங்கிப்போயிற்று" என்று பிருங்கிரிஷிக்குச் சொன்னேன் பார்வதிகேள்: "அந்தப்பிருங்கி பின்னுங்கேட்கிறார். "அந்தஅம்சம் உமதிடத்தில்வந்து சரீரம்விடவேண்டுவதென்ன? அதையன்றியில் பூருவம் அவனார்?" என்று கேட்டார். அதற்குப் பரமேசுரன் "பிராமணகுலத்திலே பிறந்தவன், சுதவன் என்று பெயர், பிரமசாரி விரதமும், குருகுலவாசமும், அத்தியயனமும் பண்ணினவன். அவனுடைய குரு ஒருநாள் வாயலிலே படுத்திருக்க அது தெரியாமல் இருட்டிலே அவன் கால்பட்டது. உடனே "திரியக்குவாப்போ" என்று சபித்தார். பிரமசாரி விரதந்தப்பாமல் நடந்தபடியினால் பிரமலோகத்தில் மானசசரசிலே அம்சங்களில் சேஷ்டனாய்ப் பிறந்து அந்த அம்சபத்தினி யுபதேச கீதாபடன மகத்துவத்தினால் பின் காசியில் பிராமணனாகப் பிறந்து குழந்தையிலேதானே தசமாத்தியாயம் படித்து அர்

த்த விசாரம் பண்ணிப் பின் விஷ்ணுவின் சகுணபாவனை செய்து அப்பாவனையும் போய்ச் சர்வாத்மகத்துவம் வந்து தத்தேகபரனாய்ப்பாகிய திருட்டியில்லாதபடியினாலேயும், காசிக்ஷேத்திரமான படியினாலேயும் நான் அவனுக்குச் சிசுருஷை யெல்லாம் பண்ணிக் கைலாகு கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன்; கேள் பார்வதி" என்று பரமேசுரன் அருளிச்செய்தார்.

**பத்தாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

## கக-வது அத்தியாய மான்மியம்.

"அதிரகசியமான இதனைக்கேள் பார்வதியே" என்று பரமேசுரன் சொல்லுகிறார்: "பிராணிதீரமென்கிற நதிதீரத்தில் மேதிங்கிரம் என்றொருபட்டணம் அநேக சிங்காரத்துடனே கூடினது; அதிலே சாரங்கபாணியென்று விஷ்ணுவாலயம் மகாவரப்பிரசாதி,நாரசிம்மமென்று விஷ்ணுபெயர்.மேகலாதீரமென்று தீர்த்தத்தின்பெயர். அவ்வண்ணம் விசேஷமுடைத்தான அந்தவூரிலே சுனந்தனென்கிற பிராமணன் சகல சாஸ்திர சம்பன்னன்,நைட்டிகன்,கீதா ஏகாதசாத்தியாயந் தினம் பாராயணம் பண்ணி, நிஷ்காமபரனாய் அதனாலே ஆத்மஞானம் உதித்துச்சீவன் முத்தனானான். அந்தப்பிராமணன் சிங்கத்திலே பிருகஸ்பதி வந்த காலத்தில் கோதாவரி யாத்திரைக்குப் பிரயாணமாய் முதனாள் கோதாவரி யுற்பத்தியான திரியம்பகத் தலத்தில் தங்கி ஸ்நானம் பண்ணி,தர்ப்பணஞ் சிரார்த்தங்களைச் செய்து தீர்த்ததீரத்திலே உள்ள சிவ, விஷ்ணு தேவதா ஸ்தலங்களில் தெரிசனம், பூசை, தோத்திரங் கிரமமாய்ச் செய்து பின் இயன்ற அளவு தானங்கள் வழங்கி விவாக மணம்புரி என்றொரு பட்டணம் வருகையில் அங்கே சூரியன் அஸ்தமானமானான். அன்று அங்கே இரவிற் படுக்கிறதற்கு ஒருவரு மிடங் கொடாமையால் பக்கத்தில் உள்ள ஒரு காவற்காரனாகிய தலையாரி வீட்டில் படுத்துக்கொண்டான். உதயத்தில் வெளியிற் புறப்பட்டு வரும்போது அந்தத் தலையாரி வந்து நமஸ்கரித்து "இங்கே இராத்திரித் தங்கிப் பிழைத்தபடியினாலே உம்மிடத்தில் ஏதோ மகத்துவ மிருக்கின்றது" என்று தோத்திரம்பண்ணி "இங்கேசிலதினமிருந்து போகலாம்" என்றான்.அவர் "நல்லது" என்றொப்பியிருக்க இவன் சகலஉபசார சிஷ்ருஷைகள் பண்ணிவந்தனன்.எட்டாநாள் காலையில் தலையாரிவந்து "என் பிள்ளையை இராத்திரி இராட்சதன் தின்றுவிட்டான்" என்று அழுதான்; அதற்கு அவர் "இராட்சதன் யார்?" என்று கேட்க, இந்த

ஊரில் ஒருராட்சதன் எல்லாரையுஞ் சாப்பிட்டுப்போகிறதாயிருந்தான். ஆனபடியினால் அவனுக்கு "அப்படிவேண்டாம்; உனக்கு வழியிலே போகிறபேர், வருகிறபேரையெல்லாம் அழைத்துவந்து இங்கே படு த்துக்கொள்ளச்செய்கிறோம்; அவர்களைத் தின்றுபோட்டு ஊரிலேயிரு க்கிறபேரைத் தொடவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டோம். அப் படியே "நேற்று இங்கேவந்த பெயர்களைக் கொண்டுபோய் விட்டுவா?" என்று என் புதல்வனைக் கூடவனுப்பினேன். அச்சங்கதி தெரியாத இவனும் அவர்களோடுகூடப் படுத்திருக்க இராட்சதன் இவனையுந் தின்றுவிட்டான். அதையறிந்த யான் இராட்சதன் அருகுபோய், "என் பிள்ளையை என் தின்றாய்?"என்றேன். "தெரியாமற் போய்விட்டது" என்றான். "என்பிள்ளையை மாத்திரம்விடு" என்றேன். "கூடத்தின்ற பேர்வந்தா லிவனும்வருவான், இவன்மாத்திரம் எப்படிவருவான்? உனக் குப் பிள்ளையாவேண்டும்? ஆனால் ஒரு உபாயஞ் சொல்லுகிறேன்: ஒரு பருந்து ஒரு எலும்பைத் தூக்கிக்கொண்டு போகும்போது தவறியெருக் குட்டையில்விழ, ஒருபிராமணன் ஞானவான் அந்தக் குட்டையில்வந்து ஸ்நானம், திலதர்ப்பணம், பிண்டாதிக்கிரியைகள் விதிப்படிசெய்ய, அங் குள்ளார் "இது தீர்த்தமல்ல" என்றுசொல்ல, "கீதா ஏகாதசாத்தியா யம் படித்தவன் எலும்பு விழுந்ததனால் மகாயோக்கியம்" என்று அவன் புகல, எல்லாரும் ஸ்நானம்பண்ணி மோட்சமடைந்தார்கள். ஆனபடியி னால் ஏகாதசாத்தியாயம் படித்தவன் வந்து அதைப்பாராயணம்பண்ணிச் சலத்தை என்மேலே புரோட்சித்தால் எனக்கு இந்தச்சாபம் விமோசன மாம்: நான் தின்றபேர்களெல்லாம் வருவார்கள்: "உன்பிள்ளையும் வரு வான்" என்று இராட்சதன்சொன்னான் என்று தலையாரிகூறச் சுனந்த னென்கின்ற பிராமணன், "அவனுக்கு என்ன சாபத்தினாலே இராட்ச தத்துவம் வந்தது?"என்றுகேட்க, அதற்குத்தலையாரி "இந்தவூரில் ஒரு பிராமணன் பயிரிடுகிறவன்;அந்தப்பயிர் காக்குநிமித்தம் போகும்போது வழியிலே ஒரு கழுகு, சரீரத்திற் சத்தியில்லாத ஒரு பிராமணனைக் கொத்தித்தின்ன, அவ்வபாயத்தினின்றும் பிராமணனை விடுவிக்கப் பெலனிருந்துங் கண்ணால் பார்த்துக்கொண்டு இவன் சும்மாபோனான். அப்பொழுது அவ்வழியில் ஒரு ரிஷிவந்தார். அவர் "அடா! அடா! வில க்கு விலக்கு" என்றுசொல்ல இவன் பயிர்காக்கும் நிமித்தம் சீக்கிரம் போனான். கழுகு கொத்தித்கொத்தித் தின்றுவிட்டது. அப்போது ரிஷி "அடே பாவி! சாமர்த்தியமிருந்தும் பிராமணவதையைப் பார்த்துக் கொண்டுபோனாயே" என்று உதாரணஞ்சொல்லிக்காட்டி "நீ இராட் சதனாகக்கடவாய்" என்று சபித்தார். அப்போது பயந்து தெண்டம்

பண்ணி "சுவாமீ-! கெட்டுப்போனேன்; இரட்சிக்கவேண்டும்" என்றும், "விமோசனம் எப்போது?" என்றும் கேட்டுக்கொண்டான். அப்போது அவர் "கீதா ஏகாதசாத்தியாயம் படித்துக் கங்கையைப் புரோட்சிக்கில் சாபவிமோசனம்" என்று சொன்னார். அந்தப் பதினோராமத்தியாயம் படித்த பிராமணர்வந்து எனக்கு நீங்களெல்லோருங்கூடி நியமம்பண்ணிய இடத்தில் படுத்திருந்தார். எனக்குத் தின்னப்படாமல் விட்டுவிட்டேன். அவரை யழைத்துவந்து அப்படிப்பண்ணினால் எனக்குச்சாபமும் நீங்கும், "உன்பிள்ளையும் வருவான் என்றான்" என்று தலையாரி சொல்ல, "நல்லது" என்று சுனந்தர்போய் அவனுக்குக் கேட்கப் பாராயணம்பண்ணிச் சலத்தை முகத்திலேதெளிக்க அவன் சாபவிமோசனமாய் விஷ்ணுசாயுச்சியமானான். இவன் நாள்தோறும் தின்றபேரெல்லாம் அப்படியே சாரூபமானார்கள். எல்லாரும் விமானங்கள்வந்து ஏறிப்போனார்கள். அப்போது தலையாரி "என்பிள்ளையைக்காட்டு" என்றான். "இவன்தான்" என்று காட்டவே, அவனை "வீட்டுக்குவா" என்றான். அவன் "உன்னைப்போல எத்தனை தகப்பன்" என்று ஞானோபதேசம்பண்ணினான். அவ்வுபதேசத்தினால் இவனும் மோட்சமடைந்தான்.

**பதினோராவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

---

## கஉ-வது அத்தியாய மான்மியம்.

தட்சணதேசத்திலே கோலவாபுரி என்றொரு பட்டணம்; அது வெகுசிங்காரத்துடனே கூடினது. அதிலே மாயையாகிற இலட்சுமியாலயம் மகாப்பிரசித்தம். அதிலே முப்பத்திரண்டு லட்சணத்தோடுங் கூடிய ஒரு இராசகுமாரன்வந்து இலட்சுமியை அனேகவிதமாய்த் தோத்திரம்பண்ண இலட்சுமி பிரசன்னமாகி "என்னவேண்டும்?" என்றுகேட்க, இராசகுமாரன் "என் தகப்பன் பிருகஸ்தானஅசுவமேதயாக முடியத்தக்க யத்தனம்பண்ணிஆரம்பித்தான். மத்தியிலே தேகம் நீங்கிப் போய்விட்டது. குறையாகம் முடிக்கிறதற்கு அவன் தேகத்தை எண்ணெயிலே பாகம்பண்ணி வைத்துக்கொண்டு நானிருந்துபண்ணிக் குதிரையும் யாகசாலைவந்து யூகஸ்தம்பத்திலே கட்டியிருந்தது; அதைக்காணோம்; அந்தக்குதிரையையழைப்பித்துக்கொடுக்கவேண்டும்" என்றான். அதற்கு இலட்சுமி "வாசலிலே சித்தசமாதியென்கிற பிராமணனிருக்கிறான்; அவனிடத்தில் யான்சொன்னதாகச் சொல்லு; அழைப்பித்துக் கொடுப்பான்" என்றாள். அப்படியே இராசகுமாரன் அவர்முன்னே

வந்தான். அப்பொழுது பிராமணர் "அம்மன் வரச்சொன்னளா, நல்லது இரு, உன்மனதின்படி செய்விக்கிறேன்" என்று தேவதைகளை நினைத்தார். உடனே முப்பத்து முக்கோடிதேவர்கள், இந்திரன்முதலியோர் வந்தார்கள். அவர்களைப் பார்த்து "இந்திரன் குதிரைகொண்டு போனன்; அதைப் பழையபடி கொண்டுவந்து கட்டிப்போட்டுவரவேண்டும்" என்றார். அப்படியே அவர்கள்செய்து உத்தரவுபெற்றுப் போய்விட்டார்கள். உடனே இராசகுமாரன் "என்தகப்பன் பிழைக்கவேண்டும்" என்ன, "நல்லது வா" என்று இருவருமாக யாகசாலையில் எண்ணெயிற் பாகம்பண்ணின இராசாவிடத்தில் வந்து சலத்தில் கீதா துவாதசாத்தியாயம் பாராயணம்பண்ணி அந்தச்சலத்தை முகத்திலே புரோட்சிக்க இராசனெழுந்திருந்து "நீர் யார்?" என்று கேட்டனன். உடனே இராசகுமாரன் நடந்த சமாசாரங்களெல்லாவற்றையும் சொல்ல, இராசன் "அப்படியா" என்று அந்தப்பிராமணனைப் பிரதட்சண நமஸ்காரங்கள்செய்து "இந்தஅசாத்தியமான காரியம் உம்மால் எப்படியாயிற்று?" என்றுகேட்டனன். அதற்கு அவர் "துவாதசாவத்தியாய மகத்துவத்தினலே" என்று சொற்றனர். அப்பொழுது அந்த இராசன் "எனக்கு அதையுபதேசம் பண்ணவேண்டும்" என்று கேட்க, உபதேசம்பண்ணினர். பின்பு யாகமுடித்து இராசா, அங்கிருந்தபிராமணர்கள், மற்றுமுண்டான சகலரும் விமானத்திலேறி விஷ்ணுசாரூபம் பெற்று மோக்ஷமடைந்தார்கள்; "கேள்பார்வதியே"என்று பரமேசுரன் சொல்லுகிறர். இந்த அத்தியாயத்துக்கு இன்னும் அநேககதைகளிருக்கின்றன; அவைகளில் "ஒன்று சொன்னேன்" என்றார்.

**பன்னிரண்டாவது அத்தியாயமான்மிய முற்றிற்று.**

---

## கங-வது அத்தியாய மான்மியம்.

தட்சணதேசத்திலே, துங்கபத்திரா தீரத்தில் அரியரன்பட்டணத்திலே சிவன், விஷ்ணு, காளி, மாகாளி மகாவரப்பிரசாதிகள். அநுமக்ஷரித்தீக்ஷிதனென்னும் பிராமணன் வேதவேதோத்தமன், சகலசாஸ்திரசம்பன்னனன், யாகாதிகள் பண்ணுகிறவன். அவன் ஸ்திரீ **துராசாரி** என்று பெயர். புருஷனை அதிக்கிரமித்து வீட்டிலிருக்கிறதில்லை, விடபுருஷாள் சகவாசம், மதுமாமிசபட்சணம் பண்ணிக்கொண்டு விடாளுடனே கூடியிருக்க இடமில்லாமல் ஒருவனத்திலே ஏகாந்தஸ்தலம் சங்கேதம்பண்ணிக்கொண்டு அங்கே யிவள்வருகிறது, விடபுருஷாளும் வருகிறது. வசந்தகால சந்திரிகையில் இவள் அந்தஸ்தானத்தில்வந்தாள்:

விடபுருஷாள் வரவில்லை. இரவெல்லாம் அப்புருஷாளைத் தேடி மனத்தளர்ச்சியுடன் சுழன்று புலிகிடந்த ஓர் புதரினருகில் வந்தாள். அப்போது புலிசீறிவந்ததுகண்டு அவள் "நீயார்?" என்றுகேட்டனள். அதற்கு அந்தப்புலி, "தெற்கே மலாலகன்னதீரத்திலே முனிபதாவென்றொரு பட்டணம்: அது பஞ்சலிங்கக்ஷேத்திரம்: அங்கே ஓர் பிராமணனுடைய பிள்ளையாயின யான் அநேகசாஸ்திர சம்பன்னனும், துர்த்தானங்கள் யாவையும்வாங்கி, வேதங்கள் விக்கிரயம்பண்ணி அனேகதிரவியம் சம்பாதித்தவனுமாயிருந்தும் ஒருவருக்கும் ஒன்றுங்கொடாமல் நாய்கடித்துச்செத்தேன்; அதன்பின் யமலோகம்போக "இவன்மகாபாவியானதால் புலியாய்ப் பிற" என்று சொல்லப் புலியாய்ப் பிறந்தேன். சாஸ்திரங்கள் படித்தபடியினுல் பூருவஞான மிருக்கிறது; அதனுலே புண்ணியவான்களைத் தொடுகிறதில்லை: பாவியைத்தேடி அடித்துப் புசிக்கிறது. "நீமகாபாவியாகையால் இங்கேவா" என்று அடித்துத் தின்றுவிட்டது. அதன் பின்னர் பிராமணஸ்திரீ யமலோகத்துக்குப் போய் அநேகமான கொடிய நரகமனுபவித்து, நீசகுலத்திலே நீசஸ்திரீயாய்ப் பிறந்து அங்கேயும் பழையவாசனைப்படி வியபிசாரம்பண்ணி, வனத்தில் ஒரு பத்திரகாளி கோயிலில் பூசைபண்ணுகிற வாசுதேவனென்னும் பெயருள்ள ஒரு பிராமணனுக்குக் கீதா பதின்மூன்றமத்தியாயம் பாராயணம்வரும், ஒருநாள் அப்பாராயணசமயத்தில் இவள் அங்கேவந்தாள். அந்தவசனங்களில் சிலகேட்டதனுலே உடனே திவ்வியதேகம் வாலாயிற்று. அப்போது விமானம் வந்து மோக்ஷமடைந்தாள்.

பதின்மூன்றுவது அத்தியாய மான்மிய முற்றிற்று.

## கசு-வது அத்தியாய மான்மியம்.

காஸ்மீரதேசத்திலே சரசுவதியாலயம்: குங்கும உற்பத்திஸ்தானம்: **சவுரியவர்மன்** இராசா; அவன் சிங்களதீபத்திலே **விக்கிரமவேதன** இராசாவுக்கு சிநேகிததருமத்தினுலே பெரியநாயாய் இரண்டனுப்பினுன். அந்தச் சவுரியவர்மனுக்கு இவன் யானையின்மேல் வைத்து இவ்விடத்தில் உள்ள அரியவஸ்துக்கள் அனுப்பினுன். இதுநிற்க, அந்த விக்கிரமவேதன இராசா அந்தநாய்க்குத் தங்கச்சங்கிலிகள்போட்டு பல்லக்குமேல்வைத்து அநேகவாத்தியங்களுடனே ஒருநாள் வேட்டைக்குப்போய் முசல்வேட்டைக்குப் பந்தயங்கள்பேசி நாய்களைவிடுத்தான். இந்த நாய்களுக்குள் பெண்ணுய் ஒருமுசலைத் துரத்திக்கொண்டு வெகுதூரம்போய் **வச்சரிஷி**யென்கின்றவர் ஆச்சிரமம்வர அங்கே ஒன்றுக்

கொன்று வயிரவர்க்கங்களில்லை. அவர் சிஷன் சுதந்தரனென்றுபெயர். அவர் காலலம்பின சலம் ஒருபள்ளத்திலே விழுந்திருந்தது. அதிலே யிந்த முசல்வந்து விழுந்துசெத்தது. இந்த நாய்க்கும்அந்தச்சேறு தெறித்து இரண்டுக்கும் விமானம்வந்து திவ்வியதேகமாய் மோட்சத்தை யடைந்தன. இந்தச் சுதந்தரர் பார்த்து "இன்னம் வைரமா?" என்று சிரித்தார். இதற்குள்ளே அந்த இராசகுமாரன் வந்து சுதந்தரரைப் பார்த்து "ஏன் சிரித்தீர்? இதற்கு வைரமென்ன? விமானம் வந்ததென்ன?" என்று கேட்க, அவர் "இது என்னுடைய குருவாச்சிரமம்: அதுவுமன்றி அவர் கீதா பதிஞலாமத்தியாயம் உபதேசம்பண்ணி யிருக்கிருர். அந்தக் கீதாபாராயண மகத்துவந்தங்கிய எனது பாதம் அலம்பின சலத்தில் முசல்விழுந்து, அந்த சேறு நாய்க்கும் தெறித்தது; அதனாலே இரண்டும் மோக்ஷமடைந்தன. வைரமேதென்ருல், மகாராஷ்டிர தேசத்திற் பிரஸ்தாந்தரமென்கிற பட்டணத்திற் கேசவனென்கிற பிராமணன் சூது விளையாடுகிறதிற் சமர்த்தன்: அவன் ஸ்திரீ விலோபனி வியபிசாரி; அவளுடைய புருஷன் அதையறிந்து அவளை வெட்டிப்போட்டான். அந்த வைரத்திஞலே பிராமணன் முசலானுன். ஸ்திரீ நாயானுள். இவர்களிருவரும் வைரத்திஞலே தூரத்திவந்ததைக் கண்டு அந்தத் தேகம்போய் மிருகமாகியும் வாசனை இப்படியிருக்கிறதென்று சிரித்தேன்" என்ருர். இராசகுமாரன் "எனக்கு அந்தப் பதிஞலாமத்தியாயம் உபதேசம்பண்ணும்" என்று கேட்க, அப்படியே உபதேசம்பண்ண மோக்ஷமடைந்தான்.

பதிஞன்காவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.

---

## பதினைந்தாவது அத்தியாய மான்மியம்.

கௌடதேசத்திலே கிருபாலராசிமனென்று ஒரு இராசா இருந்தான். அவன் திரிலோக பலவானுயினும் அவன் வஞ்சனையினுலே பாவகிருத்திய முடையவனுய் அனேகம்பேரைக் கொன்றுன். அந்தப் பாவத்திஞலே அநேக துன்பமனுபவித்து அதனாலே இறந்து சிந்துதேசத்தில் குதிரையாய்ப் பிறந்தான். அந்தக் குதிரையைக் கோமுட்டியொருவன் வாங்கிக்கொண்டுவந்து, சரபேருண்டனென்கிற இராசாவினிடத்தில் கிரயத்துக்கு விற்றுன். அவன் வாங்கி அதன் மேலேறிக்கொண்டு வேட்டைக்குப் போனுன். வெகுதூரம் போய்ச் சேனைகள் வாராமல் தனித்துத் தாகத்திஞலே ஒருமலைச்சாரில் வந்திறங்கிக் குதிரையைக்கட்டித் தண்ணீருக்காக மலைமேலேறினன்,

உயரவிருந்து ஒரு இலை இவனது தலையில்விழ அதையெடுத்துப்பார்த்தான். அதிலே கீதா பதினைந்தாமத்தியாயத்தில் ஒருசுலோகத்திற் பாதியெழுதியிருக்க அதை உரக்கப் பாராயணம் பண்ணினன். அந்த வசனம் குதிரைக்குக் கேட்டுக் குதிரை கீழே விழுந்து சாக உடனே விமானம் வந்து திவ்ய தேகத்துடனே போயிற்று. இராசகுமாரன் பார்த்து ஆச்சரியமுற்றுக் குதிரைபோன விசனத்துடன் உயரவேற அங்கே ஒரு ரிஷியினுடைய வனம்தோன்ற அதிலே போக ஒரு பன்னகசாலையில் ரிஷியிருக்கக்கண்டான். அவரை நமஸ்காரம்பண்ணித் தான் வந்த சேதிகளெல்லாஞ் சொல்லினன். அவர் பூருவசென்ம வர்த்தமானங்களெல்லாஞ் சொல்லி "இலையிலே எழுதிய கீதாசுலோகம் பாதியைக் கேட்டதனால் குதிரைச் சென்மம் போய் மோக்ஷமடைந்தது" என்று சொல்லினர். அதைக்கேட்டு இராசா பட்டணத்துக்கு வந்து பிள்ளைக்குப் பட்டங்கட்டிவிட்டுத் தான் ஏகாந்தஸ்தலத்திலிருந்து அந்த அரைச்சுலோகமும் பாராயணம் பண்ணித் தத்தேகநிஷ்டனாய் மோக்ஷமடைந்தான்.

**பதினைந்தாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

## ௧௬-வது அத்தியாய மான்மியம்.

உச்சரிதேசத்திலே கஷ்கபாதனனென்கிற இராசா அநேகமான கீர்த்திமான், வீரன். அரிமர்த்தனனென்கிற பட்டத்துயானை மதங்கொண்டு ஒருவரையுங் கிட்டவொட்டாமல் அதிக்கிரமித்திருக்கிற சமயத்தில் ஒரு பிராமணன் தெரியாமற் சமீபத்தில் வந்தான். அவனை அது ஒன்றுஞ்செய்யவில்லை. அந்தப்பிராமணனை இராசா அழைப்பித்து "உம்மிடத்தில் என்ன மகிமையிருக்கிறது?" என்றுகேட்டான். அதற்குப் பிராமணன் கீதாபதினாறாமத்தியாயத்திற் சிறிது சுலோகம் வரும்" என்று சொல்லினன். "ஆனால் அதை எனக்குபதேசம் பண்ணும்" என்றான். "அப்படியே ஆகட்டும்" என்றுபதேசம்பண்ணினார். உடனே பிள்ளைக்குப் பட்டங்கட்டிவிட்டுத் தான் மதயானை சமீபத்திற்போக அது சும்மாவிருந்தது. அவ்விசேஷத்தையறிந்து நிரந்தரம் பாராயணம் பண்ணி மோக்ஷத்தை யடைந்தான்.

**பதினாறாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.**

## ௧௭-வது அத்தியாய மான்மியம்.

முற்கதையிற்கூறிய அந்த கஷ்கபாதன்மகன் சுஸரியானன் பின்னும் இராசகுமாரர்களுடனே சபதம்பண்ணிக்கொண்டு யானைக்குச்

சமீபத்திற் போனான். அந்த யானை அவனைக் கொன்றுவிட்டது. அந்த இராசகுமாரன் மானதேசத்திலே யானையாய்ப் பிறந்து விருத்தாப்பிய சமயத்தில் வியாதிமிகுந்து மரணகாலஞ் சமீபித்து அந்தத் தேசத்து இராசா வந்துபார்த்து வைத்தியம் பண்ணச்சொல்ல அந்தயானை "வைத்தியம்பண்ணவேண்டாம்: கீதா பதினேழாமத்தியாயம் படித்தபேர்களை யழைப்பித்தாற் பிழைப்பேன்" என்று சொல்லிற்று. அப்படியே விசாரித்துப் பதினேழாமத்தியாயம் படித்த பிராமணனை யழைப்பிக்க அவனைக் கண்டவுடனே யானைத்தேகம் போய்ப் பழைய சுவசியானாகி யது; அப்போது விமானம் வர அந்த இராசா "நீ யார்?" என்று கேட்கப் பூருவ சென்ம விருத்தாந்தமெல்லாஞ் சொல்லி விமானத்திலேறிப் போனான். அந்த இராசனும் அந்தப் பிராமணனிடத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டு முத்தியடைந்தான்.

பதினேழாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.

## க௮-வது அத்தியாய மான்மியம்.

மகாமேருவிலே, அமராவதிபட்டணத்தில் தேவேந்திரன் சிங்காதனத்திலிருந்தான். அங்கே ஒரு விஷ்ணுதூதன் ஒரு இந்திரனை அழைத்துக்கொண்டு வந்தான். அவனைக் கண்டவுடனே இந்த இந்திரன் மூர்ச்சையாய் விழுந்தான். விஷ்ணுதூதன் இவனை அப்புறந்தள்ளிப் போட்டு அவனைச்சிங்காதனத்தில் வைத்துப் பட்டங்கட்டிவிட்டுத் தான் போய்விட்டான். பழைய இந்திரன் மூர்ச்சை தெளிந்து பார்த்துப் பேச மாட்டாமல் விஷ்ணு வருகேபோய்த் தோத்திரம்பண்ணி "எனக்கு வேறாக நியமனஞ்செய்திருக்கிறவிவனார்? என்ன புண்ணியம் பண்ணினான்?" என்று கேட்க, விஷ்ணுவானவர் "கீதா பதினெட்டாமத்தியாயத்தில் ஆறுசுலோகம் படித்தவனாதலால் அவனுக்கு அந்த மகத்துவம் வந்தது" என்றார். அதைக் கேட்டவுடனே இந்திரன், கோதாவரி தீரத்திற் காளிகாபுரத்திற் காலேசுரனென்று ஒருபிராமணன் இருந்தான், அவனிடத்திற் பிராமணனாய்ப்போய்ப் பிரமச்சரிய விரதமனுட்டித்து நமஸ்காரம்பண்ணிப் பதினெட்டாமத்தியாயம் உபதேசம் பெற்றுப் பாராயணம் பண்ணி விஷ்ணுசாயுச்சிய மடைந்தான்.

பதினெட்டாவது அத்தியாய மான்மியம் முற்றிற்று.

பத்மபுராணத்திலுள்ள கீதாமான்மியம்
முற்றுப்பெற்றது.

# இக்கலியுகத்தில் கொஞ்சக்காலத்திற்கு முன்னே நடந்த இராஜமந்திரி சம்வாதரூபமாகிய ஓர் ஆச்சரியமான கீதாமான்மியக் கதை.

இவ்வுலகின்கண் சிறந்த மந்திரிகளுக்குள் முழுமந்திரி சுமந்திரன், முக்கால் மந்திரி சத்தியகீர்த்தி, அரைமந்திரி பட்டி, கால்மந்திரி அப்பாச்சி; இந்த நான்குதரத்தாரில் கலியுகத்தில் மிகுந்த மதியூகியாகவும், இராசதந்திரியாகவும், சர்வவிஷயானுபவகைவல்லியாகவும், ஞானசூர்யராகவு மிருந்தவர் அப்பாச்சி. அவரை ஒப்பற்ற முக்கியரொன்று கருதி அக்காலத்தில் அரசு செலுத்திவந்த ஒரு பாக்ஷாமகிபர் சர்வ சமயாங்கீகாரமாகவும், ஞானபராளின் ஆட்சேப ரகிதமாகவும் சுத்தாத்வித, சுயம்பிரகாச, எதார்த்த ஆத்மஞான மோக்ஷகைவல்லியநிலையைப் பயக்கும் திவ்விய கிரந்தமெதுவென்று விசாரணைசெய்து தமக்கு அனுப்பும்பொருட்டுத் தமது நகரத்திலிருந்து முஹராஞ்செய்த கடிதம் ஒன்றை அனுப்பினார். அதைக்கண்டு அப்பாச்சியானவர் இவ்வுலகத்தின்கண் வேதாகமபுராண காவியாலங்கார ஸ்மிருதிகளிலும் விசேஷமுள்ளதென்றும், சமயகோடிகளினுடைய தர்க்கநிவாரண சாக்ஷிபூதமென்றும், இருவினையகற்றிச் சீவாத்மபரமாத்மஐக்யகதியென்றும், ஷை பாக்ஷாபூபதி எழுதிய கடிதலட்சணத்திற்குக் குறைவில்லாததென்றும், அதற்குமேலொருநூலுமின்றி ஒப்பற்ற வேதபரமரகசியமென்றும் வழங்காநின்ற ஸ்ரீமத் பகவற்கீதையை அரபிபாஷையில் மொழிபெயர்த்து பாக்ஷா அவர்களுக்கு அனுப்பினார். பாக்ஷாவதிபர் இந்த அத்விதகிரந்தத்தைத் தம்முடைய சமுகத்தின் நாற்றிசைமந்திரிகளுக்குங் காட்டினார். அதை முத்திசை மந்திரிகளுந் திவ்வியமென் றங்கீகரிக்க, மற்றோர்திசை மந்திரிமாத்திரம் தம்மதத்தைச் சாராமலிருக்கிறதென்று அரசனுக் கறிவித்தான். அரசன் சீர் தூக்காமலும், அப்பாச்சிக்குப் பதிலுத்தரமெழுத ஆலசியப்பட்டதாலும் மதியூகியாகிய அப்பாச்சி நுட்பத்தைக் கிரகித்து மறுபடியும் ஒரு கடிதத்தில் "இந்தப் பகவற்கீதையை அலட்சியஞ் செய்தவன் நீசபீஜமா யிருக்கவேண்டும்: அவனது துராட்சேபத்தினாற்றமது அங்கீகாரக்கடிதம் வருகிறதற் காலசியமாயிற்றென் றுணர்ந்தேன்; ஆதலால் அந்தச் சந்தேகத்தை நிவிர்த்திசெய்துகொள்ளவேண்டும்" என்று எழுதினார். அதைக் கண்ட பாக்ஷாவானவர் அம்மந்திரியின் தாயின் வாய்மொழியால் அவன் நீசபீஜமென் றுண்மை தெரிந்துகொண்டு அவனைக் கண்டித்துப்போட்டு ஸ்ரீமத் பகவற்கீதையைப் பிரதிகாலம் பாராயணஞ்செய்து சீவன்முத்தரானார்.

கீதாமான்மியக் கதை முற்றுப்பெற்றது.

உ

கணபதிதுணை.

ஸ்ரீ தத்துவராயசுவாமிகளால்

மொழிபெயர்த்தருளிய

சிவப்பிரகாசமென்னும்

# ஈசுரகீதை.

இஃது

ஸ்ரீ. கோ. சித. மடம்

ஸ்ரீ பொன்னம்பலசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டதற்கிணங்க,

ஷை மடாதிபர்கள்

ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின்

உத்தரவின்படி

முள்ளங்குடி நாராயணசுவாமியால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

# ஈசுரகீதை அத்தியாய அட்டவணை.



| எண். | விஷயம். | பக்கம். | பாடல் தொகை |
|---|---|---|---|
| | பாயிரம் ... ... ... ... | க | ச |
| க | இருடிகள் வினவல் ... ... ... | உ | உசு |
| உ | சாங்கியயோகவர்ணனம் ... ... ... | சு | ருரு |
| ங | சம்பிரதாய வர்ணனம் ... ... ... | கச | உகரு |
| ச | பத்திமை வர்ணனம் ... ... ... | கசு | உக |
| ரு | விசுவரூப வர்ணனம் ... ... ... | கக | ச0 |
| சு | சிவசத்தியின் செயலுரைத்தல் ... ... | உரு | உரு |
| எ | தத்துவநிசம் விபூதியுரைத்தல் ... ... | உக | உ0 |
| அ | பிரபஞ்ச வர்ணனம் ... ... .. | ஙஉ | கங |
| க | மாயாவிகார முரைத்தல் ... ... ... | ஙச | கஅ |
| க0 | தத்துவதெரிசனம் ... ... ... | ஙஎ | கச |
| க | யோகமுரைத்தல் ... ... ... | ச0 | அஎ |

உ

கணபதிதுணை.

சிவாயபரப்பிரம்மணேநம:

# ஸ்ரீ சாரகீதை.

## பாயிரம்.

பூதமைந்தோ டாவிமதிபுருடனாகிப் புணர்ந்தென்றும்
பேதமில்லா வறிவுருவாய்ப் பிறங்குகின்ற பேரொளியோ
னாதிமூவர்க் கறிவரியோனரிவை பாகனாமலன்
பாதபங்கயங்க டலைவைத்தே பணியும்பரிசினனால். (௧)

வேறு.

இலங்கியமறைசனார்க்கு மியம்புதற்கியலாதென்ன
மலங்கியசிந்தையோடு வானவர்மூவர் நிற்க
விலங்கியலனையவென்னை வேதகஞ்செய்தென்னுள்ளே
துலங்கியசொரூபானந்தன் றுணையடிதொழுதல்செய்வாம். (௨)

வேறு.

முன்மதியணிந்தசெக்கர் நன்மவுலிமுதல்வனே யென்னமுன்னின்று, நன்மதிமுனிவர்கேட்ப வன்பொடுநல்கிய நான்மறைப்பொருளைப், புன்மதிச்சொலவும் பொருளுமொன்றுணரோன் போதகஞ்செயப்புகுமிதுகண், டென்மதியெனக்கே நகைசெயுமானா லேதிலார்க்கென் செயாதிதுவே. (௩)

சிவன் றிருவுருவுகொண்டு முன்பருளிச்செய்ததோர் புராணமாதலினாற், சிவன்றனையளித்த பான்றிருநாமஞ் சிவப்பிரகாசமாமதனாற், சிவந்தசெந்தமிழா லியார்க்குமிந்நிலத்தே சிவந்தனைத்திகழ்த்திடுந் தெளிவாற், சிவன்றனக்குரிய தாதலானுமஞ் சிவப்பிரகாசமென்றுரைப்பாம். (௪)

பாயிரம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௪.

முதலாவது,

## இருடிகள் வினவும் அத்தியாயம்.

பிரமாண்டங்கள் படைத்தவப்பரிசும் பெருமையுமனுக்களெல்லைகளும், வாமுறவுரைத்தாய் வளம்பெறவதிலே வாய்மையால் வருணநாலினிலுந், தருமதற்பரராய் ஞானயோகத்தே சாலவாதரிப்பவர்தம்மார், நிரமுறப்பரவுந் தேவதேவர்க்குந் தேவனுண்டென்று செப்பினையால். (க)

நாதனுபரிய நான்மறைதெரிந்து நன்னெறியளிக்குநாரணனு
மாதவமுனிபா லறிவெலாமறிந்தா யாதலாலரும்பரந்திகழ்த்தி
யேதமார்பிறவி யறுப்பதாஞான மேததுவியம்புவாயென்று [னர்.
சூதமாமுனியைச்சவுனகன் முதலாந் தொல்லைமாமுனிவர்கள் சொன்

வேறு.

சூதமாமுனிமுனிவர்கள் சொன்னவாகேட்டுப்
போதமாநெறியளித்தன புராணனைநினைவுற்
றோதுவாரொருப்பட வவன்றனக்குணர்வளித்த
நாதனாகியவியாதனு முறைவிடநடந்தான். (௨)

கார்முகில்போலுமேனி கமலமாமலர்போலுங்கண்
ணோர்மிகுமுனியையெல்லா முனிவருமிறைஞ்சச்சூதன்
பார்மிசைத்தெண்டம்பண்ணிப் பன்முறைவலமாய்வந்து
கூர்மிகுமன்பிற்சென்னி குவித்தகையோடுநின்றான். (௩)

அருந்தவத்தோர்களெல்லா மனுமயநுரைத்தவர்க்குப்
பொருந்துமாதனங்கற்பிக்கப் பூசுரர்முகங்கணோக்கி
யிருந்தவங்கல்விகேள்விக் கில்லையேயிடையூறென்று
பெருந்தகையுரைத்தான்சூதன் பின்னரும்வணங்கிச்சொல்வான் (௪)

வேறு.

இத்தபோதனர்கள் சாந்தியா லறத்தா லிறந்தவரிறையியல்பறிவான், பத்தரானவர்களேவலேசெய்யும் பாவகம் பிறந்தனெவர்க்கு, மத்தனுரியபண்டாமையாய்முனிசட்கருளியதேதெனக்களித்த, சுத்தஞானத்தை யிவர்களுக் கருளாற் சொல்லெனத் துணையடி தொழுதான். (௫)

வேறு.

சொன்னவாசகமுளங்கொளா விறைதுணைப் பதங்களை நினைந்துதன், சென்னியாலுறவணங்கி விண்ணவர்க டேவனும்பரவுதேவ

னே, முன்னொர்நாள் மிகுசனற்குமாரன் முதன்முனிவர்கட் குல
கின் மூலமாந், தன்னையாருளி னேதினனினிது கேண்மி னென்று
முனிசாற்றினான். (எ)

வேறு.

தலைமைசேர்சனற்குமாரன் சனந்தனன்சனகன்வெள்ளி
யலைவிலாவுருத்திரன்ற னங்கிராவாமதேவன்
கலைதெரிபிருகுயோகி கபிலனத்திரிகளுதன்
மலைவறுவசிட்டனோடு மரீசியாமதியின்மிக்கோர். (அ)

வேறு.

பரமனதருளாலன்றியே பரத்தைப்பரப்புறப் பார்த்ததம்மதி
யா, னொருவரோடொருவர் பன்னெடுங்கால முசாவியோன் றுணர்
வுறப்பெறாமல், நைமிசபதரி வனமடைந்தரிய மாதவம்பருந்தினர்
வருந்த, நரனொடுநாரயண னொருமுனியாய் நற்றவர்க்கருள்செய
நடந்தான். (௯)

நாரணனருளிற் பணிந்துமா முனிவர்நான் மறைமொழியினெல்
லழுத்தக், காரணந்தன்னை யறிந்துநீர்தபித்த காரணமென்னெனக்
கவுண, னேரணிமறையின் பொருடெரிந்திடு நற்செங்களாலியன்றில
தில்லர்வா, வாரணப்பொருளை யறிகுவாய்நீயே யாதலாலுன்னையே
யடைந்தோம். (௧௦)

வேறு.

ஏதுகாரணமிவ்வுலகினுக் கெல்லாமென்று நின்றளிப்பவனெவன்று
னேதுதானென்பாவேது வீடேவன்பிறப்பவனெவன் பிறப்பிப்பா
னேதுமாராலே கண்டிடப்படுவதினையறு பிரமமேதெல்லா
மோதுவாயெங்களைய நீயல்லாலொழிப்பவரிலலை யென்றுரைத்தார்.

வேறு.

அந்தவெல்லையி லம்புயைகேள்வனும்
வந்தநன்றவ வேடத்தைமாறியே
சிந்தையாலிமை யோர்க்குந்தெரிக்கொணா
வெந்தைதன்னொளி யாலேயிலங்கினான். (௧௧)

திங்களையிறுபோலத் திகழ்ந்தவெண்
சங்குமாழியுந் தண்டஞ்சாரங்கமுஞ்
செங்கைநான்குந் திருமறுமார்பமும்
பங்கயாலயப் பாவையுங்கூடவே. (௧௨)

சுட்டபொன்னினுந் தூயொளியாயொளி
விட்டிலங்கினன் விட்டுவிளங்கொளி
மட்டமன்றிய மண்டலத்தால்வெளிப்
பட்டனன்னரனாய் வந்தபான்மையான். (கச)

வேறு.

அரியுருவுகண்டக மகிழ்ந்தவளவிற்கே
பெரியபரிவோடு பிறைசூடியபிரான்முன்
சுருதிமுடிவோதுபொருள்சொல்லுத றுணிந்தே
கருதவரியான்முனிவர் கண்ணில்வெளிநின்றான். (கரு)

வேறு.

ஜெயசெயதேவர்போற்றுந் தேவமாதேவபோற்றி
யயமறமுனிவர்போற்று மம்பிகாபதியேபோற்றி
நயமுறுமன்பாலன்றி நணுகுதற்கரியாய்போற்றி
செயலறவிருந்தயோகிற் றிகழ்ந்திடுஞ்சிவனேபோற்றி. (கசு)

கந்தனைகனல்கானீராற் கலந்திங்ஙன்கட்டப்பட்ட
வெந்திறம்வல்லாய்போற்றி யியங்கிடவளிப்பாய்போற்றி
யந்தமுஞ்செய்வாய்போற்றி யானந்தவுருவேபோற்றி
பந்தனையறுப்பாய்போற்றி பரமகாரணனேபோற்றி. (கஎ)

வேறு.

வெல்கபூதபதிவெல்கசீவபதி வெல்கயோகபதிவெல்கவே
பல்குபேருருவுகண்ணைக்காண்முடி பகர்ந்திடற்கரியபான்மையாய்
தொல்லைநான்மறையினாலுமுன் னியல்புசொல்லலாகுமனைவல்லவால்
வல்லவாறுசிலசொல்லியாமுனை வழுத்துகோமெனவணங்கினார். ()

வேறு.

துதித்தமாமுனிவர் தலைகளால்வணங்கித் தொழுதகையினர்களாய்நிற்பக், கொதித்தவான் புலத்துங்கொண்டல்வந் துதவிற்றெறுப்பவேகொடிய வெங்கூற்றை, யுதைத்ததாளுடையா னுலகமுண் டுமிழ்ந்த வொருவனைத் தழுவியிங்கிவர்கள், பதைத்தகாரணமுடன் செய்யவேண்டுவதென் பகரெனப்பவளவாய் மலர்ந்தான். (ககூ)

அந்தமாவிறைவனருள் செய்வாசகத்தைக்கேட்டவ ரருந்தவ வெரியால், வெந்தபாவத்தால் விமலபாவத்தான் மெய்ப்பொருள் விளங்குவான்வேண்டி, யெந்தையேயெனையே யடைந்தனரிவர்கட் கிங்கியான் கேட்டுடனிருப்பப், பந்தவேரறுக்கும் பரமஞானத்தைப் பகர்ந்தருள் செய்கெனப் பகர்ந்தான். (உ0)

உன்னை நீயுணர்ந்தியல்லது வேறு ருணருவாருளது பேராருளாற்
றன்னையேதனாற்றானறியறிவு சங்கராவிவர்க் கருளென்று
பின்னர்மாமுனிவர்தங்களை நோக்கிப் பிஞ்ஞகன்பெருகியவருளா
லென்னை நீர்வினவுமரும்பொருள்வினவி டையதுவீரெனவவர்க்கிசை
[த்தான். (உக)

வேறு.

கேசவனுரைத்தமாற்றங் கேட்டவர்பணிந்துபின்னு
மீசனை வினவுமெல்லை யிருவிசும்பிடையேதெய்வ
வாசனம்வந்ததாங்கே யரியொடுமளவிறந்த
தேசினாலகிலமெல்லாந் திகழவீற்றிருந்தான்றேவன். (உஉ)

வேறு.

யாதொன்றிலடங்க விளைந்தவெலா
மியாதொன்றிடைநின்ற தொடுங்குவதப்
பூதங்களினாதனோர் பொன்னணைமே
லேதங்கெடவேறி யிருந்தனனால். (உங)

வானேமுதலியாவையு மன்னிடமாய்த்
தானேமுழுதாகிய தத்துவமாங்
கோனேயிவர்கண்டு கொளும்படியா
னானேயரியோடு மோராதனமேல். (உச)

ஓவாமையுளத் திடையோகுசெய்வார்
பாவாலயமேவு பரம்பொருளைத்
தேவாதிபர்தேடு சிவன்றனையே
யாவாவவர்கண் டனராதனமேல். (உரு)

வேறு.

அளவிறந்தவன்பாகிய வருந்தவர்க்கமலன்
முளரியங்கண்வண்டுழாய்முடி முகுந்தனை நோக்கி
வளமிகுந்தமெய்ஞ்ஞான நான்மறையுமக்குரைப்ப
வுளமொருங்கியன்போடு கேட்டுணர்மினென்றுரைத்தான். (உசு)

முதலாவது,

இருடிகள் வினவுமத்தியாய முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩0.

## இரண்டாவது,
## சாங்கியயோக அத்தியாயம்.

மறைபயின் முனிவர்கேட்ப மாமறைமுடிவினாலு
மறிவருமறிவானந்த வருளுருவமலன்றன்பாற்
பிறிதருபேதநீத்துப் பெயர்விலாதொன்றாயெங்குஞ்
செறிதருந்தன்னையீசன் றெரிதரவியம்பலுற்றான். (௧)

அறைவதன்றிந்தஞான மியாவருமறியாராகுன்
மறைவுறச்செய்வதொன்றாய் மன்னியேவுள்ளதென்றுந்
திறனுடையியமாதி செய்தசீர்மறையோராலு
மறிவரும்பொருளை நீங்க ளறிமினென்றருளிச்செய்தான். (௨)

வேறு.

இந்தஞானத்தை யெய்தியவின்பத்தா
ரந்தமில்பிரமத் தருவாயினோர்
பந்தமேவிடார்பண்டு மின்றுமென்றே
யெந்தையீறிலி யீசனியம்பினான். (௩)

வேறு.

மறைவுறும்பொருள்களினும் மறைவுறும்பொருண்மிகவு
மறைவுறும்படிசெயலை யறவிருந்திடவுளது
செறியுமன்புடைமையொடு திகழ்தருந்தவமுனிக
ளறிவுறும்படியிதனை யறைவனென்றருளுமிறை. (௪)

வேறு.

அறிவெனவுரைக்கப்பட்ட தவனுடையுருவுதன்னை
குறைவிலாநிமலன்சாந்த னுண்ணியனென்றுமுள்ளோன்
செறியுமெய்ப்பொருட்குமுள்ளாய்ச் சின்மயமாயேகான்றாய்ப்
பிறிதருமவித்தைக்கெட்டாப் பெற்றியனென்றானீசன். (௫)

யாதொருபொருட்குமுள்ளா யிருந்தளவறிவுதன்னை
மேதகுபுருடனென்று முயிரொன்றுமீசனென்றும்
பேதமில்காலமென்று மனமொடவ்வியத்தமென்று
மோதிமறைகளென்றே யுரைத்தனனெழில்விலீசன். (௬)

வேறு.

தூங்கவன்பாலாவவெலா மவனிடையேயாவதுவு
மோங்கியமாமாயையினை யுடையனதிலார்ப்புண்ணோன்

பாங்குறநாளுவுடலம் பண்ணியிடுமாயிடினு
மீங்கிவை தன்னிடைத்தோயா திவைநடத்துமியல்புமிலான். (எ)

பந்தமதிலொருக்காலும் பற்றுணைப்பந்தஞ்
சிந்தைசெய்துந்தான்செய்யான் செய்வானேயேசிற்கு
மூந்தியவான்காற்றனனீர் மண்ணெல்லன் முழுதுமா
யந்தமிலாவானந்த வறிவுருவே யவன்வடிவம். (அ)

வேறு.

உயிரினோடுமனமவ்வியத்தமுறுகந்தமாகி புலனைந்தலா
னயர்வினுகியகமென்றநின்றறியுமந்தநாற்கரணமூர்மிலான்
பெயர்விலாதுசொலும்வாக்கினோடு முதலைந்துமாய்விடயமும்மிலா
னுயர்வதாயவறிவேதனக்குருவமென் றுரைக்குமொளிமேனியோன்.

வேறு.

அயில்கின்றவவைமுதலாம் போகநுகர்பவனல்ல
னுயிரல்லனுயிர்க்குயிராம் புருடனெனுமவனல்லன்
மயலொன்றியுளமாயை யதுவல்லன்மற்றெல்லா
மயர்வின்றியறிகின்ற வறிவுருவென்றேயறிக. (௧௦)

வேறு.

இருளுடனேயொளி யாவதெவ்வண்ண
மருவவிலாவவை மற்றதுபோல
விரிவுளதாய சகந்தனினோடும்
பொருவலிலாத பண்புணர்வெய்தான். (௧௧)

உலகினிலெவ்வண மொண்ணிழறன்னோ
டிலகுமெயிற்கல வாததுபோல
நிலையிலதாய சகத்தொடுநில்லா
னுலவலிலாதொளிர் கின்றபரன்றான். (௧௨)

வேறு.

அறிவினோடொன்றிநிற்குந் தமத்தொடவிகாரமாங்கே
யறிவினிற்கலக்குமென்று மனைத்துடனிற்குமாகி
யறிவினுக்கனந்தகோடி கற்பம்வந்திறந்திட்டாலும்
பிறிவதற்காகுமுத்தி யில்லையேபேசிலென்றும். (௧௩)

முத்தியையடைந்துயர்ந்த சித்தநன்முனிவனொன்று
மொத்தபோதிவேதன்பா லுளதவிகாரமென்றுஞ்
சுத்தமுற்சுகதுக்கங்க டொடர்பிலானந்தரூப
சித்தமென்றிடவுங்காண்ப னென்றனனிகரிலீசன். (௧௪)

### வேறு.

யானேசெய்கின்றனனெனவையுஞ் சுகதுக்கங்களென்செயலே
யூனைவாடியிடறடித்த லுடையோனென்றுரைத்திடுவோ
ராணவறிவின்றன்மேலே யாங்காரத்தையிடுதலினா
னானேயெல்லாமென்றிருப்பர் ஞானமில்லாரெனவறிக. (கரு)

### வேறு.

அறிவினையுடையராகி யருமறைமுடிவுகண்டோர்
செறியுமெய்ப்பொருட்குஞ்சான்றாய்ச் சின்மயமாயேதன்னிற்
பிறிதருமவித்தைக்கெட்டாப் பெற்றியோடெங்குநிற்கு
மறிவெனவுரைப்பரல்ல தயலொன்றுமின்மைகண்டே. (கசு)

### வேறு.

இன்பமொடுதுன்பமது வின்றியொர்விகாரத்
தன்கணிலாவறிவு சார்வதிலைபந்தம்
பின்பதுளனாவதறி யாமைமுதலாலென்
றென்பதுளதாகுமுட லோடியையவென்றும். (கஎ)

எப்பொழுதுநின்றுதய மானவொளிதானே
மெய்ப்படவிருந்தறிவ தாகியெவ்விடத்து
மொப்பில்பரனாகுபுரு டன்னகமணைந்தே
செப்பரியவேறுபல செய்வனெனுநின்றே. (கஅ)

இத்தன்மைபதாகுமவ் வியத்தமொடுகூடுமெறி
வெத்தனையுமுட்புற மிருந்தறியுமேனுஞ்
சுத்தமதுவாயதன துண்மையறியாதே
யத்தன்மையதாயவுரு வாயழியுமன்றே. (ககூ)

### வேறு.

தானலாதொன்றைத்தானே யறிந்திடுமதனாலென்று
மானதாஞ்சுகதுக்கங்க ளியாவையுமுறப்புண்டாக்கு
மீனமாமயலோடொன்றி யிருந்திடுமுடலங்கொண்டே
யானதாயழியுமென்று யறியாமைமுதலாய்க்கொண்டே. (உ0)

### வேறு.

கருமஞ்செயவிடர்வந்துறு மதுபுண்ணியபாவந்
தருமென்றுரைசெயுமாமறை யவையாகியவசமே
யுருவந்தருமுழுதும்முள தாகும்மெனவொழியா
வருடந்திடுமொளிமேனிய தறிகென்றருள்செயுமால். (உக)

வேறு.

அழியாதெங்குமுளதாகி யனைத்துட்புறம்புந்தானிரம்பி
யொழியாவறிவாயொருகுற்ற முறைத்தற்கரியதொருபொருளே
கழியாமாயையதனாலே காணப்பலவாய்த்தோன்றியிடு
மழிவாயினதென்றொன்றுமிலா திருக்குமதுவேயியல்பென்றான். ()

வேறு.

ஆதலான்முனிகளுண்மை யொன்றெனவுரைப்பர்வேறும்
பேதமவ்வியத்தத்தாலா மென்றனாதுவுமென்று
மோதியமாயைதன்னை யாசரித்திருந்தமெய்யு
ணீதியதென்றுகொண்டே நிகழ்த்தினனிகரிலீசன். (௨௩)

வேறு.

யாதொர்படிதூமமொடு தூளியொளியாய
நீதியுடைவானைமறை யாதவணமேபோ
லோதுபுலனோடு கரணம்முறுபவெல்லாம்
போதமுடனொன்றியவை நின்றுபுணராவால். (௨௪)

அடுத்தநிறமெத்தனைய தாயபடிகம்வே
றடுத்திடவிலாதுதன தாயவொளியேபோ
லடுத்தகமதாகியனை யாதவறிவென்றும்
விடுத்திருளைமிக்கொளிய தாய்விரியுமன்றே. (௨௫)

நல்லறிவுளோருலகை ஞானவடிவென்றே
சொல்லுவர்களவ்வறிவி லார்தொழிலில்வேறும்
பல்வகையதேபொருள தென்றறிதல்கொண்டே
நில்லதிலதாமுலகு கண்டிடுவர்நின்றே. (௨௬)

வேறு.

யாதொருபொருட்குமுள்ளாய்க் குணமின்றியெங்குந்தானாய்ச்
சேதனனேயென்றுந் திகழ்ந்திடும்பரிசுகாணோ
ரேதமாமயக்கந்தன்னா லியாவையுமிருந்தவண்ணம்
பேதமாய்க்காணுகிற்ப தொன்றனன்பிறவிநாசன். (௨௭)

வேறு.

படிகத்தனினிடையே பலநிறம்வைகவவ்வுருவாய்
வடிவந்தனதெனநின்றிடு மதுபோலறிவுருவு
முடிவொன்றுமில்பொரு ளெங்கணும்முழுதும்மொளியாயே
வடிவந்தொறும்வடிவந்தொறும் வேறாய்வரும்வகையே. (௨௮)

வேறு.

ஓதலாலறியாநித்த சுத்தமாயெங்குந்தானும்
பேதமிலறிவு தன்னைப் பெரியவர்பேசக்கேட்டு
மோதிபுரிந்துநாளு மருச்சனை செய்யவேண்டு
மேதமில்வீடேயெய்தற் கிச்சையேயுடையோர் தம்மால். (உகூ)

யாதொருபொழுதியோக மனத்திடையெங்குகின்ற
சோதியாயிலங்குபோதஞ் சோகத்தாலிடைவிடாத
நீதியானிகழ்ந்தெப்போது நின்றிடிற்றானேதன்னி
னேதியபரிசுநிலா ரென்றனனுமையோர்கூறன். (௩0)

பூதங்களைவையுந் தன்பாற் புணர்ந்திடநிற்றல்கண்டே
பூதங்களவற்றினுள்ளும் புறம்புந்தானிற்றல்கண்டோன்
பேதங்களனைத்துமில்லாப் பிரமமேயடைந்துவேறு
மேதங்களனைத்தும்விட்டோ னென்றிடலாகுமன்றே. (௩க)

யாதொருபொழுதியோகந் தன்னையேயியற்றியின்ப
மேதகுசமாதிதன்னை யடைந்துமேவுறுகின்ற
பூதமியாதொன்றுங்காணா திருந்தவனெங்குகின்ற
சோதியாந்தன்னிற்றனைச் சோர்வின்றிக்கண்டேநின்றான். (௩உ)

வேறு.

யாவனியாதொரு போதிதயத்தே
மேவியவாசை யெலாமறவிட்டா
னேவருமின்னமிர் தாயவனப்போ
தோவவிலாதொளிர் வீடடைவுற்றான். (௩௩)

வேறு.

பூசங்களுடைத்தாயுள்ள வேறெலாமொன்றின்கண்ணே
யேதங்களின்றிக்கண்டு மத்தினின்றுமெல்லாமாய
பேதங்களனைத்துங்காணா தன்றிவன்பிரமமென்று
வேதங்களனைத்துமோது மெய்யறிவடைந்துநின்றான். (௩௪)

வேறு.

யாவனொருவனறிவுருவாந் தனையேகண்டுமற்றொன்றாய்
மேவலின்றிவேறுபடக் காணான்விளங்கவப்பொழுது
நீவினிலையாயுலகனைத்து மாயைதானேயெனக்கண்டு
மேவலரிதாம்வீடடைந்தா னென்றேவிளம்பியிடலாகும். (௩ரு)

வேறு.

பிறப்பினொடிறப்புமிடை துன்படைவென்று
தறப்பரிவுசெய்வதொர் மருந்துளததாய்வ
திறப்பில்பரமாயபிர மம்மதனையெய்துஞ்
சிறப்புடையரான பொழுதேசிவமதாவார். (௩௬)

ஆறபலகூடியுல கத்தலைகடந்தே
வேறறவுண்மேவியுட னாகும்விளைவேபோ
லீறில்பரமாயருவ தாயபிரமத்தோ
டாறுமறிவானவை யடங்கியிடுமென்றே. (௩௭)

வேறு.

ஆசலாலெல்லாமாகி நின்றதுமறிவேவேறொன்
றோதிடக்கண்ட தில்லை யுள்ளபோறிவைநீக்கி
யேதமாம்பந்தமோடிவ் வுலகமுமிலையேபார்க்கி
லாதியாமறிவைமூடி யறியாமைமயக்குமன்றே. (௩௮)

வேறு.

இவ்வண்ணமுரைத்தஞான மமலமாய்நுண்ணிதாகி
மெய்வண்ணவிகாரமின்றி வேறொன்றோடணைதலின்றி
மைவண்ணவிருத்தியின்றி வளரொளியாயேநிற்கு
மிவ்வண்ணமல்லாதெல்லா மிருளுடையறிவாமன்றே. (௩௯)

ஓங்கியமுனிகாளுங்கட் குரைத்தவேதாந்தசாரஞ்
சாங்கியஞானமென்றே சாற்றிடுந்தன்மையாகு
மீங்கினியோகமாவ திறையின்றிவிடயமெல்லா
நீங்கியேயென்றனோடு நிலைபெறநிற்றல்சித்தம். (௪௦)

வேறு.

யோகஞ்செயஞானம் முளதாகுமதனாலே
யாகும்மிதயோகம் பினையதுவேசெயலுறுவோன்
சோகம்முறுபயனு மவையெய்தாதளவில்லாப்
போகம்முழுதெல்லாம் புணர்கின்றனிவனேயாம். (௪௧)

யாதொன்றினையோகஞ்செய்து பெறுவாரவர்பயனைப்
பேதம்மிலஞானந்தனை யறிவோர்பெறவிசைவா
ரோதம்மிலதாகும்வண மொன்றாயிடல்கண்டே
போதம்முழுபரமாகிய பொருள்கண்டதுபுணர்வார். (௪௨)

யோகஞ்செய்துநின்றொன்று கைவிட்டேவிடயம்மேன்
மோகஞ்செலவிழுமாலவர் முடிவில்லிடருறுவார்

சோகம்மொழிவிக்கும் பரமெய்தார்தமையடையா
ராகம்மறைமுழுதும் மதுதனையேயறைதருமால். (சங)

வேறு.

அறையுமவ்வியத்தஞ்சீவன் மாயையாலகிலஞ்செய்யு
மிறைவனுமீசனென்று மியம்பிடுமறைகளென்னை
முறைமையாலுயிர்கட்செல்லா மாகியேமுழுதுங்கண்டே
சிறையிறந்தோங்கியெங்குந் திகழ்தருமொளியுநானே. (சச)

வேறு.

எல்லாருமாசையுறுகின்றயாவு மிரதங்கள்கந்தமெனிலே
நில்லாதிறந்துவருமாறிலாது நிலையாகிநின்றவெனிலே
பல்லார்மெய்கைகளொடு கால்களெண்ணில்பலவாயவற்றினறிவாய்
நில்லாதுநின்றுநிகழ்கின்றதென்று முளனாய்விளங்குமெனிலே. ()

வேறு.

கண்ணின்றியெல்லாங் காண்பன் காலின்றியெங்குஞ்செல்வன்
விண்ணின்றவோசையெல்லாஞ் செவியின்றிவிளைந்துகேட்பன்
பண்ணின்றகையதின்றிப் பற்றுவன்விடுவனென்றே
யண்ணனன்முனிவர்தங்கட் கருளினனறியும்வண்ணம். (சசு)

வேறு.

எல்லாமாயுநானறிந்திருப்ப னென்னையறிவாரியாருமிலை
நல்லாருண்மையெனக்கண்டோர் நாடிநின்றேயறிந்தபடி
யல்லாதில்லாவளவில்பரம் புருடனெனவுமறிவின்றி
யெல்லாமாகியல்லாத வேகமெனவுமியம்புவரால். (சஎ)

வேறு.

பார்த்துளமுனிவரென்னைப் பரமென்றும்பண்டுமின்று
நீத்துளகுணத்தோனென்று நின்மலரூபனென்று
மாத்துமப்பொருளீதென்று மலர்தலையுலகுக்குண்மை
யாய்த்துமிவ்வறிவேயென்ப ரல்லவரறியாரொன்றும். (சஅ)

யாதொன்றைமயர்தம்மா லறிவரிதாகுமென்ற
ஞேதியமாயைமூட மோகத்தாலுணர்வதின்றி
யேதுவொன்றிசையாவென்ற னுண்மையாமறிவைக்காணு
ரீதெனமுனிகட்கெல்லா மியம்பினனிமையோர்க்கீசன். (சகூ)

வேறு.

நானேமாயைதனைக்கடந்து நிற்பேன்ஞாலந்தனையியற்றே
னேனையனவுமெனையொழிய யாதோர்செயலுமில்லதனு

ஞானசேகத்தைநடத்தியிடு நாதனென்றுநகேவென்று
மானுவறிவோரறிந்திடுவ தொன்றேயருளிச்செய்தனனால். (ரு0)

எங்குந்தானாயாவையுமாய் நின்றேயொன்றாயழிவின்றி
யங்கமொன்றின்றறிவேயாய் நுண்ணிதாயவருள்வடிவைத்
தங்குஞானயோகத்தான் முன்பாசரித்துப்பினைவந்தெ
னங்கமானபேரொளியோ டொன்றியானாயடங்கிடுவார். (ருக)

வேறு.

ஆங்கவர்களென்னுடைய மாயையைவசித்து
நீங்கியபின்னின் மலமதாயவுருவாவ
ரீங்கிதுசெயாதவர்க ளென்றுமெனையெய்தா
ரோங்கிவருபந்தமதி னின்றுடனுழைப்பார். (ருஉ)

வேறு.

சுத்தனாயொன்றாயென்னைக் கூடிடுந்தொன்மையோர்க
ளெத்தனைநூறுகோடி கற்பங்கடாஞ்சென்றாலு
மெய்த்தகமீளாரொன்றன் விளங்குமெய்யருளாலென்றே
யித்தகைத்தெனவேவேத மியம்பிடுமென்றானீசன். (ருந)

வேறு.

என்னாலுங்கட்டியம்பிய விஞ்ஞானஞானயோகிகட்கும்
பின்னாமதுபுத்திரர்க்கும் பேணுமியோகசாங்கியர்க்குஞ்
சொன்னலாகுமல்லாதைத் தூரவொழிப்பதிதுவென்றே
தன்னேரனையானுமீசன் றானேசாற்றியருளினான். (ருச)

வேறு.

அன்றரியானையாகி யருள்செய்தபுராணந்தன்னின்
மூன்றிகழ்பிறவிதீர முனிகளுக்கீசன்சொன்னான்
குன்றிடாமறையினீறாங் கீதையினிரண்டாமத்தை
யின்றெலாமறியும்வண்ண மியன்றவாறுரைத்ததன்றே. (ருரு)

இரண்டாவது

சாங்கியயோகவத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் அரு.

## மூன்றாவது
## சம்பிரதாய அத்தியாயம்.

முன்னநான்மறை யோதிமுடிந்ததை
யுன்னுமாறறி தாகியவொன்றினை
ஞன்னுஞானமு ஞேயமுமல்லதை
யின்னங்கேண்மினென் றீசனியம்பினான். (க)

வேறு.

நன்றாய்ஞானமாகி நானுமெல்லாம்பிறப்பிடமா
யொன்றாய்வேறோர்பொருளின்றி யொளியாயொன்றேயெமிப்ப
தன்றாயகிலசராசரங்கட் காதாரந்தானுமென்றும்
பொன்றாததுவாயவிகாரப்பொருளாய்ப்புலனும்புணர்ப்பரிதாய். (உ)

இரண்டாவதிலாதளவைகளா லெட்டாததுவாயெங்கெங்குஞ்
சிரங்கால்கைகண்முகமுடைத்தாய்த் தெரியப்படாதாய்த்திரமாகி
யிரும்பார்நீர்தீகால்வான மெல்லாமிருத்தற்கிடமாகும்
பரந்தானுணர்ந்தோர்நிர்க்குணமாம் பரமவியோமமென்பர்களால். (ந)

அரிதாயறியாவறிவேயா மனைத்தாருயிர்க்குமுயிரந்தப்
பெரிதாயகமும்புறமுமாம் பிரமநானேபிறர்க்கென்றுந்
தெரியாதென்னாலேபரம்பி யென்பாலிருந்திச்சகமெல்லாஞ்
சரியாநின்றதென்றறிவான் சகலவேதங்களுமறிவான். (ச)

ஒருதானயபரம்பொருளை யுணரப்படாதவியல்பதனற்
றெரியாமையெனப்படுமெந்தத் தெரியாமையிலேதிகழ்காலம்
பிரதானந்தான்புமான்பிறந்த வவற்றான்முழுதும்பிறத்தலினு
னிருபாதிகமாம்பிரமமய நிகழ்வேயிந்தநிகழ்வெல்லாம். (ரு)

சொன்னகாலம்பகுதிபுமான் றோற்றமென்பாலிரண்டிற்கு
முன்னராகுங்காலமிவை மூன்றுமென்பாலேமுடியு
மன்னதன்மையாலாதி யந்தமின்றியன்னியமா
யென்னில்வேறாயின்மையினு லென்னதுருவேயென்பர்களால். (சு)

வேறு.

மகமுதலாகவிசேடமீறாகமன்னு மிச்சகத்தெலாந்தந்து
சகலவாருயிர்க்கும்மோகமே செய்யுஞ்சத்தியைப்பகுதியாகவும்ப
ந்தியிலாங்காத்துடன்புணர்ப்பாற் பஞ்சவிஞ்சகனெனப்பட்டுச்
சுகதுக்கந்துய்ப்பவன் புருடனுகவுந்துணிந்தனர்தொல்லோர்.

## வே று.

ஆதிவிகாரப்பகுதியின்மாறு மறிதலில்விஞ்ஞாதாவுமவன்பே
ராதவசங்க்ராமமெனமாறு மொருவனுமேயங்கிருபெயருற்றான்
றீதறுதேசங்கொண்டுநடத்துஞ் சீவனுமாகச்செப்புதலுற்று
றுதலினெந்தப்பிறவியுமின்ப துன்பமுமாங்காரத்தவனாலே. (அ)

## வே று.

கோலமறிவேசீவனுக்குங் கொண்டுதுய்க்குங்கருவிமனஞ்
சாலுமதனாலவிவேக மதனாற்றான்பஞ்சாருமான்
மாலும்பகுதியிற்புருடன் வைத்தபற்றான்மற்றந்தக்
காலஞ்செய்யும்பிறப்பிறப்புக் கதுவேயென்றுங்காரணமாம். (௯)

படைப்பதுங்காலந்தானே படைத்தவையாவுநேராய்த்
துடைப்பதுங்காலந்தானே தொல்லையீறில்லாக்காலத்
திடைப்படத்தோன்றிமாயு மியாவையுமியாவரேனுங்
கடப்பவரில்லைக்காலங் காலமேகடந்துநிற்கும். (௧௦)

## வே று.

நிகிலவுலகுநடக்கும்வகை நேரோகியமிக்கின்றதது
சகலவுயிர்க்குமுயிருமது தானேயுள்ளாயிருக்குமது
வகிலவறிவுமுடையததது வாதலான்மற்றக்காலம்
பகரவுறுவர்சநாதனனும் பகவான்புருடோத்தமனாக. (௧௧)

## வே று.

இந்தியங்களிற்பரமன மனத்திலாங்கார
மந்தமானவாங்காரத்திற் பரமவ்வியத்தம்
பந்தமாமதிற்புமான் பரமதிற்பரங்காலை
மிந்தயாவைக்கு முயிரிதிங்கிதனிறுமெல்லாம். (௧௨)

## வே று.

சகத்தினுயிராங்காலபரந் தன்னில்வியோமம்பரமதனை
மிகுத்துநின்றவியல்பதனால் வியோமாதீதனேயெல்லாந்
தெகித்தவதனாலனலென்று செப்பப்பட்டயாறும்
பகுப்பொன்றில்லாப்பரப்பிரம மென்னில்வேறோர்பரமில்லை. (௧௩)

பரமாமெல்லாப்பொருளுக்கும் பரமாயுள்ளவெனையறிந்த
வரமாமுனிவன்றானென்று மரியான்பிறவான்மன்னுசரா
சரமாமுலகமெனையொழியத் தானுண்டாகாதொருகாலுந்
திரமாநானேயுலகனைத்துஞ் செய்கின்றேனுஞ்சிதைப்பேனும். (௧௪)

வேறு.

ஏகமாய்நின்றவென்ற னைவலாலெல்லையில்லா
மோசமாஞ்சகத்தையென்றன் முன்னரேநின்றுகாலம்
பாகமாய்ப்பண்ணுமென்று பரம்பரனருளியீதே
யாகும்வேதங்களெல்லா மறைந்ததென்றருளிச்செய்தான். (௪௫)

மூன்றாவது
சம்பிரதாயவத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் ௧௦௦.

---

நான்காவது

## பத்திமை அத்தியாயம்.

வீரிந்ததிங்கேவனால் விண்முதற்பொருள்
பெருந்தசையாமவன் பெருமைபேசிடப்
பாந்தெழுமிர்தையை யொருக்கிப்பத்தியா
லருந்தவர்கேண்மினென் றருளிச்செய்குவான். (௧)

வேறு.

ஏசத்துளோரியாவர்க்குஞ் சான்றாகியானென்று
மசத்துளேநின்றாலும் பழகியபத்தியினன்றி
மசத்தினூற்றனத்தான் மாதவத்தான்மற்றமொரு
முகத்தினாலொருவர்க்கு முன்னிற்குமவனல்லேன். (௨)

வேறு.

எங்கெனதுள்ளா யிருக்கவெப்பொருளு மெனக்குமுள்ளாகி யானிருப்பன், றங்குலன்முழுதுந் தருகுலனெல்லாஞ் சகலருமழிவதென்றன்னை, லோங்கியமுனிவர் பிதிர்மற்றப் பொளிமிகும் பிரமரிந்திரர்வே, றங்கொளிமிகுத்தோ ரியாவரோயாக வவருமென் னுண்மையையறியார். (௩)

சந்ததர்வேத மியாவையும்பரமாச் சாற்றவும்பவி திங்கனையே, யந்தணரெல்லாம் வேள்வியினாலு மங்கியிற்போற்றுவ தெனையே, யெந்தலோகத்தும் பிதாமகன்முதலா மியாவருமிறைஞ்சுவ தெனையே, சிந்தையையொருக்கி யோகிகளுளத்தே தியானமுற்றிருப்பது மெனையே. (௪)

வேறு.

ஏகனாகிநிற்கின்றயானே யெல்லாவிமையவர்க்குந்
தேகம்பண்ணியவற்றுள்ளே திகனாய்கிற்றலாய்ச்செய்யு-

மியாசவெல்லாமெனக்குவிச்சை யியற்றகின்றாரற்றிலவிர்ப்
பாகங்கொள்வேனுனவற்றின் பயனுங்கொடுக்கப்படுவேனுன். (௫)

பத்தியிலுவியாவர்சிலர் பாவிப்பெனப்பணிகின்றார்
சத்தியமேயவர்களுக்குச் சன்னிதியன்னறிற்ப
னித்தமுன்னுநால்வேத மிட்டர்களாபறநெறிச
ருத்தமாமவனினு மொழிவறவேயுணர்கில்லார். (௬)

வேறு.

மறையவராசர் மாசவுஞ்சிறந்த வணிகர்சாமனத்திறுல் வணங்கிற். குறைவறுபரமா னந்தமாம்பதத்தைக் கொடுப்பனுன குலமிலா வெந்தக், கறையுறுங்குலத்தோ ராயினுமதனைக் காலபாகத்திலே பெறுவ, ரிறையெனவெனையே பத்தியான்மலரிட் டிடைவிடா திறைஞ்சுவாராகில். (௭)

வேறு.

பழுதிலவொன்றுடைய பக்தரொருகாலு
மழிவிலர்களெனறடியிலேபறைதலுற்றேன்
றொழுதவரென்பனை யெனத்தொழுகலுற்றோ
ரொழியவிகழ்வாருமெனை யேயிகழ்தலுற்றார். (௮)

வேறு.

கலையாளரியாவரினுங் காயாதன்மலராத
விலையாதணீராத வியன்றதுகொண்டென்பாலே
நிலையாயபத்தியினு னித்தமெனைவழிபடுவான்
றலையாயவன்பனெனக் கியாவரினுந்தானினியான். (௯)

படைத்தவனைப்படைத்தவற்குப் பண்டையேமறையனைத்துங்
கொடுத்தவனுந்தவலெக் குரவர்க்குங்குருபானுன்
றுடைப்பவனுனசுரர்களைத் தொல்லறத்தினின்றோரை
யிடர்ப்படுமொருழித்தவர்கட் கின்பமளித்திடுபவனுன். (௧௦)

வேறு.

ஓதுமியோகியர்கடங்களுற்பவ மொழிப்பனுனுறபிறப்பினுஞ்
சேதநாளெருபிறப்பிறப்பு மிலனுவனுனிவ்வுலகத்தினுங்
காதிநானதுதடைப்பனுனது புரப்பனுன்முழுதளிப்பனு
னீதிதானினையலற்றமாயைசெய்து நித்தனுய்மறையநிற்பனுன். (௧௧)

வஞ்சமாயையொருசத்தியென்றனது மற்றியாரையுமயக்குமாம்
விஞ்சையாகுமொருசத்திமற்றெனது விமலயோகுபுணர்வார்கட்

நெஞ்சின்மேவியசலம்மாயையினை நீக்கியோகிகளுநிற்பதை
னஞ்சடாதெனையனந்தசத்திகளு மியானினைத்தவணமாகுமால். ()

வேறு.

ஆலமயனமாஞ்சத்திகளுக் காலம்பனனுடங்கவுமென்
பாலங்கனக்குமுதநியுமென் பாலேயெவர் குருள்ளாயென்
மாலொன்றியமாயையையகடந்து மலரோன்வடிவுகொண்டொன்று
ஞாலந்தன்னையுண்டாகப் பண்ணுநாளுவிதமாக. கங)

வேறு.

ஓதியாவையுந் தானுயிர்க்கெலா
நாதனாகிய நாராயணனெனுந்
தீதிலாதவென் சத்திதித்தலா
வீதெலாநிலைபெற் றேயிலங்குமால். (கச)

வேறு.

மூன்றாவதுருத்திரமூர்த்தியதாய்த்
தோன்றாவகைநின்று துடைப்பதனைச்
சான்றோர்பலர் தாமதகாலமென
வான்றாவெனதாக வுரைப்பர்களால். (கரு)

வேறு.

நித்தநியமத் துடனேநெறியுறப் பார்ப்பார்கள்சிலர்
பத்தியாற்பார்ப்பர்சிலர் பாவனையாற்பார்ப்பர்சிலர்
சத்தியமாஞானத்தாற் பார்ப்பர்சிலர்சாற்றுகின்ற
வெத்திறத்தாரினுமிவனே யெனையுணருமெய்ஞ்ஞானி. (கசா)

வேறு.

அறிவால்வழிபாடுறவா னெவன்மற்றவனென்னிற்
பிறிவானலனியானெனவே நினைமின்பிறர்தாமு
முறவால்வழிபாடுடையா ரடையாரொருகாலம்
பிறவாழியிடைப்பிறிவா யெனையேபெறுகின்றார். (கஎ)

எல்லாவுலகங்களு மென்பாலேயென்றாலே
செல்லாநின்றுஞ்செயலொன் றிலனென்சிவயோகி
யல்லாவடவாதெனவும் மந்தச்செயலென்பா
லில்லாதமையும்மறிவா னென்றும்பிறிவானால். (கஅ)

வேறு.

காலமாகியபாஞ்செயுமுழுவதுங் கண்டுகொண்டிருப்பேனு
னூலினானுண் ணுணர்வினா லெல்லாநுவலப்படுவேனான்

மாலிலாதமாயோகிமா வனென் மகத்துவமெனக்குண்டா
மூலமாகியபாத்தினிற்பரமமா முறைமையான் மொழிகின்றேன். ()

வேறு.

படைப்பவனெனெப்பொழுதும் பரம்பரயோகிக்கிருந்து
நடத்துவனனைவொடுக்க மிலாஞானயோகத்தாற்
கிடத்திடுமென்றனையாகச் செப்பியயோகானந்தத்
திடைப்படலானடஞ்செய்வே சொல்லையில்போன்பத்தால். (௨௦)

யானுமியல்பறிவா னெல்லாவேதமுமறிவான்
வானுடர்மாமறைநக ளறைந்தின்றமறைறவிதனைத்
தானனும்பெறவுரியான் றவமுடையானிசமுடையா
னுதவன்புடையா னகிலவனலமுடையான். (௨௧)

நான்காவது

பத்திமையத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௧௨௧.

ஐந்தாவது

## விசுவரூப அத்தியாயம்.

இவ்வளவுதானருளி யின்பமுடனன்பர்க்
கவ்வளவிலாததிரு மேனியதனாலே
யெவ்வொளியுமானவனி லங்கியவருள்ளே
செவ்வொளிவிளங்கநட மின்றுசெயலுற்றான். (௧)

எண்ணமதிறந்தபர யோகவிதயத்தே
வண்ணமதிலாதபர மாகியமகேசன்
விண்ணினிடையேவிமல னைவரியோடுங்
கண்ணினெதிர்நின்றுநட மாடவவர்கண்டார். (௨)

வேறு.

எவன்மாயையிந்தவுல கெல்லாமாகியிருப்பதுவா
மேவனுலேநடக்கின்ற தேவன்பதங்கள்சித்தித்தே
பாவமானவஞ்ஞானந் தன்னுணுண்டாம்பயம்போகு
மாலவந்தப்பரமபொருணின் றுநடக்கண்டானபோமே. (௩)

வேறு.

நித்திரையுறுதவதில் வாயுவைநிறுத்திப்
பத்தியொடுசாந்தியை யடைந்தபரயோகத்

தூத்தமர்களாதலுந யாத்தமனமில்லாச்
சுத்தவொளியோடவ்வொளி கண்டனர்கடேயோர். (௪)

வேறு.

கணமாத் திரையிற் கழல்கைதொழுவோ
ருணராமையழிக்கு முருத்திரனை
வணநாடரியானை யடமாமுனிவர்
கணமாவெளிகண்டனர் கம்மிசையே. (௫)

வேறு.

சிரங்களாயிரஞ் சேவடியாயிரங்
கரங்களாயிர மாய்க்கரத்தேந்திய
வுரங்கொடண்டமு மோங்கியசூலமும்
பரந்தவேணியும் பான்மதிக்கண்ணியும். (௬)

வேறு.

புண்டரீகவுரியுடையும் பொன்னொளியாற்பூமகன்பே
ரண்டமெலாமாவரித்த வனலிரவிமதியென்னக்
கொண்டிலகுமுக்கண்ணுங் கூரெயிறுங்கோடிபெய
ருண்டருக்கனெறிக்கின்ற வொளத்திகழுமோருருவும். (௭)

தனதான திருவருளிற் சகமெலாம்பிறந்ததனை
தனலாலேயழியமிக வதிசயமாய்படிகாட்டி
யினமான தில்லாத விந்தவடிவந்தானே
யனையாநின்றாகாசந் தனிலாடியருளினனால். (௮)

ஞாலமெலாஞ்செய்கின்ற நாதனை ஞானச்சுடரைக்
காலவுருவனைக்கலைக ளியாவையுமாங்காரணனை
யாலமமாகளத்தனையிவ் வனைத்துயிர்க்குமதிபதியைச்
சீலமிகுயோகிகடஞ் சிந்தனையிற்றிகழ்தேசை. (௯)

உற்பவநோயுற்றவர்க ளொழிப்பதனுக்கொருமருத்தாங்
கற்பகத்தையோகிகடங் காரணத்தையாரணந்தேர்
தற்பதத்தைப்பரமான சத்திகட்குச்சத்தியா
மற்புதவாதாரத்தை யமரேசர்தொழுமரசை. (௧௦)

வேறு.

ஓகாதழியாதிருந்தபர மானந்தத்தையகிலத்துக்
கேகாதிபனையத்தேவு மெல்லாமுனிவர்களுமிறைஞ்சி
நீகாவென்னுநின்மலனை நித்தியத்துவத்தைநிரந்தரமா
மியோகாலடையுமுயர்பதியையொளிகட்கெல்லாமுள்ளொளியை. ()

வேறு.

துறவினரறிவிடைத் தோன்றுஞ்சோதியை
யுறவினிலறிபவர்க் கெளியவுண்மையைப்
பிறிவினிலறிவரி தாயபெற்றியை
யறிவினையறிபவர்க் கருளுமண்ணலை. (கஉ)

வேறு.

பராசாவிலியாகியகருணை மாதேவனைமா மாதவத்தி
னாசாரத்தையொருகாலு மழியாச்செல்வமளிப்பவனைப்
*பேதாபேதமற்றெல்லாந் தானாயிருந்தபிரமத்தை
யோதாதுணருமியோகத்தையளித்தற்குரியவொண் சுடரை. (கங)

வேறு.

உருவோவிங்கருவோவென் றும்பர்க்குமுணர்வரிதாய்க்
கருவாகிநின்றபெருங் கண்ணானகாரணனைச்
சொரூபானந்தனைத்தனது சோதியுளத்தேதோன்றக்
குருவாகுந்திருமேனி கொண்டாடக்கண்டார்கள். (கச)

வேறு.

கண்டோமையையதற்குளே யொருவர்காணொணாவகை காந்தூதா, னண்டர்மாயையைமறைத்து மீண்டுவெளியாகியாடி யருளண்ணலை, வண்டுழாய்முடியானை வச்சகலலோகயோனியை யிடத்திலே, கொண்டகோலமொடு கண்டுமா முனிவர் கூறொணாவகை கூடினார். (கரு)

வேறு.

தாம்பையினுள்ளேயிதயக் குகையின்மறைந்திருக்கின்ற
பரம்பொருளைக்கண்ணாலே பார்த்துப்பல்கார்பணித்து
காந்தலையிற்குவித்துத்தங் காதல்கரையழிவுறநின்
றாந்தரவோங்காரத்தை யுச்சரித்தங்குபநிடத்தால். (கசு)

வேறு.

பழுதிலீசன்முன் பாலகற்கண்டதோ
ரெழுதுபோல விதயமெலாருக
வழுதமன்பினொ டாடியும்பாடியுந்
தொழுதுதோத்திரஞ் செய்யத்தொடங்கினார். (கள)

வேறு.

ஆசமுறுமாருயிர்நீ யவ்வுயிர்க்குமதிபதிநீ
போகநுகர்புருடனுநீ நுகர்விக்கும்புராதனனீ

யோகிநீயுணர்பவனீ யுளந்தொறுநின்றுணர்கின்ற
வேகனீநின்மலமா யாவையுமாய்பரம்பொருணீ. (௪௮)

வேறு.

காரணமெல்லாமொடுங்கினவர் காய்த்துள்ளேகதியாகிப்
பிரமயோனியாயுள்ள பெருமவென்றும்பிறவாதாய்
மரணமில்லாநின்செம்பொன் வடிவேபரமாய்மற்றெதிலும்
பரமமாகியுயிர்க்குயிராய் நிற்கும்பரமாய்ப்பார்க்கின்றோம். (௪௯)

பரமாணுவினுருவாகிப் படைப்பாய்நீபல்லுலகுகளுந்
திரமாமுன்னுலேயுண்டாஞ் சிறிதிற்சிறிதாய்மிகப்பெரிதிற்
பெரிதாய்நின்னில்வேறில்லாப் பெருமைமகானும்பெருந்தசமைக்
குரியாரெல்லாமொருநீயே வேறொன்றிலதென்றுரைப்பர்களால். ()

வேறு.

போதனுகியபுராணனும் புருடனைப்பொருட்கெலாமுயிராக
வாதிநாள்படைத்தனையவன் படைத்தனனிலமுமங்ஙனே
வேதமியாவையும்விரித்தனை யுன்னிலேமீளவுமனைத்திற்கு
மேதுபூதனுயுளந்தொறுமிலங்குநின் னியல்புகண்டனமெந்தாய். ()

வேறு.

இப்பிரமசக்கர மியங்குவதுமுன்பா
லப்பெரியமாயை யுடையாயமலநீயே
நிற்பரமயோகபதி திவ்யநடனுநின்
பத்மசரணங்கள் சரணென்றுபணிகின்றோம். (௨௨)

வேறு.

எந்தைநீபரமாகாசத் திடையுறுநிருத்தங்கண்டோ
மிந்தவெப்பொருளுமாகு யேகநீயாகிநின்ற
வந்தநின்மகிமாவைக்கண் டதிசயமாகவுன்ன
தந்தமில்பரமானந்த மனுபவித்தனுபவித்தேம். (௨௩)

உன்னுளையாமோங்கார முயர்முத்திக்கொருவிதைநீ
துன்னியுடன்றேறுந் தோன்றுமைமறைந்திருந்து
நின்னிடையெல்லாமாய நீமாயாய்நின்றொழிய
வன்னியமாயுளவெல்லா மசத்தியமென்றறைவர்களால். (௨௪)

வேறு.

தொழுதருமறையெலாந் துதிப்பதுன்னையே
பழுதறுமுனிவர்கள் பணிவதுன்னையே

யொழிவறவுணர்பவ ருணர்வதுன்னையே
யழிவறநினைபவ ரடைவதுன்னையே. (உ௫)

வேறு.

ஒருமறையனந்தசாகை கொண்டனதுருவமொன்றி
னருமையையறிவிக்கின்ற வப்படியரியவுன்றன்
பெருமையையறிவார்சாந்தி பெறுபவர்பெருதாரெல்லாங்
கருமயலுறுவார்சாந்தி கனவிலுங்காணமாட்டார். (உ௬)

வேறு.

ஆதிதேவனீயுலகனைத் துயிர்க்குமாதிபா
யீதெலாமமைக்குமன்னை யெல்லையற்றவின்பமெப்
போதுமேவியென்றுமைம் புலப்படாதிருப்பதோர்
சோதியாகநிற்றமுத்த சுத்தனையிருத்தியால். (உ௭)

படைத்திநீயளித்திநீ படைத்தயாவுமுன்னிலே
யுடைத்திநீயொருத்தனே யுணர்ந்துகொண்டிருத்திநீ
யடைத்திநீயுளத்திலே யினன்மையையெயொளிக்குமா
றடைப்படாமலென்றுநின் சரண்பணிந்துசாருவோம். (உ௮)

வேறு.

யோகியாகியுயிராகியுணர்வானுகி யிணையில்லா
வேகனாகியிந்திரனு மரியுமயனுமீசனுமாஞ்
சேகிதாவுந்தாதாவுந் தீயுமதியுந்தினகரனு
மாகிவெவ்வேறனைத்துருவு மானாயெனவேயறைகுவரால். (உ௯)

அகிலவுலகுமிருப்பிடநீ யறியவேண்டுமெக்கரநீ
சகலதருமங்களுநீவளர்க்குந் தாய்நீபுருடோத்தமன்றானீ
புகலுமரிநீபூமகனீ புராரிநீயெப்பொருளுக்கும்
பகுதிநீயொழிவின்றி நிலையாய்நிற்கும்பரம்பரநீ. (௩0)

வேறு.

கரணமியாவையுங்கடந்திருள் கடந்துனைக்கண்டவராதித்த
வருணமானசின்மாத்திர நேத்திரமுதற்புலன்மனஞ்செல்லாப்
பிரமமேகமாம்புருடனோர் பிறிதிலாப்பெருமையாற்பேச்சற்ற
பரமமான்முதற்பகுதிநிர்க்குணம்வெறும்பாழெனநிகழ்கின்றார். ()

வேறு.

ஓதுமொலியூறுருச் சுவைநாற்றந்தனக்கற்
றுதிமுடிவில்பர மாயசிந்திதமாய்ப்

பூசமனைத்தினுக்கு முள்ளாய்ப்புறம்புமாஞ்
சோதிவினையறிந்தார்துஞ் சார்பிறவாரால். (௩௨)

வேறு.

ஏந்தயோகிகளுநாடுகின்றபர யோகிநின்னடியிறைஞ்சுகோம்
மந்தமாதியிலனந்தசத்தியுடை யண்ணனின்னடியிறைஞ்சுகோஞ்
சந்தமின்னதெனநாடொறரிய சம்புவேயடியிறைஞ்சுகோம்
பந்தமொன்றில்பரிசுத்தநற்பரம பாதபங்கயமிறைஞ்சுகோம். (௩௩)

வேறு.

கூடுநின்றுருகுமிறைவநின் ஞானக்கூத்தினைக்கண்டு கும்பிட்டே
நாடுமெங்கண்களுநின் றிருமேனியன்றி யாற்றொன்றையுநாடா
வோடுமிப்பனமுமொழிவறநிறைந்த வுனையலதொருபொருளுணராப்
பீடுறுகமலமலர்ப்பதம்பணிந்தெம் பிறவிவேரறுத்தனம்பிரானே. ()

வேறு.

பவனேநின்னடிபணிசோம் பவோற்பவனேயடிபணிகோந்
தவனேநின்னடிபணிகோஞ் சங்கரனேயடிபணிகோ
மிவனேயென்றிடவிங்ஙனெழுந்தருளும்பேருளே
சிவனேயெத்தேவர்க்குந் தேவேநின்னடிபணிகோம். (௩௫)

வேறு.

சாடனீறுசெய்கண்ணைவணங்குதுங் காலனூறியகாலைவணங்குதுஞ்
சாமகீதனைநாளும்வணங்குதுந் தாளிலெந்தலையாரவணங்குதும்
நாமரூபமதின்றியனைத்துமா நாமரூபனைநாளும்வணங்குதுஞ் [தும்.
சேமமாகியவீடருளெந்தையாஞ் சிவப்பிரகாசனையென்றும்வணங்கு

வேறு.

உருப்பனேகவிதமாகியோருருவனு முருத்திரனினுள்குவார்
விருப்பனேயவர்கடற்பெரும் பிறவிவெந்துநீறெழவிழிப்பதோர்
நெருப்பனேநினைவுறப்படாவொரு நிருத்தனேநிமலநெஞ்சகத்
திருப்பனேயிறைவனே சிவாயநமவென்றசேவடியிறைஞ்சினர். ()

வேறு.

எந்தையளவற்றதிரு மேனியையிறைஞ்சிச்
சிந்தைகளிகூருமளவிற் சிவனைநேரோ
யந்தமறுதன்னையருள் செய்யவருளாலே
வந்ததிருமேனியினை மாலிறைஞ்சிகண்டார். (௩௮)

வே று.

அளவிறந்தவனளவுபட்டிருந்தவவ்வருள்கண்
ளெம்வியந்துநின்ஞெப்பிலாவுருவுகண்டுய்ந்தோங்
களவொழிந்துளங்காதலிக்கின்றதுன்கணைதீர்
வளமையின்னமுங்கேட்கவென்றடிவணங்கினரால். (நக)

மேலதானதன்பெருமையைக்கேட்கமேன்மேலுஞ்
சாலதாந்தவஞ்செயத்தகுதபோதனர்தமக்குக்
காலகாலனெக்கடவுளுந்தொழுதெழுங்கடவுண்
மூலமாதவன்றன்முகம்பார்த்துமென்மொழிவான். (௬௦)

ஐந்தாவது

விசுவரூப அந்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கசுக.

ஆறவது

## சிவசத்தியின் செயலுரைத்த அத்தியாயம்.

காதலான்முனிவர் கேண்மினென்பெருமை காணுமாறருமை கண்டதா, ஞேதலான்மறையெனுள்ள வாறறியுமுற் பவிப்பதுல சென்றனு, லீதொலாமுநிலைபெற்றி யங்குவதுமென்றனு லழிவுமெ ன்றனு, லாதலாலழிவிலா தறப்பழையனுன நான்முழுதுமாகு வேன். (க)

வே று.

அகிலபூதங்களுக்குமந்தரி யாமியாய்நான்
சகலபூதமுமென்னுள்ளே சாரநான்றுங்கிநிற்ப
னிகிலமுமதிலெங்கண்ணு நிற்பவனெனவுமென்னைப்
புகலவும்படாதேயென்னிற் பொருள்பிறிதின்மையாலே. (உ)

வே று.

செப்பிடவொணுதெதிர் தெரிந்திடவுமுங்கட்
கெப்படிநிகழ்ந்ததது வென்னுடையமேனி
யப்படியிருந்தவெனை மாயையதனுலே
யொப்பிடநினைந்திடு வரோயுணர்விலாதார். (ந)

வே று.

மேவியாதினுமுளனும் வியனுலகைநடத்துவனுன்
முவிலாவென்றனுலே சகலகலைகளுநடக்கு

மோவிலாவொருகூற்றா லுண்டாகுமுலகனைத்து
மாய்வதாமற்றொன்றா லிருமையுமென் மாயையதால். (௪)

ஈங்காதியிடைமுடி வற்றிருப்பேனென்மாயையினாற்
பாங்காகப்பகுதிபுமான் பண்ணினன்முற்பவத்தாமா
னாங்காரமுதலாகவனைத்தும் விரிந்தனவதனா
லோங்காரப்பொருளாமென் னொளியின்விரிவுலகெல்லாம். (௫)

வேறு.

சூரியதாய்கின்றிவ்வுலகினுக் கெல்லாங்கால சக்கரந்தனைநடத்தி, இரணியகருப்பனுகுமார்த்தாண்ட னென்னிடைத்தோன்றினனென்னாற், புரியும்வேதங்களின்கையுமொன்றாய்ப் பொருளதாய்ப் புராணமாய்ப்புணர்தற், கரியதிலரிதாஞான யோகதையுமடியிலே யவற்களித்தனனால். (௬)

வேறு.

எந்தநாளுமெனையேநினைந்தவியலே பாலேயென்னருளினாலயன்
சந்தாடரிய திவ்வியமாமெனது தன்மைதானவதரிக்கிறா
னந்தமாதியிலென்னேவலாலவ னிவ்வகிலலோகமுமமைக்கிறா
னிந்தநாரணனளிக்குமாறுமிவ னென்னில்வேறெனவிலாமையால்

வேறு.

கடையுகமதிற்கடிய காலவனலாய்நின்
றடையவுமுருத்திர னழிப்பதுமென்னாலே
யுடையவலியாலுலவு மூதையுடனுய்ச்சே
நடையைமுதலானவை நடத்துவதுமென்னால். (௮)

வேறு.

தெய்வங்களுக்கும்பிதிர்க்குஞ் செய்யும்பூசையாகின்ற
வவியங்கவியம்பாகஞ்செய் தனலோனளிப்பதென்னாலே
யுய்வத்திமொழுதரத்தீ யாகுமவனுண்டனவெல்லா
மெய்வெந்திடாமலென்னியமத் தாலேவேவித்திடுகின்றான். (௯)

வேறு.

வருணனெனுமகிலசல பதியுமழைவாருதவு
மருணனெனுமுலகுதிகழ் வதுசெயமலனுமமிர்த
கிரணனெனுமுயிர்மகிழ்வு செழுமவருள்பவனுமெம
பரணனெனவிவனொரு பணிவகைசெய்தொழுகுமவர். (௧௦)

வேறு.

மீசட்பயஞ்செயுமரக்கர்சோணிருதி யாருமவிண்ணவனும் வெந்
திதா, மகப்பயன்றனை யளிக்குமந்தசனுமாட்டகாதியர் வற்றதோர்

சுகப்பயன்செய் யளகேசனுமென்று தோழனுஞ்சுருதி சொன்னவா,
மகப்பயன்றனை யளிக்குமிந்திரனு மற்றெனேவல்செய்து வாழ்வ
ரால். (கக)

வேறு.

பொல்லாதபேய்களுக்கும் பூதங்களனைத்தினுக்கு
மல்லாதகணங்களுக்கு மதிபதியாகியவீச
னல்லார்க்குநன்மைபெற நல்குவதுநாடோறுமென்
சொல்லாலேமற்றவர்க்குச் சொல்லவேண்டுவதுண்டோ. (கஉ)

வேறு.

அருத்திசெய்தங்கிரா வடிவணங்குவோ
னுருத்திரகணத்தி லுத்தமனியோகிகள்
வருத்தமதொழித்து வாழ்வாமதேவனுந்
திருத்தமாயென்னுடை யேவல்செய்குவார். (கங)

வேறு.

தக்ககருமங்களிலேநடத்து வதுஞ்சார்பிலர்பால்
விக்கமளித்திடுவதும் விநாயகனென்னேவலினாற்
செக்கநிறத்தமரர்கள் சேனைபதியாய்ஞானத்தான்
முக்கியமாமறுமுகனென் னேவலையேமுயல்கின்றான். (கச)

வேறு.

மதியினன்மிகுமரீசியேயாதி யாய்மன்னுயிரனைத்திற்கும்
பதிகளாகியபதின்மருமூலகெலாம் படைப்பதென்பணியாலே
விதிசெய்காரணன்றேவியாகிய திருசெல்வநல்குவதென்றன்
விதியினாலென்றன்பணியினாற் கலைமகள்விமலவாக்களிக்கின்றாள். ()

வேறு.

ஏழுமெரிநரகினுள்ளே வீழ்பவர்தம்மையத்த
தீமையினின்றுகரவித்திரி யெடுப்பதுவுமென்று
லோமெனும்பொருளோனான் யோகியர்க்குமைடாம்விஞ்ஞை
யாமகளருளுமாறு மலகிலென்னருளினாலே. (கரு)

வேறு.

படவரவரசென்னேவலாலுலகம் பரிப்பதும்பாவையுணின்று,
வடவையுண்பதுமென்னேவலாற் பதினன்மனுக்கள் பாலனமுமற்
றொன்றற், சுடருடையருக்கருருத்திரர்வசுக்க டொன்மைநத்துக்க
ளச்சுனிக, டிடமுறமற்றுந்தேவர்கடத்தந் தேவையென்னேவலாற்
செய்வார்.

வேறு.

பொருவில்கின்னரர்கருடர் கிம்புருடர்சாரணர்கந்
தருவர்சாத்தியர்சித்தர் விச்சாதரரியக்கர்
வெருவவந்திடுமரக்கர் வேதாளபூதங்க
ளொருவரிங்கொழியாமஞ்ஞன் விதித்தவாறுறைவார். (சஅ)

வேறு.

நிகழ்ந்திடுங்கலைகள்காட்டைசணிமிட நிதிசெய்சாந்திநாண் முகூர்த்தம், பகர்ந்திடுமிருதுவாண்டுமாதங்கள் பக்கங்களென்விதிப் படியே, யுகங்களுமனுக்கட்குள்ளவெல்லைகளுமுறைத்திடு பரா* பரார்த்தங்க, ணிகழ்ந்திடுங்காலபேதமியாவையு நானியமித்தபடியிலே நிலையாம். (சகூ)

வேறு.

உற்பவசராசர வியோனியொருநாலும்
பற்பலவதாகமொழி பாதலமனைத்து
மெப்புவனமும்பிரம ரண்டமவையாவும்
மிப்படியிருக்குமது வென்றனியமத்தால். (டுO)

வேறு.

அன்னியமின்றியென்னிலேதோன்று மனந்தபின்ஞன்மகமா யென், றன்னிடைநிகழும்பிரமாண்டக்க டனக்கொருமுடிவுதானில தான், முன்னிறந்தனவுமுடிவிலையென்பான் முளைத்திடப்படுவதப் படியே, யென்னியமத்தாற்றோற்றமு நிலையு மிறுதியும்பெறுவதிங் கெல்லாம். (டுக)

வேறு.

பூதமைந்தினுமனமும் புத்திமமதைபூதாதி
யாதிப்பகுதியென்னியமத் தாலேயென்பாலாயிருக்கு
மோதிவந்தவனைத்திற்கு மியோனியாகியுளமாயை
பேதஞ்செய்வதென்னேவ லாலேயன்றிப்பிறிதில்லை. (டுஉ)

வேறு.

ஆகமெடுத்தவர்க்கெல்லா மதிபதியாமான்மாவாம்
போகநுகர்பரம்புருட னென்னேவல்புரிகின்றான்
மோகமெலாமறமாற்றி முடிவில்பரமானந்த
வேகவெனத்தரும்விஞ்சை யென்னருளாலியங்குமாள். (டுங)

* பரார்த்தம் என்றது - பிரமகற்பத்தின் அளவு.

வே று.

பலவுரைசெய்குவதென் பலபாசத்தினு
னுலகமெலாமெனிலே யொழுகவெனுள்ளொழியத்
துலகுபரப்பிரம மாகியசோதியதா
யிலகுவனுனெனில்வே றில்லையோரன்னியமே. (௨௭)

வே று.

தொல்லையுள்ளவன் சோதியைச்சுத்தமா
நல்லவன்பொடு நானுமக்கோதினே
னெல்லையுண்மை யுணர்ந்தவர்க்குற்பவ
மில்லையில்லையென் றீசனியம்பினுன். (௨௮)

ஆறாவது

சிவசத்தியின் செயலுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கசுக.

---

ஏழாவது

# தத்துவநிசம் விபூதி அத்தியாயம்.

அனியமானதற் றறிகுவார்கள்பின்
செனியுறாதவா திகழுந்தேவனுந்
தனியனனவென் றன்மையோதநான்
முனிவர்கேண்மெனு முதல்வனேதுவான். (க)

வே று.

சிரந்தனமாய்மிகத்திரமாய்ச்சிற்சுகந்
தரந்தனுருவாயவிகாரமாய்ச்சதா
நிரந்தரமாகிநிட்களமாய்நித்தமாய்ப்
பரம்பரமானதென்பழையதாமமால். (௨)

வே று.

சங்கரனுருத்திரரி லியோகிகளிற்சம்புநான்
பங்கமில்சீர்வசுக்கடமிற் பாவகனுகின்றேனன்
மங்கையரின்மலைமகளுன் வலியவரில்வாயுநான்
சிங்கமிருகங்களினுன் றினகரரில்விண்டுநான். (௩)

இந்திரனிமையவரி லியக்கரில்வச்சிரவணனுன்
சந்திரனன்றாரகையில் விரதத்திற்சத்தியநா

னெந்திரத்தில்வில்லுநா னிலங்கியசாவித்திரியா
மந்திரநான்மந்திரத்தின் மாதவரில்வசிட்டனான்.

ஞானமதிலென்னுடைய ஞானநானன்றனை (௪)
யானையயிராவதநா னச்சிரமத்தில்லறநான்
கானமுறுபறவைகளிற் கருடனான்கதியதனி
லீனமிலாமுத்திநா னிராக்கதரினிருதிநான்.

எண்ணுமதிற்காலநா னெல்லையிலாமாயைபல (௫)
பண்ணுமவர்களிலரிநான் பாசத்தின்மாயையுநான்
புண்ணியமாந்தீவுகளிற் புட்கரநான்பூதத்தில்
விண்ணுநான்றத்துவத்தின் மிருத்துயுமினென்றேனான்.

சித்தர்களிற்கபிலனான் றேகங்கடனிற்பிரம (௬)
மத்தனீசர்களின்மகேசனான்மறைகடனி
னுத்தமவோங்காரநா னூர்களில் வாரணசிநான்
றத்துவஞானிகடம்மிற் சதுர்முகனாகின்றேனான்.

வேறு. (௭)

கற்பங்களின்மாகற்பநான் கணேசர்களிலேவிநாயகனான்
சர்ப்பங்களிலேயனந்தனான் சாயம்புவுநான்மனுக்களிலே
வெற்புக்களின்மாமேருநான் விசுவகன்மாநானெனலாஞ்
சிற்பஞ்செய்யவல்லவரிற் சேனாபதிகளிற்குகனான்.

வேறு. (௮)

ஏவலார்களிலிராமனனசுரரிற்பிரகலாதனான்
மேவலாரகலவெல்லும்வீரர்களில் வேளும்வீரபத்திரனுநான்
றூவில்சாமமறைதன்னிலத்தின் மிகுசேட்டசாமமதுதானுநா
னேவிலாதடைவிலேசுழன் றிடுமுகங்களிற்கிருதயுகமுநான்.

வேறு. (௯)

தக்கபிரசாபதிதம்மிற் றக்கனனெக்கணங்களினும்
விக்கினவினாயகனன்றான் வியாதனான்மெய்ம்முனிவர்களிற்
றெக்கசுத்தங்களிற் புருடசுத்தமாவேனான்சோதி
மிக்கவிஞ்ஞையாவையினுந் தன்னையறியும்விஞ்ஞைநான்.

வேறு. (௧0)

ஒன்னலர்த்தெறுபாபுதங்களி லோங்குவச்சிரமாவனான்
பன்னுமெல்வுலகங்களிற் பரமேசரிற்பரமேசனா

னின்னுமிங்குலகிற்சிறந்தன யாவைமற்றவையென்னதா
மன்னுசோதியில்வந்துதித்தன வென்னவேமனம்வைம்மினீர். ()

வேறு.

எந்தப்பிராணிகளும்பசுக்க ளென்னப்படுமிங்கதிபதியான்
பந்தப்படுக்குமென்மாயா பாசமதனுற்பசுபதியாய்த்
தொந்திப்பதுவீழ்ப்பதுவாமித்தொழிலென் விளையாட்டேயன்றி
யிந்தப்பசுக்கள்கட்டினர்களில்லையவிழ்ப்பார்களுமிலதால். (௧௨)

வேறு.

ஊறதாம்போகமே யூட்டிவிட்டிடப்
பேறதாயுயிர்களைப் பிணித்தமாயைதன்
கூறதாங்கணங்களாற் கூறப்பட்டநா
லாறதாம்பாசம தறியக்கூறுவாம். (௧௩)

வேறு.

மனம்புத்திமமத்துவம் வான்வளிதீநீர்மண்ணெட்டு
முனையுற்றபகுதிகளா மூக்குவிழிசெவிநாமெய்
புனைவுற்றவாய்கைகால் பாயுருபத்தஞ்சத்தந்
தினைவுற்றவுருச்சுவைநாற் றங்களுந்தத்துவமும். (௧௪)

ஆகவிவையிருபத்து மூன்றிவற்றுக்காதிதா
னாகியனாதியதாகி யகிலத்தின்காரணமாய்
மோகசமுசயகுணமாய் முதற்பகுதிதெரியாமை
யேகமுமாந்தத்துவங்க ளிருபதுடனீரிரண்டாம். (௧௫)

வேறு.

ஒத்தமுக்குணங்களாம் பகுதியுத்தமஞ்
சத்துவஞானமாந் தமமஞ்ஞானமா
மத்திமங்கலப்பரா மற்றிம்மூன்றையும்
புத்தியின்விகாரமே புலப்படுத்துமால். (௧௬)

வேறு.

தருமபாவ மிரண்டுளதப்புதற்
கருமையாகிய பாசமதாகிலு
மிருமையாதா வின்றியெனக்குநேர்
கருமமுத்தியின் காரணமாகுமால். (௧௭)

வேறு.

அறியாமைகாமம் வெறுப்பாமாயையகஞ்செறிதற்
கறியாகப்புகுந்தொருவர் போக்கரியபாசமிவை.

மூறியாதவினைத்தளையான் முடிச்சிட்டேயென்மாயை
பிறியாதென்பாலுளதாம் பிறவிகளுக்கடியாக. (௧அ)

வேறு.

பின்னியபகுதியாம் பிரதானமாயையு
மன்னியபுருடனு மானுமாதியாய்த்
துன்னியவிகாரமுந் தொல்லையீசனி
லன்னியமின்மையா லவ்னேயாகுமால் (௧௯)

வேறு.

அவனேபாசமவனேகட்டுண் டவனேகட்டுமெதிபதியு
மவனேபசுக்களாகின்று னனைத்துமாகியுள்ளானு
மவனேயவனையொருவர்களு மறிவாரில்லையனைத்திற்கு
மவனேயறுதிபுருடனென்ன வவனையறிவாரறைகுவரால். (௨௦)

ஏழாவது

தத்துவநிசம் விபூதியத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௨௦௬.

எட்டாவது

## பிரபஞ்ச சர்வகாரண புராணபுருஷப்பிரதிபாதன அத்தியாயம்.

வருந்தியுமறைகளீறறியுமன்னுயி
ரிரும்பவக்கடல்கடந் தேறவுய்ப்பதாந்
திருந்தியவுணர்வது செப்பவின்னமு
மருந்தவர்கேண்மினென் றருளிச்செய்குவான். (௧)

வேறு.

பகருபரமீசன்வெறுமொருவனீறில் பரமனென்னுமாதிபகவனு
னிசரிலழியாதபிரமமயமாகி நிமலநிலையேயெனொழிவுறுக்
ககனவடிவானபிரமமெனிலியோனி கருவையுறமேவிவிடுவனு
னகிலசகமாகவறிவருமென்மாயை யெனைவிதையனுகியமருமால். (௨)

வேறு.

தேன்மாதியதாம்பகுதிபுமான் சிறந்தமான்பூதாதிமனந்
தன்மாத்திரைகள்பேதங்க ளிந்தியங்கள்சமைத்ததனுற்
பொன்மாலிரவிபலகோடி போலுமண்டமபோதானே
டென்மாசத்தியெல்லையிலா வுயிருமுளதாயிழைத்திடுமால். (௩)

வேறு.

எந்தயோனியிற்பிறப்பா ரியார்க்குந்தாயென்மாயை
தந்தையானெனவறிவார் சனனவினைதப்புவரா
லெந்தையாயெனையறியா திருப்பவரொன்மாயையினூற்
பந்தமாமியோனிதொறும் பவித்திறந்துபதைப்பர்களால். (௪)

பாங்காயவிச்சைகட்கும் பகர்பூதமனைத்தினுக்கு
மீங்காருமிலரிறைவ னென்னையலாலியானேயா
னீங்காதவதிபதியாய் நின்றுலகம்படைக்கின்ற
வோங்காரவுருவான பிரமமெனவுள்ளேனும். (௫)

போன்றுகின்றபொருள்களெடொறும் பொன்றுதேபுரையறநா
னின்றதறிக்தவனென்னை நேராகவறிகின்று
னன்றியுமிங்கவன்றன்னைத் தன்றுலேயறிந்தழியா
தென்றுமுளபரமபத வின்பமடைந்திடுகின்றான். (௬)

சங்கையறத்தத்துவங்க டன்னுடையநுண்மையுமென்
னங்கமெனமொழிகின்ற வாறினையுமகிலத்தின்
அங்கமறுபகுதியும் பகுதிவினியோகமுமென்
றிங்கெனதுநிலையறிந்தா னென்னையடைந்திடுகின்றான். (௭)

வேறு.

இறைவனுக்கனுதியா யிலங்குபோதமு
மறிவதுமுழுதையு மனந்தசத்தியு
நிறைவொடுசுதந்தர நித்தசத்தியென்
றறைவர்களறிபவ ராறுமங்கமாய். (௮)

வேறு.

நுண்ணியதத்துவங்க ளெனநுவல்வனதாநுகர்சீவ
னுண்ணமிலாமனமொடுதன் மாத்திரைகண்மற்றெதுக்கு
மெண்ணுவதாமிவ்வடியா மியாதினுக்குங்காரணமாய்ப்
பண்ணுவதுபகுதியதன் வினியோகம்பந்தமதாம். (௯)

வேறு.

பூரணமந்தவுண்மையிற்கரப்பதாகு மென்றறைந்திடப்பட்ட, வோர
ணவின்றி யுள்ளவெப்பொருட்கு மியோனியாதொன்ற திவ்வுலகின்,
காரணமந்தப் பகுதியிலதனைக் கடந்துமேலாகுமொன்றுன, பூரண
மானமகேசனென்றுரைக்கும் பொய்யை தீர்பரமனும்புருடன். (௧௦)

வேறு.

போகமாமுலக முற்றினுக்குமொரு மூலமானதெரி யாமையும்
போகுமாசெயும் விருத்தியும்பொரு ளனைத்தையுந்தரு புராணனு,
மேகனுங்கியிறை யாகிவானமென வெங்குமுள்ளபரமீசனு, மியோகியா
யுள வொருத்தனேயென வொருக்கிமாமறை யுரைக்குமால். (கக)

வேறு.

பாகமென்பர் பகுதிப்பரமனே
டேகமென்பர் சிலரணுவுக்கணு
வாகிமற்றது மப்படியாமென்பர்
யோகியுள்ளதெவா மென்பதுண்மையாம். (கஉ)

வேறு.

என்னையுறநினைப்பவரி லெங்கேனுமொருவனவன்
றன்மதியைக்கடந்தருளாற் றன்னிதயக்குகைதன்னிற்
பொன்மயனாய்ப்புராணமாம் புருடனைப்பொருந்துமெனி
லன்னியமதறவிழிவா னவன்பரமத்திடையடைவான். (கங)

எட்டாவது

பிரபஞ்ச சர்வகாரண புராண புருஷப்பிரதிபாதன
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம்-உகக.

---

ஒன்பதாவது

## மாயாவிகார அத்தியாயம்.

---

நின்மலமாயவிகாரியாய் வேறுபடாசிட்களனாய்ச்
சின்மயனாய்நித்தனாஞ் சிவனேநீஜெகத்தான
தன்மையினையருளென்னத் தபோதனரோர்தனையொழிய
வின்மையினைப்பரிசை யின்னமவர்க்கெடுத் துரைப்பான். (க)

வேறு.

என்னொழியவில்லைசக மியானவ்வுருவல்லே
னென்னிலொருமாயை யுலகுக்குமுதலாகு
மென்னுருவமானவெனை யன்றியதுநானுந்
தன்னியல்பினானிகழ் வுறத்தருவதன்றால். (உ)

வேறு.

யாதொன்றொருவராலேனு மறியப்படாதவியல்பாமென்
றாதிமுடிவின்றியசத்தி யந்தமாயையதனாலே

பேதவுலகமுண்டாகிப் பிறக்குமத னாற்பிறர்க்கென் றும்
போதப்படாதவென்னுலா யுள்ளபொருளிப்பொருளெல்லாம். (௩)

வேறு.

சோதியானந்தமாகுமெனத் தோன்றிடாவேதொல்லை
யாதிகாரணமாமென்றே யறைவர்களறியவொன்றாய்
நீதியாய்ப்பரமானந்த நிமலமாம்பிரமநானே
பேதியாவென்னில்வே றுண்டாவது பிறிதொன்றில்லை. (௪)

வேறு.

அன்றியின்மை யறிந்தவராதலா
லென்றுமிச்சகந் தானதுமியானென
வொன்றுமாகி யுலப்பிலனைத்துமாய்
நின்றல்கண்டிவர் நிச்சயித்தார்களால். (௫)

சின்மயானந்த மாய்த்திகழ்கின்றதோர்
தன்மையாய்ப்பர மாகியசாந்தமாய்த்
தொன்மையானசுடரால் விகாரமொன்
றின்மையாமெனக் கேதமொன்றில்லையால். (௬)

வேறு.

எனந்தமற்றவேகமேனி யெண்ணில்பேதமாக்கவற்
றனந்தசத்தியென்னிலே யவற்றின்மாயை யாதியா-
வனந்தவந்தமாயையான வானிலேமனத்தினு
னினைந்திடப்படாதவவ் வியத்தமாகிநிற்பனான். (௭)

வேறு.

சத்தியொன்றுலேயானுந் தக்கசாயுச்சமான
முத்தியுண்டாகுமொன்றான் முழுதுசெல்வுமுமுண்டாகுஞ்
சித்தியாநிற்பதெல்லாஞ் சிதையுமொன்றுலேயெல்லா
நித்தியமாகவென்ற னியமத்தானிகழுமன்றே. (௮)

வேறு.

மத்தியமாய்ப்பாஞ்சுடராம் மண்டலத்தான்மண்டிதமா-
யத்தகுமக்கரமாகி யறிவறிதாமனுதியாம்
வித்தகமாம்விட்டுவின்மெய்ப் பரமபதம்விச்சையெனுஞ்
சத்தியினுனிகழுமிது தக்கோர்களறிவர்களால். (௯)

உடுக்குமாடையினைப்போல வுலகமியாதொன்றிற்கு முக்கு
ளொடுக்குமாகுநிகிலமுமாய் நினைத்தற்கரிதாமியாதொன்றின்
மடக்கும்வாக்குத்தான்செல்ல மாட்டாமையினாற்பவக்கடலைக்
கடக்கும்பிரமவானந்தங் கண்டானடுக்கங்காணானால். (௧௦)

ஈனஞ்செய்யுமஞ்ஞான விருளைக்கடந்துமேலான
பானந்தனக்கேயுளதான பரமவொளியாம்பரம்பரனை
ஞானந்தன்னால்வேறறவே நானென்றறிந்தநல்லோனவ்
வானந்தமதாம்பிரமமயமாகி வீடேயடைகின்றான். (௧௧)

வேறு.

ஒப்பதுமிக்கதுகுறைந்ததொன்று தனையொழித்தில்லா
தெப்பொருளெவ்வொளிகட்கு மெவ்வொளிதானொளியாகுஞ்
சிற்பரமாகாயத்தே திகழ்கின்றவதுதெளிந்த
வப்பெரியோனானந்தமாய்ப் பிரமமாகின்றான். (௧௨)

வேறு.

உலகங்கண்முழுதுந்த னுளதென்னவுளதா
யலகின்றியழிவின்றி யறிவின்றியமிர்தா
யெலையொன்றுமறநின்ற பரவின்பமிதிலே
நிலைநின்றவனின்ற நிலையென்றுமழியான். (௧௩)

வேறு.

புன்மயகோசமுள் புக்கொளிக்குளே
நன்மையதாகிய ஞானக்கண்ணினாற்
சின்மயமாய்த்திகழ் தேசைநோக்கிய
தன்மையால்வியோமநற் றாமங்காண்பரால். (௧௪)

வேறு.

அப்பரந்தன்னைத்தன்பா லனுபவித்தனுபவித்தா
ரொப்படிக்கண்டாருள்ளத் திலங்குமாமுனிவரந்தச்
செப்பருமின்பமாய்த்தன் றேசினாற்றிகழ்ந்துதன்னோ
டொப்பறுமவனேயார்க்கு மும்பனென்றுணரப்பட்டான். (௧௫)

எங்குமுளனாயிறையா யேகனாயெல்லாப்பூ
தங்கடொறுமறைந்திருக்குந் தன்மையனாய்ச்சராசரங்கட்
கிங்குயிராயுள்ளாகு மிறைவனொருவனையுமறிந்
தங்கடைவார்சாந்தியினை யடைவரல்லாதவரடையார். (௧௬)

வேறு.

முகமொடுகிரிவந்தன் முடிபதமுடிவின் ருப்க்
குகைமுழு திஞைநின்றே குறைவறவுலகெல்லா
மகமொடுபுறமேவுற் றழிவறுநிலையாகும்
பகவனிலயலாகப் படுவதொர்பொருளின்றால். (௧எ)

வேறு.

மாசுடைமனத்தர் தம்மின் மறைப்பதாய்மாசிலாத
தேசுடையோகிகட்குந் தெரிந்திடப்படாததான
வீசஞெனதாஞான மிப்படியருளிஞலே
பேசினனுங்கட்கென்று பெருந்தகையருளிச்செய்தான். (௧அ)

ஒன்பதாவது

மாயாவிகாரவத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உ௩எ.

---

பத்தாவது

## தத்துவதரிசன அத்தியாயம்.

துக்கரங்குறியில்குறி ஞக்கருசணைதெரியி
லக்கணஞ்சகல வுலகத்தினங்குரமவ்
வக்கரம்பரமபத மப்பரஞ்சுடர்பிரம
நிர்க்குணம்பரவெளியி னிச்சயம்பெறநிகழும். (௧)

வேறு.

ஒப்பரும்பாதத்தவத் தொப்பிடுஞ்சுருதிக்கலை
கப்பறும்படிபுத்தியிற் கற்பிதங்கள்கழற்றிமெய்த்
தப்பருந்தவர்சித்தமெய் தற்பரந்தனிலற்றதிங்
கப்பரம்பிரமத்திஞக் கத்தைலிங்கமெனப்படும். (உ)

வேறு.

அறிவினில்பிறிதெல்லா மறிவெனலறிவாகும்
பெறவரிதிதிலல்லாற் பிறிதினில்வெளிதில்லேன்
பிறவியதறுஞானம் பெறவரிததஞலே
மறவியதறுமாயா மயலலதிலையெல்லாம். (௩)

வேறு.

நின்மலமாகி நிரஞ்சனமாய்வே
றின்மையதாய விகாரமிதாமித்
தொன்மையதாகிய சூக்குமஞான (௪)
மென்மலயில்லுரு வென்பரறிந்தோர்.

வேறு.

யோகினிலுளமென்பா லொருபடியுறவைத்தே
யேகவெளிலைகண்டா ரவனொன்றியல்கண்டார்
பாகமதுமொன்றும் பலவுருவமுநானே (௫)
யாகவுமெனையன்பா லறிஞருமயலன்றால்.

பேறுறுபிரமானந் தமுமதுபெறுதாமும்
வேறுறவறிகின்று ரவர்விழிமறைகின்றார்
கூறறவிகாரங் கூடியவினைதர்மா (௬)
யூறறவுணர்கின்று ருண்மையையுணர்கின்றார்.

வேறு.

பங்கமில்சீர்பரனுடைய தாதித்தன்பான்மையினை
யிங்கொருவர்க்கறிவரிய தாகியதவ்வியத்தத்தை
யெங்குமுளதாய்த்தம்பா லிலங்கியபேரின்பத்தைத் (௭)
தங்களிலேநிலைபெற்ற சாந்தரடைந்திருப்பர்களால்.

வேறு.

மெய்த்தகவீடிது விமலமாய்ப்பரி
சுத்தமதாகிநிர்த் தொந்தமாயொரு
பெத்தமில்பிரம ரூபத்திற்பேதியா (௮)
வுத்தமமெனது சாயுச்சமென்பரால்.

வேறு.

ஆதியுநடுவுமந்தமுமிலாததொன்
றேதுவெனிற் பரமீசனுனநா
ணீதியிலெனையறி நிமலநித்தனும் (௯
பேதமிலெனைப்பெறும் பிறவியின்பெறுன்.

வேறு.

தபனவொளிபெருகிரவி சசியுமினையச்
சிவனிசழ்வினிகழ்வுபெற சிறிதுமிவர் நிகழா
ரவனுடையவொளிகொடொரு வொளிதிகழுமசையா
விலனதொளிசிறிதுபெறி லிவர்நிகழ்வுபெறுவார். (௧௦)

வேறு.

உதியாமலென்று மொழியாமைநின்ற வொளியாகியென் றுமுளதாய்த், திதியாய்நிறைந்து தெளிவாகியங்கோர் செயலானதின்றி யருளான், மதியாளர்தங்க ளகமேமிகண்ட விடிவாய்நிகழ்ந்தவடிவே, பதியாகியென்றுமழியாமைநின்ற படியாகிநின்றபரனுன். (௧௧)

வேறு.

நித்தமனந்தநிட்களமின்பநிமலஞ்சற்
சித்தமுதந்தற்சிவமெனும்வேதத்திரளெல்லாஞ்
சுத்தனையந்தச்சுருதியினந்தத்துணிநெஞ்சத்
துத்தமர்தந்தமுளமதுணர்ந்தாரோமன்றே. (௧௨)

வேறு.

தாராகாயம்பவனம்புத் தானலல்லனீராதார
ஞோராதானபிராணாதி யெல்லாவாயுவினுருவல்ல
ஞோராகாசன்மனம்புத்தி யுறுமொருசேதனமவனல்லன்
பராகாரயோகத்திலகிய கேவலஞ்சும்பரமீசன். (௧௩)

வேறு.

எல்லாவேதத்துமறைந்திருப்பதுவாயாவர்க்குஞ்
சொல்லாதபரஞானமுங்களுக்குச்சொன்னேனு
னல்லானிப்பரயோகஞானத்தாலேநலிவொன்
றில்லாதவிடத்தடைவாயெனவியம்பியருளினுன். (௧௪)

பத்தாவது

தத்துவதரிசன வத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௨௫௧.

பதினோராவது

## யோக அத்தியாயம்.

இடர்ப்படுபிறவிதீர்க்கு மியார்க்குமெட்டாததாகி
யுடைத்தனதொளியினாலே யொளிர்வதாயுள்ளஞானச்
சுடர்த்திருவுருவமான சொரூபனையாதொன்றாலே
கிடைத்திடுமந்தயோகங் கேண்மினென்றருளிச்செய்தான். (௧)

வேறு.

யோகவெரியோரிமைப்பிலே யாதுவினையுமெரிப்பதாந்
தேகமொழியுமிம்முத்தியே சேருமுணர்வுசெனிப்பதா
மியோகமுணர்வையொழித்தாரு யோகமொழியவுணர்ச்சிதா
ஞருதலவிதுளத்துளா னியாவனவனையளிப்பஞன். (௨)

வேறு.

ஒருகாலிருகான்முக்கான்மற் றுள்ளகாலமுள்ளத்தை
வருகாதலினாலியோகத்தே வைப்பார்மகேசரெனப்படுவா
ரரிதாமிதனைமாயோக மபாவயோகமெனவறிஞ
ரிருபாலாகவியம்புவரவ் விரண்டுமிருக்கும்படிகேண்மோ. (௩)

வேறு.

தானினையுமாறரிய தத்துவமியாதொன்
றானிகழ்வதாகுமத பாவமெனுமியோகம்
வானியலதாகியொரு வத்துவுமில்லாதாஞ்
சூனியமதாகவறி கின்றனர்கடீயோர். (௪)

வேறு.

மயலிலாயாதிலொரு மலமிலாதானசுக வடிவதாமாசி
லொளியா, மயலிலாவேகவெனை யயலெனாதேகமென வறிகை
மாயோகமதுவா, முயலுமாறுசையென முடிவிலாநூல்கள்
பல மொழியுமியோகாடவியெலா, மியலுறுதாமரிய விதனி
லோர் * சோடசியு மிசையுறுதாகுமியல்பால். (௫)

வேறு.

சுத்தமாயென்னைக்கண்டெத் தோற்றமுந்தோன்றுதான
வுத்தமயோகமெல்லா யோகினும்பரமயோக

* சோடசி என்றது, பதினாறு.

மத்திறமின்றியென்னை யாயிரங்கோடிகாலஞ்
சித்தமதொருக்கினாளுஞ் சிந்தையிற்றிகழக்காணார். (௬)

வேறு.

அயர்வறுயோகலா தறிகையாதன
மயலறவிந்திய மடக்கல்வாயுவின்
சயமிகுதியான தாரணைசமாதியு
மியம்முநியமமு மெட்டுமங்கமாம். (௭)

வேறு.

தருக்கிலாதபிரமச்சரியமெய்
யுரைக்கைகள்ளமொழிகையின்றுசெயா
திருக்கையாதொன்றுமேராமையென்றிவை
சுருக்கமாகயமமென்றுசொல்வரால். (௮)

வேறு.

மனத்தால்வாக்காற்காயத்தால் வாதையாவதிபாதேனு
மனைத்தாருயிர்க்குஞ்செய்யாத தகிஞ்சையாகவறிகவிது
தனிற்றான்பரமாந்தருமமிலை சாருமின்பந்தானுமிலை
யெனைத்தாம்விதியினுயிர்க்கின்னா செயினுமதுவுமினிதேயாம்.

வேறு.

உளவாறுரைசெயருணுரை செயுமாறெழுகுதரான்
வளவாய்மையதெனநாடினர் மதியான்மிகுமதியா
ரளவாரகிலமும்வாய்மையி லுளதாதலினதுதா
னுளவாசகவினையாலுடை யவனியாவையுமுடையான். (௧௦)

வேறு.

மறைவினிலாகினும் வலியினிலாகினும்
பிறர்பொருள்வவ்வுதல் பெரியகள்ளமாங்
கறையுறுமரிவையர் திறங்களுவிலும்
பிறழ்வறமறப்பது பிரமசாரமாம். (௧௧)

வேறு.

அரந்தைமுழுந்திடவாபத் தடைந்திடினுமன்பாலே
பிரந்தொருவனீந்திடினு மேராமையேராமை

வருந்திமனத்தாசையற மடக்குதலூண்மாசற்ற
நிரந்தரமாமியமமிவை நியமமினிநிகழ்த்திடுவாம். (௧௨)

வேறு.

படர்தவம்வேதநூல் பயிறல்பத்தியாற்
கடவுளைவழிபடல் கருதினெஞ்சினோ
டுடலுறுதூய்மைசந் தோடமோங்கிய
சுடர்நியமமாய்ச் சுருங்கச்சொல்வரால். (௧௩)

வேறு.

பவமார்நோவுகெடநோன்பு பலவாலாக்கைமெலிவிக்கை
தவமாகுவதுவேதாந்தஞ் சதருத்திரியந்தரீரகமாஞ்
சிவமாகியமந்திரம்பலவின் செபமத்தியானஞ்சிறந்துள்ள
வவமானதிலாவதன்பேத மறிவாரறையும்படிகேண்மோ. ()

வேறு.

வாசிகமுபாஞ்சுமானதமென்று மதிலொவ்வொன்
றினுக்கொன்று, தேசுடைத்தென்று செப்பினர்பிறர்க்குந்
தெரியவேசெபித்திடுஞ்செபந்தான், வாசிகமுபாஞ்சுவாயிதழ்
முடித்தன்மாத்திரமானதமடங்கி, யாசறச்சிந்தைசெய்தலெனி
ன்றினுக்கொன்றுயிரமடங்குநல்லனவாம். (௧௫)

வேறு.

கூடினகொண்டலம் பாவங்கூடல்சந்
தோடமென்றறிஞராற் சொல்லப்பட்டதா
லாடுறுதூய்மை தானகம்புறம்புள
தோடமதிரண்டையுந் துடைத்தலென்பரால். (௧௬)

வேறு.

தோயமுமண்ணுமாக் கொண்டுசுத்தமாக்
காயமேவியமலங் கழுவப்பட்டதாம்
வாய்மையம்முதலதா மனத்திறற்செயுந்
தூய்மையையுள்ளநற் றாய்மையென்பரால். (௧௭)

சுந்தரன்மலர்கொடு காயபூசனை
வந்தனைசெயல்புகழ் வாக்கின்பூசனை
பந்தனையறமனம் பத்தியாற்செயுஞ்
சிந்தனைநியதமுஞ் சிவன்றன்பூசையே. (௧௮)

வேறு.

புராதனரோதியவியம நியமங்கள்புகன்றனமேற்
பிராணனதின்யாமமது பேசுபிராணயாமம்
விராவியுட லுறும்வாயு விளம்புவர்கள்பிராணனென
நிரோதனமேசெயலதனை நிறுத்தலுமாயாமந்தான். (௧௯)

வேறு.

மந்தமுத்தமமத்திமமென்றுமிங்
கந்தநற்பிராணயாமமறிபவர்
சந்தமுற்றசகற்பவகற்பமாய்ச்
சிந்தையுற்றிரண்டாகவுஞ்செப்பினர். (௨0)

வேறு.

மந்தமாறிருமாத்திரைமத்திமோத்தமங்க
ளந்தவெல்லிரட்டியிரண்டுடன்மாத்திரையடக்கல்
கந்தவேர்ப்புறங்கம்பனங்கிளம்புகையிவையா
னந்தமாச்செயுமொன்றினுக்கொன்றுநன்மையதாம். (௨௧)

வேறு.

அகற்பமல்லதர்மந்திரமகத்திலேயானவாயாமந்தான், சக
ற்பமாம்வியாகிருதியோங்காரஞ்சாவித்திரிதனைமுக்கால், வகுக்
குமெல்லையாமிடம்வலம் வழங்கியவாயுவைவலியுறவலத்தான்,
முகக்கவென் றறிந்தவரியோகத்திலே முயன்றிட மொழிந்தா
ரால். (௨௨)

வேறு.

ஏசதுரும்விடத்தில்வழங்குகை
மாசதுருமல்வலத்தினில்வாங்குகை
யாசதறத்திதியாகவடக்குகை
ரேசகபூரககும்பகமென்றார். (௨௩)

வேறு.

இந்தியமீட்சிதானே யிசைந்திடும்பிரத்தியாகாரங்
கந்தரமிதயநெற்றி கபாலநாபிகளிலொன்றிற்
சிந்ததஞ்சிந்தைவைக்கத் தாரணைதரித்ததேக
சிந்தனையொழுங்கொன்றோடே சேர்ந்தது தியானமாமே. ()

வே று.

ஓதுமாலம்பன மொன்றுமின்றியே
போதமும்போதகப் பொருளுமென்றுணர்,
பேதமதன்றியே யிருந்தபெற்றிதற்
சாதனமாகிய சமாதியென்பரால். (௨௫)

வே று.

தாரணையாயாமத்திற் றகுதிபன்னிருமடங்காந்
தாரணைதன்னிற்றியானந் தானுமப்படியேயன்றாந்
தாரணிதன்னின்ஞான சாதனமாஞ்சமாதி
யோரணிதியானந்தன்னி லேற்றமிப்பரிசேயென்பார். ()

வே று.

விவத்திதம்பெற் றிருக்கைவிணைந்தெழுங்
கவற்றிதீர்வுறக் கற்பித்தவாதன
மவற்றினெல்லை யறைவரிதந்தநற்
சுவத்திகம்பத்ம மியாதினுந்துய்யவாம். (௨௭)

வே று.

இருதுடைமேலே யீரடியேறும்
பாமவிருப்பது பதுமமதாகு
மொருபதமேலே யொருபதம்வைக்க
மருவவிருப்பது மத்திமமாகும். (௨௮)

வே று.

தடித்தவூருசா னுக்களின்சந்துற
மடித்தவந்தரத் துள்ளேமற்றவைத்
தடித்தலங்கள்செவ் வேசெலவாக்குறத்
தொடுத்திருத்தல் சுவத்திகமாவதே. (௨௯)

வே று.

நீரினுற்செழும்பதான்வவ்விடங்க ணெருப்பினுல்வெந்தவவ்விடங்க,ளுநுசெந்துக்கடுற்சனர்துரால ருதிர்ந்திடுசருகுபுற்றிடங்கள், கோரமாம்பயங்களுள்ளிடமிடிந்த கோயினுற்சந்திகண்மயான, மாரவாரங்களுள்ளிட மசுத்தமலக்கணுமனத்தினுக்கதனுல். (௩௦)

வருத்தமாயுடல் வாதையைப்பற்று மனமதுநடுநடுங்கிட்டுப், பொருப்பினிற்குகைகள் புண்ணியதேசங்கோயில்கணதிகளின்கனாக, விருப்பறுமனைதா னூர்வதுகடிப்ப தின்றியேகாந்தமாயுள்ள, வொருத்தருமறியா விடத்திலேயென்னை யுன்னுவான்மனனொருப்படுவான். (௩௧)

வே று.

உன்னருமியோகொருப் படுவன்முன்னரே
யென்னருள்பெற்ற யோகிசர்தம்மையுஞ்
சென்னியர்விநாயகன் றனையுந்தேசிகன்
றன்னையுமென்னையும் வணங்கிச்சாருவான். (௩௨)

வே று.

தனியிலிருந்துபயமின்றிச் சாந்தனாகித்தனக்கிசையு
முனிவர்மொழியுமாதனங்கண் மூன்றினொன்றிலேமூக்கி
னுனியைச்சிறிதேகண்விழித்து நோக்கியாதுநோக்காதே
யினியதன்பாலேயிருந்த வென்னைப்பாவிப்பதியோகம். (௩௩)

பங்கயத்தலைக்குமேலே பன்னிருவிரலிற்கற்பித்
தங்கதற்கறமென்மூல மறிவதுநாளமாகுந்
தங்கிடுஞ்செல்வமெட்டுத் தளநிறந்தவளமாகு
மிங்குதன்வலிவைராக்கிய மெனப்படுதாதிதன்கண். (௩௪)

சகலசத்தியுமுடைத்தாய்த் தமனியமயமாய்த்தாரம்
புகலுமெய்ப்பொருளாயென்றும் பொன்றுறுதாகியெங்குந்
திகழொளித்திரளாயுள்ள தெய்வமாய்த்தெரிக்கொணாதாய்
நிகழுதற்பரத்தினேரே நித்தலுநெஞ்சைவைப்பான். (௩௫)

வே று.

மிக்கபரஞ்சுடரான விமலனையும்விளம்புற்ற
வக்கமலத்தேதனையு மயலாகாவகைநினைவா
னக்கரமாம்பரமாகா சத்துவனைத்தானெங்கு
மொக்கநினைந்தேபின்னை யொன்றுநினையாதொழிவான். (௩௬)

வே று.

யாவருமறிவரி தாயபாவனை
மேவுறவிளம்பினன் வேறுமின்னமோர்

பாவனைகேண்மின்முன் பன்னுபங்கயப்
பூவினையுன்னியப் பூவினுள்ளதாம். (௩௭)

அன்னியமறவனை லோனைக்காட்டிய
பன்னியபுருடனும் பஞ்சவிஞ்சகன்
றன்னையேசகலகத் தாவாத்தன்னுரு
வன்னியின்சிகையதா மதித்துநோக்குவான். (௩௮)

வேறு.

அவமறுபுருடன்ற னகமுறவறநன்றுச்
சிவமமலமதாகித் திகழ்தருபரமான்மா
வுவமையில்பரனென்னு னுரையினிலுணருந்தத்
துவநிலைகுலையாவச்சுதனென்மனம்வைப்பான். (௩௯)

வேறு.

அப்பரமான்மாவுள்ளே யதனுக்காதாரமாகி
நிற்பதாய்ப்பரமமாகி நிரஞ்சனமாகியுள்ள
வொப்பருமகேசனேக வுருவனுமுன்னியந்தத்
தற்பரந்தனோடொன்றுந் தன்மையனுகச்சார்வான். (௪௦)

சொன்னதத்துவங்களெல்லாஞ் சோதனைபண்ணிப்பின்னைய
பின்னதத்துவமொன்றில்லாப் பிரமநானெனநினைந்து
பன்னருமோங்காரத்தாற் பரமமாம்பரமாயுள்ள
வென்னிலேதன்னைவைத்திங் கென்மயமாகியுள்ளான். (௪௧)

வேறு.

நலங்கொள்ஞானநீராடி நல்லாகுதி
துலங்குநீற்றையுத்தூளித்து மந்திர
மிலங்குமங்கிமுதனினைந்தீசனைப்
புலங்கொள்சோதியின் புஞ்சமாயுன்னுவான். (௪௨)

வேறு.

ஆசிரமமேலிலதியாசிரமமாகத்
தேசுதருமாமறையினீறுகடெரிந்தே
பாசுபதயோகுபசு பாசமறநேரே
பேசினனிதாருமறியப்பெறுமதன்றூல். (௪௩)

வேறு.

பிறிதறுமெனதுசாயுச்சம்பேறதா
மறைபொருள்கேவலம்வழங்கிடாரிது
வறமுயலந்தணர்தம்மிலன்பரிற்
றுறவுறுபிரமசாரிகட்குஞ்சொல்லலாம். (௪௪)

வேறு.

பரியுமகிஞ்சைப்பழிதீர்பிரம
சரியந்தவந்தருசந்தோடமுண்மை
யுரியபொறைதூய்மையுண்டென்றிருக்கை
யரியவிரதத்துக்கங்கங்களாமால். (௪௫)

வேறு.

எண்ணியவிவற்றிலொன்றீனனானவன்
றண்ணியுறுதலாற்றானைதநழுவினான்
புண்ணியவினையினோர்பொருந்தவென்னையே
கண்ணியவிரதமெஞ்சாமற்கைக்கொள்வார். (௪௬)

வேறு.

ஏகிவிந்தவியோகாலெனையடைந்
தாசைசோகபம்பயமற்றவான்மராய்ப்
பாசமற்றெனைப்பாவித்தபாவத்தா
லாசிலென்மயமாஞரனேகரால். (௪௭)

வேறு.

எப்படியார்நினைந்தடைவரியானவர்க்
கப்படியானிகழ்ந்திடுவனுதலா
லொப்பருஞானமெய்யோகுளத்தெனைத்
தப்பரும்பூசனைசெயவேதக்கதாம். (௪௮)

வேறு.

பொய்யில்பத்தியாற்றுறவாற்போதம்பொருந்தும்புந்தியினாற்
செய்யும்பூசையேபூசை செய்யுந்தொழில்களெல்லாம்வீட்
டெய்யம்பண்ணியுண்டொன்று மாசைப்படாதெனையடையு
முய்யும்பரிசுமறைந்தபொரு ளுங்கட்கிரங்கியுரைத்தனனால். ()

வேறு.

பத்தியையென்பாலுடையா னெவ்வுயிர்க்கும்பரிவுடையா
னொத்தநலந்தீங்கடையா னொடுங்கியவுள்ளமதுடையான்
புத்திமனமென்பாலே பொருந்தியபாவனையுடையா
னெத்தனையும்பொறையுடையா னியாவரினுமெனக்கினியான்

பன்னியயோகொழிவில்லான் பற்றிலான்பாவகத்தோ
ரின்னலிலானாரம்பித் திடுவதொழிவதிலான்
றன்னைவெருவுதலொன்றுறாற் றான்வெருவுறானில்லா
னென்னதியானெனவில்லா னென்றுமெனக்கினியான். (ரு௧)

வேறு.

தூயருறுதசந்தோடமேவியே
செயலெலாமுதாசீனனாகியே
யயலராயினாரன்பரின்றிவா
ழியல்பினானெனக்கினியனாயினான். (ரு௨)

வேறு.

துதியினிந்தையிற் றுல்லியனாயெனிற்
றிதியடைந்து சினஞ்செருக்கின்றியே
மதியினொன்றினும் வாஞ்சையுறாதுள
வதிகவானெனக் கென்றுமெய்யன்பினான். (ரு௩)

வேறு.

வாடலின்முகமது மலர்ச்சியுமவுனநற்
பீடுறுவித்தகம் பெற்றநோடலங்
கூடுதலினியவை கூறலியாவரு
நாடருநிலையுடை யவர்க்குநல்லனான். (ரு௪)

வேறு.

எத்தொழில்களுஞ்செயினு மென்னருளினாலென்
பத்தர்பரமப்பத மடைந்திடுவராலே
தத்துவமும்வைத்தெனி லெனைச்சரணமாக
நித்தமுநிராசையை யடைந்துநினைகிற்பார். (ரு௫)

வேறு.

அடங்குமனனாய்ப்பயனென்றி லாசைப்படாதானளவற்ற
விடங்கொள்வினைகள்செய்தாலும் வீடேயெய்துமாதலினா
லுடம்புகாணாநல்யோகி யுண்டாம்வினையாலொருகாலு [ல்.
மிடும்பையடையானாசைப்பா டில்லானெனையேயடைந்திடுமா

வேறு.

துற்றுவருதொந்துவ மயக்கவை துடைத்துப்
பெற்றதொடமைந்தெனருள் பேறுறநினைந்தே
யுற்றகருமங்கள்வினை யென்னவுமைசெய்யார்
கற்றவர்கள்வீடதென வேகருதுகின்றார். (௫௭)

வேறு.

என்னையேநினைந்தெனைப் பணிந்தெனையருச்சித்தென்
றன்னையேயறிந்தவனெனை யன்றியேசாரான்
பின்னியாதுமப்பெருந்தகை யிருந்திடந்தனிலென்
சென்னியாற்சுமந்தவற்கு வேண்டுவதுசெய்குவனால். (௫௮)

வேறு.

என்பதத்தைவிட்டிதா தேவதைகளைக்காமித்
தின்பம்வேண்டுநர்தாமு மிங்கிதனையெய்துவரா
லன்பினாலருண்மூர்த்தி வேண்டுநர்களுமவர்பாற்
பின்புவந்தெனையறிந்து நன்முத்தியேபெறுவார். (௫௯)

வேறு.

சாமவொந்தக்கடவுளருஞ் சாவில்லாதென்
றாமமதாமென்றெனையொழித்தார் தமைவிட்டென்
பாமகவாதிச்சுற்றமும்விட்டென் பாலன்பா
யாமரணாந்தத்தளவுமிலிங்கத் தருச்சிப்பான். (௬௦)

எந்தப்பதமுங்காதலிலாதே லிங்கத்தே
வந்திப்பவன்ஞானாத்மகமாகி மயலற்றோன்
சிந்தைக்குளதாயெங்குந்தானாஞ் சிவலிங்க
மந்தச்செனனந்தனிலேயறிவா லடைகின்றான். (௬௧)

வேறு.

பங்கயில்பத்தியோடுமற்றெவரும் பாவனையா லிலிங்கத்தே, யிங்கெனையிறைஞ்சி லின்பமெய்ஞ்ஞான மெங்குமா மிலிங்க மெய்துவரா, லங்கியிற்புனலிலம்பரந்தன்னிலருக்கனி லணிலனிந்துவினி,லிங்கிவையிலிங்கமாரணுதியிலேயெனைநினைந்திறைஞ்சிடப்படுவான். (கூஉ)

வேறு.

ஈதெலாம்வெறும் லிங்கமயமதா
மீதெலாமிலிங் கத்துளிருப்பதா
மாதலாலந்த லிங்கமெங்கேயங்கே
காதலாற்றொழ வேகடனுகுமால். (கூரு)

வேறு.

கருத்திலாமூடர் காட்டமாதிகளிற் காண்பர்கற்றவர்களாகாயத், தருக்கனிற்புனலிற் காண்பராகுதியி லருச்சனைசெய்யு மந்தணரவ், வெரிக்கணேகாண்ப ரெங்குமாய்நின்ற வெனதுலிங்கத்தினைநேரோ, யொருக்கியபரம யோகிகளென்று மொழிவறக்காண்பர்தம்முளத்தே. (கூச)

வேறு.

நீங்காதகாதலினு னின்மலபோதம்பயக்கு
மோங்காரமாத னுருத்திரியந்தானுதல்
பாங்காகவத்தியன வானுகிப்பரித்தவுடல்
போங்காலத்தளவுநிரந் தரயோகம் புரிந்திடுவான். (கூரு)

வேறு.

காமரமெங்கும் காமரகன்றூர் காசிக்கே
யாமரணுந்தத் தளவுமிருப்பா ரங்காவி
போமளவுற்றூர் போய்வரவுற்றூர் புரையற்றோர்
காமனைவென்றூர் தாமனைவென்றூர் கழல்கண்டே. (கூகூ)

வேறு.

பொல்லாதவருமங்காவி போகிலென்னைவிடப்போகார்
நல்லவொன்னையடைவரென நவிலவேண்டுவதுமுண்டோ
வெல்லாவுயிர்க்கும்விடளிப்ப னென்றூல்வினையாலிரங்காத
வல்லாவகைகூடினுமுயிர்விட் டகல்வானல்லனறிவுடையான். ( )

அரியமறையிலரியமறை யாகும்பொருளீதறிஞர்களாற்
றெரியநினைந்தபடியெவர்க்குஞ் செப்பப்படாதுசெய்தவத்தா
லுரியவிரதனுயறமற் றெடுங்குமுள்ளத்தொடுபிரம
சரியமுடையபத்தனுக்கு நேரோசாற்றத்தகுவதுவாம். (சுஅ)

வே று.

இவணமேதனதியோக மியம்பித்தன்னிடத்திருந்த
வுவணகேதனனை நோக்கி யுத்தமர்க்குணர்த்தயோக
மிவனுரைசெய்யத்தக்க திலங்கியசாந்திநெஞ்சிற்
சிவணியபுதல்வர்க்கென்றே சிவனருள் செய்யலுற்றான். (சுகூ)

முனிவரேயுங்கட்கெல்லா மொழிந்திடப்பட்டஞானம்
புனிதராய்ப்புதல்வர்க்காகப் பூசுரரர்ேஞர்கேட்ப
வினியநும்வாயினுலே யிப்படியிறப்புமீண்டு
சனியமுமொழியநீருஞ் செப்புமென்றருளிச்செய்தான். ()

வே று.

இந்நாரணனீசனுகியவென்னில்வேறலனென்றுதஞ்
சிந்தையானினைவார்களுக்குரைசெய்தயோகிதுசெப்பலா
மெந்தவாருயிர்கட்குமின்னுயிராகுநாரணனென்பதோ
ரந்தமாதியிலாவெனக்கருளானதோர்வடிவாகுமால். (எக)

வே று.

ஏதமுறநாரணனை யென்னிலயல்காணும்
பேதவிழியாளர் பிறவிப்பிணியுறுவோர்
மாதவனையானென மன்த்தினினைகிற்கும்
போதவிழியாளர் பரிபூரணமடைந்தார். (எஉ)

ஆதலிலருச்சியினிவ் வாதியரியானுய்க்
காதலொடுகாண்மின்மய லாகியயல்காண்பார்
தீத்தருமாநரகு சேர்வுறுவர்தீதா
நீதியுறுநீசரிடை யானும்வெளிநில்லேன். (எங)

வே று.

நான்மறையந்தணர்நாய்வதைசெய்தத
னான்மிசைகின்றவரோதினர்மூடப்

பான்மையரும்மரியைப்பழியாதம்
மேன்மைசெய்பத்தனைவிடுவிப்பன். (எச)

வேறு.

மருவற்கென்னைமனம்வைத்தோன் மாலாமிவனென்வடி
வென்றே, பரவிப்பணிவானென்றேசெம் பவளத்திருவாய்
மலர்ந்தருளி, யரவிற்றுயிலச்சுதனுக மழுந்தத்தழுவவவ்விடத்
தே, கரவுற்றருளவதிசயமாய்க் கண்டார்மேனிகண்டிலரால். ()

வேறு.

தன்பராபரமாகியவடிவினைத் தவிர்ந்தொருதவனுகி [கித்
முன்புதோன்றியவடிவதாய்முகுந்தனு முனிவனைமுகநோக்
துன்பவேறவருளினுலுமக் கிறைசொன்னவிச்சுடர்ஞான
மன்பராயறமறிபுதல்வர்க் கறிவியுமெனவருள்செய்தான். ()

வேறு.

ஈசனதாயவந்த திலங்கியபரமஞான
மாசிலந்தணனுமாகி * யாகிதவனலனுகி
நேசனுயடங்கியுள்ள நெஞ்சனுநிமலனுக்குப்
பேசலாமென்றுகண்ணன் பின்னருமருளிச்செய்தான். ()

யோகிகளியாவருக்கு முத்தமயோகிதானே
யாகியமுகுந்தனிவ்வா றருளியங்கவனைநீங்க
வேகவீசனையுநாராயணனையு மிறைஞ்சியெல்லா
மோகவேதனையுமாறி முனிவர்முற்பதியடைந்தார். (எஅ)

வேறு.

சனற்குமாரன்சம்வத்தகற்குரைத்தனன் சனந்தனன்புல
கற்குப், புனிற்றிதீர்முனிகௌதமன்பொருட்டிது புகன்றனன்
புகன்றனிங், கனித்தமற்றுளவிதுபரத்துவாசனுக் கங்கிரா
வளித்தாரோர், செனிப்பிலாவிதுகபிலமாமுனி பஞ்சசிகற்
குரைத்தனன்முன்னே. (எகூ)

வேறு.

எந்தையாகியபராசரன் சனகனுலிலங்கிடப்பெற்றனென்
றந்தைபாலருந்தவஞ்செய்வான் மீகியுந்தானறிந்திடப்பெற்ற

* ஆகிதவனலன் என்றது - அக்கினிஹோத்திர முள்ளவன்.

னந்தகோபன்மனையினின் மதலையாய் நடித்தநாரணன்குந்தி, மைந்தனாகியபார்த்தனுக்கருளினன் வழங்கினன்மான்றேர் மேல்.

வேறு.

ஏமமாகவெனக்கினுருத்திர
வாமதேவன்வழங்கினனாதலாற்
காமனீறெழக்காய்ந்தவக்கண்ணுத
றுமமேசரனாகத்தருவதே. (அக)

வேறு.

வேறாகநானிந்த வெம்பிறவிவேரறுப்பா
னேறூருமிறையவனை யென்றவனையடைகின்றேன்
மாறாதவன்போடுந் தாரமக்கள்கிளையொடுநீ
ராறுருஞ்சடைமுடியா னடியடைமினிதுவேண்டில், ()

ஒழியாதுநற்கரும யோகத்தாலுருத்திரனை
வழிபாடுசெய்யுமென மாமுனிவன் மறைப்பொருளை
மொழிவானைநேரோயம் முக்கணிறையெனமுனிவர்
கழிகாதலொடுபணிந்து கைதொழுதுகளிகூர்ந்து. (அஉ)

வேறு.

ஓதம்பற்றியோருணர்ந்துறங்கமலநீயுன்றிருவருளாலே, போதம்பெற்றவானவர்களும் பெறலரும்புராண பூரணன் செம்பொற், பாதம்பற்றியப்பவக்கடல் கடக்கநற்பத்திபெற் றனமாற்று, லேதும்பெற்றனம்பெறுததொன்றில்லை யென் றிணையடிபணிவுற்றார்.

வேறு.

தீதின்முத்தியைச் சேரவேண்டினர் சிவனடிக்கே
யாதிலர்ச்சனை செய்தனரந்த வெல்லையிலாப்
போதமுற்றநற் கருமயோகினைப் புதல்வர்களா
யாதரிப்பவர்க்குணாமினென் றருண்முனிபணித்தர்ன். (அ௫)

வேறு.

மாமறையின்மெய்ப்பொருளை மாலொடுசனற்குமாரன் முதலார்க்கிறைவழங்குதிருவார்த்தை, யாமைமவடிவைக்கொட

ரிய்முதம்மதனைத்தன்றருமுனிவர்கட்கருளு மிறைவ்தனையன்பாற், றுமதமில் சௌனகனையாதிமுனிவர்க்குத் தந்தருளுகென்று தலையாலுறவணங்கித், தோமின்முனிசூதனுரை செய்யவவர் கட்குச் சுருதிகடெரிந்தமுனிசொன்னபரிசீதால். (அசு)

வேறு.

மூவர்தேடிறைசனற்குமாரன்முதன்முனிவர்கட்குமொழி கீதையிங், கியாவரோதினரிதன்பொருட்டுணிவரியாவர்கேட்ப வரியாவர்தம், பாவம்வேரொடுபறிந்துநல்லப்ரமப்பதம்பெறு வராதலான், மேவுமன்பினொடுமோதமீளுதலில் வீடுவேண்டி னன்விரும்புவான். (அஎ)

பதினோராவது

யோகவத்தியாயம் முற்றுப்பெற்றது.

ஆகத் திருவிருத்தம்-௩௩அ.

ஈசுரகீதை முற்றுப்பெற்றது.

---

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ் சின்மயம்.

உ

கணபதிதுணை.

ஸ்ரீ பட்டரவர்களால்

மொழிபெயர்த்தருளிய

பரமார்த்த தரிசனமென்னும்

# பகவற்கீதை

இஃது

ஸ்ரீ. கோ. சித. மடம்

ஸ்ரீ பொன்னம்பலசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டதற்கிணங்க,

ஷை மடாதிபரவர்கள்

ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின்

உத்தரவின்படி

முள்ளங்குடி நாராயணசுவாமியால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912

உ

கணபதி துணை.

# பரமார்த்ததரிசனமென்னும்

# பகவற்கீதை அத்தியாய அட்டவணை.


| தொகை | அத்தியாயப்பெயர். | பக்கம். | பாட்டுத் தொகை |
|---|---|---|---|
| | பாயிரம் ... ... ... ... | ௫௫ | ௪ |
| | **கர்மகாண்டம்.** | | |
| | *பிரதமஷட்கம்: துவம்பதார்த்தநிரூபணம்.* | | |
| ௧ | சோகவத்தியாயம் ... ... ... | ௫௭ | ௨௬ |
| ௨ | சாங்கியயோகவத்தியாயம் ... ... | ௬௨ | ௬௦ |
| ௩ | கர்மயோகவத்தியாயம் ... ... ... | ௭௧ | ௨௬ |
| ௪ | சம்பிரதாயவத்தியாயம் ... ... ... | ௭௬ | ௩௧ |
| ௫ | ஞானகர்மவத்தியாயம் ... ... ... | ௮௧ | ௧௯ |
| ௬ | யோகவத்தியாயம் ... ... ... | ௮௫ | ௩௭ |
| | **உபாசனகாண்டம்.** | | |
| | *துவிதீயஷட்கம்: தற்பதார்த்தநிரூபணம்.* | | |
| ௭ | மாயாரூபவத்தியாயம் ... ... ... | ௯௧ | ௨௫ |
| ௮ | எழுவகைவிஞ்ஞானத்தவத்தியாயம் ... ... | ௯௬ | ௧௮ |
| ௯ | மாயாவிகாரவத்தியாயம் ... ... | ௯௯ | ௨௩ |
| ௧௦ | விபூதியோகவத்தியாயம் ... ... | ௧௦௩ | ௨௬ |
| ௧௧ | விசுவரூபவத்தியாயம் ... ... ... | ௧௦௮ | ௪௩ |
| ௧௨ | பக்தியோகவத்தியாயம் ... ... ... | ௧௧௫ | ௧௨ |
| | **ஞானகாண்டம்.** | | |
| | *திருதீயஷட்கம்: அஸிபதார்த்தநிரூபணம்.* | | |
| ௧௩ | க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞவிபாகயோகவத்தியாயம் ... | ௧௧௮ | ௩௧ |
| ௧௪ | குணாதீதவத்தியாயம் ... ... ... | ௧௨௩ | ௨௩ |
| ௧௫ | பிரபஞ்சவத்தியாயம் ... ... ... | ௧௨௭ | ௨௫ |
| ௧௬ | தேவாசுரசம்பத்து விபாகயோகவத்தியாயம் ... | ௧௩௧ | ௨௧ |
| ௧௭ | குணவிகாரவத்தியாயம் ... ... ... | ௧௩௫ | ௨௫ |
| ௧௮ | சஞ்சேபவத்தியாயம் ... ... ... | ௧௪௦ | ௭௦ |
| | ஆகஷட்கம்-௩-க்கு அத்தியாயம்-௧௮-க்கு ... | | ௫௪௫ |

உ

ஸ்ரீகிருஷ்ணாயபரப்பிரஹ்மணேநம:.

# ஸ்ரீ பகவற்கீதை மூலம்.

## ஸ்துதிகள்.

பாதியோர் பெண்மையான் பரிந்து பெற்றதோர்
சோதியாங் களிற்றினைத் தூர மண்மையிற்
பேதியா துளம்பெறப் பேணிப் * பாகவற்
கீதையான் மொழிகுவன் ஞானங் கிட்டவே. (௧)

ஆரியயனோ டரனாகி யகிலந் தன்னை யாக்கியளித் தழிக்கின்ற வவித்தைக் கென்றுங், கரியதுவாய்க் காந்தத்தி னிரும்பு போலக் காரணத்தின் சலனத்துக் கேதுவாகி, வரியமரு மாதினொமே னெளிய வேறி வைகுண்டத் தினிதமரு மாயோன் மண்மேற், பரிபுணரு மணிநெடுந்தேர்ப் பார்த்தற் கூர்ந்த பாண்டவர்கள் சாரதிநாம் பரவுந் தெய்வம். (உ)

ஒருபத மடித்தொரு பதம்பொற் றேர்மிதித்
தொருகையிற் குசைகசை யொருகை ஞானமாய்ப்
பொருகையில் விசயனைப் புரிந்து நோக்கிமெய்
தருபொரு ளுரைத்தவர் சரணம் போற்றுவாம். (௩)

## ஆக்கியோன் பெயர்.

சேயமா மதுரை நின்றுஞ் சேமமா நகரந் தேடி
யாயனார் பட்ட ஞரா யவதரித் தருளி னாலே
போயநாண் மொழிந்த கீதை புலப்படுத் ததுவு மன்றித்
தூயமா தவர்க்கு மிந்தச் சுருதிநூ றொடங்கி னோ. (௪)

* பாகவற்கீதை—நீட்டல் விகாரம்.

ஸ்ரீகணேசாயநம:

பரமாத்மநேநம:

# ஸ்ரீ பகவற்கீதை மூலம்.

## பாயிரம்.

ஐவகைப் பொருணான்கு காரணமூங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
[illegible]யுதிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

மன்னருள் விசயன் [illegible] வாளம ரதன்மே லிட்டு [லாம்
பின்னவிர் படைக்கை மாயன் றுணர்த்துமெய்ப் பொருளை யெல்
பன்னரு மறைகள் கோத்த பழமுனி பணித்த வண்ண
மென்னறி வளவி னாலே தமிழினு லியம்ப லுற்றேன். (௨)

விண்ணியன் மொழியினால் வியாதன் கூறிய
புண்ணிய கதையைநீ புகல்வ தென்னெனி
லெண்ணிய வகையிற் றில்லை யாருமிந்
நுண்ணிய பொருளிலே நுழைய வேண்டியே. (௩)

வேறு.

உன்னு நான்மறை மால்வரை யுச்சிமேன்
மன்னு மேக முழக்கிய வாக்கினைப்
பன்னு சீர்ப்பர மார்த்த தரிசன
மென்னு நாமத் திதனை யியம்புவாம். (௪)

பாயிரம் முற்றிற்று.

## முதலாவது.

# அருச்சுனன் சோகவத்தியாயம்.

### அவதாரிகை.

[ஸ்ரீ வியாசபகவான் இருக்குமுதலிய நான்குவேதங்களை வியாகித்து அவற்றிலுள்ள ஐதரேயமுதலிய அநேகசாகைகளில் ஒவ்வொன்றைப் பைலர், வைசம்பாயினர்முதலிய மாணுக்கர்வாயிலாக விருத்தியாகும்படிசெய்து அவ்வேதார்த்தங்கள் அத்தியந்தங் கூடமாகையால் அவற்றை அறிவதிற்சாமர்த்தியமில்லாத அதிகாரிகளின்மீதுகருணைகூர்ந்து அவர்களைத் தருமாதிகளான சர்வபுருஷார்த்தங்களின் சாதனங்களையும் உபதேசிப்பதான லட்சஞ்சுலோகத்தோடுகூடின ஒரு பாரதமென்னும்பெயரினையுடைய இதிகாசத்தையருளிச்செய்தனர். அதின்மத்தியில் நட்சத்திரமாலையின் மத்தியிற் சந்திரமண்டலமிருந்தாற்போல இருக்கும்படி அத்வைதரூபமான அமிர்தவருஷம் பொழிகின்ற எழுநூறு சுலோகரூபமாய்க் கீதை என்றும், உபநிஷத்து என்றும் பெயரினையுடைய பிரமவித்தையை ஸ்தாபனஞ் செய்தனர். கஅ-அத்தியாயரூபமான இக்கீதையும் அவ்வாறத்தியாயரூபமான மூன்று ஷட்கங்களால் முறையே கர்மம், உபாசனை, ஞானம் என்னும் மூன்றுகாண்டங்களாம். பிரதமஷட்கரூபமான கர்மகாண்டத்தில் கருமம், கருமத்தின் தியாகம் இவைகளின் நிரூபணமார்க்கமாக அநேகப்பிரகாரமான யுக்திகளால் துவம்பதார்த்தரூப கூடஸ்தசுத்தான்மாவை நிரூபணஞ் செய்தனர்: இரண்டாம் ஷட்கரூபமான உபாசனகாண்டத்தில் பகவத்பக்திநிஷ்டையின் வர்ணநரூபமார்க்கமாகத் தற்பதார்த்தரூப பரமான்மாவை நிரூபணஞ் செய்தனர்: மூன்றாம் ஷட்கரூபமான ஞானகாண்டத்தில் அந்தச் சோதித தத்துவம் பதார்த்தங்களின் அபேதரூபமகாவாக்கியார்த்த நிரூபணஞ்செய்தனர். பதினெட்டத்தியாயங்களிற் பூர்வபூர்வாத்தியங்களோடு உத்தரோத்தராத்தியாயங்கட்குள்ள சம்பந்தம் அவ்வவ்வத்தியாயங்கள் நிரூபணஞ் செய்யுங்காலையிற் சொல்லப்படும்.]

புண்ணிய பூமி யென்று புகழ்குரு பூமி தன்னி
னண்ணிய பின்னை நண்ணு தவர்களு நமரு மாங்குக்
கண்ணிய தெதனை யென்று கண்ணிலா வரசன் கேட்பத்
திண்ணியு வினிய சொல்லாற் சஞ்சய னுரைக்க லுற்றான். (க)

போர்முக மாகி நின்ற புல்லலர் படையைப் பார்த்துக்
கார்முக வுழவ னாய கலைமறை யவனை நோக்கி
வார்முர சதிருந் தானை வாளர வுயர்த்த தோன்ற
லேர்முகின் முழக்க மென்ன வின்னண மியம்பு மன்றே. (உ)

வேறு.

வீமனையும் விசயனையு நிகர்தருபோர் வில்லாள
ரோர்மருவு சிலையபிம னுள்ளிட்டா ரெனப்பலருந்
தார்மருவு தலைவர்களாய்த் தலைப்பெய்த தானையினை
மாமருவு பெருந்தேரோய் பாரொன்று மறித்துரைப்பான். ()

வேறு.

கங்கை யாள்பெறு காதல னும்புக
ழங்கர் கோனென தாருயிர்த் தோழனு
நங்கள் வாழ்துணை நம்பியு நீயுமற்
றிங்கு வாழ்சயத் திரதன் கிருபனும். ௪

அன்றி யேயு மரச ரனேகரால்
வென்றி யேதிரு வல்லது வேண்டல
ரொன்றி யேத மெமக்குறு மேலுயிர்
பொன்றி யேயது போக்குதன் மேற்கொண்டார். (௫)

எய்து மெங்கள் பிதாமக னேவலாற்
கைகொள் கின்ற கடற்படை கண்ணுறில்
வெய்ய வீமன் வியப்பொடு காத்திடு
மைவர் தம்படைக் காற்றவற் றுருமோ. (௬)

மேல்வ குத்திவர்க் காயின் வினாந்தெனு
மேல்வை யிற்றிறல் யாதவர் சூழ்ந்திடுங்
கால்வ ளாத்த சிலைக்கங்கை யாண்மகன்
வால்வ ளாத்திர டன்னையும் வாய்வைத்தான். (௭)

வஞ்சர் செய்த வினைமற விக்குண
வெஞ்ச மம்விளைத் தென்னவும் வேந்தர்கோ
னெஞ்ச முண்மகிழ் வெய்தவு நேரலா
ரஞ்ச வுங்கனன் றார்த்தன னார்க்கவே. (௮)

வேறு.

ஆர்த்தன வளைக ளெங்கு மதிர்ந்தன பல்லி யங்கள்
போர்த்திரட் படைநின் றார்ப்பப் புவனமீ ரேழும் பூத்த
தீர்த்தனுந் தனது சங்கைச் செங்கையால் வாங்கிக் கொண்டு
கார்த்திரண் முழக்க மென்னக் கடல்கிளர்ந் தார்த்த தென்ன.

வேறு.

வைய மனைத்தையும் வாரிமுன் வைக்குஞ்
செய்ய திருப்பவ ளத்திடை வைத்தா
னைவ னெனக்குயி ராதலி னாலே
யுய்வ துமக்கிலை யென்பதை யொத்த. (௧௦)

வேறு.

தருமனடல் வீமனருச் சுனனகுல சகதேவன்
றிருமருவு விசயம்ப வுண்டரந்தே வதத்தமெழின்
மருவுறுசு கோடமணி புட்பகமென் றிடிமிவற்றி
னுருமனைய குரலெதிர்ந்தார் செவிபுதைப்ப வூதினார். (௧௧)

வேறு.

ஒன்ற லாதபல வூதி னார்கள்பல ரூதும் வால்வளையி னோசைபோய், நின்ற கௌரவர்க ணெஞ்சை யூடுருவி யஞ்ச வானினு நிரம்பிமேல், வென்றி சேரமர் தொடங்கும் வேலை யினில் வெள்ளை மாநடவு தேரின்மே, னின்ற போர்விசய னொன்று மாயனெதிர் நில்ல லாமையொடு சொல்லுவான். ()

யாவர் போர்கருதி யெய்தி னார்களெதி ரெய்தி நின்ற விவர் தங்களில், யாவ ரோடமர் தொடங்க லாமென வறிந்து கொள்ளுமள வியாவையுங், காவல் பேணியவை தந்து பின் னவை கரந்து கொண்டருள்செய் கண்ணனே, மேவ நீகடவு மாக்கொ டேரினை நிறுத்து வாயென விளம்பினான். (௧௩)

விளம்பு மவ்வளவின் மேக வண்ணனுமவ் வெள்ளை மாநடவு தேரினைக், களங்கொ ளும்பரிசு நின்ற தானைநடு வேக டாவியிது காணென, வளங்கொள் கங்கைமக னாதி யாகமுடி மன்ன ரியாவரையு முன்னுறுத், துளங்கு கின்றமொழி யோடு நெஞ்சினொடும் வல்ல வாறுசில சொல்லினான். (௧௪)

வே று.

தாவிலருந் தந்தையருந் தந்தையர்தந் தந்தையரு
மேவியுடன் பிறந்தாரு மெய்ஞ்ஞான மளித்தாரு
மாவியென நட்டாரு மான்றோரு மமர்க்களத்தே
மேவியவெம் பொருட்டாக வீடுவான் றொடங்கினர். (கரு)

வே று.

தீதறு சிறுவர்மற் றவர்கள் சேய்களு
மாதுல ரிவர்களோ மாய்கின் றோனைக்
காதல்செய் திடரினுற் கலக்க முற்றவன்
மாதவ னெதிர்சில மறித்துங் கூறுவான். (கசு)

வே று.

வாயே யன்றி முகமலரா மனமொன் றுணர மாட்டாது
தீயே யென்ன வுடல்வெதும்புஞ் செவ்வே நிற்க மாட்டுகி
வேயே தருதிண் காண்டீப வில்லு நழுவி வீழாநின்ற [லேன்
தாயே யனையாய் போர்நின்ற தமரைக் காணுந்தொறுமன்னே.

ஓத லாகா நிமித்தங்க ளொன்றே யல்ல பலவுளவாங்
காத லாரைக் கொன்று பெறும் பயனே தொன்றுங் காணேஞ்
ஞாத லாலிவ் வென்றியுட னரசி னுரிமை யானதனை [யால்.
யேய்த லாவ தென்கின்ற தியாதின் பொருட்டோ வியம்பா

அரசவ் வரசால் வரும்போக மதனு லின்ப மெய்து
மென, வுளைசெய் பொருள்கள் யாவர்சிலர் பொருட்டா
லுலக ருழந்தடைவர், வளைசெய் புயனே மற்றவர்தம் பொரு
ளுந் தங்கள் ளுயிருளு, நிளைசெய் தொருவ ரொருவரின்முன்
னிற்க வந்து நின்றாரால். (கஎ)

ஆன பொருளீ தாதலினு லவரைக் கொன்று லருள்
சேரா, தீன மன்றி யெங்களுக்கோ ரின்ப மெங்கு மில்லையாற்,
கூன வரிவிற் கொண்டென்னைக் கொலினு மவரை யான்கோ
றல், வானம் பெறினு மாட்டேனுன் மண்ணின் பொருட்டால்
வல்லேனே. (உ௦)

கொற்றவர்தங் குலங்கெடுத்தால் வருகின்ற குற்றமுமெய்
யுற்றவர்தந் திறம்பிழைத்தா லுறுகின்ற வுயர்பழியு
மற்றவர்க ளறியாது மறந்திடுக மறந்தாலுங்
குற்றமென வறிந்தநான் குறிக்கொள்ளா தொழிவேனே. ()

குலங்கெடவே வருகின்ற குலதருமங் கேடுறுமங்
நலங்கெடவே குலம்பரவ நண்ணுமது நண்ணவே
யிலங்கிழையார் நெறிதிரிவ ரிவர்களெறி திரியவே
தலங்குலவு குலமெல்லாந் தலைதடுமா றுகுமால். (உஉ)

தடுமாற்ற மக்குலத்தே சார்ந்தவர்க்குஞ் சாராதே
கெடுமாற்ற னினைந்தவர்க்குங் கெடாநிரயங் கிடைப்பிக்கும்[ன்
படுமாற்ற மென்னுனாக்கேன் பண்டிறந்தோர் களுந்தமக்கொ
றிடுமாற்ற லவர்கள்பெறு திருணாகத் திழிவர்களால். (உங)

வேறு.

வாரா நின்ற குலமயங்கப் பண்ணி னார்க்கு மற்றதனைச்
சாரா நின்ற குலத்திற்குந் தருமந் தளர்ந்து சாயுமாற்
சாரா நின்ற சாதிகுல தருமந் தளர்ந்து சாயவே
பேரா நிரய மெய்துமெனப் பெரியோ ரெல்லாம் பேசுவரால்.

பின்னே யனைய செல்வத்தை வேண்டித் தங்கண் மெய்யுயிரைக், கொன்னே கழிக்க நின்றவரைக் கொல்லத் துணிந்த கொடுவினையே, யென்னே கொடிய பெரும்பாவ மெய்த நினைந்தேன் யானுமிவர், முன்னே படைவிட் டமர்துறந்து நின்று லிவர்கண் முனிவாரோ. (உரு)

வேறு.

கொல்லினு மெனக்கிது பொறுக்கைகுண மென்றே
கல்லினிகர் தோள்விடலை கண்ணனெதிர் கூறி
வில்லினுட னேபகழி சோரவிழி சோரச்
செல்லுமணி யாழியணி தேர்மிசை யிருந்தான். (உசு)

முதலாவது சோகவத்தியாயம் முற்றிற்று.

---

பாயிரமுள்படத் திருவிருத்தம்-30.

---

## இரண்டாவது

## சாங்கியயோக வத்தியாயம்.

### அவதாரிகை.

[அஹிம்சையும், பிட்சாசனமுமே பரமதர்மமாம் என்னும் புத்தியினால் யுத்தத்தினின்றும் அருச்சுனன் பராமுகமாயினன் எனப் பூர்வம் சஞ்சயர்முகத்தாற் கேட்ட திருதராஷ்டிரர் நமது புத்திரர்க்கே இராச்சியம் நிலைத்துவிடும் எண்ணெண்ணிச் சந்தோஷம் எழப் பெற்றதைச் சஞ்சயரறிந்து அத்திருதராஷ்டிரருடைய துராசையை நிவிர்த்திப்பிப்பவராய்ப் பின் நிகழ்ந்ததைக் கிரமக்கிரமமாகக் கூறுகின்றார்.]

இதில், கிரமமாக விஸ்தரித்துக் கூறிய சர்வார்த்தங்களையும் சம்க்ஷேபமாகக் கூறும் சுலோகம்.

ஜ்ஞாநம் தத்ஸாதநம் கர்ம ஸத்வஶுத்திஶ்ச தத்பலம் |
தத்பலம் ஜ்ஞாநநிஷ்டேதி த்வேத்யத்யாயேஸ்மிந் ப்ரகீர்த்திதம் ||

(இ-ள்.) இவ்வத்தியாயத்தில் ஆத்மஞானம், அந்த ஞானத்தின் பரம்பராசாதனரூப நிஷ்காமகருமம், அந்நிஷ்காம கருமத்துக்கு அந்தக்கரண சுத்திரூபபலம், அவ்வந்தக்கரண சுத்திக்கு ஞானநிஷ்டாரூபபலம் இவ்வளவு விஷயஞ் சொல்லப்படுகிறது.—எ-று.

இவ்வண்ண மறிவொதுங்க வெழுகின்ற விரக்கத்தாற்
செய்வண்ண மறியாது திகைத்திருந்த தேர்விசய
னுய்வண்ண மதுநாடி யொருவண்ண முலகோதுங்
கைவண்ண மலருடைய கார்வண்ணன் கட்டுரைப்பான். (க)

வேறு.

ஆயா தவர்க்கு மலிகட்கு மடுப்ப தழியாப் பழியுனது, தேயா வறிவைத் தேய்ப்பதறச் சிறுமை களிலே சிறுமையது, சாயா நரகத் திடைசாய்ப்ப துன்போல் பவர்க்குத் தகுதியன்றீ, தேயா நிலத்தே யுனையயா வெவ்வா றடைந்த தெனவறியேன். (உ)

ஒவ்வாதீ தொழிந்தமர்மே லொருப்படுகென் றுருக்கரிய
செவ்வாயன் றிருமொழியத் தேர்விசயன் செப்புவான்
மெய்வாயி னொடுமனத்தான் மிகப்போற்றற் குரியானை
யெவ்வாறு கொலைபுரிவே னென்றிவ்வா றியம்பினான். (ஙு)

மாற்றலர்க ளென்றிவரைக் கொன்றுபெறும் பெருவாழ்வி
லேற்றமுறைத் தியான்பிறர்பா லிரந்துண்கை யினிதன்றோ
கூற்றவர்க ளுயிருண்டா லவர்குருதி யாற்குழைந்த [லாம்.
சோற்றையுணல் போன்மன்றோ யான்பின்னைத் துய்ப்பதெ

தவர்கொள்படை விடுகையோ தவிர்கையோ தருவதுமற்
றவர்களெனை வெல்வரோ யான்வெல்வ னோவறியே
னிவர்கள்சில ரிறந்தக்கா லதனுலே யென்னுயிர்போ
மவர்களமர் தொடங்குகவென் றடல்குறித்து நின்றாரால். ()

ஆதலா லறிவாய விழியிழைமற் றுங்கவர்பாற்
காதலா மிருண்மண்டப்ப நெறியெங்குங் காணேனு
தலா லெனக்குறுவ தறிகிலே னுரைத்தருள்வாய்
தாதலா னதும்பிறப்புமில்லாத தனிமுதலே. (சு)

வேறு.

உஞ்சே போகு நெறிவாளா வுரைப்ப னேவென் றுளங்
கருதிற், றஞ்சே யென்றுன் சரண்புகுந்தேன் றண்டிற் பணிந்
தேன் றுமனைக்கண், மஞ்சே யுன்றன் மாணுக்க னுயுன்
பாத மலர் புனைந்தே, னஞ்சே லென்றிங் கடியேன்செய்
வினைக ளேவி யருள்புரிவாய். (எ)

மண்ணுளும் பெருஞ்செல்வ மன்றியே மாயாத
விண்ணாடு பெற்றிடினு மென்னுடைய மெய்யுணர்வு
நண்ணும லடுதுயர நலியாமற் காப்பதனைக்
கண்ணுவிங் கெவ்விடத்துங் காண்கிலே னெனக்கலுழ்ந்தான்.

நெய்மார்பிற் சொரிவதென நெடுங்கண்க ணீர்சோர
விம்மாநின் றவன்காதல் வெந்தீயால் வேவாமே
கைம்மாறொன் றின்றியுயிர் காப்பதே கடன்பூண்ட
வம்மாயன் றிருவாய்மை யருண்மாரி யாலவிப்பான். (கூ)

வே று.

மின்னை யனைய திருநகைகொண் டருளி விளைத்தா மனைநாறும், பொன்னை யணியுந் திருமார்பன் போகாத் துயர்போம் பரிசெண்ணி, முன்னை மறைக ளெடுத்துரைத்து முடியும் பொருளாய் முதற்பொருளாந், தன்னை யுள்ள பரிசவற்குத் தானே சாற்றத் தொடங்கினான். (௰)

வே று.

சாவதிலை யாவர்களு நிற்கவது தானே
மாய்வதென நீகருது மாரதர்க ளெல்லாந்
தேய்வரிய தீவினைசெய் யாதமையி னாலே
வீவதன்முன் வானுலக மேவுவர்கண் மேன்மேல். (௧௧)

அன்னவர்கள் சோகித னொருவழுத லாலும்
பன்னவரி யோர்கண்முறை யேபகர்த லாலு
மன்னமய லேறியுண் மயங்கினைகொல் வாயா
தின்னதொழி லானதை மறந்திடுவை யுங்கேள். (௧௨)

மாயுமவ ராலுமுயிர் வாழுமவ ராலு
மாயுமறி வோர்களழி யாமையறி யாயோ
நீயுமிவர் தாமுமிகழ் நானுநெறி தேரி
லேயும்வகை யானுலகி லென்றுமுள மேகாண். (௧௩)

பொன்றுவ துடம்பதனு ணின்றபொருள் பொன்று
தென்றுமொ ரியற்கையொடு நிற்குமியல் பைக்கேண்
முன்றொடர் மகப்பருவம் விட்டிளமை மூப்போ
டொன்றுமுட லாயினு முயிர்க்கியல்ப தன்றால். (௧௪)

அன்னவகை யானுரு வழிந்துவரு மாங்கே
யென்னுருவ மாமறி விறந்துபிற வாதாற்
பின்னதறி வானுட லழிந்துபிரி போதுந்
தன்னதென வேதுமொர் சலிப்பதறி யானால். (௧௫)

இவ்வகைய தாகிலழல் சீதமிட ரின்பஞ்
செய்வகை யிலாவறிவு சேர்குவதெ னென்னின்
மெய்வகையி னாலிவை விளைந்துதர மேய
வைவகையி னுயபுல னும்பொறியு மையா. (௧௬)

வேறு.

சீதமழன் முதலவற்றின் செயல்கேட்கி லநித்தியமாய்ப்
போதலொடு வருவனவா யிருக்குமவை பொறுநீயு
மாதலிலென் பயனென்னி லவைபொறுத்த பெரியோனை
யேதமவை நிலைகலக்கா வவன்வீடே யெய்துமால். (௧௭)

வேறு.

மண்ணினாய விகாரமுமம் மண்ணேயந்த மண்ணொழித்துப்
பண்ணினாரும் பிறரில்லை பண்ணப்பட்ட பலபொருள்க
ளெண்ணினாரு வதன்முன்பு மிறந்தபொழுது நிகழ்விடத்துங்
கண்ணினாடி மண்ணொழியக் கண்டாருளரோ கட்டுரைப்பாய்.

வேறு.

ஐயாரயி லுழவாவதன் வகையேயிதன் வகைகேண்
மெய்யானது நசியாதித னுடன்வேறென விரவும்
பொய்யானது நிகழாதிவை புலனாகிய பொருளே
யையாவெனை யறிவாரிவை யறிவார்பிற ரறியார். (௧௯)

[illegible]னும்வகை யதுகேளெழு மொலியேமுத லிபவும்
வானாதியில் வருபூதமும் வருநாள்வரு மிடமா
யானாதெழு மறிவியாவையு மறிகாரண மதுவாய்ப்
போனாளொடு வருநாள்வழி புணராததொர் பொருளே. (௨௦)

அழியாதமெய் யஃதியாதெனி லவிகாரதை யுருவா
யொழியாநிறை வொடுநீடிய தெனதியானென வுணரா
வழியாமதி யியல்பாலிது சிலமாறுகொள் குவதாய்
மொழியாரவி யயமாமிதை முயல்வாற்கொல் வலரார். (௨௧)

இல்லாமையி னியல்கேளெழு கழுதாழியி னிடையே
யல்லாதெழு புனல்போலறி வுறவேயழி குவதா
லெல்லாவகை யினுமாய்வதிவ் வுருவேயறி வதுதான்
கொல்லாதழி கொலையானது குறுகாதத னெறிகேள். (௨௨)

வேறு.

ஊறுபட வொன்றினுளே பிறத்தல்பிறந் துளவாதல்
வேறுபட வளர்தல்வளர்ந் தயலொன்றாய் விளைந்தமைதன்
மாறுபடத் தேய்தலற மாய்தலென வருகின்ற
ஆறியல்பு முடம்புன்றி யறிவடையா வாதலினால். (௨௩)

வேறு.

நில்லா வுடற்கே நின்றேயு நித்திய மாகி யதுநாச, மில்லா ததுபொய்ப் பிறப்பிறப்பொன் றறியா ததுமற் றதுவறிந்தோர், கொல்லார் கொலையே வலுஞ்செய்யார் குலமே விட்டுக் குலமறைக; ளெல்லாம் விதித்த தொழிலினையு மியம்பிற் றென்றே யிதுதெளிநீ. (உச)

வேறு.

மீறிய போர்வையைப் பெயர்த்துப் பின்னரோ
வேறியல் போர்வையை விரும்பு வாரென
வூறிய வுடம்பினி லுதித்த வுண்மைதான்
மாறியோ ருடம்பினை மருவு மன்னனே. (உரு)

வேறு.

உருப்பான்மை மற்றதனுக் கொருநாளு மின்மையாற்
செருப்பால்வெம் படைக்கலங்கள் சேதிக்க மாட்டாவா
னெருப்பால்வெந் தழியாது நீரானனைக் கொழுகாது
மருத்தாலுஞ் சலியாது மற்றதன்றன் வகைகேளாய். (உசா

வேறு.

எல்லாப் பொருட்கும் பழையதனை யெங்குந் தானா யிருப்பதனை, நில்லாத் தன்மை யில்லதனை நித்யத் துவத்தை நிலைபேற்றை, யல்லாப் புலன்கள் பதினாலு மறியா வறிவை யறியாதே, யில்லாப் பொருள்போ லழியுமென விரங்கு கின்றதென் கொண்டோ. (உஎ)

வேறு.

லீவ னெக்கொடு மெய்தளர் வாயேல்
யாவர் பிறப்பவர் யாவர்க ளேனுஞ்
சாவர் பெயர்த்துமவ் வாறு சனிப்பர்
காவ லிதற்குள தோகட னேகாண். (உஅ)

செறிந்ததிவ் வாறிவ னென்பதுந் தோராய்
பிறிந்திவர் போமிட மும்பெரி தோரா
யறிந்தது நீநடு வேசில நாளே
யெறிந்திடு வேலவர் பாலிட னன்றே. (உகூ)

வேறு.

ஒருவ னென்றுங் கண்டறியா ததுகண் டாற்போ லுணா ர்ந்திருக்கு, மொருவ னென்று முணைத்தறியா ததனை யுரைத் தாற் போலுணர்க்கு, மொருவ னென்றுங் கேட்டறியா ததனைக் கேட்டாற் போலுவக்கு, மொருவ னென்றுங் கேட்டாலு மறியா னிந்த வுண்மையினை. (௩௦)

இதனு மெவரு மறியாத பொருளைத் தெரிந்து கொண்டு நீ, யிதனு லிவனை யான்கொன்றே னென்ப தொழிவா யின்னுங்கேள், விதனு லாய மறைமொழியும் வேந்தர் தருமம் வாளமரொன், பதனு லமரோ தொடங்கதனை யறநன் றெனநீ யையுறேல். (௩௧)

வேறு.

செய்தி யின்றியத் தேவர்கள் வானுல
கெய்த நின்ற விதுபெறு கின்றவர்
வைதி கந்தரு மாதவ மேற்கொடு
மெய்தி ருந்திய வேந்தர்க ளல்லரோ. (௩௨)

ஆவ தான வமர்தொடங் காயெனிற்
போவ தான புகழுந் தருமமும்
பாவ மாம்பழி யாமிப் பழியினிற்
சாவ தானது வேதலை யல்லவோ. (௩௩)

அன்றி யும்முனை யஞ்சினை யென்பரா
னின்றி யைந்து நிலத்துமுன் னீசெய்த
வென்றி யும்பழி யாய்நிற்கு மேவல
ரொன்றி யம்பிலின் னுங்கிதன் மேலுண்டோ. (௩௪)

இன்று வாளமர் தன்னி லெதிர்ந்துநீ
பொன்றில் வானவர் போற்றவிண் காக்குவை
வென்றி சேரிலிவ் வேந்த ரொலாங்தொழ
நின்று ஞால மளிக்குவை நீயரோ. (௩௫)

துற்ற வின்பமுந் துன்பமுந் தோல்வியும்
வெற்றி யும்மிழ வும்மிகு பேறுமென்
றுற்ற வின்னவைக் கொத்த மனத்தனுய்க்
கொற்ற வாசமர் செய்குற்ற மில்லையால். (௩௬)

வேறு.

கீழுவிய பொருண்ஞானங் களையறு முறையாலே
பொதுவுறு வகைநீயும் புலனறி வகையானு
மெதுவொரு வினையாலே யிருவினை களும்விடு
மதுதனை யறிவார்வி டணைபவ ரதுகேளாய். (௩எ)

அரிதெனு மறிஞோர்தஞ் செயலது வழிவாகா
விரிதரு மிடையூறும் வினைகளு மிடைகூடா
தெரிபொருள் சிறிதேனும் பெருமய மறுமானு
லுரியதிவ் வுலகோர்பா லதுவல துளதோதான். (௩அ)

தெளிபவ ருணர்வொன்றே தெளிவில ருணர்வோதிற்
றளிர்நிகர் பலவாகுந் தருபய னதுமேவு
மொளிமறை நெறிமேலா வுணர்பொரு ளெனவோது
மளியவர் தெளியாதா ரவையல தறியாரால். (௩௯)

புண்ணிய வுலகத்தே பொருண்முடி வெனவைப்பார்
மண்ணியல் பிறவிக்கே வரும்வழி நெறிநிற்பார்
பண்ணிய வினைகட்கே பயனினை பவர்தம்பா
லுண்ணிய பொருள்செப்பார் நுணுகிய வறிவுற்றோர். (௪0)

நவைதரு குணமுப்பா னணுகிய பயனுந்தோர்
சுவைதெரி குணம்வைப்பார் தொழின்மறை நெறியுற்றே
கவைதரு குணமுற்றோர் கருமம திடமிற்று
மவைகெட வருமப்பா லறிவின னெனநிற்பாய். (௪௧)

குளமுத லியவற்றே குளிமுத லியதுய்ப்பா
னளவறு புனல்பெற்று லவைகொள லருமைத்தோ
வளமறு கருமத்தால் வருசிறு சுவைவற்று
வுளமகிழ் பிரமத்தே யுளகொள லெளிமைத்தால். (௪௨)

அறிவினை யறிகிற்பா யகிலமு மடைவுற்றே
பிறிபொழு தினிலொத்தே பெருவினை தனினிற்பாய்
நெறிதரு மறிவொட்டா வகைவினை தனினிற்பார்
சிறியவ ரெனமிக்கோர் தெளிபவர் செயலைக்கேள். (௪௩)

விடலரும் வகையிற்றும் வினைப்பய னதுவிட்டே
கடவிய வினைமுட்டா வகைசெய்து கழிவுற்றோ

னுடலொடிவ் வுலகத்தே யுளனென நிகழ்பெற்றே
யிடரினை யறவிட்டா னெனையுறி வகைபெற்றான். (௪௪)

தருபய னதுவிட்டே தரும்வினை செயலுற்றா
லருமய லறுமற்றா லறிவுறு மறிவுற்றா
லிருவினை விடும்விட்டா லிழவொடு பெறுதற்பா
லொருமனம் வருமத்தா லெனையுணர் வுணர்வப்பால். (௪௫)

பேதைமை யடைகுற்றே பிறிதுறு மனமற்றே
யேதமி றெளிவுற்றா னியாதொரு பொழுதப்போ
தோதலொ டுலகத்தோ ருரைகளி னுளம்விட்டா
னாதலி னெனைமெய்ப்பா டடைதரு நெறியைக்கேள். (௪௬)

வேறு.

தலைநின்ற பொருளைய மின்றியே சலியாதே
நிலைநின்றா னியாதொருபோ தப்போதே நெறிநின்றான்
கலைநின்ற மெய்ஞ்ஞான யோகங்கண் ணுறுமென்னச்
சிலைநின்ற தோள்விசய னிவ்வண்ணஞ் செப்பினான். (௪௭)

வேறு.

இவ்வகை யவனை நின்றோ ரெவ்வகை யுரைப்பா ரந்தச், செய்வகை யிலாதோன் செய்யுஞ் செயல்களென் செப்பு மாறென், மெய்வகை யருள்செய் கென்ன விண்ணையே முதலாக் கொண்ட, வைவகைப் பொருளு மீன்ற வவனிவை யருளிச் செய்வான். (௪௮)

அறிவினிற் றன்னு ளின்புற் றனைத்தவா வினையு நீக்கி
வெறிதரு வெகுளி காம மயக்கநீத் திடைப துன்பம் [துப்
வறிதெழு பொழுதில் வாட்ட மகிழ்ச்சியென் றிவையு மாய்த்
பொறிதரு புகழுந் தீங்கும் போற்றல்போற் றுமை போக்கி.()

ஆமைதன் னுறுப்போ ரைந்துந் தன்னுளே யடக்கு மாபோற், றீமைசெய் புலன்க ளைந்துந் தன்னுளே செறி யச் சேர்த்தி, வாய்மையு ணிகழு மின்னே வழுத்தவும் படுகின் றானற், றாய்மைசெய் தெவையு நாளுஞ் சொல்லுவ தவன் றன் சொல்லாம், (௫௦)

குறையுமாப் பிணிப்புற் றாலுங் கொண்டவிப் புலன்க ளெண்ணி, லறைகட லனைய நெஞ்சத் தவாவரு னறிவி

னில்லான், மறைமொழி பலவு மோதி யடக்குவான் மனத்தைத்
வாங்கிப், பொறைகெடப் புலன்க ளைந்தும் பொறியிலே
புகட்டுங் கண்டாய். (௫௯)

ஆதலாற் புலன்க ளைந்து மடக்கரி தடங்கா தாகிற்
றீதிலாக் கருத்துந் தீய வவற்றிலே செல்லுஞ் சென்றாற்
காதலாற் புகைந்து வெய்ய காமமாய்க் கொளுந்திக் காம
மேய்தலா காமை தீய வெகுளியா யெரியு மன்றே. (௬௨)

எரிநிகர் வெகுளி பொங்க மயக்கம்வந் தெய்து மெய்தத்
தெரிபவை சிதையு முள்ளந் தெரிந்தவை சிதைந்த போதே
புரியதன் னுணர்வு மாயு முணர்வுமாய்ந் தொழிந்த வாறே
யரியவென் றறிஞர் பேசு மனைத்துமாய்ந் தொழியு மன்றே.()

வேண்டல்வேண் டாமை யின்றி மிகைசெலாப் புலன்களாலே
மாண்டபோ கங்க டுய்ப்பான் மனங்கலங் குறான்மற் றத்தா
லீண்டிய தெளிவுண் டாமாற் றெளியவே யெல்லை யின்றிப்
பூண்டநோய் நீங்கு நீங்கப் புலனிலை நிற்கு மன்றே. (௬௫)

அடுத்தலைம் புலன்செ யாதார்க் கறிவில்லை யறிவின் றாக
விடுத்தமெய் யுணர்வின் றயான் மெய்யுணர் வில்லை யாகிற்
றொடுத்தபின் சித்த சாந்தி தோன்றிடா ததுதோன் றாதே
லெடுத்தநல் லின்பந் தானு மில்லையே யிசைக்க வேண்டா. ()

ஆறுசெல் பொருள்க டுய்க்கு மைம்புல னுக்கும் பின்னே
காறொடர் நெஞ்ச மந்தப் புலன்றனைக் கிலக்கு மாங்கே
யூறிய கடலு ளோடு கலத்தினை யுடன்செல் காற்றே
வேறுசெய் தறைந்து மாய்த்து வீழ்த்துமா போல வேயாம்.

யாதொரு பொருளை யெல்லா வுயிர்களு மிருள்போற் காணு
மோதரு ஞானி யத்தை யுளங்கையிற் கனிபோற் காணும்
யாதொரு பொருளை யெல்லா வுயிர்களு மென்றுங் காணுங்
காதலின் ஞானி யத்தைக் கண்ணினுற் றெரியக் காணான். ()

நீரினு னிறைந்து நின்ற கடலிலே நெறிமேற் கொண்டு
நீரினு னிறைந்த வாறு வீழ்ந்ததா னிறைவு றாது
தேரினு மதுபோ லாசை செறிந்தவர் திறமே நோக்கிச்
சாருமா லாகி லத்தா லவர்களுஞ் சலித்தல் செய்யார். (௫௮)

யானென தென்ப தின்றி யெவ்வகைப் பொருளும் விட்டான்
றனெனச் சரிக்கின் றன்யா ரவனேயே யடையுஞ் சாந்தி
யீனம தடையா ரித்தை யடைந்தவ ரிறக்கு மப்போ
தேனுமீ தடைவா ரென்னை யெய்துவார் பிறவி யெய்தார். ()

வேறு.

பின்னை யோவிவ் வுலகமெ லாம்பெற்ற
வன்னை யோதிரு மார்பத் தணைத்தவன்
முன்னை யோர்புகழ் வேத முடிவையோ
தன்னை யோவுள்ள வாறெலாஞ் சாற்றினன். (கூ0)

இரண்டாவது சாங்கியயோக வத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 2-க்குத் திருவிருத்தம்-90.

## மூன்றாவது
## கர்மயோக அத்தியாயம்.

அவதாரிகை.

[முன் அத்தியாயத்தில் "சாவதிலை யாவர்களும்" என்பது முதலிய வாக்கியங்களால் முன்னர் மோட்சசாதனமாகத் தேகான்ம விவேக புத்தியும், அதன் பின்னர் "எதுவொரு வினையாலே யிருவினைகளும் வீடும், அதுதனையறிவார்வீ டணைபவாது கேளாய்" என்பது முதலிய வாக்கியங்களால் கருமயோக புத்தியும் ஸ்ரீ பகவானால் அருளிச்செய்யப்பட்டது; இவ்விரண்டில் இன்னது முக்கியம் இன்னது கௌணம் என்னும் அபிப்பிராயம் அறியப்படவில்லை: அதன் மத்தியில் ஞானியானவன் கருமத்தியாகியாய், இந்திரிய நிக்கிரகனாய், நிரகங்காரனாய் இருத்தல்வேண்டும்: இந்தப் பிரமநிஷ்டையில் கணநேரமாவது ஸ்திதிபெற்றவன் பிரமரூபமான கைவல்லியத்தை யடைவனேயன்றிச் சம்சார மோகத்தை யடையான் என்று வெகுமான பூர்வகமாக உபசம்மரித்ததால் ஞானம், கருமம் என்னும் இரண்டில் ஞானமே முக்கியம் என்பது பகவானது அபிமதமாம் என்று கருதிய அருச்சுனனுக்கு அதிகாரதாரதம்மியத்தை முன்னிட்டு இவ்வத்தியாயத்தில் நிச்சயப்படுத்தல்.]

அந்தச் சம்க்ஷேப சுலோகம்:—

உபாயகஂ நிஷ்டாத்ர ப்ராதாந்யேநாவஸம்ஹ்ருதா|
உபேயா ஜ்ஞாநநிஷ்டா து துஷ்ணேந கீர்த்திதா ||

(இ-ள்.). ஞாநநிஷ்டைக்கு உபாயரூபமான நிஷ்காமகருமநிஷ்டையானது இம்மூன்றும் அத்தியாயத்தில் பிரதான ரூபமாகவும், பலபூதமான ஞாநநிஷ்டையோ கௌணரூபமாகவும் சொல்லப்படும்.—எ - று.

அலையிலே கடல்கிடந்து மருமறைக ளானவற்றின்
றலையிலே யிருக்குமவன் றேரிலே நின்றருளிக்
கலையிலே பொருளெடுத்துக் காட்டவுமெய் காணுதே
சிலையிலே தோள்விசய னிவ்வண்ணஞ் செப்புவான். (க)

வே று.

நன்றே வினையின் ஞானமென வுரைத்தாய் மீள வினை நல்ல, தென்றே யுரையா நின்றனைநா னிவற்றி லெதுநன்றெனவறியேன், குன்றே யனையா யுனையடைந்தேற் குற்ற துயர்நீக் கிடுவதனை, யொன்றே யாக வுரைத்தருள வேண்டுமென் றனவனுரைப்பான். (உ)

வே று,

ஆதியி லுலகினை யாக்கி யன்றுநா
னோதிய பொருளிவை யிரண்டு முண்மையே
நீதிய லவாவறுஞ் செயலை மாற்றுவான்
மீதியல் வினையுறுன் வீடு மேவிடான். (ங)

ஒருவரு மொருபொழு தினுமோர் காலமு
மிருவகை வினைசெயா தவர்க ளில்லையா
லருமைய லவாவறுன் வினைய டக்குவான்
பருவர லொடுபொய்யே பாவிப் பானரோ. (ச)

புலனவை பொறிவழி போக்கு மாற்றியே
பலனற வினைகளென் பொருட்டுப் பண்ணுவாய்
நலனுறு மவ்வினை நாச மின்றியே
சலமுறு பிறவியுந் தவிர்க்குந் தன்மைகேள். (ரு)

வே று.

தேவர்களை மகிழ்விக்குஞ் செயலோடே தெரிந்தித்த
மூவகைய வுலகையுமுன் படைத்தமுத லவன்மொழிவான்
மேவரிய சுரர்பூசை யிதுநீங்கள் வேண்டியன
யாவையுமே தருமின்னு மிதுகேட்மி னெனவிசைப்பான். (௬)

செயல்வகையா னீங்களவர் திறம்போற்று மாங்கவரும்
புயல்வகையா னுங்களையே புரம்போற்றிப் புரந்தருள்வ
ரியல்வகையா னதுபிழையி னெனிவிரண்டு திறத்தீரு [ஞல்.
முயல்வகையா னலனடைவி ரெனநிலத்தோர்க் குரைத்தன

மற்றவர்தந் ததுகொண்டு மறித்தவரைப் பேணுதார்
கற்றவர்முன் பழித்துரைத்த கள்வரினுங் கடைப்பட்டார்
பெற்றதுகொண் டவர்ப்பேணிப் பிழைத்ததுகொண் டுண்ணு
யுற்றதுதன் பொருட்டாக வுண்பான்றீ துண்கின்றான். [தே

வே று.

உளவாமுயி ருணவாலுண வுயர்மாரியி னுளவாம்
வுளவான்மழை யுயர்வானவர் மகிழ்வால்வரு மதுதா
னிளவாளரி யனையாயிசை தொழிலால்வரு மிதைமீ
தளவாமறை தருமாமறை யறிவாலதி லுறுமால். (௯)

இதனால்வினை களிலேவினை யெனயாவையு மிங்ஙன்
றிதனால்வரும் வினையாழியி னெறிசேரலர் திரிவார்
மதனுறிய புலனேமகிழ் விடமாகவு முடையா
ரதனாலவ ரவமேகழி பவராமென வறிநீ. (௧௦)

வே று.

கண்ணிற் கருதரு மறிவைக் கருதியவ் வறிவே மிகவரு
களிகூர்வோ, னெண்ணிற் றெழிறரு பயனுற் றிடும்வகை
யிசையா னுதலில் வினையாவும், பண்ணிற் பெறுவதோர் பய
னுண்டோ வவை பண்ணு துறுவதோர் பழியுண்டோ, மண்
ணிற் பிறரிவ னிவையுற் றிலனென மதியா ரவைசெய விதி
யாரல். (௧௧)

வே று.

ஆதலா னீயும் பலத்தின்மே லவாவற் றடுத்தகா ரியஞ்
செய்வா யவற்றுற், றீதிலா வீடே சேரலா முன்னஞ் சேர்ந்

தவ ரனைகர்பின் றெரியிற், காதலா லரசன் சனகனே முத லோர் கருமமே யொடொழுகியே யன்றோ, போதரா யுலகம் புக்கதே மற்றும் புரிதிநீ யுலகிதன் பொருட்டால். (கஉ)

பெரியவர் பயின்ற படியலாற் பயிலார் பின்புளோ ரொன்பதன் றாகி, லுரியவிவ் வுலக மூன்றினு மெனக்குச் செய் யவேண் டுவதுமொன் றுண்டோ, வரியவை யென்று முறு தவு முறுதற் பாலவு மியாவையிங் கையா, பரியவிவ் வுலக மகிழ்வுடன் வினைதான் பண்ணுதற் கென்னையும் பாராய். ()

என்செய றவிரி லியான்செயா வினைக ளியாவருஞ் செ யாத ரொழிவ, மன்செய்த குலங்கண் மயங்கிமாய்ந் திடுவர் மற்றவர் மற்றதற் காகப், பின்செய லறியா தவாவொடு முய லும் பேதையைப் போற்பிறர் பொருட்டா, லுன்செயல் களைச்செய் யவைசெய்வார் தம்மி னுணர்வைவே றாக்கலு மொழிவாய். (கச)

மெய்வகை தனக்கும் புலன்கட்கு முள்ள வேறுபாட் டினைமிக வறிந்தோ, னைவகை யியற்கைப் புலன்களே பொறி யுற் றழுந்துகின் றனவென வசங்கா, ணிவ்வகை யறியா தவ னிரு வினையு மியான்செய்தே னெனவினைத் தேங்கு, மும் வகை யிதுநீ யுணர்ந்துனக் கடுத்த வினைசெயென் றுரைத்து மீண் டுரைப்பான். (கரு)

வே று.

என்பாற் பொருளை யினைத்தவிர்த் தென் கருத்தா யுள்ள வினையிதனை, யன்பாற் பயில்வா ரியாவர்சில ரவர்கள் வினைக ளறவிட்டார், மென்பாற் பொருளை யானுரைத்த விதனை யிக ழ்கிற் பார்களவர், வன்பார்த் துயி லெழுமரம்போன் மாய் ந்தா ரறிவு மாய்ந்தாரே. (கசு)

வே று.

பண்டு செய்பகு திப்படி யேவினை
கொண்டு நின்றிடிற் கோளித ருய்பிற
ருண்டு கொன்னல மென்றுணர் கிற்பரோ
கண்டு நின்றவென் கற்பனை யாலரோ. (கஎ)

வே று.

அஞ்சுபுல னைவதொடரு மஞ்சுபொறி யவையாம்
வெஞ்சுரனி லுலறியுயிர் வெம்பியழி வுறுவோ
ருஞ்சுபுகு நெறிதகைய வொன்றுபகை யுளகே
ளஞ்சுதலி லின்பமிட ரொன்ப வவை யிகழ்நீ. (௧௮)

தடுத்ததொழில் செய்வது தகாதது தனக்கே
யடுத்ததொழில் செய்துகெடு மேனுமழ கையா
விடுத்தகரு மம்பெரிது செய்வதனின் மேலோர்
தொடுத்தகரு மஞ்சிறிது செய்கைதொழி லென்றான். (௧௯)

வே று.

மாய னினைவநின் றுணைசெய்ய விசயன் மறித்துங் கூறுவான், றீயவினைசெய் யாதவனைத் திகைப்பச் செய்து திறலாலே, யேய பணிகொள் வானைப்போ லியற்று விப்பான் யாரொன்றான், பாயல் பரவை யாக்கொண்ட பழையோ னிவ்வாறெனப்பணிப்பான். (௨0)

வே று.

தீம னந்தனி லேசென னஞ்செயக்
காம மென்னுங்கைப் பாய்வளர் கின்றது
வேம யங்கொள் வெகுளியென் கின்றது
நாம மற்றத னன்னல மின்னுங்கேள். (௨௧)

எவ்வ கைப்பய னுந்தின வல்லதை
யெவ்வ கைப்பெரும் பாவமு மீவதை
யெவ்வ கைப்பொருட் கும்பகை யாவதை
யிவ்வ கைத்தெனக் கூறுவ னின்னுங்கேள். (௨௨)

நெருப்பை முற்றிய தூமமு நீடொளித்
தருப்ப ணத்தை மறைத்தன மாசும்போ
லுருப்ப டைத்தன வுள்ளுணர் வியாவையும்
விருப்ப முற்றவெங் காமம் விழுங்குமால். (௨௩)

காத லாற்றவிக் காமம் புலன்களே
வாயி லாப்புகுந் துள்ள மயக்குவ
தாத லாற்புல னைந்து மடக்கியே
யேதி லாங்கடுங் காம மிறுக்குவாய். (௨௪)

ஆற்று மிவ்வுடம் பிற்பர மைம்புலன்
மாற்று மைம்புல னிற்பர மாமனம்
போற்றும் புத்தி யதிற்பரம் புத்தியிற்
றேற்று கின்றது காண்பது தொல்பரம். (உ௫)

வேறு.

மேலா யுள்ள விப்பொருளை மெய்யா யறிந்து பொய்மாய
மாலாய் மயங்கு மனத்தினையு மடக்கியந்த மனங்கலக்குங்
காலா யுள்ள காமத்தைக் கரப்பா யென்று கட்டுரைத்தான் [ன்
சேலா யுலக முறுபுனலோர்செலுவின் புனையேசெலுத்தினே

மூன்றாவது கர்மயோகவத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 3-க்குத் திருவிருத்தம் 116.

நான்காவது

## சம்பிரதாய வத்தியாயம்.

அவதாரிகை.

[பூர்வாத்தியாயங்கள் இரண்டினாலுஞ் சொல்லப்பட்டனவாயும், சகல வேதார்த்தசாரபூதங்களாயும், பிரவிர்த்தி நிவிர்த்தி அதிகாரிகளின் விஷயங்களாயுமுள்ள கருமயோகம், ஞானயோகம் என்னும் இரண்டையும் விஸ்தாரமாக வருளிச்செய்யக்கருதி இவ்வத்தியாயத்தில் சம்பிரதாயக் கிரமமாக ஞானயோகத்தை ஸ்ரீபகவான் ஸ்துதித்துக் கருமநிஷ்டையை உபசம்மரிக்கின்றார்.]

சங்கிரகார்த்த சுலோகம்.

ஸாஹ்யாநீ ப்ரகாஶாயேந ஸக்திஶ்சைவ ஸ்வீக்ருதே ।
யோகஸ்த: கர்மநிஷ்டாவ ஸர்வேண யோகவைஶம்ஸ்த்ரதா ॥

(இ - ள்.) இவ்வத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் தமது அநீசுவரத் தன்மையை நிவிர்த்தித்துத் தம்மிடத்தில் அருச்சுனனுக்குப் பக்தி சிரத்தைகளைத் திருடஞ்செய்து ஆத்மஞானத்துக்குக் காரணரூபக் கருமநிஷ்டையை உபசம்மாரஞ் செய்தருளுகின்றார்.—எ-று.

நற்றவ நிகழ்தரு கரும ஞானமு
மற்றம தறவுனக் கறியக் கூறினேன்
மற்றவை களின்வர லாறுங் கேளெனக்
குற்றமி லாழியங் கையன் கூறுவான். (க)

எவமற முன்பியா னிரவிக் கோதினே
னவன்மனு வரசனுக் கறியக் கூறினு
னுவகையோ டவனிக்கு வாகுக் கோதினன்
றவமுய லரசரீ தறியுந் தன்மையோர். (உ)

கருதரும் வகைநிகழ் காலஞ் சேறலான்
மருவரும் வகையதாய் மறைந்த வாய்மையை
யிருவினை கெடவரு மியோக நீர்மையை
யொருவரு மறிவரி தாய வுண்மையை. (ங)

வேறு.

நல்ல காதல்செய் நண்பனு மாயெனை
யல்ல தியாவு மறியலை யாதலாற்
சொல்லன் மேயினனென்றனன் றூயவன்
மெல்ல வேறு விசயன் விளம்புவான். (௪)

ஞான மாமிது நல்லவர் கேட்டிடப்
போன காலமும் யான்புகன் றேனென்று
யான தாகினு மவ்வுடம் பன்றிது
தான தாம்வகை நீயறி தக்கதோ. (ரு)

வேறு.

சொல்லார் விசய னிதுமொழியத் துளப முடியோன் சொல்லுவான், பல்லா யிரங்கா லுடம்பெனக்கு முனக்குநடுவு பரிந்தொழிந்த, தெல்லா மறிவன் யானீய தேது மறியாயிது வன்றே, வில்லார் தோளாய் நமக்குள்ள வேறுபாடு விளம்புங்கால். (சு)

வேறு.

சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தநா
னுவாவிவ் வுலகுபடு மழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது நின்றேயென் மாயையினுல் மெய்யேபோ
லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும். (எ)

இவ்வகையென் செயலதனை யறிந்திந்த விடும்பையினின்
றுய்வகைய நெறிபெற்றுங் குயர்ந்தாரை யுரைப்பரிதால்
மெய்வகைய திதுவென்ன வேண்டியவர் வேண்டியன
வவ்வகைய தெய்வமுமா யளிப்பேனும் யானேகாண். (௮)

செயலாலுங் குணத்தாலுஞ் செலநாலு குலமாக
வியலான்முன் படைத்தேனு னிப்பொழுதுங் காப்பேனுன்
முயலாய வினைப்பயனின் மனம்வையேன் மற்றதனு
ளியலாயே யிருக்குமெனக் கவையறிவா ரெனையனையார். (௯)

உய்யும் படிமுன் னுணர்ந்தவர்க ளுணர்ந்தவினைமே லொருப்படுநீ, செய்யுங் கருமஞ் செய்யாமை தீய கரும மென்றிவற்றின், மெய்யும் பொய்யு மறிவருமை யறிய வேண்டும் பொருளுமிவை, மெய்யுஞ் சிலைக்கை யுரவோயிங் கிவற்றின் செயலை யியம்பக்கேள். (௧௦)

ஓடு கின்ற புனலாற்றி னூடைத் துடனே யோடுவான், மாடு நின்ற மரமோடத் தானின் றற்போல் வரச்செய்தே, நீடு நின்ற மரங்களிவை நிற்கு மியற்கைத் தன்மைத்திங் கோடு கின்றேன் யானேயென் றுணர்வு மிக்கோ னுணர்ந்தாற்போல். (௧௧)

செயன்மே னின்ற வறிவிடையே செயலின் மையுமச் செயல்செய்யா, வியன்மே னின்ற புலன்களிலே யெல்லா வினையு மியல்வதுவு, மயன்மே லின்றி யறிந்தானியா ரவனே யெல்லா மறிந்தோனு, முயன்மே னின்ற யோகியுநல் வினைக ளெல்லா மொழிந்தோனும். (௧௨)

வேறு.

ஆவ தென்பது மாசையு மற்றன
மேவ ஞானவெந் தீயிடை வெந்தன
யாவர் தந்தொழி லவ்வகை யோர்களே
சாவ தும்பிறப் புந்துவிர்ந் தார்கடாம். (௧௩)

எண்ணு மின்றி யிகபரம் யாணிவை
பண்ணு கின்றன னென்னுமிப் பான்மையோ
னுண்ணு மேல்வினை யுண்டென வோர்கிலா
னண்ணு கின்ற வினைநலி வுண்ணுமோ. (௧௪)

அடங்கு கின்ற புலன்களொ டாசைபோய்
மடங்கு கின்ற மனத்தினை னுனவ
னுடம்பி தன்பொருட் டாலுள தாமெனத்
தொடங்கு கின்ற வினைதொடக் குண்ணுமோ. (௧௫)

பெற்ற தேகொ டமைந்துமுன் பேறிழ
வுற்ற போதிலொத் தொன்று மொருவர்பாற்
செற்ற மேது மிலாதவன் செய்வினை
குற்ற மோவவற் றின்றிறங் கூறக்கேள். (௧௬)

விட்டு முற்றும் வினைகள் வினைப்பயத்
திட்ட மற்றிறை தன்னி லெழுங்கருத்
தொட்ட நின்றவ னியாகப் பொருட்டுறப்
பட்ட கன்மம் பலத்துடன் மாயுமால். (௧௭)

பிரம மானோர் பிரம நெருப்பிடைப்
பிரமு மாகிய மந்திரந் தன்னினாற்
பிரம மாய சருவுடன் பெய்தபின்
பிரம மேயடை வாருளர் பின்னுங்கேள். (௧௮)

அறிவ தாகிய வங்கியி லேகொள
வறிவை யேசில ராகுதி பண்ணுவார்
செறிவ தாஞ்சமத் தீயிடை யேசில
ரெறிவ தாய புலன்களை யீவர்கள். (௧௯)

உந்தி யப்பொறி யைந்தையு மொக்கவே
யிந்தி யத்தழல் வாயிடு வார்சிலர்
நந்தி யத்தொழி லியாவையு ஞானநெய்
சிந்தி யோகவெந் தீயிடு வார்சிலர். (௨0)

வேறு.

தேடிய பொருள்க ளாலுஞ் செயலுறு தவங்க ளாலு
நாடிய யோகத்தாலு நவின்மறை ஞானத் தாலுங்
கூடிய பரிசால் வேள்வி குலாவுவ ரனேக ரிங்குப்
பாடிய விவர்க ளன்றி யிவர்சிலர் பரிசுங் கேளாய். (௨௧)

வேறு.

மிகமே னின்ற பிராணனையங் கபான னிடையே புகவிட்டங்
ககமே நின்ற வபானனையப் பிராண னிடையா குதிபண்ணி
யிகமே யிரண்டு மியக்கமற விருப்பார் சிலர்மற் றிவர்கண்டாய்
சகமேற் பிராணு யாமத்தின் றலைவின் றவரோ சாற்றுங்கால்.()

வேறு.

இன்னவர்க ளியாவர்களு மியாகமறி வாரோ
யன்னவர்க ளேயறனி றீமையி னகன்றோர்
சொன்னபரி சாலிவை தொடங்கமுடி யாதார்க்
கென்னபரி சாலுமிக மில்லைபா முண்டோ. (உங)

வேறு.

இப்படி யுரைத்த விந்த யாகங்க ளியாவு முன்னஞ்
செப்பிய பிரமந் தின்கட் செனித்தன செய்யுங் காலை
யொப்பரி தாய புத்தி கருமத்தி னுகா னுள்ளத்
தப்படி யறிந்து நீயும் பாவத்தி னகல நிற்பாய். (உச)

வேறு.

தொன்மை யாகமுன் சொன்ன துறைக்கெலா
நன்மை யாமிகப் பாலது ஞானமே
பின்ம யாலறுத் தாங்கது பேணிடுந்
தன்மை யாதெனி லாங்கதுஞ் சாற்றுவாம். (உரு)

வேறு.

விழியாதென வறிவாலறி வுறுவார்விழி வசமே
வழிபாடுசெய் தவர்சேவடி மலர்சூடிட வவரோ
யொழியாதெவர் களுமியாவையு மொருநீயென திடையென்
றழியாவகை யதுவாவதொ ரறிவேயரு ளுவரால். (உசா)

அதனுல்வரு பயன்யாதெனி லழிபாதக முதலாய்
விதநாடரும் வினையாழியி னிடையேவிழு குறுவார்
திதனுகிய வறிவாகிய சிதையாமித வையினு
லிதனும்வகை கனாசேருவ னெங்கனேயெனி லதுகேள். ()

எறியாவெரி வருகானிடை யெரியாதன வெவைதா
மறியாவறி வுடையோர்களு மறிவாரது விதுபோற்

குறியால்வரு குணஞானமெய் யனலேகொள விடுமேற்
பொறியால்வரு வினையானவை பொடியாமிதொர் பொருளே.

வேறு.

தீதற் பாலாம் வினைபுரி வோருஞ் சிலநாளி
லேதற் பாலா மறிவறி தக்கோ ரியாரொன்னி
ஞேதற் பாலார் பாலுமிவ் வுண்மைப் பொருட்பாலுங்
காதற் பாலா னைம்புலன் வென்றோ ரிவர்கண்டாய். (௨௯)

சொல்லரு ஞானப் பொருடெரி யாதொ சொன்னூலு
மல்லவி தாமென் றையுறு வாரங் கன்பில்லா
ரில்லவ ராவா ரிகபர மில்லா ரிவர்கண்டாய்
தொல்லறி வாலே யையுற வற்றோர் துறவுற்றோர். (௩௦)

வேறு.

அறியா மையிலே பிறந்துன்றனகத்தே வளர்ந்த வையு
றவை, நெறியா லுன்றன் ஞானமெனும் வாளால் வெட்டி
யறுக்கிக், குறியா லுன்றன் வினைவிளைத்துக் கொள்வா யென்
று கூறினை, னறியாத் வெண்ணெய் தொட்டுண்டிவ் வுலகமு
ண்ட திருவாயான். (௩௧)

நாலாவது சம்பிரதாய வத்தியாயம் முற்றிற்று.

ஆக் வத்தியாயம் 4-க்குத் திருவிருத்தம் - 147.

ஐந்தாவது

## ஞானகர்ம வத்தியாயம்.

அவதாரிகை.

[பூர்வம் ௩-ம், ௪-ம் அத்தியாயங்களால் கருமம், ஞானம் இவ்விரண்டும் நிரூபிக்கப்பட்டன. இனி ரு-ம் ௬-ம் அத்தியாயங்களால் கருமமும், கருமத்தியாகரூபமான சந்நியாசமும் நிரூபணஞ் செய்யப்படும். பூர்வம், ௪-ம் அத்தியாயத்தில் ஞானக்கினி சர்வகருமேந்தனங்களையுந் தகிக்கும், அதுவே முக்கியமான பாவநமாம் என்று கருமத்தியாகமும், சர்வப் பிரதிபந்தகமான சமுசயத்தை யொழித்து

உனது சுதருமரூபமான யுத்தத்தைச் செய் என்று கருமாநுஷ்டானமும் ஸ்ரீ பகவானால் உபதேசிக்கப்பட்டமையின் ஸ்திதி, கதிகள்போலப் பரஸ்பரம் விரோத தருமங்களை யுடையனவான அவைகளை ஏககாலத்தில் ஓர் புருஷனால் அநுஷ்டிப்பது அசக்கியம் என்று கருதி இவ்வத்தியாயத்தில் அவ்விரண்டினுள்ளே முக்கியமாக யான் அநுடிக்கவேண்டியதொன்றை அருளிச்செய்யவேண்டும் என்றருச்சுனன் வினவியதற்கு ஸ்ரீ பகவான் விரக்ததசை, அவிரக்ததசை என்னும் காலபேதத்தால் ஓர் முமுட்சுப்புருஷனே இரண்டும் முக்கியமாக வநுஷ்டிக்கவேண்டும் என்றருளிச்செய்கின்றார்.]

சங்கிரகார்த்த சுலோகம்.

அநேக ஸாதநாப்யாஸ நிஷ்பந்நம் ஸம்பிணிதம் ।
ஸ்வஸ்வரூப பரிஜ்ஞாநம் ஸர்வேஷாம் முக்திஸாதநம் ॥

(இ - ள்.) அநேகப் பிரகார சாதனப்பியாசங்களால் உத்பந்நமாவதும், சர்வ அதிகாரிகளுக்கும் முக்திசாதனரூபமானதும் ஆன சொச்சொரூப ஞானமானது இவ்வத்தியாயத்தில் (பரமபராக்கிரமத்தோடு) கூறப்படும்.—எ - று.

பூத்தருளி யொருமலராற் புவனமவை யீரேழுங்
காத்தருளி விளையாடிக் கடைசாரங் கண்வளருந்
தீர்த்தன்மறை முறைமொழிந்த திருவாக்குத் தெரியாதே
பார்த்தனவ னெதிர்நின்று சிலவிங்ஙன் பகர்வுற்றான். (௧)

வேறு.

கருமநன் றெனவுமெதிர் கழறுகின் றனைதுறவை
யருமருந் தெனமொழிதி யவையிரண் டினுமமல
வொருமையென் றுயாகல வுரைசெய்கென் றன்விசய
னிருமையின் பரிசுமிது வெனவியம் பிடுமிறைவன். (௨)

துறவுநன் றருவினைசெய் தொழினுநன் றவைதுணியி
லறவுநன் றருவினைகள் விடலிலங் கவைமுயல்கை
பெறலிலின் பமுமிழவி லிடருமொன் றிலர்பெரிது
துறவுநின றவர்பிறர்க டயரினின் றிடுதொழிலர். (௩)

பெருமையொன் றியதுறவு கருமமென் றிருமையினு
மருமையொன் றினையடைந ரவையிரண் டையுமுடைய
திருமையென் றறியுமவ ரிவையறிந் திலரியல்பி
னொருமையென் னுண்ருமவ ரிவையுணர்ந் தவருணரில். (௪)

வினைமுயன் றிடவதனில் வினைதருந் துறவதுகொ
டினையடைந் திடுவரெவர் களுமிவண் செயலேவிட
நினைவருந் தகையபொரு ளெறியறிந் திடுதலரி
தனையதந் தொழில்புரியு மவரடைந் திடுவரறி. (௫)

கவைதருங் குணமுமிகு களிதரும் புலனுமெனு
மிவைகடந் தவர்களெனே யறிவினன் றிசையுமவர்
நவைதருந் தொழில்செயினு நலிவதெங் கவனாயவை
யவைகடந் தவர்கள்வினை யவைதுறந் தடைகுவதென். (௬)

வேறு.

காணுங் கேட்கு முறுமோக்குங் காலா னடக்குங் கண் துளரும், பேணுந் துறக்கு மூச்சுவிடும் பேசும் விழிக்குஞ் சிட்பிளிக்கும், பூணு மின்னும் பலவெனினும் புலன்சேர் பொறியின் புணர்பபென்றே, தானுங் கிரியு மெனவொன்றுந் துளங்கான் விளங்குந் துணிவுடையோன். (௭)

யாவொவ் வினையு மென்பொருட்டா லியற்றிப் பயனை யிகழ்வரவர், சேரும் வினைக ளவற்றோடுஞ் சேரா ரொய்யுந் திறமுளைக்கிற், சார வுடனே பிறந்திருந்துந் தண்டாமரைபின் றகையிலேயு, நீரு மெனலா யிருப்பரதி னின்றோர்க் கொன்று நிகழாதால். (௮)

வேறு.

உடலைய புலனொலு மனனொலு முடம்பானு
நடமாகு மென்முயல்வார் நாடோறு முயன்றாலும்
விடமாகு மவ்வினையே வீடாகும் வினைப்பயனைக்
கடனாகு மெனமுயல்வா ரதனாலே கட்டுண்பார். (௯)

வேறு.

அன்பனினை யாகுபயன் விட்டமைதி யாலே
யொன்பதுபொய் வாசலமை யூரதனி னுள்ளே

யின்பவுரு வாயினி திருப்பணியல் பாலே
முன்பயில்வ தாம்வினைசெ யான்முயல்வி யானால். (௧0)

இவ்வகைய வாயசெய லியாவுமியல் பேகா
ணவ்வகைய மாயையத னாலறிவு றூதே
செய்வகையன் யானென்து செய்கையிது வென்றே
பொய்வகையி னாலழிவ தேபுலனி லாதார். (௧௧)

வேறு.

அறிவினு லறிகிலா தவையெலா மழியவே
செறிவினு மறிவுவா னிரவிபோ றிகழுமா
னெறியினு லதனிலே நிலையுமா யதனிலோர்
பிறிதிலா வகையினார் பிறவியா னதுவிலார். (௧௨)

வேறு.

நன்றே ஞான வருமறையோ னன்னுபசுநா யிறைச்சி
தனைத், தின்றே யுழலு மவனியானை யாவென் றிக்கத் திறக்
தெல்லா, மன்றே யென்னு தாமென்னு தறிவாய் நின்ற வெ
னெயெங்கு, மொன்றே யாகக் காண்பானிவ் வுடம்போ டிரு
ந்தே யுடம்பறுப்பான். (௧௩)

இகமே நிகழும் புலன்விளைந்த வின்ப மெல்லா மறவி
கந்தன், னகமே வினையும பேரின்ப மடைந்தார்க் கென்று
மழியாதாம், புகமேய் கின்ற புலன்பொறிகள் புணர்ந்த வின்
பம் போமென்றுந், தகமே விடரா மெனவுமனை தக்கோ
ரொன்றுஞ் சாராரால். (௧௪)

வேறு.

உடம்புட னேயுள னாகி யிருந்தே
விடம்புரை காம வெகுளியின் வேகாச்
சடம்பொறை யாமை தவிர்த்தவ னேநல்
விடம்புகு ஞானியு மின்புறு வானும். (௧௫)

மெய்யறி வேவினை யின்பம தாக
மெய்யறி வேவினை யாடிட மாக
மெய்யறி வேயொளி யாகவு மேயோர்
மெய்யறி வேபெறு மின்பம் விடாதார். (௧௬)

காவல்செய் தைந்து புலன்க ளிரண்டு
மேவ விரும்புரு வத்திடை விட்டிட்
டாவகை நின்ற வபான பிராண
னேவலி னின்றி யியக்க மறுத்தே. (கஎ)

அஞ்சு பொறித்திற னாசை யடக்கா
நெஞ்சு பயத்தொடு கோபமு நீக்கா
வெஞ்சு திறத்தலில் யோகிகள் காணு
முஞ்சு பிறப்பிடர் யாவு முதிர்ப்பார். (கஅ)

வேறு.

சாதி புரியுந் தொழில்களுக்குந் தக்கோர் செய்யுந் தவங்களுக்குந், நீதி யுலக மேழினுக்குஞ் சேரு மிடமா யுள்ளவெனை, யோதி முடியும் பரிசேமெய் யுணர்ந்தார் பிறவா னொவுணாத்தா, ஞாதி முடிவொன் றின்றியே யடையத் தானே யாய்நின்முன். (கக)

ஐந்தாவது ஞானகர்ம வத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம்-5-க்குத் திருவிருத்தம் 166.

## ஆறாவது
## யோகவத்தியாயம்.

அவதாரிகை.

[ரு-ம் அத்தியாயத்தின் அந்தத்தில் மூன்று செய்யுட்களால் அருளிச்செய்த யோகசூத்திரங்களை விஸ்தாரமாக வியாக்கியானித் தருளும்பொருட்டு இவ்வாறாம் அத்தியாயம் ஸ்ரீ பகவானால் ஆரம்பிக்கப்படுகிறது.]

சங்கிரகார்த்தம்; சித்தசுத்திக்கேதுபூத கருமயோகத்தின் மரியாதை, பின்னர்ச் சித்தித்த சர்வகருமசந்நியாசயுருஷனுக்குச் செய்தற்குரிய அங்கசகிதயோகம், பின் அருச்சுனனது ஆட்சேபநிராகரண பூர்வக மனோநிக்கிரகவுபாயம், பின்னர் யோகப்பிரஷ்டனுக்குப் புருஷார்த்த சூனியசங்கையைப் பரிகரித்தல். இவ்வளவால் பிரதமஷட்கரூப கருமகாண்டம், துவம்பதார்த்த நிரூபணம் சமாப்தம்.

யோக மனத்தவர் யோக மதற்கே
யேக முதற்பொரு ளாகி யிருந்தே
நாக பணைத்திடை யேயட மாடும்
மேக மவற்கிவை மீள விரிப்பான். (க)

செய்த வினைப்பயன் விட்டிவை தீரா
தெய்த வியற்றி யிருப்பவ னேகா
ணுய்ய நினைத்திடு யோகிநன் ஞானி
வெய்ய தழற்பொலி வேள்விசெய் வாரில். (உ)

மேவின யாவையும் விடுத லில்லார்
யாவர்க ளேனுநல் யோகிக ளாகா
ராவர்க ளாகி லவாவற லேகா
ணோவிலி லாதநல் யோகமு மையா. (ங)

உய்வகை யோகமொ ருப்படு வார்க்குக்
கைவரு மாசெயல் காரண மேகாண்
மெய்வகை யோகம் விளைந்தபின் மெய்யே
செய்வன வானவை தீமைய வேயாம். (ச)

புன்மைய வான பொறித்திற மோடும்
பன்மைய வான வினைப்பய னோடு
மன்மைய னானவ னெப்பொழு தையா
தன்மையின் யோக மதிற்றலை நின்றான். (ரு)

தானல தியாவர்தன் மேன்மைசெய் தக்கார்
தானல தியாவர்தன் கீழ்மை சமைப்பார்
தானல தியாவர்தன் மெய்ப்பகை யாவார்
தானல தியாவர் தனக்குற வாவார். (சா)

வேறு.

இறவா வகைதன் னுள்ளத்தை யடக்கு மவனே தனக் கென்று முறவா யுள்ளா னல்லாதார் தமக்கே பகையா யொழு குவார்; துறவா தொழுகுந் துவந்துவங்க டுறந்தொன் றினை யே தொடர்ந்தவர்பான், மறவா தெழுந்த மெய்யறிவிம் மாயை மறைக்க மறையாதால். (எ)

யாடும் புனுவல் பலவோதி யவற்று லறியும் பயனு ணர்ந்து, நீடும் புலன்க ளவைவென்று நிலையிற் கலக்கற் கரி

யாளு, யோடும் பொன்னு மொருபொருள்போ லொக்கப் பார்க்கு மவனேயிங், காடும் பெரிய மாயக்கூத் தாடா தனுகண்டமர்ந்திருப்பான். (௮)

கைம்மா றில்லா தனசெய்வான் காதற் றோழன் கடும்பகைஞன், விம்மா தெவர்க்கு மொத்திருப்பான் வேண்டப் படுவான் வேண்டாதா, னம்மா மறைநூ னெறிபுரிவா ருகாதனவாக் கிடுவானென், றிம்மா னுடவ ரினைவருக்கு மொய்ப்பான் யோகி யெனப்படுவான். (௯)

தலையா மிந்த யோகத்தைத் தலைநின் றொழுகுந் தன்மைதே, நிலையா வாசை யறமாற்றி யொன்றுந் தனக்கென் றொழுகாதே, மலையார் முழைஞ்சே முதலாக யோகங் களுக்கு வகுத்துரைத்த, நிலையா வையினு மொன்றினில்வந் தியாது நலியா விடத்ததிலே. (௧0)

ஒக்கும் வகையாற் குசைபரப்பி யதன்மே லுழையின் றோல்படுத்துத், தக்க துகிலை யதன்மேலே விரித்துத் தானங் கிருந்து, மிக்க மனனை யறவொருக்கி வேறு செய்யும் வினைகளுடன், றொக்க புலன்க ளவையடக்கி யுணர்வு தூய்தா வதன்பொருட்டால். (௧௧)

தலையுங் கழுத்து முடம்புமிவை செவ்வே தளரா தேயிருக்கு, நிலையி லிருந்து கண்களைத்தன் மூக்கி னுதிமே லேநிறுத்தி, யலையுங் கடல்போற் காமமுமெய்ப் பயமுந் தன்னை விட்டகல, வுலையு மனமுள் ளடங்கவெனை யுணர்ந்தே யிருக்கு மதுயோகம். (௧௨)

வே று.

எண்டிகழும் யோகத்தை யிப்பரிசே யெப்பொழுதுங்
கொண்டுபயில் வார்கடைக்கா லென்னையே கூடுவரா
லுண்டியினின் மிகுவாருண் டுறப்பார்மிக் குறங்கிடுவார்
கண்டுயிலை யறத்துறப்பா ரவர்க்கிதுகை வாராதால். (௧௩)

வே று.

துயிலு முணவுஞ் செய்தொழிலு மிகாமே குறைந்து தோன்றாமே, பயிலு மவனே யோகத்தைத் தன்பாற் படுக்கும் பான்மையா, னயிலும் பொறிவிட் டவ்வறிவு தன்பா

லடங்கு மப்பொழுது, குயிலு மியோகந் தலைநின்று னென்றுங் கவனைக் கூறலாம். (கச)

வேறு.

இப்பரிசு பயில்கின்ற யோகிகா லிலாவிடத்து
மெய்ப்பரிசு நடுங்காத விளக்குப்போல் விளங்குமா
லெப்பொழுதாங் கவனுணர்விவ் வுண்மையிலே சென்றிசையு
மப்பொழுது பரமானந் தத்தினையு மடையுமால். (சரு)

வேறு.

யாதொன் றிந்தப் புலனறியா வளவி லின்ப மாயிருக்கும், யாதொன் றினைச்சென் றடைந்தோர்கள் பின்னை யதனி னிரண்டாகார், யாதொன் றினைப்பெற் றவரிதனின் மிக்கதொப்ப துண்டென்னார், யாதொன் றிந்த வறிவுக்கே யறிவாய் நிற்கு மதினின்றோர். (கசு)

வேறு.

வஞ்சர் வேல்கொடு மாய்பி னெறியினு
மெஞ்ச வேதழன் மூடி யெரியினு
நஞ்சி னாழ னுக நலியினு
மஞ்சி டாது வானந்த மாவதே. (கஎ

போக மாய்த்துப் புலன்களைப் போக்கறத்
தாக மாமெய் யறிவிடை யேயந்த
வேக மாய மனத்தினை மெல்லவே
யேக மாக விருத்திக லாதுநீ. (கஅ)

வாங்கி யைம்பொறி நின்ற மனத்தினை
நீங்கி டாவகை நின்னு ளிருத்தியே
தீங்கி யாவையுஞ் சிந்தை செயாமையாம்
பாங்கி யாதது வேபயில் வாயரோ. (கசு)

தேறு நெஞ்சின னுய்த்தன் செயலலால்
வேறு கண்டறி யாமெய் யறிவினு
னூறி லிந்த வுடம்புடன் வேறுபெற்
றேறி நின்றவ னேயின்ப மெய்துவான். (உ0)

வேறு.

இழியா திந்த யோகத்தை யென்றுந் தலைநின் றவனென்று
மழியா வின்பத் தினையின்பத் தாலே யடையு மதாநிற்க [ளே
வொழியா வெல்லா வுயிர்களுந்தன் னுள்ளே காணு மவற்றுள்
கழியா தெங்குந் தானின்ற பரிசுந் தெரியக் காணுமால். (உக)

யாவனொருவனென்னை யெல்லா வுயிர்க ளிடையு மென்னிடையே, மேவ வெல்லா வுயிர்களையும் வேறு காதே மெய் காண்பான், றேவர் பகைமுன் செகுத்தோனே யவன்யாதேனுஞ் செய்திடினு, மாவ வவனு கின்றேன்யா னதுநீ யேது மையுறேல். (உஉ)

இடரா னதுதா னின்பந்தான் யாவர்க் கேனு மாயிடுமேற்
படரா நின்ற வகைதானு முறுவான் பரம யோகியென்பான்
சுடரா நின்ற வடிவேலோய் துணிநீ யென்று துழாயலங்க
லடரா நின்ற நெடுமுடியோ னருளிச் செய்ய வவனுரைப்பான்.

எல்லா வுயிரு மொன்றாகப் பார்ப்ப தியோக மெனவுரைத்தாய், மல்லார் தோளா யிதற்குநிலை காணேன் மனமா கின்றவிது, நில்லா வியற்கைத் தாய்ப்புலனைக் கலக்கு மதனை நிலைநிறுத்த, லொல்லா தெனவுங் காற்றடக்கற் கொக்கு மெனவுமுணர்கின்றேன். (உ௩)

இவ்வகை விசயன் கூற மாயவ னியம்பு கின்றா
னைவகைப் புலனு நெஞ்சு மடக்குகை யரிதா னாலு
மூவ்வகை யோக மியாவு முயற்சியி னாலு மொவ்வா
வைவகைப் புலன்செ யின்ப மனைத்தையும் வெறுத்த லானும்.

வேறு.

வெய்ய நெஞ்ச மடங்கிடும் வேறிதற்
கைய மில்லையென் றேயறி யாதலாற்
பைய வேகர ணம்பதி னொன்கையுங்
கைக டந்தவர் யோகமுங் கைகண்டார். (உ௬)

என்று கூற விசய னியம்புவா
னின்று யோகத்தி லேநெடு நாளெலாம்
பொன்றுங் காலத் தயர்ந்துயிர் போயினாற்
சென்று நற்கதி யேயென்று சேருமோ. (உ௭)

யோக மேவ வினைக ளொருவினன்
மோக மேவலின் யோக முடிந்தில
னேக மேயிரு பாலும் விடாநிற்க
மேக மேயென வீய்ந்து கழியுமோ. (உஅ)

வேறு.

மைய விதுவென் மனத்தினின் மற்றிந்த
வைய மறுக்கவல் லாரில்லை நீயன்றி
யுய்ய விதனை யுரையென்ன யோகத்தின்
மெய்ய னிதனை விரிய வுரைக்கின்றான். (உகூ)

பொய்ம்மை யடையாப் புலனுடை மாந்தர்க
ளிம்மை யிடையு மறுமை யுலகத்தும்
வெம்மை யடைகிலர் மெய்ம்மை விடாவொன்றுஞ்
செம்மை தெளியின்னுஞ் செப்புதுங் கேளாய். (௩௦)

யோக முடியா திடையே யிறந்தவன்
யாக வினைபல செய்தாங் கிசைந்திடுஞ்
சோகமி லுடெய்தித் துன்பந் தொடராதே
போக நுகர்ந்துபல் காலங்கள் போயபின். (௩க)

சிறந்த வரசர் திருக்குலத் தாத
லறந்தரு யோகிக டங்குலத் தாதல்
பிறந்து பெறுவதெல் லாமெய்திப் பின்னு
மறந்த வியோக மகிழ்வுட னெய்தும். (௩உ)

கொண்டு பயிலுங் குணமில னாகினு
முண்டு தெளிவென் றுணர்ந்த வியோகந்தான்
பண்டு பயின்ற பயிற்சியி னான்றனைத்
தண்டுத லின்றிமுன் றானே தலைப்படும். (௩௩)

அனையவி யோகத்தை யாற்றுவ னென்று
நினையு மவனு நெறிபிற ழாமல்
வினைகள் பலசெய்து வேள்வி முடித்தா
னனையுங் கதிமேற் கதிபெறு வானால். (௩௪)

நீடு மனநிலை நின்றில னாயினு
மோடும் வகையால் விடாதே யுழன்றவன்

பாடும் பவங்கள் பல்கடந் தாயினும்
வீடும் பெறுமின்னும் வேறுஞ் சிலகேளாய். (௩௫)

எல்லாத் தவமு மியற்றிநின் ருனினு
மெல்லாக் கலைகளுங் கற்றுணர்ந் தோனினுஞ்
செல்லாக் கருமமெல் லாஞ்செய் தவனினு
நல்லான் வலியோகி நீயிது நண்ணுவாய். (௩௬)

வே று.

இருவகைய வினையறுக்கு மியோகிகளெல் லார்களினு
மருவரிய மனத்தினையு மன்பையுமென் பால்வைக்கு
மொருவனுமே யானுவக்கப் படுகின்று னெனவுரைத்தா
னருளெனவன் றருளெனமுன் பாராது மறிவரியான். (௩௭)

ஆருவது யோகவத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம்-6-க்குத் திருவிருத்தம்-203.

ஏழாவது

## மாயாரூப வத்தியாயம்.

அவதாரிகை.

[சர்வகருமங்களின் சந்நியாசரூபமான சாதனம் பிரதானமாக வுள்ள பிரதமஷட்கத்தால் ஸ்ரீ பகவானுனவர் யோகத்தோடுகூட துவம்பதத்தின் லட்சியரூபமான ஞேயவஸ்துவைப் பிரதிபாதனஞ் செய்தனர். இப்போது தியானிக்கத்தக்கதான பிரமத்தின் பிரதிபாதனமே பிரதானமாகவுள்ள இம்மத்தியம துவிதீய ஷட்கத்தால் தற்பதார்த்தரூபமான பரமான்மாவைப் பிரதிபாதனஞ்செய்கிறார். இம் மத்தியம ஷட்கத்திலும், 'இருவகைய வினையறுக்கு மியோகிகளெல் லார்களினும், மருவரிய மனத்தினையு மன்பையுமென் பால்வைக்கும், ஒருவனுமே யானுவக்கப் படுகின்றுன்' என்னும் செய்யுளால், முன்னே அருளிச்செய்த பகவத்சேவையை வியாக்கியானித்தற்பொருட்டு இந்த-எ-ம் அத்தியாயம் ஆரம்பிக்கின்றார்; இங்கே பகவானுடைய சொரூபம் எவ்வாறு சேவிக்கத்தக்கது? அப்பகவானுடைய சொரூ

பத்தில் மனமானது எவ்வாறு நிலைபெறும் என்னும் இவ்விருவகை வினாக்களும் அருச்சுனன் வினவத்தக்கனவாயிருந்தும் வினவிலன். ஆயினும் பரமகிருபாலுவாகிய ஸ்ரீ பகவான் தாமே அவ்விருவகை வினாக்களுக்கும் ஞானத்தின் ஸ்துதிபூர்வகம் சர்வான்மபாவந்தோன்ற உத்தரமருளிச்செய்கின்றார்.]

சங்கிரகார்த்தம்; இவ்வத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் உத்தமாதிகாரியைக்குறித்து லட்சணாவிருத்தியினால் தற்பதத்தாற் கூறப்படும் அறிதற்குரிய பிரமமும், மத்திமாதிகாரியைக்குறித்துச் சத்திரூபமுக்கியவிருத்தியினால் தற்பதத்தாற் கூறப்படும் தியானித்தற்குரிய பிரமமும் அருளிச்செய்வர்.

உய்ய வன்பினொடு மென்னையே யடையு மியோகமே
ப்பினும் யோகிதா, னைய மின்றியெனை யேய றிந்திடுமதைய
நீயுமறி வாயெனா, வைய மூண்டுமறை நீர்மை யுண்டிடை
யர் மாத ருண்டிட மலர்ந்திடுஞ், செய்ய தண்பவள வாய்தி
றந்துதிரு மாது கேள்வனிவை செப்புவான். (க)

மாயு மாயைமறை யாத நெஞ்சினிடை மற்றெ னுண்
மையினை வாய்மையா, லேயு மாறுற வறிந்து ளோர்களறி
யாத தொன்றுமிலை யென்னினு, மாயு மாறுட ரனேகர் பா
லொருவ னென்னையாயுமன்பு வைத்துளா, னாயு மாறுட ரனே
கர் பாலொருவ னேய றிந்துமுடி வானையா. (உ)

மண்ணு நீருமெரி தீயும் வாயுவுமவ் வானி னோடுமன
புந்தியு, மெண்ணு நீர்மைகளில் யானெ னும்பதமு மென்னு
மெட்டுமிவை யன்றியே, பண்ணு நீர்மைகளின் மேலதா
யுலகி லியாவை யுங்கொடு பரித்துடற், கண்ணு நீடுயிரு மாகி
யென்னுடைய மாயை நிற்பதுகை வேலினோய். (ங)

கண்ணி னற்றெரிய லுற்றுணர்ந்திடி லிரண்டி னாலும்
வரு காரிய, மண்ணி னிற்ப நடப்ப வென்றபொருள் யாவு
மற்றவிரு பான்மையே, நண்ணி நிற்பதுல காத லாலுலகி
னாச வுற்பவமு நானலா, தெண்ணின் மற்றறிவ தில்லை யெப்
பொருளு மென்னி னன்னியம தில்லையால். (ச)

வேத மாகிநிகழ் யானலா துலகி லென்னின் வேறென
விளங்கிடும், பூத மானவை பொறுக்க வேறுபொறை யாளு

ரில்லையெது போலெனி, லோது மாமணியனேக மூடுருவு
கோவை நூலினொரு பான்மைபோனம், பேத மாவொரு
டோறு நான்மருவி நின்ற வாறுநனி பேசுகேன். (ரு)

வேறு.

திரியுமிரு கதிரினிடைத் திகழொளிநான் றிருமறையி
னரியமுத லெழுத்துநா னுடவர்பா லாண்மையுநான்
விரியுண்ணிற் சுவையதுநான் மேதினியில் வாசமுநா
னெரியில்வரு வெம்மையுநா னாகாசத் தெழுமொலிநான். (சு)

ஆன்றவறி வுடையோர்பா லறிவுநா னடங்கினர்பால்
வான்றவநான் வளர்நன்மை பூண்டார்பால் வண்புகழ்நான்
மூன்றுமிகு திறலோர்பாற் காமமுறுத் தொல்வலிநா
னான்றுபொரு ளனைத்திநுக்கு முயிராகி யுள்ளேனே. (எ)

மூன்றுகுண வகையாகி முடிகின்ற பொருண்முழுதுந் [துவு
தோன்றுவது மென்னிடையே யெனைத்தொடர்ந்தே நிற்ப
மான்றவமற் றவற்றினிடை யான்றோன்றே னவற்றினுக்குச்
சான்றெனநிற் பேனல்லா லவைசார்ந்து வாழேனே. (அ)

மைக்குணங்க ளெனமுனம்யான் வகுத்துநினக் குரைத்திட்ட
விக்குணங்கண் மூன்றானு மயக்கப்பட் டறிவிழந்து
தொக்கிணங்கு கின்றவுயி ரிவையெல்லாஞ் சுடர்வேலோ
யக்குணங்கள் கடந்தவெனை யறியுமோ வறியாவால். (கூ)

இவ்வகைய குணமூன்றி னியற்கைத்தா யாராலுஞ்
செய்வகைய தல்லாவென் மாயையினாற் றிகைப்பொழிந்திங்
குய்வகைய தரிதெவர்க்கு மென்னையே யெப்பொழுது
மெய்வகையோ டடைகின்ற மனமிலரோல் வேல்வேந்தே. ()

ஊழாலே வருமித்த மாயையினா லேயுள்ளம்
பாழாக வறிவிங்கே பறியுண்டு நெறிநின்றோர்
வீழாத தீவினையே வினையாக விளைக்கின்றோர்
கீழானோ ரெனையடையா ரடைவாருஞ் சிலருளர்கேள். (கக)

வேறு.

செல்வம் விரும்பினர் செல்ல லடைந்தோ
ரல்லல் கெடுக்கவெ னன்புசெய் வோர்க

னல்ல துதிக்கும் மெய்ஞ் ஞானியிந் நால்வர்
வல்லதி லென்னை வணங்கு தவத்தோர். (கஉ)

இன்னவர் தங்களி லென்னொடும் வேறு
யுன்ன லிலாமையின் ஞானி யுயர்ந்தோ
னன்னவ னல்ல னெனக்கவ னுக்கே
நன்னல னாகுவ னானு நலத்தோய். (கங)

ஓதரு ஞானியென் னுண்மையி னுள்ளே
யேய்தலி னலவ னெனை வேயா
மாதனு மிங்ங னனேக மெனச்சொல்
காத லிறந்த பவங்களி னலாம். (கச)

விரிய வுணர்ந்த விழுப்பொரு ளெல்லா
முரியவெ னன்றி யிலாத வொழுக்கந்
தெரிய வறிந்தினை யேசெறி கிற்பா
னரிய னவன்பெறு தற்கயில் வேலோய். (கரு)

மற்ற வருந்த மனங்களில் வைத்த
பற்றதி லேயறி யுண்டறி வெல்லா
முற்றவை தந்திடு தெய்வ வொழுக்கா
னற்றவ ரின்றவை நண்ணுவர் வேலோய். (கசு)

யாவ னொருத்தன் யாதொரு தெய்வ
மேவ வருச்சனை யன்பின் விளைப்பா
னவல் சலிப்பறு மன்பவ னுக்கே
யாவது முற்று மளித்திடு வேனான். (கஎ)

அளித்தவவ் வன்பொடு மத்தெய்வ நாளுங்
களித்து வணங்கினர் காதல வெல்லாம்
வெளிப்பட முற்று மளித்திடு வேனா
னொளிப்பரி தாமுரு மஞ்ச வுடன்றோய். (கஅ)

சிந்தையி னித்தெய்வ மெய்த்தெய்வ மென்றே
முந்த வருச்சனை செய்து முடிக்கு
மந்த மனத்தர் பெறும்பயன் வாளா
வந்த முடைத்த தனித்தமு மையா. (ககூ)

வேறு.

தானந்த மிலியுவமை தரநின்று தாவரிய
வானந்த வுருவமென வெனையொன்று மறிவதிலர்
கோனந்தன் மகனரசர் குலமைந்த னிவனுமெழி
லானந்த மிலியொருவ னிவனென்ப ரறிவிலிகள். (௨௦)

மருவுற்ற பிரகிருதி யதிலுற்று மறைவனெழி
லொருவர்க்கு மறியும்வகை வெளிநிற்ப திலையுலகில்
வெருவுற்ற பெருமயலின் மனமுற்று விழிமறைய
வருவுற்ற வெனையுலக மறிகிற்ப திலையடைய. (௨௧)

வேறு.

போனவை யினிமேற் புகுதநின் றவையிப் பொழுது போகின்றவை யனைத்தும், யானறிந் திருப்ப னியாவுமா மென்னை யுலகின்மற் றியாவரு மறியார், மானவெஞ் சிலையாய் வேண்டல்வேண் டாமை தன்னிலை வருகுண மயக்காற், றனமைந் துருவாய்ச் சனித்திடும் பொழுதே தந்த மெய் யறிவுசார்ந் திடலால். (௨௨)

வியக்கமேன் முயன்ற நல்வினை மாந்தர் விரும்பல ராகி முன் செய்த, பயக்கமே வியதீ வினையெலா மறவே பற்றறப் யறிந்துமுன் போனாற், றுயக்கமே புரியுஞ் சோகமே முதலாந் துவந்துவ குணங்களிற் றொடர்ந்த, மயக்கமே வலரா யொழுக்கமே நிலைநின் றென்னையே மனத்திடை வைப்பார். ()

எறிவரும் பிணிமூப் பிறப்பொடு பிறப்பென் றிவை கெடுத் திடல்பொருட் டாகக், குறிவரும் பரிசு நினைத்துமற் றென்னையே கூடுதன் மேவிநின் றவர்க, ளறிவரும் பிரமந் தன்னையு மதனை யறியுமெய் யறிவையு மறிவி, னெறிவருங் கரும மனைத்தையு மறிவ ரறிந்தபின் னிகழ்வதுங் கேளாய். (௨௪)

வேறு.

தேடும் பழைய வதிபூத மதிதெய் வத்தோ டதியெச் சங், கூடும் பரிசு நின்றவெனை யறிவா ரிந்தப் புழுக்கூடு, வீடும் பொழுது மெனைமெய்யே யறிவா றொன்றுன் யாம்வெவ்வே, றூடும் பழைய மாயக்கூத் தாட்டு விக்கு மம்மாயன். (௨௫)

ஏழாவது மாயாரூபவத்தியாயம் முற்றிற்று.

---

ஆக அத்தியாயம்-7-க்குத் திருவிருத்தம் 223.

---

எட்டாவது

# எழுவகை வினாவுணர்த்த வத்தியாயம்.

அவதாரிகை.

[பூர்வம்-எ-ம் அத்தியாயத்தின் அந்தத்தில் ஸ்ரீ பகவான் சூத்திரரூப வசனங்களால் ஞேயத்துவரூபமாக வருளிச்செய்த பிரமமுதலிய எழுபதார்த்தங்களின் வியாக்கியானரூபமாக - அ-ம் அத்தியாயம் ஆரம்பிக்கின்றனர்.]

சங்கிரகார்த்தம்; இதில் தியானிக்கப்படும் பிரமத்தை நிரூபணஞ் செய்து தியானபராயண புருஷனது கதி கூறப்படும்.

அடைய ஞாலத்தை யார்த்ததி லார்ப்புறு
திடையர் தாம்பிடை யார்ப்ப விருப்பவ
னுடைய னாகமுன் போதின வேகொடவ்
விடைய னானவன் மீள வியம்புவான். (க)

வேறு.

ஆயபிர மத்தொடத் தியாத்ம மமைகரும
மேயவதி பூதமதி தெய்வமதி யெச்சங்
காயமதி லுள்ளபரி சங்கெழுமு காயம்
வீயலுறு போழ்திலுனை மெய்தெளிபு மாறும். (உ)

விரியவுரை செய்தருள வேண்டுமென மீண்டவ்
வரியரவி லேதுயிலு மாயவ னுரைப்பா
னரியதழி யாமைய தனைத்தினு முரைக்கிற்
பெரியது மொழிந்தபிர மம்பிறவு நீகேள். (ங)

வேறு.

அந்தக் கரணங் களினின்ற வறிவத் தியாத்ம மாவதுதா
னிந்தப் பிறவி தனையாக்கு மியாகங் கரும மென்பதுதா
னந்தற் கமைந்த வுடம்பதனை நானென் கின்ற ததிபூதம் [ன்.
யந்தப் படுமிவ் வுடற்கமைந்த புருடன் றெய்வ மெனப்படுவா

ஐஞ்சு தலையி லதியெச்ச மாகின்றே னிறக்குங்கா
னெஞ்சு கவருநெறிகளெலா மடைத்து நினையப் படுவதுநா,
னஞ்சு புலனும் பொறியைந்து மடக்கி யறிவென் பாலதாய்த்,
துஞ்சு மவர்க ளெனையடைவா ரெவ்வா றென்னிற் சொல்லக்
கேள். (ச)

இந்த வுடலம் விடும்பொழுதி யாவ னியாதொன் றினை நினைந்தா, னந்த வளவே யந்தப்பா வனையா லதனை யடையுமா, லென்ற னியல்பே யெப்பொழுது மிதயத் திடைகொண் டிடன்பாலாஞ், சிந்தை யொடும்வா ளமர்தொடங்கி லதனு லெனையே சேருதியால். (சு)

நல்ல கரும யோகத்து ஞான யோக மதுதனிலுஞ், செல்லு மனனை மிகச்செலுத்திப் பிறிதொன் றினையுஞ் சேரா தார், சொல்ல வரிய கதிரவன்மண் டலம்போற் றோன்றுந் தொல்லோனை, யல்ல தடையா ரவனியற்கை யடையும் பரிசை யறையக்கேள். (எ)

எல்லாப் பொருளு மறிவானை யெல்லாப் பொருட்கும் பழையானை, யெல்லா ரையுந்தன் னிலேநிறுத்து வானை யிரம் பச் சிறியானை, யெல்லாப் பயனு மீவானை யார்க்கு நினைதற் கரியானை, யெல்லா விடத்து மிருளீர்த்த விளவெங் கதிர்போ லொளிர்வானை. (அ)

மருவற் குரிய வன்புடையார் மயங்கா யோக மனத்தா லே, புருவத் திடையே தம்முடைய புரைதீ ருயிரைப் புக நிறுத்தி, யுருவத் தினைவிட் டிடிலிந்த யோகத் தாலே யவனே டும், பொருவப் படுவ ரப்பொருண்மே லின்னம் புகல்வன் பொருவேலோய். (கூ)

வே று.

யாதொன்றை மறைதெரிந்தோ ரழியாதென் றெடுத்துரைப்பர்
யாதொன்றை யவாவறுத்த யோகிகடா மெய்திடுவர்
யாதொன்றை யுறநினைந்தோர் காமமுதல் விபனிழப்பர்
யாதொன்றப் பரம்பொருளா மதைச்சுருங்க வியம்புவன் கேள்.

வே று.

அஞ்சுபுலன் வழியவை யடைத்தய லுருதே
நெஞ்சுதனை யிதயகம லத்திடை நிறுத்தி
யெஞ்சுதலி லுயிர்வளியை யுச்சியினி லேற்றி
யுஞ்சுபுகு நெறியிதென யோகுட னிருந்தே. (கக)

ஓதுவி னியற்றொகையினொ டோமெனு மெழுத்தை
வாய்தனி லுரைக்கமன மானது தனித்தே
மேதகு மெனைத்தெளிய வாவிதனை விட்டோர்
வீதலி னியற்கையெனை யேயடைவர் மிக்கோய். (௧௨)

இப்பரிசி னொன்றொரு திங்களுமவென்னை,
யெப்பொழுது மென்றனியல் பேசினையு மூற்றார்
கைப்படுவ னியானெனியல் கைப்படவிருந்தோர்
பொய்ப்பிறவி யானது மறித்தடைதல் பூணார். (௧௩)

வேறு.

செய்யாமுன் சார்ந்தவினை தீர்ந்த போதே, நிறைசுமுகனை டனைந்தோருந் திரிய மீள்வர், மெய்யாக வெனையடையு மவரோ கண்டாய் மீளாத நெறியடைந்தார் வேறு கூறி, லையா கேள் சதுர்யுக மீரைஞ் ஞாறு மொருபகலா மாண்டொரு நாறுயற்கு முள்ள, தெய்யுநாரங் கவருக்கோர் பகலிற் றோன்றி யிராவிறக்குந் தன்மைத்தாம் யோனி யெல்லாம். (௧௪)

வேறு.

நெறியில்வரு வியக்தமுட னவ்வியக்தங் கூடாத நிலைமையென்று, பொறியழிவு மாக்கைதனி லழியாத புலமென்றும் புகிதனென்றென்றும், மறிவரிய நெறியென்று மழியாத பொருளென்று மடைந்தோர் பின்னைப், பிறிவரிய நெறியென்றும் பெரியோர்கள் பேசுவதென் பெற்றி கண்டாய். ()

எப்பொருளு மியாவுன்றன் னுள்ளடங்கிற் றெங்கு மாய் நிற்கின் றுன்யா, ரப்பரம பரம்பொருளா யுள்ளவெனை யன்பாலே யடைவதையா, வெப்பரிசு வருங்காலத் திறந்தார்கள பிறவாதார் பிறப்பு ரொன்றி, லப்பரிசு வருங்காலத் தினையறிய வுரைக்கின்றே னதனைக் கேட்பாய். (௧௬)

தங்கியொளி பகல்வெண்மை யரங்கால தேவதைகளவர்களோடுந், தங்குமறு திங்களிடை யுத்தரா யணஞ்சார்வார் மறுத்துஞ், சாரார், கங்குல்புகை கறுப்பென்னுங் காலதேவதையடைந்து பிறக்குங் கண்டா, யெங்குமறு திங்களிடைத் தெக்கண யனத்திறந்த யோகி யென்பான். (௧௭)

வேறு.

ஏத மான தின்றியிவ் விரண்டு மாயு மியோகிதான்
வேத மோதி வேள்விதானை மெய்த்தவங்கள் செய்துநா
ளோது வாய நற்புதங்க ளெய்தி வீடு மெய்துவர்
ஞாத லாலவ் வியோக மேசெய் யென்றுமாய னோதினான். ()

## எட்டாவது எழுவகை விருவுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 8-க்குத் திருவிருத்தம்-246.

## ஒன்பதாவது

## மாயாவிகாரவத்தியாயம்.

### அவதாரிகை.

[பூர்வம் அ-ம் அத்தியாயத்தில் அருளிச்செய்த யோகத்தால் தனது இச்சாபூர்வகமாக அர்ச்சிராதிமார்க்கத்தால் பிரமலோகமடைந்த உபாசகபுருஷன் அப்பிரமலோகத்திலுள்ள திவ்ய போகங்களைப் புசித்தபின் பிரமஞானமடைந்து அக்கற்பத்தின் இறுதிக்கண் பரப்பிரமத்தின் பிராப்திரூபமான கிரமமுத்தியையும் அடைவான் என்றருளிச்செய்ததுபற்றி அதிகாரிக்குப் பூர்வஞ்சொன்னபிரகாரமாகவே முத்தி அடையப்படுங்கொல்? வேறேனும் அந்நியமார்க்கத்தாலும் முத்தி அடையப்படுங்கொல் எனவுண்டாகுஞ் சங்கையைப் போக்கும்பொருட்டு இவ்வத்தியாயம் ஆரம்பிக்கின்றார்.]

சங்கிரகார்த்தம்; இதில் ஜோதிரூபபிரமத்தை நிரூபித்து ஞானநிஷ்டர்புருஷனது கதி கூறப்படும்.

சீர்வன்றுயர் களையும்பத மீதன்றுகொ லெனவே
யார்வஞ்செயும் விசயன்கொளு மாசங்கையை யறியாக்
கார்வந்தென வுளன்புறு களிகொண்டெழ வெளியே
தேர்வெண்பரி குசைகொண்டெழு பாகன்றிரு மொழிவான்.

துறையும்பொருள் களின்முன்பனு பவமொன்றிய வதனை
மறையும்பொருள் களின்முன்பற மறையும்பொரு ளினையே

விறையுந்துய ரதுவின்றிமு னியைகின்றதை யிசைவோ
டுறையுர்துக ளறகின்றதை யொழிகின்றன னுணர்நீ. (௨)

ஆழிவொன்றில தறனொன்றிய தரிதன்றிய ததன்மேல்
வழிவந்தமெய் யறிவன்பில வெனையெங்கணு மருவா
திழிதந்திடு சனனங்கொடு மரணங்கொடு மிங்ஙன்
னுழிதந்திக பரமொன்றிய வுருவங்களி லுழல்வார். (௩)

வேறு.

யாரு மறியப் படாமையதே யெனக்கு வடிவா யுடையனா
னொரு முலகஞ் சகலமடையப் பரப்பி நிற்ப னாதலினாற்
சாரு புவிகிற் சராசரங்க ளெனையே யவற்றை யான்சாரேன்
சேரும் பரிசு நின்றுற்போற் றெளியா தார்க்குத் திகழுமால்.

முன்னே யொன்றுங் கலவாதியா னிற்பன் முழுது மாய்நின்ற, வன்னோர் மையினா லுலகமெனோ டங்கங் கலவா தாதலினால், லென்னே யென்ற னியற்கையினைப் பாராயிந்தச் சகமெல்லா, மன்னே யென்றன் மாயைபெறு மாங்கா ரமுனைய்த் தருவன்காண். (௫)

வேறு.

என்னுருவிற் புணராதே யென்னைவிடத் தோன்றாதே
மன்னுயிர்க ளெனையென்றுஞ் சார்ந்துவரும் வகைகேட்கி
லுன்னுமிடமெங்குநிறைந் தொளிர்கின்ற வானெங்கு
துன்னியற்கை செறிகாற்றின் றேற்றப்போன்ஞ் சுடர்வேலோய்.

ஈண்டுபொரு ளிவையனைத்து மிறக்குங்கா லென்னிடையே
மாண்டுபுகும் பிறக்குநாண் மற்றவைதாம் வரன்முறையே
மீண்டுபுறப் படுமென்னு லாதலினான் மெய்பார்க்கில்
யாண்டுமுயிர் படைத்துக்காத் தழிக்கின்றேன் யானேகாண்.

வேறு.

விலங்கலனையாய் பலங்களுடன் வேண்டல் வேண்டமையைவிட்டுச், சலங்கொள் வினைக ளவைசெய்வ னதனு லென்னை யவைசாரா, வுலண்டு வாயா னுற்றந்த நூலாற் கட்டுண் பதுபோலப், பலங்க ளனைவா ரதனாலே கட்டுண் டூங்கே பட்டுழப்பார். (௯)

வேறு.

ஊர்வன நிற்ப வாக வுலகைப்புண் டாக்கு மென்னை
யோர்பெற வறியா தார்தா மகனென்றே யிகழா நிற்பர்
வேறொன நெஞ்சத் தாசை வினைகளை மிடையச் செய்வா
ராரெனி லவர்கடாமு மரக்கரோ டசுர ராவார். (௯)

அறிவினா லென்னை யாக வறிந்துகொண் டமைதி யாலே
பொறிவழி யடைத்தெப் போது மென்னையே போற்றிசெய்து
நெறியினால் வழுத்தி வாயா லென்னையே நினைந்து நெஞ்சாற்
செறிதரு மிவர்கள் கண்டாய் தேவரிற் றெரியப் பட்டார். (௧௦)

வேறு.

காலத்தாலும் பொருளிடத்துங் கணித்தற்கரிதா கியவென்
ஞாலத்தார்கள் புகழ்வரிய ஞானயாகீங் களினாலே [னை
கோலத்தால்வே றாகவுமெய்க் குறியாலொன்றா கவுங்கொண்டு
சாலத்தாழ்வா ரவருடைய தன்மையினைநான் சாற்றக்கேள்.

வேறு.

வேதமொழி வேள்விமிகு வேள்விபிதி ரர்க்கே
யீதலுறும் வேள்வியெரி செய்சரு விவற்றாற்
காதலுறு வோர்கள்புரி காரியமி தெல்லா
நாதமுத லாயபொரு ளாயவையு நானே. (௧௨)

ஆயினுல கங்களை யளித்தொளி வளர்க்குந்
தாயினொடு தந்தையவர் தந்தைதலை களுநான்
போயின வினைப்பய னளித்தல்புரி வேறா
னேயுமறை மூன்றினுட னோமெனு மெழுத்தியான். (௧௩)

வேறு.

எல்லார்க்குங் கதியுநா னிருவினைப்பா ரகனுநா
னெல்லார்க்குந் தலைவனா னெப்பொருட்குஞ் சான்றுநா
னெல்லார்க்கு முறைவிடநா னியார்க்குமிடர் தீர்ப்பேனா
னெல்லார்க்கு நல்லேனா னெப்பொருட்கும் வித்துநான். ()

வேறு.

தாங்கிய நீரை யெல்லா மிரவியாய்த் தலத்து நின்று
வாங்குகின் றேனு மீள மழைகளாக் கொடுக்கின் றேனு

மீங்குமெய் யுணரில் யானே யாதலா லியாதொன் றேனு
மாங்கருச் சனைசெய் கின்று ரென்னையே யருச்சிக் கின்றார். ()

ஞானமா யொன்றாய் நின்ற வென்னையே நாநா வாகப்
போன்றீ வினையின் மாந்தர் வேள்வியாற் பூசித் தத்தால்
வானமா முலகை மேறி வாழ்ந்துமண் ணிடையே வீழ்ந்திட்
டூனமா மூசையாலே யிறப்பது பிறப்பு தாவார். (கசு)

மின்னையேய் வேலோ வென்னை மேவுளார் வேண்டிற் றெல்லாம், பின்னையே யென்று தன்றே யளித்தவை காப் பேன் வானோர், மன்னையே முதலாந் தெய்வம் வணங்குகின் றாரு மற்றென், றன்னையே வணங்கு கின்றார் தாமறி யாத தேகாண். (கஎ)

தேவரை யடைந்தோர் தேவ ராவர்கள் பிதிர்க டம்மை
மேவவே யடைந்தோ ரந்தப் பிதிர்களாய் விளங்கா நிற்பார்
யாவர்க ளியாவர் பாலா ரவர்களே யாவ ரொன்று
லாவவென் னடைந்தார் யானே யாவதற் கைய முண்டே ()

போதல ரிலைகாய் நீரே பெற்றதே கொண்டு போற்றிக்
காதலாற் றாய வன்பர் தந்ததே களித்துக் கொள்வ
னூதலா லீவ நோற்ப வுண்புவென் றிவைக ளேகொண்
டேதலா மெனக்காய்த் தந்தா லென்னையே யெய்த லாமால்.()

எப்பொரு டனக்கு மியானொத் திருத்தலா லெனக்கி யாரு
மொப்பர்க ளினியு ரின்று தானென வொருவ ரில்லை
யிப்படி யறியு மன்பர் யுக்கலே யானு நிற்ப
னப்படி யவரு மென்பா லங்ஙன மமர்ந்து நிற்பார். (உ௦)

உன்னையே முதலா யென்பா லொருக்கியென் னுணர்வார் நா
நானையே விட்டுத் தீமை புரியினு மவர்க ளல்லா [ரு
ரோனையேய் புயத்தா யென்றுங் கேடிலா வின்ப மல்லா
தானையே யொருகே டில்லை யெங்கணு மவருக் கைய. (உக)

வணிகரு மற்ற வேளாண் மாந்தரு மகளிர் தாமும்
பணிவொடு மென்னைப் பேணிப் பற்றறுத் திடவ ரொன்று
லணிமுடி யரசர் மேன்மை யந்தண ரடைவ ராகிற்
றணிவரும் பிறவி தீரச் சாற்றவேண் டுவது முண்டோ. (உஉ)

பின்னையே பனைய வாழ்வி னின்றநீ விரும்பி னோடு
மென்னையே வணங்கி யென்று மென்னையே நினைந்தி யாகி
லென்னையே யடைதி யென்றே றியம்பினா னிலங்கு வாட்கட்
பின்னையேய் முறுவ லோடும் பேய்முலை யுண்ட பெம்மான்.()

ஒன்பதாவது மாயாவிகார வத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 9 - க்குத் திருவிருத்தம்-269.

## பத்தாவது
## விபூதியோக வத்தியாயம்.

அவதாரிகை.

[பூர்வம் - எ-அ-கூ-என்னும் இம்மூன்றத்தியாயங்களால் தற்பதார்த்தரூபனான பரமேசுவரனுடைய சோபாதிகரூபமும், நிருபாதிகசொரூபமுங் காண்பிக்கப்பட்டன; அத்தற்பதார்த்தரூபனான பரமேசுவரனுடைய விபூதிகள் சோபாதிகசொரூபத்தின் தியானத்திலும், நிருபாதிகசொரூபத்தின் ஞானத்திலும் உபாயபூதங்களாம்; இப்படிப்பட்ட பரமேசுவரனுடைய விபூதிகளும் எ-கூ-ம் அத்தியாயங்களிலும் சஞ்சேபமாக அருளிச்செய்யப்பட்டன; அவைகளைத் தியானம்,ஞானம்இவற்றின்பொருட்டு விஸ்தாரமாக அவசியமருளிச்செய்ய வேண்டுமாகையால் பரமகிருபாலுவாகிய ஸ்ரீ பகவான் அருச்சுனன் கேளாதிருக்கவும் தமது விபூதிகளை விஸ்தாரமாக இதில் அருளிச்செய்கின்றார்.]

சங்கிரகார்த்தம்; இதில், பரமான்மாவினது ஏகபாதத்தில் சர்வவிசுவமும் உளதென்னும் சுருதிப்படி முக்கியாதிகாரி பரிச்சின்ன திருஷ்டியைப் பரித்தியாகஞ்செய்து பரமான்மாவைச் சர்வஜகத்திலும் வியாபகமாகத் தரிசித்தற்குரிமை கூறப்படும்.

அரிய வெனது நிலைமையைமுன் பளவே சொன்னே
னதுகேட்டே, யுரிய மனனிற் களிகூர வுவவா நின்ற வுனக்
கதனை, விரிய மொழிவன் கேளென்று வேதத் தலைக்கே விற்
றிருக்குங், கரிய முகிலான் செவ்வாயாற் காதல் கூரக் கட்டு
ரைப்பான். (க)

வே று.

தேவர்களு முனிவர்களு மசுரர்களுஞ் சித்தர்களும்
யாவர்களு மறியாவென் பெருமையையென் பழைமையினுற்
சாவதையும் பிறப்புமிலா வென்னையறியத் தகுவாரப்
பாவவினை யறவிட்டுப் பரகதியை யடைகிற்பார். (௨)

புத்திபொறை தவஞானம் புகழ்பழிதீக் கொலையொழிவு
சத்திபநற் சமைதமைநற் செயந்தானஞ் சாவுபிறப்
பத்திகொடு நிறைவின்ப மிடரஞ்ச லஞ்சாமை [வாய்.
யித்தனையுந் தோன்றுவதென் னிடனின்றே யெனத்தெளி

வே று.

எனைத்து விதத்த தவத்தெழு வோரு
மனைத்தையு நிற்ப நடப்பன வாக
வனைத்த மனுக்களு நால்வரு மென்ற
னினைப்பி லுதித்தன ரொன்பது நேர்வாய். (௪)

இப்பரி சென்னை யறிந்தவ ரென்பால்
வைப்பர்கள் சிந்தையை மன்னுயி ரோடு
மப்பரி சேயறி யாரையு மாங்கே
யுய்ப்ப ருரைப்ப ருவப்பர் களிப்பார். (௫)

நிரந்தர மிப்பரி சென்னை நினைப்பார்க்
கரந்தை கெடுத்தெனை யாயும னத்தைப்
புரந்து கொடுத்தவர் தேர்பொரு ளாயே
வரங்களு முற்ற வளித்த வரத்தால். (௬)

மற்றவர் நெஞ்சின் மயக்கிரு ளெல்லா
மற்றமின் ஞான விளக்கொளி யாலே
பற்றறு விப்ப னெனப்பழை யோன்முன்
கொற்றவன் மற்றிது கூற வலித்தான். (௭)

வே று.

பேத முடைய பிறப்பகன்றன் பிறழா நிறைவு பெருஞ்செல்
மாதி தேவன் பரப்பிரம மழிவில் லாதா னரணங்க [வ
ளோத வரிய வுத்தமனிங் கெல்லா முயிர்ப்பா னெனவுன்னை
நீதி முனிவ ருரைத்தவெலா நீயே யருளிச் செய்தனையால்.

எல்லாப் பொருட்குந் தளிவித்தே யெல்லாப் பொருட்கு மீசனே, நல்லார் புகழுந் தேவர்கட்கு முலகங் களுக்கு நாயகனே, யல்லா லறிவா ரானொன்னை யானே யறிவ னென வருளுஞ், சொல்லா லுளவப் பொருளெல்லா மெய்யே யானுந் துணிந்தொழிந்தேன். (௯)

வேறு.

மெய்வகைய வுலகினிடை வேறுவே றாய்நிற்ப
தெவ்வகைய வுருவமுனைச் சார்ந்ததென வறிகில்லே
னவ்வகைய வெப்பொருளு மொளியாம லடியேனுக்
குய்வகைய நெறியாக வுரைத்தருளென் றேயுரைப்பான். (௧௦)

பருகாவின் றேற்குனது திருவாக்காம் பாமிருத
மொருகாலு மார்கின்ற திலையடியேற் குரையென்ன
வருகால நிகழ்காலஞ் செல்கால மென்றிவற்றிற்
பெருகாத குறையாத பெருமாயன் பேசுவான். (௧௧)

வேறு.

இறந்தவென் விபூதிக்கோ ரெல்லை யின்மையிற்
பிறந்தன முடிவுறப் பேச வொண்ணுமோ
வறந்தரு மனத்தினா யவற்றி லேசில
சிறந்தன கூறுவ னென்று செப்புவான். (௧௨)

வேறு.

ஓதிற் பெருகும் பூதங்கட் கெல்லா மிதயத் துள்ளுயிர்நான்
பேதித் திடுமிப் பொருட்கெல்லாம் பிறப்பு நிலைகே டாவேனா
னாதித் தியரில் விட்டுணுநான் மருத்து வரின்ம ரீசிநான்
சோதிக் கதிரி லொளிரிரவி யென்று சொல்லப் படுவேனான்.

வேறு.

சந்திரனா னுண்மீனிற் சாமநான் மறைகளினி
லிந்திரனான் றேவர்களி லிந்திரியங் களின்மனநா
னெந்திரமா முருவுகளிற் சேதனைநா னுருத்திரரின்
மந்திரமாஞ் சங்கரனா னியக்கரில்வைச் சிரவணனான். (௧௩)

மலைகளின்மா மேருவுநான் வசுக்களிற்பா வகனுமியான்
றலைவர்களி லறுமுகனான் சலநிலையிற் சாகரநா

னிலையமிலா யாகத்திற் செபயாக மாவேனு
னிலையுடைய வெனுமிவற்றி லிமவானுய் நின்றேனன். (௧௫)

பெருமுனியிற் பிருகுவுநான் புரோகிதரிற் பிதகனுன்
மருவியவாக் கவற்றோருநான் மரங்களிலே யரசதுநான்
பொருவரிய நாரதனுன் புத்தேண்மா முனிவர்களிற்
றிருவியல்கந் தருவர்களிற் சித்திரத்தே ரவனுமியான். (௧௬)

சித்தர்களிற் கபிலமுனி தேசிகளிற் கடற்பிறந்த
வுத்தமமாம் புரவியெனு முச்சைச்சி ரவஸானே
யத்தமுடை விலங்குகளில் யானையிரா வதமாவேன்
வித்தகமா நூடப்பிறப்பில் வேல்வேந்த ராவேனுன். (௧௭)

வேறு.

படைகளில் வச்சிரம் பாம்பில் வாசுகி
யடைவரு மனந்தனன் னுகர் தங்களிற்
கொடையயில் சுரபிகோ குலத்திற் கூறிய
வடைவொடு மினவெலா மியானென் றேயறி. (௧௮)

வருணனு மியமனும் வனாவில் காமமும்
பெருமைசெய் யசுரிற பிரக லாதனு
மிருமையி னெண்ணலிற் காலம் யானெனச்
செருமலி தோயினுய் தெளியத் தேறுவாய். (௧௯)

பொராவருங் கருடனுன் புள்ளின் மாக்களில்
விராவரு மடங்கனுன் வாயு வேகநா
னிராமனு னெறிபடை வீரர் தங்களிற்
கராமுநான் மீன்களி லாற்றிற் கங்கைநான். (௨௦)

வேறு.

மிக்க சொற்றொகையில் வாதநா னரிய விச்சை யிற்பிரம
விச்சைநா, னக்கரங்களி லகாரநா னழிவில் கால நானனுவு
மன்றியே, தக்கதொந்துவ சமாச நானிரு வினைப்ப யன்கடரு
வேனுநான், மிக்க மன்னுயிர்க ளைக்கொல் வேனுமவை யுற்ப
வஞ்செயு வேனுநான். (௨௧)

பெண்க ளிற்புகழ் திருசொன் மேதைபொறை திண்மை
பேசுநினை வென்னவே, யெண்ப முத்தவெழு வோருநா னிரு

துவாறில் வந்தவினை வேனிறு, னண்பு நற்பெரிய சாம நாலு
ரிய சாம மேழினு நலத்தினான், மண்க ளிப்பவரு திங்களிற்
புகழ நின்ற மார்கழியு மற்றுநான். (உஉ)

வே று.

கல்லாருந் தோளுடையாய் கவிகளிற்கா யத்திரிநான்
றொல்லாயங் களிற்சூது துணிவார்பாற் றுணிவதுநான்
வெல்வார்பால் வெற்றியுநான் மிகுதிறலோர் யாற்றிறகா
னல்லார்பா னன்மையுநான் ஞானிகள்பால் ஞானமுநான். ()

கண்ணனுநா னிபாதவரிற் கவிகளிலே யுசனுநான்
றண்ணளிசேர் பாண்டவரிற் றனஞ்சயனு நின்றேன்
விண்ணுலவு முனிவர்களில் வேதவியா தனுநானே
யெண்ணரிய மறைவுகளி லியம்பாமை யாவேனான். (உச)

வே று.

இரும்புவன மனைத்தினுக்கும் வித்துநா னெனைப்போக்கி யாது மில்லை, வருந்தினுமென் பெருமைக்கு வரம்புரைக்க முடியாது வகுத்துச் சொன்னேன், பெருந்திருவை யுடையனமெய்ப் பெருமுயற்சி யனவென்று பேசுமிந்த, வரும்பொருள்க ளனைத்துமென தொளியினால் வருவனவென் றறிதி நீயும். (உ௫)

வே று.

பலவிளி யுரைத்தென் னிந்தப் பல்லுயி ரனைத்து மெல்லா
வுலகமு மொடுங்கி நிற்ப தென்னிலோ ரிடத்தி னுள்ளே
கலவல னவற்றே றென்றான் கஞ்சனு ருயிர்போய்த் துஞ்ச
வலைகடல் வளரா தேபோர்ந் தாயர்பால் வளர்ந்த பெம்மான்.

பத்தாவது விபூதியோக வத்தியாயம் முற்றிற்று.

---

ஆக அத்தியாயம் 10-க்குத் திருவிருத்தம்-295.

---

## பதினொன்றாவது
# விசுவரூப வத்தியாயம்.

### அவதாரிகை.

[பூர்வம் சர்ஹம் அத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் நாநாப்பிரகாரமான விபூதியை அருளிச்செய்து அதன் இறுதிக்கண் "இந்தப் பல்துயி ரனைத்து மெல்லா, வுலகமு மொடுங்கி நிற்ப தென்னிலோ ரிடத்தி னுள்ளே" என்னும் இவ்வசனத்தால் பரமேசுவரனுடைய சர்வ விசுவான்மக சொரூபத்தை அருளிச்செய்தனர். அதனைக் கேட்டதனால் பரமமான சந்தோஷ மடைந்தவனான அருச்சுனன் பரமேசுவரனுடைய சர்வவிசுவான்மகசொரூபசாட்சாத்காரத்தின் இச்சை நண்ணினவனைப் பிரார்த்தித்து நிற்கவும் ஸ்ரீ பகவான் அவனுக்குத் திவ்விய சட்சுஸ்லையளித்துத் தமது விசுவான்மகசொரூபத்தைத் தரிசிப்பித்து அதன் அருமை, பெருமைகளை இதில் அருளிச்செய்கின்றார்.]

சுருளார் கின்ற துழாய்முடியாய் சொல்லு மனமுந் தொடர்வரியா, யுருளார் சகட மிறவுதைத்தா யுயிர்கட் கெல்லா முள்ளுயிரோ, யிருளார் பவத்தே கிடந்துழைக்கு மென்பா லிரங்கி நீயிசைத்த, வருளா ரமுதென் செவிகளா லாரப் பருகி யயர்வொழிந்தேன். (க)

தெரியா வகைநீ யெங்குமாய் நின்ற வந்தத் திருக்கோல, மரியாய் மெய்யே யடியேற்குக் காண லாமோ வெனவன் பாற், பிரியா நின்ற சிந்தையொடும் பார்த்தன் வினவப் பழமறைதேர், கரியா னவனுக் கப்பரிசே காட்ட வேண்டிக் கட்டுரைப்பான். (உ)

வேறு.

எண்ணி லியற்கையு தெண்ணி னிறத்தது
பண்ணி யொருத்தர் படைத்தறி யாதது
விண்ணி னியற்கை சுருங்க விரிந்தது
கண்ணி னளப்பரி தாயது காணாய். (ங)

மருத்துவர் சூரிய ரட்ட வசுக்க
ளுருத்திர ரென்னிடை யேயுளர் யாரு
மருத்திசெ யற்புத மாய வனேகங்
கருத்துற வென்னிடை யேயுள காணாய். (ச)

என்றரு ளிச்செய் தவன்க ணிரண்டு
நன்றறி யாவென ஞான மளித்திட்
டன்றவ னுக்கருள் செய்வகை யேயாய்
நின்ற வருக்கறி யாவகை நின்றான். (௫)

வேறு.

அங்கு மால்கொள் கோலமிங் களந்து கூற லாகுமோ
கொங்குண் மாலை யாடைசாந்து கொண்ட கோல மேவியே
யெங்கு மாகி யெல்லையின்றி யெண்ணில் கோடி பல்கதிர்
மங்குல் வானில் வந்துதித்த தொக்கு மற்ற தன்கணே. (௬)

வேறு.

ஏய்வகைய தாள்களொடு தோள்களு மனேகஞ்
சாய்பெற வணிந்தவணி தானுமு னனேகம்
வாய்களு மனேகமொளிர் வாண்முக மனேக
மாயுத மனேகமெழு மற்புத மனேகம். (௭)

அவ்வகைய மாயனமர் கோலமத னுள்ளே
யெவ்வகைய வாயபொரு ளியாவுமெதிர் காணு
வுய்வகைய னாயின னெனுவுவகை கூரச்
செய்வதறி யாவிசய னிவ்வகைசெய் தானால். (௮)

மண்ணுற வணங்குமயிர்க் குச்சுட னிரைக்குங்
கண்ணுமன முங்களைய நின்றுகை முகிழ்த்தே
யெண்ணுமுல கங்களையு மியாவரையு மேனாட்
பண்ணுமவன் முன்புசில நின்றுபகர் வுற்றான். (௯)

வேறு.

தேவரும் வணங்கு தேவ நின்றிருக் கோலத் துள்ளே
யாவரு மெல்லை காணாப் பொருளெலா மிசையக் கண்டேன்
மூவரின் முதற்புத் தேளை முனிவர்க ளோடுங் கண்டேன்
மேவரு நாகங் கண்டேன் விண்ணவர் குழாமுங் கண்டேன். ()

கண்களும் வயிறுந் தோளு முகங்களுங் கருதி நோக்கி
லெண்பல வுடைய வாய வுருவுக ளனேகங் கண்டேன்
றண்கதிர் முடியுந் தண்டுஞ் சக்கரப் படையு மேந்தி
யொண்கதிர் கனலோ டொன்றா யனையநின் னுருவி னுள்ளே.

வேறு.

இந்தவுரு வென்னவுரு வென்றறியு கில்லே
னந்தமறி யேனடுவு மாதியு மனைத்து
நந்தலறி யாததனை நான்மறையு நாடித்
தந்தபொரு ளாயதனை மாயைதரு சார்பை. (கஉ)

என்றுமுள தாயதை யியற்றருமமெல்லா
நின்றுபிற ழாவகை நிறுத்துநெறி வாழ்வைச்
சென்றுகுறை யாததனை யென்பழைய தேவைக்
கன்றுதொட ராப்பரிசு நின்றெனெதிர் கண்டேன். (கங)

வலந்தரு திறத்தொடு வருங்கதி ரிரண்டே
யலர்ந்தெழ விழிப்பதை யடுங்கன னெருப்பை
மலர்ந்தெழு முகத்ததை மயங்கவுல கெங்குங்
கலந்துசுட லுற்றதை வியந்தெனெதிர் கண்டேன். (கச)

நிலத்திெனாடு வானுற நிமிர்ந்துதிசை நேர்போய்
விலக்கமற நீயுனது மேனியை விரித்தா
லலக்கணடை யாதவர்க ளாரடைய வையா
கலக்கமுறு கின்றவுல கங்களிவை காணாய். (கரு)

வணங்கவிமை யோர்களரு மாதவர் வழுத்தக்
கணங்கொடு வியந்துபுகழ் சித்தர்தொகை கண்டே
னுணங்குமுயிர்த் தானவர்கள் கந்தருவ ருள்ளோ
ரிணங்கியின மொன்றறிகி லாமையெதிர் கண்டேன். (கசா)

வானடைய விம்மிவரு ணம்பல வுடைத்தாய்ப்
பேய்நடைய வாயபிறை போலெயிறு பேழ்வாய்
தானுடைய வாயபன் முகம்பல தழைக்கும்
யானடைய லாம்வகைய தன்றிவ்வுரு வெந்தாய். (கஎ)

வேறு.

அஞ்சமிவ் வுலகுக் கெல்லா மாய்நின்ற தன்மை கண்டே
னுஞ்சின னெனினு மற்றுன் னுருவுறக் காணக் காண
நெஞ்சமு நடுங்கா நிற்க நிலையிலை திசையுங் காணே
னஞ்சலென் றருள வேண்டு மகிலமு மாய வெந்தாய். (கஅ)

நூற்றுவர் தாமுந் தங்கள் சேனையு மவர்கட் காக
வேற்றெதி ரரசர் தாமு மென்படை தாமு முன்றன்

கூற்றுற மெயிற்றிற் பட்டுக் குறையுட லாகி நின்று
காற்றுறு தீயி னன்ன முகங்களில் வீழக் கண்டேன். (சக)

ஓதரு நதிக ளெல்லாங் கடலடைந் தாற்போ லுன்னிற்
போதரு பொருள்க ளெல்லா நின்னுளே புகுதக் கண்டேன்
தீதனில் விட்டில் பாய்ந்தாற் போலநின் முகங்க ளுள்ளே
மாதவ வுயிர்க ளெல்லாம் வீழ்ந்துமாய் குநவுங் கண்டேன். ()

ஒளியினு லுலக மெல்லா மொழித்தவை யூண்போ தாமல்
வெளியினு நீட்டி நீட்டி வெறுஞ்சுவை கொள்ளா நின்றாய்
தெளிகிலே னுன்னை யுன்றன் செய்கையுந் தெரிக்க மாட்டே
னளியினு லடியேற் குன்னை யுள்ளவா றருளிச் செய்வாய். ()

என்றவன் வணங்கிக் கேட்ப யாவுமா யெல்லை யின்றி
நின்றவ னுரைப்பா னுன்னை யொழியநின் றவரை யெல்லாங்
கொன்றுயிர் பருக லுற்றேன் கடையுகங் குறுக லுற்ற
வன்றல கடைய மாய்க்கு மவனியா னறிநீ யையா. (உஉ)

வேறு.

இறந்தாரோ யெனக்கருதிங் கிவர்களெலா மென்னலே
யறந்தானு மதுநீயே யாங்கவரைக் கொன்றேயேற்
சிறந்தாய வரசினையுஞ் செயத்தினில்வாழ் திருவினையும்
பிறந்தார்கள் பெறுதபெரும் புகழினையும் பேணென்றான். ()

வேறு.

இவ்வகை மொழியக்கேட்ட விசயனென் செய்தா னென்னிற்
கைதலை மிசைய வாகக் கட்டுரை குழறக் கண்ணீர்
பையவே நெஞ்சிற் சோரப் பயத்தொடும் பரிவி னோடு
மைவரை யெடுத்த வள்ளல் பெருமையை வழுத்த லுற்றான்.

வேறு.

ஞானமுத லிந்தியங்க ளனைத்திற்கு நாயகனே
யூனவினைத் தளையறுப்பா யுன்னுடைய புகழ்கேட்கில்
வானவருஞ் சித்தர்களு மனங்களித்து மகிழ்வெய்தத்
தானவரு மரக்கர்களுஞ் சாய்துயரப் படுவர்களால். (உ௫)

வேறு.

கையும் பதமுந் திருவாயுங் கண்ணுஞ் செய்ய கருமுகிலே
யையைம் பொருளு மறிவரியா யயனுர் தாயே யந்தமிலாய்
மெய்யும் பொய்யு மில்லாதா யெல்லா மாகி விரிந்தாயே
யுய்யும் பரிசு நினைந்தவர்க ளுன்னை வணங்கா தவருளரோ. ()

ஆதி தேவ னுவாய்நீ யாக்கைக் கமைந்த வாருயிர்நீ
யேது மறியப் படாதவனீ யெல்லாங் கடைக்காற் புகலிடநீ
யோதி னுணர்கின் ருயுநீ யுணர்வா லுணரப் படும்பொருணீ
நீதி யமனு யழிப்பாய்நீ நீருங் காற்று மாவாய்நீ. (உஎ)

ஏயும் பரிசிவ் வுலகெல்லா மென்றும் பிறப்பித் திடுகின்ற
தாயும் பிதாவு மாவாய்நீ தந்தை தந்தை தாதையுநீ
யாயும் படியே யல்லாத வையா வுன்னை யடியேனென்
மாயும் பிறவித் துயர்தீர நூறு யிரக்கால் வணங்கினேன். ()

என்பே ரிடும்பை கெடும்வண்ண மின்னந் தொழுதே னெந்தாயுன், முன்பே தொழுதே னுன்னுடைய பின்பே முறையால் வணங்கினனு, லன்பே யடியே னுருயிரோ யகலா விந்தப் பெரும்பிறவி, வன்பே கெடவுன் றனையெங்கு மறித்து மறித்தும் வணங்கினனே. (உகூ)

வேறு.

தேவ தேவ நின்னில்வேறு தேவரோது செய்திடும்
பாவமே தறங்க ளேது பற்றி யாது வீடேது
சாவ தேது வாழ்வதே தனைத்து மாய தன்மைநீ
யாவ தேது மொன்றுநா னறிந்தி லேனென் மாயனே. (ஙூ)

நீதி வேதம் வானுளோர் நிலத்துளோர்நி னைந்துநைந்
தோதி யோதி யுட்கசிந் துணர்ந்து முன்னை முன்னமே
சாதி பேத மாகிவாழ் சராசரங்க ளுக்கெலா
மாதி மூல மென்றுநா னறிந்தி லேனென் மாயனே. (ஙூக)

சாயை போலும் வாழ்வு மாடு வீடுதந்தை தாயெனும்
பேயை யேறி மாறியே பிறந்தி றக்கு மீதெலாந்
தூயை யாகி யாதுமோர் தொடக்கி லாது நின்றநின்
மாயை யாவ தென்றுநா னறிந்தி லேனென் மாயனே, (ஙூஉ)

ஏறு மல்லு வென்றுகுன் றெடுத்த வண்ண மெண்ணியே
கூறு மல்ல தீரவும்பர் கூறுகின்ற கொண்டலே
வேறு மல்லை யொன்று மல்லை மெய்ம்மைகூறு மப்பொரு
ளாறு மல்லை யென்றுநா னறிந்திலேனென் மாயனே. (ருரு)

யாதவாவென் மைத்துனு வடாவ சோதை யின்னுயிர்க்
காத லாய காலியாய கண்ண கண்ண வென்றுநா
னோத லாவ தன்றியே யுரைத்த தீமை யாவையு
மாத காத தென்றுநா னறிந்தி லேனென் மாயனே. (ருசு)

வே று.

என்னுடைய தோழனென வேகருதி யாது
முன்னுடைய மேன்மையினை யொன்றுமுண ராதே
வன்மையினி னின்மொழி மறுத்தெதி ருரைத்த
புன்மொழிக ளானவை பொறுத்தருளு கண்டாய். (ருரு)

உண்ணல்வினை யாடுத லுறங்குத லிருத்தல்
புண்ணலுறு போதுகளி லுன்பழைமை தன்னை
யெண்ணியறி யாமையினில் வந்தபிழை யெல்லாங்
கண்ணகரு ணாகர பொறுத்தருளு கண்டாய். (ருசு)

வே று.

உண்டாய வுலகனைத்து மீன்றாய் நீயே யெவராலு முன்னுண்மை யுணர்ந்து கூறிக், கொண்டாடப் படுவாய்நீ மெய்ம்மை நல்கிக் குருவாகிக் குற்றங்க ளர்க்கின் றாய்நீ, யென்றுலு மறையனைத்து முன்னின் மிக்கா ரில்லையென நின்றேது வெடுத்துக் காட்டக், கண்டாலு நின்பெருமை காண மாட்டார் கண்ணிலா தவர்வேறு காண்ப துண்டோ. (ருஎ)

அறியாத பருவத்து மகன்செய் குற்ற மருந்தாதை பொறுத்தெனவு மாவி போலப், பிறியாத தோழன்செய் குற்ற நட்பிற் பெரியோர்கள் பொறுத்தெனவும் பேதை யேனைய்க், குறியாது செய்தவருங் குற்ற மெல்லாங் குணமாகக் கொண்டருள வேண்டு மென்றே, வெறியாரு மலர்ப்பதங்க ளிடையே வீழ்ந்து வேண்டிக்கொண் டிவையின்னும் விளம்பலுற்றான். (ருஅ)

வே று.

பண்டு கண்டறி யாப்பழுங் கோலத்தைக்
கண்டு நெஞ்சங் கலங்கிக் களிக்குமாற்
றண்டு நீண்முடி சங்கொடு சக்கரங்
கொண்ட கோலத்தை யேகொண் டருளுவாய். (ருக)

வே று.

என்றவ னுரைத்திட லு மவ்வுருவு மொன்றாய்
நின்றவ னுரைத்தருளு வானிறை யொளித்தாய்
முன்றரு முதற்பொருளு மாய்முழுது மாய
வென்றனுரு வத்தினைமுன் யாவரறி கிற்பார். (சo)

வேதநெறி யாலுமிகு வேள்விகளி னாலு
மாதவம தாலுமகிழ் தானவகை யாலுங்
காதலர்கள் காணமுடி யாவடிவு கண்டா
யேதமறி யாவெனது யோகவலி யாலே. (சக)

இப்பரி சுரைத்தருளி யீரிருகை யேயா
யப்பழைய கோலமது வாயருளி யங்கே
மெய்ப்பய மகற்றிவிச யற்கினைய வேறே
யொப்பவரின் மிக்கவரி லாதவ னுரைப்பான். (சஉ)

வே று.

கண்டவ ரில்லை நீமுன் கண்டவிக் கோலங் காண
வண்டரும் விரும்பா நின்று ராதலா லன்பு கூருந்
தொண்டரு மாகி யென்னை யன்றியோர் தொடக்கி லாமை
கொண்டவ ரடைவ ரென்றான் கோகுல மேய்த்த கோமான்.

பதினோன்றாவது விசுவரூபவத்தியாயம் முற்றிற்று.

---

ஆக அத்தியாயம் 11-க்குத் திருவிருத்தம் 333.

---

## பன்னிரண்டாவது

# பக்தியோக வத்தியாயம்.

[பூர்வம் கக-ம் அத்தியாயத்தினீற்றில், "என்னை யன்றியோர் தொடக்கிலாமை கொண்டவரடைவர்" என ஸ்ரீ பகவான் பொதுப் பட வருமைதோன்ற அருளிச்செய்தமையின், "என்னை" என்னும் மொழிக்குப்பொருள் ஸாகாரவஸ்துவோ? நிராகாரவஸ்துவோ என அருச்சுனனுக்குச் சந்தேகமுண்டாயிற்று; இங்ஙனம் உண்டாதற்கு ஸ்ரீ பகவான் பூர்வம் ஆங்காங்கே ஸாகாரவஸ்து, நிராகாரவஸ்து இரண் டனையும் உபதேசித்திருப்பதே காரணமாம்; இவ்வாறான இருவகை உபதேசங்களின் வியவஸ்தைகளும் அதிகாரிகளின் பேதத்தாலாம் எனக்கொள்ளற்பாலனவாமாதலால், முமுட்சுவாகிய நான் நிராகார வஸ்துவைச் சிந்திக்க யோக்கியனோ? ஸாகாரவஸ்துவைச் சிந்திக்க யோக்கியனோ? என்றிவ்வாறு தனது அதிகார நிச்சயத்தின்பொரு ட்டு ஸகுண, நிர்க்குண வித்தைகளின் விசேஷத்தன்மை யறிய இச் சை நண்ணினவனாய் அருச்சுனன் பிரார்த்தித்துநிற்க, அவனுக்கு ஸ்ரீ பகவான் ஸாகாரம், நிராகாரம் இரண்டன்முறைமைகளைச் சாதன ஸகிதம் இதில் ஸ்பஷ்டஞ் செய்கின்றார்.]

சங்கிரகார்த்தம்; "உணர்கிற்பாருக்கியான் மிகவினியன்" என்று இந்த கஉ-ம் அத்தியாயத்தின் அந்தியச்செய்யுளில் அருளிச்செய்த பகவானுடைய வசனமானது, "அன்னவனல்லனெனக்கவனுக்கே, நன்னலனுகுவனுனும்" என்று முன் எ-ம் அத்தியாயத்தில் கஙு-வது செய்யுளால் சூசிப்பித்தபொருளின் உபசம்மாரரூபமாம்; ஆதலால், சோபாதிகமான சகுணப்பிரமத்தியானத்தின் பரிபக்குவத்தின் பின் னர் அகண்டாகாரவிருத்திரூப அநந்ய பக்திவிஷயக நிரூபாதிகமான நிர்க்குணப்பிரமத்தைச் சிந்தனஞ்செய்பவனும், பிராணிகளைத் துவே ஷியாமைமுதலிய குணங்களோடு கூடினவனுமாய் நிரந்தரம் சிர வண, மனன, நிதித்தியாசனஞ் செய்யாநிற்கும் உத்தமாதிகாரிக்கு வேதாந்த வாக்கியங்களின் பொருளாகிய தத்துவசாட்சாத்காரம் அவ சியமாக வுண்டாகாநிற்கும்; அதனால் அவசியமாக முத்தியடையப் படும் என்பது உபாசனுகாண்டரூபமான இம்மத்திய ஷட்கத்தால் சித்திப்பது.

ஏயநா னெதிரோ கண்ட வுருவமே யிசைகிற் பாரோ, தூயநான் மறைக்கு மெட்டாப் பொருளையே தொடர்கிற் பாரோ, தாயனும் பெரியோ னென்று தனஞ்சயன் வினவத் தானே, ராயனுய் நிரைகண் மேய்க்கு மாயன்வே றருளிச் செய்வான். (க)

மன்னநீ காண நான்முன் காட்டிய வடிவை நெஞ்சா, [லா லுன்னல்வாய் மொழியி னாலே யுரைத்தல்செய் பவர்க ளெல் லென்னலாற் பிறிதொன் றெப்தா ரியாரினு நல்ல ரிங்குச் சொன்னவ ரன்றி மற்றை யவர்கடந் துறையுங் கேளாய். (உ)

உரைசெயற் கரிதாய் நெஞ்சி னுணர்விடப் படாதா யெ ங்கும், புரையறக் கலந்து போக்கு வரவின்றிப் பொலிந்த தொன்றைக், கரைசெயற் கரிய வாய புலன்களைக் கடந்து காண்பா, னரசமற் றியானே யென்னி னன்னிய மென்ன லாமோ. (ங.)

காரண மிறந்தொன் றிற்குங் காட்சியிற் படாத தொன்றைச் சேர்பவர் வருத்தம் வேறு செப்பிட லாவ தன்று லோர்வழி திகுதான் வாழு முயிர்களா லாவ தொன்றோ வாரவர் பெருமை தன்னை யளவறுப் பவர்க ளையா. (ச)

யாவர்கள் சிலவ ரெல்லா வினையுமென் கண்ணே விட்டிட் டியாவர்த மறிவென் பாலே யாக்குவா ரவர்க டம்மைச் சாவது முதலா யுள்ள துயர்க்கட னின்றுந் தாங்கி யாவர்க ளேனுங் காலஞ் சிறிதிலே யெடுக்கின் றேனான். (ரு)

வேறு.

மெய்யுற வுன்னை யென்னிலே வைத்தா லென்னில்வே றின்றியொன் றுதற், கையுற வில்லை யதுசெய முடியா தாயி னப் பியாசமே பயில்வாய், பொய்யற வதுவும் புரிகிலா யெனி லுன் வினைகளென் பொருட்டினாற் புரிவாய், செய்யுமவ் வினைக ளப்படிச் செயாயேல் வினைப்பயன் றவிரவே செய் வாய். (சு)

வேறு.

அத்தி ஞானம் வினையி னதனினு
மெய்த்தி யான மிகுமதின் மேலதாம்

வித்தி ளுய வினைப்பயன் வீடுதல்
சித்த சாந்தி யதற்பின் செறியுமால். (எ)

வேறு.

இருவகை யுயிர்க்கு மினியனு யின்ப துன்பமியா னென்ன தென் றறியா, தொருபொரு ளாலுங் குறைவுபா டின்றி யுள்ளமு மொருவழிப் படரப், பொருவருந் துணிவுங் கருணையும் புரிந்து புலன்றெறி புணர்வையென் பாலே, மருவி நின லொழுகு மியோகியென் பவன்காண் மன்னயற் றெனக் குவே றினியான். (அ)

உலகமுந் தானும் வேறிலா மையினற் றுறெரு பொருட்குமஞ் சாதே, யலகிலா வுயிர்கட் கினியனு தலினு லவை களுந் தன்னையஞ் சாதே, புலவரா னவர்கள் புகழுவே கிகழ் வான் பொருமையு மயக்கமுங் துளிப்பு, மிலகிடா நெஞ்சத் தியோகியென் பவன்கா ணியாரினு மெனக்குவே றினியான்.()

ஒன்றினு மாசை யின்றியிக் தியங்க டம்வழி யொழுகிடா தொருக்கி, நன்றியி னேடு தீங்கினி னைத்து நல்வினை தீவினை துறந்து, பொன்றினு னோவுற் றழுதல்செய் யாதே பூரித்தல் வாடுத லின்றி, யென்றுமுன் பிழந்த பொருட்கிரங் காதே வரும்பொருட் கிச்சைசெய் யாதே. (க0)

வேறு.

இகழ்பவர் நட்டா ரென்ப தின்றியே யின்ப துன்பந்
திகழுவ மான மானஞ் சீதமோ டுழலின் றீமை [றி
புகழ்பழி யிவற்று ளொத்துப் பொருந்திவா ழிடமொன் றின்
நிகழ்தரு மியோகி கண்டாய் மற்றெனக் குரிய நேரான். (கக)

செயத்தகு வதுவு மாகிச் சேர்ந்தவர் செல்ல றீர
வுயக்கொடு போவ் தாய பொருளையா னுரைத்த வண்ண
மியற்பட வுணர்கிற் பாருக் கியான்மிக வினிய னென்றுன்
மயக்கற வொருவ ராலு மறிவரி தாய மாயோன். (கஉ)

பன்னிரண்டாவது
பக்தியோக வத்தியாயம் முற்றிற்று.

---

ஆக அத்தியாயம் 12-க்குத் திருவிருத்தம் 360.

---

பதின்மூன்றாவது

# க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞவிபாகயோக வத்தியாயம்.

[பூர்வம் க-தொடங்கி, சு-ம் அத்தியாயபரியந்தமான பிரதம ஷட்கத்தில் துவம்பதார்த்தநிரூபணமும், எ-தொடங்கி, கஉ-ம் அத்தியாயபரியந்தமான துவிதீயஷட்கத்தில் தற்பதார்த்த நிரூபணமுஞ் செய்து இப்போது அந்தச் சோதித தத்துவம் பதார்த்தங்களின் அபேதரூபமான மகாவாக்கியத்தின்பொருளை அருளிச்செய்பவராய்த் தத்துவஞானத்தைப் பிரதானமாகவுடைய கங-தொடங்கி, கஅ-ம் அத்தியாயபரியந்தமான திரிதீய ஷட்கம் ஸ்ரீ பகவான் கூறத்தொடங்கினர்]

சங்கிரகார்த்தம்; இதில் தத்துவஞானோபதேசநிமித்தம் பிரகிருதி புருஷர்களின் விவேகம் முறையே அருளிச்செய்து ஆன்மாவின் அசங்கத்தன்மையை நிரூபித்துப் பிரகாசத்வரூப வதுவினாலும் ஆன்மதேவனிடத்து ஒன்றோடுஞ் சம்பந்தமின்மையுளது என்னும் பொருளை அநுமானவாயிலாக ஸ்ரீ பகவான் சூசிப்பிப்பர். அவ்வநுமானமாமாறு, க்ஷேத்திரக்ஞனை ஆன்மா க்ஷேத்திரத்தின் தர்மங்களோடு சம்பந்தப்படான்: அப்படியே க்ஷேத்திரத்தின் பேதத்தால் பேதத்தையும் அடையான்: அந்த க்ஷேத்திரங்களின் பிரகாசகமாவதால்: யாதொன்று யாதொருவஸ்துவின் பிரகாசகமாமோ அது அந்தப் பிரகாசிய வஸ்துக்களின் தர்மங்களோடு சம்பந்தப்படமாட்டாது: அப்படியே அந்தப் பிரகாசிய வஸ்துக்களின் பேதத்தால் பேதத்தையும் அடையமாட்டாது: சூரியன்போல என்க.

விடம்படு பணமுடி யரங்கின்மிசை யேறி
நடம்பயிலு நாயகன் மறித்துமிரு ஞானஞ்
சடம்படு-பிணிப்பிறவி யென்றிவை தரிக்கு
முடம்பொடுயி ரானவை யுரைத்தருள லுற்றான். (க)

உடம்பென வுரைப்பதுயி ருண்பவைக ளெல்லா
மிடம்பட விளைப்பதெதிர் காண லுறு மீதாற்
றிடம்படவு மற்றிது தெரிந்துணரு மெய்யைக்
கடம்படு முயிர்ப்பொரு ளெனப்பகர்வர் கற்றோர். (உ)

மன்னவுடல் யாவையினு மன்னியறி வாய்நின்
றுன்னுமுயி ரியானிவை யிரண்டிணையு மோர்காற்

றன்மையினி னியாதறியு மற்றதனை ஞான
மென்னவுணர் வாய்து வெனக்குமிசை வாமால். (௩)

மற்றிவ்வுட றன்னின்வா வுங்குணமும் வந்தாங்
குற்றமை விகாரமு முயிர்த்தொகுதி தானு
நற்றவர்கள் வேறுபட வோதினர்க ளனுஞ்
சொற்றொகையி னுலிவை சுருங்கமொழி வன்கேள். (௪)

எப்பொருளி னும்பெருகி யெங்குமுள வாகு
மப்பெரிய பூதமவை யைந்துமவை யீறு
மொப்பரிய நானுமது வந்துமு னுதிக்கப்
பொய்ப்பகையில் புந்தியவி யத்தமவை தாமும். (௫)

காதலிவ் வெட்டும்வினைக் காரணம தொன்று
மோதலரி தாய்புலனைந் துமவை யுண்ணு
மாதலறி யாதபொறி யைந்துமவை யாமில
யேதவினை செய்கரண மூன்றிரெ டிரண்டும். (௬)

இற்றிவை யனைத்துமிட ரின்பமுதல் யாவுந்
துற்றமை விகாரதை தொடர்ந்ததொகை கண்டாய்
நற்றவ வுடம்பென வியம்புவது நல்லோ
ருற்றவுட லுக்குரிய ஞானமு முரைப்பாம். (௭)

வேறு.

மானமும் பிறர்தனை மதிக்கப் பண்ணலு
மூனமும் பிறவுயிர்க் குறுகண் செய்கையும்
யானெனுஞ் செருக்குமிவ் விகப ரங்களி
லானபே ராசையோ டறுக்கு மாற்றலும். (௮)

பெற்றநன் மனையொடு பெண்டிர் பாலர்பா
லுற்றெழு மவாவிட லுடம்பின் றாய்மையு
மற்றவைம் பொறிகளில் வாயில் வாழ்க்கையுஞ்
செற்றமுஞ் சிறியவர் குழுவுந் தீர்தலும். . (௯)

ஒருபெரும் பொருளையே யுளத்துள் வைத்தலு
மிருவினை கடப்பவ ரிடங்க ளெய்தலுங்
குருவினை வழிபடு குணமுங் குற்றமி
லுருவினை யுள்ளவா றுணரு முண்மையும். (௧௦)

முன்றிகழ் பிறப்பொடு மூப்பி றப்பினாற்
சென்றடை யிடும்பையைச் சிந்தை செய்கையு
மென்றிவை யனைத்துமற் றிவற்றி னாலினிச்
சென்றடை பொருளினைத் தெரிந்து கேளொடு. (௧௧)

வேறு.

ஆதியந்த மிலதழி யாதுநின்ற பெருமைய
தோதிலுண்ட திலையெனு மூனமின்றி யொளிர்வது
நீதியின்க ணகிலமு மாகியெங்கு நிறைதலி
னோதருங்கை செவிதலை கால்களெங்கு முடையது. (௧௨)

வேறு.

காணும் புலன்க ளனைத்தினுக்குங் கண்ணாய் நின்று காட்டுவது, பேணும் புலன்க டனக்கொன்று மில்லா தியன்ற பெற்றியது, பூணும் பற்றுத் தனக்கின்றி யெல்லாந் தானே பொறுப்பதது, மாணுங் குணங்க ளின்றியவை மன்னி யனுபவிப்பதது. (௧௩)

வேறு.

பூத மைந்தி னகத்தி னோடு புறத்தி னும்பொலி கின்றதிங்
கேத மின்றி நடப்ப நிற்பன வாயி ருப்பத தின்னதென்
றோத ரும்படி நண்ணரி தாகிய தொன்ற தாகி யிருந்துமெய்ப்
பேதம் வந்தது போல நின்று பிறங்க வும்படு கின்றதே. (௧௪)

அருவ மாயதி தூரமாய தணித்து மாய தனைத்துமா, யுருவம் யாவு மளித்து மீள வொழிக்கு நாளி லொழிப்பது, பொருவி லாவொளி கட்கு முள்ளொளி யாகி யேபொலி கின்றதிங், கிருமை வீடிய ஞான மோடதன் ஞேயமாகி யிசைந்தது. (௧௫)

ஆன விப்பொருண் முன்புரைத்த வவற்றி னாலறியும்பொரு
ளான மற்ற மனத்தி னாய்நல னுடம்பு மற்ற வுடம்புசேர்
ஞான முற்று மவற்றி னாலறி யப்ப டும்பொரு ளன்மையு
மீன மற்ற திறத்தி னோடு சுருக்க மாக வியம்பினேன். (௧௬)

எள்ள லான திகந்து யான்மு னுரைத்த விப்பொருளீதெலா, முள்ளவாறென தன்பர் தாந்தெரிந் துற்ப வங்க

ளென்றோதிடுங், கள்ளமார்தரு மாயை வேலை கடந்து காதல் செய் யின்பமாம், வெள்ள மாமெனை யெய்து வாரென வேறு கூற விரும்பினான். (௧௭)

வேறு.

ஓதிய வுடம்பிற்கு முயிர்க்கு முண்மையா
யாதிகண் டறிபவ ரியாரு மில்லையாற்
றீதிலிவ் விரண்டனின் செய்கை யென்னெனி
னீதியி னிவற்றையு நிகழக் கூறுவாம். (௧௮)

நண்ணிய குணத்தின்வே றின்மை நாட்டலாற்
கண்ணிய வினைகளுக் குடம்பு காரண
மெண்ணிய துன்பமோ டின்ப மென்றிவை
யுண்ணிய காரண முயிரொன் றின்றதே. (௧௯)

இவ்வுயி ரிவ்வுடம் பிதனி லேயிருந்
தவ்வுடல் பயந்திடுங் குணங்க ளான்வ
துவ்விடு மிறந்திடுந் தோன்று மிக்குண
மெவ்வநா னுடையன வென்றி ருத்தலால். (௨0)

உண்பன யாவையு முண்கின் றானுமெய்க்
கண்கொடெப் பொருளையுங் காண்கின் றானுமென்
னண்பவெப் பொருட்குமொத் திருக்கு நாதனு
மெண்செய்திவ் வுடம்பிலே நின்ற வீசனே. (௨௧)

இப்படி யுயிரையு மியாக்கை தன்னையு
மெய்ப்பட வறிந்தவன் வேட்ட வேறுகர்ந்
தொப்புர வன்றியே யொழுகி வாழினும்
பொய்ப்படு பிறவியின் மறித்தும் போகலான். (௨௨)

செறியுமிப் பொருளினைச் சிலர் தியானமாங்
குறியினாற் றம்முளே காண்கு வார்சில
ரறிவருஞ் சாங்கிய யோகமாகிய
நெறியினா லெங்குமாய் நிற்பக் காண்பரால். (௨௩)

இருமையு மறிவதற் கிடமி லாதவ
ரொருமகன் றெய்வமென் றுரைத்த வொன்றையே
யருமையி லருச்சனை செய்வ ராலதன்
பெருமையி லவர்களும் பிறவி மேவிடார். (௨௪)

போவன நிற்பவா மியாக்கை பூண்டுகொண்
டியாவருந் துயர்ப்படு கின்ற வீடுதலா
மேவரு முடலுயிர் வேறு பாட்டினை
யாவகண் டறிவதோ ரறிவி லாமையே. (உரு)

வேறு.

கெடுகின்ற பூதங்க டோறுங் கெடாதே
வடுவின்றி நின்ற மறைப்பொரு டன்னை
நடுவென்று கண்டவ னல்லன வெல்லாங்
கடுகின் றுணைபொழி யாவகை கண்டான். (உசு)

ஒத்தெங்கு மாய வொருமைப் பொருளினை
யத்தன் மையினா லறியு மவனே
செத்தும் பிறந்துந் திரியா வகைதனை
மெய்த்தன் மையிலே புகவிடு கின்றான். (உஎ)

வேறு.

உணர்வவி காரி யென்றும் வினையெலா முடம்பி னோடே [டா
புணர்வன வென்றுங் கண்டான் பொய்யிலா மெய்யைக் கண்
ணிணர்மலர் முடியா யெல்லா வினைகளுஞ் செயினு மான்மா
குணமிலி யாத லாலே யவற்றொடுங் கூடி நில்லான். (உஅ)

உன்னிய வான மெங்கு மொழிவற நிறைந்த தேனுந்
தன்னுடை நுண்மை யாலே பிறவொடுஞ் சார்த லுண்டோ
பன்னிய விதுபோ லெங்கும் பரந்துள னெனினு மங்கு
மன்னிய வீச னந்த வுடம்பொடு மருவ மாட்டான். (உகூ)

இரவிதா னொருவ னேயாய் நின்றிந்த வுலகத் தெங்கும்
விரவிய விருளை நீக்கி விளக்குறு மாறு போலத்
தரவியா வருமுன் னில்லாச் சராசர வுடம்பு தோறும்
பரவியா னுகாத்த மாயோ னொருவனே பரந்து நிற்பான். ()

ஓரின்மே லாகி நின்ற வுயிரினோ டுடம்புக் குள்ள
பேரினோ டிறப்பு மூப்பு பிறப்பெனு மிவற்றை வேறாய்ப்
பாரின்மே லறிவார் வீடு பற்றினு ரென்றான் பார்த்தன்
றேரின்மே னின்றே வேத சிரத்தின்மே லிருக்குஞ் சீரோன்.

பதின்மூன்றாவது

க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞவிபாகயோக வத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 13-க்குத் திருவிருத்தம் 391.

பதினான்காவது

## குணத்ரயவிபாகாத்தியாயம்.

அவதாரிகை.

[பூர்வம் கங-ம் அத்தியாயத்தில் க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன் என்னும் இரண்டன் சம்யோகவாயிலாகச் சர்வ ஸ்தாவர ஜங்கமபூதங்களின் உற்பத்தி அருளிச்செய்ததால் ஈசுவரனை அங்கீகாரஞ் செய்யாத நிரீசுவர சாங்கியமதம் கண்டிக்கப்பட்டது. அதனால் அவ்விரண்டினது சம்யோகத்திற்கு ஈசுவராதீனத்தன்மையுளது என்பதும், அதில் குணசங்கத்தையே ஜன்மத்திற்குக் காரணம் என்றருளிச்செய்ததால் இந்த இந்தக் குணத்தில் இந்த இந்தப்பிரகாரமாகச் சங்கமுளது என்பதும், அக்குணங்கள் இவை என்பதும், அக்குணங்கள் இந்தப்பிரகாரமாகச் சீவனைப் பந்திக்கின்றன என்பதும், சத்துவாதி குணங்களினின்றும் அதிகாரிக்கு இவ்வாறு முத்தியுளதாம் என்பதும், முத்தனான புருஷனுக்கு லட்சணம் இவை என்பதும் அவசியம் அருளிச்செய்யவேண்டுமாகலின், இவைகளை விஸ்தாரமாக அருளிச்செய்யும்பொருட்டு ஸ்ரீ பகவான் இந்த கச-ம் அத்தியாயம் ஆரம்பிக்கின்றார்.]

செய்ய மாமலர் மேலுறை செல்வியும்
வைய மாமட வாளு மகிழ்ந்ததோ
ளையன் மெய்ம்மையன் பாலடி யோமெலா
முய்ய மீள வுரைக்கத் தொடங்கினான். (க)

நல்ல வாறறி வியாதினு நல்லது
வல்ல தீர்தவத் தோர்க்கறி வாவது
மல்லு லாவிய தோண்முடி மன்னயான்
சொல்லன் மேய வதன்றுணி வாயதே. (உ)

இன்ன தன்மையின் ஞானத் தியற்கையா
லென்னை வந்தடைந் தாரிவ் வுலகினிற்
பின்னை வந்தடை யாரிற வாரிதன்
றன்மை யாதெனி லாங்கதுஞ் சாற்றுவாம். (ங)

மூத வாவென் குணமவை மூன்றினும்
பேத மாகும் பிரகிருதி தன்னிலே
காதலால் வைப்பன் யான்கரு வக்கருப்
பூதம் யாவும் புலப்படு கின்றவே. (ச)

இந்த வண்ணத்தி னுலிவ் வுலகிடை
வந்த யோனி யெலாம்வரு வித்திடுந்
தந்தை யானவை யீன்றளிக் கின்றதா
யந்த வென்னுடை மாயைய தாகுமால். (௫)

என்று முன்னங் குணமென் றியம்பிய
மூன்று மூலப் பிரகிருதி தன்னிலே
தோன்றி யுள்ளன தொல்லறி வைப்பற்றி
யூன்றி நிற்ப வவற்றை யுணர்த்துவாம். (௬)

சத்து வம்ரச சோடு தமசென
வுய்த்து வந்த பெயரா யுடையன
வெத்து வந்துவ முந்தரு கிற்பன
மெத்து வந்தவற் றின்செயல் வேறுகேள். (௭)

பற்று மாசின்மை யாற்பளிங் கொப்பது
வுற்ற நல்லறி வானதுண் டாக்குவ
தெற்று மின்பமல் லாற்றுன்ப மென்பது
சற்று மில்லது சத்துவ மாவதே. (௮)

ஓது ராக வுருவ முடையது
தாது கற்புரா யுண்ணிறஞ் சார்ந்தது
பேது செய்வினை யோடறி வைப்பின்னற்
கேது வாய திராசத மென்பதே. (௯)

குறியு நீல மயக்கமுங் கோதிலா
நெறிக டம்மை யிகழ்தலு நித்திரை
செறித லானது மற்றிவற் றுற்றிண்ணொன்
றறிவை மாய்க்கு மதுதம மாவதே. (௧௦)

வேறு.

உரைசெய் சத்துவ மின்பத் துய்த்திடு
மிரசதம் வினைகளோ டறிவை யார்த்திடும்
புரைசெய்திவ் வழுக்கையே பொருந்திப் போர்த்திடுந்
தரைசெறி புகழினுய் தமமென் கின்றதே. (௧௧)

வேறு.

வாழுஞ் சத்துவ மற்றைய விரண்டையு மறைத்துத்
தாழு மற்றைய விரண்டுமத் தமோகுணந் தழைப்பின்

வீழுஞ் சத்துவ தமங்களவ் விரசதம் விளைவி
னூழின் மற்றிவை யிரண்டுந்தாழ்ந் தொன்றும்பிக் குளதாம்.()

வேறு.

ஒத்துநல் லறிவு மிக்க தியாதொரு போதப் போது
சத்துவந் தழைத்த தாகுந் தாங்கரும் வினைக ளேகொண்
டெய்த்துவந் தாசை கூர லோபம்வந் துற்ற போது
மத்திம குணமே சால வளர்ந்ததென் றறிநீ மன்னு. (கங)

தக்கது தகாதென் றொன்றைத் தானறி யாத போது
மெக்கரு மங்கண் மாட்டு மிகழ்ச்சியோ டிருக்கும் போது
மொக்கமெய்ம் மயக்கத் தோடு முறக்கம்வந் துற்ற போது
மிக்கது தமமே யென்று விசயநீ யறிய வேண்டும். (கச)

வேறு.

தக்கசத்துவமே மிகழ்ந்தபோ திறந்தோர் தெய்வயோனிகளிலே சார்வார், மக்களிற் பிறப்பா ரிராசத குணமே வளர்ந்தபோ துடம்பினைத் துறந்தோர், மிக்கெழுந் தமமே விளைந்தபோ திறந்தோர் விலங்குச்சா திகளிலே வீழ்வார், றொக்கமற் றிவற்றின் பலன்களுந் தெரிய வுரைக்கின்றே னிவற்றையு முணர்வாய். (கரு)

அருங்குண மாய சத்துவ பலமா மழுக்கற விராசத பலமாம், பெருந்துய ருழத்த் றமோபல மாகும் பேதைமை பேசிய் முறையே, பொருந்திய் விந்தக் குணங்கண்மூன் றானும் பூதசா லங்களுக் கெல்லாம்,வருந்திரு வாய ஞானமோ டுலோப மயக்கமென் றின்னன வருமால். (கசு)

சத்துவ மாந்தர் பரகதி யடைவர் தம்த்துளோ ரதோகதி சார்வார், மத்திம குணத்தோ ராயினோர் நடுவின் மானுடப் பிறவியாய் வாழ்வார், ரித்திற மாய வுருவமே விகாரியானவி காரியென் றிவற்றை, மெய்த்திற னுக வறிந்தவ னறிந்த பொழுதிலே வீட்டின்ப மடைந்தான். (கஎ)

உடம்புட னிருந்தே யுரைத்தவிக் குணங்கண் மூன்றையு முள்ளவா றறிந்து, கடந்தவன் பிறப்பு மூப்பிறப் பாதியாகவே கட்டுரைக் கின்ற, விடம்புரை யிடும்பை யாவையுங்

கடந்து விட்டின்பம் விளைபவ னென்றான், றடங்கட லிடையே
வளர்ந்தவ னவற்கு வேறிது தனஞ்சய னுரைப்பான். (கஅ)

கண்ணிய வுலகிற் கடப்பரி தாய குணங்கண்மூன் றையுங்
கடந் துயர்ந்த, புண்ணிய ரியல்புங் கடந்துறு நெறியுங் குறி
யையும் புகன்றரு ளென்ன, வெண்ணிய வுலகு முலகில்வா
ழுயிரு மிருவினை யாக்கையு மாகப், பண்ணியு மழித்து
மேவிளை யாடும் பரமன்வே றிவ்வகை பணிப்பான். (கக)

வாய்மைய வல்லாக் குணமவை மூன்றின் காரிய மாய்
வருகின்ற, தூய்மையுந் தொழிலு மயக்கமு மென்று சொல்
லிய துறையிவை மூன்றுஞ், சேய்மைய வென்று பெறுத
போ தவாவல் பெற்றபோ திரங்கல்செய் யாதா, னுய்நொது
மலன்போற் குணங்களோ டிருந்தே யவற்றினாற் சலித்திடா
னன்றே. (உ0)

வேறு.

மானமவ மானம்வரு மின்பமிடர் மண்பொன்
றனமகிழ் வப்பிரிய மன்பர்பகை யாரோ
டெனவுரை யோடுபுக ழுற்றபொழு தொப்பா
னினமுறு கின்றகுண மானவை யிகந்தான். (உக)

இப்பரிசி னல்வரு குணங்களை யிகந்தே
மெய்ப்பருவ் மாயபெரு வீடுபெறு மிற்பா
லொப்பரிசி னுமிடை யின்றியெழு மன்பா
லொப்பவரி லாதவெனை யுன்னுமவர் கண்டாய். (உஉ)

வேறு.

ஒழியா தென்று மியாவர்க்கு மியானே யுணர்த்தி வருத
லாற், கிழியா வறிவுங் கெடாவீடுங் கேடி லின்ப மானதுவு,
மழியா வறமு மென்னுள்ளே யுளவா காகின் றனவென்றான்,
சுழியா நின்ற பெருவெள்ளத் திடையே பண்டு துயில்கொண்
டான். (உ௩)

பதினான்காவது குணாதீதவத்தியாயம் முற்றிற்று.

---

ஆக அத்தியாயம் 14-க்குத் திருவிருத்தம்-404.

---

பதினைந்தாவது

## பிரபஞ்சவத்தியாயம்.

அவதாரிகை.

[பூர்வம் கசு-ம் அத்தியாயத்தின் இறுதிக்கண் ஏகாந்தமான பக்தியினால் பரமேசுரனை என்னைச் சிந்தனஞ் செய்யாநிற்பவர் எனது கிருபையினால் ஞானவாயிலாக முத்தராவர் என ஸ்ரீ பகவான் அருளிச்செய்ததால் அவ்வேகாந்தமான பக்தியும், ஞானமும் சம்சாரத்தினின்றும் விரக்தியடைந்த புருஷனுக்கேயுளவாம் அன்றி மற்றையர்க்குளவாகாவாதலின் இவ்வத்தியாயத்தில் தாம் முன்னர்ச் சம்சாரத்தை விருட்சரூபவுருவக அலங்காரமாக வர்ணித்து வைராக்கியபூர்வகம் ஞானோபதேசஞ்செய்யும் மனோரதங்கொண்டருளுகின்றார்.]

சங்கிரகார்த்தம் ; வைராக்கிய பூர்வகம் பிராப்தமாகும் பரமேசுவரபதமானது சூரியாதி ஒளிகளால் பிரகாசிக்கப்படாத சொப்பிரகாசரூபம் என்பதும், அதனையடைந்தோர் மீண்டு ஜநியார் என்பதும், ஜநியாமைக்குக் காரணம் இது என்பதும், தேகத்திற் கந்நியமாய்ச் சம்சாரி இன்ன சொரூபனாயுளன், அவனை அங்ஙனம் விவேகிகளன்றி அவிவேகிகள் அறியார் என்பதும் அருளிச்செய்து பரமேசுவர சர்வான்மத்வம், சர்வவியவகார சாதனத்வம் காட்டும் வாயிலால் சோபாதிக நிருபாதிகத் தன்மையையும் பலசகிதம் இதில் தரிசிப்பித்தல் ஆம்.

சாயை யன்னவென் வினைத்தளை யறுக்கவோ தகவில்<br>
பேயை யின்னுயிர் செகுக்கவோ பிள்ளையாய் வளர்ந்தான்<br>
வேயை யொன்றிய வரிசிலை விசயற்கு மீள<br>
மாயை தன்னையோர் மரமொக்க வருணிக்க லுற்றான். (க)

வேறு.

வேர்மேலது தலைகீழது வினில்லது வேதத்<br>
தேர்மேவிய விலைமேவிய தியாவும்புக றலினா<br>
லார்மேவிய வசுவத்தம தெனவேயர சதனின்<br>
பேர்மேயது பெருமாயைசெய் பிறவிப்பெரு மரமே. (உ)

இவ்வாறித னியல்பாகிய வங்கயாவெனி லியாது
மொவ்வாவகை பெரிதாகிய பிரமத்தரு விடையே
ளவ்வாள்வலி யுழவாவரன் முறையேவரன் முறையே
மெய்வான்முதல் வருமாதலின் மேலானது வேரோ. (௩)

ஊழால்வரு மூலகாகியு முயிராகியு மெழலாற்
கீழானது தலையாவுறு முதலீறிடை கிளர்வாய்ச்
சூழாகிய பிறவித்தொட ரொருகாலமு மடையப்
பாழாம்வகை யழியாமையி லழியாததோர் படியே. (௪)

கருநாண்முதல் வினையாலது வளர்காதல்செய் தலினு
லருநான்மறை யவையேயிலை யவையாமென வறிநீ
வருநாள்களி னொருநாள்பெறும் வகையின்மையி னாலே
பெருநாடறி யசுவத்தம தெனலாயது பெயரோ. (௫

மற்றிப்படி நிகழ்கின்றவிம் மாயாமர மிதனின்
பெற்றித்திற மிதுவல்லது பிறிதின்மையி னாலே
யுற்றிப்படி யுணர்வார்பொரு ளெல்லாமு முணர்ந்தா
ரிற்றிப்பெரு மரத்தின்றிற மின்னுஞ்சில வுளகேள். (௬)

கண்ணேயெனை யனையாய்பல பிறவிக்கதி வழியே
மண்ணேமுதற் கீழாமுல கிடையே வளர்வனவும்
விண்ணேமுதன் மேலாமுல கிடையே மிடைவனவு
மெண்ணேறிய பவமாகிய புணையாலிசை தருமே. (௭)

நெறியால்வரு தருவேர்பல நிலமாமுல கிடையே
யறியாமையொ டுறவீழ்தலில் வேர்கீழினு முளதாம்
பிறியாதெழு குணமாகிய பெருநீர்மையில் வளரும்
பொறியாகிய விவைதாந்தளிர் போன்மேயது பொலிவே.(௮)

கனவுந்திகழ் கழுதாழியு மிகுகந்தர்வ நகரு
மெனவந்தழி தலினுலுரு வதுவின்றிய தியாது
முனம்வந்திடு முதனுளொடு முடிவின்மையி னாலே
தனதந்தமு முதலுந்தெரி தரவில்லது தானே. (௯)

வேறு.

மந்திர மாய விந்த மரத்தினைத் துறவென் கின்ற
தந்திர வாளால் வெட்டித் தற்பர மாகி நின்றே

யிந்திர சால மென்ன யாவையுங் காட்டு கிற்கு
மந்தமி லாத வென்னை யடைகையே யடுப்ப தையா. (க0)

துன்னிய வாசை கோபங் கடந்தவர் காணத் தோன்று
மென்னுரு வியற்கை கேட்கி லியாவையுங் காட்டு கின்ற
மன்னிய வொளிகள் காணு வகையதாய் வந்து சேர்ந்தார்
பின்னியல் வேறொன் றுகாப் பெற்றிய னென்று பேசும். ()

குடங்தொறுந் தோன்று கின்ற காயமுங் குலைதற் கேற்பத்
தடம்புன றோறுந் தோன்றுஞ் சந்திரன் றுனு மென்ன
வுடம்புக டோறும் வேறு புயிரென நின்றே யந்த
விடம்படு புலன்க ளாறு மியல்பினி லியற்று வேனுன். (கஉ)

பூக்கமழ் நாற்றங் கொண்டு பொருவளி போகு மாபோற்
றீக்கனல் கின்ற வேலோய் சிவனென் கின்ற சீவோ
னாக்கையை யெய்தும் போது மதனைவிட் டேகும் போதும்
போக்கரி தாய வாறு புலன்களைக் கொண்டு போமால். (கங)

வேறு.

மின்னே யனைய வுடம்புதனை விடுவ தடைவ தாய்விடயந்
தன்னே ரில்லா தான்றனே யார்கின் றனத் தன்மையினை
யென்னே காணு ரறியாதா ரறிவா ரியோகத் தாலேதம்[கேள்
முன்னே காண்ப ரிதனியற்கை தெளிநீ யின்னு மொழிவன்

வேறு.

இந்தியங் களுக்குங் கண்ணு னிரவிதீ யிந்து வின்பால்
வந்தெழு கதிரு நானே மாநில மாகி நின்றே
கந்தியன் றனைய தோளாய் கந்தமே முதலாந் தன்மை
தந்துரந் தரித்தி தெல்லாந் தாங்குகின் றேனு நானே. (கரு)

வேறு.

மூந்து வான்சுவை மூர்த்த மாகிய
விந்து வாகிநின் றுணவி யாவினுந்
தந்து சேர்சுவை தகவ வற்றிலே
நந்தி டாவகை வளர்க்கின் றேனுநான். (கசு)

மறந்தி ருந்த மனத்திரு ணீங்கிடத்
திறந்தி றப்படச் செப்புதன் மேயினு
னிறந்தி றந்தெரிந் தாக்குதற் காகவே
பிறந்தி றந்துழல் கின்றபே ராளனே. (௫)

தெய்வ வாசுர மொன்றித் திறத்தராய்
வைய மாந்தரொல் லார்களும் வாழ்வரிங்
கைய கேளவர் தந்திற மென்றுதன்
செய்ய வாய்திறந் திவ்வணஞ் செப்புவான். (௬)

வேறு.

அஞ்சுத லின்மையு மறிவை யாக்கலு
நெஞ்சினை யடக்கலு நிலைகெ டாமையும்
வெஞ்சின மின்மையு மெய்ம்மை கூறலுந்
தஞ்சென வேள்வியுந் தவமு மாக்கலும். (௩)

மறைபயி றலுந்தனை மதித்தி ராமையுங்
குறளைக டவிர்தலுங் கொல்லை மாற்றலும்
பிறர்பிழை பொறுத்தலும் பேரொ ழுக்கமு
மறன்வலித் தானமோர் டருளை யாக்கலும். (௪)

இருவகைத் தூய்மையு மிந்தி யங்களை
யொருவழிப் படுத்தலு முள்ளிட் டன்னவை
செருவருஞ் சிலையினும் தெய்வத் தன்மையோர்
மருவிய தொழிலென மதிக்க வேண்டுமே. (௫)

வேறு.

தீமைசெய் யசுர ராஞேர் செய்கையைத் தெரிக்கி லொன்றை
யாம்வகை யெனமற் றுகா தனவென வறித லில்லார்
தூய்மையுந் தூய வாய வொழுக்கமுந் தொடக்கு விட்டார்
வாய்மையொன் றுனு மில்லார் மயக்கமே மருவா நின்றூர். ()

வேறு.

எண்ணிய வுலகமு முலகிற் கீசனும்
புண்ணிய பாவமும் பொய்யென் றேகொள்வர்
பெண்ணினே டாண்புணர் கின்ற பெற்றியா
னண்ணிய யாவையு மென்று நாட்டுவார். (௭)

விரும்பல ராகி யொழுக்கங்க டெந்தார் மெய்ம்மையுஞ் செம்மையும் விட்டார், திரும்பய ஞான வறிவுமாய்ந் துள்ளா ரிடம்படா மனத்திறோ டிசைந்தார், பெரும்பழி யான தொழில்களே புரிவார் பிழைப்புவாய்ப் பொன்றறி யாதா, ரரும் பகை யாயிவ் வுலகினை யெல்லா மழிப்பதன் பொருட்டவ தரித்தார். (அ)

வே று.

"நிறைவிலாக் காம போகந் தன்னையே நிறைக்க வேண்டி
மறைவிலா மானத் தோடு மதங்களை மருவி நின்றுங்
குறைவிலா மயக்கத் தோடு கோபத்தை யடைந்து நின்றும்
பொறையிலா விரதம் பூண்டு பொய்த்தவம் புரியா நிற்பார். ()

இறந்துபோ மளவு மெய்தாப் பொருளையே யெண்ணு கிற்பார், மறந்துமோர் பொருள்வே றில்லை வருபய னன்றி யென்பார், சிறந்தபோ கங்கட் காகத் தீமையாற் பொருளைச் சேர்ப்பார், பிறந்துபே ராசை யாய பாசத்தாற் பிணிக்கப் பட்டார். (க0)

இப்பொரு ளடைந்தோம் வேறு பொருளினி யடை வோ மென்று, மிப்பகை செகுத்தோம் வேறு பகையினிச் செகுப்போ மென்றுந், துய்ப்பவ ரெம்மிற் றுய்க்க வல்லவ ரில்லை யென்று, மொப்பவ ரெம்மின் மிக்கா ருளர்கொலென் றுணரா நிற்பார். (கக)

இனம்வலி யின்பம் பெற்றே மெம்மின்மிக் கார்க ளில்லைத், தனமிக வுடையே மென்று தம்மையே வியவா நிற்பார், மனமகி ழியாகஞ் செய்வோ மழையெனக் கொடுப்போ மென்று, தினமவை தோறுஞ் சிந்திப் பதுவலாற் செய்வதில்லார். (கஉ)

வே று.

தொடக்கற வில்லா நினைவெனப் பட்ட சூழலைப் பற்றியே சுழல்வா, ரடக்கரி தாய மயக்கமென் கின்ற வலையுளே யகப்பட்டு நின்று, ருடற்குடில் வாழ்வாம் புன்னுனிப் பனிநீ ருலர்ந்திடு முயிர்கடுக் கெய்திக், கடப்பரி தாய நரகமென் கின்ற கடல்களில் வீழவே கடவார். (கங)

வேறு.

வியந்துதங் களையே மேலாப் பார்த்துமெய்ம் மாந்தர் தம்மை
நயந்துகொண் டாட லில்லார் நல்லவை செய்தா ரொன்று
பயன்றருடார்க் துணைத்தற் காகப் பாடிய பழைய நூல்க
ளியம்பிய படிசெய் யாதே யாகங்க ளியற்று நிற்பார். (கச)

வேறு.

மன்னிய களிப்பொடு வலியுங் காமமுந்
துன்னியா னெனும்பெரு மயக்கஞ் சேர்ந்துளா
ரொன்னியல் பிணைத்தமி லியாவர் மாட்டிலு
மன்னிய மெனக்கொடு பொறாமை யாக்குவார். (கரு)

வேறு.

மற்றவர் தம்மை யிந்த மாநுட ராஞே ரியார்க்குங்
கொற்றவ கீழா ஞேனைக் கொடுமையா லரவொப் பாரை
யற்றமி லிடும்பை சேரு மாசுர யோனி யாய
புற்றவை தோறு மியானே புகப்புக விழுத்து கின்றேன். ()

வேறு.

இவ்வகை யாசுர யோனி யடைந்தோர்
மெய்வகை யாமறி வின்மையி னாலே
யைவர்க டூநர கக்கதி தோறு
மூய்வகை யின்றி யுழன்று திரிந்தே. (கள)

ஒருவ னசிக்க வியற்றுவ தென்று
மருநர கத்தி லடைப்பது தானும்
வரும்வழி மூன்றுள மற்றவை தம்மை
யொருமுறை கூறி யுணர்த்திடு வன்கேள். (கஅ)

காதலி னாகிய காம முலோபங்
கோதுற வேசுடு தீநிகர் கோப
மாதலி னிவ்வை மூன்று மகன்றோர்
வேதனை தீர்பெரு வீடு விளைந்தார். (ககூ)

கூறின நூல்வழி சேர்குறி பேணு
தேறின வாறுசெய் வாரிக லோகம்

வேறிய லார்பர லோகம் விளக்கும்
பேறின வானவை பேறு பெறுரால். (உ0)

வேறு.

ஆதலி லனைத்துமறி கைக்குவழி யான
வேதமுத னூலவை விதித்தநெறி யாலே
யேதநினை யாதுன்வினை யேயிசைக வென்றுன்
பூதமுத லானவை பொறுத்தருளு கின்றுன். (உக)

பதினுறுவது
தேவாசுரசம்பத்து விபாகயோக வத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 16-க்குத் திருவிருத்தம் 450.

பதினேழாவது
## குணவிகாரவத்தியாயம்.

அவதாரிகை.

[பூர்வாத்தியாயத்தின் ஈற்றில் சாஸ்திரவிதியைப் பரித்தியாகஞ் செய்து தமது இச்சைமாத்திரத்தால் சிறிது கருமங்களை அநுஷ்டியாநிற்பவர்க்குத் தத்துவஞானமுளதாகாது என்றதால், சாஸ்திரவித்யை ஆலசியமுதலிய தோஷவசத்தால் பரித்தியாகஞ்செய்து தமது பிதா, பிதாமகர் முதலிய விருத்தருடைய வியவகாரமாத்திரத்தால் சிரத்தாபூர்வகமாக விகிதகருமமாத்திரம் அநுஷ்டிக்கும் புருஷர்க்கு அதிகாரமுளதோ? இலதோ என்னும் நிர்ணயமறியவேண்டி வினவிய அருச்சுனனுக்கு ஸ்ரீ பகவான் தெளியும்வகை இவ்வத்தியாயங் கூறுகின்றார்.]

சங்கிரகார்த்தம்: இவ்வத்தியாயத்தில் ஆலசியாதிதோஷங்களால் சாஸ்திரவிதியைப் பரித்தியாகஞ் செய்து பிதர், பிதாமகர் முதலிய விருத்த புருஷர்களின் வியவகாரமாத்திரத்தால் எக்ஞ முதலிய கருமங்களில் பிரவிர்த்தியாநிற்கும் புருஷரிடத்துச் சாஸ்திரவிதியின் பரித்தியாகரூபமான அசுரதர்மமும், சிரத்தாபூர்வக கருமாநுஷ்டான ரூபமான தேவதர்மமுங் காணப்படுதலின் அப்புருஷர் அசுரரா? அல்லது தேவரா என்று இவ்வாறான அருச்சுனன்

சமுசயத்திற்கு விஷயபூதரான புருஷருள்ளே யாவர் இராஜஸ, தாமஸ சிரத்தாபூர்வகமான இராஜஸ, தாமஸரூப யக்ஞமுதலிய கருமங்களையே செய்கின்றனரோ அவர் அசுரர் எனவும், இப்படிப் பட்ட அவர் சாஸ்திரங்களிற் பிரதிபாதிக்கின்ற ஞானசாதனங்களின் அதிகாரிகளல்லர் எனவும், யாவர் சாத்துவிக சிரத்தாபூர்வகமாகச் சாத்துவிக யக்ஞமுதலியவற்றைச் செய்கின்றனரோ அப்புருஷர் தேவர் எனவும், அவர் சாஸ்திரங்களிற் பிரதிபாதியாநின்ற ஞானசாதனங்களின் அதிகாரிகளாவர் எனவும் இவ்வாறான நிர்ணயம் செய்யப்படும்.

உண்டு மீள வொளித்துல கியாவையுங்
கண்டு காப்பவன் கட்டுரைத் திட்டதே
கொண்டு பார்த்தனக் கொண்டல்வண் ணன்றனைத்
தொண்டு கூறிப் பணிந்திது சொல்லுவான். (௧)

வேத மேமுத னூல்விதி யின்றியே
காத லாலுல கோர்செயுங் காரிய
மேத மாங்குண மூன்றினு மேதென
வோத மாக்கடல் வண்ணனு மோதுவான். (௨)

வேறு.

யாவர்க ளாசைப் பாடு மியம்பிடி லியம்பப் பட்ட
மூவகைக் குணமு மாகி யல்லது முடிந்து நில்லா
மேவரு மவற்றி னுய வேறுபா டவற்றை யெல்லாங்
காவல தெரியக் கூறக் கேளெனக் கழற லுற்றான். (௩)

வேறு.

சாத்துவிகர் தேவரையே சரண்புகுவர் தாமதர்கள்
காத்தல்புரி வனபேயும் பூதமுமாக் கடைப்பிடிப்ப
ரோத்தரிய குணமிவற்றி விராசதமாங் குணமுடையோ
ராத்தரென வியக்கரையு மரக்கரையு மடைகுவரால். (௪)

வேறு.

அடங்கிட லகங்கா மாதி யின்றியே
யிடம்படு நூல்களி னியல்ப தின்றியே
யுடம்பையு முயிரையு மாய்க்கு மாதவந்
தொடங்கின ரசுரயோ னியினிற் றோன்றினர். (௫)

வே று.

உண்பன யாக மாரு முறுதவந் தான மென்ன
வொண்பட வுரைத்த நான்கு மோரொன்று மூன்றாய் நின்ற
பண்படு குணங்க ளாலே கேளெனப் பற்று வீடு
நண்பொடு பகையு மில்லான் முறையினு னவிற்ற லுற்றான்.

சத்துவ குணத்தோ ருண்டி யுரைத்திடி லழகு சார்ந்து
தித்தித்த சுவைய வாகி நெய்த்துச்சிக் கெனவு சேர்ந்து
வத்தித்து வலிநோ யின்மை யறிவுநல் லாயு வின்பம்
வத்திக்கச் செய்யு மிந்த வுணவுகண் மடங்க லன்றாய். (எ)

இப்படி யன்றி வேறு மிராசத குணவு கேட்கிற்
கைப்பன புளிப்பு வர்ப்புக் கூர்ப்பன கடிய வெய்து
நெய்ப்பயி னெருப்புப் போலச் சுடுவன விவற்றி னாலே
மெய்ப்படு நோயு நெஞ்சத் திடும்பையும் விளைவ வேலோய்.

ஆசினை யடைந்த நெஞ்சிற் றாமத ருணவு கேட்கி
னூசின பழஞ்சோ றெச்சி லும்பர்பூ சனைக்கா காமை
யேசின வெந்தி லாத வினையன விவற்றி னாலே
காய்சின முதலா யுள்ள துயரெலாம் விளைவ கண்டாய். (க)

செயத்தகு வனவென் றல்லாற் சேர்பயன் சிந்தி யாதே
தயக்கநூன் முறைசெய் யாகஞ் சாத்திகஞ் சாரி யாகம்
பயத்தையே வேண்டி யாதல் பலர்புகழ் வேண்டி யாத
லியற்றுறும் யாக மெல்லா மிராசத யாக மாமே. (கய)

நூற்படு நெறியு மின்றி நுனித்தவவ் வினையின் மேலோர்
தாற்பரி யமுமே யின்றித் தக்க மந்திரமு மின்றி
யேற்பவர்க் கீத லின்றி யியற்றுறு கின்ற யாகந்
தார்ப்பொலி கின்ற மார்பா தாமத யாக மாமே. (கக)

வே று.

தீக்குலாம் வேலினாய் தவத்தின் செய்கைதான்
வாக்கினாற் பேசுதன் மனத்தி னுக்குத
லாக்கையா லியற்றுத லாயி ருப்பது
நோக்கினு னிவற்றினை நுனித்துக் கூறுவாம். (கஉ)

வேறு.

தீர்த்த யார்க்குஞ் செவிக்கினி தாயினா
வார்த்தை மாமருந் தேயென லாவதா
மோர்த்து மெய்ம்மொழி கூறுத லோதுதல்
வார்த்தையாற் பண்ணு மாதவ மாவதே. (கங)

தெளிவி னெஞ்சைத் தெளியப் பிடித்தலுங்
களிசெ யும்முளத் தைக்களி மாற்றலுங்
குளிர்வி லாமை யுளத்திற் கொளாமையு
மெளிதின் மானத மாதவ மென்பதே. (கச)

தலைமை யந்தணர் தேவர் குரவர்பான்
மலைத லின்றி வழிபடு வாழ்க்கையுங்
கொலைது றத்தலுங் காமங் குறைத்தலுந்
தலைவ காயத் தவமெனப் பட்டதே. (கரு)

வேறு.

தீத்தவழும் வடிவேலோய் செப்பியவிம் மூன்றனுஞ்
சாத்துலக மகிழ்வெய்தச் செய்கின்ற வருந்தவத்தி
னார்த்துவரும் பயன்வேண்டா தாகின்ற வருந்தவந்தான்
சாத்துவிக தவமென்று சாற்றுவது தக்கோரே. (கசு)

வசையிறவ முடையனென மாநடர்கொண் டாடுகைக்கு
நசையினொடு பொருள்பெறவுஞ் செய்கின்ற நற்றவத்தை
விசயவுனக் குரைசெய்தேன் மிகப்பெரியோர் செய்திடினு
மிசையவறி மற்றிதனை யிராசதமாந் தவமென்றே. (கஎ)

பேதைமையை மிகவுடைத்தாய்த் தன்னுயிர்க்கும் பிறவுயிர்
மேதமுறு பெருந்துயருங் கேடுமே யியற்றுவதா [க்கு
யாதவனும் பனியுமுழன் றுற்றுகின்ற வருந்தவந்தான்
றுதலரு நெடுமுடியாய் தாமதமாந் தவமாமே. (கஅ)

முன்செய்கா ரியப்பொருட்டு மின்றியே முடித்திதனைற்
பின்பொருநற் பொருள்விளையு மென்பதுவும் பேணாதே
நன்குடைய காலத்தே நல்லிடத்தே நல்லவர்க்குத்
தன்பொருளைக் கொடுக்குமது சாத்துவிக தானமே. (ககூ)

கொண்டுசெயத் தகுங்கரும மெனுங்குறிப்போன் றின்றியே
பண்டுசிலர் செய்ததற்காப் பரிவோடு பண்ணினவு

முண்டிதனுன் மேல்வினைவென் றுணர்வோடிச் செய்வனவு
மெண்டிசையு நிறைபுகழா யிராசதமாந் தானமே. (உ0)

வாயாத தொருபொருளை வழங்காத காலத்தே
யேயாத நிலத்திடையே யிழிந்தகுலத் தவர்களுக்கே
யாயாத வறிவினொடு மப்பிரியத் தொடுங்கொடுத்தல்
சாயாத பெருந்திறலோய் தாமதமாந் தானமே. (உக)

வேறு.

ஒப்பரி தாய வுண்டியோ டியாக முறுதவந் தானமென் றுரைத்த, வப்படி யெல்லா மறிவகை யுனக்கு முரைத்தன னடையமற் றையா, மெய்ப்படி யாமற் றிவற்றினைச் செய்து வீடுபேற் றுயர்நெறி யாவ, தெப்படி யென்னி லதனையு முன க்குத் தெரிவகை யுணர்த்துவன் கேணீ. (உஉ)

வேறு.

ஓமென் கின்ற தனியெழுத்து முரைத்தற் கரிய தற்பத முந், தாமங் கமழுந் தார்மார்பா சத்தென் கின்ற தனிப்ப தமு, மாமென் கின்ற விவைமூன்று மறிவின் பெயர்மற் றிவற் றாலே, யாமுன் புணரு மறைமறையோர் யாகந் தோன்றிற் றெனவறிவாய். (உ௩)

ஓமென் றுரைத்தே வினைசெய்வார் வீடுற் றவர்வீ டுறு மவர்க, டாமுன் புரைத்த தற்பதத்தை யுரைத்தே செய்வர் சத்தென்றே, யாமென் கின்ற யாகமுதன் மூன்றிற் றிதியு மவற்றினமுங், காமர் வினையின் மேலுமது கழறு கிற்பார் கதிர்வேலோய். (உ௪)

வேறு.

காதலா விந்தப் பதங்கண்மூன் றினையுங் கற்றுணர்ந் தவர்கடங் கருத்தா, லோதலாம் வகைபா லுரைத்தலாற் றவ முந் தானமு முதலிய வொழியா, ராதலா லிந்தப் பதங்களை யுரைத்தே வினைசெயத் தகுவதென் றுரைத்தான், றீநிலா வுலகந் தன்னுளே யுதிப்பத் தேவகி திருவயிற் றுதித்தோன்.

பதினேழாவது குணவிகார வத்தியாயம் முற்றிற்று.

---

ஆகவத்தியாயம் 17-க்குத் திருவிருத்தம் 475.

---

## பதினெட்டாவது
## சந்நியாசயோகம் / சஞ்சேபவத்தியாயம்.

### அவதாரிகை.

[இவ்வத்தியாயத்தில் இக்கீதா சாஸ்திரார்த்தங்கள் முழுதையும் சங்கிரகித்து இதுவே பரமார்த்தமாம் என நிர்ணயஞ்செய்தற்பொருட்டுச் சந்நியாசம், தியாகம் என்னும் இவைகளைப் பிருதக்காகத் தெளியும்வகை நிரூபித்துச் சர்வசாஸ்திரங்களின் பரமமான ரகசியமானது ஈசுவரசரணத் தன்மையேயாம் ஆகலின், அவ்வீசுவர சரணத்தன்மையிலேயே இக்கீதாசாஸ்திரத்தின் பரிசமாப்தி செய்து அருமை, பெருமை தோன்ற ஸ்ரீ பகவான் அருச்சுனனுக்குக் கூறி ஐயம் நீக்கிச் சுதர்மத்தில் உடன்பட நிலைநிறுத்துகின்றார்.]

ஏகமே கருதுவா ரிதயமே விளைவதோர்
போகமே புலகிலோர் பொருவிலா வொருவனே
நாகமே யமளியாய் நளினமே மலர்வதோர்
மேகமே பணியெனு விசயன்மேல் வினவுவான். (க)

வேறு.

சந்நியாச மாவதுந் தகுந்தியாக மாவது
மென்னியாய மாகவெம் பிராணியம்பு கென்னவே
வன்னிவாயு வானமாகி மண்ணுநீரு மாகியோன் [னின்.
றொன்மையாம் பொருட்டொகைத திறஞ்சொலத் தொடங்

காமமென்றி டும்பலன்செய் கன்மமான யாவையுந்
தாமடங்க வேயிகத்தல் சந்நியாச மாவதிங்
கேமமின்றி யெவ்வினைப் பயன்களான யாவையுந்
தீமையென் றறத்துடைத் திருத்தறியாக மாவதே. (உ)

நீங்கியற்று கின்றதீ வினைத்திறங்கள் போலவே
யீங்கியற்று கின்றநல் வினைத்திறங்க ளியாவையு
மாங்கியற்ற லின்றிவிட் டிருத்தலே யருத்தமாச்
சாங்கியத்தை யோதிடுந் தவத்துளோ ருரைப்பரால். (௩)

ஞானகார ணங்களாத லாலியாக நற்றவந்
தானமோ டிகத்தலைத்த காமைகூறு வாறுள

ரானகரா ணத்தினு லறிந்தடங்கி னூர்க்கலா
வினமாகு மேனையோர்க் கெவற்றைவிட் டிருத்தலே. (ரு)

வே று.

றியாக மூன்று வகைப்படுஞ் செப்பக்கே
ளியாக முந்தவந் தானமு மென்றிவை
மயால றுக்கு மனத்தினை யாதலா
லயாவு மாக்கில் விடுகை யடாததால். (சு)

என்ன செய்வ தெனிலிவ் வினைகளாற்
பின்னை யெய்தும் பெரும்பய னுவது
தன்னை விட்டுச் செயத்தகு மென்பது
முன்னை யோர்க்கு மெனக்கு முடிவரோ. (எ)

நித்த மாய வினையி னெறியினை
மத்தர் போல வொருவன் மயக்கினுற்
பித்த னய்விடு கின்றவப் பெற்றியைச்
சித்த தாமதத் தியாகமென் கின்றதே. (அ)

மெய்வ ருத்தமுண் டென்று விடுவதிங்
கைய மின்றி யிராசதத் தியாகமாங்
கைவ ரும்பல மாசையை மாறவே
செய்வ செய்வது சத்துவத் தியாகமே. (கூ)

யாதின் மாட்டினு மையமொன் றின்றியே
தீதின் ஞானியுந் தியாகியு மானவன்
கோதி லின்பமுந் துன்பமுங் கூர்வினை
மீது வேண்டல் வேண்டாமையும் விடுமால். (க0)

வே று.

யாக்கை யோடு மிசையி லிருவினை
நீக்க லாவன வல்ல நிலத்திடை
வீக்க மாய வினைப்பயன் வீடினர்
போக்க லாவினை யாவையும் போக்கினர். (கக)

வே று.

இன்னு தனவு மினியனவு மிரண்டுங் கூடி யிசைந்தவு
மாய், முன்னு னின்ற வினைமூன்று மவற்றால் வந்த முடிபொ

ருளும், பொன்னு னதுவும் பணியும்போ லிருக்கு மிந்தப் பொய்மெய்யை, யுன்னு தவர்க்கே யுள்ளதிவை யுணர்ந் தோர்க் குளவா யுதியாவால். (கஉ)

வே று.

ஓங்கிய வுலகினி லுயர்ந்த நன்மையுந்
தீங்கின வாம்வினை யாவுஞ் செய்தற்குச்
சாங்கிய நூலிலே யுரைத்த சாதன
மீங்கிவை யைந்தையு மெடுத்துக் கூறுவாம். (கங)

இருப்பிட மாமுடம் பியற்று மாருயிர்
கருத்தினை முதலிய கரணங் காற்றினால்
விருப்பொடு வருந்தொழி லிவற்றின் மேலரு
ளருத்தமாந் தெய்வமொன் றுக வைந்தரோ. (கச)

வாக்கினா லாதன்மெய்ம் மனத்தினா தறம்
யாக்கையா லாதலிவ் வுலகில்யா வரும்
வீக்குவார் கிலையினும் வினையி ரண்டிலொன்
றாக்குநா ளிங்கிவை யைந்தும் வேண்டுமால். (கரு)

இவ்வகை யேவரும் வினையி ரண்டையு
மெய்வகை யாகயா னன்றி வேறிலை
செய்வகை யானெனச் சிந்தை மேயினா
னுய்வகை யுணர்கிலா னுணர்வு மாய்ந்துளான். (கசு)

வே று.

யாவ னொருவன் றன்னுடம்பை யானென் றிருக்கு மியல்பொழிந்தான், யாவ னொருவன் றன்கரணம் யானென் றேறும் விழைதலிலா, னவ னவனிவ் வுலகத்தை யடையக் கொன்று னாயினுமோர், பாவ மில்லை யவன்கொன்ற பழியு மில்லை பார்மன்னா. (கஎ)

அறிவு மறியப் படும்பொருளு மறிவா னொருவன் றானு மாய், செறியில் வினைகள் விதிக்கின்ற விதியி னிலைமை நிற்பது தான், செறியுங் கருமஞ் செய்வானுஞ் செய்தற் குரிய கரணு முமாய்க், குறியில் வினைகண் முடிவிருப்ப தின்னுஞ் சிலயாங் கூறக்கேள். (கஅ)

ஆன்ற வறிவுங் கருமமுமக் கருமங் களையாக் கிடுவானு,
மூன்ற வுணரும் புத்தியொடு திருதி யென்ன வுரைப்பனவுந்,
தோன்ற விளையு மின்பமுமுன் சொன்ன குணத்தின் றொடர்
பாலே, மூன்று வகையா மொரோவொன்றிங் கவற்றின் றிற
மொழியக்கேள். (கக)

நன்றாய் ஞானத் திரளாகி நாநா விதமாய் விரிந்தெங்கும்
பொன்றா நின்ற பூதங்க டோறும் பொன்றாப் பொருளாகி
யொன்றாய் நிற்ப தொன்றினையப் படியே யுணரு முணர்வதனை
யன்றா மென்னுர் சாத்துவிக ஞான மெனவே யமைப்பாரால்.

ஊனப் படுமிவ் வுடம்போறு முள்ள பொருளை யுணராதே
யினைப் படக்காண் கின்றதிரா சதமா ஞான மதுவன்றி [யோர்
ஞானத் திரளாய் நின்றதையோ ருடம்பி னிடையு நாட்டிடை
தானத் திடையு மடங்கக்காண் பதுதா மதமா ஞானமே. ()

வேறு.

தீதலிற் பற்று மேலோர் வினைப்பயன் வேண்டல் வேண்டாக்
காய்தலொன் றின்றிச் செய்யுங் கருமஞ்சாத் துவிக கன்ம
மாய்வரும் பலத்தி னோடு மகங்கா மத்தி னோடு
மேய்தருங் கரும மெல்லா மிராசத கரும மாமே. (உஉ)

குலைபெறும் பற்று மேலோர் கூறிய நீதி யோடுங்
கலைதெரிந் துணர்ந்து மெய்ம்மை கடைப்பிடி யாமை யார்க்கு
மலைவுறுங் கேடு நாசம் வலியிவை யவிவே கத்தாற்
றலைதவச் செய்வ தெல்லாந் தாமத கரும மாமே. (உ௩)

பற்றுமாங் காரந் தானும் பழுதறத் துறந்தி யாவு
முற்றெழு முயற்சி யோடு நிலைமையி னோடு மொன்றி
யெற்றுமோ ரிழவு பேற்றிற் றுன்பமீ தின்ப மென்று
சற்றுமோர் சலிப்பி லாத தலைவன்சாத் துவிக னென்பான்.()

வேறு.

வினைப்ப யன்றனை வேண்டலும் வேட்கையு
மெனைத்தி டாமையுந் தூய்மையி லாமையு
நினைப்பின் வாட்டமு நீடு மகிழ்தலு
மினைத்தின் வாழ்வ திராசத மாந்தரே. (உ௫)

மனமொ ருக்கலும் வான்கலை நூல்களைத்
தனமெ னக்கொடு கற்கலுந் தக்கவ
ரினம கிழ்த்தலு மின்றி முடிப்பதோர் (௨௬)
தினமு டித்திடார் தாமதஞ் சேர்ந்துளார்.

ஈன மற்ற துறவற மில்லற
ஞானம் பற்றொடு நல்வினை தீவினை
யான வஞ்சுவ வஞ்சத் தகாவெனத் (௨௭)
தான றிந்தது சத்துவ புத்தியே.

தருமம் பாவந் தனக்குச் செயத்தகுங்
கருமஞ் செய்யத் தகாத கருமங்க
ளருமை யாலறி யாத வறிவதே (௨௮)
யிருமை யாய விராசத புத்தியே.

பாவ மாகத் தரும்த்தைப் பார்த்தலு
மாவ தாமென் றடாதது நோக்கலுந்
தீமை செய்கின்ற சிந்தனை தீங்கிலே (௨௯)
போவ தாவதுந் தாமத புத்தியே.

மனஞ்செ யுந்தொழின் மன்னுயி ரின்றொழி
னினஞ்செ யிந்தியஞ் செய்தொழி லென்றிவை
கனஞ்செய் தேறலுங் கண்டு பொறுத்தலுஞ் (௩௰)
சினஞ்செ யாமையுஞ் சாத்திக திருதியே.

பண்ணிக் காமத் தரும்பயன் கைக்கொள்வா
னெண்ணித் தாங்குந் திருதி யிராசதங்
கண்ணிற் சோகங் களிப்புறக் கம்பய (௩௧)
நண்ணித் தாங்கும் பொறைதம காணுமே.

துன்ப மாய்விடம் போன்று தொடக்கத்தி
லின்ப மாகி விளைவிட மியாவர்க்கு
மன்ப வாரமு தேயென லாவதா (௩௨)
மென்ப சாத்து விகந்தரு மின்பமே.

பொருத்த மாய்ப்புல னோடு பொறியிலே
யருத்த மாயெழுந் தாரமு தென்னலாய்

விருத்த மாய்முடி வில்விட மாகியே
யிருத்த லாகு மிராசத வின்பமே. (௩௩)

தொடரு றக்க மயக்கொடு சோம்பினாற்
படவு தித்ததாய்ப் பண்ணும் பொழுதினுங்
கடன்வி ளைந்து முடிந்தகா லத்தினு
மிடர்வி ளைப்பது தாமத வின்பமே. (௩௪)

வேறு.

இந்தவியற் கையினுமிக் குணங்களைவிட் டவரில்லை
யந்தணர்க்கு மரசர்க்கும் வணிகர்க்குஞ் சூத்திரர்க்குந்
தந்தமியற் கையவாய குணமூன்றின் றன்மையினில்
வந்தவினைத் திறமவற்றை யுரைப்பன்கேண் முடிமன்னா. ()

வேறு.

கறைசெயைம் புலன்களைக் கரண நான்குடன்
றுறைதுறை யடக்கலுந் தவமுந் தூய்மையும்
பொறையொடு கல்வியும் பொருந்து ஞானமு
மறையவர் தொழிலென வகுக்கப் பட்டதே. (௩௬)

தலைமையுங் கொடையொடு தறுக ணாண்மையு
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுங்
கொலைபயில் போர்களிற் புறங்கொ டாமையுஞ்
சிலைமலி தோளினா யரசர் செய்கையே. (௩௭)

உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணிகம்
வழுவறச் செய்கையே வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழில்கள்வே ளாளர்க் கென்பவே. (௩௮)

வேறு.

தீரா வகைதஞ் செயலே செயவே
நாரா யணனா முதனா யகனுக்
காரா தனையா மதனா லவனே
வாரா வழியாம் வரமே தருமால். (௩௯)

அல்லா வினைதா னமுகாய் வரினுஞ்
செல்லார் பெரியோ ரவைசெய் வதனிற்
றொல்லார் குலமே தொடருந் தொழிலே
பொல்லா வெனினுஞ் செயலே பொருளே. (௪0)

வேறு.

கனையெரி புகையோ டன்றிக் காணமுன் படாமை போல
வினைகளுங் குற்றந் தன்னை விட்டிரா வாத லாலே
யனையவென் றிகழ்த லாகா தடுத்தகா ரியங்க டம்மை
நினைவருந் தருமமென்று செய்கையே நீதி யெல்லாம். (௪௧)

வேறு.

வெல்லப் பட்ட மனத்தினனாய் வேறொன் றினையும் வேண்டாதே, யல்லற் படுக்கு முடற்பற்று மறவே யறுத் தான் வினையடையச், செல்லச் செல்ல வறுத்தானா மதனாற் சித்த முடிவாகச், சொல்லப் பட்ட காரணங்க ளான்குந் தூய் தாய் விடுமன்றே. (௪௨)

சொன்ன காரண மவைநான்குந் தூய்தாய் விடவத் தூய்மையினா, லுன்ன வரிய பெரும்பொறையை யுடைய னருமப் பொறையா, லின்னல செய்யும் பொறியைந்து மிராகத் துவேட மெனுமிரண்டு, மன்ன தன்னை நலியாமை மாற்று மவற்றை மாற்றினால். (௪௩)

காடு மலையு மலைமுழைஞ்சுங் கடுமா முதல நலிவில்லா
வோடும் புனலா றுள்ளிட்ட விடமே யுறையு ளாக்கொண்டு
தேடும் பொருளொன் றின்றியே சிறிதே யுண்டு சென்றெங்கு
மாடு மனம்வாய் மொழியாக்கை யடங்கப் பெறுமா லவனையா.

சொன்ன விவைபோ யடங்கிடவே தோன்றுங் களிப்புங் காமமுமுன், பென்ன தியானென் கின்றதுவு மெரிபோல் வெகுளி யோடுவலியு, முன்ன றவிர்ந்து சாந்திபெறுஞ் சாந்தி பெறவே யோரிடத்தும், பின்னை மடையா தொன்றாகி நின்ற பொருளின் பேருருவாம். (௪௫)

அந்த வுருவா னவன்பின்னை யாதே வரினு மழிவுறா
னிந்த வுலகத் துயிர்க்கெல்லா மொத்தே யிருக்கு மிங்கிவனும்
பந்த மறவிட் டெனையறியும் பத்தி பெறுமப் பத்தியினாற்
சிந்தையிடையே யெனைத்தெளிவு மதனாலெனையே சேருமால்.

என்னைப் பற்றிக் கொடுநின்றே யெல்லா வினையு மியற்றினூற், பின்னைப் பிறவாப் பெரும்பதமென் னருளினூலே பெறுங்கண்டாய், நின்னைத் தொடரும் வினையெல்லா மென்னை நினைந்தே செயில்வினைக, டன்னைக் கடத்தற் கருந்துன்ப மெல்லாங் கடக்கத் தருதியால். (சஎ)

வேறு.

ஒன்றிய மனத்தி னூலே யானுனக் கின்ற வுண்மை
நன்றிதென் றுணரா யாயி னூசமே யடைதி மற்றி
தன்றியு மரசர்க் கெல்லா மடுத்தகா ரியமா யுள்ள
வென்றியை யடையா நிற்கு வேறினி வினைவ கேளாய். (சஅ)

வேறு.

விளைசெய் தார்மன்ன வேண்டலை யாயினுங்
களைசெய் மாயையுங் காலுற-வாழ்த்திடு
மரசர் தங்குண மாகிய வாண்மையே
புளைசெய் வாளமர்க் கேபுகு விக்குமால். (சக)

பொறிக ளுண்ணின் றவற்றின் புணர்ப்பெலா
மறிய வாட்டினன் போலாக் கைகடொறு
மறைவி னின்றுதன் மாயையி னூல்வினைக்
குறிகள் செய்விப்ப னீசனென் றேகொள்வாய். (ரு0)

வேறுப் பாலொரு வர்க்கும் விளம்புதன்
மாறப் பட்ட பொருளின் வகையெலாங்
கூறப் பட்ட துனக்கிக் குறிகளை
யேறப் பார்த்துனக் கேறிய வாசெய்வாய். (ருக)

வேறு.

தீதகலா தெனவுளவோ விவன்வேண்டி லெனத்தேறி
யோதலினூ னினைத்தலினூ லெனைப்போக்கி யொன்றறியா
யாதலினூல் யாவர்களு மறியாத வொருபொருளைக்
காதலினூ லுனக்கின்னு முளைக்கின்றேன் கடைப்பிடிநீ. ()

என்னையே நினைந்தெழவுன் மனத்தினையென் னிடையேவை
யென்னையே நினைந்திருநீ மற்றெனக்கே பூசனைசெ
யென்னையே குருவாக்கொள் ளெபபோது மிதுசெய்யி
லென்னையே வந்தடைதி யிதுமெய்யே யிதுமெய்யே. (ருங)

இருவேறு வகையாய வெவ்வேறு வினைகளையு
மருவேனென் றறவிட்டு மாயையினுன் மறைப்பரிய
வொருவெனையே பற்றுதியப் பற்றினு லுனைப்பிறவிக்
கருவேலை கடந்தேறக் கைதருவேன் கதிர்வேலோய். (ருச

மற்றுனக்குச் சொல்லியவிம் மறைப்பொருண்மா தவ
மிலர்க்கும், குற்றமறுத் தறிவருளுங் குருவழிபா டிலாதவர்க
குஞ், செற்றமனச் சழக்கர்க்கு மெனைநினையாத் திறத்தவ
க்கு, மற்றமறத் தெரிந்துணாக்கை யடாதென்றே யறிகண்
டாய். (ருரு)

வேறு.

எல்லாப் பொருட்கும் பரமாமிப் பொருளை யென்னன்
பர்க்கிசையச், சொல்லாற் றெரிவிப் பவனொன்பா லன்பு துன்னி
யெனையடைவர்,நல்லார் களின்மற் றெனக்கினிய நன்மை செய்
கின் றருமவ, ரல்லா தவரிப் பொழுதுமிலை மேலுமவர்க
ளுளராகார். (ருசு)

ஏய விருவோம் பேசியவிவ் வறநூ லினையே யெடுத்துணைப்
னுய னுான் யாகத்தா லெனையே யாரா திக்கின்றான் [பா
மேய பொறுமை தனைவிட்டு விருப்பா லிதனைக் கேட்பானுந்
தீய வினைக ளறவிட்டுத் தேவ ருலகஞ் சேருமால். (ருஎ)

வேறு.

என்னது மொழியி னுலியா னியம்பிய ஞானத் தாலே
மன்னவ வுனக்கு வந்த மயக்கெலாங் கெட்ட தோயான், சொ
ன்னவிப் பொருள்க ளெல்லாந் துணிந்தனை கொல்லோ வெ
ன்று, நன்னகை கூர நின்று நாயக னருளிச்செய்தான். (ருஅ)

வேறு.

மன்னவவென் பாயமது சூதமறை நாலின்
முன்னவ மொழிந்ததிரு வாய்மொழிக ளாலே
யென்னகுறை யுண்டினி யெனக்கென வியம்பித்
தன்னக மகிழ்ந்திவை தனஞ்சய னுரைப்பான். (ருகூ)

வையமுழு துண்டதிரு வாய்மலர் திறந்திட்
டுய்யவடி யேன்முனுரை செய்தவுரை யாலே
யையமொடு மோகமற விட்டெனறி வுற்றேன்
செய்வதினி யுன்றனரு ளின்செயல்க ளன்றே. (சூ0)

பையரவி லேயினிது பள்ளியமர் வோனே
வையமுமிவ் வையமதின் மன்னுயிர்க ளியாவுஞ்
செய்யும்வகை யுற்றது சிதைத்தலது தானு
மெய்தெரியி னீமுன்வினை யாடும் வகையன்றோ. (சுக)

அணித்தகைய சோதியம லாவுனரு ளாலே
கணித்தலரி தாயபிற விக்கடல் கடந்தேன்
பிணித்தபெரு மாயைமயல் கெட்டது பிரானே
பணித்தபணி யல்லது செயத்தகுவ துண்டோ. (சுஉ)

வேறு.

பிணித்த பிறவிப் பெருந்தளையைப் பெயர்த்தென் பெருஞ்பே தைமைநோயைத், தணித்த வரசே யெனக்குத்தான் றருமே யாகத் தகாதாகத், துணித்த திறல்வான் போரினையே தொடங்கு கென்று நீயிங்குப், பணித்த பணியான் செய்வனெனப் பார்த்த னவனு முடன்பட்டான். (சுங)

வேறு.

மாதவனுந் தனஞ்சயனுந் தங்களிலே மகிழ்ந்துரைத்த
வோதரிய பொருளினை யுணர்ந்தவா றெவ்வெனில்
வேதவியா தன்னுடைய மெய்யருளா லிகவுடையே
னாதலினா லறிந்தனன்வே றறியலாம் வகையுண்டோ. (சுச)

அப்பொருளை நினைதோறு மற்புதமா மகமகிழ்வு
மெய்ப்புளகும் வருமவன்றா னிருக்கின்ற வகைவிரித்த
வொப்பரிய திருக்கோல முணர்தோறு முணர்தோறுஞ்
செப்பரிய பெருங்களிப்பென் சிந்தையுளே திகழுமால். (சுரு)

எஞ்சலிலாப் பொருளனைத்து மிப்படியே புகுந்ததெனச்
சஞ்சயனன் றெடுத்துரைத்து நூற்றுவர்க்குந் தாதையோய்
வஞ்சனையே கண்ணாக வாழ்கின்ற மற்றவர்க்குப்
பஞ்சவரோ வலியவரொன் றிவ்வண்ணம் பகர்வுற்றான். (சுசு)

வேறு.

திருவற நீதி செயம்புக ழெல்லா
மருவரு மாயைசெய் மாதவன் வாய்மை
தருமம் விடாத தனஞ்சய னென்னு
மிருவரு நின்ற விடத்தன வென்றான். (சுஎ)

என்ற பொருட்டிற மிப்படி யேயாக்
குன்ற மெடுத்தருள் கொண்டல் பணிப்பான்
வென்ற புலத்து வியாதன் விரிப்பா
னின்ற வருக்கிது நேர்பட வற்றே. (சுஅ)

வேத நூல்களின் முடிவினை வியாதனிற் பின்னு
மோத மாக்கட லுலகிலுண் டாக்கிய வரவோன்
கோதி லாநெறி யுணர்ந்தகோ விந்தமா முனிவன்
பாத தாமரை பற்றிவீட் டின்பமே படைத்தான்.(சுகூ)

வேறு.

ஆற்றியல் வழுவிய புலன்க ளோந்தையும்
மாற்றிய சங்கர பகவற் பாதனென்
றேற்றிய பெயரினு னருளி னுலியான்
சாற்றின னிப்பெருந் தரும நூலையே. (எ0)

பதினெட்டாவது சஞ்சேபவத்தியாயம் முற்றிற்று.

---

ஆக அத்தியாயம் 18-க்குத் திருவிருத்தம் 545.

---

பரமார்த்ததரிசனமென்னும்
பகவற்கீதை மூலம்
முற்றிற்று.

---